https://telegram.me/aedahamlibrary

மலாவி என்றொரு தேசம்

சாரு நிவேதிதா

https://telegram.me/aedahamlibrary

மலாவி என்றொரு தேசம்

சாரு நிவேதிதா

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

மலாவி என்றொரு தேசம்
சாரு நிவேதிதா

Malaavi Endroru Desam © 2018 Charu Nivedita

First Edition: 2009
Ezutthu Prachuram First Edition: December 2018
(An imprint of Zero Degree Publishing)
ISBN: 978 93 87707 61 0
Title No. EP: 28

All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted, in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, psychic, or otherwise, without the prior permission of the publishers.

https://telegram.me/aedahamlibrary

Zero Degree Publishing
No. 55(7), R Block, 6th Avenue,
Anna Nagar,
Chennai - 600 040

Website : www.zerodegreepublishing.com
E Mail : zerodegreepublishing@gmail.com
Phone : 98400 65000

Cover Art : Aditya R
Cover Design - Layout: Creative Studio

https://telegram.me/aedahamlibrary

துபய் பிரபு ராஜாவுக்கும்

மெர்லினுக்கும்...

ஒரு வித்தியாசமான அனுபவத்தை நோக்கி...

நான் எங்கோ தொலைதூரத்தில் உள்ள ஆஃப்ரிக்க தேசமான மலாவியிலிருந்து ஆனந்த் என்ற வாசக அன்பர் அனுப்பி வைத்த சொற்கள் கச்சாப் பொருளாக இருந்தாலும் அதில் சில சுவாரசியமான செய்திகள் இருந்தன. அதனால் அந்தச் சொற்களுக்கு கடிதம் போன்ற ஒரு வடிவத்தைக் கொடுத்தேன். அதற்கான என் உழைப்பு சில சமயங்களில் ஆயாசத்தை ஏற்படுத்தியது. ஒரு சில கடிதங்களைச் செப்பனிடுவதில் ஏழெட்டு மணிநேரம்கூட ஆகியிருக்கிறது. இருந்தாலும் அந்தக் கடிதங்களைப் படித்துவிட்டு ரத்து செய்துவிடாமல், அவற்றைச் செப்பனிட்டு பதில் எழுதத் தோன்றியது அதிலிருந்த ஒரு வித்தியாசமான தன்மை. இப்போது அவற்றையெல்லாம் ஒருசேரப் பார்க்கும்போது ஏதோ ஒரு நாவலைப் படிப்பது போலவும், ஒரு நல்ல பயண நூலைப் போலவும் இருக்கிறது.

https://telegram.me/aedahamlibrary

ஜே.கிருஷ்ணமூர்த்தியிலிருந்து மலாவியின் குலே நடனம் வரை சூரியனுக்குக் கீழுள்ள பல நூறு விஷயங்கள் இக்கடிதங்களில் விவாதிக்கப்பட்டிருக்கின்றன. இதை இப்போது படிக்கும்போது இப்படி ஒரு நூல் இதுவரை தமிழில் இல்லை என்றே தோன்றுகிறது. தமிழ் தெரிந்த அத்தனை பேரும் வாசிக்க வேண்டிய இந்த உரையாடலில் பங்கு கொண்ட ஆனந்த் மற்றும் பல நண்பர்களையும் இப்போது நன்றியுடன் நினைவு கூர்கிறேன்.

நவம்பர் 15, 2009 சாரு நிவேதிதா

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ந்யாஸா ஏரியைப் பார்த்திருக்கிறீர்களா?

டியர் சாரு,

கிம் கி டுக் பற்றி நீங்கள் எழுதியிருந்ததைப் படித்ததும் சந்தோஷத்தில் எனக்குத் தலைகால் புரியவில்லை. கிம் கி டுக் எனக்கு மிகப் பிடித்த இயக்குனர்களில் ஒருவர். அவருடைய Spring Summer Fall Winter... and Spring பற்றிய என் அனுபவங்களை உடனடியாக உங்களோடு பகிர்ந்துகொள்ள வேண்டும் போல் தோன்றியது. இது பற்றி யோசிப்பதற்குள்ளாகவே உங்களுக்கு எழுத ஆரம்பித்துவிட்டேன்.

சந்தேகமே இல்லாமல் இந்தப் படத்தை கிம் கி டுக்கின் ஆகச் சிறந்த படைப்பு என்று சொல்லிவிடலாம். நீங்கள் குறிப்பிட்டிருப்பதைப் போல் ஒளிப்பதிவு, இசை என்று படத்தின் அனைத்து அம்சங்களையும் சேர்த்து தொழில்நுட்பத்தில் அவருடைய மற்ற எல்லாப் படங்களையும் விட விஞ்சி நிற்கிறது ஸ்ப்ரிங். ஆனால் ஆச்சரியப்படும் விதத்தில் உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை அவருடைய மற்ற படங்களுக்கு நேர் எதிரானதாக இருக்கிறது. எப்படி நிகழ்ந்தது இது?

சரி, படத்தில் வரும் ஒரு காட்சியை வைத்துச் சொல்கிறேன். அவருடைய மற்ற படங்களைப் போலவே ஒரு ஏரியின் நடுவே ஒரு படகு வீடு. ஏரியா அல்லது நதியா? சரி விடுங்கள், வார்த்தைகளில் என்ன இருக்கிறது? அது ஒரு சொர்க்கம்; நம் கனவிலிருந்து பூமியில் நழுவி விழுந்த ஒரு சொர்க்கம். இந்தப் படகு வீட்டில் ஒரு ஜென் குரு வசிக்கிறார். அவர் நான்கு அல்லது ஐந்து வயதுள்ள சிறுவன் ஒருவனை வளர்க்கிறார். மலைகள் சூழ்ந்த அந்த நீர்வெளிப் பிராந்தியத்தில் அவர்கள் இருவரையும் தவிர வேறு ஒரு மனித ஜீவியும் கிடையாது.

ஒருநாள் அந்தச் சிறுவன் படகை எடுத்துக்கொண்டு தனியாகச் சென்று ஒரு பாம்பு, ஒரு மீன், ஒரு தவளை மூன்றையும் பிடித்து அவைகளை ஒரு கல்லோடு பிணைத்துக்கட்டி அவை நகர முடியாமல் போராடுவதைப் பார்த்துச் சிரித்து ரசிக்கிறான். அவன் பின்னாலேயே வரும் குரு, சிறுவனுக்குப் பாடம் கற்பிக்க நினைக்கிறார். அன்றைய தினம் அவன் உறங்கும்போது அவனுடைய முதுகில் ஒரு பெரிய கல்லைக் கட்டிவிடுகிறார். சிறுவனால் அந்தக் கல்லைத் தூக்கிக் கொண்டு நடக்க

https://telegram.me/aedahamlibrary

முடியவில்லை. “கல்லை எடுத்துவிடுங்கள்” என்று அவரிடம் கெஞ்சி அழுகிறான்.

“இப்படித்தானே அந்த வாயில்லா ஜீவன்களும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்? போ... போய் அவைகளைப் பார்த்து அந்தக் கற்களை எடுத்து விடு. அதற்குப் பிறகு உன் முதுகில் இருக்கும் கல்லை எடுக்கிறேன். ஆனால் அந்த ஜந்துக்கள் இறந்து

போயிருந்தால் உன் முதுகிலிருக்கும் கல்லை வாழ்நாள் பூராவும் உன் இருதயத்தில் வைத்து நீ சுமக்க வேண்டியிருக்கும். அதுதான் உனக்கான தண்டனை” என்கிறார் குரு.

அந்தப் பெரிய கல்லை முதுகில் சுமந்து கொண்டு மிகுந்த சிரமப்பட்டு காட்டு வழியில் சென்று நீரோடையில் தேடுகிறான். செத்துக் கிடக்கிறது மீன். உயிரோடு இருக்கும் தவளையைக் கயிற்றிலிருந்து விடுவிக்கிறான். பிறகு காட்டுக்கு வந்து பாம்பைத் தேடுகிறான். பாம்பும் செத்துக் கிடக்கிறது. தன் தவறை உணர்ந்து அழ ஆரம்பிக்கிறான் சிறுவன்.

என்னுடைய உலக சினிமா அனுபவத்தில் மறக்கவே முடியாத ஒரு படம் இது. அதோடு, பௌத்தம் பற்றிய ஒரு அற்புதமான அனுபவத்தையும் கொடுத்த படம். ஆம்; இந்தப் படத்தைப் பார்த்ததே ஒரு ஆழ்ந்த தியானத்தில் அமர்ந்திருந்தது போல் இருந்தது என்று சொல்லலாம்.

இந்தப் படம் ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவும் அந்த ஜென் குருவின் சீடனின் வாழ்வில் ஒரு பருவத்தைக் குறிக்கிறது. சீடனின் நடுத்தர வயதுப் பாத்திரத்தில் கிம் கி டுக்கே நடித்திருக்கிறார். இந்தப் படத்தைப் பார்த்த போது ஒரு ஜென் குருதான் சினிமா இயக்குனராக ஆகியிருக்கிறாரோ என்று நினைத்தேன். இது நமக்குத் தரக்கூடிய ஆன்மீக அனுபவத்தை வார்த்தைகளால் விளக்குவது மிகவும் கடினம்.

கிம் கி டுக்கின் படங்களில் இதைத்தான் நான் முதன்முதலில் பார்த்தேன். அதன் பிறகே அவருடைய மற்ற படங்களைத் தேடிப் பிடித்துப் பார்த்தேன். மை காட்! மற்ற படங்களில் தெரியும் கிம் கி டுக்குக்கும் இதற்கும்தான் எத்தனை வித்தியாசம்!

இன்னும் அவருடைய சில படங்களின் திருட்டு டி.வி.டி.களுக்காக இங்கே மலாவியில் காத்துக்கொண்டிருக்கிறேன்.

ஒவ்வொரு சிருஷ்டிகர்த்தாவும் தன்னுடைய மகத்தான சிருஷ்டிக்காகக் காத்திருக்கிறான். அதேபோல் ஒரு மகத்தான சிருஷ்டியும் தன்னுடைய

https://telegram.me/aedahamlibrary

சிருஷ்டிகர்த்தாவுக்காகக் காத்திருக்கிறது. இந்த ஸ்ப்ரிங், ஸம்மர், ஃபால், விண்ட்டர்... அண்ட் ஸ்ப்ரிங்கில் சிருஷ்டிகர்த்தா தன்னுடைய மகத்தான சிருஷ்டியைக் கண்ட டைந்து விட்டான் என்று தோன்றுகிறது.

நன்றி

ஆனந்த்

மலாவி

மத்திய ஆஃப்ரிக்கா

21.3.2009

(என்னைப் பற்றி: என் வயது 27. ஆஃப்ரிக்காவின் இந்த மத்தியப் பகுதியில் கம்பளம் தயாரிக்கும் கம்பெனியில் இரண்டு ஆண்டுகளாக பொது மேலாளராகப் பணிபுரிகிறேன்.)

சாரு: இந்தப் பதிலுக்குச் சம்பந்தமில்லாத சில கேள்விகள் ஆனந்திடம். நாலா பக்கமும் நிலத்தால் சூழப்பட்ட மலாவி நாட்டின் பரப்பளவில் கால் பங்கு அளவுள்ள அந்த பிரம்மாண்டமான ந்யாஸா ஏரியைப் பார்த்திருக்கிறீர்களா? அதில் படகுச் சவாரி செய்திருக்கிறீர்களா? ஒரு கடல் அளவுக்குப் பரந்து விரிந்து கிடக்கும் இவ்வளவு பெரிய ஏரி இருந்தும் மலாவி ஏன் இவ்வளவு கொடூரமான வறுமையில் இருக்கிறது?

அந்த மலாவி என்ற தூரதேசத்தில் அமர்ந்துகொண்டு 'நம் கனவிலிருந்து பூமியில் நழுவி விழுந்த ஒரு சொர்க்கம்' என்றெல் லாம் உங்களால் எப்படி எழுத முடிகிறது? இன்னும் ஒரு வலைமனை ஆரம்பித்து கவிதை எழுத ஆரம்பிக்கவில்லையா?

https://telegram.me/aedahamlibrary

மிகூயூ சிறையின் கொடுஞ்சுவர்களுக்குள்ளிருந்து கேட்ட குரல்கள்...

டியர் சாரு,

தங்கள் கேள்விகளுக்கு நன்றி.

ந்யாஸா ஏரி இப்பொழுது 'லேக் மலாவி' என்று அழைக்கப்படுகிறது. வருடத்திற்கு ஒருமுறை செல்வதுண்டு. கரையோரம் இருக்கும் வீடு ஒன்றில் இரு நாள் தங்கி அந்த ஏரியினைக் கொண்டாடுவது எனக்கு மிகவும் பிடித்தமானது. பகல் முழுவதும் அந்த ஏரியின் தண்ணீரில் ஊறித் திளைத்துவிட்டு, இரவில் அந்தக் கரையில், காற்றில் படுத்துக்கொண்டு நட்சத்திரங்களைப் பார்த்திருப்பது ஏதோ ஒரு கவிஞன் எழுதிய நாவலின் ஒரு கதாபாத்திரமாய் அமர்ந்திருப்பது போன்ற உணர்வைக் கொடுக்கும். அலைபாயுதே கண்ணா பாடலை மடிக்கணினியில் ஒலிக்க வைத்து, விடியலை வேடிக்கை பார்த்தபடி, அதிகாலை காப்பியை பருகுவதற்கு இணை இல்லை. பிரபஞ்சத்துடன் தனிமை கொள்ளுதல் போக, உணவு மற்றும் கும்மாளங்களை விவரிக்க தங்கள் பிச்சாவரம் கார்னிவலின் வார்த்தைகளைக் கடன் வாங்க வேண்டியிருக்கும்.

படகுச் சவாரி செய்ததில்லை. அதற்கு வேறு கரைக்குச் செல்ல வேண்டும். ஆசை இருப்பினும் செல்லாததற்கு நாங்கள் செல்லும் சலிமா என்ற இடத்தில் உள்ள - கரையில் கிடைக்கும் ஏரியின் அருகாமையும், தனிமையும், தங்குமிட வசதியுமே காரணம்.

சரி. தங்கள் இரண்டாவது கேள்வியான மலாவியின் வறுமைக்கு வருகிறேன். இவ்வளவு பெரிய ஏரி இருந்தும் ஏன் இந்த வறுமை எனக் கேட்டிருந்தீர்கள்.

1994இல் ஒரு அமெரிக்க டாலுருக்கு இணை 6.7 மலாவி குவாச்சா (குவாச்சா -மலாவியின் கரன்சி நோட்டு). 2009இல் ஒரு அமெரிக்க டாலருக்கு இணை 142 மலாவி குவாச்சா! ஏரியும் பசும்புல் மலைகளும் அன்று இருந்தது போலவே தான் இன்றும் காட்சி அளிக்கின்றன. ஆனாலும் இந்த வறுமைக்குக் காரணம் - ஊழல், லஞ்சம், மனிதனின்

https://telegram.me/aedahamlibrary

பேராசை, நிர்வாகச் சீர்கேடு, இன்ன பிற. இத்தனைக்கும் 15 வருடங்களுக்கு முன் இருந்ததை விட இன்று இங்கு எண்ணிக்கையளவில் தொழிற்சாலைகள் அதிகரித்திருக்கின்றன. இருந்தும் இத்தகைய பொருளாதார வீழ்ச்சி! இதனை மேலும் விவரிக்க புள்ளி விவரங்களையும், அரசியல் தகவல்களையும் அடுக்குவதை விட இந்த நாட்டில் இன்றளவும் ஜீவித்திருப்பவர்களின் போக்கினை என் கவனத்தின் நோக்கில் சொல்ல முயல்கிறேன்.

வறுமையில் சிக்கித் தவிப்பதாகச் சொல்லப்படும் இந்த தேசத்தில் பொருளீட்டி பெரும் பணக்காரர்களாக ஆனவர்கள் அதிகம். இதற்கு முக்கிய காரணம், இங்கே எந்த பொருளுக்கும் 'மாக்ஸிமம் ரீடெய்ல் ப்ரைஸ்' கிடையாது. பெரும்பாலான வணிகப் பொருட்கள் உற்பத்தியின்றி இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆக, வியாபாரிகள் வைப்பதுதான் விலை. 100 சதவிகிதத்திற்குக் குறைந்து யாரும் லாபம் வைப்பதில்லை.

இது ஒருபுறமிருக்க, உற்பத்தியைப் பொறுத்தவரை இந்த நாட்டில் ஒரு தொழிற்சாலையைத் துவக்கி நடத்துவது சிரமம். காரணம், திறன் வாய்ந்த ஊழியர்களுக்கான பற்றாக்குறை. மலாவியர்களிடம் வேலை வாங்குவது மிக மிக சிரமம். பொய், திருட்டு, மந்தத்தனம் போன்றவை இவர்கள் குணத்தில் நன்றாகப் படிந்துவிட்ட அம்சங்களாக இருக்கின்றன. முழுக்க முழுக்க இதை இவர்களுடைய தவறு என்றும் சொல்லிவிட முடியாது. அவர்கள் வாழ நேர்ந்த சூழல் அப்படி அவர்களைச் செய்திருக்கிறது என்றே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். காரணம்-, இங்குள்ள பெரும் பணக்காரர்கள் பெரும்பாலும் ஆசியர்களாகவோ, ஐரோப்பியர்களாகவோ இருக்கிறார்கள்.

உற்பத்தித்திறன் இல்லாத இந்த நாட்டில், பொருள்களை இறக்குமதி செய்து, கேட்பாரின்றி மிதமிஞ்சிய லாபம் வைத்து விற்றுப் பணம் சேர்த்தவர்கள் இவர்கள். சாதாரண மளிகைக் கடை வைத்தே ஒருவர் கோடீஸ்வரர் ஆகிவிடலாம் என்றால், தொழிற்சாலை துவங்கினால்? தவிர, போட்டியாளரும் கிடையாது. ஒரு காலத்தில் மலாவி வந்து இந்தியா சென்று திரும்புகையில் விமானத்தில் அனுமதிக்கப்படும் லக்கேஜ் எடையில் சட்டைப் பித்தான்களை இந்தியாவிலிருந்து வாங்கி வந்து - ஒரு பித்தான் ஒரு டாலர் என மலாவியில் விற்பனை செய்து பணக்காராகியவர்களின் பிள்ளைகள் இன்று இங்கு பெரும் தொழிலதிபர்களாகத் திகழ்கிறார்கள்; இருக்கும் ஒருசில தொழிற்சாலை வட்டங்களை இவர்களே ஆள்கிறார்கள்.

தவிர, இந்த நாட்டில் கிட்டும் லாப சதவிகிதம் தெரிந்து இன்றள விலும்

https://telegram.me/aedahamlibrary

வெளிநாட்டிலிருந்து இங்கு நுழைய முனைபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. தொழிற்சாலை துவங்குவதற்காக அரசு கொடுக்கும் சலுகைகளைப் பயன்படுத்தி எல்லாவித பர்மிட்டுகளையும் வாங்கிக்கொண்டு, தொழிற்சாலைக்கான கச்சாப் பொருட்களின் பேரில் முழுக்க தயாரிக்கப்பட்டுவிட்ட பொருட்களைத் தங்கள் நாட்டிலிருந்து கொண்டுவந்து, அரசின் எல்லாத் துறைகளுக்கும் சலவை நோட்டுகளை வினியோகித்து, சுலபமாக தங்கள் காரியத்தை முடித்துக்கொள்கின்றனர். இப்படிக் கொள்ளையடிக்கும் பணத்தைத் தங்கள் நாட்டு வங்கிகளில் சேமிப்பவர்கள் ஏராளம். எந்த சிக்கல் என்றாலும், அருமருந்தாகச் செயல்படுகிறது லஞ்சம்.

வெளிநாட்டிலிருந்து வந்து, மலாவியர்களின் அறியாமையையும், திறமையின்மையையும் மட்டுமே பலமாகக் கொண்டு தொழிற்சாலை துவங்கி - -எல்லாம் சரிதான்- - அப்படியே இருந்தாலும், மலாவியர்களுக்குக் குறைந்த சம்பளமே என்றாலும், வேலைவாய்ப்பு, நாட்டின் பொருளாதார முன்னேற்றம் யாவும் ஓரளவிற்காவது இருக்கத்தானே வேண்டும்? இல்லை, அதுகூட இங்கே நடப்பதில்லை. இங்கே பணம் வைத்திருக்கும் எவரும் மலாவியை தங்கள் தேசம் என்றே கருதுவதில்லை. முப்பது வருடங்களாக இங்கு இருப்பவர்கள்கூட இதைத் தங்கள் தேசமாக நினைப்பதில்லை. அன்னிய தேசமாகவே பாவிக்கிறார்கள். எனவே கிடைத்த லாபத்தை யாரும் இங்கே மறுமுதலீடு செய்வதில்லை. ஈட்டப்படும் முழு லாபத்தையும் தங்கள் தேசத்திற்குக் கொண்டுசெல்வதிலேயே குறியாக இருக்கிறார்கள். அதாவது, அது சாதாரண பலசரக்குக் கடையாக இருந்தாலும் சரி, தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, முதலாளிகள் குறிப்பிட்ட தொகைக்கு மேல் மலாவியில் வைத்துக்கொள்வதில்லை.

அதிலும் பெரும் பணக்காரர்கள், இந்தியாவிலிருந்து வந்து தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்பவர்கள் கூட, நிரந்தர குடியிருப்பு உரிமை பெற்றுக்கொண்டு வசதியாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் வணிகம் செய்வதுடன் மலாவியுடனான தொடர்பை மனதளவில் முடித்துக்கொள்கிறார்கள். -மற்றபடி இங்கிலாந்து நாட்டின் பாஸ்போர்ட்டுடன் அந்த நாட்டின் குடிமகனாக இருப்பதையே விரும்புகிறார்கள். இதற்குக் காரணமாக சொல்லப்படுபவை - மலாவியின் போதிய மருத்துவ வசதியின்மை, தங்கள் குழந்தைகளின் படிப்பின் மீது சிரத்தை, எந்த நேரத்திலும் இந்த தேசம் எந்த நிலைக்கும் தள்ளப்படலாம் என்ற பாதுகாப்பின்மை.

ஆக, இங்கு சேகரிக்கப்படும் லாபப் பணம் இங்கிலாந்து மற்றும்

https://telegram.me/aedahamlibrary

துபாயிலேயே செலவு செய்யப்படுகிறது; மறு முதலீடு செய்யப்படுகிறது. ஆரம்பத்தில் இங்கே போடுவது மட்டுமே முதலீடு. எந்தத் தொழிலானாலும் அதில் ஆறு மாதம் முதல் ஒரு வருடத்திற்குள் அந்த முதலீடு எடுக்கப்பட்டுவிடும். பிறகு தொழில் தன்னைத் தானே பார்த்துக்கொள்ள, இங்கு மலாவியில் அந்தந்த மாதத்திற்கான தங்கள் குடும்பச் செலவு போக, ஏதோ ஒரு முறையில் லாபப் பணம் நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டு வெளிநாட்டில் சொத்தாக மாறி விடுகிறது. அவ்வகையில் பெறும் பணம் இங்கிலாந்து மற்றும் துபாயிலுள்ள கட்டிடத் தொழில்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இந்திய நாட்டைத் தங்கள் பாட்டனாரின் தேசமாகக் கொண்டிருக்கும் இங்கேயிருக்கும் இஸ்லாமியர்களைச் சொல்ல வேண்டும். இவர்கள் இங்கிலாந்தில் சில தெருக்களுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள்.

வரி ஏய்ப்பு, அன்னியச் செலாவணி மோசடி போன்றவற்றை, லஞ்சமும் அறியாமையும் பரவிக் கிடக்கும் ஒரு நாட்டின் நிலையிலிருந்து நான் சொல்லத் தேவையில்லை என்றே நினைக்கிறேன். இருக்கும் ஒரு சில மலாவிய, கருப்பினத் தொழிலதிபர்களும் வெளிநாட்டினருடன் இவ்விஷயங்களில் போட்டி போடுவதன் மூலமே தங்களை நிலைநிறுத்திக் கொள்கிறார்கள்.

மலாவியைப் பொறுத்தவரை மிக முக்கியமான ஏற்றுமதிப்பொருள் புகையிலை. எது எப்படி ஏற்றுமதி செய்யப்பட்டாலும் நாட்டிற்குள் வரும் எல்லாப் பணமும் ஏதோ ஒருவகையில் ஒரு சிலரிடமே சென்று குவிந்து, சிக்கி, பல வழிகளில் நாட்டை விட்டுச் சென்று விடுகிறது.

மலாவியர்களில் பெரும்பாலானோர் திறமை மற்றும் நம்பகத்தன்மை பெற்றில்லாததன் காரணமாக, இங்கு தொழிற்சாலைகளில் முக்கிய பதவி வகிப்பவர்கள் அனைவரும் அயல் நாட்டவரே. அதிலும் பெரும்பாலான உயர் பதவியிலிருப்பவர்கள் இந்தியர்கள். ஃப்ளாட் அல்லது வீடு பெங்களூரில் மலிவா அல்லது சென்னையிலா என்ற அளவில் சிந்திப்பவர்கள். தலைமுறைகளுக்கான சேமிப்பையே தங்கள் வாழ்க்கை லட்சியமாகக் கொண்டிருப்பவர்கள்.

மலாவி என் பார்வையில் இரண்டாகப் பிரிவுபட்டு நிற்கிறது. ஒன்று, அந்த நாட்டில் பிறந்து வறுமையுடன் போராடி, வறுமையிலேயே இறந்துகொண்டிருக்கும் ஒரு பிரிவு. அதே சமயத்தில், பூனை விலையைப் புலி விலை என ஏற்றிச் சொன்னாலும் வாங்கிவிடக்கூடிய சக்தியுடன் சலக வசதிகளுடன் வாழ்பவர்கள் இரண்டாவது பிரிவு. இந்த இரண்டு பிரிவினரின் மன அமைப்பு வெவ்வேறாக இருக்கிறது. முதல் பிரிவினர்,

https://telegram.me/aedahamlibrary

அந்த நாட்களுக்கு மட்டுமே யோசிப்பவர்கள். இதற்குப் பொருளாதார நிலை மட்டும் காரணம் என்று கூறி விட முடியாது-. பணம் அதிகம் கிடைக்கும் நாட்களிலும் மலாவியர்கள் சேமிப்பவர்கள் அல்ல; நாளை உணவுக்கு வழியற்ற நிலையிலும் இன்றைக்குக் கிடைக்கும் பணத்தை நண்பர்களுடன் குடித்தோ, புத்தாடை வாங்கியோ உடனே செலழித்துவிடுவார்கள். இரண்டாவது பிரிவோ, இதற்கு நேர் எதிர். எல்லாவற்றிலும் ஒரு கணக்கு. ஆடம்பரச் செலவே ஆனாலும் ஒருவித கணக்கிட்ட எல்லைக்குள்ளேயே இருக்கும். இந்த இரண்டாவது பிரிவினரின் வாழ்க்கை முறைக்கு ஏற்றபடி ஷாப்பிங் சென்டர்களும், உணவு விடுதிகளும் உப தொழிலாக உருவாகிப் பின் அதுவே முக்கிய தொழிலாகவும் மாறிவிட்டது. உதாரணமாக, இப்போது புதிதாக திரையரங்கு ஒன்று வந்திருக்கிறது. (இதற்கு முன் இங்கு சினிமா தியேட்டர் கிடையாது). டிக்கெட் 1200 குவாச்சா (280 ரூபாய்) - அமீர்கான் நடித்த கஜினி ஓடும் தியேட்டர் ஒரு மாதத்திற்கு நிறைந்திருக்கிறது. குடும்பம் குடும்பமாகச் சென்று நிறைத்து வைத்தார்கள். ஆங்கிலப் படங்களும் ஓடுகின்றன. ஐரோப்பியர்களும் மேல்தட்டு மலாவியர்களும் பார்க்கிறார்கள். மற்றபடி ஒரு சராசரி மலாவியன் அவனது பொருளாதார நிலைக்கு இந்தத் தியேட்டர் இருக்கும் திசைக்குக்கூடத் திரும்ப முடியாது.

தொழிற்சாலையில் வேலை பார்க்கும் ஒரு மலாவியனின் ஒரு நாளைய வருமானம் 162 குவாச்சா. இந்திய ரூபாயில் கிட்டத்தட்ட 50 ரூபாய். அதாவது, மாதத்தின் மொத்த சம்பளமே 1500 ரூபாய்தான் வரும். இதில் அவன் தன் மனைவி மற்றும் இரு குழந்தைகளுடன் சினிமாவுக்குச் செல்வானென்றால் அந்த மாதம் பட்டினிதான். பணத்தை விடுங்கள்; முதலில் சினிமா என்பதன் வசீகரமே அறியாதவர்களாக இருக்கிறார்கள் மலாவியர்கள். அவர்களது உச்சபட்ச சந்தோஷம் அல்லது கேளிக்கை - பியர் அருந்துவது மற்றும் செக்ஸ். அவ்வளவே. பணம் கிடைத்தால் வெளிநாடுகளிலிருந்து (கனடா-இங்கிலாந்து -அமெரிக்கா) உபயோகமற்றது எனப் புறக்கணிக்கப்பட்ட செகண்ட் ஹாண்டு ஷூக்களையும் ஆடைகளையும் வாங்கி மகிழ்வார்கள். கால்பந்து ஆசை காரணமாக ஷூக்களின் மேல் அலாதி மோகம் உண்டு.

கலாச்சார சிக்கல் இல்லாத இந்த நாட்டில் செக்ஸ் மிக எளிதாகக் கிடைத்துவிடுவதன் விளைவு எய்ட்ஸ். மற்றபடி இந்த சினிமா தியேட்டர் என்பதெல்லாம் இந்த நாட்டினருக்கு எந்தச் சம்பந்தமும் இல்லாமல் அன்னியர்களுக்காகவே உருவாக்கப்படுகிறது. நான் சொல்லும் இந்தக் குறிப்பிட்ட மாத வருமானத்தைப் பெறும் மலாவியர்கள் இங்கு நடுத்தர

https://telegram.me/aedahamlibrary

வர்க்கத்தை சேர்ந்தவர்களாகக் கருதப்படுகிறார்கள்; இவர்கள் நகரில் வசிப்பவர்கள்.

எல்லாப் பொருட்களும் இறக்குமதி செய்யப்பட்டு, பல மடங்கு லாபத்துடன் விற்கப்படும் இந்த நாட்டில், பணத்தை வைத்துக்கொண்டு இவர்கள் ஒன்றுமே செய்துவிட முடியாது. இவர்களின் முக்கிய உணவு வகை சீமா (சோளக்கூழ்). அதைத் தனது குடும்பத்துக்கு மாதம் முழுவதும் கொடுப்பதற்கே இந்தச் சம்பளம் போதாது. (சோளத்தைப் பொறுத்தவரை நடந்த விலை ஏற்றத்தினைப் பற்றி மட்டும் பத்து பக்கங்கள் தனியாக எழுதலாம்.) நகரத்தின் நிலை இப்படி இருக்க, கிராமத்தின் நிலை இன்னும் மோசம். ஆனால் அதே சமயம் கிராமத்தில் செலவும் கிடையாது. மின்சாரமில்லாத, ஆதி காலத்து வகை கிராமங்கள் இங்கிருப்பவை. தங்கள் தோட்டத்தில் பயிர் செய்தவற்றை உண்டு பிழைத்து வாழ்பவர்களே இங்கு இருக்கிறார்கள். நகரத்தில் வாழும் தங்கள் சகோதரர்களின் வாழ்வு இவர்களுக்குக் கனவு.

இத்தகைய சூழலில், வெளிநாட்டவர்கள் பண பலத்தின் காரணமாகவும், அதிகார பலத்தின் காரணமாகவும் மிகவும் அதிகமாக உள்ளூர்க்காரர்களால் மதிக்கப்படுகிறார்கள். நான் இங்கு வேலைக்குச் சேர்ந்த புதிதில் என் தொழிற்சாலையில் வேலை பார்ப்பவர்கள் என்னிடம் பேச வருகையில் மண்டியிட்டு பேசக் கண்டு மிரண்டு போயிருக்கிறேன். தொடர் முயற்சிக்குப் பின் இப்பொழுது நிலை பரவாயில்லை. (இதன் காரணமாக, அபத்தமாகச் செயல்பட்டு பெரும் தவறு செய்துவிட்டு வந்து நிற்பவர்களைக்கூட நான் அமர வைத்து விசாரித்த பின்னரே கோபித்துக்கொள்வதை என் வழக்கமாக்கிக் கொண்டிருக்கிறேன்.)

இங்கே ஒரு கடையில் வேலைக்கு வந்து சேர்ந்த இருபது வயதிற்குட்பட்ட, அனுபவமற்ற, படிப்பறிவற்ற இந்தியனுக்கோ பாகிஸ்தானியனுக்கோ குறைந்தபட்சம் 60,000 குவாச்சாவாவது (கிட்டத்தட்ட 20,000 ரூபாய்) சம்பளமாகக் கிடைக்கும். அதாவது, ஒரு மலாவியனின் ஒரு வருட சம்பளத்திற்கும் மேல். ஆக, இவன் வந்த நாள் முதலாய் மலாவியர்களால் தன் முதலாளியாக பாவிக்கப்பட்டு மதிக்கப்படுவான். மதிப்பு என்று சொல்லும்போது அது பணத்திற்கும், அதிகாரத்திற்கும் கிடைக்கும் மதிப்பு மட்டுமே. மற்றபடி, உள்ளூர துவேஷம் மட்டுமே மிஞ்சுவது நிதர்சனம்.

இந்த இரு பிரிவுகளுக்கு இடையிலான பிளவு தன்னை நீட்டிக்கொள்ளும் விதத்தில் இந்த தேசம் தன் இயக்கம் கொண்டு- ரிச் கெட்டிங் ரிச்சர், புவர் கெட்டிங் புவரரில்தான் சென்று முட்டிக்கொண்டு

https://telegram.me/aedahamlibrary

நிற்கிறது.

இது ஏன் இப்படி நடக்கிறது என்று கேட்டால் மீண்டும் மலாவியினரின் திறமையின்மை மற்றும் நம்பகத்தன்மையின்மை என்ற இரண்டு குணாம்சங்களை நோக்கியே செல்ல வேண்டியிருக்கும். வெறும் மலாவியர்களை நம்பி ஒருவர் எந்தத் தொழிலிலும் ஈடுபட முடியாது. வடிவேலு ஃப்ரெண்ட்ஸ் திரைப்படத்தில் பெயிண்டிங் காண்ட்ராக்ட் எடுத்து அவருக்குக் கீழ் வேலை பார்ப்பவர்கள் அவரைப் படுத்தும் பாடு பார்த்திருப்பீர்கள்தானே? அது இந்தியாவில் நகைச்சுவை. இங்கு நடைமுறை.

உதாரணமாக -என் நண்பரான இந்தியரின் வீடு. மலாவிய சமையல்காரர். நண்பர், விருந்தினர் இருவருடன் பேசியபடி தேனீர் போடுமாறு சொல்லியிருக்கிறார். பால் இல்லை. சமையல்காரர் பால் வாங்க மறந்துவிட்டார். முதலாளியிடம் சொன்னால் திட்டு வாங்க வேண்டியிருக்குமே என பயம். தேனீர் ஒரு வழியாக வந்து சேர்ந்தது. சுவையிலும், நிறத்திலும் வித்தியாசம் கண்ட நண்பர் தன் சமையல்காரரை அழைத்து விசாரிக்க அவர் எதுவும் சொல்லாமல் திருதிருவென விழிக்க, சமையலறையில் நுழைந்தால் பின் தெரிந்தது கதை. காலையில் நண்பரின் மனைவி சேமியா பாயசம் செய்திருக்கிறார். அதில் உள்ள சேமியா முழுவதையும் வடிகட்டி விட்டு, மிஞ்சியதில் தேனீர்! யூகிக்க முடிகிறதா?

மற்றொரு முறை, மற்றொருவரின் வீட்டில் உணவு சூடு பண்ணச் சொல்ல வேண்டி அவர் 'ஹீட் த புட்' என்று சொல்ல மலாவிய வேலைக்காரர் மூன்று பேர் சாப்பிட வேண்டிய சாப்பாட்டைத் தான் ஒருவரே சாப்பிட்டு முடித்துவிட்டு "பானா (பாஸ்), நீங்கள் சாப்பிடச் சொன்னதால் (ஈட் இட்) சாப்பிட்டேன்" என சாதித்த கதை நடந்தது. இது எல்லாம் என்றாவது ஒரு நாள் நடக்கும் நிகழ்ச்சி அல்ல. தினம் தினம் இதுபோல் நூறு கதைகள். இவர்கள் எந்த விஷயத்தில் நாம் சொல்வதைப் புரிந்துகொள்ளத் தவறுகிறார்கள்; எந்த விஷயத்தில் நம்மை ஏமாற்றுகிறார்கள் என்று கண்டுபிடிப்பது சிரமம். இந்த நிலையில் என் அக்கவுன்டன்ட் மலாவியர். யோசித்துப் பாருங்கள், என் நிலை என்னவாக இருக்கும் என்று. வாழைப்பழ ஜோக் இங்கு அலுவலகக் கணக்கு விஷயத்தில் தினந்தினமும் நடந்தேறுகிறது.

இவற்றையெல்லாம் மலாவியர்களின் பொதுவான குணத்தைச் சொல்வதற்காகத்தான் குறிப்பிடுகிறேனே தவிர இங்கும் படித்த, நல்ல திறமையுடன் செயல்படும் இளைஞர்கள் இருக்கவே செய்கிறார்கள். ஆனால் எண்ணிக்கை மிகக் குறைவு. அரசுப் பதவியில் இருப்பவர்கள்

https://telegram.me/aedahamlibrary

அனைவரும் மலாவியர்களே. இவர்களிலும் திறமையான பலர் இருப்பினும் சிறு வயது முதல் பணத்துக்காகவும், உணவுக்காகவும் ஏங்கும் சமூகத்தில் வாழ்ந்து, அவர்கள் பணத்திற்காக எதையும் விட்டுக் கொடுக்கத் தயாராகி விடுகிறார்கள்.

மலாவியில் நுழையும்போதே, விமான நிலைய சோதனையின்போது ஒருவர் சந்திக்கும் முதல் கேள்வி - 'பானா, எனிதிங் ஃபார் மை ஃபான்ட்டா?' என்பதாகத்தான் இருக்கும். அதாவது, ஃபான்ட்டா குடிக்க எதாவது காசு தந்துவிட்டுப் போ' என்று கேட்கிறார்கள். (500 குவாச்சா நோட்டைக் கொடுத்து ஃபான்ட்டா (50 குவாச்சா) வாங்கிக் குடி என்று நீங்கள் கூறும் நொடியில் சோதனை முடிவடைந்துவிடும்.

இத்தகைய நிலையில் இந்தியர்கள் இங்கு ஒருவித 'சூப்பீரியாரிட்டி காம்பளக்சுடன்' வாழ்கிறார்கள். மலாவியர் குறித்தும், தாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் நாடான மலாவி குறித்தும் மிகவும் தாழ்வான எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் மலாவியர்களுக்கு நான் அதிகம் இடம் கொடுக்கிறேன் என்று குறிப்பிட்ட என் நண்பர்- தான் அவர்களை நாய்களைப் போல் தட்டி வைத்திருப்பதாகச் சொன்னபோது எனக்கு இங்கு பெருகும் குற்றங்கள் குறித்த ஆச்சரியம் முடிந்து போனது.

தீபாவளி அன்று இந்தியன் ஸ்போர்ட்ஸ் கிளப்புக்குச் சென்றிருந்தேன். பெரும்பாலும் வட இந்தியர்கள் பிரம்மாண்ட மாகக் கொண்டாடினார்கள். வானவேடிக்கைகள் மட்டும் 40 நிமிடம் ஓயாமல் தொடர்ந்து வானத்தைப் பலவிதமாக அலங்கரித்தது. பாட்டு, நடனம் என ஒரு கல்லூரி விழா போல் இருந்தது. அங்கு ஒரு சில மலாவியர்கள் மட்டும் பணியாட்களாக வேலை செய்துகொண்டிருக்க, இந்திய நாட்டின் கொடியலங்காரத்துடன் ஒரு பெண் வந்து நிற்க (பாரத் மாதா!) 'ஸாரே ஜகான் ஸே அச்சா' பாட அனைவரும் எழுந்து நின்று மெய்சிலிர்க்க மரியாதை செய்தனர். பாடல் முடிந்தவுடன் ஒருவர் 'பாரத் மாதா கீ...' என மைக்கில் ஆக்ரோஷமாகக் குரல் கொடுக்க, மொத்தக் கூட்டமும் ஜே என அலறியது. அந்த மலாவிய பணியாளர்கள் என்ன நினைத்திருப்பார்கள் என்பதை என்னால் யோசிக்க முடியவில்லை.

சாரு, எனக்கு தேசபக்தி என்பதெல்லாம் மனிதன் தனக்குத்தானே போட்டுக்கொள்ளும் வேஷமாகவே தோன்றுகிறது. உள்ளுக்குள் அவனுக்கு பயம். தனிமை பயம். அதனால் குழு தேவைப்படுகிறது. அடையாளப்படுத்திக் கொள்ளுதல் தேவைப்படுகிறது. தன் வாழ்விற்கு அர்த்தம் வரித்துக்கொள்ள ஆசைப்படுகிறான். இது கடைசியில் பல விதமான சிக்கல்களில், மனிதனை மனிதனுக்கு எதிரில் திருப்புவதில்

https://telegram.me/aedahamlibrary

கொண்டு முடிந்துவிடுகிறது. முழு போதையிலிருந்த இருந்த நண்பர் ஒருவரிடம் இதை கூறினேன். “எதற்காக இதுபோன்ற கோஷங்கள்? (ஜாலியன்வாலாபாகில் என்றால் என்னால் புரிந்து கொள்ள முடிகிறது) அதிலும் சக மனிதன் உணவின்றி வறுமையில் செத்துக்கொண்டிருக்கும் நாட்டில் வந்து அர்த்தமின்றி?” என நான் சொல்லி முடிப்பதற்குள், “ஜோ, யூ ஆர் ஆண்டி நேஷனலிஸ்டிக்-ஆண்டி பேட்ரியாடிக் இல்லையா?” என ஆரம்பித்தார். நான் அவசரமாக நடையைக் கட்டினேன். இது பரவாயில்லை; முன்னொரு நாள் இது போன்ற சந்தர்ப்பத்தில் “உன்னைப் போன்ற ஆட்களை இந்தியாவுக்குள்ளேயே விடக் கூடாது” என ஒருவர் கோபப்பட்ட கதையும் நடந்தது.

சரி, இவ்வளவு தூரம் சொல்லிவிட்டு நம் தமிழர்கள் பற்றிச் சொல்லாமல் விட்டால் எப்படி? தமிழர்கள் - இருக்கிறார்கள். கிட்டத்தட்ட முப்பது குடும்பங்கள் இருக்கும் என நினைக்கிறேன். ஒருமுறை இந்தியா சென்று திரும்பினால் ஆறு மாதத்திற்குக் குடும்பத்திற்குத் தேவையான மளிகை சாமான்களை வாங்கி வந்துவிடுகிறார்கள். பணம் இந்த தேசத்தில் தேவையில்லாமல் விரயமாவதைத் தவிர்க்கப் போராடுகிறார்கள். சன் டீவி பார்க்கிறார்கள். வழக்கம் போலவே சீரியல். இல்லாவிட்டால் தமிழ் சினிமா. தமிழ்ச்சங்கம் வைத்திருக்கிறார்கள். தமிழ்ச் சங்கம் டி ஷர்ட் அடிக்கிறது. பொங்கல், தமிழ்ப் புத்தாண்டு போன்ற பண்டிகை தினங்களில் கோவிலில் கூடுகிறது. புளியோதரை, எலுமிச்சை சாதம் என உணவு பரிமாறிக்கொள்கிறது. சரி-இதற்கு எதற்கு மொழியின் பெயரால் சங்கம்? இதுபோன்ற சிறுபிள்ளைத்தனமான கேள்விகளை அவர்கள் சற்றும் விரும்புவதில்லை.

ஆக, மலாவி என்ற இந்த தேசம் இதுபோன்ற வெவ்வேறு வகையான மனங்களின், மனிதர்களின் போக்கின் வழியில் தன் போக்கினை அமைத்துக் கொண்டிருக்கிறது. இதில் வளம் சேர்ப்பதற்கென்றே அனுப்பி வைக்கப்பட்ட ஏரியும், மலைகளும் தங்கள் பங்கு என்ன என்று புரியாமல் தேமே என முழித்துக் கொண்டு நிற்கின்றன!

முடிப்பதற்கு முன் ஒரு விஷயத்தைச் சொல்லியாக வேண்டும். சென்ற வருடம், ஒரு நள்ளிரவில் என் வீட்டுக்கதவு உடைக்கப்பட்டு வீடு கொள்ளை அடிக்கப்பட்டது. 16 பேர் சேர்ந்து தனியாளாக இருந்த எனது வீட்டினை முற்றுகையிட்டு 13 பேர் வெளியே நின்று துணைபுரிய, மூன்று பேர் வீட்டினுள் நுழைந்து லாப்டாப்பில் துவங்கி ரெப்ரிஜிரேட்டர் முதல் கொசுவலை வரை அனைத்தையும் ஐந்தே நிமிடங்களில் சுருட்டிக்கொண்டு சென்றனர். காவல்காரர் அலாரத்தை முடுக்கிவிட்டு ஓடி மறைந்திருந்தார். அவர்கள் கையில் ஆயுதங்கள்

https://telegram.me/aedahamlibrary

இருக்க, முற்றிலும் தன்னந்தனியனாக நான் எதிர்ப்பு காட்ட வழியின்றி அவர்கள் வசம் வீட்டினை ஒப்படைத்துவிட்டு ஒதுங்கியிருந்தேன். ஒருபுறம் அலாரம் அலறியபடி இருக்க, யாரும் வருவதற்குள் வேலையை முடித்துச் செல்லும் அவசரத்தில் கமாண்டோவின் வேகத்துடன் வீட்டுக்குள் அந்த மூவரும் செயல்பட்டுக்கொண்டிருந்தனர். இந்த களேபரப் பொழுதில் எனது சூட்கேஸை எடுத்துக்கொண்டு ஒருவன் ஓட, நான் பதறிப் போய் அவசரமாகக் கத்தினேன் - -என் பாஸ்போர்ட் அந்த சூட்கேஸில் இருக்கிறது என்று. ஒரு நிமிடம் தாமதித்தவன் அந்தப் பெட்டியை மட்டும் போட்டுவிட்டு ஓடினான்.

இப்போது அந்தச் சம்பவத்தை நினைவு கூர்கையில், இங்கு இது போன்ற கொள்ளை சர்வ சாதாரணம் என்று சிலரும், தங்களுக்கு நேர்ந்த அனுபவத்தை சிலரும், இன்சூரன்ஸ் இருப்பதால் சிக்கலில்லை என்று சிலரும், தொழிற்சாலையில் நான் மிகக் கண்டிப்புடன் நடந்துகொண்டு நிறைய ஆட்களை வேலையைவிட்டு எடுத்த காரணத்தால் நிகழ்ந்த திட்டமிட்ட நடவடிக்கையே இது என்று சிலரும் குறிப்பிட்டுப் பேசுகின்றனர். எனக்கு என்னவோ இது எல்லாவற்றையும் விட அந்தத் திருடன் தன் அவசரத்திலும் என் பாஸ்பார்ட்டுக்காக பெட்டியை விட்டுச் சென்றது மட்டுமே முக்கியமாகத் தோன்றுகிறது.

இணையதளம் ஆரம்பித்து கவிதை எழுதவில்லையா என்ற தங்கள் கேள்வி உண்மையில் பாராட்டா கிண்டலா எனப் புரியாமல் குழம்பிப் போனேன். இன்றளவில் எழுதிக் குவிக்கப்படும் கவிதைகளின் தரம் அப்படி. உண்மையில் எனக்குக் கவிதை மீது ஈடுபாடும் கூடவே என் மொழியின் முதிர்ச்சி குறித்த தயக்கங்களும், என் வாழ்க்கைப் பார்வை குறித்த சந்தேகங்களும் இருக்கவே செய்கின்றன. எது எப்படி என்றாலும், முன் பரிச்சயம் இல்லாத ஒரு நபரின் கடிதத்தில் உள்ள சில வார்த்தைகளைக் கொண்டு எப்படி அவரது கவிதை ஈடுபாடு வரை யூகிக்க முடிகிறது என ஆச்சரியம் அடைந்தேன்.

அன்புடன்

ஆனந்த்

¦

¦

டியர் ஆனந்த்,

உங்களுடைய நீண்ட கடிதத்துக்கு அதைவிட நீண்ட ஒரு பதிலையே எழுத விருப்பம். ஆனால் இசையும் பின்நவீனத்துவமும் என்ற கட்டுரைக்காகத் தலைமுடியைப் பிய்த்துக்கொண்டு ராவும் பகலுமாக

https://telegram.me/aedahamlibrary

எழுதிக்கொண்டும் வாசித்துக்கொண்டும் இருக்கிறேன்.

உங்கள் பதிலைப் படித்ததும் தகவல் தொழில்நுட்பத்தில் நேர்ந்திருக்கும் புரட்சி பற்றி எப்போதும் எனக்குள் இருக்கும் ஆச்சரியம் மீண்டும் ஒருமுறை எழுந்து தணிந்தது. பத்திரிகையில் எழுதும்போது அதற்கான எதிர்வினையைத் தெரிந்துகொள்ள முடிந்ததில்லை. இப்போது கணினியின் வழி என்னென்னவோ அதிசயங்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன.

உங்கள் கடிதம் எனக்கு இரண்டு விஷயங்களை ஞாபகமூட்டியது. ஒன்று, எனது நண்பரும் பிரபல மலையாள எழுத்தாளருமான ஸக்கரியாவின் ஆஃப்ரிக்க அனுபவங்கள். ஆஃப்ரிக்கக் கண்டத்தின் கீழ்ப் புள்ளியிலிருந்து துவங்கி மேலே லிப்யா வரை தரை மார்க்கமாகவே பயணம் செய்த அனுபவத்தைப் பற்றி ஒருநாள் என்னிடம் மிக விரிவாகச் சொல்லிக்கொண்டிருந்தார். அது மாத்ருபூமியில் தொடராகவும் வெளிவந்தது. ஆறு மாத காலம் ஆயிற்றாம். இன்னொன்று, அ.முத்துலிங்கத்தின் கதைகள். பணி நிமித்தமாக ஆஃப்ரிக்க நாடுகள் பலவற்றில் வாழ்ந்தவர். அவருடைய கதைகளை இதுவரை நீங்கள் படிக்காதிருந்தால் உடனே படித்துவிடுங்கள்.

உங்கள் கடிதம் ஒரு கதை போலவே இருந்தது. அதிலும் அந்தப் பாஸ்போர்ட்... லத்தீன் அமெரிக்க நாடுகள் அடிமைப்பட்டதெல்லாம் இப்படித்தானே? கூப எழுத்தாளர் அலெஹோ கார்ப்பெந்த்தியரின் கதைகளிலும், கார்லோஸ் ஃபுவெந்தெஸின் நாவல் தெர்ரா நோஸ்த்ராவிலும் (எங்கள் பூமி) இந்த அடிமை வரலாற்றை நாம் காணலாம்.

மலாவியர்களின் பொதுவான குணாம்சம் பற்றி: விரிதியானா என்ற படத்தில் அடிமைகளின் இந்த உளவியலை வெகு நேர்த்தியாகப் பதிவு செய்திருக்கிறார் லூயி புனுவெல். அல்ஜீரியாவில் ஃப்ரெஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தை எதிர்த்து நடந்த போராட்டத்தில் எத்தனையோ ஃப்ரெஞ்சுக் குழந்தைகள் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். நூற்றாண்டு நூற்றாண்டுகளாய் ஒரு இனம் கொடூரமான அடக்குமுறைக்கு ஆளாகும்போது இப்படித்தான் ஆகும்.

எனக்கு மொராக்கோவிலிருந்து எகிப்து வரையிலான வட ஆஃப்ரிக்க நாடுகளைத் தவிர மத்திய, தென் பகுதி ஆஃப்ரிக்கா பற்றி அதிகம் தெரியாது. அதனால்தான் சென்ற கடிதத்தில் மலாவியை மாலவி என்று உச்சரித்து எழுதிவிட்டேன். நான் எந்த ஊருக்குச் சென்றாலும் அங்குள்ள

https://telegram.me/aedahamlibrary

உணவு பற்றியும், அங்கே பிரபலமாக இருக்கும் லோக்கல் போதை சரக்குகளைப் பற்றியும் (சென்னையில் சுண்டக் கஞ்சி மாதிரி) விசாரித்து வைத்துக்கொள்வேன். அந்த மாதிரி மலாவியர்கள் சோளக்கஞ்சி தவிர அசைவத்துக்கு என்ன சாப்பிடுவார்கள்? லோக்கல் சரக்கு ஏதாவது உண்டா? சல்லிசான விலையில் ஏதாவது இருந்தாக வேண்டுமே?

லஞ்சம் ஊழல் இத்யாதிகளில் இந்தியாவை விடவும் கேவலமான ஒரு நாடு இந்தப் பூவுலகில் இருப்பது அறிந்து சற்றே பெருமிதம்தான் ஏற்படுகிறது.

மலாவியில் வேறு எதுவும் விசேஷம் இல்லையா? உதாரணமாக, ஆஃப்ரிக்க கண்டத்தின் மேற்கில் வட அட்லாண்டிக் பெருங்கடலில் உள்ள கபே வெர்தே தீவுகள் செஸாரியா எவோரா என்ற ஒரே பாடகியால் உலக அளவில் தெரிய வந்தன. அந்த மாதிரிக் கலைஞர்கள் இலக்கியவாதிகள் அங்கே உண்டா? வாய்மொழிப் பாடல்களும், நாடகங்களும், நிறைய பழமொழிகளும் உண்டு என்று மலாவி பற்றிய ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

அதேபோல் ஸ்டீவ் சிமோம்போ (Steve Chimombo) எழுதிய சேவா பழங்குடி பற்றிய ஒரு நாடகமும் அங்கே பிரபலம். மலாவியின் மற்ற எழுத்தாளர்களான Willie Zingani, Jolly Max Ntaba, Ben Malunga, Shumba போன்றவர்களை விட கவிஞரும் சிறுகதை ஆசிரியருமான சிமோம்போவின் எழுத்து ஆங்கில வாசகர்களிடையே அதிகம் சிலாகிக்கப்படுகிறது. The Bird Boy's Song என்ற புத்தகத்தில் இவர் மலாவியின் நாட்டார் வழக்கிலுள்ள 'அனாதையும் அடிமையும்' என்ற கதையைச் சொல்லுகிறார். ஒரு அனாதைச் சிறுவன் தன்னுடைய அடிமையுடன் தன் கிராமத்துக்குத் திரும்புகிறான். வழியில் சிறுவனை ஏமாற்றி அவனை அடிமையாக்கிவிட்டுத் தானே சிறுவனாக ஆகிவிடுகிறான் அடிமை. இப்போது சிறுவனின் வேலை வயல்வெளிகளில் தானியங்களைத் தின்றுவிடாமல் பறவைகளை விரட்டுவது. ஆனால் அந்த வேலையைச் செய்யும்போது அவன் பாடும் பாடல்கள் சிறுவனை அடையாளம் காட்டி விடுகிறது. இது பாரம்பரியமாக வழங்கி வந்த கதை. இதை வேறு மாதிரி மாற்றியிருக்கிறார் சிமோம்போ. சிமோம்போவின் கதையில் சிறுவனே தன்னுடைய அடிமையை விடுதலை செய்கிறான். இவருடைய Wrath of Napolo என்ற புத்தகத்தை மிச்சிகன் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ளது.

Jack Mapanje மற்றொரு புகழ்பெற்ற மலாவியன் கவிஞர். மலாவி பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்துறையில் பேராசிரியராகப்

https://telegram.me/aedahamlibrary

பணியாற்றியவர். 1981ஆம் ஆண்டு இவர் Of Chameleons and Gods என்ற ஆங்கிலக் கவிதை நூலை லண்டனில் வெளியிட்டார். இந்தப் புத்தகத்தினால் அரசுக்கு ஆபத்து என்று சொல்லி 1985இல் இதைத் தடை செய்தது மலாவி அரசு. பின்னர் அதுவும் போதாது என்று 1987இல் இவர் கைது செய்யப்பட்டார். மலாவி மக்களால் பேசப்படாத ஒரு மொழியில் எழுதப்பட்ட ஒரு மிக மெல்லிய கவிதைப் புத்தகம் எப்படி ஒரு அரசாங்கத்துக்கும், சமூகத்துக்கும் ஆபத்தாக இருக்க முடியும் என்று கேட்டு உலக அளவில் அவருடைய கைதுக்கு எதிராக ஏற்பட்ட எதிர்ப்பைக் கண்டு அரசாங்கமே திகைத்துப் போனது. இந்த எதிர்ப்பை முன்னின்று நடத்தியவர்கள் ஹெரால்ட் பின்டர், வோலே சோயிங்கா, சூசன் சொண்டாக், நோம் சாம்ஸ்கி போன்றவர்கள். இவ்வளவு எதிர்ப்பு இருந்தும் 1991 வரை மலாவி அரசு இவரை விடுதலை செய்யவில்லை. மபாஞ்ஜே சிறையிலிருந்தபடியே கவிதைகளை எழுதினார். இந்தக் கவிதைகள் The Chattering Wagtails of Mikuyu Prison என்ற தலைப்பில் 1993இல் வெளியாயிற்று. அதற்குப் பிறகு 1998இல் இவரது மூன்றாவது கவிதைத் தொகுப்பு Skipping Without Ropes வெளிவந்தது. இப்போது இவர் இங்கிலாந்தில் வசிக்கிறார். இவருடைய சமீபத்திய கவிதை நூல்கள்: The Last of the Sweet Bananas: New & Slected Poems (2004) Beasts of Nalunga (2007).

இவருடைய முக்கியமான கவிதை Scrubbing the Furious Walls of Mikuyu.

எழுத்தாளர்களையும் கவிஞர்களையும் நாடு கடத்துவது, அவர்களுடைய நூல்களைத் தடை செய்வது என்பதெல்லாம் மலாவி அரசு தொடர்ந்து செய்து கொண்டிருந்த ஒன்று. எழுபதுகளின் துவக்கத்தில் David Rubadiri என்ற கவிஞர் நாடு கடத்தப்பட்டார். அதற்குப் பிறகு எந்தக் கவிஞரின் புத்தகமும் மலாவியில் வெளியிடுவது தடை செய்யப்பட்டது. அதனால் கவிஞர்கள் தங்கள் கவிதைகளைத் தனிச்சுற்றாகவே அனுப்பிப் படித்தனர். அப்படியும் பல கவிஞர்களும், நாவலாசிரியர்களும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். உலக அளவில் தடை செய்யப்பட்ட எழுத்தாளர்களைப் பற்றிய விபரங்கள் Index on Censorhip என்று வெளிவந்து கொண்டிருக்கிறது. அதில் Singing in the Dark Rain என்ற தலைப்பில் ஜேம்ஸ் கிப்ஸ் மலாவியில் தடை செய்யப்பட்ட, சிறையில் அடைக்கப்பட்ட எழுத்தாளர்களைப் பற்றிய முழு விபரங்களைத் தொகுத்திருக்கிறார். Index on Censorhip 17 (2) February 1988.

இங்கே எனக்கு ஒரு சந்தேகம். ஏன் தமிழ்நாட்டில் மட்டும் இப்படியெல்லாம் நடப்பதில்லை? அவர் ஆங்கிலத்தில் எழுதினார் என்று

https://telegram.me/aedahamlibrary

சொன்னால், மற்ற மலாவி எழுத்தாளர்கள் மலாவி மொழியில்தானே எழுதினார்கள்?

எனக்கு என்னவோ நீங்கள் இந்த 'ஸாரே ஜஹாங் ஸே அச்சா' கும்பலை விட்டுவிட்டு மலாவியிலுள்ள சீரியஸ் எழுத்தாளர்களைத் தேடிச் செல்லலாம் என்று தோன்றுகிறது. அதை சிமோம்போவிடமிருந்து நீங்கள் தொடங்கலாம். மலாவி பல்கலைக்கழகத்தில் 30 ஆண்டுகள் (1972-2002) பேராசிரியராக இருந்தவர் அவர்.

சிமோம்போ மூத்த தலைமுறை எழுத்தாளர். இளைய தலைமுறைக் கவிஞரைச் சந்திக்க வேண்டுமானால் Stanley Onjezani Kenani. மபாஞ்ஜே கைதியாக அடைக்கப்பட்டிருந்த மிகூயு சிறைச்சாலையைப் பார்த்துவிட்டு இவர் எழுதிய கவிதை ஒன்று என்னை மிகவும் உணர்ச்சிவசப்படச் செய்தது.

இப்படிப்பட்ட கலைஞர்களின் மூலமாக மலாவியர்களை எதிர்கொண்டால் அந்த அனுபவம் வேறு மாதிரியாக இருக்கும். ஏனென்றால், நான் தில்லியில் இருந்த 12 ஆண்டுகளும் சராசரித் தமிழர்களுடன் சேரவில்லை. மண்டி ஹவுஸ் என்ற இடம் தில்லி புத்திஜீவிகளின் அட்டா (புகலிடம்). அந்த அட்டாதான் என்னுடைய வசிப்பிடமாகவும் இருந்தது. மலாவி கலைஞர்களின் அட்டாவைக் காண்பித்து விட்டேன். இனி உங்கள் கையில்...

சாரு

31.3.2009

https://telegram.me/aedahamlibrary

ஸாரே ஜஹா(ங்) ஸே அச்சா!

ஆனந்துக்கு நான் எழுதிய பதிலில் ஒரு முக்கிய விஷயத்தைக் குறிப்பிட மறந்து போனேன். மலாவியர்களோடு ஒப்பிட்டு இந்தியர்களும், தமிழர்களும் தங்களை மிகவும் அதிகப்படியாக நினைத்துக் கொள்வதாக எழுதி இருந்தார் ஆனந்த். இந்தியர்கள் அப்படி நினைத்துக்கொள்ள அவர்களுக்கு ஏதும் தகுதி கிடையாது. பிஹார், ஒரிஸ்ஸா, உத்தரப்பிரதேசம், மத்தியப் பிரதேசம், ஆந்திரா போன்ற பல மாநிலங்கள் மலாவியைப் போல்தான் இருக்கின்றன.

உத்தரப் பிரதேசத்தின் de facto தலைநகரமான இலஹாபாதில் பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் ஒரு நண்பரின் இல்லத்துக்குச் சென்றிருந்தபோது கண்ட காட்சிகள் படு பயங்கரமானவை. நண்பர் மத்திய அரசு ஊழியர். நான் கழிப்பறைக்குச் சென்றுவிட்டு வெளியே வந்தபோது கையில் ஒரு பக்கெட் நீருடன் ஒரு ஆள் நின்று கொண்டிருந்தார். நான் வந்ததும் கழிப்பறையைச் சுத்தம் செய்வதற்காக. அவர் என் நண்பரின் அலுவலகத்தில் கடைநிலை ஊழியர். அவரேதான் வீட்டிலும் எடுபிடி. என் நண்பருக்குக் கால் அமுக்கிவிடுவது உட்பட அந்தக் கடைநிலை ஊழியரின் வேலைதான். லல்லுவின் வாழ்க்கை பற்றியெல்லாம் கற்பனை செய்து பார்த்துக்கொள்ளுங்கள்.

மலாவி முட்டாள்களின் தேசம் என்று இந்தியர்கள் நினைத்தால் இந்தியா காட்டுமிராண்டிகளின் தேசம் என்று சொல்லலாம். சமீபத்தில் செந்தட்டியில் நிகழ்ந்த படுகொலைகள் இதற்குச் சான்று. செந்தட்டியில் உள்ள முப்பிடாதி அம்மன் கோவிலைக் கட்டுவதற்கு அங்கே வசிக்கும் தலித்துகளும் தங்களின் பங்குத் தொகையாக ஒரு லட்சம் ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். ஆனாலும் கோவிலுக்குள் சென்று வழிபட இங்குள்ள உயர்சாதியினர் அனுமதிக்கவில்லை. தலித்துகளும் ஒதுங்கி இருந்துவிட்டனர். இப்போது நாங்களும் வழிபாடு நடத்துவோம் என்று தலித் மக்கள் சொல்ல ஆரம்பித்ததிலிருந்து பிரச்சினை உண்டாகியிருக்கிறது. இரண்டு தலித்துகள் கொல்லப்பட்டிருக்கின்றனர். இது பற்றி அழகிய பெரியவன் எழுதிய விரிவான கட்டுரை ஒன்றை ஏப்ரல் மாத உயிர்மையில் படித்தேன்.

https://telegram.me/aedahamlibrary

இதே கட்டுரையில் 30.6.1997 அன்று மதுரை அருகில் உள்ள மேலவளவு என்ற ஊரில் வெட்டிக்கொல்லப்பட்ட முருகேசன் என்ற தலித்தின் பிரேதப் பரிசோதனை அறிக்கையையும் கொடுத்திருக்கிறார் அழகிய பெரியவன். முருகேசன் உயர்சாதியினரின் மிரட்டலுக்கு அஞ்சாமல் பஞ்சாயத்துத் தேர்தலில் நின்றார். அது ஒன்றுதான் அவர் செய்த தவறு. முருகேசனும் அவரோடு இருந்த மற்ற ஆறு தலித்துகளும் வெட்டிக்கொல்லப்பட்டனர்.

“தலை தனியாகத் துண்டிக்கப்பட்ட நிலையில் அந்தப் பிரேதம் காணப்பட்டது. கழுத்து எலும்பில் 5ஆவது எலும்பு துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்பட்ட பிரேதம் கழுத்துப் பகுதியில் உள்ள தசைகள், ரத்த நாளங்கள், நரம்புகள், உணவுக்குழாய், மூச்சுக்குழாய் மற்றும் தண்டுவடம் ஆகியவற்றில் வெட்டிய நிலையில் காணப்பட்டது” என்று துவங்கும் அந்தப் பிரேதப் பரிசோதனை அறிக்கையைப் படிக்கும்போது ஆட்டுக் கறியை கைமாவுக்காகக் கொத்துவார்களே, அந்த மாதிரி முருகேசனைக் கொத்திக் குதறியிருக்கிறார்கள் என்று தெரிகிறது.

முருகேசனின் தலையைத் தனியாகத் துண்டித்த கும்பல், தலையிலிருந்து கொட்டிய ரத்தத்தை மற்ற தலித்துகளின் வாயில் ஊற்றிக் குடிக்கச் சொல்லியிருக்கிறது. அதற்குப் பிறகே அந்த தலித்துகளும் வெட்டிக் கொல்லப்பட்டனர்.

இதுதான் இந்தியா; இதுதான் தமிழ்நாடு. இதுதான் ஸாரே ஜஹாங் ஸே அச்சா! மாதர் சோத்!

கலாச்சாரத்தை எடுத்துக்கொண்டால் அதிலும் பின்தங்கிக் கிடக்கிறது தமிழ்நாடு. மலாவியிலுள்ள கவிஞர்கள், நாவலாசிரி யர்களை விட காத்திரமான எழுத்தாளர்கள் தமிழில் உண்டு. ஆனால் அது 1000 பேருக்குத்தான் தெரியும். ஏனென்றால், இங்கே வெகுஜனப் பத்திரிகைகளுக்கு எந்த நடிகை எவனோடு படுத்தாள் என்று ஆராய்ச்சி செய்வதற்கே 160 பக்கங்கள் போதவில்லை. அந்தக் காலத்தில் இதற்காக இந்து நேசன் என்று தனியாக ஒரு பத்திரிகை இருந்தது. இப்போது எல்லா வெகுஜனப் பத்திரிகைகளும் இந்து நேசனாக மாறிவிட்டன. அவர்களுக்கு மேலவளவு முருகேசனையும் தெரியாது; அழகிய பெரியவனையும் தெரியாது.

ஆனால் மிக மிகப் பின்தங்கிய தேசமான மலாவியில் எழுதப்படும் சீரியஸ் இலக்கியம் கல்வியாளர்களால் முன்னெடுத்துச் செல்லப்படுகிறது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் உள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் மலாவி இலக்கியம் பற்றித் தொடர்ந்து

https://telegram.me/aedahamlibrary

புத்தகங்கள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. இன்னும் பத்து ஆண்டுகளில் ஒரு மலாவி எழுத்தாளனுக்கு நோபல் பரிசுகூடக் கிடைக்கலாம். என்ன காரணம்? ஒரு மலாவி எழுத்தாளனை ஒரு சராசரி மலாவியனுக்குத் தெரியாமல் போனாலும் அங்கே உள்ள புத்திஜீவி வட்டத்துக்குத் தெரிந்திருக்கிறது. அரசாங்கத்துக்குத் தெரிந்திருக்கிறது. நீங்களே பாருங்கள். லண்டனில் வெளியான, மலாவியர்களுக்கு அதிகம் தெரியாத ஆங்கிலத்தில் எழுதப்பட்ட, ஒரு மிக மெல்லிய கவிதை நூலை மலாவி அரசாங்கம் தடை செய்கிறது. காரணம், அதை எழுதிய மபாஞ்ஜே மலாவி பல்கலைக்கழகத்தில் பேராசிரியர். பிறகு அதுவும் போதாது என்று அவரைக் கைது செய்து சிறையில் அடைக்கிறது.

இதை எதிர்த்து நோபல் பரிசு பெற்ற இரண்டு எழுத்தாளர்களும், சூசன் சொண்டாகும் உலக அளவில் போராடுகிறார்கள். சூசன் சொண்டாக் யார்? றிணிழி அமெரிக்க மையத்தின் தலைவராக இருந்தவர். உலகின் மிகச் சக்தி வாய்ந்த எழுத்தாளர் அமைப்பு அது.

இதெல்லாம் ஏன் தமிழ்நாட்டில் நடக்கவில்லை? இங்கேயும்தான் மபாஞ்ஜே மாதிரியான கவிஞர்கள் இருக்கிறார்கள். எமெர்ஜென்ஸி காலகட்டத்திலேயே அதை எதிர்த்து கவிதை எழுதினார் ஆத்மாநாம். ஜெயலலிதா ஆட்சியில் இருக்கும்போது மனுஷ்ய புத்திரன் 'அரசி' என்று ஒரு கவிதை எழுதினார். இதெல்லாம் யாருக்கும் தெரியும்? மனுஷ்ய புத்திரனின் கவிதையைப் பாராட்டி கருணாநிதி ஒரு கடிதம் எழுதினார். அத்தோடு சரி.

தமிழ்நாட்டில் கலை இலக்கியம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதன் காரணங்களில் முதன்மையானது, இங்கே உள்ள கல்வியாளர்கள் ஆட்சியாளர்களுக்கு எடுபிடிகளாக இருப்பதுதான். மேலும், கல்வியையும் கலாச்சாரத்தையும் முன்னெடுத்துச் செல்ல வேண்டிய அவர்கள்தான் வடிகட்டின மடையர்களாகவும் இருக்கிறார்கள். ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் வரும் தொடர்கதை எழுத்தாளர்கள், தொலைக்காட்சியில் சீரியலுக்கு வசனம் எழுதுபவர்கள், சினமாப் பாடல் எழுதுபவர்கள் மட்டும்தான் அவர்களின் கண்களுக்கு எழுத்தாளர்களாகத் தெரிகிறார்கள். எழுத்தாளர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய ஒரு இலக்கியப் பரிசு, ஜனரஞ்சகப் பத்திரிகையில் எழுதிய ஒரு தொடர் கதைக்காக வைரமுத்துவுக்குக் கொடுக்கப்பட்டது ஒரு உதாரணம். வைரமுத்துவின் மேல் எந்தத் தவறும் இல்லை. ஏனென்றால், இங்கே கல்வியாளர்களுக்குத் தெரிந்த ஒரே எழுத்தாளர் அவர்தான்.

சில மாதங்களுக்கு முன்பு கோட்டயத்தில் உள்ள மகாத்மா காந்தி

https://telegram.me/aedahamlibrary

பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மருத்துவக் கல்லூரியின் ஆண்டு விழாவுக்குச் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டிருந்தேன். அந்த மருத்துவக் கல்லூரி சமூகத்தின் மேல்தட்டு வர்க்கத்தைச் சேர்ந்த மாணவர்கள் படிப்பது. பெரும்பாலும் முஸ்லீம்கள்.

“உங்களைப் பற்றி நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் படித்ததில்லை. எங்களுடைய பாடத்திட்டம் மிகவும் கடுமையாக உள்ளது. தினமும் 20 மணிநேரம் படித்தால்தான் முடிக்க முடியும் என்ற நிலை. இதைத் தாங்க முடியாத பல மாணவர்கள் இங்கே தற்காலை செய்துகொள்ளுகிறார்கள். எனவே உங்களைப் படிக்காமல் போனதற்காக மன்னியுங்கள்” என்றார்கள் மாணவர்கள்.

சொகுசாக வாழ்ந்து பழகிய மாணவர்களுக்கு இவ்வளவு நெருக்கடி மிகவும் புதிது. மேலும், தேர்வில் தோல்வி என்ற அவமானத்தை அந்த உயர்வர்க்கத்தைச் சேர்ந்த மாணவர்களால் தாங்க முடியவில்லை. இதுவே தற்கொலைகளுக்குக் காரணம்.

“என்னுடைய எழுத்தைப் படிக்காதது ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால் எப்படி என்னை அழைக்க முடிவு செய்தீர்கள்?” என்று அந்த மாணவர்களைக் கேட்டேன்.

“அதற்குக் காரணம் எங்கள் பேராசிரியர்கள்.”

ஒருக்கணம் ஆச்சரியத்தில் எனக்குப் பேச்சே வரவில்லை. கோட்டயத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிப் பேராசிரியர்களுக்குத் தமிழ்நாட்டில் வசிக்கும் என்னை அழைக்க வேண்டும் என்று தோன்றியிருக்கிறது. பிறகு அந்தப் பேராசிரியர்களிடம் பேசியதில் என் எழுத்தை ஒன்றுவிடாமல் படித்திருக்கிறார்கள் என்று தெரிந்தது.

அந்த விழாவில் நான் இலக்கியம் பற்றிப் பேச வேண்டாம் என்று முடிவு செய்து மனித உயிரின் அபூர்வத்தைப் பற்றியே பேசினேன், பல ஜென் கதைகளை உதாரணம் காட்டி.

நான் எதுவும் எழுத வேண்டாம். தமிழ்நாட்டையும் கேரளத்தையும் நீங்களே ஒப்பிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள். தமிழ்நாட்டில் ஒரு பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒரு மொழிபெயர்ப்புக் கமிட்டியைப் போட்டு கருணாநிதியின் எழுத்துக்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து நோபல் கமிட்டிக்கு அனுப்பப் போகிறாராம். பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் இங்கே ஜோக்கர்களாக மாறிவிட்டார்கள்.

ஆனந்த், இதையெல்லாம் நீங்கள் மலாவியில் உள்ள ‘ஸாரே ஜஹாங் ஸே அச்சா’ கும்பலிடமும், பொங்கல் தைப்பூசக் கும்பலிடமும் சொல்லி

https://telegram.me/aedahamlibrary

வாக்குவாதம் செய்து அடிகிடி வாங்கிவிடாதீர்கள். அதற்கு நான் பொறுப்பில்லை. நான் ஏற்கனவே கூறியது போல் மலாவியிலுள்ள கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரைச் சந்தியுங்கள்.

சாரு

1.4.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

ஐந்தரை மணிக்கு மேல் வெளியே செல்ல முடியாது!

டியர் சாரு,

‘மிகூயு சிறையின் கொடுஞ்சுவர்களுக்குள்ளிருந்து கேட்ட குரல்கள்’ என்ற தலைப்பிற்காகவும், மலாவியின் எழுத்தாளர்கள் குறித்த தங்கள் அறிமுகத்துக்காகவும் நன்றியுள்ளவனாகிறேன். தங்களுக்குள் எழுந்து அடங்கும் தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம் குறித்த ஆச்சரியம் இக்கடிதம் எழுதும் வேளையில் எனக்கும் அடங்காமல் தொடர்கிறது.

அ.முத்துலிங்கம் எனக்குப் பிடித்த எழுத்தாளர். அவரது கட்டுரைகள், சிறுகதைகள் போக அவர் கண்டு பிரசுரித்த நேர்காணல்கள் மீதும் எனக்குப் பிரியம் உண்டு. நீங்கள் சொன்ன நோக்கில் மீண்டும் ஒருமுறை அவரைப் படிக்க ஆவல் ஓடியது. ஏதுவாய் என் நண்பன் ஒருவன் தங்கள் இணையதளத்தைப் படித்துவிட்டு உடனே முத்துலிங்கம் கதைகள் கிடைக்கும் ஸ்கிரிப்ட் பக்கத்தை அனுப்பி வைக்க, டவுன் லோட் செய்து வாசிப்புக்குத் தயாராக வைத்திருக்கிறேன். முத்துலிங்கம் எங்கோ ஒரு இடத்தில், தான் சில ஆஃப்ரிக்க மக்களைப் புகைப்படம் எடுத்ததைக் குறிப்பிடுகையில், அவர்கள் உடையுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள வெட்கி, ஆடை களைந்து நிர்வாணமாக போஸ் கொடுத்ததை தனக்கே உரிய நடையில் அழகாக எழுதியிருந்ததாக ஞாபகம். இங்கே மலாவியில் அது போன்ற சிக்கல்கள் இல்லை. நான் எடுத்த புகைப்படங்கள் சிலவற்றை தங்கள் பார்வைக்குத் தருகிறேன்.

ஆனந்தின் கவிதைகளும், அவர் மொழிபெயர்த்த ஹோஸே ஸரமா கோவின் - அறியப்படாத தீவின் கதையையும் வாசித்திருக்கிறேன். தேவதச்சனுடன் அவர் இணைந்து வெளியிட்ட அவரவர் கைமணல் என்ற புத்தகம் எனக்கு விருப்பமான தமிழ்க் கவிதைப் புத்தகம்.

கவிதை, பிளாக், பெயர் மாற்றம் போன்றவை குறித்து நீங்கள் கூறியவற்றை தாங்கள் குறிப்பிட்ட மற்ற விஷயங்களுடன் இணைத்து, மேலும் வாசிப்பில், தேடலில் உழைக்க வேண்டும் என்றே கொள்கிறேன். தங்களுக்கு எனது ‘சந்திப்பு’ கவிதை பிடித்திருந்ததாக குறிப்பிட்டிருந்தீர்கள் - ஒரு நிமிடம் - வெகு அடக்கத்துடன் காலரைத்

https://telegram.me/aedahamlibrary

தூக்கி விட்டுக் கொள்கிறேன் - அனுமதிக்கவும். மற்றபடி, நான் எழுதிய அந்த நீண்ட கடிதம், தங்களின் நேரம் கருதி, மனமே இல்லாமல் என்னை நானே மட்டுப்படுத்திக்கொண்டு தங்கள் கேள்வியான மலாவியின் ஏரி மற்றும் வறுமை குறித்து மட்டும் சிறிதாய் வட்டமடித்து முடித்துக்கொண்டது. உள்ளபடி இதில் எனக்கு எழுத ஒரு புத்தகமும், உங்களுக்கு பதிலெழுத பத்து புத்தகங்களும் இருப்பதாகவே படுகிறது. மலாவியர்களின் தேக வலிமை பற்றி, இவர்கள் சொல்லும் சூனியக்கதைகள் பற்றி, இவர்களின் மத நம்பிக்கைகள் பற்றி, இங்குள்ள கிராம முறைகள் பற்றி, முக்கியமாக தொழிற்சாலைகளில் இவர்களது மன அமைப்பும் இந்திய மன அமைப்பும் மோதும் விதம் பற்றி, என்.ஜி.ஓக்களின் செயல்பாடு பற்றி, மலாவியர்களின் குழந்தை வளர்ப்பு முறை பற்றி என எனக்குச் சொல்ல நிறைய இருக்கிறது.

இங்கு கிடைக்கும் லோக்கல் சரக்கு பற்றிக் கேட்டிருந்தீர்கள். இந்த உலகத்தில் லஞ்சம் இல்லாத நாடுகூட இருக்கலாம்; லோக்கல் சரக்கு இல்லாத நாடு இருக்குமா? இங்கே 'கச்சாசு' என அழைக்கிறார்கள். மிகவும் காட்டமாக இருக்குமாம். குவாட்டர் 35 குவாச்சாவுக்கு (இந்திய ரூபாயில் 10 ரூபாய்) கிடைக்கிறது. குடிப்பது ஒருபுறம் என்றாலும் அதைவிட 'ச்சாம்பா' (கஞ்சா வகையை சேர்ந்தது) புகைப்பது இவர்களுக்குப் பல இடங்களில் அத்தியாவசியமாகவே ஆகிவிடுகிறது. குறிப்பாக, கிடைக்கும் ஒருவேளை உணவோடு உழைக்க வேண்டியிருப்பதால், இவர்களுக்கு இந்த 'ச்சாம்பா'வை விட்டால் வேறு கதியில்லை.

மலாவி குறித்து மற்ற எதுவும் சொல்வதற்கு முன் மிக முக்கியமாக நான் குறிப்பிட வேண்டிய விஷயம் - இவர்களது தாய்மொழியான சிச்செய்வா-வுக்கு பிரத்யேகமான எழுத்து வடிவம் கிடையாது என்பது. சிச்செய்வா எழுதப்படுவதற்கு முழுக்க முழுக்க ரோமன் லிபியையே சார்ந்திருக்கிறது. உதாரணமாக கச்சாசு என எழுதப்பட வேண்டும் என்றால் - ஈணீநீலீணீசஷ்ய என்றே எழுத வேண்டும்.

மேலும் இந்த நாட்டின் அரசியல் சரித்திரமும் சற்று சுருக்கமாகவாவது சொல்லிவிடுவது நல்லது.

1964இ-ல் ந்யாஸாலேன்ட் முழுச் சுதந்திரம் பெற்று மலாவி எனப் பெயர் மாற்றம் கொண்டது. அந்தக் காலகட்டத்தில் தனிக்கட்சியாக மலாவி காங்கிரஸ் கட்சி ஆட்சி செய்ய, அதன் தலைவரான கமுசு பாண்டா தன்னை வாழ்நாள் ஜனாதிபதியாக அறிவித்துக் கொண்டு - கிட்டத்தட்ட முப்பது ஆண்டுகள் எதிர்க்கட்சி போன்ற சாத்தியங்களுக்கு இடமளிக்காமல் தொடர்ந்து ஆட்சி நடத்தினார். 1993-இன்

https://telegram.me/aedahamlibrary

பிற்பகுதியிலேயே, பெருகி வந்த அரசியல் சுதந்திரத்திற்கான நெருக்கடிகளின் காரணமாக இந்த வாழ்நாள் ஜனாதிபதி என்ற முறை அழைக்கப்பட்டது. 1994இல்தான் முதன்முதலில் பல கட்சி தேர்தல் நடத்தப்பட்டு பக்கிலி முலுசி ஆட்சிக்கு வந்தார்.

ஆக, இத்தகவலுடன் தங்களது பட்டியலில் உள்ள கவிஞர்கள் சிறையிலடைக்கப்பட்ட, நாடு கடத்தப்பட்ட தேதிகளை ஒப்பிட்டுப் பார்த்தால் எளிதாக அதற்கான காரணம் கிடைத்துவிடும். இவர்கள் யாவரும் கிட்டத்தட்ட சர்வாதிகாரத்தைக் கலைத்து விடுவதற்கான விதையை உலக அரங்கில் (மலாவியினுள் அல்ல) விதைத்து விடுவார்களோ என்ற அச்சத்தின் காரணமாகவே இவர்களை ஒடுக்க அத்தகைய முயற்சி நடந்திருக்க வேண்டும். மற்றபடி, உணவுக்காகப் போராடிக் கொண்டிருக்கும் மலாவியர்களிடையே கவிதை என்ற ஒரு விஷயம் உள்நாட்டுக் கலகத்தை ஏற்படுத்திவிடக்கூடிய வாய்ப்பு துளியும் இல்லை.

மலாவி போன்ற நிதி உதவியை எதிர்பார்க்கும் ஆஃப்ரிக்க நாடுகளைச் சார்ந்த ஆட்சியாளர்கள் பெரும்பாலும் உலக அரங்கில் தங்கள் பெயரை காப்பாற்றிக்கொள்ள வேண்டியவர்களாகவே இருக்கிறார்கள். தாங்கள் குறிப்பிட்ட கவிஞர்கள் யாவரும் ஆங்கிலத்திலேயே எழுதியிருப்பதை கவனிக்கவும். மலாவியர்களுக்கு இவர்களை அதிகம் - இல்லை, சுத்தமாகவே தெரிந்திருக்காது. மேற்கத்திய நாடுகளைப் பொறுத்தவரை மலாவி போன்ற ஆஃப்ரிக்க நாட்டின் இலக்கியப் பிரதிநிதிகளை முன்னிறுத்தி விவாதித்தல் முக்கியமானதாகத் தோன்றியதற்கான காரணத்தைத் தோண்டத் துவங்கினால் அது அரசியலில் துவங்கி இலக்கியத்திற்கேயான தனிப்பட்ட அரசியலில் சென்று முடியும். அத்தகைய இலக்கிய அரசியல் பற்றி மேலும் விவரமாகச் சொல்ல வேண்டிய இடத்தில் நீங்களும், கேட்டுக்கொள்ளும் இடத்தில் நானும் இருக்கிறோம்.

மலாவியர்களைப் பொறுத்தவரை அவர்கள் எளிய மனம் கொண்டவர்கள்; அதிகமானோர் கிராமத்தில் வசிப்பவர்கள்; நாட்டார் வழக்கில் கதைகளும், பழமொழிகளும், வாய்மொழிப் பாடல்களும் இவர்களிடம் பழங்குடி சமூகத்தின் மிச்சங்களாய் எஞ்சியிருக்கலாம். அதற்கு மேல் இவர்களுக்காக மொழி அளவில் தீவிர இலக்கியம் படைக்கப்படுவதோ, அது இவர்களால் வாசிக்கப்படுவதோ, இவர்களால் இவர்களது இலக்கியவாதி கொண்டாடப்படுவதோ நடைமுறையில் சாத்தியமில்லாததாகவே இருக்கிறது.

ஆக, அரசு ஒரு படைப்பாளியை உள்நாட்டில் கலகமூட்டி ஆட்சியைக்

https://telegram.me/aedahamlibrary

கவிழ்த்துவிடுவான் என்றெல்லாம் அஞ்சத் தேவையில்லை. உண்மையில் இக்கலைஞர்கள் யாவரும் அவர்களது இலக்கியத் தரத்தை விட ஒரு ஏழை தேசத்தின் பிரதிநிதிகளாகவே முக்கியமாக கவனம் பெற்றுவிடக்கூடியவர்கள். இன்னும் சாதாரணமாகச் சொல்லப்போனால், இங்கு எனக்கு வாசிக்கக் கிடைக்கக்கூடிய மலாவிய இலக்கியத்தைவிட இங்கிலாந்தில் உள்ள பொது நூலகத்திலோ, ஏன், தமிழ்நாட்டில் உங்களுக்கு பிரிட்டிஷ் நூலகத்தில் கிடைக்கும் புத்தகங்களின் எண்ணிக்கையோ நிச்சயம் அதிகமாக இருக்கும். நீங்கள் குறிப்பிட்டிருப்பது போல ஆங்கில வாசகர்களுக்கிடையே மலாவி இலக்கியம் சிலாகிக்கப்படுவதற்குக் காரணம், அது அவர்களுக்காகவே எழுதப்படுவதால்தான் எனத் தோன்றுகிறது. நடைமுறையில் இங்கே அரசியல் கவனத்திற்கும் இலக்கியத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. ஒரு உதாரணம்: இப்பொழுது ஆட்சியில் இருப்பவர் பிங்கு முந்தாரிக்கா. தேர்தல் நாள் நெருங்கி வருகிறது. இன்றைய எதிர்க்கட்சித் தலைவரான பக்கிலி முலுசி வாக்கு சேகரிக்கச் செல்கிறார். ஒரு சூப்பர் மார்க்கெட்டுக்குள் நுழைந்து, இங்கு இருக்கும் அனைத்து மக்களுக்கும் என்ன வேண்டுமோ அதை என் கணக்கில் இலவசமாகக் கொடுங்கள் என்கிறார். கூட்டம் பக்கிலி முலுசி வாழ்க என்ற கோஷத்துடன் சூப்பர் மார்க்கெட்டைச் சூறையாடுகிறது. (எனக்கு தமிழ்நாட்டில் கருணாநிதி இலவசத் தொலைகாட்சி வழங்கியது நினைவுக்கு வருகிறது.) இதுதான் வாக்கு சேகரிக்கும் முறை.

நான் இதை எழுதும் பொழுதினில் நீங்கள் மிகக் கோபமாய் எழுதிய 'ஸாரே ஜஹாங் ஸே அச்சா'வும் படிக்கக் கிடைத்தது. எனக்கு மலாவியோ இந்தியாவோ மட்டுமல்லாமல், எந்த தேசமும் மேம்போக்கான வெளித்தோற்றம் ஒன்றெனவும் உள்ளுக்குள் செல்லச் செல்ல வேறெனவும் காட்சி மாறுவதாகப் படுகிறது. இதற்கு உலகில் எந்த நாடும் விதிவிலக்காய் இருக்க முடியும் எனத் தோன்றவில்லை. மனிதனின் மனப்போக்கு அப்படி அமைந்திருக்கிறது. அதுவே தேசங்களை அப்படி அமைத்துவிடுகிறது. இதில் ஒவ்வொரு தேசத்துக்குள்ளும் ஒளிந்திருக்கும் அழகிய மற்றும் அருவருக்கத்தக்க பக்கங்களை அந்த தேசத்தின் கலைஞர்களைத் தேடி அறிவதன் மூலமே அறிய முடிகிறது. அதில் சில சமயம் மலாவி போன்ற நாட்டின் கலைஞர்களை இங்கிலாந்தில் தேட வேண்டிய அவசியமும் ஏற்பட்டு விடுகிறது.

நான் இங்கு வந்த நாளில் மிக ஆவலாய் தேடினேன். ஆறு மாதங்கள்.

https://telegram.me/aedahamlibrary

ஏதோ ஒரு நாடகம் நடக்கிறது என அருகிலிருக்கும் ஒரு கிராமத்துக்குச் சென்று பார்த்தால், பாதிரியார் ஒருவர் பாவிகளை ரட்சித்து அருள்க எனக் கதறக் கேட்டு ஓடி வர நேர்ந்தது. போகப் போக கையிலிருப்பதையும், அதிர்ஷ்டவசமாய் கிடைப்பதையும் படிப்பதை, பார்ப்பதைப் பழக்கமாக்கிக்கொள்வதென அந்தத் தேடல் முடிந்துபோயிற்று. இங்கே உள்ளூர் சந்தையில் கிடைக்கும் புத்தகங்கள் பெரும்பாலானவை கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப உருவாக்கப்பட்ட நூல்களாகவே இருக்கின்றன. மலாவியர்களைப் பொறுத்தவரை இறப்பு சட்டென்று நிகழ்ந்துவிடுகிறது. வாழ்க்கை பெரும் போராட்டமாக இருக்க, மரணம் எந்த நேரமும் வீட்டு வாசல் கதவருகிலேயே நின்றிருப்பதாலும் இவர்கள் வாழ்வில் பிடிப்பு இல்லாமல் மதத்தினை நோக்கித் தள்ளப்படுகிறார்கள்.

என் உறவினர்கள் வீட்டில் மூசா என்றொரு இளைஞன் - 28 முதல் 30 வயது இருக்கும் - வேலை பார்த்து வந்தான். நானும் அவனுமாக உலகக் கோப்பை கால்பந்தாட்டத்தினை ரசித்துப் பார்ப்போம். அரை இறுதிப் போட்டியினை என்னுடன் பார்த்துவிட்டு குதூகலமாகவே சென்றான். இறுதிப் போட்டியினைப் பார்க்க வரவில்லை. உடல்நிலை சரியில்லை என்று தெரிந்தது. போட்டி முடிந்த இரண்டாவது நாள் அவன் இறந்துவிட்ட தகவல் வந்தது. காரணம் தெரியவில்லை! இது மலாவியில் எனக்குச் சந்திக்கக் கிடைத்த முதல் இறப்பு குறித்த அனுபவம். அதிர்ச்சியாக இருந்தது. இப்போது என்றால் மாதத்திற்கு ஒரு இறப்பு செய்தி என கேட்டுக் கேட்டுப் பழகிவிட்டது. எல்லாவித நோய்க்கும் ஒரே ஒரு பெயர் சூட்டி இருக்கிறார்கள் - மலேரியா!

இந்தச் சூழலில் தேவாலயங்களும், மசூதிகளும் இவர்களின் நம்பிக்கையைப் பெறுவதில் போட்டி போட்டுக்கொண்டிருக்கின்றன.

மொத்தத்தில், சந்தையை மத நூல்களும் இன்ன பிற காகிதக் கத்தைகளும் அடைத்து நிற்க, இலக்கியம் தேடினால் அது நமது தவறு என்றே படுகிறது. நான் பெரும்பாலும் இந்தியாவிலிருந்து சேகரித்துக்கொண்டு வந்த திசையிலேயே நகர்கிறேன். சென்ற வாரம் முழுவதும் கீஸ்லோவ்ஸ்கியின் பின்னால் ஓடினேன். ப்ளூ என்னை மிகவும் கவர்ந்த படம். ரெட், ஒயிட் - எல்லாம் பிறகுதான். மூன்று வண்ணங்களைப் பார்த்துவிட்டதற்குப் பின் அவரது மற்ற படங்கள், குறிப்பாக அரசியல் - சத்தமாகப் பேசப்படும் படங்கள் எதிலும் மனம் லயிக்கவில்லை. இப்பொழுது ஸ்டான்லி குப்ரிக்கின் பின்னால் ஓடிக்கொண்டிருக்கிறேன். இங்கிருக்கும் பிரெஞ்ச் கல்சுரல் சென்டரில் லூயி புனுவலை தேடிக் கிடைக்காமல் ஒரு மூலையில் கிடந்து சிக்கியது

https://telegram.me/aedahamlibrary

ஸ்டான்லி குப்ரிக்கின் பத்து படங்கள்! பிரெஞ்ச் இங்கே யாருக்கும் புரிவதில்லை என்பதால் லூயி புனுவல், கோதார்த் போன்றவர்களின் படங்களை வைத்துக்கொள்ளவில்லை என்கிறார்கள்!

வாசிப்பில் நபகோவின் - லோலிதா இருக்கிறது. நபகோவின் மொழியிலுள்ள சரளம் பிரம்மிக்க வைக்கிறது. நான் ஸ்டான்லி குப்ரிக் படமாக்கிய லோலிதாவை இதுவரை பார்த்ததில்லை. கையில் இருக்கும் பத்து படங்களில் அதுவும் இருக்கிறது. குப்ரிக் நிச்சயம் நபகோவின் சரளத்தை விடுத்து காட்சி மொழியில் வேறொரு அற்புதத்தை நிகழ்த்தியிருப்பார் என்ற எதிர்பார்ப்புடன், வேகமாக நாவலை வாசித்துக்கொண்டிருக்கிறேன். உலக சினிமாவின் இசை பற்றி வேறொரு முறை நீங்கள் எழுத நேர்ந்தால் மறக்காமல் - ப்ளூ - பற்றியும் அதன் இசை பற்றியும் எழுத வேண்டும் என நினைவுபடுத்துகிறேன்.

இதுவரை நான் மலாவியிலுள்ள பல்கலைக்கழகத்தின் மொழியியல் துறைகளில் தோழமைக்கு முயற்சி செய்யவில்லை. காரணம், எனக்கு இதுவரை கல்வி அமைப்புகளுடன் ஏற்பட்ட அனுபவம் ரத்த அழுத்தம், தலைசுற்றல், வாந்தி போன்ற சகல நோய் அறிகுறிகளையும் ஒரு சேரத் தருவதாகவே இருந்திருக்கிறது. இப்பொழுது தங்கள் கடிதத்திற்குப் பிறகு - சிமோம்போவின் மீது நம்பிக்கை வைத்து - பல்கலைக்கழகங்களிலிருந்து மற்றொரு முறை மலாவியை தேடத் துவங்கலாம் எனத் தோன்றுகிறது. இங்கு பெரிய சிக்கல், மாலை 5.30க்கு மேல் தெருவில் நடமாட்டமே இருக்காது. யாவரும் வீட்டுக்குச் சென்றுவிடுவர். அன்றைய தினத்தின் வாழ்க்கை முடிந்துவிடும். வெளியே நண்பர்களை சந்திக்கச் சென்றால்கூட காரில் பாயின்ட் டு பாயின்ட் போல் வேகமாகவே ஓட்டிச்சென்று திரும்ப வேண்டும். திருட்டு பயம் அப்படி. உயிரிழப்பு வரை ஏற்படும். ஆக, வேலை நேரம் போக யாரையும் முன்னே பின்னே சந்திப்பது சிரமமாகிவிடுகிறது.பொதுவாகவே இங்கே சமூக வாழ்வு அப்படி அமைந்திருக்கிறது. சனிக்கிழமையானால் பகல் 12.30க்கே மூட்டையைக் கட்டி விடுகிறார்கள். இவையெல்லாம் தேடுபவனுக்கு சிறு சிறு தடைகள்தான். எப்படியும் முயல்கிறேன்.

அன்புடன்,

ஆனந்த்

¦

¦

டியர் ஆனந்த்,

https://telegram.me/aedahamlibrary

உங்கள் கடிதங்களைத் தொகுத்து தனியாகவே ஒரு புத்தகம் போடலாம் என்று தோன்றுகிறது. இந்தக் கணத்திலேயே மலாவிக்குப் பறந்து வந்து அந்தக் கச்சாசுவைக் குடித்துப் பார்க்க வேண்டும் என்றும் தோன்றுகிறது. ஒரே ஒரு முறைதான். அப்படித்தான் எனக்கு நம்மூர் சாராயத்தை ஒருமுறை குடித்துப் பார்க்க வேண்டும் என்று இருந்தது. ஆனால் கள்ளச்சாராயமாக இருந்து செத்து கித்து தொலைத்துவிட்டால் என்ன ஆவது என்ற பயம் வேறு. பிறகு களியக்காவிளை என்ற ஊரில்தான் என் ஆசை நிறைவேறியது. பிறகு திருவனந்தபுரம் திரைப்பட விழாவுக்குச் செல்லும்போதும் அங்கே ஓரிரு முறை சாராயக் கடைக்குச் செல்வதுண்டு.

அது சரி, கச்சாசு எதில் செய்கிறார்கள்? எப்படிச் செய்கிறார்கள்?

அந்த ச்சாம்பா விஷயம் எனக்கு பொலிவியாவின் கோகா இலைகளை ஞாபகப்படுத்துகிறது. அங்கேயுள்ள மக்களும் பசியை மறப்பதற்காக போதையூட்டும் கோகா இலைகளைத்தான் மென்று கொண்டிருப்பார்கள் என்று படித்திருக்கிறேன்.

மலாவி அரசியல்: ஜெயலலிதா, கருணாநிதி போன்ற புரியக்கூடிய பெயர்களின் மலாவி வடிவம்தான் பக்கிலி முலுசி, பிங்கு முத்தாரிக்கா எல்லாம் என்று உங்கள் கடிதம் பார்த்து உவகை கொண்டேன்.

ரோமன் லிபியாக இருந்தாலும் ஒன்றும் பிரச்சினை இல்லை. துருக்கியில் அதைத்தானே பயன்படுத்துகிறார்கள். மலாய் மொழியும் அப்படித்தான்.

ஆனந்த் - தேவதச்சன் - அவரவர் கை மணல்... ஓ... இனிமேல் உங்களிடம் கவனமாகத்தான் இருக்க வேண்டும். நான் உங்களை மற்ற வாசர்களைப் போல் நினைத்துவிட்டேன்.

எனக்கு ஆனந்தைப் பிடிக்காது. தேவதச்சன் எனக்கு மிகப் பிடித்தமான கவிஞர். ஆனந்தைப் பிடிக்காததற்கு மற்றொரு காரணம், ஒருமுறை தொலைக்காட்சி பேட்டியில் பிராமணக் கொச்சையிலேயே பேசினார். திருநெல்வேலிக்காரர், மதுரைக்காரர், நாஞ்சில் நாட்டுக்காரர், இஸ்லாமியர் எல்லோரும் பொதுவெளியில் கூட அவரவர் மொழியில் பேசும்போது பிராமணர் மட்டும் அதே பொதுவெளியில் அவர்கள் வீட்டுக்குள் பேசி புழங்கும் மொழியில் பேசுவதில் என்ன தவறு என்று ஒருவர் கேட்கக்கூடும். மேலோட்டமாகப் பார்த்தால் அதில் எந்தத் தவறும் இல்லை என்றுகூடத் தோன்றும். சரி, ஒரு பொதுவெளியில் ஒரு சராசரி பிராமணர் - உதாரணத்துக்கு ஒரு சோ, ஒரு பி.ஜே.பி. கட்சியைச் சேர்ந்தவர், ஒரு டாக்டர், ஒரு மடாதிபதி, ஒரு சங்கீத வித்வான் -

https://telegram.me/aedahamlibrary

பிராமண மொழியில் பேசுவதை வேண்டுமானால் சகித்துக்கொள்ளலாம். ஆனால், ஒரு கவிஞன் அப்படிப் பேசலாகுமா?

ஒரு மதுரைக்காரர், ஒரு செட்டியார், ஒரு இஸ்லாமியர் எல்லாம் அவரவர் மொழியில் பொதுவெளியில் பேசுவதற்கும் ஒரு பிராமணர் பேசுவதற்கும் வித்தியாசம் உண்டு. ஏனென்றால், சமீப காலம் வரை பிராமணீயம் என்பது சமூக அடக்குமுறையின், ஜாதி ஆதிக்கத்தின் குறியீடாக இருந்தது. அப்படிப்பட்ட ஒரு ஆதிக்க மொழியில் ஒரு பொதுவெளியில் பேசலாமா என்பதுதான் என் கேள்வி. தங்களுடைய தனிப்பட்ட வாழ்வில் பேசலாம். அதைப் பற்றிக் கேட்க யாருக்கும் உரிமை இல்லை. ஆனால் பொதுவெளியில் பேசலாமா? அதுவும் ஒரு கவிஞன்?

இது பற்றி ரொம்ப நாட்களாக என் மனதைக் குடைந்துகொண்டிருந்த மற்றொரு கேள்வி. பொதுமக்கள் எல்லோருக்கும் பணியாற்ற வேண்டிய பொறுப்பில் உள்ள ஒருவர் மத அடையாளங்களை அணிந்துகொண்டு பொதுவெளியில் வரலாமா? உதாரணமாக, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் தேர்தல் கமிஷன் தலைவராக இருந்தார். எப்போதும் அவர் நெற்றியில் ஸ்ரீசூர்ணம் அணிந்திருப்பார். அவர் நல்லவர்; நேர்மையானவர். எல்லாம் சரி. ஆனால் அவருடைய சாதியையோ, அவருடைய மதத்தையோ சார்ந்திராத ஒரு இஸ்லாமியனான எனக்கு அவர் மதச்சார்பு இல்லாதவராக, நடுநிலையாளராக இருப்பாரா என்ற சந்தேகம் ஏற்பட்டுவிடுகிறது; ஒருவித பாதுகாப்பின்மையை அவருடைய ஸ்ரீசூர்ணம் எனக்குள் உண்டாக்கிவிடுகிறது.

இதேபோல் தமிழ்நாட்டில் பல பல்கலைக்கழகத் துணைவேந்தர்கள் தங்கள் நெற்றியில் திருநீறு அணிந்தபடியே காணப்படுகிறார்கள். எல்லா மததைச் சார்ந்த மாணவர்களும் படிக்கும் சர்வகலாசாலைகளில் அதன் தலைமைப் பொறுப்பில் உள்ளவர் இப்படிக் காட்சியளிக்கலாமா?

இதற்கு எதிர்நிலையாக இன்னொரு விஷயமும் இருக்கிறது. ஒரு தேசத்தின் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவர்கள் - சகல தரப்பு குடிமக்களுக்கும் பிரதிநிதியாக இருக்க வேண்டியவர்கள். எனவே அவர்கள் தனிப்பட்ட முறையில் நாஸ்திகராகவே இருந்தாலும், எல்லா மக்களின் வழிபாட்டு நிகழ்ச்சிகளிலும் சமமான அளவில் கலந்துகொள்ள வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு. ஆனால் தமிழ்நாட்டில் என்ன நடக்கிறது? ரம்ஸானின் போது இஃப்தார் விருந்தில் ஈ என்று பல்லைக் காட்டிக்கொண்டு நோன்புக் கஞ்சி குடிக்கும் முதல்வர் கருணாநிதி கோவில் கும்பாபிஷேகத்தில் கலந்துகொள்வதில்லை. கேட்டால், இந்துக்கள் திருடர்கள் என்று உளறுகிறார். எதிர்ப்பு கிளம்பினால், கருட புராணத்தில் அப்படித்தான் போட்டிருக்கிறது என்று

https://telegram.me/aedahamlibrary

மேலும் உளறல்.

மற்றபடி, உங்கள் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கும் மலாவி தேசத்தின் நிலைமைகள் யாவும் பல லத்தீன் அமெரிக்க நாடுகளின் நிலையையே ஒத்திருக்கிறது. மருத்துவம், கல்வி போன்ற துறைகளில் மத்திய காலகட்டம்தான் போலும்.

இன்னும் பகிர்ந்துகொள்ள எவ்வளவோ உண்டு. தொடர்ந்து எழுதுங்கள். தொகுத்தால் புத்தகமாகவே வெளியிடலாம்.

சாரு

5.4.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சப்பாத்துகளும்
ஒரு கோப்பை சாராயமும்

டியர் சாரு,

மலாவி, இந்தியா, லத்தீன் அமெரிக்கா, இலக்கியம், அரசியல் என யாவும் ஒன்றுடன் ஒன்று பின்னிப்பிணையும் இந்தப் பகிர்தல் முறை எனக்கு இன்னும் ஆச்சரியமூட்டுவதாகவே இருக்கிறது. தவிர என் கவனத்துக்குக் கிடைத்த மலாவியை எழுத்தில் மீட்கும் ஆசையும் சேர்ந்துகொள்ள, தொடர்கிறேன்.

கச்சாசு - சோளத்தை மில்லில் அரைக்கும்போது எஞ்சும் உமி மற்றும் தண்ணீர், சர்க்கரை ஆகியவற்றின் கலவையில் தயாராகிறது. இந்தக் கலவையை பானையில் போட்டு இறுக்க மூடி ஐந்து முதல் பத்து நாள் வரை வைத்திருக்கிறார்கள். பிறகு பானையை அடுப்பில் ஏற்றி, கொதிக்க வைத்து, வெளிவரும் ஆவியை காற்றுப் படாமல் ஒரு குழாய் மூலம் சேகரித்து, சேகரிக்கையில் குழாயைச் சுற்றி தண்ணீர் வைப்பதன் மூலம் குளிர்வித்து, சொட்டுச் சொட்டாகப் பிடிக்க, தயாராகிவிடுகிறது கச்சாசு. சுருங்கச் சொன்னால் ஒரு fermentation ஒரு distillation- அவ்வளவே. முடிந்தால் வீட்டிலேயே முயற்சித்துப் பார்க்கலாம். உங்களைப் போலவே எனக்கும் இந்த 'ஒரு முறை' ஆசை உண்டு. ஆனால் நீங்கள் அஞ்சியது போலவே இங்கே மலாவியில் ஆபத்து அதிகம். உயிருக்கு உத்திரவாதம் இல்லை. எதாவது ஒன்று ஆயிற்று என்றால் மலேரியா என்று சொல்லிவிட்டு டாக்டர்கள் உட்பட அனைவரும் சென்றுவிடுவார்கள்.

இந்த உயிருக்கு உத்திரவாதம் என்ற வரியை எழுதுகையில் இன்னொரு விஷயம் ஞாபகத்துக்கு வருகிறது. இங்கே நான் வந்த புதிதில் எனக்கு ந்ஜாலி என்றொரு மலாவிய நண்பன் இருந்தான். தென் ஆப்ரிக்காவில் தன் பள்ளிப் படிப்பினை முடித்தவன். அவனுடன் ஒரு முறை மலாவியின் திருட்டு பயம் பற்றி பேசிக்கொண்டிருக்கையில் அவன், மலாவி எவ்வளவோ பரவாயில்லை, பொருளைக் கொடுத்து விட்டால் உயிரை விட்டுவிடுவார்கள்; தென் ஆப்ரிக்கா இன்னும் மோசம் என்று சொல்லி, தனக்குத் தெரிந்தவருக்கு ஏற்பட்ட கதியை கூறினான். அவனது நண்பரின் குடும்பத்தில் ஒருவர் தன் வீட்டு வாசலில் காரை

https://telegram.me/aedahamlibrary

நிறுத்திவிட்டு வீட்டின் கதவைத் திறக்கும் இடைவெளியில் தாக்கப்பட்டு, கத்தியால் குத்தப்பட்டு கொல்லப்பட்டிருக்கிறார். கொன்றவர்கள் திருடிச் சென்றது அவரது ஷூக்களை!

முக்கியம் - வேறெதுவுமே திருட்டுப் போகவில்லை. அவர் உயிரிழந்தது ஷூக்களினால் மட்டுமே.

இப்படிப் பார்த்தால் ஒரு கோப்பை சாராயத்துக்காக உயிர்போவது எவ்வளவோ தேவலை என்று தோன்றுகிறது.

திருவனந்தபுரம் திரைப்பட விழாவிற்கு நான் இரண்டு முறை சென்றிருக்கிறேன். சாராயக் கடைகள் பக்கம் செல்லக் கிடைத்ததில்லை. இரண்டு வகையில் அந்தத் திரைப்படவிழாவை கொண்டாடலாம் என்று தோன்றுகிறது.

முதல் வகை, ஒரு நல்ல படத்தைப் பார்த்து, படம் முடிந்தவுடன் அந்தப் படத்தின் பாதிப்பிலேயே மதுக்கூடங்களை நோக்கி நகர்ந்து, கோப்பையைத் தழுவியபடி கலையின் போதையில் நண்பர்களுடன் பேசித் திளைப்பது.

இன்னொரு வகை, ஒரு காப்பி குடித்து, குடிக்கும் வேளையில் அந்தப் படத்தைப் பற்றிப் பேசி முடித்து, அட்டவணையில் நல்ல படம் தேடி, கதைச் சுருக்கங்களைப் படித்து, அடுத்த படத்தினைத் தேர்வு செய்து, ஓடி, தேடி, நல்ல இருக்கையாய் பிடித்து அமர்ந்து, அடுத்த படத்திற்காகத் தயாராவது.

இதில் நாங்கள் இரண்டாவது வகை. துவக்க நாள் போக மற்ற ஏழு நாட்களில் குறைந்தது 35 சமகாலத்துப் படங்களைப் பார்த்துவிட வேண்டும் என குறி வைப்போம். நாங்கள் என்றால் - நான், பாலாஜி என்ற மதுரைக்கார நண்பர் மற்றும் லேனா குமார் (யாதுமாகி என்ற இதழின் ஆசிரியர்). படங்களுக்கு நடுவில் கிடைக்கும் இடைவெளிகளில் வெவ்வேறு உணவகங்களில் உணவு உண்பது மட்டுமே சினிமாவைத் தவிர அங்கே நாங்கள் செய்த மற்ற விஷயம். இந்த புத்தூர் ஜெயராம் மெஸ்ஸுக்கு நிகராக திருவனந்தபுரத்தில் ஒரு மெஸ் உண்டு - பெயர் மறந்துவிட்டது. கிட்டத்தட்ட அரை மணிநேரம் கியூவில் நின்று சாப்பிட்டிருக்கிறோம். மற்றபடி நகுலனைப் பார்க்கச் செல்வது, கள்ளுக்கடை செல்வது போன்றவை கடைசி நேரத்தில் கைவிடப்படுவதற்கென்றே நாங்கள் போடும் திட்டங்கள்.

நான் இந்த இரு நண்பர்களையும் முதல் முதலில் திருவனந்தபுரத்தில் தான் சந்தித்தித்தேன். அதற்கு முன் லேனா குமாருடன் ஓரிரு முறை தொலைபேசியில் பேசியிருந்ததோடு சரி. அப்படி அறிமுகமான போது

https://telegram.me/aedahamlibrary

என் சொந்த ஊர் பற்றி லேனா குமார் கேட்க, நான் பிறந்தது முதல் அன்று வரை வாழ்ந்திருந்தது மயிலாடுதுறையில், என் தந்தை வழி சொந்த ஊர் செட்டி நாடு - இரண்டையும் கூறினேன்.

நான் சிறுவயது முதல் மயிலாடுதுறையிலேயே வளர்ந்ததாலும், அதிகமாக ஜாதி குறித்த கவனம் இல்லாததாலும், அப்படி இல்லாதிருப்பதே சரி எனக் கருதியிருந்ததாலும், செட்டி நாட்டுப் பேச்சுவழக்கு என் நாக்கினில் சுத்தமாகத் தட்டுப்படாது. ஒரு முறை நாட்டுக் கோட்டை செட்டியார் வகுப்பினை சேர்ந்த பிறர் என்னை 'நீ எந்த கோயில்?' என்று கேட்கப் போக - நான் அய்யனார் கோயில் என்று சொல்ல, உட்பிரிவுகள் குறித்த என் பேதமை வெளிப்பட்டு பெரும் சிரிப்பாக முடிந்தது. உள்ளபடி ஜாதி பற்றி அதிகம் தெரியாததை எண்ணி அன்றளவில் எனக்கு உள்ளூர ஒருவிதப் பெருமிதம் இருந்ததென்றே நினைக்கிறேன். விஷயம் இப்படியிருக்க லேனா குமார் "என்னய்யா நீங்க செட்டிநாடுங்கறீங்க, நாட்டுக்கோட்டை செட்டியார்ங்கறீங்க; அந்த பாஷை கொஞ்சம்கூட வெளிப்பட மாட்டேங்குது; அது எவ்வளவு அழகான பாஷை தெரியுமா?" என்று கேட்கிறார்! எனக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை. அவர் கூறுவது அந்த வகையில் சரியாகவே பட்டது. மிகவும் வருத்தமாகவும் இருந்தது.

இன்றும் என் நிலை அப்படித்தான். இது குறித்த விஷயங்களில் என்ன பேசுவது என்றே தெரிவதில்லை. மதுரைக்கார பாஷையின் மீது ஒரு வகை ஆசையும், சென்னைத் தமிழின் மீது உள்ளூர ஒருவித நிராகரிப்பும் என்னளவில் உண்டு என்று மட்டும் என்னைப் பற்றி நான் அறிகிறேன். மற்றபடி சில இடங்களில் ஜாதீய மொழி அழகாகவும், சில இடங்களில் எரிச்சல் ஊட்டுவதாகவும் தோன்றுகிறது.

அதைப் பயன்படுத்தும் நபர், பயன்கொள்ளும் விதம் ஆகியவற்றைப் பொறுத்துத்தான் இதெல்லாம் மாறுபடுகிறது என்று தோன்றுகிறது. தவிர, அடையாளங்கள் யாவும் இல்லாமல் இருந்துவிட்டால் தேவலாம் என்றும், பழைய வேதாளம் அவ்வப்போது மரம் ஏறும். கூடவே "அது எப்படி? ஒரே மாதிரியிருக்க மனிதர்கள் என்ன கார்ட்டூனா? அடையாளங்கள் ஆதி அம்சத்தின் மிச்சமல்லவா?" என்பது போன்ற கேள்விகளின் மூலம் தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத விக்கிரமாதித்யன் மீண்டும் ஒரு முறை மரத்திலேறி வேதாளத்தை இறக்க முயல்வான். இதில் துவங்கி இத்துடனே என் ஜாதி குறித்த பார்வை முடிந்து போகிறது. அதற்கும் மேலான அரசியல் பார்வைகள் மீது நம்பிக்கையோ கவனமோ இல்லை.

https://telegram.me/aedahamlibrary

ஒருவகையில் யோசித்துப் பார்த்தால் மனிதர்களின் மன உலகம் எவ்வளவு முட்டாள்தனமாக இருக்கிறது! எப்படி எல்லா நாணயங்களும் இரு பக்கங்களுடனே தயாரிக்கப்படுகின்றன? பூவைப் பார்த்தால் தலையில்லை; தலையைப் பார்த்தால் பூ இருப்பதில்லை. நடுவில் நின்று பார்த்தால் எந்தப் பக்கமும் முழுமையாகக் கிடைப்பதில்லை! ஆக உண்மை என்பது எப்போதும் Not Available Mode-ல் இருப்பதாகவே படுகிறது. உண்மை என்பது ஒருவித பார்வைக் கோணத்தின் மூலம் ஏற்பட்டுவிடும் நம்பிக்கை மட்டுமே எனக் கொள்கிறேன்.

இதில் குறிப்பாக நீங்கள் மதத்தின் அடையாளங்கள் தொடர்பாக எழுதியிருந்த, பொது இடங்களில் அவை வெளிப்படுத்திவிடும் சார்பு நிலை பற்றி நான் பல தடவை வெவ்வேறு விதங்களில் யோசித்திருக்கிறேன். பகவத் கீதை, குர்ஆன், கிருஷ்ணமூர்த்தி, ஜென் கதைகள் போன்றவை அளிக்கும் அசலான ஆன்மீக அனுபவங்கள் நீங்கலாக அன்றாட வாழ்வில் சாதாரண மனிதர்களில் தென்படும் சார்பு நிலை எனக்குப் பல இடங்களில் எரிச்சலூட்டுவதாகவும், சில இடங்களில் ஆச்சரியமூட்டுவதாகவும் அமைந்திருக்கிறது. இந்த விஷயத்தில் நான் கண்ட தலையையும் பூவையும் சொல்ல முயல்கிறேன்.

இங்கே மலாவியில் ஒரு நாளைக்கு நான்கு முதல் எட்டு மணிநேர மின்வெட்டு வரை மிகச் சாதாரணம். நானோ ஒரு தொழிற்சாலையை நிர்வகிக்கும் பொறுப்பில் இருப்பவன். ஜெனரேட்டர் போன்றவை குடிக்கும் பணம் இங்கு எங்களுக்குக் கட்டுப்படி ஆகாது. ஆக, நான் மின்சார வாரியத்திடமிருந்து அந்த வாரத்துக்கான அட்டவணையை வாங்கி அதன்படி ஷிப்ட் நேரத்தினை தினம் தினம் மாற்றி அமைப்பது வழக்கம். இதில் தொழிலாளிகளுக்கு மிகவும் சிரமம்தான். ஆனால் எனக்கு வேறு வழியில்லை. நான் இரவு ஷிப்டின் நேரத்தை எட்டு மணிக்குத் துவக்கம் என அறிவித்தாலும், தனியே நடந்து வருவதில் இருக்கும் பாதுகாப்பின்மை காரணமாக ஐந்து மணிக்கே வந்து காத்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகம். அப்படி வந்து காத்திருப்பவர்களில் பெரும்பாலோனோர் தூங்கி ஓய்வெடுத்து இரவு வேலைக்குத் தயாராக முயல்வர்.

அப்படி இருக்கையில், ஏழு மணி அளவில் இருளும் குளிரும் பரவிவிட, இருக்கும் கந்தல் துணி ஒன்றை குளிருக்குப் போர்த்திக்கொண்டு, தொழிற்சாலையினுள் இன்வர்டரில் இயங்கும் ஓரிரு விளக்குகளின் ஒளிக்கசிவை அண்டி அமர்ந்து, பைபிளை தீவிரமாக வாசித்துக்கொண்டிருக்கும் தொழிலாளியைக் கண்டு வியந்திருக்கிறேன். கதேயின் இளம் வெர்த்தரின் துயரங்கள் என்ற நாவலில் வரும் “மதம்

https://telegram.me/aedahamlibrary

துன்பப்படும் ஆன்மாக்களுக்கு ஒரு ஊன்றுகோல்; தளர்வுற்றவர்களுக்கெல்லாம் புத்துணர்ச்சி ஊட்டுவது" என்ற வரியினை என்னுள் முழு அர்த்தம் கொள்ளச் செய்த காட்சி அது.

இங்குள்ளவர்களில் நூற்றில் இருவர் மிகுந்த நேர்மையுடன் செயல்படுவதைக் கண்டு, இந்த வறுமையிலும் இக்கட்டான சூழலிலும் இவர்களை வியக்கத்தகு நேர்மையாளர்களாக வைத்திருப்பது எது என யோசிக்கும்பொழுதெல்லாம் எனக்கு விடையாகக் கிடைப்பது 'மதம்' என்ற ஒற்றை வார்த்தைதான். நடைமுறையில் இந்த இரண்டு பேர் இருக்கும் நம்பிக்கையின் பலத்தில்தான் என்னால் தொழிற்சாலையை நிர்வகிக்க முடிகிறது. இந்த நேர்மையாளர்கள் பெரும்பாலும் சொல்லக்கூடிய வாக்கியம் - I Fear God என்பது.

ஆக, ஒருவகையில், மத அடையாளங்களை இதுபோன்றவர்கள் அலுவலக வளாகத்திற்குக் கொண்டு வரும்போதும் அவை சிக்கல் தருவதில்லை; நன்மையே சேர்க்கின்றன. இவர்களின் கடினமான வாழ்க்கைக்கு வேறு என்ன காரணம் சொல்ல முடியும்? வேறு எப்படி இவர்களிடம் நேர்மையைப் பரிந்துரைக்க முடியும் எனத் தெரியவில்லை. இந்த வகையினரின் குணத்தைக் காணும் பொழுதெல்லாம் மதம் பற்றிய மேலோட்டமான புரிதல் மட்டுமே இருந்தபோதும் அவர்களின் மதச் சார்பு அவர்களை வழி நடத்தும் முறை கண்டு வியக்கிறேன்.

அதே சமயம், இந்த மேலோட்டமான புரிதலினால் ஏற்பட்ட மதச் சார்பு எரிச்சல் ஏற்படுத்திய தருணத்தையும் சொல்லியாக வேண்டும். என் வீடு கொள்ளை அடிக்கப்பட்டதை முன்னர் குறிப்பிட்டிருந்தேன். சரியாக அதற்கு முதல் நாள் எங்கள் தொழிற்சாலையில் இமிக்ரேஷன் ரெய்டு நடந்தது. இங்கிருக்கும் இந்தியர் முதல் சைனாகாரர்கள் வரை - பொதுவாக ஆசியர்கள் எனலாம்; ஐரோப்பியர்கள் இதில் சேர்த்தி இல்லை - அஞ்சும், மதிக்கும், மதிப்பது போல் நடிக்கும், சலாம் போட்டு மரியாதை செய்யும் இடத்தில் இருக்கும் ஒரே மலாவியர்கள் இமிக்கிரேஷன் துறையை சார்ந்தவர்கள்தான். இந்தத் துறையினரிடம் மட்டும் ஆசியர்களிடம் வழக்கமாக உள்ள சுப்பிரியாரிட்டி காம்ப்ளக்ஸ் சமாச்சாரங்களெல்லாம் செல்லுபடி ஆகாது. இருக்கும் பர்மிட்டை ரத்து செய்து ஒருவரை நாட்டைவிட்டு வெளியேற்றிவிடக்கூடிய அதிகாரம் இவர்கள் கையில் உண்டு.

லஞ்சம் வாங்கும் போட்டியில் மலாவி தக்க வைத்திருக்கும் பதக்கத்தை நம்பி, தேசத்திலிருப்பதற்கு எந்த உரிமமும் இல்லாமல் இங்கு வேலை செய்துகொண்டிருக்கும் ஆசியர்கள் அதிகம். எங்கள் கம்பெனியைப் பொறுத்த வரை, எனக்குக் கீழ் இரண்டு இந்தியர்கள் வேலை பார்த்து

https://telegram.me/aedahamlibrary

வந்தனர். ஓம்பால் சிங் - வயது 46. பானிபட்டைச் சேர்ந்தவர். முகமது அலி, வயது 28. குஜராத்தைச் சேர்ந்தவர். இதில் இந்த நாட்டில் வேலை செய்வதற்கான தற்காலிக வேலைவாய்ப்பு அனுமதி பெற்றிருந்தது நான் மட்டுமே. இது வேலை பார்ப்பவர்களின் தவறு அல்ல. பர்மிட் ஏற்பாடு செய்ய வேண்டியது நிர்வாகத்தின் பொறுப்பு. எங்கள் கம்பெனியின் நிர்வாக இயக்குனர் - முதலாளி என்ற பதம் பொருத்தம் என நினைக்கிறேன் - யாரோ தெரிந்தவரின் மூலம் விண்ணப்பித்திருப்பதாகக் கூறியிருந்தார்.

விண்ணப்பம் பரிசீலிக்கப்படும் நேரத்தில் உரியவர் இந்த நாட்டுக்குள் இருக்கக்கூடாது என்பது சட்டம். சட்டத்தை யார் கண்டது? 'இந்த நாட்டில் என்னால் ஆகாதது இல்லை; கவலை வேண்டாம்' என்று முதலாளி இவர்களுக்கு தைரியம் சொல்லி இருந்தார். இரண்டு ஷிப்ட் ஓட்டியாக வேண்டும்; தவிர ஓம்பால் சிங் மட்டுமே எங்களுக்கு இருந்த டெக்னீஷியன்.

எனவே இவர்களின் இருப்பு நிர்வாகத்துக்கு மிகவும் அவசியம். நான் தொழிற்சாலை அளவில் மிகக் கண்டிப்பானவன். ஒரு மலாவிய சூபர்வைசர் செய்த தவறுக்காக அவரைப் பணி நீக்கம் செய்ய, வேலை இழந்த சூபர்வைசர் பழி தீர்த்துக்கொள்ள எண்ணி, எப்படியோ இவர்களிடம் பர்மிட் இல்லை என அறிந்து, இமிக்ரேஷன் ஆபீசில் போட்டு கொடுத்துவிட, என் வீடு கொள்ளை போவதற்கு முதல் நாளான சுப தினத்தில் காலை ஆறு மணிக்கெல்லாம் ஆபீஸர்கள் வந்துவிட்டார்கள்.

நாங்கள் குடியிருக்கும் வீடுகள் தொழிற்சாலைக்குப் பின்புறத்தில் தொழிற்சாலையுடன் இணைந்த விதத்திலேயே அமைந்திருப்பதால் ஷிப்டில் இருந்த ஓம்பால் சிங்கை தொழிற்சாலையிலிருந்தும், தூங்கிக்கொண்டிருந்த அலியை வீட்டிலிருந்தும் ஒருசேரக் கைதுசெய்து வண்டியில் ஏற்றினர். இவர்கள் நீங்கலாக எங்கள் முதலாளியின் மற்றொரு தொழிலான அரிசி மில்லில் வேலை செய்வதற்கான பர்மிட் மறுக்கப்பட்டும், வேலையில் தொடர்ந்துகொண்டிருந்த தாமஸும், புதிதாக மலாவிக்கு வேலை தேடி வந்திருந்த அவரது 19 வயது மகனும் எங்கள் தொழிற்சாலை வளாகத்திலுள்ள வீட்டிலேயே தங்கியிருந்தனர். நிலைமை அறிந்து, அவர்களை அவசரமாக, தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்ட தலையணைகளைச் சேகரித்து வைக்கும் அறை ஒன்றில் பதுக்கி வைத்தேன். இதைக் கவனித்த என் சமையற்காரர் ஆபீஸர்களின் கவனத்தை வேறொரு வீட்டின் பக்கம் திருப்ப, அப்பாவும் பிள்ளையும் தப்பினார்கள். அதுவரை என் சமையல்காரரை வெறுத்து

https://telegram.me/aedahamlibrary

வந்த தாமஸ் மனம் உருகி அவருக்கு 500 மலாவி குவாச்சா பரிசளித்த கதை தனிக்கதை. மற்றொரு கடிதத்திற்கானது.

பிடிபட்ட ஓம்பால் சிங்கும் அலியும் ஒரு வார்த்தை வாதாடவில்லை. 'யே க்யா ஹை' என்பது போல் என்னைப் பார்த்து என்னுடைய அடுத்த கட்ட நடவடிக்கைக்காக காத்திருந்தனர். நான் முதலாளிக்கு போன் செய்தேன். அவர் சம்பந்தமேயில்லாமல் சில கேள்விகளைக் கேட்டுவிட்டு அரை மணிநேரத்தில் அவர்களை வெளியே கொண்டு வருவதாகக் கூறினார். நான் ஓம்பாலையும் அலியையும் எனக்குச் சுத்தமாக பேச வராத ஹிந்தியில் நம்பிக்கை சொல்வதென்ற பேரில் ஏதேதோ பிதற்றி அனுப்பி வைத்தேன். அன்று மாலை மூன்று மணி அளவில் அவர்கள் நாங்கள் இருக்கும் பிளான்டையர் நகரில் அமைந்திருக்கும் சிச்சிரி சிறையில் அடைக்கப்பட்டுவிட்டதாகத் தெரிந்தது. முதலாளிக்கு போன் மேல் போன் போட்டதில் ஓம்பாலுக்கும் அலிக்கும் ஜெயிலில் இரவு உணவு கொடுக்க ஏற்பாடு செய்யுமாறு 6 மணி அளவில் வந்த உத்தரவு மட்டுமே மிஞ்சியது.

இதற்கு அடுத்த நாள் இரவு எனது வீடு கொள்ளையடிக்கப்பட, ஷு, பெல்ட் என எதுவுமே மிச்சமில்லாத கதிக்கு ஆளானேன். தொழிற்சாலையோ அதன் போக்கில் ஓடிக்கொண்டிருந்தது. 150 பேர் வேலை செய்துவரும் இந்தத் தொழிற்சாலை, ஷிப்ட் கவனிக்கக் கூட ஆள் இன்றி, என் பொறுப்பினை மட்டுமே நம்பி நின்றது. அது ரமலான் மாதமாகையால் என் முதலாளி குடும்பத்துடன் மக்காவுக்கு பயணம் புறப்பட்டுக்கொண்டிருந்தார். தான் எவ்வளவோ சிந்தித்துப் பார்த்துவிட்டதாகவும், பயணத்தை ரத்து செய்ய வழி இல்லை என்றும் கூறினார். என்னிடம் ஒரு துண்டுச் சீட்டினை ஒப்படைத்தார். அதில் திருட்டு சம்பந்தமாக நான் புகார் செய்ய வேண்டிய போலீஸ் அதிகாரி முதல் இன்சுரன்ஸ் ஏஜென்ட் வரையிலானவர்களின் தொலைபேசி எண்கள் இருந்தது.

ஓம்பாலை பொறுத்த வரை ஒரு வக்கீலை அமர்த்தி இருப்பதாகவும், அலியின் மீது நான் ஏற்கனவே கொண்டிருந்த புகார்களை யோசித்தால் அலியை இந்தியா அனுப்பிவிடுவதே சரி எனப் படுவதாகவும், விமானச்சீட்டுக்கு சொல்லியிருப்பதாகவும் சொல்லி அவை சம்பந்தமான தொலைபேசி எண்களையும் ஒப்படைத்தார்.

பாதியில் அறுந்து தொங்கிக்கொண்டிருந்த சிக்கலான வங்கிக் கணக்குகளையும், இந்திய சப்ளையர்களுக்கான பண பாக்கி முதலியவற்றையும் ஒப்படைத்தல் போன்ற சடங்குகளில் மேலும் அரை மணிநேரம் கழிந்தது. நான் அலியின் வேலை நீக்கம் 'அலுவலகத்தில்

https://telegram.me/aedahamlibrary

எடுக்கப்பட வேண்டிய முடிவே தவிர சிறைச்சாலையில் இருக்கும் பொழுது அல்ல' என்று கூறி 'முதலில் அவரை வெளியே கொண்டுவந்த பின் யாவற்றையும் முடிவு செய்வதே முறை' என்று பேசிப் பார்த்தேன். பிரயோஜனப்படவில்லை. இதில் எந்த வித்தியாசமும் தனக்குத் தோன்றவில்லை என்று கூறிய முதலாளி, நான் அந்தத் தொலைபேசி எண்கள் மூலம் உரிய ஆட்களைத் தொடர்பு கொண்டால் மற்றவை தானாக நடக்கும் என்று சொல்லி, 'எண்கள் கவனம்' என அறிவுறுத்திவிட்டு, அடுத்த நாள் அதிகாலையிலேயே குடும்பத்துடன் பயணம் புறப்பட்டு சென்றுவிட்டார். அடுத்த 24 மணிநேரத்தில் அவர் கொடுத்த எந்த எண்ணும் அதிகம் பயன் தராமல் போய் நிராதரவாக நின்றேன்.

போலீஸ் ஸ்டேஷன், இன்சூரன்ஸ் ஆபீஸ், டிப்பார்ட்மென்ட் டிபார்ட்மென்டாக இமிக்ரேஷன், லாயர் ஆபீஸ், சிறைச்சாலை -- ஒரு வாரத்திற்குள், ஒரு அன்னியதேசத்தில் ஒருவன் இதுபோன்ற இடங்கள் அனைத்திற்கும் பல முறை சென்று திரும்பினால் அவன் மனநிலை என்ன ஆகும் என உங்களால் யூகிக்க முடிகிறதா?

அனுபவம் கொண்டேன். இதில் இந்தியாவிலிருந்து தொழிற்சாலைக்கான மூலப்பொருள் சப்ளையர்கள் வேறு முதலாளியின் தொலைபேசிக்கும் சேர்த்து என்னை என் தொலைபேசியில் அரை மணிநேரத்துக்கு ஒருமுறை அழைத்தபடி இருந்தனர். பதில் சொல்லி மாளவில்லை. தொழிற்சாலை வேறு ஒரு பக்கம் தனதேயான புகார்களுடன் தலைசுற்ற வைத்தது.

தினமும் இரவு உறங்கச் செல்லும்போது ஓம்பால் சிங்கும் அலியும் ஜெயிலில் என்ன பாடு படுகிறார்களோ என்ற கவலை ஓடியபடியே இருக்கும். மலாவியின் சிறைச்சாலையில் ஒருநாள் தங்குவதே மிகக் கடினம் என அனுபவஸ்தர்கள் சொல்லிக் கேட்டிருக்கிறேன். சாயங்காலம் ஐந்து மணி வரை பெரிய சிக்கல் இல்லை. சற்று திறந்த வெளியில் அமர்ந்திருக்கலாம். ஐந்து மணிக்குப் பிறகு, ஒரு சின்னஞ் சிறிய, ஒளி சிறுத்த இருட்டறையில், அறைக்குப் பத்து பேர் என அடைத்துவிடுவார்கள். ஒருவருடன் ஒருவர் உரசியபடியே படுத்திருக்க வேண்டும். உடலை இப்படி அப்படி திருப்புவது தவிர நகர்வதற்கு வேறு வழி இருக்காது. எக்காரணம் கொண்டும் கதவு அடுத்த நாள் காலை வரை திறக்கப்படாது. இயற்கை உபாதைகளுக்கு ஒரு பக்கெட் மட்டும் வைக்கப்பட்டிருக்கும். சிறுநீர் முதல் சகலத்திற்கும் அந்த பக்கெட் மட்டுமே கதி.

எனக்கு முதல் நாள் இரவு அவர்கள் சிறையில் தங்க நேர்ந்தபொழுதே

https://telegram.me/aedahamlibrary

எப்படி சமாளிப்பார்கள் என பதட்டமாக இருந்தது. நான் உணவை ஒப்படைக்கும்போது "ஒன்றும் செத்துவிட மாட்டார்கள்; கவலைப்படாதீர்கள்" என்று ஆறுதல் என்ற பெயரில் எதையோ கூறி மேலும் பீதியைக் கிளப்பினார் ஜெயில் வார்டன். முதல் நாளே இப்படி என்றால், அதைத் தொடர்ந்து தினமும் ஒருவித முன்னேற்றமும் இன்றி வெற்று வார்த்தைகளுடன் அவர்களைச் சந்திப்பது மிகவும் பாரமாக இருந்தது. 'ஜெயிலுக்குள் பணம் தேவைப்படுகிறது; இல்லாவிட்டால் நடத்தப்படும் முறை மேலும் மோசமாகிறது' என்றார்கள். பிரட் பாக்கெட்டை வாங்கி அதில் நடுவிலுள்ள துண்டுகளின் மையப்பகுதியைப் பிய்த்து அதனுள் 50 முதல் 500குவாச்சா நோட்டுவரை மாதிரிக்கு ஒன்றெனத் திணித்து அனுப்பினோம்.

நாளாக நாளாக பதட்டம் அதிகரித்தது. இவர்கள் இருவரையும் சேர்த்து மொத்தம் 37 இந்தியர்கள் அந்த நேரத்தில் ஜெயிலில் இமிக்ரேஷன் மூலம் அடைபட்டிருந்தனர். ஒரு செல்லுக்கு இரண்டு இந்தியர்கள்; எட்டு மலாவியர்கள் என ஜெயில் அறைகளில் முறை அமைக்கப்பட்டிருந்தது.

நான் உணவு கொண்டு செல்லும்போதெல்லாம் "இன்று வெளியே வந்துவிட முடியுமா?" என்ற ஏக்கம் தோய்ந்த கேள்வி வெளிப்படும் கண்களைச் சந்திப்பது யாருக்குமே மிகச் சிரமமானதாக இருக்கும். நான் போகும்போதும் வரும்போதும் கம்பெனி கணக்கில், கண்ணில் தென்பட்ட ஜெயில் அதிகாரிகளுக்கெல்லாம் 500 குவாச்சா நோட்டுக்களாக விட்டுக்கொண்டிருந்தேன். என்னைச் சந்திக்க தடுப்புக் கம்பிகளை தாண்டி வந்த இவர்களை முழங்காலிட்டுப் பேசுமாறு ஒரு வார்டன் அதட்ட, நான் அவரை சமாதானப்படுத்தி இவர்களை முழந்தாளிடாமல் காப்பாற்ற மேலும் 500 குவாச்சா செலவாயிற்று. தொழிற்சாலையில் அதிகாரமாய் இருந்து வந்த இந்த இருவரின் பிம்பத்தையும் நினைத்துப் பார்த்தேன். அன்றைய நிஜம் நம்பக் கூடியதாக இல்லை.

ஒரு வழியாக உள்ளே சென்ற ஐந்தாவது நாள், இந்தியாவுக்குச் செல்லும் விமானத்தில் அலிக்கு டிக்கெட் எடுத்து சமர்ப்பிக்க நேரடியாக விமான நிலையத்தில் கொண்டுவந்து ஒரு இமிக்ரேஷன் ஆபீசர் ஏற்றிவிட்டார். அலியின் மூட்டை முடிச்சுகளை தாமஸ் கட்டித்தர, அவற்றை நான் விமான நிலையத்தில் அலியிடம் ஒப்படைத்து சில அமெரிக்க டாலர் நோட்டுகளையும் கொடுத்து அனுப்பி வைத்தேன். பாஸ்போர்ட்டில் டிபோர்டட் ஸ்டாம்ப் போட வேண்டாம் என்றும், ஒரு இளைஞனின் வாழ்க்கை வீணாகி விடும் என்றும், நான் முடிந்த வரை அவரைத் தனியாக கவனிப்பதாகவும், அந்த இமிக்ரேஷன் ஆபீஸரிடம் மன்றாடிக்

https://telegram.me/aedahamlibrary

கேட்டுக்கொண்டேன்.

ஓம்பாலைப் பொறுத்தவரை என் நிலை பெரும்பாடாக இருந்தது. வக்கீல் ஒன்றுமே செய்யவில்லை. “இமிக்ரேஷன்காரர்கள் ஓம்பாலை கோர்ட்டில் கொண்டுவந்து ஆஜர்படுத்தியே ஆக வேண்டும்; பிறகு பாருங்கள் என் பிரதாபத்தை” என்று கூறியே நாட்களைக் கடத்திக் கொண்டிருந்தார். ஓம்பால் சிங்கோ காந்திக்கு அடுத்த சத்தியவான் தான்தான் என்ற நினைப்பில் வாழ்ந்து வந்தவர். அவருக்கு இதெல்லாம் கனவில்கூட தாங்க முடியாதது. என் உறவினர்களிடம் ஆலோசனை கேட்டேன். ‘முதலாளி சொல்லிச் சென்றதை மட்டுமே செய்வது சாலச் சிறந்தது’ என அறிவுரை வந்தது.

எனக்குச் சுத்தமாக இருப்புக் கொள்ளவில்லை. ஏற்கனவே ஏழு நாட்களில் ஓம்பால் மிகவும் உடல் வற்றி கண்கள் ஒடுங்க ஜீவன் பறி போனவர் போல் தோற்றம் அளித்தார். நான் யார் யாரையோ சந்தித்து, எங்கெங்கோ கொக்கி போட்டு என் போக்கில் முயற்சித்தேன். இமிக்ரேஷன் அலுவலகத்தில் நான் காண நேர்ந்த காட்சிகள் ஏராளம். தான் மிகக் கௌரவமானவன் என்றும், இதுபோல் நடத்தப்படுவது தனக்குப் பழக்கமில்லை என்றும் சொல்ல முயன்ற ஒரு கனவானிடம், “நாங்கள் எவ்வளவோ பரவாயில்லை; உங்களை உட்கார வைத்துப் பேசுகிறோம். மொசாம்பிக் என்றால் கழுத்தில் மிதித்து உள்ளே தள்ளுவார்கள்” என ஒரு ஆபீசர் பொறுமையாக விளக்கிக் கொண்டிருந்தார்.

இமிக்ரேஷன் ஆபிஸர்களின் வேலையும் அவ்வளவு சுலபமில்லை எனத் தோன்றியது. தினமும் பலர் பலவிதமான ஓட்டைக் காரணங்களுடன் அர்த்தமில்லாமல் தனக்கு வேண்டியவரை விடுவிக்க அரித்து எடுத்தார்கள். போதாக்குறைக்கு தினமும் ரெய்டு, கைது என எண்ணிக்கை கூடிக்கொண்டிருந்தது. நானும் அத்தகைய அரித்தெடுப்பவர்களில் ஒருவனாக நின்றுகொண்டிருப்பது சகிக்க முடியாததாக இருந்தது. அந்த ஆபீசர்களின் நிலையில் என்னை வைத்து யோசித்துப் பார்த்தால் நான் இன்னும் கடினமானவனாக நடந்துகொண்டிருப்பேன் என்று உணர்ந்தேன்.

தினமும் சென்றுகொண்டிருந்ததில் அந்த அலுவலகத்தில் பலருடன் பரிச்சயமும் சிலருடன் நட்பும் ஏற்பட்டது. கடைசியில் ஒருவழியாக அறுபதாயிரம் குவாச்சா செலவில் எட்டாவது நாள் மாலை ஓம்பால் ஜெயிலிலிருந்து விடுவிக்கப்பட்டார். தொழிற்சாலைக்கு ஓம்பால் எவ்வளவு தேவை என விளக்கியும், பர்மிட்டுக்கான விண்ணப்பம் ஏற்கனவே சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது என்றும், விரைவில் அது

https://telegram.me/aedahamlibrary

கிடைக்க வழி செய்யுமாறும், அதுவரை ஓம்பால் இல்லாவிட்டால் பல கோடி ரூபாய் முதலீடாகி இருக்கும் தொழிற்சாலையை மூட வேண்டியிருக்கும் என்றும், பல தொழிலாளிகள் வேலை இழப்பார்கள் என்றும், எனவே நிலைமையை உணர்ந்து உதவுமாறும் நான் தலைமை இமிக்ரேஷன் அதிகாரியிடம் கடிதம் எழுதி கேட்டுக்கொண்டேன். வேலை செய்ததென்னவோ கடிதம் இல்லை; அறுபதாயிரம் குவாச்சா பணம் என்பது எல்லோருக்கும் வெளிச்சம்.

மெல்ல மெல்ல யாவும் பழைய நிலைக்குத் திரும்பத் துவங்கின. கொஞ்சம் செலவு மற்றும் அலைச்சலுக்குப் பின் திருட்டு குறித்த போலீஸ் சர்டிபிக்கேட் கிடைத்தது. அதற்குள் இன்சூரன்ஸ் ஆசாமியின் வார இறுதி பீர் செலவை ஏற்றதன் பேரில் நட்பு ஏற்பட்டிருந்தது. போலீஸ் சர்டிபிகேட்டின் அடிப்படையில் நேர்ந்த இழப்பினைக் கணக்கிலெடுத்துக் கொண்டது இன்சூரன்ஸ். ஒரு மாதத்தில் பிராஸஸ் செய்து தொகையை அனுப்புவதாக வாக்களிக்கப்பட்டது. அவரை வெளியே கொண்டுவர நான் பட்ட பாட்டினை அறிந்து ஓம்பால் சிங் சற்று சமாதானம் அடைந்தார். ஓம்பால் தொழிற்சாலையை கவனிக்கத் துவங்க, நான் ஒரு வாரம் தொடர்ந்து ஒருமுகமாக கவனம் செலுத்தியதில் இந்திய சப்ளையர்களுடனான பிரச்சனையையும் ஓரளவு தீர்க்க முடிந்தது.

என் சமையற்காரரைப் பாராட்டியே தீர வேண்டும். வீடு முழுக்கவும் கொள்ளை அடிக்கப்பட்டுவிட்ட நிலையிலும், பிரிட்ஜ், அயர்ன் பாக்ஸ் முதலிய எந்த உபகரணங்களும் இன்றி, நான் புதிதாக வாங்கித் தரும் வரையில் ஒரு வார்த்தை பேசாமல், எனக்கு வீட்டிலுள்ள குழப்பம் தெரியாமலேயே எதிலும் குறை வைக்காமல் சமாளித்துக்கொடுத்தார். (அந்த நூற்றில் இரண்டு பேர் கணக்கில் இவரும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது). சகஜ நிலைக்குத் திரும்பத் துவங்கினோம்.

எல்லா குழப்பங்களும் தீர்ந்த பத்தாவது நாள் முதலாளி தன் பயணம் முடித்துத் திரும்பினார். கருப்புநிற அங்கி அணிந்திருந்தார். தொப்பியின் அசைவில் தெரிந்த கூரிய முடிகள் அவர் முடி இறக்கியிருந்ததைக் காட்டின. வாழ்வில் எதையோ கண்டுவிட்ட மனோபாவம் தெரிந்தது. வரவழைத்துக்கொண்ட அமைதியுடன் பேசினார். நான் படபடப்பாய் நடந்த சிக்கல்கள் அனைத்தையும் சொல்லி, தீர்வு கண்ட முறைகளை விளக்கிக்கொண்டிருந்தேன். என் அரைமணி நேரத் தொடர் பேச்சுக்குப் பதிலாக, நிதானமான தலை அசைப்புடன் “எல்லாவற்றையும் அல்லாஹ் பார்த்துக்கொள்வான் என எனக்குத் தெரியும்” என்றார்.

எனக்கு ஏதேதோ சொல்லத் தோன்றியது. “எனிஹவ் பேட் டைம் ஹாஸ்

https://telegram.me/aedahamlibrary

பாஸ்ட் அவே” என்று மட்டும் சொல்லி சத்தம் எழுப்பாமல் ஒரு அசட்டுச் சிரிப்பினை மட்டும் உதிர்க்க முயன்றேன்!

அன்புடன்,

ஆனந்த்.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சீனத் தொழிலதிபரும் மலாவியச் சிறுவர்களும்

டியர் சாரு,

நிறைய எழுதுங்கள் என்று எழுதியிருந்தீர்கள். எனக்கு உங்களின் அந்த மூன்று வரி என் அம்மாவின் தோழியை ஞாபகப்படுத்தியது.

பொதுவாக பெண்கள் திருமணத்திற்குப் பின் தங்கள் பால்ய சினேகிதிகளை மறந்து, தொடர்பு இழந்து, வாழ்வின் போக்கில் சென்று விடுகிறார்கள். இந்த விஷயத்தில் என் அம்மா ஒரு விதிவிலக்கு. எனக்கு 27 வயதாகிய இன்னாளிலும் அவரது நட்பு வட்டம் தொடர்கிறது. சிறிய அளவில், மூன்று நான்கு பேர்தான் என்றாலும், ஊர்களின் தொலைவில் பிரிக்கப்பட்டிருந்தாலும், தொலைபேசி - எப்போதாவது ஒருமுறை சந்திப்பு என தங்கள் பள்ளி நாள் சினேகிதத்தைத் தொடர்ந்து வருகிறார்கள்.

இதில் வியப்பு என்னவென்றால், அவர்கள் சந்தித்துக்கொள்ளும் போது, சட்டென்று எந்தத் தடையும் இன்றி தங்களின் பழைய குதூகலத்துடனே பேசிக்கொள்வார்கள். ஏதோ நேற்றுதான் ஒரே வகுப்பில் சேர்ந்தவர்கள் போலிருக்கும்.

சரி, விஷயத்திற்கு வருகிறேன். எனக்கு ஐந்து வயது இருக்கும் என்று நினைக்கிறேன். என் அம்மாவின் பால்ய சினேகிதியான விஜி எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார். எனக்கு 'விஜி' என்று இரண்டெழுத்தில் தன் பெயரினை முடித்துக்கொண்டுவிடும் ஒரு பெண் இருப்பதே முதலில் ஆச்சரியமாக இருந்ததென நினைவு கொள்கிறேன். அது அவர்கள் செல்லமாக சுருங்கக் கூப்பிடுவது போன்றவையெல்லாம் விளங்கும் வயதல்ல அது. என் அம்மா முதல் நாளே தன் தோழி வருவது பற்றி கொண்டிருந்த ஆவலும், தன் தோழி குறித்து சொன்ன கதைகளும், அம்மாவின் நெருங்கிய தோழி என்ற எதிர்பார்ப்பும், இன்னும் இன்றளவில் நினைவில்லாத பலவிதமான எண்ணக் கோர்வைகளும் சேர்ந்து என்னுள் ஒருவித பரபரப்பினை சேர்த்திருக்க வேண்டும். வெகுவான ஆர்வத்துடன் விஜியை எதிர்கொண்டேன்.

ஓரிரு வரிகள் பேசிய நிலையிலேயே எனக்கு மிகவும் நெருக்கமாகிப் போன விஜி, உனக்கு என்ன பிடிக்கும் என்று கேட்டார். பொதுவான

https://telegram.me/aedahamlibrary

வகையிலிருந்து சற்று விலகிய கேள்வி என இன்றைய என் அறிவுக்குப் படுகிறது. யாராவது உனக்கு என்ன பிடிக்கும் எனக் குழந்தைகளை கேட்கிறார்களா? குழந்தைகள் பாவம். எவ்வளவு சகித்துக்கொள்ள வேண்டியிருக்கிறது! பெரும்பாலும் பெற்றோர்கள் முதல் வீட்டுக்கு காப்பிப் பொடி கடன் வாங்க வந்தவர்கள் வரை, நீ என்ன படிக்கிறாய் எனத் துவங்கி, ஒரு ரைம்ஸ் சொல்லு, சொன்னா ஒரு சாக்லெட் என்ற ரீதியிலேயே குழந்தைகளைப் படுத்தி எடுக்கிறார்கள். முதலில் எல்லா குழந்தைகளுக்கும் சாக்லேட்தான் பிடிக்கும் என்று எந்த புத்திசாலி சொன்னான்?

எனக்கு அப்போது தந்தையின் விரல் பிடித்துக்கொண்டு ஜாக்கிசான் படங்களுக்கு செல்லத் துவங்கிய காலம். எனக்கு ஃபைட்டிங்க் தான் பிடிக்கும் என்றேன் உற்சாகம் பொங்க. ஓ! அப்படியா... எங்கே எனக்கு ஒரு பைட் பண்ணி காமி பாப்போம் என்றார் விஜி. முதல் முதலில் என்னை சண்டை போட்டுக் காண்பிக்கும்படி பெரியவர்களின் பிரத்யேக தேசத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் கேட்கிறார்! உற்சாகம் மடை திறந்து பெருக... அரை மணிநேரம் தனியாக விழுந்தும் உருண்டும் புரண்டும் சண்டை போட்டுக் கொண்டிருந்தேனாம். நிறுத்தப் பெரும்பாடாயிற்று என பிறர் சொல்லக் கேள்வி.

யார் சொன்னது நாம் வளர்கிறோம் என்று? மனம் இன்னும் அதே ஐந்து வயது சிறுவனின் ஆசையில்தான் லயிப்பு கொள்கிறது. ஒரு வித்தியாசம். அன்று என் அம்மாவின் தோழி பைட் பண்ணு - என்று கூறினார். இன்று நீங்கள் நிறைய எழுது எனக் கூறியிருக்கிறீர்கள். சந்தோஷமாய் செய்கிறேன்.

உண்மையில் இந்த தேசத்துக்கு வந்த புதிதில், கிடைத்த அனுபவங்களைக் கொண்டு, ஒரு நாவல் எழுதலாம் என்ற யோசனை வர, எழுதத் துவங்கினேன். பக்கங்கள் செல்லச் செல்ல என்னை நானே கவனிக்கையில் தினசரி நிகழ்வுகள் யாவற்றையும் நான் நாவலின் போக்கில் கவனிக்கத் துவங்கிவிட்டதாக உணரத் துவங்கினேன். ஒரு புதுமையான அனுபவத்தினை அனுபவம் கொள்வதைவிட நாவலாகப் பதிவு செய்துவிடுவதில் எனக்கு இருந்த முனைப்பு என்னை ஒரு வகையில் துணுக்குறச் செய்தது. இது நாவல் என்ற கலை வடிவின் சிக்கல் அல்ல, என் மனதின் உள்வாங்கிப் பிரதிபலிப்பதில் ஏற்பட்ட குழப்பம் என்று உணர்ந்தேன். அதன் காரணத்தினாலேயே அன்றளவில் என் நாவல் முயற்சியைக் கைவிட நேர்ந்தது.

இப்போது கவனிக்கையில், தானாக உருக்கொண்டிருக்கும் இந்தக் கடிதமுறை கட்டுரை வடிவமே என்னுள் சேகரமாகியுள்ள இந்த தேசம்

https://telegram.me/aedahamlibrary

குறித்த, அதன் மக்கள் குறித்த புரிதல்களுக்கு நியாயமும், வெளிப்பாட்டு முறையைப் பொறுத்தவரை பலமும் சேர்க்க முடியும் என்று தோன்றுகிறது. இதை சாத்தியமாக்கியதற்கு நன்றி சொல்வதெல்லாம் ஒரு எழுத்தாளரை ஏதோ ஒரு வகையில் சிறுமைப்படுத்தி விடுவதாகவே அறிகிறேன். எனவே, நன்றி பாராட்டுதல் போன்ற சடங்குகளை விடுத்து எழுத்தினில் தொடர்கிறேன்.

எட்டு மாதங்களுக்கு முன் எங்கள் தொழிற்சாலைக்கு வியாபார நிமித்தமாக சீனாவிலிருந்து ஒரு தொழிலதிபர் வந்திருந்தார். எங்களுக்கு மூலப்பொருள் சப்ளை செய்யும் அன்னிய தேசங்களில் இந்தியா தவிர சீனாவும் உண்டு. அவரை வரவேற்று, தொழில் சம்பந்தமான பேச்சுக்களைத் துவக்கும் முன்னர், பிளாந்தையர் நகரினை வியாபார நோக்கில் சுற்றிக் காண்பிக்கும் பொறுப்பு என் தலையில் விழுந்தது.

ஆங்கிலம் அறியாத அந்தத் தொழிலதிபர் ஆங்கிலம் தெரிந்த பிலிப் என்ற சீன இளைஞனை துணைக்கு அழைத்து வந்திருந்தார். இருவருமாக மலாவியில் தொழில் செய்வது தொடர்பான பலவித கேள்விகளை என்னிடம் கேட்டபடி இருந்தனர். அவர்களுக்கு மலாவியில் எங்களுடையதைப் போல ஒரு தொழிற்சாலை துவங்கும் எண்ணம் இருக்கலாம் என்றும், சீனாக்காரர்கள் உள்ளே நுழைந்துவிட்டால் போட்டி பலப்பட்டு வியாபாரம் பாதிக்கும் என்றும், சற்று ஜாக்கிரமையாகவே தகவல்களைத் தருமாறும் எங்கள் முதலாளி என்னிடம் அறிவுறுத்தியிருந்தார். நான், இங்கு ஒரு தொழிற்சாலை நடத்துவது குறித்த சிக்கல்களை உள்ளது உள்ளபடி சொன்னாலே இவர்கள் இங்கிருக்கும் சவால்களைப் புரிந்துகொண்டு, நம்பிக்கை இழந்து, தொழிற்சாலை துவங்குவது போன்ற தங்கள் எண்ணங்களைக் கைவிட்டுவிடுவார்கள் என முதலாளிக்கு தைரியம் சொல்லி இருந்தேன்.

தொழிலதிபர் சிகரெட் வேண்டும் என கேட்க, நான் நான்கு பிராண்டுகளை குறிப்பிட்டு எந்த பிராண்டு சிகரெட் வேண்டும் எனக் கேட்டேன். அவர் பிராண்டு பற்றி அக்கறையில்லை என்று சொல்லி ஒரு விலையைக் குறிப்பிட்டு அந்த விலைக்கு ஒப்ப சிகரெட் வாங்குமாறு கேட்டுக்கொண்டார். உலகம் சுற்றும் அந்தத் தொழிலதிபரின் கணக்கு முறை எனக்கு ஆச்சரியம் தந்தது. விலை பற்றிக் கவலை வேண்டாம், நீங்கள் எங்கள் விருந்தினர், உங்களை கவனிப்பது எங்கள் பொறுப்பு எனக் கூறியும், யார் பணம் கொடுப்பது என்றாலும் அந்த விலைக்கு மேல் சிகரெட் வாங்குவதில் தனக்கு சம்மதமில்லை எனக் கண்டிப்பாக சொல்லிவிட்டார். மேலும், நான் வாங்கிக் கொடுத்த சிகரெட் பெட்டியில் ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்ற வைத்து இரண்டு இழுப்பு இழுத்துவிட்டு

https://telegram.me/aedahamlibrary

அணைத்து வைத்துக்கொண்டார். அடுத்த 20 நிமிடம் கழித்து மீண்டும் அதே சிகரெட்டைப் பற்ற வைத்து மேலும் இரண்டு இழுப்புகள்- இவ்வாறு ஒரு சிகரெட்டை ஒரு மணி நேரத்துக்கும் மேலாக அவர் பயன்படுத்திய விதம் எனக்கு வியப்பூட்டுவதாக இருந்தது. நான் படித்த அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் கல்லூரி நண்பர்கள் இதைப் பார்த்திருந்தால் அவரை மன்னிக்கவே மாட்டார்கள் என நினைத்துக்கொண்டேன்.

மற்றொரு விதத்தில் பெரிய தொழிலதிபர் என்றெல்லாம் முகமூடி அணிந்து பாரம் சுமக்காமல் இயல்பாக அவர் தன் முறையைக் கடைப்பிடித்த விதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

நாங்கள் காரை நிறுத்தி எடுத்த இடத்தில் பிச்சைக்கார சிறுவர்கள் - ஐந்து முதல் பத்து வயது வரை இருக்கும் - காசு கேட்டு மொய்த்தெடுத்தனர். இது குறித்து அவருக்குப் பெரும் ஆர்வம் இல்லை. அவரது கவனம் முழுவதும் தொழிற்துறையில் மூழ்கி இருந்தது. பிலிப் மட்டும் இந்த தேசம் குறித்து நான் சொல்லியவற்றை ஆர்வமுடன் கேட்டு பலவற்றில் சிலவற்றை தன் முதலாளிக்கு மொழிபெயர்த்துச் சொல்லி வந்தான். எங்கள் தொழிற்சாலையை அடைந்தோம். மீட்டிங் துவங்கியது. சிறிது நேரத்தில் ஒரு சிறிய இடைவெளியை ஏற்படுத்திக்கொண்டு தொழிற்சாலையை சுற்றிப் பார்த்து வருவதாகச் சொல்லி உள்ளே சென்ற தொழிலதிபர் திரும்பி வந்து கேட்ட கேள்விகள்:

1) உள்ளே நிறைய தொழிலாளிகள் சும்மா நின்று கொண்டிருக்கிறார்கள். கேட்டால் மெக்கானிக்குக்காகக் காத்திருப்பதாகக் காரணம் சொல்கிறார்கள். ஏன் இப்படி?

2) வறுமையில் உழலுவதாகச் சொல்லப்படும் இந்த நாட்டில் டார்கெட் என ஒரு எண்ணிக்கையைக் கொடுத்து அவ்வளவு உற்பத்தி செய்தால் இவ்வளவு பணம் என்ற முறையினை அறிவித்தால் உற்பத்தியைப் பெறுக்க முடியாதா?

3) சில இயந்திரங்கள் வேலை செய்யும் ஆள் என யாரும் இன்றி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மெக்கானிக் தங்கள் இயந்திரத்தை சரி செய்வதற்காகக் காத்திருக்கும் தொழிலாளிகள் ஏன் இந்த இயந்திரங்களில் வேலை செய்யக் கூடாது?

4) சூப்ரவைசர்கள் எனப்படுபவர்கள் உள்ளபடி என்ன மாதிரி வேலை செய்கிறார்கள்?

நான் இவையெல்லாம் வழக்கமான, பழகிப்போன கேள்விகள் என்ற

https://telegram.me/aedahamlibrary

தோரணையுடன், இந்தக் கேள்விகளுக்கெல்லாம் பதில் அவர் வழியில் பார்த்த பிச்சைக்கார சிறுவர்கள் குறித்த புரிதலிலிருந்து துவங்குகிறது என்று கூறினேன். காரணம், பெரும்பாலான மலாவிய சிறுவர்கள் சாக்லேட் வாங்கி சாப்பிட்டு, ரைம்ஸ் சொல்லி வளர்வதில்லை. முதலில் இங்குள்ள குடும்ப அமைப்பே வேறு முறையிலானது. எந்தவித சிக்கலும் இன்றி, உணவுக்கு வழியற்றபோதிலும், ஒருவர் இரண்டு மூன்று திருமணங்கள் செய்துகொண்டு கடவுள் அனுமதிக்கும் எண்ணிக்கை வரை பிள்ளை பெற்றுக்கொள்கின்றனர். இறப்பு விகிதமும் அதிகமாகவே இருப்பதால், கணவனை இழந்த பெண்ணை, குழப்பம் எதுவும் இன்றி, முதல் கணவனுடனான அவளது குழந்தைகளுக்கான பொறுப்பையும் சேர்த்து ஏற்று மணந்துகொண்டு வாழும் ஆண்களும் அனேகம். பிரச்சினை வந்து சேர்வது, பொருளாதார நிலையில்தான். இந்தச் சூழலில் குழந்தைகள் பெரும்பாலும் உணவுக்கு ஏங்கிய நிலையிலேயே வளர நேரிடுகிறது. ஒரு புறம் இறப்பின் சதவிகிதம் உயர உயர, மறுபுறம் அனாதைகளின் சதவிகிதமும் உயர்கிறது. பிச்சை கேட்கும் ஒவ்வொரு சிறுவனின் பின்னாலும் இப்படி ஒரு கதை இருக்கவே செய்கிறது.

மிக மோசம் என்றில்லாமல் ஓரிரு வேளை சாப்பாட்டுக்கான வசதியுடன் வளரும் குழந்தைகளும்கூட ஒரு வகை 'சிணீக்ஷீமீ யீக்ஷீமீமீ' மனோபாவத்துடனேயே வளர்க்கப்படுகிறார்கள். இந்திய நடுத்தரக் குடும்பத்தினைப் போல், என் பிள்ளை டாக்டர் ஆக வேண்டும், இஞ்சினியர் ஆக வேண்டும் என்ற கனவெல்லாம் இங்கே மிக ஆடம்பரமான ஒன்று. பெற்றோர்களின் கனவே பெரும்பாலும் அடுத்த வேளை உணவு மற்றும் உடை பற்றி என ஆகிவிடுகிறது. இதில் ஓரளவு வசதியுடன் குழந்தைப் பருவம் அமைந்து, படித்து பல்கலைக்கழகம் வரை செல்பவர்கள் பெரும்பாலும் அரசு வேலைகளிலோ, தனியார் வங்கி முதலானவற்றிலுள்ள உயர் வேலைகளிலோ இடம்பிடித்துக் கொள்கின்றனர். இவர்கள் தங்கள் பிள்ளைகளை இங்கிருக்கும் அன்னிய தேசத்தவரின் குழந்தைகளுக்கு இணையாக வளர்க்க முயல்கின்றனர். மற்றபடி பெரும்பான்மை, பள்ளிப் படிப்பைத் தாண்டுவதே சிரமம். இந்த நிலையில் வளரும் பிள்ளைகளையே பிற்பாடு தொழிற்சாலையில் மெஷின் ஆபரேட்டர்கள் போன்ற வேலைக்கு எடுக்க நேரிடுகிறது.

இவர்களுக்குப் பயிற்சி அளித்து, தொழிற்சாலையின் ஒழுக்க விதிகளைக் கற்பித்து, வேலையில் அமர்த்தினால், இவர்கள் மனநிலை பொறுப்பை சுமக்கும் நிலையில் இருப்பதில்லை. சம்பள நாளுக்கு அடுத்த நாள் பாதி பேர் வேலைக்கு வர மாட்டார்கள். இரண்டு நாள் கழித்து வாங்கிய

https://telegram.me/aedahamlibrary

சம்பளம் அனைத்தும் செலவாகி முடிந்த பின், வேறு வழியின்றி, இவர்கள் வேலைக்கு வந்து சேர்வதற்குள் இங்கே உற்பத்தி அளவு குறையத் துவங்கி இருக்கும். அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. வாங்கும் சம்பளம் சாப்பாட்டுக்கே காணாத நிலையில் அவர்கள், தொழிற்சாலையைப் பற்றி, தங்கள் எதிர்காலத்தைப் பற்றியெல்லாம் சிந்திக்க வழி ஏது? அதிகம் சிந்திக்காமல் அன்றைய தினத்தின் போக்கில் வாழ்க்கையை அமைத்துக்கொள்வதே இவர்களுக்கு அமைந்த வாழ்க்கை முறையாகிவிட்டிருக்கிறது.

எப்படியும் இந்தப் பணம் எதற்கும் காணாது; இன்றைய தினமாவது நான் சந்தோஷமாக இருந்துவிட்டுப் போகிறேன் என்று இருப்பவர்கள் ஒரு ரகம்; எப்படியோ முட்டி மோதி இன்று கிடைத்த பணத்தை குடும்பத்திடம் ஒப்படைத்து, முடிந்தவரை வேலை செய்து மேலும் சம்பாதிக்கத் துடிப்பது இன்னொரு ரகம். சதவிகிதத்தில் முதல் வகையினரே அதிகம். இரண்டாவது வகையினரை ஊக்குவித்து எண்ணிக்கையளவில் இவர்களை அதிகரிக்கவே என் கவனம் முழுவதையும் இதுவரை செலவழித்து வருகிறேன்.

இதில் மொத்தமாக ஐம்பது பேரை வேலைக்கு எடுத்து, காலப்போக்கில் கவனித்து வடிகட்டினால் இரண்டாவது வகையினராக மொத்தம் ஐந்து பேர் மிஞ்சுவார்கள். அதாவது 10 சதவிகிதம். ஆக, தொழிற்சாலையைப் பொறுத்தவரை 150 பேர் ஒழுங்காக வேலைக்கு வருபவர்களாக வேண்டும் என்றால் 1500 பேர் என்ற எண்ணிக்கை சுழற்சி முறையில் வேலைக்கு எடுத்து வடிகட்ட வேண்டும். செய்திருக்கிறேன். முன்னேற்றம் தெரிகிறது என்றாலும் பிரச்சினை முழுதாய் தீர்ந்தபாடில்லை.

தொழிற்சாலையில் பயிற்றுவிக்கப்பட்ட தொழிலாளி வேலைக்குக் கிளம்பி வருகையில், பாதி வழியில் கட்டிட வேலைக்கு சித்தாள் எடுக்கும் செய்தி தெரிந்தால் அங்கு சென்றுவிடுவார். காரணம், அது தினக்கூலி. அன்றைய தினத்துக்குக் கையில் பணம் கிடைக்குமானால் சரி, இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை என சேர்த்து வைத்துச் சம்பளம் தரும் தொழிற்சாலையில் தற்காலிகமாக உடம்பு சுகமில்லை என்று காரணம் சொல்லிக் கொள்ளலாம் என்ற எண்ணம்!

இது போன்ற பொய்க் காரணங்கள் போக, உண்மையாகவே இவர்களின் உடல்நலம் பாதிக்கப்படுவதும் அதிகமாக இருப்பதால் பொய் எது உண்மை எது எனக் கண்டுபிடிப்பதும் சிரமம்.

தவிர, இங்கே மரணத்துக்கு மூன்று நாள் துக்கம் அனுஷ்டிப்பார்கள்.

https://telegram.me/aedahamlibrary

குறைந்தது வாரத்திற்கு இரண்டு தொழிலாளிகள் தங்களுக்குத் தெரிந்தவர்களின் வட்டத்தில் இறப்பு எனக் கூறிச் சென்றுவிடுவார்கள். அவர் இயக்கி வந்த இயந்திரம் அவருக்காக மூன்று நாள் காத்திருக்கும். இதில் ரத்த உறவுகளுடைய இறப்பு என்றால் தொழிற்சாலை நிர்வாகம் சவத்தை அடக்கம் செய்யப் பணம் கொடுத்து உதவும். இந்தப் பணத்திற்காக இறப்பு குறித்த பொய்யான தகவல்கள் பெருகியபடியே இருக்கும். கிராமத்திலிருக்கும் தன் மகனோ மகளோ நோய்வாய்ப்பட்டு இறந்துவிட்ட செய்தி வர, உடனே புறப்பட்டு செல்லக்கூட முடியாமல், அடக்கம் செய்யக் காசு வேண்டி நிர்வாகத்திடம் விண்ணப்பித்துக் காத்திருக்கும் நிலையும் உண்டு. அப்பொழுது என்னைப் போன்ற ஒரு கண்டிப்பான நிர்வாகி, உறவை இழந்த தந்தையிடன், இறப்பின் தகவல் உண்மைதான் என்ற நிரூபணம் வேண்டி கேள்விகளால் துளைத்து எடுக்கும் கொடுமையும் நடந்தேறும்.

இவை அனைத்தையும் தாண்டி ஒரு ஏழை மலாவியன் தன் வாழ்வில் சந்தோஷமாய் சிரிக்கும் தருணங்கள் இதே தேசத்தில் வாழும் ஒரு பணவசதி படைத்த முதலாளி சிரிப்பதை விட எண்ணிக்கை அளவில் அதிகம் எனக் காண்கிறேன். இதற்குக் காரணம், ஒரு வகையில் அவர்களது குழந்தை வளர்ப்பு முறையே என்று தோன்றுகிறது.

மலாவிய தாய்மார்கள் தங்கள் குழந்தைகளை இடுப்பில் சுமப்பதில்லை. மாறாக முதுகில் சுமக்கிறார்கள். துப்பட்டா போன்ற ஒரு துணியில் குழந்தையைச் சுற்றி முதுகில் கட்டிக்கொள்கிறார்கள். (ஐரோப்பாவிலும் இந்த முறை உண்டு எனக் கேள்விபட்டிருக்கிறேன்.) முதுகில் கட்டப்படும் குழந்தைகள் தாயைப் பற்றிக்கொண்டிருப்பதில்லை. துணியின் பிணைப்பில் வசதி கொண்டு, பற்றுதலின் அவசியம் அதிகமின்றி சுதந்திரமாக வேடிக்கை பார்த்தபடி தாயின் முதுகில் அமர்ந்து செல்கின்றனர். இடுப்பில் சுமக்கும் முறையிலோ குழந்தை தொடர்ந்து தாயின் அணைப்பிலான பற்றுதலுடன் வளர நேரிடுகிறது. இந்தப் பற்றுதல் முறை குழந்தையின் மன அமைப்பில் மெல்ல ஆதிக்கம் செலுத்தத் துவங்குகிறது. இதுவே பிற்பாடு உறவு சம்மந்தமான சார்பு நிலையின் மீதான பற்றுதலாக மனதளவில் வளர்ந்துவிடுகிறது.

இவ்விடத்தில் நான் பற்றுதல் என்ற வார்த்தையை அக்கறை என்ற வார்த்தையுடன் வெகுவாக பிரித்துப் பார்க்கிறேன். அது இந்தியத் தாயாக இருந்தாலும், வறுமையில் வாடும் மலாவியத் தாயாக இருந்தாலும், தன் குழந்தையின் மீதான அக்கறையில்லாத தாய் ஒருத்தியைக் கண்டுவிட முடியாது. ஆனால் அக்கறை வேறு; ஒரு உறவினைப் பற்றி, அதனைச் சார்ந்திருத்தல் என்பது வேறு. அணைத்து

https://telegram.me/aedahamlibrary

அரவணைத்துத் தூக்கி வளர்க்கையில் சுதந்திரமான மனப்போக்கு மறைந்து சார்பு நிலை ஏற்பட்டு விடுகிறது. அதே சமயம் முதுகில் சுமத்தல் போன்ற முறையில் இந்த சார்பின்மை மறைந்து சுதந்திரம் வெளிப்படும் வாய்ப்பு ஏற்படுகிறது.

நிறைய பேர் உறவினை மனதளவில் முழுக்க முழுக்க சார்ந்திருத்தல் என்பதை மிகச் சிறந்த கலாச்சாரத்தின் சாராம்சம் என நினைத்துப் பெருமை கொள்கிறார்கள். அதுவும் ஒருவகை கலாச்சார முறை என்பதைத் தவிர அதில் வேறெதுவும் தனிச் சிறப்பென எனக்குத் தோன்றவில்லை. இன்னும் சொல்லப் போனால் எந்தவகை சார்ந்திருத்தலும் யாரை சார்ந்திருக்கிறோமோ அவரைச் சுரண்டுவதிலேயே சென்று முடிகிறது என்பேன்.

குழந்தையைச் சுமத்தலில் உள்ள வித்யாசம் போக, ஒரு நடுத்தர வர்க்கத்து இந்தியத் தாயினைப் போல் தன் குழந்தைகளைப் பொத்திப் பொத்தி வளர்க்கும் பழக்கமும் இங்கு இருப்பதில்லை. இரண்டு வயதாகி விட்ட குழந்தை தானாக மண்ணில் புரண்டு, கிடைத்ததை வைத்து விளையாடி, அதிக கண்டிப்பின்றி வளர்வதை இங்கே காண்கிறேன். இதன் விளைவாக பின்னாளில் மலாவியர்கள் தன் எதிர்காலத்தையும் தன் குழந்தையின் எதிர்காலத்தையும் குறித்த அதீத பதற்றத்துடனோ, பகல் கனவுகளுடனோ வாழ்வதில்லை. மாறாக, அந்த நாளுக்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டுவிட்டால் போதும், இவர்களால் மகிழ்ச்சி கொண்டாடி சிரிக்க முடிகிறது. இதை உறவின் மீதான மதிப்பின்மை, விட்டேத்தியான மனோபாவம் என்றெல்லாம் கொள்ளலாகாது. ஒரு உதாரணம் சொல்கிறேன்.

எனது சமையற்காரருக்கு 57 வயது. தினமும் குடிக்கும் பழக்கமுடையவர். இதில் நான் சொல்வதற்குப் பெரிதாக ஒன்றும் இருந்ததில்லை. ஆனால் ஒருநாள் வேலை செய்ய வேண்டிய நேரத்தில் குடித்துவிட்டு ஏதோ உளறியபடி சுற்றிவரத் துவங்க, எனக்குக் கோபம் தலைக்கேறிவிட்டது. நான் உடனே வெளியே சென்றுவிடுமாறு அவரிடம் சொல்லிவிட்டு, கிராமத்திலிருந்த அவரது சித்தப்பாவுக்குத் தகவல் சொல்லி அனுப்பினேன். அவரது சித்தப்பா அவர்களின் குடும்பத்தில் மூத்தவர். எப்படியும் 75 வயதிற்கு மேல் இருக்கும். எப்படியோ என் மீது அவருக்கு மதிப்பும் மரியாதையும் ஏற்பட்டு விட்டிருந்தது. அடுத்த நாள் கிராமத்திலிருந்து புறப்பட்டு வந்த அவர், என்னுடைய சமையற்காரரை சந்தித்துப் பேசிவிட்டு, அவர் சார்பில் என்னிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டு, இனி இப்படி நடக்காது என்றும், நடந்தால் உடனே தனக்கு தகவல் சொல்லி அனுப்புமாறும் சொல்லி விட்டுச் சென்றார்.

https://telegram.me/aedahamlibrary

என் சமையற்காரருடன் அவர் என்ன பேசினாரோ தெரியாது. (கிட்டத்தட்ட இது நடந்து ஒரு வருடம் இருக்கும்). அன்று முதல் இன்று வரை என் சமையற்காரர் குடியைத் தீண்டுவதில்லை! இதை என்னவென்று சொல்வது? இத்தனைக்கும் அவரின் சித்தப்பா இறந்துபோய் இப்போது ஐந்து மாதங்களாகப் போகிறது.

இதுபோன்ற கதைகள் எந்த தேசத்திலும், எந்த வகை கலாச்சார சூழலிலும் தேடினால் மிக எளிதாகவே கிடைத்துவிடும் என்று எண்ணுகிறேன். இது ஒரு மனிதனின் சொல்லுக்கு மதிப்பளித்து இன்னொரு மனிதன் நடந்துகொள்ளும் முறை. இதற்கும், 'உறவின் வலிமை', 'கலாச்சார சிறப்பு' என்று வெவ்வேறு பெயர்களில் ஒருவரை ஒருவர் சுரண்டி வாழ்வதற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றே கொள்கிறேன்.

குழந்தை வளர்ப்பு பற்றி ஓஷோ இப்படிச் சொல்கிறார்: "குழந்தைகள் கம்யூனின் பொறுப்பில் வளர வேண்டியவர்கள்; குடும்பத்தின் பொறுப்பில் அல்ல. குழந்தைகளின் மனதில் எக்கச்சக்கமான பிரச்சினைகளை உண்டு பண்ணுவது குடும்பதான். மதம், அரசியல் போன்ற விஷயங்களில் அவர்களுக்குள் ஏற்படும் முட்டாள்தனமான அணுகுமுறைக்கும், மூடநம்பிக்கைகளுக்கும், அவர்களுடைய உளவியல் சிக்கல்களுக்கும், நோய்க்கூறான தன்மைக்கும் குடும்பமே காரணம். குழந்தைகள் குடும்பத்திலிருந்து விடுவிக்கப்பட வேண்டும். ஒரு நவ மனிதனை நீங்கள் உருவாக்க வேண்டுமெனில் குடும்பம் என்பது ஒரு அசிங்கமான அமைப்பு. குடும்பத்தின் காலம் முடிந்துவிட்டது. குடும்பத்தின் இடத்தை கம்யூன் பிடித்தாக வேண்டும்."

இதை நான் அப்படியே வழிமொழியத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும் பிரியமுள்ள ஓஷோ, எல்லாம் சரிதான். இதற்குத் துவக்கப்புள்ளி எங்கே இருக்கிறது? கம்யூன் முதலில் நல்ல நிலையில் இருக்க வேண்டும். கம்யூன் நன்றாக இருக்க அதை உருவகிக்கும் தனிமனிதன் ஏற்புடையவனாக இருக்க வேண்டும். ஆனால் நடைமுறை எப்படி இருக்கிறது? சமூகம் என்ற கேடு கெட்ட அமைப்பு குழந்தைகளை தனக்கு ஏற்றவாறு தன் முறையில் தயாரிக்கிறது. வளர்ந்து ஆளான நிலையில் இந்தக் குழந்தைகள் அந்த அமைப்புக்கு விசுவாசமுள்ளவர்களாகச் செயல்பட்டு தங்கள் பங்கை அளிப்பதன் மூலம் அதை மேலும் சிக்கலாக்குகிறார்கள். இதில் முதல் மாற்றம் எங்கிருந்து துவங்க வேண்டும் - சமூகத்திலிருந்தா அல்லது குழந்தைகளிலிருந்தா? இந்தக் கேள்வி - கோழி முதலிலா, முட்டை முதலிலா என்ற ரீதியில் விடையின்றி நிற்கிறது!

https://telegram.me/aedahamlibrary

மொத்தத்தில், வறுமை நிறைந்த வாழ்வின் சூழ்நிலை காரணமாகவும், வளர்ப்பு முறையில் இயல்பாகவே அமைந்துவிட்ட சுதந்திரம் காரணமாகவும் பொறுப்பு சுமந்து வாடாமல், அன்றைய தினத்திற்காக வாழ்பவர்களாக மலாவிய குழந்தைகள் வளர்கின்றன. இதை நாட்டின் பொருளாதாரக் குறைபாட்டுடன் இணைத்து, இவர்களைக் கலாச்சார சீர்கேடுள்ள - பொறுப்பற்ற மந்த புத்திக்காரர்கள் என்று முத்திரை குத்துவோம் என்றால், அது அன்னியக் கண்ணாடியை மாட்டிக்கொண்டு அதன் வழியே யாவற்றையும் கண்டு தீர்மானிக்கும் நம்முடைய பிரச்சினையே அன்றி மலாவியர்களது அல்ல.

முதலில் இவர்கள் மனம் தொழில்துறை முன்னேற்றத்தினை முன்னெடுத்துச் செல்லும் முனைப்புள்ள மனம் அல்ல. தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தினைக்கூட மறந்து வறுமையில் சிரிக்கும் எளிய மனங்கள். இன்னும் சொல்லப்போனால், உலகமயமாக்கல் என்ற முயற்சியில், தொடர்ந்து சுரண்டப்பட்டதே இவர்களுக்கு மிச்சம். இல்லையெனில் இயற்கையைச் சார்ந்து, வறுமை போன்ற தொல்லைகளின்றி நிம்மதியாகவே வாழ்ந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன்.

எது எப்படியாயினும் சீனத் தொழிலதிபரிடம் இவ்வளவு எல்லாம் சொல்லிக்கொண்டிருக்க முடியுமா? ஏதோ அவர் நோக்கில் அவர் கேட்டவற்றில் முக்கியமானவற்றிற்கான அடிப்படைக் கூறுகளை மட்டும் அவர் கேட்டதன் போக்கில் விளக்கிக்கொண்டிருந்தேன். அவர் சில யோசனைகள் சொல்ல, அவை யாவும் நான் ஏற்கனவே முயற்சித்துத் தோல்வி பெற்ற கதைகளைச் சொல்லி, அதன் காரணங்களையும் சொல்லியபோது அவருக்கும் எனக்கும் ஆயாசம் ஏற்பட்டிருந்தது.

இறுதியாக, அனுபவத்தில் முதிர்ந்த அவரிடம் இன்று காலையில் நீங்கள் பார்த்த பிச்சைக்கார சிறுவர்கள் அடுத்த பதினைந்து வருடமும் உணவின்றி அலைந்துவிட்டு, தங்கள் இருபதாவது வயதில் உங்களிடம் தொழிற்சாலை வேலைக்குச் சேர்ந்தால் எப்படி அவர்களுக்கு ஒழுக்கம் கற்பித்து வேலை வாங்குவீர்கள் என்ற கேள்வியைக் கேட்டேன். அவர் தன் தோளினைக் குலுக்கி, ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, தான் அணைத்து வைத்திருந்த சிகரெட்டினை மீண்டும் ஒரு முறை பற்ற வைத்து இழுக்கத் துவங்கினார்.

சரி. இந்த ரைம்ஸ் சொல்லி, சாக்லேட் வாங்கிச் சாப்பிட்டு வளரும் இந்தியக் குழந்தைகள் மலாவியில் என்ன செய்கின்றன? அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

https://telegram.me/aedahamlibrary

அன்புடன்,

ஆனந்த்.

¦

¦

அன்புள்ள ஆனந்த்,

ஒருமுறை ஒரு பத்திரிகையில் பல எழுத்தாளர்களின் சிறு வயது அனுபவங்கள் ஒரு தொடராக வந்துகொண்டிருந்தது. அந்தப் பத்திரிகையின் ஆசிரியர் வேறு என் நண்பர் என்பதால் அதைப் பார்த்துவிட்டு என்னையும் எழுதச் சொல்லிவிடுவாரோ என்று பயந்துகொண்டிருந்தேன். ஏனென்றால் என்னுடைய சிறு வயது, பள்ளிப் பிராய அனுபவங்கள் அனைத்தும் பாலியல் ரீதியானவை. அதனால் அந்தக் கட்டுரைத் தொடரில் திடீரென்று நடுவே ஒரு செக்ஸ் கட்டுரை சேர்ந்த மாதிரி ஆகிவிடும். செக்ஸ் மீது எல்லோருக்குமே அதீத ஆர்வம் இருந்தாலும், அதை அவர்கள் ரகசியமாகப் பதுக்கிவிட்டு அது ஒரு பிடிக்காத சமாச்சாரம் என்று பாசாங்கு செய்வதால் செக்ஸ் பற்றி எழுதினால் எதிர்ப்பு கிளம்புவதே வழக்கமாக இருக்கிறது. அதுவும் சிறுவர்களின் செக்ஸ் என்றால் இன்னும் மோசம்.

நான் எதிர்பார்த்தபடியே என்னையும் கட்டுரை கேட்டார் ஆசிரியர். அந்தச் சிறு வயது அனுபவங்களை நான் இன்னும் கதைகளில் கூட எழுதவில்லை. எழுதினால் படுபயங்கரமாக இருக்கும். அதனால் இதோ அதோ என்று சாக்குபோக்கு சொல்லிக்கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் அந்த நண்பரே வேறு பத்திரிகைக்கு மாறிவிட்டதால் அந்த கண்டத்திலிருந்து தப்பினேன்.

எனக்கு ஐந்து வயது வரை பேச்சே வரவில்லையாம். ஊமை என்றே முடிவு கட்டிவிட்டார்களாம். பிறகு என் அம்மாச்சியின் குலதெய்வமான கலியபெருமாள் கோவிலுக்கு எனக்கு முடி இறக்குவதாக நேர்ந்துகொண்ட பிறகு பேசினேனாம். நான் பேசிய முதல் பேச்சைக் கேட்ட பிறகு 'இவன் ஊமையாகவே இருந்திருக்கலாமே' என்று நினைத்தார்களாம். அப்படி என்ன பேச்சு?

என் அழகான அத்தையைப் பார்த்து "நானே உங்களைக் கல்யாணம் பண்ணிக்கிறேன்" என்றேனாம். அதோடு விட்டிருந் தாலாவது பரவாயில்லை. "ஆனால் ஒன்று; உங்க கை இதே மாதிரி அழகா இருக்கணும். அவ்வா கை மாதிரி சுருங்கி சுருங்கி இருக்கக் கூடாது" என்று வேறு சொல்லியிருக்கிறேன். இப்படி ஐந்து வயதில் ஆரம்பித்த பாலியல் அனுபவம் நான் ஐந்தாம் வகுப்பு படிக்கும்போது ஒரு

https://telegram.me/aedahamlibrary

உச்சத்தை அடைந்தது. எங்கள் க்ளாஸ் டீச்சர் அந்தக் காலத்து தேவிகா மாதிரி இருப்பார். படு ஸ்டைலாக இருக்கும் அலங்காரமும் தோரணையும். கோணல் வகிடு எடுத்து ஓரத்தில் ஒற்றை ரோஜா வேறு அணிந்திருப்பார். கறுப்பு நிறத்தில் பவுடர் எடுப்பாக இருக்கும். அவருடைய உறவுக்காரப் பையன் - ராஜசேகர் என்று பெயர் - எங்கள் வகுப்பிலேயே படித்தான். அவன் அந்த டீச்சரை அத்தாச்சி என்று அழைப்பான். அதனால் நாங்களும் டீச்சரை, அவர் இல்லாத போது, அத்தாச்சி என்றே குறிப்பிடுவோம்.

அநேகமாக எங்கள் வகுப்பிலிருந்த அத்தனை பேருமே அத்தாச்சியைக் காதலித்தோம் என்று சொல்லலாம். பையன்கள் அத்தனை பேருமே அவருடைய அழகில் கிறங்கிப் போயிருந்தோம். எங்களில் யாருக்கு அந்தக் காதலை அத்தாச்சியிடம் சொல்வதற்கு தைரியம் இருக்கிறதோ அவனுடைய காதலே உண்மையான காதல் என்று ஒருநாள் முடிவு பண்ணினோம். என்னுடைய கையெழுத்து அழகாக இருக்கும் என்பதால் அத்தாச்சி அடிக்கடி என்னையே கரும்பலகையில் எழுத அழைப்பதால் அத்தாச்சிக்கும் என்னைப் பிடித்திருக்கிறது என்று எண்ணி ஒருநாள் என்னுடைய நோட்டுப் புத்தகத்திலிருந்து ஒரு பேப்பரைக் கிழித்து ஒரு அழகான காதல் கடிதத்தை எழுதி அத்தாச்சியிடம் கொடுத்துவிட்டேன். உடனே அந்த விஷயம் பள்ளி முழுவதற்கும் தெரிந்துபோனது. ஆனாலும் ஒன்றும் பிரச்சினை பண்ணவில்லை. நான் நன்றாகப் படிக்கிற பையன் என்பதால் யாரோ ஒரு கெட்ட பையன் சொல்லிக் கொடுத்துத்தான் நான் இதைச் செய்திருக்கிறேன் என்று முடிவுக்கு வந்துவிட்டார்கள் ஆசிரியர்கள். ஆனால் இந்தச் சம்பவத்தால் ஏற்பட்ட ஒரே நஷ்டம் என்னவென்றால், அதற்குப் பிறகு அத்தாச்சியின் சொந்தக்காரனான ராஜசேகர் என்னிடம் பேசவே இல்லை. அதற்குப் பிறகு பத்துப் பதினைந்து ஆண்டுகள் கழிந்த பிறகுகூட அவன் என்னைப் பார்க்கும் போது அதில் ஒரு வன்மம் தெரியும்.

இப்படியாக என்னுடைய வாழ்க்கையில் குழந்தைப் பருவமே இல்லையோ என்றுகூட எனக்கு ஆதங்கமாக இருக்கும்.

எங்கள் நிலப்பகுதியே அப்படித்தான் என்று நினைக்கிறேன். இந்திரா பார்த்தசாரதியிடம் ஒருநாள் “நீங்கள் தஞ்சாவூர்தானே?” என்று கேட்டேன். “உங்களுக்கு எப்படித் தெரியும்?” என்று ஆச்சரியமாகக் கேட்டார். “எழுத்திலிருந்து தெரிந்தது” என்று மையமாகச் சொல்லிவிட்டு நகர்ந்தேன். இ.பா.மட்டும் அல்ல; கு.ப.ரா., ஜானகிராமன், லா.ச.ரா, மௌனி என்று பெரிய படையே இருக்கிறது. இவர்கள் எல்லோருக்குமே ஒரு மைய இழை பாலியல்தான். அதிலும்

https://telegram.me/aedahamlibrary

கரிச்சான் குஞ்சு அந்தக் காலத்திலேயே ஓரினச் சேர்க்கை பற்றி எழுதியவர். அநேகமாக தமிழின் ஒரே ஹோமோசெக்ஸ் நாவல் பசித்த மானிடமாகத்தான் இருக்க வேண்டும். சுஜாதா பற்றிச் சொல்லவே வேண்டியதில்லை. (கேரளா பற்றிய அவருடைய பதில் ஞாபகம் இருக்கும் என்று நினைக்கிறேன்.) சுஜாதாவின் ஸ்ரீரங்கத்திற்கும் உன்னுடைய ஊருக்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டால், என்னைப் பொறுத்தவரை காவிரி செல்லும் இடமெல்லாம் என்னுடைய ஊர்தான். அதுவும் காவிரி ஸ்ரீரங்கத்தில் உற்பத்தி ஆகி நான் பிறந்து வளர்ந்த நாகூரில்தான் கடலில் கலக்கிறது!

ஒருநாள் மனுஷ்ய புத்திரனிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் மௌனியையும் கு.ப.ரா.வையும் பற்றிச் சொன்னார். இரண்டு பேருக்குமே பொதுவான அம்சம், பெண்.அது மௌனியில் ஸ்தூலமாகவும் லா.ச.ரா.விடம் சூட்சுமமாகவும் விளங்கும். மௌனி பெண்ணை ஒரு மானிட சொரூபமாகவும், தன்னுடைய தீராத வேட்கையின் நாயகியாகவும் பார்க்கிறார் என்றால், லா.ச.ரா. அவளை ஒரு தெய்வமாகப் பார்க்கிறார். அபிதா, ஜனனி என்று சில கதைகள் ஞாபகம் வருகின்றன.

அடுத்து, உங்கள் கடிதத்தில் குறிப்பிடும் மற்றொரு விஷயம்: தினசரி நிகழ்வுகளை நாவலின் போக்கில் கவனிக்கத் துவங்கி, அதனால் துணுக்குற்று நாவலை நிறுத்திவிட்டதாக எழுதியிருக்கிறீர்கள். அது தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. உங்களுக்குக் கொடுக்கப்பட்ட வேலையே நாவல் எழுதுவதுதான். அதற்காகத்தான் நீங்கள் அங்கே அனுப்பப்பட்டிருக்கிறீர்கள். என்னுடைய மன ஓட்டம் இப்படித்தான் போகும். அந்தத் தொழிலதிபர் அப்படி அணைத்த சிகரெட்டை மீண்டும் பற்ற வைத்துக் குடிப்பது அவ்வளவு நல்லதல்ல என்று கேள்விப்பட்டிருக்கிறேன். சுருட்டு அல்லது பீடிதான் அப்படிக் குடிக்க ஏற்றது. மேலும், சிகரெட்டை அப்படிக் குடித்தால் கொடுமையாக நாறும். இதெல்லாம் போக, இதுபற்றி என்னால் ஒரு வார்த்தை கூட ஆதரவாகப் பேச முடியாது. பணக்காரர்களில் பெரும்பாலானவர்கள் இப்படித்தான் பைத்தியக்காரத்தனமான பழக்கவழக்கம் கொண்டவர்களாகவும், அடி மடையர்களாகவும் இருக்கிறார்கள். ஒரு படத்தில் நடிக்க 50 கோடி சம்பளம் வாங்கிக்கொண்டு அன்றாட வாழ்வில் கிழிந்த சட்டை போட்டுக்கொள்வது, எம்.எஃப்.ஹுசைன் கோட் சூட்டெல்லாம் போட்டுக்கொண்டு காலில் ஷூ அணியாமல் வெறும் காலால் நடப்பது போன்றவை இதற்கு உதாரணங்கள். போகட்டும். உங்கள் முதலாளி எந்த நாட்டுக்காரர்? அவர் ஒரு

https://telegram.me/aedahamlibrary

இஸ்லாமியர் என்று அறிகிறேன். மலாவியில் இஸ்லாம் உண்டா? அங்கே எந்த மதத்தினர் அதிகம்?

ஒரு ஏழை மலாவியின் உளவியல் பற்றி மிக விளக்கமாக எழுதியிருக்கிறீர்கள். நானும் அதே மனநிலையில் ஒரு பத்து ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறேன். அதனால் அதை வெகு எளிதாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

குழந்தையை முதுகில் சுமப்பதில் இவ்வளவு விஷயங்கள் உள்ளன என்று இப்போதுதான் புரிகிறது. நீங்கள் சொல்வது சரிதான். ஆச்சரியம் என்னவென்றால், என் மகளையும் நான் முதுகில் சுமந்துதான் வளர்த்தேன். அந்த சாதனத்துக்கு ஆங்கிலத்தில் ஏதோ சொல்வார்கள். அதை வட இந்தியாவிலிருந்து வரவழைத்து அதில்தான் என் மகளைப் போட்டுக்கொண்டு வெளியே போவேன். அவளுடைய அம்மா இல்லாமல் நான் ஒருவனே வளர்த்தபடியால் அந்தச் சாதனம் தேவைப்பட்டது. முதலில் தோளில்தான் தூக்கிப் பார்த்தேன். ஆனால் அந்தக் கழுதை சின்ன வயதிலேயே யானை கனம் இருந்ததால், நமக்குக் கொஞ்சம் மேற்கத்திய கலாச்சாரம் பரிச்சயம் என்பதால் அந்தச் சாதனத்தை வரவழைத்துவிட்டேன்.

என்னிடம் வளர்ந்தால் குழந்தைகள் கொஞ்சம் போஷாக்காகவும், சுதந்திரப் பிறவிகளாகவும் இருக்கும். என்னுடைய பப்புகூட ஆறு மாதம்தான் ஆகிறது. ஆனால் இரண்டு வயது நாய் மாதிரித் தோற்றம். வாக்கிங் போகும்போது எல்லோரும் வயதைக் கேட்டு - நான் ஒரு உண்மை விளம்பி வேறு - நான் ஆறு மாதம் என்றதும் ஒருக்கணம் மூச்சுப் பேச்சற்று ஸ்தம்பித்துவிடுகின்றனர். இப்படி திருஷ்டி ஆகி ஆகித்தான் அதற்குக் காலில் பிரச்சினை வந்திருக்கிறது என்பது அவந்திகாவின் குற்றச்சாட்டு. வயதைக் கேட்டால் “இரண்டு வருடம் என்று சொல்” என்று சொல்லிக்கொண்டிருக்கிறாள். பொய் சொல்லப் பழக வேண்டும்.

உங்கள் சமையல்காரர் பற்றி; எனக்காக நீங்கள் ஒரு வேலை செய்ய வேண்டும் ஆனந்த். அவர் சித்தப்பா சொன்னதும் அவர் குடியை விட்டுவிட்டது சம்பந்தமாக என் சந்தேகம். ஒரு மர்ம நாவலின் முடிவு தெரியாமலேயே அந்த நாவல் முடிந்துவிட்டது போல் இருக்கிறது. அவருடைய சித்தப்பா அவரிடம் என்ன சொன்னார் என்று மட்டும் எனக்குக் கேட்டுச் சொல்லுங்கள்.

குழந்தை வளர்ப்பு பற்றி ஓஷோ சொல்லியிருப்பது பற்றிய உங்கள் அவநம்பிக்கை அவசியமில்லாதது. என்னுடைய ஐரோப்பிய அனுபவம்

https://telegram.me/aedahamlibrary

ஓஷோ சொல்வதை பலமாக ஆமோதிக்கிறது. ஒரு குடும்பத்தில் ஒரு குழந்தை பிறந்ததும் அரசாங்கமே அந்தக் குழந்தையைத் தத்தெடுத்துக்கொள்கிறது அங்கே. அதற்குப் பால் பவுடர் வாங்குவதிலிருந்து எல்லாவற்றிற்கும் உதவித் தொகை. குழந்தையின் பெற்றோர் வெறும் கார்டியன்தான். குழந்தையின் படிப்பும் அப்படியே. படித்துவிட்டு வேலைக்குப் போகாவிட்டாலும் அரசாங்கம் உதவித்தொகை தருகிறது. அங்கே உள்ள அகதிகளின் குடியிருப்புக்கும் சென்று தங்கியிருக்கிறேன். நம்முடைய தமிழ்நாட்டில் இருக்கும் அகதிகள் குடியிருப்பு 18-ஆம் நூற்றாண்டில் இருந்த தொழுநோயாளிகளின் குடியிருப்பை விட பயங்கரமானவை. ஹிட்லரின் வதைமுகாம்களை வேண்டுமானால் நிகழ்கால உதாரணமாகச் சொல்லலாம்.

ஐரோப்பிய அகதி முகாம்கள் - என்னைப் போன்ற ஒரு இந்திய னுக்கு - சொர்க்கத்தைப் போல் தெரிந்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. இங்கே இந்தியாவில் 75 சதவிகித மக்களுக்கு அம்மாதிரி இருப்பிடம் இன்னும் கனவு காணக்கூடிய நிலையில்கூட இல்லை. அதுவும் தவிர, அகதிகளுக்கும் அங்கே உதவித்தொகை உண்டு.

இதெற்கெல்லாம் அரசாங்கமே ஒரு நல்ல அமைப்பாக இருக்க வேண்டும். இந்தியாவில் இருப்பதைப் போல் கிரிமினல்களின் அரசாங்கமாக இருந்தால் இதெல்லாம் சாத்தியமில்லை. ஒரே ஒரு விஷயம் சொல்கிறேன்.

இந்தியாவில் தெருநாய்களும் குழந்தைகளும் ஒன்று. இப்படிச் சொன்னால் எல்லோரும் என்னைத் திட்டுவார்கள். ஆனால் தினசரிகளைப் பார்த்தால் அப்படித்தான் முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.

1. அடிக்கடி குப்பைத் தொட்டியில் பெண் குழந்தைகள் வீசப்பட்டு நாயும் எலியும் பூனையும் அந்த சிசுக்களைத் தின்று கொண்டிருக்கின்றன. இவை கள்ளக்காதலால் உருவான குழந்தைகள். இந்தச் செய்தி வராத நாளே கிடையாது. ஆனால் ஆங்கில தினசரிகளில் வராது. தமிழ் தினசரிகளில்தான் வரும்.

2. குழந்தைகள் ஆழ்துளைக் கிணறுகளில் விழாத நாளே கிடையாது. ஆழ்துளைக் கிணறுகளை அப்படியே காகிதத்தைப் போட்டு மூடிவிட்டுப் போகும் தொழிலாளர்கள்.

3. வாத்திச்சிகளும் வாத்தியார்களும் அடித்து செத்துப் போகும் குழந்தைகள்.

https://telegram.me/aedahamlibrary

4. மூன்று பேர் அமரக்கூடிய ஆட்டோவில் 20 குழந்தைகளை அடைத்துச் செல்லும் கொடுமை. (இதை பெற்றோர்களும் அனுமதித்துக் கொண்டிருக்கின்றனர்.)

5. ஸ்கூல் வேனிலிருந்து இறங்கும்போது சக்கரத்தில் மாட்டி இறந்து போகும் குழந்தைகள்.

6. பிறந்தவுடனேயே பிரசவ ஆஸ்பத்திரியிலிருந்து கடத்தி வரப்பட்டு கைகால்கள் உடைக்கப்பட்டு பிச்சை எடுக்க அனுப்பப்படும் குழந்தைகள். (பிரசவ ஆஸ்பத்திரியின் ஒவ்வொரு கவரிலும் “ஜாக்கிரதை; குழந்தைத் திருடர்கள்; குழந்தைகளை பத்திரமாகக் கவனித்துக் கொள்ளவும்” என்று பெரிய எழுத்தில் எழுதியிருக்கிறார்கள்). இப்படி ஒரு சாக்கடை தேசத்தில் ஓஷோ சொல்வது சாத்தியமில்லை. ஆனால் மேற்கு ஐரோப்பாவில் அதை சாத்தியப்படுத்தி இருக்கிறார்கள்.

சாரு

27.4.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

22 நாவல்கள், 65 குறுநாவல்கள், 88 தத்துவ நூல்கள், 307 சிறுகதைகள், 1330 கவிதைகள்

டியர் சாரு,

முதலில் உங்கள் கேள்விகளுக்கான பதிலை எழுதி விடுகிறேன்.

1) என் முதலாளி எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

இந்தக் கேள்வி சற்று சிக்கலானது. அவரது பாட்டனார் இந்தியர் - குஜராத்தி. அறுபது ஆண்டுகளாக குடும்பம் மலாவியில் வசித்து வருகிறது. (முதலாளிக்கு இப்போது நாற்பத்து ஏழு வயது). பாஸ்போர்ட்டைப் பொறுத்தவரை பிரித்தானிய பாஸ்போர்ட். முதலாளியின் பிள்ளைகள் யாவரும் இங்கிலாந்தில் பிறந்தவர்கள். பிரித்தானிய பாஸ்போர்ட் வைத்திருப்பவர்கள். மலாவியில் ஒரு காலும் இங்கிலாந்தில் ஒரு காலும் ஊன்றி நிற்பவர்கள். மனதளவிலும், வாழ்க்கை முறையிலும், சினிமா - தொலைக்காட்சி முதலியவற்றைப் பார்ப்பதிலும் இவர்களை இந்தியர்கள் என்ற கூறலாம்.

இங்கே பெரிய நிறுவனங்கள் பலவற்றின் முதலாளிகள் இத்தகையவர்களே. காரணம், மலாவி 1964 வரை பிரித்தானியக் காலனியாகவே இருந்ததால் பிரித்தானிய பாஸ்போர்ட்டுகளைப் பெறுவது வசதியாக இருந்திருக்கிறது. மற்றபடி இங்கு ஒரு சில தென் ஆஃபிரிக்க நிறுவனங்களும் குறைவான எண்ணிக்கையில் மலாவியத் தொழிலதிபர்களும் உண்டு.

2) மலாவியிலுள்ள மதங்கள்?

இஸ்லாம், கிறிஸ்தவம் இரு மதங்கள் மட்டுமே. சதவிகிதத்தில் கிறிஸ்தவர்களே அதிகம். ‘யிமீsus வீs tலீமீ ளிஸீறீஹ்ஹ நிஷீபீ’, ‘Jesus is the Only God’, ‘One who bows before Allah can stand before anyone’ என்று வாகனங்களில் எழுதி ஓட்டும் அளவில் மட்டும் போட்டி போடுகிறார்கள். பெரிய அளவில் மதச் சிக்கல்கள் எதுவும் இல்லை. பிளாந்தையர், விலாங்கவே என்ற இரு நகரங்களிலும் நகருக்கொரு இந்துக் கோயில் உண்டு. அது இங்கு வந்து வேலை செய்யும் இந்தியர்களின்

https://telegram.me/aedahamlibrary

எண்ணிக்கையின் காரணமாக உருவானது.

தவிர, குலே என்றொரு வாழ்வுமுறை இருக்கிறது. அதைப் பற்றி பின்னர் விவரமாக எழுதுகிறேன்.

3) என் சமையற்காரரிடம் அவர் சித்தப்பா சொன்னது?

அதனுள் 22 நாவல்கள், 65 குறு நாவல்கள், 88 தத்துவ நூல்கள், 307 சிறுகதைகள், 1330 கவிதைகள் ஒளிந்திருப்பதாகப் படுகிறது. ஒவ்வொன்றாக எழுதலாம் என்று நினைத்திருக்கிறேன். சரிதானே?

இனி ரைம்ஸ் சொல்லி சாக்லேட்டு வாங்கிச் சாப்பிடும் இந்தியக் குழந்தைகள் பற்றி...

சில தினங்களுக்கு முன் இங்கே ஃப்ரெஞ்ச் கலாச்சார மையத்தில் நடன நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இந்திய நடன முறையும், மஸாய் என்ற ஆஃப்ரிக்க நடன முறையும் இணையும் நிகழ்ச்சி. ஃப்ரஞ்ச் பல்கலைக்கழகத்தில் நடன ஆசிரியராக பணியாற்றும் ராஜஸ்தானை சேர்ந்த ஜெயா பாச்சௌரி இந்திய நடனம். பிரான்சில் வசிக்கும் கென்யாவை சேர்ந்த சர்வதேசக் கலைஞரான அனு அங்ஞா மஸாய் நடனம். இருவரும் பிரான்சிலிருந்து கிளம்பி உலகப் பயணம் மேற்கொண்டிருப்பவர்கள், மலாவி வந்திருந்தனர். ஒரே ஒரு நாள், ஒரே ஒரு நிகழ்ச்சி. நான் ஓம்பால் சிங்கை கூட்டிக் கொண்டு கிளம்பினேன். இமிக்ரேஷன் சிக்கலைத் தீர்த்த நாள் முதலாய் ஓம்பாலுக்கு என் மேல் மதிப்பு கூடி, எப்படியும் ஏதாவது நல்ல விஷயமாகத்தான் இருக்கும் என்று நம்பிக்கை கொண்டு சேர்ந்து கொள்கிறார்! அவர் நம்பிக்கை வீண் போகவில்லை. நிகழ்ச்சி நன்றாகவே இருந்தது.

மங்கிய வெளிச்சத்தில், ஜெயாவும், அனு அங்ஞாவும் தனித்தனியாக மேடையில் தோன்றி, மெல்ல தங்களுடையதான நடன முறையில் நடந்து எதையோ தேடுவதைப் போன்ற பாவனை காட்டினர். பிறகு மெல்ல நடை வேகமாகி, ஒருவரின் மேல் ஒருவர் மோதி விடாமல் குறைந்த இடைவெளி அளவில் வேகமாக, வட்டமடித்து நகர்ந்தனர். பிறகு ஜெயாவின் தனி நடனம். கரகோஷங்கள். தொடர்ந்து அனு அங்ஞா மஸாய் நடனம். கரகோஷங்கள்.

மேடையில் வெளிச்சம் மங்கி மீண்டும் ஒளி பெற, ஜெயா மேடையில் மெல்ல நடப்பது போன்ற நகர்வு கொண்டிருக்கிறார். அனு அங்ஞா மற்றொரு திசையில் தனது முறையில் நகர்கிறார். இருவரும் சந்திக்க நேரிடுகிறது. அனு அங்ஞா தனது உடலில் ஒரு அலை எழுப்பி, ஒருவித பாவனை காட்ட, ஜெயா தனது முறையில் அதற்கு இணையான பாவனை செய்து காட்டுகிறார். அரங்கம் கைதட்டலிலே அதிர்கிறது.

https://telegram.me/aedahamlibrary

தொடர்ந்து ஜெயா தனது முறையில் மற்றொரு பாவனை செய்து காட்டுகிறார். நிசப்தம். அனு அங்ஞா அதற்கு இணையான உடல் மொழி ஒன்றை மஸாய் முறையில் செய்து காட்ட அரங்கம் அதிர்கிறது. இப்படியாக இவர்களது விளையாட்டு சுவாரஸ்யமாகத் தொடர்கிறது. பின் இருவருமாக சேர்ந்து அரங்கிற்கு தங்களுக்குரிய நடன முறையிலேயே நன்றி சொல்கின்றனர். இப்போது மெல்ல மஸாய் நடனத்திற்கான பின்னனி இசை எழுகிறது. அனு அங்ஞா அதற்கு அசைவுகள் கொடுக்க அதற்கு இணையானதை தன் முறையில் ஜெயா வெளிப்படுத்தி நடனமாடுகிறார்; ஒரு சில நொடிகளில் இசை, மெல்ல மெல்ல மாற்றம் கொண்டு 'டோலி தாரோ டோல் பாஜே' பாடலில் சென்று முடிகிறது. அதன் தாள கதிக்கு மஸாய் நடனமும் இந்திய நடனமும் ஒருசேரக் கலந்து உருக்கொள்கிறது. அரங்கம் இடைவெளியின்றி தொடர்ந்து கைதட்டிக்கொண்டிருக்க, இரு நடன முறைகளுக்கான பரஸ்பர மரியாதை செலுத்தப்பட்டு, இந்த ஒரு மணிநேர நடன நாடகம் பெரும் கொண்டாட்டமாகி உச்சத்தை அடைகிறது.

நிகழ்ச்சி நிறைவு கொள்கையில் அரங்கம் முழுவதும் ஒருவித பரவசம் பரவிக் கிடந்ததை உணர முடிந்தது. நடன முடிவில் இருவரும் தத்தமது நடன முறை குறித்து சில வரிகள் பேசினர்.

அனு அங்ஞா மஸாய் நடனம் குறித்துக் கூறியவை:

மஸாய் பழங்குடியினர் கால்நடைகளைச் சார்ந்த வாழ்க்கை முறையைக் கொண்டவர்கள். அந்த வாழ்வின் சாராம்சக் கூறுகளே நடனமாக வெளிப்படுத்தப்படுகிறது. போர் வீரர்கள் தங்களது உடல் வலுவினை வெளிப்படுத்திக் காட்ட ஆடும் நடனம் இது. இதில் அதிக உயரம் எழும்பிக் குதிக்கும் மனிதர், வீரராக, ஆண்மை மிக்கவராக உணரப்படுவதாலேயே அதிகம் எழும்பிக் குதிக்கும் அசைவுகள் இடம் பெற்றிருக்கின்றன. இது ஒரு வகையில் பெண்களைக் கவர்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

அனு அங்ஞாவின் உடற்கட்டு அபாரமானதாகக் காட்சியளித்தது. சதைப்பற்று அற்ற, கச்சிதமான கட்டமைப்பும், தசை வடிவமும் பெற்ற, வலிமையும் ஆற்றலும் உடைய, இறுகி முறுக்கேறிய உடல். கிட்டத்தட்ட ஒரு மணிநேரம் எழும்பிக் குதிப்பதும், அடிவயிற்றில் துவங்கி உடல் முழுவதும் ஒருவித அலை எழுப்பி, கழுத்தினை முன் நீட்டி சுவாசத்தினை வெளியேற்றி, மீண்டும் கழுத்தினை உள் இழுத்து, அடிவயிற்றினை நோக்கித் திரும்பும் மாற்று அலையில் முடித்து, காலின் விரல் நுனிகளில் நின்றும் நகர்ந்தும், அவர் நிகழ்த்திக் காட்டிய மஸாய்

https://telegram.me/aedahamlibrary

நடனம் முடிவடைந்தபோது அவர் உடலில் அரும்பி வழிந்த வேர்வைத் துளிகள் மேடையில் உதிர்ந்து ஈரம் சேர்க்கத் துவங்கியிருந்தன. ஒருவகையில் அங்கிருந்த அனைவருமே வேர்வையின் பளபளப்பில் மினுங்கிக்கொண்டிருந்த அவரது உடலினைப் பார்த்துப் பிரமித்திருந்தனர் என்றே சொல்ல வேண்டும்.

இதற்கு நேர் எதிராக, வளைவும் குழைவும் மிக்க உடல்வாகும், முக பாவனைகளில் பரவசமும் காட்டி மீளும், ஒவ்வொரு அசைவிலும் நளினமும் வேகமும் கூடிப் பிரியும் அழகிய நடன முறை ஜெயாவினுடையது. அவர் பேசத் துவங்கியபோது, தனது ஆங்கிலம் அவ்வளவு வளம் கொண்டது அல்ல என சொல்லி, இந்தியாவின் நடன பாரம்பரியம் விரிவுமிக்கது என்றும், மதத்துடன் பின்னிப் பிணைந்தது என்றும், தான் சாஸ்த்ரீய நடனத்துடன், தற்போது உலகமெங்கும் பிரபலமாக இருக்கும் பாலிவுட் நடனத்தையும் சற்றுக் கலந்து இந்த நிகழ்ச்சிக்காக அமைத்ததாகவும் கூறிய அளவில் முடித்துக்கொண்டார்.

எனக்கு இத்தகைய கலாச்சார நிகழ்வு ஒன்றில் ‘பாலிவுட்’ பயன்பாடு சற்றே நெருடலாகத் தோன்றியபோதும், அவர் பயன்படுத்திய பாடல், ஹம் தில் தே ச்சுக்கே ஸனம் படத்தில் இடம்பெறும் ‘டோலி தாரோ’ என்ற விசேஷமான பாடலாக இருந்தாலும், உண்மையில் அந்த நெருடல் தெரியாத அளவிற்கு இரு வேறு துருவங்களைச் சேர்ந்த நடன முறைகள் தங்கள் தனித்தன்மைகளை இழந்துவிடாமலேயே இணைந்த அந்த சந்தர்ப்பம் உன்னதமாகத் தோன்றியதாலும், பரவசப்பட்டுப் போயிருந்தேன். ஓம்பால் சிங், தனக்குப் புரிந்த அளவில் ஏதோ சொல்லி, வார்த்தைக்கு ஒரு தடவை ‘பஹுத் அச்சா’ என முணுமுணுத்தபடி இருந்தார்.

சரி, இதற்கும் குழந்தை வளர்ப்புமுறைக்கும் என்ன சம்பந்தம்? சொல்கிறேன்.

கிட்டத்தட்ட, இருநூறு பார்வையாளர்களைக் கொண்ட அந்த அரங்கில் நானும் ஓம்பால் சிங்கும் மட்டுமே இந்தியர்கள்! மற்ற யாவரும், ஐரோப்பியர்கள் மற்றும் பொருளாதாரத்தில் உயர் தட்டை எட்டிய சில மலாவியர்கள். இத்தனைக்கும் எண்ணிக்கையளவில் ஐரோப்பியர்களை விட இந்தியர்களே மலாவியில் அதிகம். உண்மையில் நான் மலாவி வந்த நாள் முதலாய் அத்தனை ஐரோப்பியர்களை ஒருசேரக் கண்டது அதுவே முதல் முறை.

நான் இந்த நிகழ்ச்சிக்குக் கிளம்பும்போது இங்கு பணிபுரியும் வட இந்தியாவை சேர்ந்த நண்பன் ஒருவனுக்கு போன் செய்து, வருகிறாயா

https://telegram.me/aedahamlibrary

என்று கேட்டேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தபடி ஐந்தரை மணிக்கு மேல் இங்கே மலாவியில் அதிகம் அலைந்து திரிய முடியாது. கார் இருந்தால் மட்டுமே வெளியே செல்ல முடியும். தெருமுனையில் இருக்கும் வீட்டிற்குக்கூட நடந்து செல்வது நடக்காத விஷயம். இந்த நிலையில் இந்தியர்கள் தொலைக்காட்சியை விட்டு எழுந்தால் வெளியே செல்வதென்பது, வாரம் ஒரு முறை காய்கறி போன்ற வீட்டுக்குத் தேவையானவற்றை வாங்குவதற்கும், இன்னபிற இந்தியர்கள் வீட்டுக்குச் செல்வதும் மட்டுமே. இந்த மற்றவர் வீட்டுக்குச் செல்வதில் இருவகை. அதாவது, ஒருவர் வீட்டுக்குத் தனியாகச் சென்று சாப்பிட்டு வந்தால் விசிட் என்றும், கூட்டமாகச் சென்று சாப்பிட்டு வந்தால் விருந்து என்றும் வழங்கப் பெறுகிறது. ஆக, இத்தகைய சூழலில் இந்த மாதிரி ஒரு நிகழ்ச்சி சற்று மாற்றமாக இருக்குமே என்ற எண்ணத்திலேயே அந்த வடஇந்திய நண்பனை அழைத்தேன்.

பதிலுக்கு, மாதம் ஒரு லட்ச ரூபாய்க்கு மேலாக சேமிப்பு என்ற சம்பளக் கணக்கில் வாழ்ந்துவரும், மலாவியில் ஆரம்ப நிலையில் இருக்கும் ஐ.டி. துறையில் உயர்பதவி வகிக்கும் அந்த நண்பன் கேட்கத் துவங்கிய கேள்விகள்:

நுழைவுக் கட்டணம் எவ்வளவு?

சாப்பாடு உண்டா?

இந்த நிகழ்ச்சியை ஏன் வார இறுதியில் வைத்துக்கொள்ளக் கூடாது?

நான் திணறிப் போய்விட்டேன். தொடர்ந்து இதே ரீதியில் பேச்சு தொடர, நாகரீகம் கருதி தொலைபேசியைத் துண்டிக்கவும் முடியாமல் அவஸ்தைப்பட்டேன். சம்பந்தமில்லாதவர்களை அழைப்பானேன்; பிறகு அவர்கள் கேள்விகள் கசக்கின்றன என்று சொல்வானேன் என்கிறீர்களா? இதற்கு என் பதில்... ஒன்றுமேயில்லை! முழுக்க முழுக்க என் தவறுதான், ஏதோ ஆர்வத்தில் செய்துவிட்டேன்.

இது ஏதோ எனக்கு ஏற்பட்ட புது அனுபவம் அல்ல; இது போன்ற முக்கியமான நிகழ்ச்சிகளுக்கு, இலக்கியக் கூட்டங்களுக்கு, திரைப்பட விழாக்களுக்கு நண்பர்களை அழைத்துப் பார்த்தால் இந்தியாவில் யாருக்கும் இத்தகைய அனுபவம் கைமேல் பலனாகக் கிட்டும். இதை ஒரு விளையாட்டாக எண்ணிக்கூட முயற்சித்துப் பார்க்கலாம். காரணம், இன்றளவில் இந்தியர்களின் மனம் இயங்கும் முறை இப்படியே அமைந்திருக்கிறது.

முதலில் எவ்வளவு செலவு என்ற பணம் தொடர்பான கேள்விகள், யோசனைகள். பிறகு அந்தப் பணத்தை செலவு செய்தால் அதன்

https://telegram.me/aedahamlibrary

பலனாக என்ன கிட்டும் என்ற எண்ணம். இந்த கிட்டுதல், அடைதல் எல்லாம் லௌகீக அடிப்படையிலேயே இருக்க வேண்டும்; கலையின் அலகுகளைச் சார்ந்த அடிப்படையில் அல்ல. காரணம், லௌகீகம் மட்டுமே இதுவரை வாழ்வில் தன்முக அறிமுகம் கொண்டிருக்கிறது. அந்த லௌகீக கணக்கின் அடிப்படையிலேயே உணவு பற்றிய எண்ணம் முளைவிடுகிறது; பிறகு இதைத் தொடர்ந்து அவ்வளவு பணமும் நேரமும் பிரயாசையும் கொள்வதற்கு இன்னும் சிக்கனமாக வீட்டிலேயே சமைத்துச் சாப்பிட்டுவிடலாமே என்ற எண்ணம் கிளைவிடும்; அந்த எண்ணத்தை எதிர்கொள்ள நடைமுறைச் சிக்கல் என்று எதையாவது மனம் முன்னகர்த்தும். நாளை அலுவலகம் செல்ல வேண்டும்; மற்றொரு வேலை இருக்கிறது; வேறொரு நண்பனை சந்திக்க வேண்டும்; தொலைக்காட்சியில் இந்த நிகழ்ச்சி தவறிப் போய்விடும் என்று ஏதோ ஒரு உப்புசப்பில்லாத காரணத்தை மனம் தேடித் துழாவும். பிடி கிடைத்தவுடன் அதனைப் பற்றிக் கொண்டு நிம்மதி பெற்று, போகத் தேவையில்லை என்று முடிவு எடுத்தல் எளிமையாகக் கைகூடி நிற்கும்.

இப்படிப்பட்ட இயங்குமுறை கொண்ட மன அமைப்பு எப்படி உருவாகிறது என்று யோசித்தால், நம் குழந்தை வளர்ப்பு முறை வரை சென்றாக வேண்டியிருக்கிறது.

எல்லா பெற்றோர்களும் தங்கள் குழந்தைகள் தன்னைப் போல் சிரமப்படக் கூடாது; வாழ்வினை நல்ல முறையில், நல்ல நிலையில் வாழ வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்களாக இருக்கின்றனர். ஆனால் பிரச்சினை, 'நல்ல வாழ்வு முறை என்றால் என்ன?' என்று இவர்கள் புரிந்து வைத்திருப்பதில் உள்ள பிழையிலிருந்து துவங்குகிறது. ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று படித்தால் பொருளாதாரம் முதல் சகல விதமானவற்றிலும் சுபம் கூடிச் சிறக்கும் என்று நினைக்கிறார்கள். அதன் நோக்கில், மூன்று வயது முதல் குழந்தைகளை இவர்கள் படுத்தும் பாடு மிகக் கொடுமையானது. குழந்தைகளின் படிப்பு என்பது பெற்றோர்களிடையே போட்டா போட்டி, தற்பெருமை என்ற அளவில் சென்று ஒவ்வொரு குழந்தைகளுக்குமான தனித்தன்மை அழிந்து, (ணீ +தீ) 2=ணீ 2+தீ 2+2ணீதீ என்ற சூத்திரத்தை எந்தப் பிள்ளை முதலில் மனப்பாடம் செய்து ஒப்பிக்கிறதோ அதுவே சிறந்த பிள்ளை என்ற ரீதியில் முடிகிறது.

ஒருவேளை, ஒரு சிறுவனுக்கோ சிறுமிக்கோ இசையின் நுண்ணிய அதிர்வுகளை உள்வாங்கும் திறன் இருக்கலாம்; இல்லை, வண்ணங்களின் கோர்வையின் மேல் கவனம் இருக்கலாம்; உடல்

https://telegram.me/aedahamlibrary

வலிமை சார்ந்த விளையாட்டுகளில், போட்டிகளில் ஆர்வம் இருக்கலாம். - அவை யாவும் நமது பள்ளிக்கூடங்களில் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டு, மறைமுகமாகப் புறக்கணிக்கப்பட்டு ஏட்டுக் கல்வியே முதன்மைப்படுத்தப்படுகிறது.

வாழ்க்கைக்குக் கல்வி இன்றியமையாதது என்பதில் மறுப்பதற்கு ஒன்றுமில்லை. ஆனால் என்ன மாதிரி கல்வியினை நாம் அளித்துக்கொண்டிருக்கிறோம் என்பது கேள்விக்குரியதாக இருக்கிறது. நமது கல்வி முறை, பாவனையில் மேற்கத்தியத் தன்மை கொண்டது; அதுவும் பாவனை மட்டுமே. உள்ளபடி, பெருகி வரும் மக்கள் தொகையின் காரணமாக, கல்விக்கூடங்கள் எண்ணிக்கையில் அதிகமாகி, அவை அடிமுட்டாள்களை ஆசிரியர்கள் எனவும், பேராசரியப் பெருமக்களெனவும் கொண்டு இயங்கி வருகிறது. இத்தகையவர்களின் வடிவமைப்பில், கவனிப்பில், பாடத்திட்டங்கள், பயில்விக்கும் முறைகள் என கல்வி சம்பந்தப்பட்ட யாவுமே காலாவதியாகிப் போன, உபயோகமற்ற பாடாவதி சரக்காகவே எஞ்சுகிறது. இதன் மூலம் மனப்பாடம் செய்து ஒப்பித்தல் என்ற விஷயமே ஆகச் சிறந்த மதிப்பெண்ணுக்கு வழி என்ற நிலையில் அசலான கல்வி சீரழிந்து, சிந்தனை வறண்டு சுருங்கிப் போகிறது. சிந்தனையை விரிவுபடுத்துவதற்குத் தேவையான கலை, இலக்கியம், தத்துவம் யாவும் மிக மோசமான முறையில், அர்த்தமற்ற வெற்றுச் சொற்களாகவே கற்பிக்கப்படுகின்றன. சமகாலத்து இலக்கியத்தை விடுங்கள், பாரதியைக்கூட எவ்வளவு மோசமாக அறிமுகம் செய்ய முடியுமோ அவ்வளவு மோசமாகவே பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறோம்.

நான் நான்காம் வகுப்பு படிக்கும்பொழுது பள்ளியில் ஒரு பட்டிமன்றம் வைத்தார்கள். தலைப்பு - பாரதியின் கவிதைகளில் நிறைந்திருப்பது தேச பக்தியா? தெய்வ பக்தியா?

என்ன ஒரு தலைப்பு கவனித்தீர்களா? இத்தலைப்பை விட ஒருவர் பாரதியை இழிவுப்படுத்திவிட முடியுமா? ஆன்மீகமாக இருந்தாலும், அரசியலாக இருந்தாலும் தன் ஒவ்வொரு எழுத்திலும் விடுதலை உணர்வையும், சுதந்திரத்தையும் சாரம்சமாக்கி முன் வைத்தவன் பாரதி. வேண்டுதல் முறையில் எழுதப்பட்ட கவிதையில் கூட, மானுட வாழ்வின் ஆகச் சிறந்தவைகளைப் பட்டியலிட்டு ‘இவை அருள்வதில் உனக்கெதும் தடை உளதோ’ எனக் கடவுளுக்குச் சரி சமமாக நின்று கேட்டவன். ஆன்ம பலத்துடன், காதலுடன், ஞானச்செருக்குடன் கடவுள் என்ற பதத்தை அணுகியவன். அவனை மாரியம்மன் கோவில் விழாவில்

https://telegram.me/aedahamlibrary

அலகு குத்தும் பக்தனுக்கு இணையாக வைத்துத் தலைப்பிட்டாயிற்று. இனி இதன் பேரில் நான்காம் வகுப்புப் பிள்ளைகள் அர்த்தம் விளங்காமலேயே எழுதி கொடுக்கப்பட்ட விவாதங்களை மனப்பாடம் செய்து ஒப்பிப்பார்கள். இதற்குச் சிறந்த ஒப்பித்தல் திறன் உள்ள ஆறு பிள்ளைகள் தேர்ந்தெடுக்கப்படுவர். பரிசுகள் பெற்று அவர்களே சிறந்த பிள்ளைகள் என்ற வகைப்படுத்துதலும் நடக்கும்.

துரதிர்ஷ்டவசமாக அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு பிள்ளைகளில் நானும் ஒருவனாக இருந்தேன். மனப்பாடம் செய்து பேசினேன். என் வகுப்பில் சுப்பிரியா என்ற பெயர் கொண்ட ஒரு பெண் இருந்தாள். அந்தப் பெண்ணால் பாரதி எட்டையபுரத்தில் பிறந்தார் என்ற சாதாரண தகவல் கொண்ட வரியையே உணர்ச்சி பொங்க ஆவேசமான குரலில் ஒப்பிக்க முடியும்! பேச்சுப் போட்டியென்றால் துவக்கம் முதல் இறுதி வரை மைக் ஒன்று இருப்பதை மறந்து முழு வீச்சில் சத்தமாக, உடல் அதிரப் பேசும் அந்த பெண்ணுக்கே முதல் பரிசு கிடைக்கும். மூன்று நிமிட கால அளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கும் போட்டிகளில் இரண்டாவது நிமிடம் தாண்டுமா என்ற அளவில் மூச்சு வாங்கத் துவங்கும் என்ற போதும் சமாளித்து முழு வீச்சில் தன் பேச்சினை நிறைவு செய்துவிடுவாள். என்னால் அவ்வளவுக்கெல்லாம் ஈடு கொடுக்க முடியாது. ஓரிரு இடங்களில் மட்டுமே குரல் உயர்த்திப் பேசுவேன். எனவே எனக்கு எப்போதும்-- இரண்டாவது பரிசு. மற்றபடி பேச்சின் உள்ளடக்கம்? அந்தக் கண்றாவியை எல்லாம் யார் கவனித்தது?

இந்தப் பட்டிமன்றத்தினைப் பொறுத்தவரை நான் தேசபக்தி, அவள் தெய்வ பக்தி. பட்டிமன்றம் இரண்டு முறை நடைபெற்றது. முதல் முறை, எங்கள் பள்ளியின் மற்றொரு கிளைப் பள்ளியில். பிறகு இன்னொரு சுபதினத்தில் எங்கள் பள்ளியில் இரண்டாவது முறை. முதல் முறை தீர்ப்பு தேசபக்தி என்று வழங்கப்பட்டது. உலகக் கோப்பை வென்ற சந்தோஷத்தில் நானும் என் அணியினரும் உலா வந்தோம். சுப்பிரியா அழுதுகொண்டிருந்தாள்.

இரண்டாவது முறை எங்கள் பள்ளியில் நடந்தபோது, நண்பர்களிடம் ஏற்கனவே கிடைத்த வெற்றியின் பெருமையைச் சொல்லி நாங்கள் எதிர்பார்ப்புடன் காத்திருக்க, தீர்ப்பு தெய்வ பக்தி என்று மாற்றி வழங்கப்பட்டது! நான் ஆசிரியர்கள் அறைக்குச் சென்று 'இது எப்படி மாறலாம்' என்று புகார் செய்தேன். 'அதுதான் ஏற்கனவே ஒருமுறை உங்கள் அணிக்குச் சாதகமாகத் தீர்ப்பு வெளியாகி விட்டதே-?' என்ற சமாதானம் பதிலாகக் கிடைத்தது. அன்றளவில் நான்காம் வகுப்பு படித்துக்கொண்டிருந்த எனக்கு, இது எல்லாம் சும்மா விளையாட்டு,

https://telegram.me/aedahamlibrary

பாரதி பற்றின அசல் கேள்வியெல்லாம் இல்லை என்பது புரியவில்லை. தீர்ப்பு மாறியதில் ஆச்சரியமும் தோல்வியின் கோபமும் மனதில் அலைக்கழித்துக்கொண்டிருந்தது. ஆனால் இன்று கவனிக்கையில், தமிழர்களின் அறிவுப்பசிக்கு வடிகாலாகச் செயல்படும் பண்டிகை நாள் பட்டிமன்றங்களிலும், அரட்டை அரங்கங்களிலும் உள்ள அசட்டுத்தன்மை எனக்கு அன்றே முதன் முதலில் விளங்கத் துவங்கியது என்று நினைக்கிறேன்.

தவிர, பிறந்தது முதல் பெற்றோரின் அரவணைப்பில் வளரும் பிள்ளைகளுக்குத் தனக்காகவே பெற்றோர் தங்கள் வாழ்வை மேற்கொண்டிருக்கிறார்கள்; தான் அதற்கு நியாயம் சேர்க்க வேண்டும் என்பது போன்ற பொறுப்பு, பாரம், அவற்றை எதிர்கொள்ளும் சவால் முதலியவை சிறுவயது முதலே ஏற்பட்டுவிடுகிறது. இது மனதளவில் ஒரு பிள்ளையின் சுதந்திரத்தை மேலும் முடக்குவதாகவே இருக்கிறது. இந்தத் தளையிலிருந்து பிள்ளைகள் வளர்ந்த நிலையிலும் விடுபடுவதில்லை.

இதற்கு நேர் எதிர் நிலையில் - அதிக கவனிப்பு இல்லாமல் கஷ்டமான சூழ்நிலையில் - ஆனால் - சுதந்திரமாகத் தெருவில் ஓடி விளையாடி, புரண்டு எழுந்து தன் போக்கில் வளரும் சேரிக் குழந்தைகள், தங்களுடைய சிறு பிராயத்தில், கல்விக்கூடங்களுக்குச் சென்று உபயோகம் அற்றதை முயன்று பயிலும் சிறுவர்களைவிட ஒப்பீட்டளவில் அதிக நடைமுறை அறிவு உள்ளவர்களாக இருப்பதை கவனித்திருக்கிறேன். என்றபோதும் போகப் போக பொருளாதாரச் சிக்கல்களினாலும், நம் சமூகக் கட்டமைப்பு முதல் வரிசையிலுள்ள ஆறு பிள்ளைகளுக்கான பக்குவத்தையே அங்கீகரிக்கும் வகையில் அமைந்திருப்பதாலும், இவர்கள் மெல்ல மெல்ல பள்ளி சென்று திரும்பும் பிள்ளைகளின் வாழ்க்கை முறையினை நோக்கிய ஏக்கம் கொண்டவர்களாக வளர்கிறார்கள். ஆக இவர்களின் உலகமும் விரிய வாய்ப்பின்றி சுருங்கிப் போகிறது.

மொத்தத்தில், இந்தியர்களின் மன அமைப்பு இந்த முறையில், சிறு வயது முதலாய் அசல் அறிவு, சிந்திக்கும் முறைகள் போன்றவை புறக்கணிக்கப்பட்டு சின்னஞ்சிறு வட்டத்துக்குள், அந்த வட்டம் ஏற்படுத்து தடை அரண்களுடன் உருவாக்கம் கொள்கிறது. பின்னாளில் அது இந்தியாவில் வாழ்ந்தாலும், மலாவியில் வாழ்ந்தாலும், பிற எந்த நாட்டுக்குச் சென்றாலும் வித்தியாசம் எதுவும் இருப்பதில்லை. நத்தை தன் கூட்டுக்குள் வசிப்பதுபோல் இத்தகைய மன அமைப்புடனே இந்தியர்கள் தங்கள் வாழ்வில் மெல்ல நகர்ந்து செல்ல நேரிடுகிறது.

https://telegram.me/aedahamlibrary

வாழ்வது எந்த நாடாக இருந்தாலும் அவர்களின் முதுகிலேயே-சுருங்கி உள்ள சுருண்டுகொள்ள வசதியாய் அமர்ந்திருக்கிறது கூடு. அதுவே மனிதனுக்கு இயற்கையான பாதுகாப்பு என்ற எண்ணம் ஆழமாக வேரூன்றி வளர்ந்திருக்கிறது. மீறிச் சென்று தடை அரண்களை உடைத்து வெளியேறி சுதந்திர சுவாசம் கொள்வதெல்லாம் பெரிய சவால்! சிலருக்கு மட்டுமே அதற்குத் தேவையான மனோபலம் வாய்க்கப் பெறுகிறது.

சகல உபகரணங்களும் கிடைக்கும் மலாவியில் வெட் கிரைண்டர் கிடைப்பதில்லை. விடுவார்களா தமிழர்கள்? தமிழ்நாட்டிலிருந்து விமானத்தில் தூக்கி வந்து மாவரைத்து இட்லி செய்து சாப்பிடுகிறார்கள். என்னைப் போன்ற ஒரு அரை கிராக்கு புத்தகங்களைத் தூக்கினால் அது வித்தியாசமாக ஆகிவிடுகிறது. தேவையற்ற பளுவை ஏற்றிக்கொண்டு வந்து விமானத்தில் கொடுக்கும் 40 கிலோ எடைச் சலுகையை வீணடிக்கிறானே என்று ஆச்சரியம் கொள்கிறார்கள். மும்பையிலிருந்து கென்யா வந்து, மலாவி சேரும் பதினாறு மணிநேர விமானப் பயணத்தில் காணுமிடமெல்லாம் புத்தகங்களை வைத்துக்கொண்டிருக்கும் ஐரோப்பியர்கள் இவர்களைக் கொஞ்சமும் சலனப்படுத்துவதில்லை. டிரவுசர் போட்டிருக்கும் ஐரோப்பியப் பெண்ணை நோட்டமிட்டு அவர்கள் கலாச்சார சீர் கேடுள்ளவர்கள் என்று எண்ணி மனதளவில் தங்களை உயர்த்திக்கொள்வதன் மூலம் ஆசுவாசம் தேடுகிறார்கள்.

இப்படியாக, பள்ளி நாள் முதலாய் தங்களுக்குள் விதைக்கப்பட்ட கனவாக இருந்துகொண்டிருக்கும் லட்சங்களில் இவர்கள் சம்பாதிக்க நேர்ந்தாலும் மனதளவில் மிஞ்சுவது வறுமை மட்டுமே. வறுமை எப்படிப் பார்த்தாலும் தேடுதலுக்கான காரணிகளை தன்னுள் கொண்டது அல்ல. எனவே இத்தகைய மன அமைப்பில் தேடுதல் மடிந்து, வாழ்க்கை உப்பு சப்பின்றி சுவாரஸ்யமற்றதாகி விடுகிறது. இதிலிருந்து தப்பிக்க அறிவின் இயக்கத்தினைக் கோராத கேளிக்கை தேவைப்படுகிறது.

ஆக வாழ்க்கையில் உண்பதையும் கழிப்பதையும் தவிர வேறு எதுவும் காணாத மனம், கலை விழா என்றால் சாப்பாடு இலவசமா என்று கேட்கிறது! சேமிப்பு சேமிப்பு என்று அரற்றுகிறது! விடுப்புக்காக ஏங்கி சினிமா முதல் கிரிக்கெட் வரை சகலத்திலும் பொறுமையின்றி கேளிக்கையைத் தேடுகிறது! எந்த நாட்டிலிருந்தபோதும் தான் சிலுவை போல் முதுகில் சுமக்கும் சின்னஞ்சிறு கூட்டுக்குள் சுருங்கி சுருண்டு கிடந்தபடியே மலட்டுத்தன்மையுடன் ஜீவித்திருக்கிறது!

இப்படியெல்லாம் பேசினால் ‘இந்தியாவைப் பற்றி மட்டும் ஏன் இப்படி

https://telegram.me/aedahamlibrary

மட்டம் தட்ட வேண்டும்? முழுக்க முழுக்க மேற்கத்திய உலகின் மேலிருக்கும் மோகம் இல்லையா? இந்தியா மட்டும்தான் பிரச்சினை மிக்க நாடா? தமிழை இகழ்ந்தவனை தாய் தடுத்தாலும் விடேன்' என்ற ரீதியில் கிளம்விவிடுகிறார்கள்.

இந்தியா என்ற நிலப்பரப்பினைப் பற்றிப் பேசுவோம் என்றால், அது மிகப் பெரும் ஞானிகளையும், சிந்தனையாளர்களையும், சரித்திர புருஷர்களையும் உருவாக்கிய நிலபரப்பு. கிருஷ்ணமூர்த்தி, விவேகானந்தர், ரமணர் என்றெல்லாம் பட்டியலிடத் துவங்கினால் முடிவு காண இயலாத அளவிற்கு விரிவும், ஆழமும் கொண்ட நிலப்பரப்பு. இலக்கிய வளத்திலோ இன்னபிற கலை வளங்களிலோ சற்றும் குறைவில்லாத நிலப்பரப்பு. இன்றும் உலகத்தரத்தில் தமிழில் படைப்புகள் எழுதப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. பாரதியையும் பிரமிளையும் நகுலனையும் தேவதச்சனையும் யாரும் புறக்கணித்து விட்டு சமகாலத் தமிழ் வாசிப்பில் எதையும் கண்டுவிட முடியாது. மேற்கத்திய மோகத்தின் அடிப்படையில் இவை அனைத்தையும் யாரும் விழத் தட்டவோ, ஒதுக்கிவிட்டு முன் நகரவோ நினைத்தால் அது அலையில் கால் நனைத்துப் பார்த்துவிட்டு கடலை மிதித்துக் கொன்றுவிட முடியும் என்று எண்ணுவதைப் போன்ற சிறுபிள்ளைத்தனமாகவே அமையும். இதில் சந்தேகம் என்ற வார்த்தைக்கே இடமில்லை.

நான் இங்கு கவனம் கொள்ள முயல்வது, இந்தியா என்ற நிலப்பரப்பில் இன்று உருவாகியிருக்கும், இந்தியர்கள், தமிழர்கள் என்று பெயரளவில் பெருமை பேசும், சம்மந்தமற்றவர்களைக் கொண்டாடும், அவர்களுக்குக் கோயில் கட்டும் - உண்மையில் உரியவற்றின் சிறப்பை அறியாத சமூகத்தின் மன அமைப்பு பற்றியே.

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமான உள்--சிக்கல் இருக்கும். அது மனிதனின் பார்வைக்கு உட்பட்டதையெல்லாம் அடையத் துடிக்கும் மனோபாவத்தைச் சார்ந்த பிரச்சினை. இதில் ஒரு நாட்டின் வாழ்வியல் முறைகளை, கலாச்சாரக் குறிப்புகளை, வெவ்வேறு நிலப்பரப்பினைச் சேர்ந்த மனங்களின் அடிப்படைக் கட்டுமானங்களோடு அருகருகே வைத்து கவனித்தால், எல்லா வகையிலும் உலகமயமாக்கல் விரவி வரும் இந்த நாட்களில் உபயோகமுள்ளதாக இருக்கக்கூடும் என்பதே என் எழுத்தின் ஆர்வம்.

இந்த அடிப்படையிலேயே ஒரு ஆஃப்ரிக்கரையும், ஒரு இந்தியரையும் கொண்டு வந்து ஒரு நடன நிகழ்ச்சியை ஃப்ரெஞ்ச் கலாச்சார மையம் ஏற்பாடு செய்கிறது. இந்த இரு கலைஞர்களும் வசிப்பதேகூட பிரான்ஸ்

https://telegram.me/aedahamlibrary

என்ற அயல் தேசத்தில் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் ஆர்வமுடன் பிற கலாச்சாரங்களை உள்வாங்க முயல்கிறார்கள். இதற்கு நேர் மாறாக, சிறுவயது முதலே உருவாக்கப்பட்ட தனது தடுப்புகளுக்குள் சுழலும் ஒரு மனமோ சிறந்தவற்றைத் தவிர்க்க விதண்டாவாதங்களையே முன்வைக்கிறது.

இந்த ரீதியிலேயே கலை முதல் வாழ்வின் சகலத்தையும் அணுகுகிறது. பிற தேசத்தைச் சார்ந்த கலாச்சாரங்களை விடுங்கள்; தம் தேசத்தின் சிறப்பான கலை அம்சங்களைக் கூட உள்வாங்கும் திறனை இவர்கள் மனம் இழந்துவிட்டிருக்கிறது. இது நீடித்தால் மலாவியக் கவிஞர்களை இங்கிலாந்து நூலகங்களில் தேடுவதுபோல இந்தியாவின் கலைஞர்களையும் வேறொரு நாட்டில்தான் தேட வேண்டியிருக்கும்.

சிறு வயது முதல் இத்தகைய கடுமையான அடைப்புக்குள்ளாயிருக்கும் மனதில் சிறு சிறு சாளரங்கள் திறக்க, இன்றைய புத்தக விழாக்களும், பதிப்பகங்களின் முன்னேற்றமும், பல நேரங்களில் குப்பைகள் என்றாலும், சில உபயோகமுள்ள, குறிப்பாக முக்கிய எழுத்தாளர்களின் இணையதளங்களும் வழி வகுக்கும் என்பதே நாளை பற்றிய எனது நம்பிக்கை.

குறிப்பாகத் தமிழ்ச் சூழலில் இத்தகைய சுதந்திரமற்ற மனதின் தடைகளை வெகுஜன எழுத்து மேலும் இறுகச் செய்கின்றது. தீவிர எழுத்தோ அந்த வெகுஜன எழுத்துடன் மோதுகிறது. இந்தப் போராட்டத்தில் அசல் எழுத்தாளர்கள் ஒருவகையில் சாக்ரடீஸ் போன்றவர்கள். கல்லடி மட்டுமே இத்தகைய சமூகத்தில் வெகுமதியாகக் கிடைக்கும் என்று அறிந்திருந்த போதும் தங்கள் வழியிலேயே சோர்வில்லாமல் தொடர்கின்றனர் அந்த எழுத்தாளர்ள். கல்லடிகளை வாங்கிக் கொண்டு, சுருங்கிக் கிடக்கும் கூட்டினை மீறிச் சென்றதில் தங்களுக்குக் கிடைத்த வானத்தின் சுதந்திரத்தை பிறர் புசிக்கத் தருகின்றனர். அப்படிச் செய்வதிலேயே சந்தோஷம் அடைகின்றனர். இதையே தங்களுக்கு வாழ்வு அளித்த மாபெரும் கொடையாக எண்ணுகின்றனர்.

இத்தகையை எழுத்தாளர்களை எந்தவிதமான வார்த்தையைக் கொண்டு விவரிப்பது! கருத்தியல் தளத்தில் ஆயிரம் வேறுபாடுகள், மனஸ்தாபங்கள் இருக்கலாம். அவையெல்லாம் வேறு. உண்மையில் இவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் எனக்கு ஒரே ஒரு வரிதான் தோன்றுகிறது.

இவர்கள் ஒவ்வொருவரும் பெரும் சாகஸக்காரர்கள்!

https://telegram.me/aedahamlibrary

அன்புடன்,

ஆனந்த்

¦

அன்புள்ள ஆனந்த்,

நீங்கள் குறிப்பிட்டிருக்கும் ஜெயா பச்சோடி, அனு அங்ஞா இருவரைப் பற்றியும் சிறிது படிக்க ஆரம்பித்தேன். அந்த நிகழ்ச்சியின் புகைப்படம் ஒன்றும் கிடைத்தது.

பிறகு யூட்டூபிலும் மஸாய் நடனத்தைப் பார்த்தேன். மஸாய் என்பது கென்யாவிலுள்ள ஒரு நாடோடி இனக்குழு என்று அறிகிறேன்.

இதுபோல் எண்ணற்ற நடனங்களை தில்லியில் பார்த்தது ஞாபகம் வருகிறது. ஃப்ரான்ஸ் செல்லும்போது இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்படுவேன். ஆனால் அங்குள்ள என்னுடைய இலக்கிய நண்பர்களோ உயிர்மை, காலச்சுவடு அ.மார்க்ஸ் என்ற அளவோடு நின்றுவிடுகிறார்கள். அவர்களைச் சொல்லியும் குற்றமில்லை. ரெஸ்தராந்துகளில் கோப்பைக் கழுவிப் பிழைக்க வேண்டியிருக்கும் விளிம்பு நிலையிலுள்ள அவர்கள் இம்மாதிரி நடன நிகழ்ச்சிகளுக்கு எப்படிச் செல்ல முடியும்?

அது ஒருபுறம் இருக்க, எங்கோ ஆஃப்ரிக்க கண்டத்திலுள்ள கென்யா என்ற தேசத்திலுள்ள மஸாய் இனக் குழுவினரின் மஸாய் நடனமும் ராஜஸ்தானிலுள்ள கதக் நடனமும் ஒன்றிணையும் அதிசயத்தை எண்ணி சிறிது நேரம் வியந்தேன். இதையெல்லாம் சென்னையிலுள்ள இலக்கியக் குஞ்சுகள் பார்த்தால் என்ன சொல்வார்கள் என்று ஒருக்கணம் தோன்றியது.

ஆனால், ஆனந்த், நீங்கள் சொல்வது போல் ஜெயா தன்னுடைய நடனத்தோடு சேர்ந்த ஹம் தில் தே ச்சுக்கே ஸனம் என்ற இந்திப் படத்தில் வரும் 'டோல் பாஜே' பாடலை வெறும் பாலிவுட் சமாச்சாரம் என்று எடுத்துக்கொள்ள முடியாது. இஸ்மாயில் தர்பார் என்ற பிரமாதமான இசையமைப்பாளர் இசையமைத்த அந்தப் பாடலும், நடனமும் ராஜஸ்தானின் கிராமிய நடன வகையைச் சார்ந்தது. அதைத்தான் இஸ்மாயில் தர்பார் பயன்படுத்தியிருக்கிறார்.

உங்கள் கடிதத்தில் எனக்கு ஒரு சந்தேகம்: இந்தியர்கள் தொலைக்காட்சி பார்ப்பார்கள் என்று எழுதியிருக்கிறீர்கள். எனக்குத் தொலைக்காட்சி பற்றி எதுவும் தெரியாது. கடந்த ஐந்தாறு ஆண்டுகளாக நான்

https://telegram.me/aedahamlibrary

தொலைக்காட்சியே பார்ப்பதில்லை. அங்கே இந்தியர்களுக்கு இந்தியத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் காணக் கிடைக்குமா? தமிழர்கள் சன் டி.வி. பார்க்க முடியுமா?

அடுத்து, உங்களுடைய வட இந்திய நண்பனைப் பற்றி எழுதியிருக்கிறீர்கள். இது சம்பந்தமாக எனக்குக் கொஞ்சம் சொல்ல இருக்கிறது. நான் பல ஆண்டுகளாக சராசரி மனிதர்களிடம் ஒரு ஹலோ கூட சொல்வதில்லை. நான் ஹலோ சொல்ல வேண்டுமானால் ஒன்று, அவர் இலக்கியவாதியாக இருக்க வேண்டும். அல்லது, இலக்கிய வாசகராக இருக்க வேண்டும். இந்த இரண்டு வகையினருக்கும் நான் பெரிதாக வித்தியாசம் பார்ப்பதில்லை. இலக்கியவாதிக்கு என்ன மரியாதையோ அதே மரியாதை இலக்கிய வாசகருக்கும் உண்டு. சொல்லப்போனால், சற்று கூடுதலாகவே உண்டு. மற்றபடி, இலக்கியம் அறியாதவர்கள் என்ன என்னிடம் பேசினாலும் நான் பதில் சொல்வதில்லை. காதில் விழாததுபோல் நகர்ந்துவிடுவேன். ஹலோ சொன்னாலும் பதில் கிடைக்காது. இதில் ஒரு சிறிதும் மனிதாபிமானம் பார்ப்பது கிடையாது. இதனாலேயே பலர் என்னை மூர்க்க குணம் படைத்தவன் என்று நினைத்துக்கொள்ள ஏதுவாகிறது.

ஆனால் உண்மையில் எனக்கு அம்மாதிரி மனிதர்களிடம் எந்த விரோதமும் கிடையாது. அவர்கள் உலகம் வேறு; என்னுடைய உலகம் வேறு என்ற புரிதல் மட்டும்தான் அவர்களிடமிருந்து என்னை ஒதுங்கச் செய்கிறது. இதை நான் பலவருட அனுபவத்துக்குப் பிறகே பின்பற்ற ஆரம்பித்தேன். அப்படி இல்லாமல் சற்றே அவர்களுடன் கூடச் செல்வீர்களானால் அவர்களுடைய மதிப்பீடுகளின் அடிப்படையில் எழும் கேள்விகளை உங்கள்மீது தேய்த்து ரணகளப்படுத்தி விடுவார்கள்.

உதாரணமாக, இந்தியர் ஒருவரிடம் நீங்கள் அறிமுகமானால் அறிமுகமான அடுத்த நிமிடமே நீங்கள் யார் என்று சொல்லியாக வேண்டும். சொல்கிறேன் என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் ஒரு எழுத்தாளன்.

சொல்லியாயிற்றா? இப்போது அடுத்த அடி விழும்.

‘ஓ... குமுதம் ஆனந்த விகடன்ல உங்களைப் பர்த்ததில்லையே? எந்தப் பத்திரிகையில் எழுதுவீர்கள்?’

உயிர்மை என்ற பத்திரிகையைப் பற்றி என் மனைவியின் தங்கையின் கணவரின் தகப்பனாரிடம் - அவர் மாநிலக் கல்லூரியில் கணிதப் பேராசிரியர் - விளக்குவது எவ்வளவு கொடுமையான விஷயம் என்பதை யோசித்துப் பாருங்கள். தாவு தீர்ந்துவிடும். அந்தப் பத்திரிகையைப்

https://telegram.me/aedahamlibrary

பற்றித் தனக்கு ஏன் தெரியாமல் போனது என்பதே அந்தக் கணிதப் பேராசிரியரின் அப்போதைய பிரச்சினையாக இருக்கும். கடைசியில் 10,000 பிரதிகள் மட்டுமே அச்சாகும் பத்திரிகை அது என்று விளக்குவேன். உடனே அவர் அதை ஒரு லட்சம் பிரதிகளாக மாற்றுவது எப்படி என்று எனக்கு விலாவாரியாகப் பாடம் எடுப்பார். மல்லாக்கத் தூக்கிப் போட்டு கொட்டையிலேயே உதைக்கலாமா என்று தோன்றும். ஆனால் அவரது நெற்றியில் துலங்கும் ஸ்ரீசூர்ணம் அந்த எண்ணத்தைப் போக்கிவிடும். இந்தக் கணிதப் பேராசிரியருக்குத் தெரிந்தது அந்த மனுஷ்ய புத்திரனுக்கு ஏன் தெரிந்து தொலைக்கமாட்டேன் என்கிறது என்று சீற்றம் கொள்ளும் மனதோடு அவரிடமிருந்து தப்பிக்கத் திட்டமிடுவேன். சராசரி மனிதனின் ஒரே ஒரு ஹலோவுக்கு பதில் ஹலோ சொன்னதால் நேர்ந்த கொடுமை. இதற்குப் பேசாமல் அவர் சொன்ன ஹலோ காதில் விழாதது போல் இருந்துவிட்டால், "அந்த அவந்திகாத்துகாரர் ரொம்பத் திமிர் பிடிச்சவர் போல்ருக்கே" என்ற அபவாதத்தோடு போய் விடும்.

இன்னும் இதுபோல் படுபயங்கரமான அனுபவங்களெல்லாம் இருக்கின்றன. அதனால் சராசரி மனிதர்களோடு வைத்துக் கொள்வதே இல்லை. ஆனால் இலக்கியவாதியாக இருந்தால் அவரோடு என்னதான் பிரச்சினையாக இருந்தாலும் பேசுவேன்; பழகுவேன்; சிநேகம் பாராட்டுவேன்.

உதாரணமாக, சில தினங்களுக்கு முன்பு வசந்த பாலனின் அங்காடித் தெரு என்ற படத்தின் பாடல் வெளியீட்டு விழாவுக்கு அழைக்கப்பட்டிருந்தேன். ஜெயமோகன்தான் அந்தப் படத்தின் வசனம். நாங்கள் இரண்டு பேரும் வெகு சிநேகமாகப் பேசிக்கொண்டிருந்ததைப் பார்த்த பல புகைப்படக்காரர்கள் அதை ஆச்சரியத்துடன் புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள். நாங்களோ நீண்டநாள் கழித்துச் சந்தித்துக் கொள்ளும் நெருங்கிய சிநேகிதர்களாகப் பேசிக்கொண்டிருந்தோம். "ரொம்ப இளமையாக இருக்கிறீர்கள்" என்றார். ஜெயமோகனை எப்படியும் ஆண்டுக்கு ஒருமுறை பார்த்துவிடுகிறேன். அப்படிப் பார்க்கும்போதெல்லாம் இதே கேள்விதான். சுந்தர ராமசாமியின் இரங்கல் கூட்டத்தில் சந்திக்க நேர்ந்தபோதும் இதே கேள்வியை வேறு மாதிரி கேட்டார் என்று ஞாபகம். இளமை என்பது 50 சதவிகிதம் தேக ஆரோக்கியம் சம்பந்தப்பட்டது. மீதி 50 சதவிகிதம் மனம் சம்பந்தப்பட்டது. மேல் விபரம், காமரூப கதைகளில் உள்ளது.

ஆஸ்திரேலியாவிலிருந்து அப்போதுதான் திரும்பியிருந்தார் ஜெயமோகன். புகைப்படக்காரர்கள் விழுந்து விழுந்து எங்கள்

https://telegram.me/aedahamlibrary

இருவரையும் புகைப்படம் எடுப்பதைப் பார்த்துவிட்டு “ரெண்டு எழுத்தாளர்களுக்குள் சண்டை என்றால் அதை புலிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எஃபுக்குமான சண்டை என்பதுபோல் புரிந்துகொள்கிறார்கள்” என்றார் சிரித்துக்கொண்டே. மேலும், ஆஸ்திரேலியாவில் பலரும் என்னை விசாரித்ததாகச் சொன்னார். (ஆனால் அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் என்பது வேறு விஷயம். அதை நானும் கேட்க மறந்து போனேன்).

எதிர்பாராத விதமாக என்னை மேடையில் அமர வைத்துவிட்டார்கள். மேடையில் முதல் வரிசையில் ஜெயமோகன். நான் அடுத்த வரிசைக்குப் போக எத்தனிக்கையில் ஜெயமோகன் தன்னுடைய இருக்கையை என்னிடம் கொடுத்துவிட்டு அவர் பின் வரிசைக்குச் சென்றார். இருக்கைக்கு நடக்கும் போட்டிகளைப் பற்றி நமக்குத் தெரியும். ஆனால் இலக்கியம் அதற்கு விதிவிலக்கு.

இலக்கியவாதி என்றால் இப்படித்தான் இருப்பான். அவனால் என்னதான் ஆனாலும் 10,000 கோடி ஊழலெல்லாம் செய்யவே முடியாது. பத்து லட்ச ரூபாயை ஒருசேரப் பார்த்தாலே அவன் கைகாலெல்லாம் ஆட ஆரம்பித்துவிடும். இதுதான் இலக்கியவாதிக்கும் சராசரிக்கும் உள்ள வித்தியாசம்.

நிகழ்ச்சி முடிந்து திரும்பும்போது தன் நண்பரின் காரில் என்னை அழைத்து வந்து என் வீட்டில் விட்டுவிட்டுச் சென்றார். உள்ளே தேத்தண்ணி குடிக்க அழைத்தேன். அன்புடன் மறுத்துவிட்டார். “சம்பிரதாயத்துக்காக அழைக்கிறேன் என்று நினைக்க வேண்டாம்; வந்துவிட்டுச் செல்லுங்கள்” என்று வற்புறுத்தினேன். அப்போதும் மறுத்துவிட்டார். வேறு அவசர வேலை இருந்திருக்கலாம். ஆனால் தக்கலையில் அவர் வீட்டு வாசலில் வைத்து அவர் என்னை அழைத்திருந்தால் எந்த வேலையாக இருந்தாலும் விட்டுவிட்டுச் சென்றிருப்பேன்.

இதற்கு அடுத்து நடந்ததுதான் பெரிய வேடிக்கை. அன்றைய தினம் என்னுடைய வழக்கமான வேலை அட்டவணை மாறிப் போனதால் எழுத மனமின்றி ஏதாவது படிக்கலாமே என்று ஜெயமோகனின் இணையதளத்தைத் திறந்தேன். அவருக்குப் பிடித்த இணையதளம் என்று ஒன்றை சிபாரிசு செய்திருந்ததால் அதற்குப் போனேன்.

விழுந்தது மாத்து.

குஜராத்தில் 2000 முஸ்லீம்கள் படு கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள் அல்லவா? அப்படியெல்லாம் நடக்கவே இல்லை என்று தகுந்த

https://telegram.me/aedahamlibrary

‘ஆதாரங்களோடு’ ஒரு கட்டுரை இருந்தது. பேய் பிசாசைக் கண்டது போல் ஓடி வந்துவிட்டேன். அந்த இணையதளத்தின் முகப்பில் ‘ஓம்’ என்ற வாசகம் இருந்தது. ஓம் என்பது இந்தப் பிரபஞ்ச சக்தியின் மூல இசை. பிரணவ மந்திரம். நான் தினமும் தியானம் செய்யும்போது இந்த ஒலியின் வேறோர் வடிவத்தையே சுவாசமாகக் கொள்கிறேன். ஆனால் மதத்தின் பேரால் நடந்த மகா பயங்கர பாதகச் செயலை ‘அப்படி நடக்கவே இல்லை’ என்று சொல்லும் இணையதளம் அந்தப் பிரணவ மந்திரத்தை - தெய்வீக அன்பின் குறியீட்டு வடிவத்தை - முகப்பில் அணிந்திருக்கிறது!

இதனால்தான் ஜெயமோகனை இந்துத்துவவாதி என்கிறேன். ஸ்லம்டாக் மில்லியனருக்கு அவர் எழுதியிருந்த விமர்சனத்தை இந்துத்துவத்தின் மேனிஃபெஸ்டோ என்றே சொல்லலாம். அப்புறம் இருக்கவே இருக்கிறது விஷ்ணுபுரம். ஆனால் ஜெயமோகனிடம் எனக்குப் பிடித்த விஷயம் என்னவென்றால், ஒரு இஸ்லாமியக் கல்லூரியில் அவர் ஆற்றியிருக்கும் உரை அ.மார்க்ஸின் உரையைப் போலவே இருக்கிறது. தீவிரமான இந்துத்துவ எதிர்ப்பு பொங்கித் ததும்பும் உரை அது. ஜெயமோகனின் தொகுப்பிலும் அந்த உரை உள்ளது. அவரால் மும்பையில் பொதுமக்களைக் கொன்ற பாகிஸ்தான் பயங்கரவாதி கஸாப் சார்பாகக் கூட நீதிமன்றத்தில் வாதாடி, கஸாபுக்கு விடுதலை வாங்கிக் கொடுக்க முடியும். அந்த அளவுக்குத் திறமையும், கெட்டிக்காரத்தனமும் கொண்டவர்.

நானோ அதற்கு நேர் எதிர். கோடி ரூபாயைக் கொடுத்தாலும் என் மனசாட்சி என்ன சொல்கிறதோ அதை மட்டுமே சொல்வேன். மும்பையில் உள்ள கேட் வே ஆஃப் இந்தியாவுக்கு எதிரில் கஸாபை ஒரு கல்தூணில் கட்டி வைத்து கல்லால் அடித்துக் கொல்ல வேண்டும் என்பதே என்னுடைய கருத்தாக இருக்கும். நம் எல்லோருடைய கனவும் ஜனநாயகம்தான். இப்போதைய காட்டுமிராண்டி சமூகத்தில் ஜனநாயகரீதியான நீதி பரிபாலனம் செய்தால் ‘கஸாபுக்கு 15 வயதுதான் ஆகிறது; அதனால் அவரை சிறுவர் நீதிமன்றத்தில்தான் விசாரிக்க வேண்டும்’ என்றுதான் வாதிடுவார்கள். இல்லாவிட்டால் இந்தி சினிமாவில் வருவதுபோல் யாராவது ஒரு மத்திய மந்திரியின் மகளைக் கடத்திக்கொண்டு போய் காந்தஹாரில் வைத்துக்கொண்டு “கஸாபைக் கொண்டு வந்து எங்களிடம் ஒப்படையுங்கள்” என்று நிபந்தனை விதிப்பார்கள் பயங்கரவாதிகள்.

விஷயம் வேறு எங்கோ போய்விட்டது. சொல்ல வந்தது இதுதான். இலக்கியவாதியோடு எவ்வளவு தகராறு இருந்தாலும் சிநேகம்

https://telegram.me/aedahamlibrary

பாவிக்கலாம். ஆனால் சராசரிகளோடு மல்லாட முடியாது. அந்த வட இந்திய சராசரியோடு நீங்கள் மல்லாடியதைப் படித்ததும் எனக்கு வேறோர் சம்பவம் ஞாபகம் வருகிறது. உங்களைப் போல் நானாக அவர்களிடம் வம்புக்குப் போக மாட்டேன். ஆனால் அவர்களாக என் உலகத்தில் அத்துமீறினால் உண்டு இல்லை என்று பண்ணி விடுவேன்.

இந்த மாத உயிர்மையில் யுவன் சந்திரசேகர் என் மீது வீசியிருந்த அவதூறுக்கு நான் எழுதிய பதில் எப்படி வந்திருக்கிறது என்று அறிந்துகொள்ளும் ஆர்வம் நான் உயிர்மைக்குக் கட்டுரையை அனுப்பிய நாளிலிருந்தே தொற்றிக்கொண்டது. ஒவ்வொரு நாளும் மே முதல் தேதி உயிர்மை வரும் நாளையே எதிர்பார்க்கத் தொடங்கியது மனம். எதிர்பாராத விதமாக இரண்டு தினங்கள் முன்பே வந்துவிட்டதாக அறிந்து உயிர்மை அலுவலகத்துக்குக் கிளம்பினேன். அப்போது நான் அவசரமாக மாயவரம் வேறு கிளம்ப வேண்டும். ரொம்ப அவசரம். “ஏன், மாயவரம் போய்விட்டு வந்து பிறகு வாங்கிக் கொள்ளலாமே உயிர்மையை?” என்றான் ஒரு நண்பன். சராசரிகளின் உலகத்தைச் சேர்ந்தவன்.

“போடா முட்டாக்கூதி” என்று திட்டிவிட்டு உயிர்மை அலுவலகத்துக்குக் கிளம்பினேன். அவன் என்னை ‘மெண்டல்’ என்றுதான் நினைத்திருக்க வேண்டும். இருந்தாலும் பரவாயில்லை. இனிமேல் அப்படிப் பேச மாட்டான்.

உங்கள் பள்ளியில் நடந்த பட்டிமன்றம் பற்றியும் சுப்பிரியா பற்றியும் படித்தபோது சமீபத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தில் நடந்த பேச்சுப்போட்டிக்கு நான் நடுவராகச் சென்றிருந்தபோது கண்டதைப் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று தோன்றுகிறது.

வளாகத்தில் நுழைந்ததும் வாந்தியெடுக்கும் உணர்வே முதலில் ஏற்பட்டது.

அவ்வளவு ஆபாசம்; அருவருப்பு. ஏதோ ஒரு கலை விழா. இங்கே தமிழ்நாட்டில் கலை என்றாலே சினிமா என்றுதானே அர்த்தம்? வளாகம் எங்கும் திரும்பின இடமெல்லாம் சினிமா மிமிக்ரி நிகழ்ச்சி. ஒருவர் விஜயகாந்த் மாதிரி பேசிக்கொண்டிருந்தார். மாணவ மாணவிகள் கைதட்டிக்கொண்டிருந்தனர்.

பாரிஸ் ஸோர்போன் பல்கலைக்கழகத்தில் நான் கண்ட காட்சிகள் நினைவுக்கு வந்தன.

பேச்சுப்போட்டி. திருமணத்துக்கு முன் காதல் சரியா? தவறா? பட்டிமன்றம் அல்ல. பேச்சுப் போட்டி. முதல் பிரிவில் 20 பேர். அடுத்த

https://telegram.me/aedahamlibrary

பிரிவில் 20 பேர். அனைத்துக் கல்லூரிப் போட்டி என்பதால் சென்னையிலுள்ள எல்லாக் கல்லூரி மாணவர்களும் அங்கே குழுமியிருந்தனர். ஆனால், ஸ்டெல்லா மாரிஸ், லயோலா ஆகிய கல்லூரி மாணவர்கள் மட்டும் இல்லை.

அந்த 40 பேரில் 35 பேர் நீங்கள் குறிப்பிடும் சுப்பிரியா போலவே மைக்கை எடுத்து காட்டுக் கூச்சல் போட்டார்கள். பேச்சின் நடுவே கவிதை வேறு. கவிதை என்றால் கேட்க வேண்டுமா? எவ்வொரு வரியையும் இரண்டு இரண்டு தடவைச் சொல்லி ஆட்களைக் கொன்றார்கள். அதைவிடக் கொடுமை, பாட்டு வேறு. கம்ப ராமாயணமா? சே, சே... சும்மா சினிமாப் பாட்டு. கொடுமையிலும் கொடுமை, அதைத் தங்களுடைய கழுதைக் குரலில் பாடி வேறு காண்பித்தார்கள். ஒரு கட்டத்தில் நான் பொறுமை இழந்து "இது பாட்டுப் போட்டி அல்ல; பேச்சுப் போட்டிதான். அதனால் யாரும் பாட்டைப் பாடிக் காண்பிக்க வேண்டாம்; பாட்டை மேற்கோள் காட்ட வேண்டியிருந்தால் வெறுமனே உரைநடையாகச் சொன்னால் போதும். மேலும், ஆர்க்கெஸ்ட்ரா இல்லாமல் பாட்டைக் கேட்பது என்னவோ போல் இருக்கிறது" என்று சொல்லி அவர்களுடைய பாட்டை நிறுத்திவிட்டேன்.

இதையெல்லாம் செய்தது மாணவர்கள் அல்ல; மாணவிகள்தான். அதுதான் என்னைப் பெரிதும் ஆச்சரியப்படுத்தியது. பார்ப்பதற்கு தேவதை போன்ற தோற்றம். ஆனால் வாயைத் திறந்தால் அபத்தத்தின் உச்சம். கீச்சுக் குரலில் கட்டிடமே அதிர்வது போல் கத்துவது; பாடுவது; செயற்கையான பாவத்துடன் டி.வி. சீரியல் நடிகைகளைப் போல் பேசுவது என்று பல்வேறு விஷயங்களை அவர்களிடம் கண்டேன். பார்க்க எவ்வளவுக்கெவ்வளவு அழகோ அவ்வளவுக்கவ்வளவு அவர்களின் பேச்சும், பேச்சின் தோரணையும் அசிங்கமாக இருந்தது. இந்தப் பெண்களையெல்லாம் உருவாக்கியிருப்பது கல்வியோ, ஆசிரியர்களோ, பெற்றோரோ அல்ல என்பதும், இவர்கள் முழுக்க முழுக்க சினிமா மற்றும் தொலைக்காட்சியால் உருவாக்கப்பட்ட பண்டங்கள் என்றும் புரிந்தது. இவர்களில் ஒரே ஒரு பெண்தான் வித்தியாசமாக இருந்தார். காதல் சார்பாகப் பேசிய அவர் 90 சதவிகிதம் மலையாளத்திலும், 10 சதவிகிதம் தமிழிலும் பேசினார். அந்தக் கேரளத்துப் பைங்கிளிக்கும் மற்றும் இரண்டு மாணவர்களுக்கும் முதல் பரிசு அறிவித்தேன். இரண்டாவது பரிசு, மூன்றாவது பரிசு வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்.

அந்த இரண்டு மாணவர்களைப் பற்றியும் கூடக் குறிப்பிட வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

ஒருவர், இளமாறன் என்று பெயர். அண்ணாதுரை, நெடுஞ்செழியன் பாணியில் மடை திறந்த வெள்ளமாகப் பேசினார், காதல் சார்பாக. அவருடைய கல்லூரியின் மாணவர் தலைவராம். நிச்சயமாக வருங்காலத்தில் அரசியலில் ஜொலிப்பீர்கள் என்றேன். இன்னொருவர், தகவல் தொழில்நுட்பம் படிப்பவர். ரங்க பாஷ்யம். நெற்றியில் ஸ்ரீசூர்ணம். கம்பன், காளிதான் என்று பிரமிக்க வைத்துக் கொண்டிருந்தார். கேட்டவுடனேயே வேளுக்குடி கிருஷ்ணனைப் போல் இருக்கிறதே என்று வியந்தேன். "ஆமாம்; அவர் என் அம்மாவின் மூத்த சகோதரர்" என்று சொல்லி மேலும் ஆச்சரியப்படுத்தினார். இந்த மூவரைத் தவிர மற்ற அத்தனை பேரும் உங்கள் சுப்பிரியா ரகம்தான்.

அந்த மாணவர்களைப் பார்த்தபோது அது எனக்கு ஒரு கலாச்சார அதிர்ச்சியாகவே இருந்தது. எனக்குக் கல்லூரி மாணவிகளோடு அதிகப் பரிச்சயம் உண்டு என்ற போதிலும், நான் சந்தித்தவர்களெல்லாம் என்னுடைய எழுத்தைப் படித்துவிட்டு என்னை அணுகியவர்கள். அவர்களுக்கும் இவர்களுக்கும் சம்பந்தமே இல்லாமல் இருந்தது.

7-.4.-2009

¦
¦

டியர் சாரு,

ஆனந்தின் 'சீனத்துத் தொழிலதிபரும் மலாவிய சிறுவர்களும்' கடிதம் ஒரு சிறுகதையைப் போலவே இருந்தது. அதிலும் குறிப்பாக கதையின் முடிவு வெகு அற்புதம்.

2020--இல் இந்தியா வல்லரசாகிவிடும் என்று கனவு கண்டும், கனவு காண சொல்லிக்கொண்டும் இருப்பவர்கள், மலாவியை ஒரு உதாரணமாகக் கொள்ள வேண்டும். இந்தியாவில், ஒன்றுக்கொன்று தொடர்புடைய ஊழல், நிர்வாகச் சீர்கேடு மற்றும் வறுமை போன்ற பிரச்சினைகள் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே போய்க் கொண்டிருப்பதால் 2020--இல் இந்தியாவே மலாவியைப் போல் மாறிவிடுவதற்கான சாத்தியக் கூறுகள் அதிகம் தெரிகின்றன.

ஆனந்தின் சமீபத்திய கடிதத்தை அப்படியே ஆமோதிப்பதைத் தவிர வேறு வழி இல்லை; குறிப்பாக இந்தியர்களின் கல்வி முறை பற்றிய அவரின் கருத்து இந்தியாவில் பணம் இருப்பவனுக்கு மட்டுமே மருத்துவம் மற்றும் கல்வி என்று ஆகிவிட்ட சூழ்நிலையில், அதிலும் கல்வி முறையானது மனப்பாடம் செய்து வாந்தி எடுப்பவனுக்கே முன்னுரிமை என்றாகிவிட்ட நிலையில், இனி படித்து வெளிவருபவர்கள்

https://telegram.me/aedahamlibrary

இந்த சமுதாயத்தைப் பற்றி அக்கறை கொள்பவர்களாக இருக்க வாய்ப்பு மிகவும் குறைவு. மாதம் லட்ச ரூபாய் சம்பாதித்து எப்படித் தன் வாரிசுகள் எந்தச் சிரமமும் இல்லாமல் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதைத் திட்டம் போடுவதற்கே தகப்பனாரின் முழு ஆயுளும் செலவழிந்துவிடும்.

இந்தியாவில் பணம் படைத்தவர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைகள் மேலும் ஏழைகளாகவும் மட்டுமே ஆக முடியும் அவலத்தை என்னவென்று சொல்வது?

இதுவே தொடர்ந்து கொண்டிருக்கும் பட்சத்தில், படிக்க வழியில்லாத சேரிக் குழந்தைகள் வன்முறையின் பாதைக்கு நகர்ந்து, அரசியல்வாதிகளின் மறைமுக ஆயுதங்களாகவும் மாற்றம் கொள்வதைத் தவிர்க்க முடியாது. இந்தக் கண்ணோட்டத்துடன் உங்களுடைய கசாப் பற்றிய கருத்தோடு முரண்படுகிறேன். அவரைத் தூணில் கட்டி வைத்துக் கல்லால் அடிக்க வேண்டுமென்றால் கசாபைப் போல பலரை பலவந்தமாக மாற்றுப் பாதைக்குத் தள்ளிவிடும் இந்தச் சமூகத்தை எதைக் கொண்டு அடிக்கலாம்?

நீங்களே குறிப்பிட்டதுதான் அமெரிக்காவில் உள்ளதுபோல ஜனாதிபதியின் மகனும் அந்த தெருவில் குப்பை அள்ளுபவனின் மகனும் ஒரே பள்ளியில் ஒரே தரமான கல்வியைக் கற்கும் வாய்ப்பு கிடைத்தாலொழிய இந்தியா முன்னேற வாய்ப்பு இல்லை என்பது என் தாழ்மையான கருத்து.

மேலும், இப்பொழுது இருக்கும் மனப்பாடக் கல்வி முறை மாறுவதற்கு அரசியல்வாதிகளின் ஒத்துழைப்பு அவசியம். ஆனால் கணினியையே ஒழிக்க வேண்டும் என்று சொல்லும் அரசியல்வாதிகள் இருக்கும் காலத்தில் இதைப் பற்றி யோசிப்பதே வீண்!

பின் குறிப்பு:

சாரு, என்னிடம் தமிழில் தட்டச்சு செய்யும் மென்பொருள் எதுவும் கிடையாது. எனவே ஆர்குட்டில், ஸ்கிராப்பில் டைப் செய்து அதை கட் அண்டு பேஸ்ட் செய்து இ--மெயில் செய்கிறேன். அதனால் எழுத்துப் பிழைகள் ஏதேனும் இருந்தால் மன்னிக்கவும். கூடிய விரைவில் தமிழ் மென்பொருள் ஏதேனும் பதிவிறக்கம் செய்து கொள்கிறேன்.

அன்புடன்,

முரளி

திருவல்லிகேணி

https://telegram.me/aedahamlibrary

சென்னை.

¦

¦

அன்புள்ள முரளி,

உங்கள் கடிதத்தோடு தொடர்புடைய ஒரு சம்பவம் இன்று காலை எங்கள் தெருவில் நடந்தது. தெருவின் ஆரம்பத்தில் ஒரு சிறிய அம்மன் கோவில் இருக்கிறது. அந்த அம்மனுக்கு வேண்டிக் கொண்டு பல பேர் தாலிசெய்து சாத்துவார்கள். அந்தத் தாலியைத் திருடிக் கொண்டு போய் குடிப்பவர்கள் மிகுந்து விட்டதால் இப்போது கோவிலை எப்போதும் பூட்டியே வைத்திருக்கிறார்கள். குடிகாரர்கள்தான் இந்தத் தாலித் திருட்டில் ஈடுபடுகிறார்கள் என்கிறார்கள் இங்கே உள்ள ஆட்டோக்காரர்கள். மிகவும் சிறிய கோவில் என்பதால் பூசாரி எல்லாம் கிடையாது. நாமேதான் பூசாரி.

கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு பூக்கார அம்மாவும் உண்டு. அம்மன் தாலித் திருட்டோடு சாலையில் நடக்கும் பெண்களிடம் செயின் பறிக்கும் திருடர்களும் அதிகமாகி விட்டபடியால் இங்கே தெருமுனையில் இரவில் எப்போதும் போலீஸ்காரர்களை பாரா போட்டு இருக்கிறார்கள். இது பணக்காரர்கள் வசிக்கும் பகுதி என்பதும் இதற்கெல்லாம் ஒரு காரணம்.

இன்று காலை இந்த அம்மன் கோவிலுக்குப் பக்கத்தில் உள்ள மருந்துக் கடையில் ஏதோ சில மருந்துகள் வாங்கிக்கொண்டிருந்தேன். அப்போது அங்கே நடந்த சம்பவம் இது:

ஒரு நபர் பூக்கடையில் பூ வாங்கிக்கொண்டிருந்தார். அப்போது அவரை நெருங்கிய இரண்டு சிறுவர்கள் - இருவரும் இங்கே பக்கத்தில் உள்ள பிரபலமான பள்ளியில் ஐந்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது பிறகு விசாரணையில் தெரிந்தது - ஐந்து ரூபாய் வேண்டுமென்று ஆங்கிலத்தில் கேட்டிருக்கிறார்கள். அவரும் கொடுக்கப்போனபோது பூக்காரம்மா அந்தப் பையன்களைப் பிடித்துக்கொண்டார். ஏனென்றால், ஏற்கனவே இந்தப் பையன்கள் இதேபோல் இரண்டு முறை பணம் கேட்டு வாங்கிக்கொண்டு போயிருக்கிறான்கள். இவன்களைக் குறி பார்த்து வைத்திருந்து இந்த முறை பிடித்துவிட்டார். பூக்காரம்மா. நிறைய புத்திமதி சொல்லி அனுப்பி வைத்தார். அந்தப் பையன்களில் ஒருவன் அந்த அம்மாவிடம் “ஐயாம் எக்ஸ்ட்ரீம்லி ஸாரி” என்று சொல்லிவிட்டுத் தன் சிநேகிதனை அழைத்துக் கொண்டு நகர்ந்தான்.

இனிமேல் இவன்கள் வீட்டில் திருட ஆரம்பிப்பான்கள். பிறகு வெளியிலும் திருட ஆரம்பிப்பான்கள். விஷால் சொன்னான்;

https://telegram.me/aedahamlibrary

அவனுடைய மகனின் வகுப்பில் படிக்கும் பையன் (ஒன்பதாம் வகுப்பு) தன் வீட்டிலிருந்து 5000 ரூபாயைத் திருடிக்கொண்டு வந்துவிட்டான் என்று. இப்போதெல்லாம் பையன்களுக்கு ஐந்தாயிரம் பத்தாயிரம் என்று தேவைப்படுகிறது. பையன்கள் திருடுகிறான்கள்; பெண் குழந்தைகள் விபச்சாரத்தில் இறங்கிவிடுகின்றன.

இப்படித் திருடும் பையன்களெல்லாம் கடைசியில்

ஜெயிலுக்குப் போய்விடுவான்கள் என்றா நினைக்கிறீர்கள்? இல்லை. இவன்கள் மேல் நடுத்தரவர்க்கம். அப்படி இப்படி கல்லூரிப் படிப்பை முடித்துவிட்டு சமூகத்தைக் கொள்ளையடிக்க ஆரம்பித்துவிடுவான்கள். இன்றைய தினம் கோடி கோடியாய் ஊழல் செய்பவன்களெல்லாம் யார், படிக்காதவர்களா? அவர்களின் பெயருக்குப் பின்னே கொடி நீளத்துக்குத் தொங்குகின்றன அவர்கள் வாங்கின பட்டங்கள்!

ஒட்டு மொத்தமாக இந்தச் சமூகம் கொள்ளையடிப்பவர்களின் சமூகமாக மாறி விட்டதற்கு இது ஒரு அடையாளம்.

ஆனால் இவ்வளவுக்கு இடையிலும் ஒவ்வொரு தெரு முக்கிலும் பூ கட்டி விற்றுக்கொண்டுதான் இருக்கிறார்கள் பெண்கள். நாள் பூராவும் பூ கட்டினால் அவர்களுக்கு நூறு ரூபாய் லாபம் கிடைக்குமா?

சாரு

8.5.2009

https://telegram.me/aedahamlibrary

ஸ்தூலமும் சூட்சுமமும்

டியர் சாரு,

தொலைக்காட்சி பற்றி கேட்டிருந்தீர்கள்.

‘மிகூயூ சுவர்களின் கொடுஞ்சுவர்களுக்குள்ளிருந்து கேட்ட குரல்கள்’ என்ற தலைப்பின் கீழுள்ள கடிதத்தில், தமிழர்கள் பற்றியும் சன் டி.வி. பற்றியும் எழுதியிருந்தேன். நினைவுபடுத்துகிறேன்.

சற்று விபரமாகச் சொல்ல வேண்டும் என்றால், மலாவியைப் பொறுத்தவரை செயற்கைக்கோள் தொலைக்காட்சி ஒலிபரப்பு என்பது மல்டிசாய்ஸ் நிறுவனத்தின் டி.எஸ்.டிவியால் ஆளப்படுகிறது. கட்டணங்கள் அதிகம். மாதம் 4900 குவாச்சா (1700 ரூபாய்!) கட்டினால் எட்டு சானல்கள் பார்க்கக் கிடைக்கும். இதில் இந்திய நிகழ்ச்சிகளைப் பொறுத்தவரை, வட இந்திய பொக்கே தென்னிந்திய பொக்கே என இரு பிரிவு உண்டு. தென்னிந்திய பொக்கேவுக்கு பணம் கட்டினால், கே டி.வி., சன் டி.வி., என்.டி.டி.வி. ஆகிய இந்திய நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும் சானல்களுக்கான இணைப்பு வழங்கப்படும். வட இந்திய பொக்கேவுக்கு பணம் கட்டினால், பிஃபோர் யூ, ஸீ, சோனி, என்.டி.டி.வி. ஆகியவற்றிற்கான இணைப்பு. இரு பொக்கேக்களுக்கும் பொதுவாக எஸ் ஏ பிஸி-1, 2, 3, அல்-ஜெசீரா, ஐக்யுரா ஆகிய ஐந்து சானல்கள் உண்டு. இதற்கு மேலாக விளையாட்டுச் சானல்கள், ஆங்கிலத் திரைப்பட சானல்கள், எம்.டி.வி. முதலியவற்றைக் காண 7000 குவாச்சா அதிகரித்து, மொத்தமாக 11,900 குவாச்சா (கிட்டத்தட்ட 4000 ரூபாய்) கட்ட வேண்டும்.

இந்தியர்களால் இந்த சானல்கள் இன்றி வாழ்க்கையை நகர்த்த முடியாது என்றாகிவிட்ட நிலையில், குறைந்தது 4900 குவாச்சா மாதத்திற்கு செலவளிக்கிறார்கள். சில நிறுவனங்கள் தங்களிடம் வேலை பார்க்கும் இந்தியர்களுக்காக இந்தத் தொலைக்காட்சிக் கட்டணத்தை ஏற்பதும் உண்டு. இதில் தென்னிந்திய பொக்கேவுக்கான சந்தாதாரர்கள் குறைந்து வருவதால் சமீபத்தில் கே.டி.வி. நிறுத்தப்பட்டு அதற்கு பதில் சோனி மாக்ஸ் இணைக்கப்பட்டுள்ளது.

4900 குவாச்சா பணம் கட்டி, கடைசியாக ஒரே ஒரு தமிழ் சானலைப் பார்க்க நேர்வது தங்கள் கணக்கு முறைக்கு ஒத்துவராததால் ஒருசில

https://telegram.me/aedahamlibrary

தமிழ்க் குடும்பங்கள் வட இந்திய பொக்கேவுக்கு கட்சி மாறி வருகிறார்கள். இந்தக் கட்சி மாற்றத்துக்கும் என்.டி.டி.வியின் பாலிவுட்-ஐ பிரபலப்படுத்தும் செய்கைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. மற்றபடி, ஐபிஎல் போன்ற பித்தேறிய தருணங்களில் மட்டும், ரஜினி படத்தின் முதல் நாள் முதல் காட்சிக்கு 1000 ரூபாய்க்கு டிக்கெட் வாங்குவதைப் போல, எதையும் யோசிக்காமல் 11,900 குவாச்சா கட்டிவிடும் மனநிலைக்குச் செல்கிறார்கள்.

இவ்வளவுக்கெல்லாம் வசதிப்படாத மலாவியர்களுக்கென்று இருக்கவே இருக்கிறது, தொழில்நுட்பத்திலும் நிகழ்ச்சி வடிவமைப்பிலும் தூர்தர்ஷனை விடப் பல மடங்கு பின்தங்கிய நிலையிலிருக்கும் சானலான மலாவி டி.வி.

தொலைக்காட்சி, ஐபிஎல் என்றெல்லாம் எழுதுகையில் வேறு சில விஷயங்கள் கவனத்திற்கு வருகின்றன. ஐபிஎல்லை தென் ஆஃப்ரிக்காவில் நடத்தி வெற்றிச் சிரிப்புடன் பாராட்டு மழையில் நனைந்தபடி வலம் வருகிறார் லலித் மோடி. நேர இருந்த பெரும் நஷ்டத்தினைத் தவிர்த்துவிட்டுக் கொண்டாட்டத்தில் இருக்கிறது மீடியா. சரி, தனியார் பெற்ற லாபம் இருக்கட்டும்; இதில் இந்திய அளவில் விளையாட்டுத் துறைக்கு, மாநில விளையாட்டு ஒதிக்கீட்டு நிதிக்கு, விளையாட்டு அரங்கங்களுக்கு எவ்வளவு நஷ்டம் ஏற்பட்டது என்ற கணக்கினை ஏதாவது ஒரு பத்திரிகை வெளியிட்டிருக்கிறதா? சேப்பாக் போன்ற ஒரு மைதானத்தில் ஐபிஎல் போன்ற போட்டி நடைபெறுவதற்கும், தென் ஆஃபிரிக்காவில் நடைபெறுவதற்கும் வித்யாசம் என்ன என்று தமிழர்கள் அறிவார்களா? அது எந்த விளையாட்டாக இருந்தாலும், மாவட்ட அளவில் விளையாட்டு வீரர்களுக்குக் கிடைக்கும் வசதி வாய்ப்பு, ஸ்பான்ஸர்ஷிப், ஊக்குவிப்புத் தொகை போன்றவை பற்றி எந்த தினசரியாவது இதுவரை ஆராய்ந்து ஒரே ஒரு செய்தியாவது வெளியிட்டிருக்கிறதா?

இந்தியா என்ற மக்கள் தொகை மிகுந்த தேசம் எந்தத் துறையிலும் எவ்வளவு பாதுகாப்பின்றி இருக்கிறது என்று நினைத்தால் ஆச்சரியமாகவே இருக்கிறது.

பள்ளி நாட்களில் நான் மாவட்ட அளவில் கிரிக்கெட் ஆடியிருக்கிறேன். ஊர் மயிலாடுதுறை ஆகையால் நாகை மாவட்டம். கிரிக்கெட் மட்டை முதல், பேட், ஹெல்மெட் என்று சகலத்துக்கும் சொந்த செலவு செய்ய வேண்டும். பந்து மட்டும், அதுவும் வருடத்திற்கு பத்து என்ற எண்ணிக்கையில் மாவட்ட கிரிக்கெட் அசோஷியேஷன் வாங்கித் தரும். அதற்கு மேல் நிதி இல்லை என்பார்கள். வாரம் ஒரு புதுப் பந்து என்று

https://telegram.me/aedahamlibrary

திட்டமிட்டு பயிற்சி செய்வோம். எப்படிப் பார்த்தாலும் இரண்டு மாதங்களுக்கு மேல் அந்த பத்து பந்துகள் தாங்காது. அடுத்த பந்து வாங்குவதற்கு உண்டியல்தான் குலுக்க வேண்டி இருக்கும். பந்து பழசாகிவிட்ட நிலையில் எங்கிருந்து வேகப்பந்து வீச்சாளர் பயிற்சி செய்வது? புதுப் பந்தின் ஸீம் மூவ்மெண்ட்டிற்கும், பத்து ஓவரை தாண்டிவிட்ட பந்தின் ஸீம் மூவ்மெண்ட்டிற்கும் உள்ள வித்யாசம் அதிகம். பழசாகிவிட்ட பந்திலேயே விளையாட நேர்ந்தால் வேகப் பந்து வீச்சாளர்களுக்கு எந்த வகைப் பயிற்சியும் கிட்டாது. சுழற்பந்து வீச்சாளர் என்றால் பந்து சற்று பழசாகிப் போனால் உபயோகப்படும்.

இந்திய அணியில் வேகப் பந்து வீச்சாளர்களை விட சுழற் பந்து வீச்சாளர்களே அதிக திறனுள்ளவர்களாக சர்வதேச அளவில் ஜொலிப்பதற்கு இதுவும் ஒரு காரணம். மட்டையாளர்களில் சச்சின், திராவிட், விவிஎஸ் லஷ்மண் ஆகிய மூவரைத் தவிர பிறர் வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் அசலான வேகப்பந்து வீச்சினை சமாளிக்கத் திணறுவதற்கான காரணமும் ஒருவகையில் இதுவாகவே இருக்கக்கூடும்.

லலித் மோடி ஐபிஎல்லின் பேரில் தென் ஆஃப்ரிக்காவின் கல்வியை மேம்படுத்த நிதி வழங்கி, புகைப்படத்துக்காக சிரித்து நிற்பதைப் பார்க்கும்பொழுது, திருச்சிக்கும் நாகைக்கும் இடையேயான போட்டியில் கிழிந்து நைந்த கையுறையுடன் விக்கெட் கீப்பிங் செய்து என் கை பழுத்துப் போனது தவிர்க்க முடியாமல் நினைவில் எழுகிறது. ஆறு வயது சிறுவன் முதல், எழுபது வயது பெரியவர் வரை மொத்த தேசத்தையும் பைத்தியம் பிடித்து ஆடச் செய்யும் கிரிக்கெட்டுக்கே மாவட்ட அளவில் இதுதான் நிலை என்றால், மற்ற விளையாட்டுகளை என்னவென்று சொல்வது!

மலாவியில் விளையாட்டுகளைப் பொறுத்தவரை இவர்களுக்கு கால்பந்து மோகம் அதிகம். நம் ஊரில் அந்த நாட்களில் டிரான்ஸிஸ்டரை சுற்றிக் குழுமமாக அமர்ந்து கமெண்டரி கேட்பதுபோல் கேட்பார்கள்; கொண்டாடுவார்கள். வீட்டினுள் முதலாளி தொலைக்காட்சியில் சானல் தாவிக்கொண்டிருக்கையில் நடுவில் ஏதோ ஒரு கால்பந்து சத்தமோ, காட்சியோ தோன்றுமென்றால், சமையலறையிலிருந்து மெல்லத் தலை நீட்டிப் பார்ப்பார்கள். காட்சி மாறியவுடன் மற்றவை தங்களுக்குச் சம்பந்தமில்லை என்பது போல் தலையை உள் இழுத்துத் திரும்புவார்கள்.

பிளாந்தையர் நகரில் கமுசு ஸ்டேடியம் என்றொரு மைதானம் இருக்கிறது. அங்கு கால்பந்து போட்டிகள் நடக்கும் நாட்களில் கூட்டம்

https://telegram.me/aedahamlibrary

நிரம்பி வழியும். குறிப்பாக மலாவியுடன் பிற ஆஃப்ரிக்க தேசங்கள் மோதும் போட்டிகள் ஆபத்தானவை. மலாவி தோல்வி கொள்ளும் என்றால் நகரின் அப்போதைய பாதுகாப்புச் சூழல் பார்வையாளர்களின் அப்போதைய மனநிலையைப் பொறுத்தது. அருகிலிருக்கும் கடைகளின் கண்ணாடிகளை பதம் பார்ப்பது, உள்ளிருக்கும் பொருட்களை அள்ளிச்செல்வது, குடித்துவிட்டு தெருவில் கட்டிப் புரள்வது போன்ற செயல்களில் இறங்குவார்கள்.

மலாவியிலுள்ள இந்தியர்களில், தலைமுறை தலைமுறையாக இங்கே ஒரு கால் இங்கிலாந்தில் ஒரு கால் என்று வசிப்பவர்களின் விருப்பமான விளையாட்டும் கால்பந்துதான். இவர்கள் படிக்கும் பள்ளிகளிலும் கிரிக்கெட்டை விட கால்பந்து பிரபலமாக இருக்கும். மற்றபடி இந்தியன் ஸ்போர்ட்ஸ் கிளப் போன்ற ஒன்றிரெண்டு அமைப்புகள் இங்கே கிரிக்கெட் விளையாடுகின்றன. அதிலும் இந்தியர்கள் பாகிஸ்தானியர்கள் என்றெல்லாம் அணி பிரித்துத் தீவிரமாக இறங்கும் செயல்களும் நடக்கும்.

இதைத் தவிர இங்குள்ள விளையாட்டுகளைப் பற்றி அதிகம் சொல்வதற்கு ஒன்றுமில்லை. ஆனால் மலாவியர்களின் சரீர பலம், உடல் வடிவமைப்பு போன்றவற்றைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால் சில பல புத்தகங்களே எழுத வேண்டியிருக்கும். இவர்களது இருதயம் மிக வலுவானது. காரணம், இவர்கள் மலையைச் சார்ந்த இருப்பிடம் கொண்டவர்கள். தினமும் சரிவுகளில் ஏறுவது, இறங்குவது என்ற வழியிலேயே இவர்கள் தங்கள் வாழ்வுமுறையைக் கொண்டிருப்பதால் அதுவே ஆரோக்கியத்தைப் பொறுத்தவரை பெரும் பலமாக அமைந்து விடுகிறது.

இங்கே உள்ளூர்ப் போக்குவரத்து வசதிக்கு மினி பஸ் என்னும் வேன்கள் உண்டு. கட்டணம் மிக அதிகம். நகரருகே வீடு என்றால் வாடகையும் அதிகம். எனவே நகரிலுள்ள பல்வேறு நிறுவனங்களில் தொழிற்சாலைகளில் வேலை செய்பவர்கள், நகரிலிருந்து கிட்டத்தட்ட 20 கி.மீ. தள்ளி உள்ள தங்கள் கிராமங்களில் வசித்தபடி நகரில் வேலை செய்து வருகிறார்கள். இவர்கள் மினி பஸ்களின் உபயோகம் கொண்டால் வேலைக்கு வந்து திரும்புவதற்கு மட்டும் 300 குவாச்சா தினமும் செலவாகும். ஒரு நாளைக்கு இவர்கள் சம்பாதிப்பதன் சராசரியை கணக்கிட்டோமென்றால் அது 160 குவாச்சா தாண்டாது. இந்தப் பணம் இவர்களது பெரிய குடும்பங்களுக்கு இரண்டு வேளை உணவு வழங்குவதற்குக்கூட போதாது. ஆக போக்குவரத்துக்குச் செலவழிப்பது என்பதல்லாம் நடக்காத காரியம். இன்னும் சைக்கிளே

https://telegram.me/aedahamlibrary

பலருக்கு அடிவானம் பற்றிய கனவாக இருக்கிறது. பிறகு இவர்கள் எப்படி வேலைக்கு வந்து திரும்புகிறார்கள்? தினமும் 20 கி.மீ. நடந்து வருகிறார்கள்! வரப் போக என்று மொத்தமாகப் பார்த்தால் 40 கிமீ நடை! உங்களால் யோசிக்க முடிகிறதா? என்னால் கண் எதிரே தினமும் காண நேரும் இந்த நிஜத்தை இன்று வரை நம்ப முடியவில்லை.

ஒரு அதிகாலை நேரத்தில் இங்கு சாலையில் பார்த்தால் கூட்டம் கூட்டமாக மக்கள் ஓடிக்கொண்டிருப்பதைக் காணலாம். நான் வந்த புதிதில் ஏதோ உடற்பயிற்சிக்காக ஓடுகிறார்கள் என்று எண்ணினேன். பிறகுதான் புரிந்தது, தினமும் காலை 4 மணிக்கு வீட்டிலிருந்து கிளம்பி இப்படி ஓட்டமும் நடையுமாகச் சென்றால்தான் இவர்கள் எட்டு மணிக்குத் தங்கள் வேலைக்குச் சென்று சேர முடியும். ஏதாவது கிழங்கு வகைகளையோ, சோளக்கருதையோ வாங்கிக் கடித்தபடி மாலையில் வேலை முடிந்து மீண்டும் வீட்டை நோக்கி ஓடுவார்கள். அதிலும் இருட்டிவிட்டால் வழியில் திருடர்கள் பயம் அதிகம். இவர்களிடம் திருட்டுக் கொடுப்பதற்கு எதுவுமிருக்காது என்றாலும் சம்பள தினங்களில் சிக்கல் ஏற்பட்டுவிடும்.

மிகவும் கடினமான வாழ்க்கைதான் என்றபோதும் மற்றொரு வகையில் இது இவர்களது உடலைப் புடம் போட்டு விடுகிறது. சிறு வயது முதற்கொண்டு கஷ்டமான சூழ்நிலையே இருந்தாலும் அதிகம் மன உளைச்சலின்றி மலாவியர்கள் வளரும் முறை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். எளிமையான மனதின் காரணத்தால் உயர் ரத்த அழுத்தம், இருதய நோய் போன்றவை இவர்களைத் தீண்டுவதில்லை. வசதி வாய்ப்புகள் குறைந்த இத்தகைய நாட்டில் ஆங்கில மருத்துவமும் இன்னும் அதிக அளவில் தன் ஆதிக்கத்தை செலுத்தத் துவங்காததால், இவர்கள் உடல் இன்னும் இயற்கையை சார்ந்த எதிர்ப்பு சக்தி கொண்டதாகவே இருக்கிறது. கிராமங்களிலும் மின்சார வசதி கிடையாது. எனவே தூக்கம் என்பதும் கூட சீக்கிரம் உறங்கி அதிகாலையிலேயே எழுவது என்று இயற்கைச் செயல்பாட்டுடன் இணைந்து சீர் பெறுகிறது.

இவை அனைத்தையும் தாண்டி மலாவியில் இறப்பு சதவிகிதம் அதிகமாக இருப்பதற்குக் காரணம், மலேரியா, எய்ட்ஸ், வறுமை, குடி, உணவுக்கு வழியின்றி ச்சாம்பா போன்றவற்றை அதிக அளவில் புகைப்பது, சிறு சிறு நோய்களுக்குக் கூட மருத்துவ வழியில் தீர்வு காண முடியாமல் போவது ஆகியவையே தவிர வேறு இல்லை.

உள்ளபடி இவர்கள் மரபணுவைப் பொறுத்தவரை இயற்கையான வலு உள்ளவர்களாகவே பிறக்கிறார்கள். மனிதர்கள் என்றில்லை; இந்த

https://telegram.me/aedahamlibrary

நிலப்பரப்பில் உருவாகும் பட்டாம்பூச்சி, நத்தை, கொசு, ஈ என அனைத்து ஜீவராசிகளும் இந்தியாவில் உள்ளவற்றுடன் ஒப்பிட்டால் பத்து மடங்கு பெரிதாக இருக்கின்றன. இங்கிருக்கும் சுத்தமான காற்றையும், பசும்புல் மலைகளையும் இதற்குக் காரணமெனச் சொல்ல வேண்டும்.

ஒரு உதாரணம் சொல்கிறேன்:

ஆண்களின் குரலில் தொனிக்கும் கனமும், ஆழமும், டெஸ்டோஸ்ட்ரோன் என்ற முக்கியமான ஹார்மோனின் செயல்பாடு என்கிறது மேற்கத்திய மருத்துவம். மலாவியர்களது குரலில் வெளிப்படும் கனத்தினை பலமுறை வியந்திருக்கிறேன். பிபிசி அறிவிப்பாளரின் குரல் வளம் இங்கே சராசரி என்று கொள்ளலாம்.

இந்த டெஸ்டோஸ்ட்ரோன் என்ற ஹார்மோன் உடல் வடிவமைப்பில், குறிப்பாக தசை வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானது. எனக்கு உடற்பயிற்சி அரங்கத்திற்குச் செல்லும் பழக்கம் இருப்பதால் இந்த டெஸ்ட்ரோன் சம்மந்தமான, அதற்குத் தேவையான உணவுப் பழக்கங்கள் போன்றவற்றின் மேல் ஆர்வம் அதிகம்.

உடல் வடிவமைத்தலுக்குத் தேவையானவை மூன்று விஷயங்கள் என்று அறிகிறேன்.

1) உணவு

2) ஓய்வு

3) சரியான முறையில் உடற் பயிற்சி

இவை மூன்றையும் எப்படி சரிவரச் செய்வது என்பதை தேடிக் கண்டுபிடிக்கவே பல நாட்கள் ஆகும். அப்படிக் கண்டுபிடித்துப் பார்த்தால் அதுவரை நாம் பின்பற்றி வந்த அனைத்துமே தவறாக இருக்கும். குறிப்பாக உணவை பொறுத்தவரை மூன்று வேளையும் அரிசி சாப்பிடுவதால் எந்தவிதப் பிரயோஜனமும் இல்லை. சீரழிவே அதிகம். 12ஆம் வகுப்பு முடித்த நிலையில் ஜிம்முக்குச் சென்று தினமும் இரண்டு மணிநேரம் பயிற்சி செய்து, 25 இட்லிகள் வரை சாப்பிட்டுப் பார்த்து கடைசியில் பலன் இல்லாமல் முயற்சியைக் கைவிட்டதை இப்போது நினைத்து சிரித்துக் கொள்கிறேன்.

தசை வளர்ச்சியைப் பொறுத்தவரை, உடற்பயிற்சி என்பது 40 சதவிகிதம்தான்; மிச்ச 60 சதவிகிதம் உணவின் கையில் இருக்கிறது என்கின்றனர் தொழில்முறைப் பயிற்சியாளர்கள்.

உணவைப் பொறுத்தவரை ப்ரோட்டின், கார்போஹைட்ரேட்

https://telegram.me/aedahamlibrary

போன்றவை சரியான விகிதத்தில் இருக்கும்படி உட்கொள்ள வேண்டும். இதில் கார்போஹைட்ரேட்டுக்குப் பஞ்சமில்லை. பிரோடீனுக்காக எவ்வளவு சாப்பிட்டாலும் பத்தாது. தனியாக சப்ளிமென்ட் எடுத்துக்கொள்வது தேவைப்படும். சப்ளிமென்ட் என்று வந்துவிட்டால் அதில் ஸ்டெராயிடு வகைகள் உடலை முன்னேற்றுவது போல் பாவனை காட்டி உள் உறுப்புகளை சர்வ நாசம் செய்துவிடும். ப்ரோட்டின் ஷேக்குகளில் ஆபத்து இல்லை. அவை-காம்ப்ளான் ஹார்லிக்ஸ் போன்றவை-சதவிகிதத்தில் ப்ரோட்டின்-விட்டமின்-மினரல் அளவுகள் அதிகம்; அவ்வளவே. இதற்காகத் தனியாக செலவளிக்க வேண்டும். தவிர ப்ரோட்டீன் சப்ளிமென்டுகளில் போலியும் அதிகம். பயன் அளிக்கிறதா இல்லையா என்பது உறுதியாகத் தெரியாது. அனைத்து ப்ரோட்டின் ஷேக்குகளுமே ருசியைப் பொறுத்த வரை மகா மோசமானவை. உடலை கவனிப்பது என்று இறங்கிவிட்டால் முதலில் நாம் நாக்கை அறுத்து காக்கைக்கு போட்டுவிட்டுத்தான் துவங்க வேண்டியிருக்கும்.

எவ்வளவுக்கெவ்வளவு உணவு உட்கொள்கிறோமோ அவ்வளவுக்கு அவ்வளவு திரவப் பொருளும் உட்கொள்ள வேண்டும். குறைந்தது 4 லிட்டர் தண்ணீர் பருக வேண்டும். மலாவி போன்ற நாட்டின் தட்பவெப்ப நிலையில் தாகம் எடுக்கவே எடுக்காது. நாம் நீர் அருந்துவது உடலுக்குச் செய்யும் கடமையெனக் கொண்டு செய்ய வேண்டும். காய்கறி, பழம் போன்றவற்றில் எல்லாவித வண்ணங்களும் உணவில் இடம்பெறச் செய்துவிடுவது சாலச் சிறந்தது. முட்டைகளைப் பொறுத்தவரை வெள்ளைக் கருக்களை சாப்பிட்டு மஞ்சள் கருக்களை தூர வீச வேண்டும். மலாவியில் ஒரு முட்டையின் விலை ரூபாய் கணக்கில் சொன்னால் 9 ரூபாய். மஞ்சள் கருவை வீசுகையில் பணம் விரயமாகிறதே என்று சலனம் கொண்டால் உடலில் கொலஸ்ட்ரால் அளவு கூடிவிடும்.

இவ்வளவு கவனமும் உணவுக்குத் தந்த பின் அலுவலகத்தின் வேலை பளு காரணமாக ஒரு வாரம் உடற்பயிற்சி அரங்கத்திற்கு செல்லாது இருந்துவிட்டால் முடிந்தது கதை. உடலின் எடை கூடிவிடும். எடையைக் குறைக்க உட்கொண்ட கலோரிகளை விட அதிக அளவில் பயிற்சி செய்ய வேண்டும். எடையை அதிகரிக்க, பயிற்சியை விட உட்கொள்ளும் கலோரிகள் அதிகமாக இருக்க வேண்டும். உடலின் ஒட்டுமொத்த கொழுப்பையும் கரைக்காமல் தொப்பையை மட்டும் கரைத்துவிடலாம் என்று நினைத்து உழைப்பது வீண் முயற்சி.

மொத்தத்தில் என் இன்றைய புரிதலின் அடிப்படையில் உடலை

https://telegram.me/aedahamlibrary

வடிவமைத்தல் என்பது மதம் எப்படி ஒரு வாழ்வு முறையோ அதைப் போன்றே இதுவும் ஒரு வாழ்வு முறை என்று அறிகிறேன்.

இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால் இதெல்லாம் இந்தியர்களாகிய நமக்குத்தான். மலாவியர்களுக்கு அல்ல.

மேற்சொன்ன அனைத்து வகை பிரம்மப் பிரயத்தனமும் செய்து, விடா முயற்சி கொண்டு 5 மாதங்கள் உழைத்த பிறகு என்னால் புஜத்துக்கான 'டம்பிள் கான்சன்ட்ரேஷன்' என்ற பயிற்சியில் ஒரு கைக்கு 15 கிலோ டம்பிள் என்று சுமந்து 12 முறைதான் தொடர்ச்சியாக பயிற்சி செய்ய முடிகிறது. சுமித் என்றால் 20 கிலோ வரைக்கும் சுமந்து இந்தப் பயிற்சியை செய்வான். சுமித் இந்தியாவில் மாநில அளவில் நடந்த ஆர்ம் ரெஸ்லிங்க் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றவன் என்பது குறிப்பிடத்தக்கது.

நிலைமை இப்படி இருக்க, சில நாட்களுக்கு முன் எங்கள் உடற்பயிற்சி அரங்கத்தில் மலாவியன் ஒருவன் பிரசன்னமானான். ராணுவத்தில் இருந்து ஏதோ தவறு செய்ததன் காரணமாக விரட்டப்பட்டவன் என்று அவனைப் பற்றி பின்னர் அறிந்தோம். நான் பயிற்சி செய்து கொண்டிருந்த அதே டம்பிள்களைத் தூக்கி, எந்த ஒரு கவனமும் இன்றி, கிட்டத்தட்ட பிளாஸ்டிக்கால் செய்யப்பட்ட வஸ்துவைக் கையாள்வதைப் போன்ற எளிமையுடன், வேகவேகமாக 'டம்பிள் கான்சன்ட்ரேஷ்ன்' பயிற்சியை நூறு முறை தொடர்ச்சியாக செய்து விட்டு கீழே வைத்தான். அதைப் பார்த்த நொடி நான் அப்படியே உட்கார்ந்துவிட்டேன். உணவு போன்ற கவனமெல்லாம் கொள்ளும் வகை ஆள் இல்லை என்று முதல் பார்வையிலேயே புரிந்தது. தொடர்ந்து அவன் அனைத்து உபகரணங்களிலும் எந்தவித முறையும் இன்றி பேயோட்டம் நிகழ்த்திக்கொண்டிருக்க நான் பயிற்சி செய்யும் மனநிலையை முற்றிலுமாக இழந்துவிட்டிருந்தேன். எப்போதும் ஏதாவது சவால்விட்டு சாகஸம் செய்யும் சுமித்தும் கூட சற்று விக்கித்துதான் போயிருந்தான்.

அந்த மலாவியனையே கவனித்தபடி பயிற்சி செய்யாமல் அமர்ந்திருந்த என் அருகில் வந்த சுமித் ரகசியக் குரலில் "இவர்களைப் போல் நம் உடல் என்றுமே மாறிவிட முடியாது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்" என்றான். பதிலுக்கு என் உதடுகள் "திஸ் இஸ் டோட்டலி அன்ஃபேர்" என்று மட்டும் முணுமுணுத்தன. அந்த மலாவியன் தன் பயிற்சியை முடித்துக்கொண்டு சென்றவுடன் நான் சுமித்திடம் சென்று, இனி உடல்பயிற்சி மற்றும் உணவுப் பழக்கங்களைத் தொடரப் போவதில்லை என்றேன். சுமித், "விடு;

https://telegram.me/aedahamlibrary

ஒருவேளை ஏதாவது ட்ரக்ஸ் யூஸ் பண்ணுகிறானோ என்னவோ?" என்று ஆறுதல் கூறினான்.

"ஆமாம், அப்படித்தான் இருக்க வேண்டும்" என்று எங்களை நாங்களே சமாதானப்படுத்திக்கொள்ள முயன்றோம்.

அன்புடன்,

ஆனந்த்.

குறிப்பு: நீங்கள் தேடி எடுத்து வெளியிட்டிருந்த இந்தோ-மஸாய் நடன புகைப்படம் மிகவும் பொருத்தமாக இருந்தது. இத்தகைய நிகழ்ச்சிகளைப் பற்றி எவ்வளவு எழுதினாலும் கடைசியாக இன்னும் எதையுமே சொல்லவில்லை என்று மனம் நிராசை கொள்கிறது. அவை அளிக்கும் அனுபவம் அப்படி. சொற்கள் மூலம் பிறருக்கு அந்த அனுபவத்தை முழுமையாகக் கடத்திவிட முடிவதில்லை. இந்த நிலையில் இந்தப் புகைப்படம் மிகுந்த ஆறுதலையும் சந்தோஷத்தையும் அளித்தது. நன்றி.

¦

¦

ஆனந்த்,

கடிதத்தின் முடிவிலிருந்து தொடங்குகிறேன். எவ்வளவு எழுதினாலும் இன்னும் எதையுமே சொல்லவில்லை என்று தோன்றுகிறது. எனக்கும் கூட அப்படித்தான். இன்னும் காதலிக்கவே இல்லை என்று தோன்றுகிறது. இன்னும் காமத்தை ஸ்பர்சித்துக்கூட பார்க்கவில்லை என்று தோன்றுகிறது. ஒரே வாக்கியத்தில் சொன்னால், இன்னும் வாழவே ஆரம்பிக்கவில்லை என்று தோன்றுகிறது. அப்படியானால் இதுவரை செய்ததெல்லாம்? வாழ்வதற்கான ஆரம்பநிலைப் பயிற்சிகளாக இருக்கலாம். ஆனால் மிகப் பெரிய கலைஞர்களுக்கும் கூட இப்படித்தான் தோன்றியிருக்கிறது. ஸால்வதோர் தாலி அவருடைய காதலியான காலா பற்றி இதே வார்த்தைகளைத்தான் சொல்லியிருக்கிறார்.

ரஷ்யப் பெண்ணான காலா மாஸ்கோவில் படித்துக்கொண்டிருந்த போது காசநோய் பீடித்ததால் சிகிச்சைக்காக ஸ்விட்சர்லாந்து செல்கிறார். அப்போது அவர் வயது 19. அங்கே பால் எலுவார்த் மீது காதல் வயப்படுகிறார். பின்னர் பாரிஸ் சென்று அங்கே அவரை மணந்துகொள்கிறார். ஆண்டு: 1917. அவர் வயது 23. அவர்களுக்கு ஒரு மகள் பிறக்கிறாள்.

https://telegram.me/aedahamlibrary

இருபதுகளின் ஆரம்பத்தில் பாரிஸில் ஸர்ரியலிஸ இயக்கம் உருவாகிக் கொண்டிருந்தது. அதை ஆரம்பித்து வைத்தவர்களில் முக்கியமானவர் பால் எலுவார்த். ஆனால் காலா அவரோடு மட்டுமல்லாமல் ஸாரியலிஸ இயக்கத்தோடு தங்களைப் பிணைத்துக் கொண்டிருந்த பலரோடும் நெருக்கமாக இருந்திருக்கிறார். மட்டுமல்லாமல், Max Ernst மற்றும் பால் எலுவார்த் இருவரோடும் ஒன்றாக வாழ்ந்திருக்கிறார். இப்போது த்ரீஸம் என்று அழைக்கப்படும் அவ்விஷயம் அந்தக் காலக்கட்டத்தில் பாலியல் விடுதலையின் வெளிப்பாடுகளில் ஒன்றாகக் கருதப்பட்டது. ஃப்ரெஞ்சில் Mėnage à trois என்பார்கள். 1924--27இல் அந்த மூவரும் அப்படி வாழ்ந்தனர்.

(புலியைப் பார்த்து பூனை சூடு போட்டுக்கொண்ட கதையாக, இதைப் பார்த்துக் காப்பி அடித்து பின்னர் அஞ்சு பைசா பத்து பைசா சண்டையில் பிரிந்த 'கவிஞர்கள்' கதையும் தமிழ்நாட்டில் உண்டு).

பின்னர் எர்னெஸ்ட் காலாவைப் பிரிந்துவிட்டார். பிறகு தாலிக்கும் காலாவுக்கும் காதல் ஏற்பட்டு தாலியை மணந்துகொள்கிறார் காலா. காலாவை விட தாலி பத்து வயது இளையவர். ஆனால் தாலிக்கு ஒரு பாலியல் பிரச்சினை உண்டு. அவருக்கு யோனி என்றால் அலர்ஜி. ஏற்கனவே அவருக்கும் கார்ஸியா லோர்க்காவுக்கும் ஓரினச் சேர்க்கை உறவு இருந்தது.

இது தவிர தாலிக்கு Candaulism என்ற பாலியல் பழக்கமும் இருந்தது. இதற்கு ஒரு கதை இருக்கிறது. காந்தலஸ் என்ற கிரேக்க மன்னன் தன்னுடைய மெய்க்காப்பாளனான கைஜஸிடம் அடிக்கடி தன் மனைவியின் அழகைப் பற்றி வியந்துகொண்டே இருப்பான். ஒருநாள் "நீயே அந்த அழகை உன் கண்ணால் பார்த்தால்தான் நம்புவாய்" என்று சொல்லி ஒரு திட்டம் தீட்டுகிறான். ராணி உறங்குவதற்கு முன்னால் ஆடை களையும்போது கைஜஸ் ஒளிந்திருந்து பார்க்க வேண்டும் என்பது திட்டம். அரச கட்டளையை மீற முடியாமல் அவன் சொன்னபடி செய்கிறான் கைஜஸ். ஆனால் ஒளிந்திருந்து பார்த்த கைஜஸைப் பார்த்துவிடுகிறாள் ராணி. இப்போது மன்னனுக்கு எதிராக அவள் ஒரு திட்டம் போடுகிறாள். கைஜஸை அழைத்து "உனக்கு முன்னால் இப்போது இரண்டே விஷயங்கள்தான் உள்ளன. ஒன்று, என்னை நிர்வாணமாக உன்னைப் பார்க்க வைத்த அரசன் சாக வேண்டும்; அல்லது, அப்படி என்னைப் பார்த்த நீ சாகவேண்டும்" என்கிறாள். தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக கைஜஸ் மன்னனைக் கொன்றுவிடுகிறான். ராணி கைஜஸை மணந்துகொள்கிறாள்.

ஆக, இந்தக் கதையிலிருந்துதான் தன்னுடைய மனைவியோடு

https://telegram.me/aedahamlibrary

இன்னொருவர் கலவி கொள்வதைப் பார்த்து ரசிப்பதன் பெயர் சிணீஸீபீபணீறீவீsனீ என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பழக்கம் தாலிக்கு உண்டு. மேலும், தீவிரமான பாலியல் வேட்கை கொண்ட காலாவை தாலியால் திருப்திப்படுத்த முடியவில்லை. அதனால் பல ஆண்களோடு பாலியல் உளவு வைத்திருந்தார் காலா. அதை ஊக்குவித்தவராக இருந்தார் தாலி. காலாவோடு உறவு வைத்திருந்தவர்களில் அவரது முதல் கணவர் பால் எலுவார்தும் ஒருவர்.

ஆனால், இவ்வளவுக்கு இடையிலும் "காலாவினால்தான் நான் சிறிய வயதிலேயே சாகாமல் தப்பினேன்; அவளைப் பார்த்திருக்காவிட்டால் எப்போதோ தற்கொலை செய்து கொண்டு செத்திருப்பேன்; என்னுடைய அத்தனை ஓவியங்களும் காலாவின் காதலினால் மட்டுமே சாத்தியமானது" என்கிறார் தாலி. பல நூறு படங்களை அவள் உடலில் வரைந்திருக்கிறார் தாலி. தாலியின் பல ஓவியங்களுக்கு காலாவே மாடலாக இருந்திருக்கிறார்.

ஒருநாள் சாலையில் நடந்து போய்க்கொண்டிருந்த போது அப்படியே முழந்தாளிட்டு அமர்ந்து காலாவின் மீது தான் கொண்டிருந்த காதலைச் சொல்கிறார் தாலி. அதற்கு காலா "நாம் என்றுமே பிரிய மாட்டோம்" என்றார். அவர் சொன்னது போல் காலா சாகும் வரை தாலியைப் பிரியவே இல்லை.

ஜூன் 10, 1982 அன்று காலாவின் மரணச் செய்தி கிடைத்ததும் "காலா செத்திருக்க மாட்டாள்; அவளுக்கு சாவே கிடையாது" என்றார் தாலி. காலா சாகும்போது அவருடைய வயது 88. அப்போது தாலி சொன்ன வார்த்தை: "நான் இன்னமும் காலாவைக் காதலிக்க ஆரம்பிக்கவே இல்லையே?"

இப்போது உங்கள் கடிதத்தின் வேறு பகுதிகளுக்குச் செல்வோம் ஆனந்த். எனக்கு தொலைக்காட்சியில் வரும் எந்த நிகழ்ச்சி பற்றியும் தெரியாது. ஐ.பி.எல். பற்றி எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். எனக்கு அப்படியென்றால் என்னவென்றே தெரியவில்லை. கலாகௌமுதியிலிருந்து ஐ.பி.எல். பற்றி எதுவும் கட்டுரை கேட்டுவிடக் கூடாது என்று பிரார்த்தனை செய்து கொள்கிறேன்.

இந்தியாவில் வேகப்பந்து வீச்சாளர்கள் இல்லாததற்கு இவ்வளவு பெரிய காரணம் இருப்பது அறிந்து எனக்கு ஒரே ஆச்சரியம். ஆனால் இந்தியாவில் எல்லாமே அப்படித்தான். நீங்கள் ஏதோ கிரிக்கெட் என்கிறீர்கள். கிரிக்கெட்டை விட இந்தியாவில் பிரபலமானது மதுபானம் என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால், இங்கே உள்ள

https://telegram.me/aedahamlibrary

மதுபான விடுதிகளை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? இங்கே என்றால், பெங்களூர், கேரளா போன்ற இடங்களை விட்டு விடுங்கள். தில்லி, மகாராஷ்ட்ரா, தமிழ்நாடு போன்ற இடங்களை எடுத்துக்கொள்ளுங்கள். நம் சென்னையில் உள்ள சாக்கடை எப்படி இருக்கும்? அந்த மாதிரி இருக்கும் தமிழ்நாட்டில் உள்ள டாஸ்மார்க் கடைகள். புழுத்து நாறும். மூன்று நான்கு ஆண்டுகளாகத் தண்ணீரே ஊற்றப்படாத கழிவறைகள். பல டாஸ்மாக்குகளில் கழிவறைகளே கிடையாது. ஆனால் அரசாங்கத்துக்குக் கிடைக்கும் வருவாயில் முதல் இடம் வகிப்பது மதுபான விற்பனைதான். இதற்கு என்ன சொல்கிறீர்கள்? இங்கே மதுபானம் அருந்துபவரை அரசாங்கமும் சரி, சமூகமும் சரி, ஒரு குஷ்டநோயாளியை விடக் கேவலமாகக் கருதுகின்றன.

மற்றபடி தேக ஆரோக்கியம் பற்றி நீங்கள் எழுதியிருக்கும் அத்தனை விஷயங்களையும் நான் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். சில இடங்களில் வார்த்தைகள் கூட ஒரே மாதிரி இருக்கின்றன. உதாரணமாக, "மதம் எப்படி ஒரு வாழ்வு முறையோ அதைப் போன்றே உடலை வடிவமைத்தலும் ஒரு வாழ்வு முறையே." இதே வார்த்தைகளில் எழுதியிருக்கிறேன்.

ஆனால் மிகப் பெரிய விலை கொடுத்து-கிட்டத்தட்ட உயிர் போயிருக்கும்-வேறு ஒரு விஷயத்தைத் தெரிந்து கொண்டேன். நான் 15 வயதிலிருந்து தினசரி ஓடுபவன். ஜிம்முக்குப் போவேன். ஏரோபிக்ஸ் போவேன். ஒருமுறை கூட உடம்பு சரியில்லை என்று மாத்திரை சாப்பிட்டதில்லை. உடம்புக்கும் வந்ததில்லை. தலைவலி என்றால்கூட என்னவென்று தெரியாது. ஆனால் ஒருநாள் உடல் பரிசோதனைக்குச் சென்றபோது "உடம்பில் கொழுப்பு கன்னாபின்னாவென்று உள்ளது; உடனே பைபாஸ் சர்ஜரி செய்ய வேண்டும்" என்று சொல்லிவிட்டார்கள். அதற்குப் பிறகுதான் தெரிந்தது, பிராணாயாமம், யோகா இரண்டிலும்தான் இருக்கிறது சூட்சுமம் என்று.

இதுபற்றி ஒரு ஜென் கதைகூட இருக்கிறதே? உலகமே புகழும் ஒரு வில்வித்தைக்காரன் ஒரு துறவியிடம் எப்படி எப்படியோ தன்னுடைய திறமைகளைக் காண்பித்துக்கொண்டிருக்கிறான். துறவியின் முகத்திலோ எந்த ஆச்சரியத்தையும் காணோம். 'முற்றும் துறந்தவராக இருந்தும் மனிதருக்குப் பொறாமையைப் பாரேன்' என்று எண்ணிக்கொள்கிறான் வில்வீரன். உடனே அந்த வில்வீரனை அழைத்துக்கொண்டு பக்கத்தில் இருந்த மலை முகட்டுக்குச் செல்கிறார். முகட்டின் விளிம்பில் நின்று கொண்டு கீழே இருந்த ஒரு மரத்தில் தொங்கிக்கொண்டிருந்த பழத்தில் குறி வைத்து அடிக்கிறார் துறவி.

https://telegram.me/aedahamlibrary

பிறகு வில்வீரனை அழைத்துக் குறி வைக்கச் சொல்கிறார்.

அந்த வீரனால் அங்கே ஒருக்கணம் கூட நிற்க முடியவில்லை. கீழே எட்டிய தூரம் வரை அதல பாதாளம். பயந்து நடுங்கியபடி ஓடி வந்து துறவியின் பாதம் பணிகிறான் வீரன்.

“உடம்பைப் பேணிப் பயனில்லை; தியானமும் யோகாவும் பழகுங்கள்.” மருத்துவமனையிலிருந்து கிளம்பும்போது என்னிடம் டாக்டர் சொன்ன வார்த்தைகள்.

நீங்கள் உடற்பயிற்சி நிலையத்தில் பார்த்த மலாவியன் கிடக்கட்டும். இங்கே திருவண்ணாமலையில் 20 குவார்ட்டரை அடித்துவிட்டு ஒருமணிநேரம் தூங்கிவிட்டு அசால்டாக எழுந்துபோகும் சாமியாரைப் பற்றி எந்த விஞ்ஞானத்தில் விளக்கம் இருக்கிறது? இமயமலையில் எத்தனையோ சாமியார்களைப் பார்த்திருக்கிறேன். மைனஸ் 10 டிகிரி செல்ஷியலிஸில் உடம்பில் கோமணம் கூட கட்டாமல் போய்க் கொண்டிருப்பார்கள்.

மற்றபடி தேக வலிமை என்பதெல்லாம் அவ்வளவு தூரம் பிரமிக்க வைக்கும் விஷயம் அல்ல என்று நினைக்கிறேன். ஒவ்வொரு இனத்துக்கும் அந்த இனத்துக்கு உண்டான சில விசேஷ தன்மைகள் உள்ளன. என் பப்புவுக்கும், ஸோரோவுக்கும் உள்ள வித்தியாசம் மாதிரி. அவ்வளவுதான்.

நம் எல்லோருக்குமே தெரிந்த விஷயம்தான். தேகம் சம்பந்தமாக ஹத யோகத்தில் இல்லாத விஷயமே இல்லை. வஜ்ராசனம் செய்தால் கல்லைத் தின்றால்கூட செரித்துவிடும் என்பார்கள். உடற்பயிற்சி நிலையத்துப் போய் எடைக்கற்களைத் தூக்குவதைவிட, இருந்த இடத்திலேயே சிரசாசனமும், சர்வாங்காசனமும் செய்தால் அதற்கு ஈடு இணை எதுவுமில்லை என்பது நான் அனுபவபூர்வமாக அறிந்த உண்மை. இப்போது நான் Gym-ஐ விட Kym-ஐயே நம்புகிறேன். Krishnamachari Yoga Mandiram.

சாரு

13.5.2009

https://telegram.me/aedahamlibrary

பூமியில் கைகூடும் சொர்க்கம்

‘ஸ்தூலமும் சூட்சுமும்’ என்ற தலைப்பின் கீழ் நீங்கள் குறிப்பிட்டிருந்தவற்றைத் தொடர்ந்து சில வாகள்...

“ஒவ்வொரு இனத்துக்கும் அந்த இனத்துக்கு உண்டான சில விசேஷ தன்மைகள் உள்ளன. என் பப்புவுக்கும் ஸோரோவுக்கும் உண்டான வித்தியாசம் போல. அவ்வளவுதான்.”

மிக முக்கியமான ஒரு விஷயத்தை எவ்வளவு எளிமையாக சில வார்த்தைகளின் கோர்வையில் சொல்லிவிட்டீர்கள்! உண்மைதான். என்னுடைய எண்ணமும் இப்படியானதாகவே இருந்திருக்கிறது. உலகமும் இப்படியான புரிதல் கொண்டதாகவே நடைமுறையில் இருந்துவிட்டால் எந்தவித சிக்கலும் இருக்காது. அமைதி பரவி மனிதர்களுக்கு சொர்க்கம் பூமியில் கை கூடி இருக்கும். அப்போது சொர்க்கம் என்ற வார்த்தைக்கான தேவையும்கூட இருக்காது. ஆனால் மனித மனம் என்ற வினோதமான வஸ்து விசித்திரமாகச் செயல்படுகிறது. பப்புவுக்கும் ஸோரோவுக்கும் இடையே எது சிறந்தது என்ற போட்டி இல்லை. மனிதர்களுக்கு மத்தியில் இருக்கிறது. இன்றைய உலகில் பிறவி எடுப்பது ஒரு பெரும் ஓட்டப்பந்தய களத்தில் குதிப்பதைப் போல. மனிதர்கள் பிறந்தது முதல் ஒருவருடன் ஒருவர் போட்டி போட்டுக்கொண்டே ஓடுகிறார்கள். இதில் இனம், தேசம், மொழி, ஜாதி என்ற ரீதியில் தன்னுடையது சிறந்தது என்று பெருமை கொள்வதையே மனிதர்கள் விரும்புகிறார்கள்.

மலாவியைப் பொறுத்தவரை இதனை அனைத்து வகையிலும் பின்தங்கிய தேசமாகவே பிற தேசங்கள் பார்க்கின்றன. இங்கிருக்கும் இந்தியர்கள் ஒருவகை சூப்பிரியாரிட்டி காம்ப்ளக்சுடன் வாழ்வதனை முன்பே குறிப்பிட்டிருந்தேன். எல்லோருக்கும் எப்படியோ ‘இவர்களை விட தாங்கள் உயர்வு’ என்ற எண்ணம் மேலிட்டுவிடுகிறது. அதனை நியாயப்படுத்த இருக்கவே இருக்கிறது இந்த தேசத்தின் பொருளாதார சூழல். இங்கிருக்கும் இந்தியர்களில் ஒருவர்கூட மலாவியன் ஒருவனின் வீட்டுக்குச் சென்று வருவதை விரும்புவதில்லை. தீண்டாமை நிலையே பரவிக் கிடக்கிறது.

மலாவி போன்ற நாடு முன்னேற வேண்டும் என்று பேசுகையில் எந்த

https://telegram.me/aedahamlibrary

வகை முன்னேற்றம் என்று யோசிக்கிறோம் என்று கவனம் கொள்ள வேண்டி இருக்கிறது. அறிவில் - அதனை காசாக்கிக் கொள்ளும் சிந்தனையில் - நாம் இவர்களை விட முன்னிலை வகிக்கிறோம் என்றால், அதற்கு இணையாக உடல் பலத்தில், சரீர அமைப்பில் அவர்கள் நம்மை விட சிறந்தவர்களாக இருக்கிறார்கள். ஆனால் எப்போதும் முன்னது மட்டுமே பேசப்படுகிறது. பின்னது முற்றிலுமாக புறக்கணிக்கப்படுகிறது. ஒவ்வொரு இனத்துக்கும் அந்த இனத்துக்கு உண்டான விசேஷ தன்மைகள் உள்ளன - அது என்னவென்று அறிவோம் என்றால் சிந்தனை சாத்தியமான மனிதன் சிறந்தவற்றை நோக்கித் தன்னை முன்னேற்றிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படும்.

இந்தக் காரணத்தினாலேயே இயற்கையான உடல் வலிமை பெற்றிருக்கும் மலாவியன் ஒருவனின் மேல் எழுந்த பொறாமையைப் பதிவு செய்யத் தோன்றியது.

மேலும், தியானம் பற்றியும், மனதின் வழி அது உடலுக்கு ஆற்றும் பங்கு பற்றியும் சற்று அறிந்தவனாகவே இருக்கிறேன் என்ற போதும் மனம் பற்றியும் தியானம் பற்றியும் பேசுகையில் ஜெ.கிருஷ்ணமூர்த்தியின் கருத்துக்களே எனக்கு மிக முக்கியமானதாகப்படுகிறது.

ஜெ.கிருஷ்ணமூர்த்தி, தியானம் என்பது ஒரு இடத்தில் அமர்ந்து செய்யும் காரியம் அல்ல; மாறாக வாழ்வின் ஒவ்வொரு நொடியிலும் நிகழ வேண்டிய விஷயம் என்கிறார்.

மனித மனம் என்பது இரண்டாகப் பிளவுபட்டு வாதப் பிரதிவாதங்களுக்குத் தன்னை உட்படுத்தியபடியே இருக்கிறது. அது எப்போதும் நிலைகொள்வதில்லை. நகர்ந்தபடியே இருக்கிறது. எளிமையான வார்த்தைகளில் சொல்ல வேண்டுமென்றால் காபி குடிக்கும்போது அலுவலகத்தைப் பற்றி எண்ணம் கொள்கிறது. இதனால் கையிலிருக்கும் காபியை முழுமையாகக் குடிக்க முடிவதில்லை. இதனால் சக்தி விரயம் ஏற்படுகிறது. இதற்கு பதிலாக அந்த நொடியில் முழுமையாக மனித மனம் லயிக்குமானால் இந்த சக்தி விரயம் தவிர்க்கப்படும். அப்போது அந்த முழு கவனத்தின் காரணமாக சக்தி ஒருமுகப்படுத்தப்பட்டு வார்க்கையே தியான மயமாக மாறும். அந்த நிலையில் பிரபஞ்சத்தின் பகுதியான மனிதன், மனதின் அலைவின் காரணமாக பிரிந்து நிற்காமல், பிரபஞ்சத்துடன் இணைந்து பிரபஞ்சமாகவே ஆகி விடுகிறான். அத்தகைய நிலையில் அவனால் சராசரிகளால் செய்ய முடியாத சில செயல்களைச் (miracles) செய்ய முடியும்- இப்படியாகவே நான் ஜெ.கிருஷ்ணமூர்த்தியையும், ஜென் துறவிகளையும், சித்தர்களையும் புரிந்துகொள்கிறேன். (நீங்கள் எங்கோ

https://telegram.me/aedahamlibrary

ஒரு இடத்தில் பௌத்தம் கூறும் யுனிஃபைட் செல்ஃப் என்று குறிப்பிட்டு எழுதியதாக ஞாபகம்; எங்கு என்று நினைவில்லை).

ஜெ.கிருஷ்ணமூர்த்தியைக் கடுமையாக விமர்சிக்கும் யு.ஜி.கிருஷ்ணமூர்த்தியும் கூட ஒருவகையில் இதையே கூறுகிறார்.

'மைன்ட் இஸ் எ மித்' என்பதே இவரது சொற்களின் சாராம்சமாகக் காண்கிறேன். நம் உடலின் ஒவ்வொரு செல்லிலும் மனம் தன் இயக்கத்தினைக் கொண்டிருக்கிறது. திடீரென ஒருநாள் மனம் என்ற வெற்று நம்பிக்கையிலிருந்து உடல் விடுபடுமென்றால் உடலின் ஒவ்வொரு செல்லும் சிலிர்த்தெழும். அப்படிப் பொங்கியெழும் சக்தி வெளிப்பாடு உடலுக்கு ஏற்படும் பிரளயம் போல. இதனை ஒன்றுக்கும் உபயோகமில்லாத வெற்று நம்பிக்கையான மனதினை வைத்துப் புரிந்துகொள்ளவோ பயிற்சி செய்து அடையவோ முடியாது. யாரை அது தேர்ந்தெடுக்கிறதோ அவர்களை அதிர்ஷ்டவசமாக அடைகிறது. இத்தகைய நிலை மனதின் சாவிலிருந்து எழுவது-மனம் இறந்துவிட்டால் வாழ்வே இறந்துபோனது போல. இது புரியாமல் மனிதர்கள் எது எதையோ முயற்சிக்கிறார்கள். உண்மையில் வெளியேற வழியே இல்லை. வாழ்வை வரும்படி ஏற்றுக்கொள்வது மட்டுமே சாத்தியம்.

- இதுவே நான் யு.ஜி.யிடமிருந்து புரிந்துகொள்வது.

இந்தத் தோரணையில் மேலும் சென்று அவர் தடாலடியாக தியானம், உடற்பயிற்சி போன்றவை உடலின் இயற்கைக்கு எதிரானவை என்று கூறுகிறார். இதில் எனக்கு முக்கியமாகப்படுவது என்னவென்றால், இவையெல்லாம் அவர்களது கோட்பாடுகளோ நம்பிக்கையோ அல்ல; மாறாக அவர்களின் அனுபவங்களின் பிரதிபலிப்பு!

இந்த இரு கிருஷ்ணமூர்த்திகளைப் பற்றியும் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? தெரியவில்லை.

உங்களின் கடவுளும் நானும் படித்திருக்கிறேன்.

என்னைப் பொறுத்தவரை There is a grain of sand and the mystery of it behind all the power of understanding என்ற ஜே.கிருஷ்ணமூர்த்தியின் வாக்கியத்தையே கடவுள் பற்றிய எனது கருத்தாகக் கொள்கிறேன்.

நீங்கள் சொல்வது போல் இவர்களைப் போன்றவர்களிடம் சிக்மென்ட் ஃப்ராய்ட், விஞ்ஞானம் என எதுவும் செல்லுபடி ஆகாது. அதற்குக் காரணமாக நான் எண்ணுவது - மனம் என்ற ஒன்று நாம் வகுத்துக் கொண்டிருக்கும் அர்த்தத்தில் இவர்களிடம் இல்லை. அது வேறு ஏதோவாக இருக்கிறது. கிட்டத்தட்ட Refelexive Action வகையில்

https://telegram.me/aedahamlibrary

செயல்படுகிறதோ என்னவோ, யார் கண்டது? கண்டவர் சொன்னதில்லை, சொன்னவர் கண்டதில்லை. இதில் ஜே.கிருஷ்ணமூர்த்தி மட்டுமே தான் கண்ட அந்த ஏதோ ஒன்றை ஓரளவுக்கு மனதின் செயல்பாடுகளின் அடிப்படையில் வார்த்தைப்படுத்தியிருக்கிறார். அப்படி வார்த்தைப்படுத்திவிட முடியும் என்று நம்பிக்கை கொண்டதே ஜே.கே.வின் கோமாளித்தனம் என்கிறார் யு.ஜி! இவர்களது சொற்கள் வழி கவனிக்கையில், ஆங்கில மருத்துவர்கள் கூறும் ஒரு மணி நேர தியானம் என்பது பரபரப்பான மனதை சற்று ஆசுவாசப்படுத்தி, சதா சர்வகாலமும் பரபரப்பின் பெயரில் அது உடலுக்கு ஏற்படுத்தும் கேடுகளை சற்று ஒத்தி வைத்தல் என்று மட்டுமே என்னால் எடுத்துக்கொள்ள முடிகிறது.

“அவர்கள் ஞானிகள் வேறு ஏதோ ஒன்றினைத் தங்கள் வாழ்வில் கண்டடைந்தவர்கள். அது வேறு; நடைமுறை வாழ்வின் மருத்துவத் தேவை வேறு” என்று கூறுவீர்களானால் என்னிடம் பதில் இல்லை.

எப்படியிருந்தாலும் 30 வருடங்களுக்கு மேலாக எழுதி வரும் எழுத்தாளரோடு பேசுகையில் Higher Sense-ல் தியானத்தைப் பற்றிப் பேசவே நான் விரும்புகிறேன்.

நீங்கள் குறிப்பிட்டிருந்த ஜென் கதைக்கு இணையான காட்சி Spring, Summer, Fall, Winter and Spring படத்திலும் வருகிறது அல்லவா! தண்ணீரில் மிதக்கும் குளிர்பான டின் ஒன்றைச் சுட முயன்று காவலர்கள் தோற்றபடி இருக்க, அவ்விடத்தின் அமைதியை காக்க வேண்டி அந்தப் படத்தில் வரும் குருவானவர் அருகிலிருக்கும் ஒரு சிறு கல்லை எடுத்து அந்த டின்னினை அடித்துவிட்டு சாவதானமாகச் செல்லும் காட்சி! - சட்டென்று நினைவுக்கு வந்தது; பகிர்ந்து கொண்டேன்.

மொத்தத்தில் யோகா என்றாலும் எடைக் கற்களை தூக்குவது என்றாலும், வாழ்வில் நொடி தோறும் நிகழும் தியானத்திலிருக்கிறது சூட்சமம் என்று நினைக்கிறேன்.

இதில் யோகா என்பது உள்உறுப்புகளைப் பராமரித்து, ரத்த ஓட்டத்தைச் சீர்படுத்தி, குறைவான சக்தி செலவில், மென்மையாக உடலினை மெருகேற்றுவது. மயிலாடுதுறையில் இருந்த நாட்களில் யோகா கற்க முயன்று தோற்றேன் - காரணம்? வேறென்ன, சோம்பேறித்தனம்தான். அந்த யோகா மாஸ்டர் 30 வருடங்களாக முறையாக பயிற்சி செய்பவர். ஒரு நாளைக்கு 20 ரூபாய் இருந்தால் தன் வாழ்விற்குப் போதும் என்பார். பெரும்பாலும் தானிய வகைகள் மற்றும் காய்கறிகளே அவர் உணவு. இதிலிருந்து யோகா என்பது பட்சியைப்

https://telegram.me/aedahamlibrary

போல் உடலினை லகுவாக அமைத்துக்கொள்ளுதல் என்ற புரிதல் கொண்டேன். இதில் வசதி அதிகம். தேவைகள் குறைவு.

எடைக் கற்களைத் தூக்குவதோ இதற்கு நேர் மாறானது. சிங்கத்தின் வலிமையைக் குறி வைப்பது. இதை முயற்சி செய்தால் வாழ்வு முழுக்கத் தொடர வேண்டும். நீங்கள் நாவல் பற்றியும் கவிதை பற்றியும் ஒப்பிட்டு எழுதியது இந்த விஷயத்தில் பொருந்தும் என்று நினைக்கிறேன். யோகா தேவதைகளுடன் கொஞ்சுதல், எடைக் கற்கள் சாத்தானின் கோட்டை. இரண்டும் நாணயத்தின் இரு பக்கங்கள் என்று ஒப்பிடுவது நியாயம் சேர்க்காது என்றே தோன்றுகிறது. இந்த ரெபடிஷன் பற்றியும் கொஞ்சம் சொல்லவேண்டும்:

எனக்குப் பாவ புண்ணியங்களில் நம்பிக்கையில்லை. ஒருவேளை அப்படி நம்பிக்கை ஏற்பட்டு பாவங்களைப் பட்டியலிடுகிறேன் என்று கொள்வோம். அதில் முதலாவதாக இடம்பெறப் போவது ஒரு எழுத்தாளரைப் படித்து உள்வாங்காமல் அவருக்குக் கடிதம் எழுதுவதுதான். நான் அந்தப் பாவத்தை எந்த நிலையிலும் செய்யமாட்டேன்.

அதற்காக நீங்கள் இன்று வரை எழுதிய அனைத்தையும் வாசித்து முடித்துவிட்டேன் என்று சொல்லிவிட முடியாது. குறிப்பாக சென்ற வருடம் ஒருவித மன அழுத்தத்திற்கு உள்ளாகியிருந்தேன். வாசிக்கும் மனநிலையை முற்றிலுமாக இழந்திருந்தேன். அதனால் ஒன்றுமே - ஒன்றுமே என்றால் டிவியின் யூஸர்ஸ் மானுவல் கூட - வாசிக்கவில்லை. நீங்களும் கொஞ்சமாக எழுதுகிறவர் இல்லை. இரண்டு நாட்கள் இணையதளத்தை பார்க்காவிட்டால் ஏராளமாகச் சேர்ந்துவிடுகிறது. இதில் ஒரு வருடத்தை எப்போது படித்து முடிப்பது! உங்கள் எழுத்துக்களை உள்வாங்கிய வாசகனுக்கு நீங்கள் எதைப் பற்றி என்ன சொல்வீர்கள் என்று ஓரளவுக்குத் தெரிந்திருக்கும். அந்த வகையில் தேர்ந்தெடுத்து வாசித்துக்கொண்டேன்.

எந்த ஒரு எழுத்தாளரும் தன் ஒரு கதையையே பல்வேறு முறையில் எழுதிப் பார்க்கிறார் என்று எங்கோ படித்த நினைவு. எனவே ஒரு எழுத்தாளரை முழுக்கப் படிப்பதைவிட அவரை உள்வாங்கிக் கொள்வதே முக்கியமாகப் படுகிறது.

ஆக, இந்த ரெபடிஷனுக்கு ஏதோ ஒருசிலவற்றைப் படிக்கத் தவறவிட்டிருப்பதே காரணமாக இருக்கும். தவிர, சில விஷயங்களில் அலைவரிசை ஒன்றாக இருந்தால் ஒன்று போலத் தோற்றமளிக்கும் வாசகங்கள் தானே வந்து சேரும். அப்படியே இதனை எடுத்துக்கொள்ள

https://telegram.me/aedahamlibrary

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தன் வாழ்நாள் முழுக்க ஜே.கிருஷ்ணமூர்த்தியை விமர்சித்த யூ.ஜி. தன் தரப்பைச் சொல்கையில் பயன்படுத்திய வாசகங்கள் பெரும்பாலும் ஜே.கே.சாயல் கொண்டது!

நீங்கள் வெளியிட்டிருந்த சில கடிதங்களைப் படித்தேன். எப்படி உள்வாங்குகிறார்கள் என்பதை கவனிக்க சுவாரஸ்யமாக இருந்தது. மற்றபடி வாசிக்கப்படும் நிலையை உங்கள் முதுகில் தொற்றியபடி அனுபவம் கொள்கிறேன். என்னுள் இருக்கும் ஒருவன் மகிழ்ச்சியடைகிறான். என்னுள் அமர்ந்து எழுதுபவனோ கவனமடைகிறான். பிளவுபட்ட மனதில் இந்த இருவரும் தவிர்க்கமுடியாமல் இருக்கவே செய்கிறார்கள். என்ன செய்வது, நான் ஜே.கிருஷ்ணமூர்த்தி இல்லையே.

அன்புடன்,

ஆனந்த்.

மே 18, 2009.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இண்டெலக்சுவல் ப்ராஸ்டிட்யூட்ஸ்--1

அன்புள்ள ஆனந்த்,

என் கல்லூரிப் பருவத்தில் ஜே.கிருஷ்ணமூர்த்தியைப் பற்றி அறிந்தேன். படித்துவிட்டு அவர் ஒரு ஃப்ராட் என்று முடிவு கட்டினேன். பிறகு இம்மாதிரி ஆசாமிகளைப் படித்து நேரத்தை வீணாக்கிக் கொள்ளக் கூடாது என்று அந்தப் பக்கமே திரும்புவதில்லை. அப்போது என் வாழ்வில் ஒரு சுவாரசியமான சம்பவம் நடந்தது. டெபொனேர் என்ற பத்திரிகையை அப்போது நான் விரும்பிப் படித்துக்கொண்டிருந்தேன். அதில் வரும் பேட்டிகள் ஒரு காரணம். மற்றொரு காரணம், அப்பத்திரிகையின் நடுப்பக்கத்தில் வரும் பெண்களின் நிர்வாணப் புகைப்படம். அதில்தான் ஒருமுறை ஒரு நடிகை தான் ஒரு எக்ஸிஸ் டென்ஷியலிஸ்ட் என்று கூறியிருந்தார். அந்த நடிகையின் பெயர் பர்வீன் பாபி. அப்போது என் வயது 18. அதிலிருந்துஉன் சார்த்தரைக் கற்று, பிறகு ஃபூக்கோ வழியாக பின்நவீனத்துவத்தை வந்தடைந்தேன்.

அப்படி ஒரு அடுத்த கட்டத்தைச் சென்றடையாத பலர் சித்த சுவாதீனத்தை இழந்ததையும், குடிக்கு - அடிமையானதையும், தற்கொலை செய்துகொண்டதையும் அறிந்திருக்கிறேன். நீலமலைப் பனிமலர் என்ற பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்த என்னுடைய நண்பன் பு.வ.மணிக்கண்ணன், ஆத்மாநாம் போன்றவர்களின் தற்கொலை இதற்கு உதாரணங்கள். பர்வீன் பாபியும் சித்த சுவாதீனம் இழந்து அல்லல்பட்டார்.

பிறகு, நீண்ட காலம் சென்று ஓஷோ மற்றும் யூ.ஜி. கிருஷ்ணமூர்த்தி இருவரையும் படித்தேன். ஓஷோ மிகுந்த கவர்ச்சிகரமாகத் தெரிந்தார். ஆச்சரியகரமாக, பல விஷயங்களில் அவருக்கும் எனக்கும் ஒத்த கருத்தே இருந்தது. இதை என்னுடைய வாசகர்கள் பலரும் சுட்டிக்காட்டியபடி இருந்தனர். பிறகுதான் புரிந்துகொண்டேன்; அவருடைய நதிமூலமும் என்னுடைய நதிமூலமும் ஒன்றுதான் என. அதனால் ஓஷோவைப் படிப்பதை நிறுத்திவிட்டேன். இந்த மூவரில் யூ.ஜி. பரவாயில்லை என்று தோன்றியது. ஏனென்றால், சிந்தனையாளர்கள் நிறுவனமயமாவதை எதிர்த்தார் யூ.ஜி. அவர் கூறியபடியே ஜே.கே, ஓஷோ இருவரும் மிக

https://telegram.me/aedahamlibrary

மோசமான, அருவருப்பான நிறுவனங்களை உருவாக்கினார்கள். ஆனால் யூ.ஜி. தனக்கென்று ஒரு கோஷ்டியை உருவாக்கிக்கொள்ளவில்லை. அதை அவர் எப்போதுமே அனுமதித்ததில்லை.

“மனிதகுலத்துக்கு என்னிடம் எந்தச் செய்தியும் இல்லை” என்று சொன்ன யூ.ஜி.யை நான் ஒரு ஜென் குருவாக எண்ணினேன். ஜே.கே. உருவாக்கியது போல், அவர் தன்னுடைய உரையாடலை ஸ்தாபனப்படுத்தவில்லை. “நான் ஒரு தீர்க்கதரிசி அல்ல; அதைவிட நீங்கள் என்னை ஒரு ஃப்ராட் என்று அழைக்கலாம். மனித மனம் என்ற அந்தக் குளறுபடியான விஷயம்தான் பல அழிவுகளுக்குக் காரணமாக இருந்திருக்கிறது. அந்த அழிவுகளிலேயே மிகப் பெரிய அழிவு, கடவுள். மனித குலத்தை உய்விக்க வந்தவர்களாகச் சொல்லப்படும் இயேசு, புத்தர் போன்ற தீர்க்கதரிசிகளோடு என்னைச் சேர்க்காதீர்கள். அவர்களால்தான் இந்த உலகம் இப்படிக் கெட்டுப் போயிருக்கிறது.”

இப்படியெல்லாம் சொன்னதால் நான் யூ.ஜி.யை ஒரு பயங்கரமான sபதீஸ்மீக்ஷீsவீஸ்மீ சிந்தனாவாதியாகக் கருதினேன்.

எக்ஸிஸ்டென்ஷியலிசம் எனக்கு பர்வீன் பாபி மூலமாகத் தெரிய வந்தது போலவே, யூ.ஜி. பற்றிய அறிமுகம் பர்வீன் பாபியின் காதலர் மகேஷ் பட்டின் மூலமாகக் கிடைத்தது. ஆனால், அதுவும் குறுகிய கால ஈர்ப்பாகவே அமைந்தது. ஜே.கிருஷ்ணமூர்த்தியையும் ரஜனீஷையும் ஃப்ராட் என்று கூறினார் யூ.ஜி. இன்னும் ஒரு படி மேலே போய், ரஜ்னீஷை விபச்சாரத் தரகன் என்று வர்ணித்தார். பதிலுக்கு மிக ஆபாசமாக யூ.ஜி.யைத் திட்டினார் ரஜ்னீஷ். ஒரு கட்டத்தில் ரஜ்னீஷின் சீடர்கள் பெருவாரியாக யூ.ஜி.யைக் கேட்க ஆரம்பித்ததால் ரஜ்னீஷின் ஆசிரமத்துக்கு வெளியே பெரிய போர்டே மாட்டினார்கள்; சீடர்கள் யாரும் யூ.ஜி.யின் பேச்சுக்களைக் கேட்கச் செல்ல வேண்டாம் என்று. யூ.ஜி.யை ஒருமுறை கேட்டவர்கள் அந்தக் கணமே ரஜ்னீஷை நிராகரித்தார்கள். மகேஷ் பட்டும் அப்படி நிராகரித்தவர்தான். யூ.ஜி.யைக் கேட்டுவிட்டு ரஜ்னீஷ் தனக்கு அளித்திருந்த மணிமாலையை அறுத்து கக்கூஸில் போட்டதாக எழுதுகிறார் மகேஷ் பட். ஆக, ‘ரஜ்னீஷுக்கும் நம்மூர் நாலாந்தர அரசியல்வாதிக்கும் என்ன வித்தியாசம்?’ என்று என்னையே கேட்டுக்கொண்டேன். ரஜ்னீஷும், யூ.ஜி.யும் ஒருவரை ஒருவர் திட்டிக்கொண்ட வசைமொழிகளைக் கேட்டால் நம்முடைய தமிழ் வலைமனைகளில் வரும் பின்னூட்டங்கள்தான் நினைவுக்கு வருகிறது. இப்படி இவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் நிராகரித்துக்கொள்ளும் போது நாம் ஏன்

https://telegram.me/aedahamlibrary

இவர்கள் இருவரையுமே நிராகரிக்கக் கூடாது?

இவ்வாறு அந்த மூவரையும் நான் நிராகரித்து முப்பது ஆண்டுகள் இருக்கும். இப்போது உங்கள் கடிதத்தைப் படித்த பிறகு இந்த மூவரையும் மீண்டும் படித்தேன். அதனால்தான் கடிதம் எழுதத் தாமதம். இப்போது நானும் ஆன்மீக நாட்டம் கொண்டவனாகிவிட்டதால் எனக்குள் ஒரு சம்சயம். இப்போது படித்தால் அவர்கள் மூவரையும் நமக்குப் பிடிக்கும் என்பதுதான் அது.

ஆனால், முப்பது ஆண்டுகளுக்கு முன்னால் அவர்கள் மூவரும் ஃப்ராட் என்று தோன்றியது. இப்போது அயோக்கியர்கள் என்று தோன்றுகிறது. பாரிஸ் நகரின் தெருவோரங்களில் இருட்டில் விபச்சாரிகள் ப்ளோஜாப் செய்துவிடுவார்கள். ஆண்களுக்கு ப்ளோஜாப் என்றால் பிடிக்கும். தன் காதலியிடம் அந்த இன்பம் கிடைக்காதவர்கள் அதை விபச்சாரிகளிடம் பெறுகின்றனர். அப்படி இண்டலெக்சுவல் ப்ளோஜாப் செய்துவிடுபவர்களாகவே ஜே.கே., ரஜ்னீஷ், யூ.ஜி. போன்றவர்களை நினைக்கிறேன்.

இணைய தளத்தில் எதுவும் எழுதாத இந்த ஒரு வார காலத்தில் இந்த மூவரின் உளறல்களையும் சுமார் ஆயிரம் பக்கம் படித்திருப்பேன். ஷேக்ஸ்பியர், ஆண்டாள், காளிதாசன் போன்ற அற்புதங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒருவனுக்கு ஜே.கே., யூ.ஜி., ரஜ்னீஷ் போன்ற இண்டலெக்சுவல் ப்ளோஜாப் தேவையில்லை என்பது அடியேனின் தாழ்மையான கருத்து. என் கல்லூரிப் பருவத்திலும் இதையேதான் நினைத்தேன் என்பது எனக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. அப்போது ஷேக்ஸ்பியர், ஆண்டாள் என்ற பெயர்களுக்கு பதிலாக ஆஸ்கார் ஒயில்ட், லூயி ஃபெர்தினாந்த் செலின், ஜெனே என்று இருந்தது. ஒரு அழகிய நந்தவனத்தில் ஏகப்பட்ட குமரிகளுடன் வாழும் ஒருவனுக்குத் தெருவோரத்து விபச்சாரியின் தொழில்ரீதியான உடலுறவு தேவையா? ஒரு சமூகத்துக்கு ஜே.கே., யூ.ஜி., ரஜ்னீஷ் போன்ற இண்டலெக்சுவல் ப்ராஸ்டிட்டியூட்டுகள் தேவைதான் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் பின்நவீனத்துவ சிந்தனையில் பரிச்சயமுள்ளவர்களுக்கு இவர்கள் தேவையில்லை.

நேரடியாகக் கற்றுத்தர புத்தன் இருக்கும்போது எதற்கு இந்த வீணாய்ப் போன உரையாசிரியர்கள்? இவர்கள் கெட்டுப்போன எண்ணையில் மீனை வறுத்துக் கொடுக்கும் கடற்கரையோரத்து ஃபாஸ்ட் ஃபூட் ரகத்து ஆட்கள். ஆனால் புத்தன் நமக்கு வலையையும், தூண்டிலையும் தருகிறான். வேறு மாதிரி சொன்னால், ஜே.கே.வும் ஜியும் ஓஷோவும் நமக்கு சிந்தனைகளை கேப்ஸ்யூலாகத் தருகிறார்கள். புத்தனும்,

https://telegram.me/aedahamlibrary

ஃபூக்கோ போன்ற பின்நவீனத்துவ சிந்தனையாளர்களும் நமக்காக அவர்கள் சிந்திப்பதில்லை; மாறாக, சிந்திப்பதற்கான அணுகுமுறையைக் காட்டுகிறார்கள்.

இந்த ஒரு வார காலத்தில் என்ன படித்தேன் என்பதை இப்போது உங்களோடு பகிர்ந்துகொள்ளப் போகிறேன்.

(தொடரும்)

2.6.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இண்டெலக்சுவல் ப்ராஸ்டிட்யூட்ஸ்-2

கூடு விட்டுக் கூடு பாய்தல்...

அந்தப் புத்தகத்தின் ஆரம்பமே அட்டகாசமாக இருந்தது. “நான் அவருடைய கதையை எழுதப் போகிறேன் என்று சொன்னதுமே ‘சொல்வதற்கு எந்தக் கதையுமே இல்லை என்று சொல்லிக்கொண்டிருப்பவனின் கதையை நீ எப்படி எழுதப் போகிறாய்? என்னுடைய கதையைக் கேட்காவிட்டால் இந்த உலகத்துக்கு எந்த நஷ்டமும் வந்து விடப் போவதில்லை’ என்று சொன்னார் யூ.ஜி." மகேஷ் பட் எழுதிய யூ.ஜி.கிருஷ்ணமூர்த்தியின் வாழ்க்கை வரலாறு இப்படித்தான் ஆரம்பிக்கிறது.

ஜே.கே., ரஜ்னீஷ், யூ.ஜி. என்ற மூவரில் யூ.ஜி. பரவாயில்லை என்று சொன்னேன். பரவாயில்லை என்பது கூடத் தவறு. முதல் இரண்டு நபர்களுடன் யூ.ஜி.யை ஒப்பிடவே முடியாது. காரணம் இதுதான். “உங்களுக்கு ஒரு குரு கிடைத்துவிட்டார் என்றால் நீங்கள் ஒரு தவறான ஆளிடமே சென்றடைந்திருக்கிறீர்கள் என்று பொருள்” என்கிறார் யூ.ஜி.

ரஜ்னீஷ் ஆன்மீகத்தை LSD அனுபவமாக மாற்றியவர். தன்னை பகவான் என்று அழைத்துக்கொண்டவர். விடுதலையைத் தேடிப்போனால் ஒரு புதிய சிறையில் உங்களைச் சிக்க வைப்பவர். (ஒரு உண்மையான குரு, அப்படி ஒருவர் இருந்தால், அவர் தன்னிடமிருந்தே உங்களை விடுவிக்கக்கூடியவராக இருப்பார் - யூ.ஜி.) ரஜ்னீஷ் ஒரு உரையாசிரியர். பௌத்த சித்தாந்தங்களுக்கு ஒரு கவர்ச்சிகரமான உரையை எழுதினார். அவ்வளவுதான். மற்றபடி அவருடைய வாழ்க்கைக்கும் திருச்சி பிரேமானந்தாவின் வாழ்க்கைக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ரஜ்னீஷ் பற்றி யூ.ஜி.யின் கருத்து இது: “இந்த உலகம் இப்படி ஒரு பிம்ப்பை இதுவரை பார்த்ததில்லை; இனிமேலும் பார்க்கப் போவதில்லை. பிம்ப்புகள் குறைந்தபட்சம் ஆண்களிடம் பணம் வாங்கி அதைப் பெண்களிடம் கொடுக்கிறார்கள். இந்த வகையில் அவர்களுக்கும் ஒரு பங்கு கிடைக்கிறது. அதைக் கொண்டு அவர்கள் வாழ்கிறார்கள். ஆனால் ரஜ்னீஷோ ஆண் பெண் இருவரிடமிருந்தும் பணத்தை வாங்கிக்கொண்டு அதை அவரே வைத்துக்கொள்கிறார்.”

https://telegram.me/aedahamlibrary

யூஜி பிறந்து (1918) ஏழு தினங்களிலேயே அவருடைய அம்மா இறந்துவிடுகிறார். ஆனால் இறக்கும்போது அவர் சொன்ன ஒரு வாசகம்தான் யூ.ஜி.யின் வாழ்வையே தீர்மானிப்பதாக இருந்திருக்கிறது. "இந்தக் குழந்தை மிகப் பெரிய ஞானியாக வருவான்" என்பதே அவர் சொன்னது. பௌத்த மடாலயத்தில் ஒரு மூன்று வயது பாலகன் புத்த பிட்சுவாக பயிற்சியளிக்கப்படுவதைப் போல் மிகப் பெரிய சித்ரவதைக்குள்ளாகிறான் சிறுவன் யூ.ஜி. சிறு குழந்தைக்கான எல்லாவித சந்தோஷங்களும் - அவனுக்கு மறுக்கப்படுகிறது. தந்தை மறுமணம் புரிந்துகொண்டு யூ.ஜி.யை அவருடைய தாத்தா பாட்டியிடம் விட்டுவிடுகிறார். தாத்தா தன் மகள் சாகும் தறுவாயில் கூறியதை நனவாக்குவதன் பொருட்டுத் தன் பேரனை பெரிய ஞானியாக்குவதற்கான அத்தனை முயற்சி களையும் எடுத்துக்கொள்கிறார். அதுவே யூ.ஜி.க்கு மிகப் பெரிய தண்டனையாக அமைகிறது. இளம் வயதிலேயே வேதங்களும் உபநிஷதங்களும் பயிற்றுவிக்கப்படுகின்றன. யூ.ஜி.யின் தாத்தா தியாசஃபிகல் சொசைட்டியின் சீனியர் உறுப்பினராக அதன் உள்வட்டத்தில் இருந்தவர்.

அப்போது யூ.ஜி.யின் வாழ்வில் நடந்த இரண்டு சம்பவங்கள் அவருடைய பிற்கால வாழ்வையும், மனப்போக்கையும் தீர்மானிக்கத்தக்கதாக அமைகின்றன. ஒருநாள் தாத்தா தியானம் செய்துகொண்டிருக்கிறார். அப்போது அவருடைய பேத்தி விடாமல் அழுகிறாள். தியானம் செய்ய முடியாமல் எழுந்து வரும் தாத்தா அந்தச் சிறு குழந்தையை மிருகத்தனமாக அடித்து விளாசுகிறார்.

யூ.ஜி.க்கு வயது 14. தாத்தாவின் வீட்டுக்கு வரும் சங்கராச்சாரியாரியார் யூ.ஜி.க்கு ஒரு மந்திரத்தை உபதேசம் செய்கிறார். அதற்கு அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு தினமும் 3000 தடவை அந்த மந்திரத்தை உச்சரிக்கிறார் யூ.ஜி. அப்போது ஒரு முக்கியமான சடங்குக்காக வீட்டில் உள்ளவர்கள் விரதம் இருக்கிறார்கள். உண்ணாவிரதம். அப்போது அந்தச் சடங்கை முன்னின்று நடத்திக் கொண்டிருந்த புரோகிதர்கள் தாத்தாவுக்குத் தெரியாமல் ஓட்டலில் சாப்பாட்டை வெளுத்துக் கட்டுவதைப் பார்க்கிறார் யூ.ஜி. உடனேயே பூணூலை அறுத்து எறிந்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறுகிறார். அப்போது தாத்தா யூ.ஜி.யிடம் "I Will disown you" என்று சொல்ல அதற்கு யூ.ஜி. "You don't own me; how can you disown me" என்று சொல்லிவிட்டுப் புறப்படுகிறார்.

14 வயதிலிருந்து 21 வயது வரை மிகக் கடுமையான யோக பயிற்சியை மேற்கொள்ளுகிறார். கூடவே ஆன்மீகத் தேடலும் தொடர்கிறது.

https://telegram.me/aedahamlibrary

இமாலயம் சென்று சிவானந்தாவிடம் பயிற்சி எடுக்கிறார். தனக்குத் தூக்க ஸ்கலிதம் ஏற்படுவதைக் கண்டு ஆச்சரியப்படுகிறார். ஸ்திரீகளைப் பார்ப்பதில்லை; ஸ்திரீகளை நினைப்பதில்லை. சாப்பாட்டில் உப்பு, காரம், புளிப்பு எதையுமே சேர்த்துக்கொள்வதில்லை. இருந்தாலும் எப்படித் தன் உடம்பு இவ்விதமாகச் செயல்படுகிறது என்று யோசிக்கிறார். அந்தச் சமயத்தில் ஒருநாள் சுவாமி சிவானந்தா யாருக்கும் தெரியாமல் சமையல் அறையில் ஊறுகாயைத் திருடித் தின்னுவதைப் பார்த்து அந்த ஆசிரமத்திலிருந்து வெளியேறுகிறார்.

1939ஆம் ஆண்டு சென்னை சர்வகலாசாலையில் எம்.ஏ. தத்துவம் படித்துக்கொண்டிருந்த சமயம். ரமணரைச் சந்திக்கிறார் யூ.ஜி. "முக்தி போதத்தை எனக்கு அளிப்பீர்களா?" என்று கேட்கிறார். அதற்கு ரமணர் "தருவேன்; ஆனால் உன்னால் அதை வாங்கிக்கொள்ள முடியுமா?" என்று சொல்ல அங்கிருந்து கிளம்புகிறார்.

இதற்கு இடையில் அவருக்குத் திருமணமும் நடக்கிறது. ஒரு பெண், ஒரு பையன். பையனுக்கு போலியோ. ஜே.கிருஷ்ண மூர்த்தியுடன் தொடர்பு ஏற்படுகிறது. ஜே.கே. ஒரு போலி என்று தெரிந்துகொண்டது இந்தக் காலகட்டத்தில்தான். ஒருநாள் யூ.ஜி.யின் பெண்ணிடம் ஒரு ஆரஞ்சுப் பழத்தைக் கொடுக்கிறார் ஜே.கே. அவள் அதைத் தின்னும்போது தோலையும் விதைகளையும் தரையில் போட, ஜே.கே. அவளிடம் ஒரு குட்டி லெக்சரே அடிக்கிறார். அப்போது யூ.ஜி. "நீங்கள் எவ்வளவு பெரிய லெக்சர் அடித்தாலும் அவள் நாளையும் இதையேதான் செய்வாள்" என்கிறார்.

ஒருநாள் போலியோவால் பாதிக்கப்பட்ட யூ.ஜி.யின் பையனுக்குத் தன்னுடைய பிரத்தியேக சிகிச்சையை அளித்துக்கொண்டிருக்கிறார் ஜே.கே. சிகிச்சை முடிந்து அறைக்கு வெளியே ஜே.கே. ஓய்வு எடுத்துக்கொண்டிருந்போது உள் அறையில் இருந்த ஜே.கே.யின் வாட்சை எடுக்கிறான் பையன். அதைப் பார்த்துவிட்டு மிகுந்த பதற்றத்துடன் "ஐயோ, அது விலை உயர்ந்த வாட்ச் ஆயிற்றே!" என்று கத்திக்கொண்டே அந்த அறைக்குள் ஓடியிருக்கிறார் ஜே.கே.

இன்னொரு முறை யூ.ஜி.யின் மனைவி, யூ.ஜி., ஜே.கே. மூவரும் உரையாடிக்கொண்டிருக்கும்போது செக்ஸ் பற்றிய பேச்சு வந்திருக்கிறது. அப்போது யூ.ஜி.யின் மனைவி ஜே.கே.யிடம் "உங்களுக்கு செக்ஸ் அனுபவம் உண்டா?" என்று கேட்க, அதற்கு ஜே.கே. "இதெல்லாம் தகாத கேள்வி" என்று சொல்லி அதைப் புறக்கணித்திருக்கிறார்.

https://telegram.me/aedahamlibrary

ஒருநாள் ஜே.கேயும், யூ.ஜி.யும் சென்னை கடற்கரையில் நடந்து கொண்டிருந்தபோது ஜே.கே.யிடம் ஒரு சிறுவன் பிச்சை கேட்க, அவனைக் கட்டி அணைத்துக்கொள்கிறார். "அவனுக்கு வேண்டியது காசு; உங்கள் அணைப்பு அல்ல" என்று யூ.ஜி. சொல்ல, "இல்லை. இனிமேல் அவன் இப்படிப் பிச்சை எடுக்க மாட்டான்" என்கிறார் ஜே.கே. ஆனால், யூ.ஜி. சொன்னபடி மறுநாளும் அவர்கள் கடற்கரையில் நடந்துகொண்டிருந்தபோது அதே பையன் அவர்களிடம் பிச்சை கேட்கிறான். இதிலிருந்து தெரிகிறதா, ஜே.கே. போன்றவர்கள் மூன்றாம் உலக நாடுகளுக்கு எவ்வளவு தூரம் தேவையில்லாதவர்கள் என்று?

ஜே.கே.யை ஒரு 'பாய் ஸ்கௌட்' என்கிறார் யூ.ஜி. இந்த உலகம் பற்றிய ஜே.கே.யின் புரிந்துகொள்ளல் அவ்வளவுதான். நடக்கும்போது வழியில் இருக்கும் முள்ளை எடுத்து ஓரத்தில் போடுவாராம் ஜே.கே.

ஆனால் ஜே.கே.யை மறுதலிக்க எவ்வளவு காரணங்கள் உண்டோ அதே காரணங்கள் யூ.ஜி.யை மறுதலிக்கவும் உண்டு. ஐம்பதுகளின் முற்பகுதி அது. அந்தக் காலத்தில் யூ.ஜி. அமெரிக்கா சென்று 90,000 டாலர் செலவு செய்து தன் மகனின் காலை சரி செய்திருக்கிறார். ஒரு தந்தை தன் மகனின் கால்களைச் சரி செய்ய எத்தனை கோடி வேண்டுமானாலும் செலவு செய்யலாம். அதைக் கேட்க யாருக்கும் உரிமை இல்லை. ஆனால், ஞானி என்பவன் தன்னுடைய மகனையும் இன்னொருத்தரின் மகனையும் சரி சமானமாக நினைக்க வேண்டியவன் ஆயிற்றே? அப்படி நினைத்த ஓராயிரம் ரிஷிகளும், ஞானிகளும், சூஃபிகளும் இந்தியாவில் இருந்திருக்கிறார்களே? (ஸ்ரீராமானுஜரின் வாழ்வே அதற்கு ஒரு உதாரணம்). அப்படி இருக்கும்போது ஐம்பதுகளின் முற்பகுதியில் தன் சொத்தையெல்லாம் விற்று 90,000 டாலர் தன்னுடைய மகனுக்காக செலவு செய்யும் ஒரு தந்தையின் உபதேசங்கள் நமக்கு எதற்கு?

அதுவும் தவிர, உருவத்தில் பெரிதாக இருந்த அவனை பத்து வயதே உடைய ஒரு ஏழை வேலைக்காரச் சிறுமிதான் தூக்கிக்கொண்டு வருவாளாம். இந்தக் கொடுமையைப் பற்றி ஜே.கே. தன் நண்பர்களிடம் புலம்புவாராம்.

இப்படி மாற்றி மாற்றிப் புலம்பிக்கொண்டிருந்த இரண்டு வக்கிரம் பிடித்த பிராமணர்களின் சிந்தனை எனக்குத் தேவையில்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. இங்கே இவர்களின் சாதி பற்றிக் குறிப்பிடக் காரணம், இவர்களின் சிந்தனையையும், இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையையும், இவர்கள் செய்த உபதேசங்களையும் இவர்கள் பிறந்த சாதியும், இவர்கள் வளர்க்கப்பட்ட விதமும்தான் தீர்மானம் செய்தது.

https://telegram.me/aedahamlibrary

உதாரணமாக, யூ.ஜி. கொஞ்சம் ஓட்ஸையும், பச்சைக் காய்கறிகளையும் தவிர வேறு எதுவும் சாப்பிடுவதில்லை. நம்பவே முடியாத உணவுப் பழக்கத்தைக் கொண்டவராக இருந்திருக்கிறார். இதற்குக் காரணம், இவருக்குச் சிறு வயதில் கொடுக்கப்பட்ட கடுமையான யோகப் பயிற்சிதான். அதேபோல் யூ.ஜி.க்கு சில அமானுஷ்யமான சக்திகள் இருந்திருக்கின்றன. இதற்குக் காரணமும் சிறு வயதில் கிடைத்த பயிற்சிகள்தான். ஏழு வருட காலத்துக்கு தினமும் 3000 முறை அந்த மந்திரத்தை உச்சாடனம் செய்தால் பற்பல சித்துக்கள் கூடிவரும் என்று ஆதி சங்கரர் கூறுகிறார். இன்னும் கடுமையாகப் பயிற்சி செய்தால் கூடு விட்டுக் கூடு பாய்தல்கூட சாத்தியம் என்கிறார் சங்கரர்.

தொடரும்

6.6.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இண்டெலக்சுவல் ப்ராஸ்டிட்யூட்ஸ் -- 3

பூலோக சொர்க்கம்

யூ.ஜி. யோகத்தையும், தியானத்தையும் மறுதலிக்கிறார். மனித வாழ்வுக்கு அதெல்லாம் தேவையில்லை என்கிறார். பிராணிகளைப் போல் உணவைத் தேடி அலைந்தாலே போதும்; வேறு எந்த உடற்பயிற்சியும் மனித உடலுக்குத் தேவையில்லை. மருத்துவமனைகளோ, மருந்துகளோ கூடத் தேவையில்லை. இப்படிப் பல உபதேசங்களைத் தன்னைத் தேடி வருபவர்களுக்கு வழங்குகிறார் யூ.ஜி. அதே சமயத்தில், "உபதேசம் என்று சொல்லப்படுவதெல்லாம் மோசடி; யாரும் யாருக்கும் குருவாக இருக்க முடியாது. ஏனென்றால் ஒருவருடைய அனுபவம் ஒருபோதும் அடுத்தவருக்கு உதவியாக இருக்காது. அப்படி இருந்திருந்தால் மனித வாழ்க்கை ஒரு இனிமையான பாடலைப் போல் இருந்திருக்கும். இது எனக்கும் பொருந்தும். என்னுடைய மரணத்துக்குப் பிறகு யாரும் என்னை நினைவுகூர வேண்டாம். என் பிணத்தைக் கூட குப்பைத் தொட்டியில் போட்டு விடலாம். My teaching, if that is the word you want to use, has no coypright. அதை நீங்கள் யாருடைய அனுமதியையும் கேட்காமல் பிரசுரித்துக்கொள்ளலாம்; விநியோகிக்கலாம்; உரை எழுதி விளக்கலாம்; தவறாகவும் விளக்கலாம்; திரிக்கலாம்; சிதைக்கலாம்; என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். ஏன், நீங்களே எழுதியதாகக் கூட சொல்லிக்கொள்ளலாம். இதற்கெல்லாம் நீங்கள் யாருடைய அனுமதியையும் கேட்க வேண்டியதில்லை" என்கிறார்.

மற்றவர்களுக்குக் கூறியதுபோலவே அவர் தன் வாழ்நாளில் உடற்பயிற்சி செய்ததில்லை; மருந்து சாப்பிட்டதில்லை. ("நான் டாக்டரிடம் செல்வதாக இருந்தால் அது என்னுடைய மரண சர்ட்டிஃபிகேட்டை வாங்குவதற்காகத்தான் இருக்கும்.") ஆனால் இதற்கெல்லாம் காரணம், சிறு வயதில் அவர் மேற்கொண்ட கடுமையான யோகப் பயிற்சிகளும், தியானமும்தானே என்று கேட்கிறார் ரஜ்னீஷ். தியானமோ, யோகமோ, உணவோ, மருந்தோ தேவையில்லாத நிலையை அடைந்துவிட்டவர் யூ.ஜி. அப்படிப்பட்ட ஒருவர் சராசரி மனிதர்களிடம் அதை உபதேசிக்கலாமா? இன்றைய கால

https://telegram.me/aedahamlibrary

கட்டத்தில், இன்றைய வாழ்க்கை முறையில் தியானமும் யோகமும் பயிலாதவர்கள் ஐம்பது வயதிலேயே இருதயப் பிரச்சினையாலும், இன்ன பிற பிரச்சினைகளாலும் செத்துக்கொண்டிருக்கிறார்களே? இதற்கெல்லாம் யூ.ஜி.யிடம் பதில் இல்லை.

யூ.ஜி. அவருக்குக் கிடைத்த முக்தி போதத்தை (Enlightenment) மூர்க்கமாக மறுத்துக்கொண்டே இருந்தார். முக்தி போதம் என்ற ஒன்றே கிடையாது என்றார் ஆனால், அவரது 48ஆவது வயதில் லண்டனில் உள்ள ராமகிருஷ்ணா ஆசிரமத்தில் தியானத்தில் அவருக்குக் கிடைத்த அனுபவம் கிட்டத்தட்ட முக்தி போதத்துக்கு ஒப்பானது. அது பற்றி அவர் பேசவோ, விளக்கவோ மறுக்கிறார். அதேபோல், அதற்கு அடுத்த ஆண்டு -1967- மரணத்துக்கு ஒப்பான ஒரு மாற்றம் அவரது உடலில் ஏற்படுகிறது. சவம் போலவே படுத்துக் கிடக்கிறார். ஒரு வாரத்துக்கு மேல் இந்த நிலை நீடிக்கிறது. அவரது மனம் தனது இயக்கத்தை நிறுத்தி விடுகிறது. குடிக்கும் காப்பியைக் கூட அவரால் புரிந்துகொள்ள முடியவில்லை. பிறிதொரு சமயத்தில் அது பற்றிப் பேசும்போது 'மனநல மருத்துவர்களால் என்னுடைய அப்போதைய நிலையைப் புரிந்துகொள்ள முடியாது' என்கிறார்.

அந்த மரணநிலைக்குப் பிறகு, அவர் உயிர் பெற்று எழும்போது அவரது தேக அமைப்பே மாறுதல் அடைந்திருக்கிறது. இந்த நிகழ்ச்சியை அவர் 'Calamity' என்று குறிப்பிடுகிறார். மற்றபடி எந்த விளக்கமும் இல்லை. புகைப்பட ஆதாரங்கள் உள்ளன.

மற்றொரு முறை, யூ.ஜி.யின் துணைவியாக இருந்த வேலண்டைன் ஒருமுறை இரவில் யூ.ஜி.யின் உடம்பிலிருந்து வந்த ஒளியைப் பார்த்து அந்த ஒளி சாலையில் செல்லும் வாகனம் ஒன்றிலிருந்து வந்த ஒளியின் பிரதிபலிப்போ என்று சந்தேகப்பட்டு கீழே சாலையில் பார்க்கிறார். சாலையில் வாகனங்கள் எதுவும் தென்படவில்லை. யூ.ஜி.யின் உடம்பு தொடர்ந்து ஒளிர்ந்துகொண்டே இருந்திருக்கிறது. யூ.ஜி. உறக்கத்திலிருந்து எழுந்ததும் இதைச் சொன்னபோது யூ.ஜி. பதில் எதுவும் சொல்லவில்லை. இங்கே கவனிக்க வேண்டிய விஷயம், வேலண்டைன் (Valentine de Kervan) கற்பனையாக எதையும் இட்டுக்கட்டிச் சொல்பவரல்ல. அவர் அந்தோனின் ஆர்த்தோவின் நெருங்கிய தோழியாக இருந்தவர். அவரது நாடகக் குழுவில் இணைந்து பணியாற்றியவர்.

ஒருமுறை யூ.ஜி. தென்னிந்தியாவில் இருந்போது நடந்த சம்பவம் இது: ஒரு தாய் தன்னுடைய மகளை ஒரு தடியால் அடித்துக்கொண்டிருக்கிறாள். அந்தச் சம்பவம் முடிந்து பார்த்தால்

https://telegram.me/aedahamlibrary

யூ.ஜி.யின் முதுகிலும் அதே போன்ற அடிகள்.

மற்றொரு சமயம், வேலண்டைனுக்கு ஒரு மலப்பாதையில் நடக்கும்போது தடுக்கி விழுந்து காலில் அடிபட்டுவிடுகிறது. யாருமே உடனடியாகச் சென்று அவருக்கு உதவி செய்யவில்லை. யூ.ஜி.யும் செய்யவில்லை. அதுபற்றிக் கேள்வி எழுந்தபோது யூ.ஜி. தன்னுடைய கால் சராயை உயர்த்திக் காண்பிக்கிறார். அங்கே வேலண்டைனுக்கு இருந்த அதே காயம் அதே இடத்தில் யூ.ஜி.யின் காலில் இருக்கிறது.

யூ.ஜி. சில சமயங்களில் தன்னுடைய சில நண்பர்களை மரண வேளையில் உயிர் பிழைக்க வைத்திருக்கிறார். அதைப் போலவே அவருடைய மகன் 32 வயதில் புற்றுநோயால் சாகும்போதும் அவர் ஒரு அற்புதத்தை நிகழ்த்திப் பிழைக்க வைத்துவிடுவார் என்று அவருடைய நண்பர்கள் நம்பியிருக்கின்றனர். அவன் பிரேதம் கூட எழுந்து வந்துவிடக்கூடும் என்று எதிர்பார்த்திருக்கின்றனர். ஏனென்றால், அவர் அதுபோன்ற சில அதிசயங்களை அவ்வப்போது நிகழ்த்தியிருக்கிறார். ஆனால் இந்த அதிசயங்கள் பற்றி யூஜி எப்போதும் பதில் கூறியதில்லை. மேலும் அதிசயங்கள் என்று எதுவும் இல்லை என்றே சொல்லி வந்திருக்கிறார்.

அதேபோல் சித்த சுவாதீனம் இல்லாத பலரை அவர் சொஸ்தப்படுத்தியிருக்கிறார். இது அவருடைய கர்மவினை என்கிறார் அவருடைய நண்பர் ஒருவர். அந்தக் கர்மவினையின் பின்னணி என்னவென்றால், அவர் தன்னுடைய 49ஆவது வயதில் தன் மனைவியையும், குழந்தைகளையும் (இரண்டு மகள்கள், ஒரு மகன்) விட்டுவிட்டு வெளிநாடு சென்றுவிட்டார். யூ.ஜி. 14 வருடங்கள் கழித்துத்தான் இந்தியாவே திரும்பினார். அதற்குப் பிறகும் அவர் இந்தியாவில் நீண்ட காலம் தங்கியதில்லை. 2007இல் இத்தாலியில் அவருடைய 88ஆவது வயதில் இறக்கும் வரை சுமார் 50 ஆண்டுகள் வெளிநாடுகளிலேயே வாழ்ந்தவர் யூ.ஜி. அதுவும் ஒரே தேசத்தில் நிரந்தரமாகத் தங்கியதில்லை. உலகம் பூராவும் சுற்றிக்கொண்டேயிருந்தார்.

இப்படிப்பட்ட அதிசயங்களைத் தொடர்ந்து நிகழ்த்திக்கொண்டே இருந்திருக்கிறார் யூ.ஜி. ஆனால் இதுபோன்ற அதிசயங்களை சாயிபாபா நிகழ்த்தும்போது அவரைப் பொய்யன் என்று திட்டுகிறார்.

இந்த இடத்தில் ஒரு இடைச்செருகல். யூ.ஜி.யின் சிந்தனைப் போக்கையும் அவரது வாழ்வையும் தீர்மானித்தது அவர் பிறந்து வளர்ந்து சாதிதான் என்று கூறினேன். உதாரணமாக, நூற்றாண்டுகளாக

https://telegram.me/aedahamlibrary

ஆடு, மாடு, மீன் என்று மாமிசம் புசித்து வந்த தலித்தாகவோ, முஸ்லீமாகவோ பிறந்து அந்தப் பின்னணியிலேயே வளர்க்கப்பட்டிருந்தால் இவ்வாறாக வாழ்ந்தும், சிந்தித்தும் இருப்பாரா என்பதே என்னுடைய கேள்வி. இப்படி சமூகத்தின் ஆதிக்க சாதியில் பிறந்ததினாலேயே ஒருவருக்குக் கிடைத்த வாழ்வியல் மதிப்பீடுகளை மற்றவர்களுக்காக முன்வைக்கும் - அது எவ்வளவுதான் கலக முறையில் இருந்தாலும் - யாரையும் என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. யூ.ஜி.யும் அதையேதான் சொல்கிறார்: என்னை யாரும் ஏற்றுக்கொள்ளாதீர்கள். யாரும் பின்பற்றாதீர்கள்.

மேலும், அறிவு என்பது அதிகாரமாக மாறுவது பற்றியும் யூ.ஜி. பேசுகிறார். ஆனாலும் அவரே அந்த அதிகாரத்தை வாழ்நாள் பூராவும் அனுபவித்தவர்தானே என்ற கேள்வி எனக்குள் எழுகிறது. ஐம்பது ஆண்டுகள் ஐரோப்பிய நாடுகளிலும், ஆஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற கண்டங்களிலும் சுற்றித் திரிந்தவர் அவர். அது எப்படி சாத்தியமானது? சுவிஸ்ஸில் இலங்கைத் தமிழர்கள் அதிக அளவில் குடிபெயர்ந்து கொண்டிருக்கிறார்கள் என்ற காரணத்தினால் தென்னிந்தியர்களை சுவிஸ்ஸுக்குள் அனுமதிப்பதில்லை. நான் இரண்டு முறை முயன்றும் எனக்கு அனுமதி கிடைக்கவில்லை. கனடா செல்வதற்கு வீசா கேட்டபோது "உங்கள் வங்கிக் கணக்கில் பணம் இல்லாததால் நீங்கள் கனடாவிலேயே தங்கிவிடுவீர்களோ என்று சந்தேகமாக இருக்கிறது" என்று காரணம் காட்டி வீசா விண்ணப்பத்தை நிராகரித்தது கனடா தூதரகம்.

ஆனால் யூ.ஜி. இந்த உலகத்திலேயே அதிகம் செலவாகக்கூடிய இடம் என்று கருதப்படுகிற Gstaat என்ற ஊரில் பல ஆண்டுகள் வாழ்ந்தவர். இங்கே நாம் க்ஸ்தாத் பற்றிக் கொஞ்சம் தெரிந்துகொள்ள வேண்டும். இந்த உலகிலேயே அழகான ஊர் என்று டைம் பத்திரிகையால் வர்ணிக்கப்பட்ட ஊர். தென்மேற்கு ஸ்விட்ஸர்லாந்தில் ஆல்ப்ஸ் மலையில் அமைந்துள்ள ஊர். பூலோக சொர்க்கம் என்று சொல்லலாம். வாழ்ந்தால் இங்கேதான் வாழ வேண்டும் என்று எண்ணி இங்கேயே வாழ்ந்தவர் யூஜி. The seven hills and seven valleys of Saanenland என்று சொல்வார்கள். இந்த ஊரின் ஜனத்தொகையே 2000தான். சானென் இங்கிருந்து மூன்று கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிறது.

இங்குதான் உலக டென்னிஸ் போட்டி நடைபெறும். இந்த ஊருக்கு 120 கி.மீ. தூரத்தில்தான் சில்ஸ் மரியா என்ற ஊர் உள்ளது. இந்த ஊரைப் பற்றியும் இந்த ஊருக்கும் எனக்கும் உள்ள தொடர்பு பற்றியும் ஏற்கனவே எழுதியிருக்கிறேன். நீங்கள் படித்திருக்காவிட்டால் மீண்டும்:

https://telegram.me/aedahamlibrary

2001 டிசம்பரில் பாரிஸிலிருந்து சுவிஸ் போக விரும்பி சுவிஸ் தூதரகம் சென்றேன். “இவ்வளவு குளிரில் சுவிஸ்ஸா?” என்று அதிர்ந்தார்கள் நண்பர்கள். எனக்கு அந்த டிசம்பர் பாரிஸே வேர்த்தது.

“எதற்காக சுவிஸ் செல்கிறீர்கள்?” என்று கேட்டார் கௌண்டரில் அமர்ந்திருந்த பெண்.

“அந்த சில்ஸ் மரியா என்ற ஊரை நான் பார்த்தே ஆக வேண்டும்” என்றேன்.

சற்றே ஆச்சரியத்துடன் “எதற்கு?” என்றார்.

“நான் ஒரு எழுத்தாளன். என்னுடைய மாஸ்டர் என்று நான் நினைக்கும் ஒரே ஆள் நீட்ஷே. அவர் வாழ்ந்த ஊர் அது.”

கௌண்டரை விட்டு எழுந்து வெளியே வந்துவிட்டார் அந்தப் பெண். “நீட்ஷே வாழ்ந்த இடம் மட்டும் அல்ல. அது ஒரு சொர்க்கம்; நீங்கள் அங்கே சென்றுவிட்டால் அப்புறம் வெளியே வரவே மாட்டீர்கள்” என்று சொல்லிக் கை குலுக்கிவிட்டு வீசா கொடுத்தார்.

அந்த சில்ஸ் மரியாவை விட க்ஸ்தாத் இன்னும் அழகானது. ஆனால் அந்த ஊரிலும் நம்முடைய தலைவர் யூ.ஜி.க்கு ஒரு பிரச்சினை. அது என்னவென்றால், க்ஸ்தாத்தில் அவருடைய அறையை விட்டு வெளியிலேயே வர முடியவில்லையாம். என்ன காரணம் என்றால், எந்தத் தெருவுக்குப் போனாலும் அந்தத் தெரு முக்கில் ஜே.கே.வைப் பார்க்க வேண்டி வந்துவிடுமாம். ஜே.கே.வும் அங்கேதான் வசித்தார். இரண்டு பேரும் எப்பேர்ப்பட்ட ஆட்கள் என்று பார்த்துக் கொள்ளுங்கள்.

1963ஆம் ஆண்டு க்ஸ்தாத். ஒரு நாள் மழை கொட்டிக் கொண்டிருக்கிறது. யூ.ஜி. நடந்து சென்று கொண்டிருக்கிறார். அப்போது அவரை உரசுகிறாற்போல் ஒரு கார் - மெர்ஸிடஸ் - நிற்கிறது. காரில் ஜே.கே. யூ.ஜி.யை ஏறிக்கொள்ளச் சொல்கிறார். யூ.ஜி. அதை மூர்க்கமாக மறுத்துவிட்டு தன் போக்கில் நடையைத் தொடர்கிறார்.

இந்தச் சம்பவத்தை நான் படித்தபோது ஜே.கே.வை பணக்கார கிருஷ்ணமூர்த்தி என்றும், யூ.ஜி.யை ஏழை கிருஷ்ணமூர்த்தி என்றும் உருவகித்துக்கொண்டேன்.

இப்போது யூ.ஜி. சித்தப் பிரமை பிடித்தவர்களை சொஸ்தப் படுத்தினார் என்ற இடத்துக்குச் செல்வோம். யூ.ஜி.யின் நண்பர் குறிப்பிட்ட கர்மவினை இதுதான்: தன் குடும்பத்தை விட்டுவிட்டு யூ.ஜி. வெளிநாடு சென்றது 1953ஆம் ஆண்டு. அதன் பிறகு 14 ஆண்டுகள் கழித்து 1967இல்தான் இந்தியா திரும்புகிறார் யூ.ஜி. இடையில் தன் கணவரை

https://telegram.me/aedahamlibrary

இந்தியாவுக்குத் திரும்பவும் வரவழைப்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கிறார் யூ.ஜி.யின் மனைவி. எல்லா முயற்சியும் தோல்வியுற்றுப் போகவே அவர் பலமுறை தற்கொலைக்கு முயற்சிக்கிறார். மனநோயால் பீடிக்கப்படுகிறார். மின்சார அதிர்ச்சியெல்லாம் கொடுக்கப்படுகிறது. இதைக் கேள்விப்படும் யூ.ஜி. தன் மனைவியை விவாகரத்துக்கு முயற்சி செய்யுமாறு அறிவுறுத்தி ஒரு நீண்ட கடிதம் எழுதுகிறார். இது அந்தப் பெண்ணுக்குப் பேரிடியாக அமைகிறது. 1963இல் மனநோய் விடுதியிலிருந்து வெளியே வந்த ஒரு வார காலத்தில் இறந்து போகிறார். அப்போது அந்த விஷயத்தையே தெரிந்துகொள்ள முடியாத ஒரு ஊரில் இருந்தார் யூ.ஜி.

யூ.ஜி. காதல் என்ற விஷயத்தை மறுக்கிறார். குழந்தை பெற்றுக் கொள்வதற்காக மட்டுமே ஒரு ஆணும் பெண்ணும் கலவி கொள்ள வேண்டும் என்பது அவருடைய கருத்து!

2600 ஆண்டு மனிதகுல சிந்தனையின் வரலாற்றில் யூஜியைப் போன்ற ஒரு சப்வெர்ஸிவ் மனிதரைப் பார்த்ததில்லை என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் எனக்கு என்னவோ ஆன்மீக விஷயங்களில் ஆதி சங்கரரே யூ.ஜி. சொன்ன விஷயங்களை யெல்லாம் சொல்லிவிட்டார் என்று தோன்றுகிறது. மீதி சமுதாய, கலாச்சார விஷயங்களில் யூ.ஜி. பேசியதையெல்லாம் பெரியாரும் அம்பேத்கரும் பேசி முடித்துவிட்டார்கள். இவர்கள் மூவரும் சொல்லாத எதையுமே யூ.ஜி. புதிதாகச் சொன்னதாக என் சிற்றறிவுக்குத் தெரியவில்லை. அதனால் கடந்த 15 தினங்களாக நான் படித்த 1000 பக்கங்களு:ம வீண் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் இதன் மூலமாக நான் அடைந்த பயன் ஆதி சங்கரரின் எழுத்துக்களைப் படித்ததுதான்.

போனால் போன இடம்; வந்தால் வந்த இடம் என்று சொல்வார்கள் இல்லையா? அதுபோல் யூ.ஜி.யை வாசித்துக்கொண்டிருந்தபோது ஆதிசங்கரரின் ஞாபகம் வந்து அவருடைய பிரம்மசூத்திர பாஷ்யம், பிரபஞ்ச சாரம் போன்ற தத்துவ நூல்களை மேய்ந்தேன். கடந்த மூன்று தினங்களாக அதுதான் வேலையாக இருந்தது. இந்த இரண்டையும் படித்து முடிக்க ஒருவருக்கு ஒரு ஆறு மாதங்களாவது தேவைப்படும். அதனால்தான் மேய்ந்தேன் என்று சொன்னேன். ஆனால் அப்படிப் படித்துக்கொண்டிருந்தபோது அவருடைய பஜகோவிந்தம், சௌந்தர்ய லஹரி என்ற இரண்டையும் மீண்டும் வாசிக்க நேர்ந்தது. இந்த உலகின் அதி உன்னதமான குறுங்காவியங்களில் ஏன் அந்த இரண்டும் சேர்க்கப்படவில்லை என்ற சந்தேகமும், ஆச்சரியமும் ஏற்பட்டது.

தொடரும்...

https://telegram.me/aedahamlibrary

7.6.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

இண்டெலக்சுவல் ப்ராஸ்டிட்யூட்ஸ் - 4

காலத்துக்கு அப்பால்

யூ.ஜி.யின் சாதி பற்றிக் குறிப்பிட்டபோது இன்னொரு விஷயத்தையும் எழுதியிருக்க வேண்டும். அவர் தன்னுடன் பழகியவர்களோடு சிநேகமாக இருப்பதுபோல் ஒரு தோற்றம் தெரிந்தாலும் அவர் அவர்களிடம் ஆண்டான் - அடிமை உறவையே கொண்டிருந்தார். உதாரணமாக, மகேஷ் பட்டிடம் அவர் "நீதான் என்னைத் தேடித் தேடி வந்துகொண்டிருக்கிறாயே தவிர நான் அல்ல. நாளையே நாம் ஒருவரை ஒருவர் நிரந்தரமாகப் பிரிகிறோம் என்றாலும் அதனால் கவலைப்படப் போவது நான் அல்ல" என்று கூறுகிறார்.

மற்றொரு இடத்தில் "அறிவே அதிகாரம். அறிவுக்காகவே அறிவு என்ற ஒன்று இல்லை. அறிவுக்கான தேடலே மற்றவர்களின் மீது ஆதிக்கம் செலுத்துவதற்காகத்தான். இப்படியான ஒரு அமைப்பு எதையும் கற்றுக்கொள்ள விரும்பாது."

இப்படிச் சொல்லும் யூ.ஜி.யிடம் இயங்கியதும் அறிவின் அதிகாரம்தானே? இல்லாவிட்டால் அவரால் 50 ஆண்டுகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் - உலகின் பெரும் பணக்காரர்கள் மட்டுமே வாழக்கூடிய ஊர்களில் வாழ்ந்திருக்க முடியுமா?

இப்போது மீண்டும் அவரது ஆன்மீகத்துக்கு வருவோம்.

"(ஆன்மீகத்) தேடலில் ஈடுபட்டிருப்பவர்கள் உங்களைச் சந்தித்தால் அவர்களுக்கு ஏதாவது கிடைக்குமா?" என்று மகேஷ் பட் ஒருமுறை யூ.ஜி.யைக் கேட்க, அதற்கு அவர் அளித்த பதில்: "கிடைக்கும். நீ என்னுடன் ஒரு மாதம் தங்கியிருந்தாய். இப்போது உனக்கு காஃபி போடுவது எப்படி, வாஷிங் மெஷினை உபயோகிப்பது எப்படி என்றெல்லாம் தெரிந்துவிட்டது அல்லவா? அம்மாதிரி விஷயங்கள்தான் கிடைக்கும்."

இப்படி வாழ்நாள் பூராவும் தன்னைப் பற்றித் தவறாகவே சொல்லிக் கொண்டு வந்திருக்கிறார் யூ.ஜி. அவருக்கு மிக நன்றாக கைரேகை பார்க்கத் தெரியும்.

https://telegram.me/aedahamlibrary

அவருடைய பல நண்பர்களுக்கு இவ்வாறாக அவர்களுடைய எதிர்காலத்தைக் கணித்துக் கூறியிருக்கிறார். யூ.ஜி.யின் வழிகாட்டுதல் இருந்திராவிட்டால் பர்வீன் பாபியின் வாழ்க்கை மிக மோசமாகச் சிதைந்து போயிருக்கும். மும்பை சினிமா உலகத்தினர் பலரும் யூ.ஜி.யின் சீடர்களாக இருந்ததற்கு இதுவும் ஒரு காரணம்.

யூ.ஜி. அடிக்கடி சொல்லிக்கொண்டது போல் அவர் ஒன்றும் சாதாரண ஆள் அல்ல என்பதற்கு ஒரு உதாரணம்:

ஒருநாள் பெங்களூரில் ஒரு நண்பரின் வீட்டில் தங்கியிருக்கிறார் யூ.ஜி.யின் பக்கத்தில் மகேஷ் பட் மற்றும் பல நண்பர்கள். அப்போது அந்த வீட்டுக்கு வருகிறார் ஒரு நாடி ஜோதிடர். பலருக்கும் நாடி பார்க்கப்படுகிறது. நாடி என்பது பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்ட சோதிடக் குறிப்புகள். ஒருவருடைய பெயரைக் கேட்டு அந்தப் பெயருக்கு ஏற்ற சுவடியை எடுத்துப் படிப்பது இந்த முறை என்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அப்போது எதேச்சையாக யூ.ஜி.க்கும் பார்க்கலாம் என்று முடிவாகிறது.

யூ.ஜி.க்கு வந்த சுவடி இவ்வாறு கூறுகிறது:

“இந்த மனிதர் காலை நேரத்துச் சூரியனைப் போன்றவர். இவர் ஒரு இடத்தில் இருக்க மாட்டார். ஊர் ஊராகச் சுற்றிக் கொண்டிருப்பார். இவருக்கு ஞானோபதேசம் தேவையில்லை. அது இவருக்குப் பிறவியிலேயே கொடுக்கப்பட்டிருக்கிறது. இவர் ஒரு மனிதர் அல்ல; ஆத்மா.”

இந்த இடம் வந்ததும் நாடி ஜோதிடருக்கு ஆச்சரியம் ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவருக்கு யூ.ஜி.யைப் பற்றித் தெரியாது. திகைப்புடன் ஜோதிடர் யூ.ஜி.யைப் பார்த்துக் குழம்ப, யூ.ஜி. சைகையாலேயே அவரை மேலே படிக்கச் சொல்கிறார்.

ஒரு கட்டத்தில் சுவடியில் 24 நிமிடம் கழித்து அடுத்த சுவடியைப் புரட்டும்படிச் சொல்லப்பட்டு இருக்கவே அப்போதைக்கு சுவடிகள் மூடப்படுகின்றன. நண்பர்கள் நாடி ஜோதிடம் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள். மகேஷ் பட்டுக்கு ஆர்வம் தாங்கவில்லை. “சுவடியைப் புரட்டுங்கள்” என்கிறார் ஜோதிடரிடம். சுவடியைப் புரட்டினால் சுவடியில் ஒன்றுமே எழுதியிருக்கவில்லை.

“ஆக, என்னுடைய எதிர்காலம் சூன்யமாகத் தெரிகிறது” என்று கிண்டல் செய்கிறார் யூ.ஜி.

மீண்டும் சிறிது நேரம் கழித்து சுவடியைத் திறக்கச் சொல்கிறார் மகேஷ்

https://telegram.me/aedahamlibrary

பட். சுவடியைத் திறந்ததும் அதில் எழுத்துக்கள் தெரிகின்றன.

“இன்னும் ஒன்றரை நிமிடம் இருக்கும்போதே திறந்துவிட்டீர்கள். இப்படி ஆத்மாவாக விளங்கும் ஒரு மனிதருக்கு சுவடி எதுவும் தேவையில்லை. ஆனாலும் நாம் ஆரம்பித்த விளையாட்டை ஆடி முடிக்க வேண்டும் என்பதால் இதைத் தொடர்கிறோம். இந்த சோதிடக் குறிப்பை எழுதிய எங்களை நீங்கள் நமஸ்கரிக்க வேண்டாம். உங்கள் எதிரே அமர்ந்திருக்கும் அந்த மனிதரை நமஸ்கரியுங்கள்.

இன்னும் பதினோரு ஆண்டுகளில் அதிர்ஷ்ட தேவதை இவரைத் தேடி வருவாள். அதற்குப் பிறகு இவரை விட்டு அகல மாட்டாள். இந்த மனிதர் சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போதும், நடக்கும் போதும், உறங்கும் போதும், இன்னும் என்ன செய்துகொண்டிருந்தாலும் இவர் சகஜ சமாதியிலேயே இருப்பார். இவரது அந்திமக் காலத்தில் இவருடைய ஒரு பார்வையே ஒருவருக்கு ஞான முக்தியைக் கொடுப்பதாக இருக்கும். இப்படிப்பட்டவருக்கு இந்தச் சுவடியைப் படித்துக் காண்பிப்பதில் என்ன பயன்?”

இம்மாதிரி நிகழ்ச்சிகளை நாம் எல்லா ஞானிகளின் வாழ்க்கையிலும் பார்த்திருக்கிறோம். அந்த ஞானிகளுக்கும் யூ.ஜி.க்கும் என்ன வித்தியாசம் என்றால், யூ.ஜி. இந்த அனுபவத்தை மூர்க்கமாக மறுதலிக்கிறார். அதோடு இல்லாமல் அந்த மறுதலிப்பை ஒரு கவர்ச்சிகரமான மொழியில் - ஆங்கிலத்தில் - வெளிப்படுத்துகிறார். தத்துவத்தை மறுத்துக்கொண்டே இருந்தார். ஆனால் அந்த மறுப்பே ஒரு தத்துவமாக மாறியது.

மேலும் ஒரு உதாரணம்: “விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமல் தனியாக நிற்கும் தைரியம் உங்களுக்கு இல்லை. நான் நிச்சயமாகச் சொல்லுவேன். நீங்கள் - நீங்கள் மட்டுமே உங்கள் விதியைக் கட்டமைப்பவராகவும், உங்கள் எதிர்காலத்தையும் வளத்தையும் வடிவமைத்துக் கொள்பவராகவும் இருக்கிறீர்கள். இந்த நிலையில் உங்கள் வாழ்வில் ஒரு பெண்ணோ அல்லது ஆணோ குறுக்கிடும்போது நீங்கள் சமரசம் செய்துகொள்ள ஆரம்பித்துவிடுகிறீர்கள். அதுவே முடிவின் ஆரம்பமாக அமைந்துவிடுகிறது.”

இப்படிப்பட்ட வார்த்தையாடல்கள்தான் மற்றவர்களுக்கு ஒருவித இண்டலெக்சுவல் ப்ளோஜாபாக அமைந்தது என்று சொன்னேன். ஏற்கனவே ஆன்மீக ஒளியற்று இருண்டு, குற்ற உணர்ச்சியால் பீடிக்கப்பட்ட பணக்காரர்களுக்கும், கோடீஸ்வரர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் யூ.ஜி. ஒரு விற்பனைப் பொருளாக - அல்லது

https://telegram.me/aedahamlibrary

விளையாட்டுக் கருவியாக- அல்லது dildoவாக மாறினார். இதை நீங்கள் spiritual dildo என்று வாசிக்க வேண்டும். இந்த ஒரே ஒரு காரணத்தினால்தான் எனக்கு மிகப் பிடித்தமான யூஜியையும் நான் இண்டலெக்சுவல் ப்ராஸ்டிட்டியூட் என்று வருத்தத்துடன் சொல்ல நேர்ந்தது.

மேலும், அவருடைய பல்வேறு உரையாடல்கள் வெறும் metaphysical jargons - ஆகவே மிஞ்சுகின்றன. உதாரணமாக, "வார்த்தைகள்தான் சரீர வேதனையாக மாற்றமுறுகின்றன... மற்றபடி, சரீரத்துக்கு வேதனை என்பது இல்லை. ஒரு உணர்வை நீங்கள் வலியாக மொழிபெயர்க்கும்போதுதான் நீங்கள் வலியை உணர்கிறீர்கள். இல்லாவிட்டால் வலி என்பது இல்லை. நீங்களெல்லாம் வலியிலிருந்து விலகி எப்போதும் இன்பத்திலேயே திளைக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள். ஆன்மீக குருநாதர்கள் இது சாத்தியம் என்று கூறுகிறார்கள். அது சாத்தியமில்லை என்று எனக்குத் தெரியும். வாழ்க்கை பூராவும் நீங்கள் இதற்கு முயற்சி செய்தாலும் அதில் நீங்கள் வெற்றிபெறப் போவதில்லை. கடைசியில் நீங்களே அதைப் புரிந்துகொள்வீர்கள்."

இந்த வார்த்தைகள் எந்த தேசத்தில் வாழ்பவர்களைக் கவரக்கூடும் என்பதை இதைப் படிப்பவர்களே புரிந்துகொள்ள முடியும். வலியிலும் வேதனையிலுமே வாழும் மூன்றாம் உலக நாட்டு மக்களுக்கு இந்த வார்த்தைகள் ஏதேனும் அர்த்தத்தைக் கொடுக்க முடியுமா? சில மேற்கு ஐரோப்பிய நாடுகளில் உள்ள ஷி-வி விடுதிகளில் கிடைக்கும் அனுபவத்தைத்தானே யூ.ஜி.யும் கொடுக்கிறார்? அவர் தன் வாழ்நாளெல்லாம் ஐரோப்பிய நாடுகளிலேயே கழித்ததற்கும் அவருடைய பேச்சுக்களுக்கும் மிகுந்த தொடர்பு உண்டு.

வளர்ச்சியடைந்த நாடுகளின் சாலைப் போக்குவரத்து மிகவும் வசதியானது. ஒவ்வொரு சாலைக்கும் ஒவ்வொரு வேகம். எதிரே எந்த வாகனமும் வராது. சீராகப் போய்க்கொண்டே இருக்கலாம். இதனால் வாகன ஓட்டிக்கு உறக்கம் வர வாய்ப்பு இருக்கிறது. அதனால் நெடுஞ்சாலைகளில் ஆங்காங்கே இருக்கும் மொட்டேல்களில் உறக்கத்தைக் கலைத்துவிடுவதற்காக ஒரு நாற்காலி இருப்பதை நீங்கள் பார்த்திருக்கலாம். அதில் உட்கார்ந்தால் அந்த நாற்காலி உங்கள் உடம்பைக் குலுக்கிக் குலுக்கி ஐந்து நிமிடத்தில் உங்கள் தூக்கத்தைக் கலைத்து புத்துணர்ச்சியை அளித்துவிடும். அதேபோல் ஐரோப்பியக் குளிரினாலும், அதிக வசதிகளாலும் உறக்கத்தில் கிடக்கும் ஐரோப்பியச் சோம்பேறிகளுக்கு யூ.ஜி. ஒரு உறக்கம் கலைக்கும் நாற்காலியாகச்

https://telegram.me/aedahamlibrary

செயல்பட்டார்.

அவரது வாழ்விலிருந்து ஒரு உதாரணம்:

சுவிஸ்ஸில் ஒரு நகரத்தில் அவர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருக்கிறார். அறையில் இருந்த 25 பேரில் 20 பேர் மூதாட்டிகள். அவர்களும் ஸ்வெட்டர் பின்னிக்கொண்டே அவர் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருந்தார்களாம்.

அன்றிலிருந்து அவர் லெக்சர் கொடுப்பதை நிறுத்திவிட்டார். ஆனாலும், தன்னைத் தேடி வரும் கூட்டத்திடம் சொற் பொழிவாற்றிக் கொண்டுதான் இருந்தார்.

ஆனந்த், யூ.ஜி. பற்றிய என்னுடைய அவதானங்கள் ஒரு முடிவுக்கு வருகின்றன. யூ.ஜி.யின் நேரடி சொற்பொழிவுகளை விட நண்பர்களுக்கிடையே அவர் அவ்வப்போது சொல்லும் விஷயங்கள் சுவாரசியமாக இருக்கின்றன. அவற்றில் ஒருசிலவற்றை இப்போது பார்ப்போம்:

“காதலில் விழுவதும் சாக்லேட் சாப்பிடுவதும் ஒன்றுதான். அவை இரண்டுமே ஒரே மாதிரியான ரசாயன மாற்றத்தையே உடலில் உண்டாக்குகின்றன.”

“மனம் என்பது ரசாயன ஆயுதங்களுக்கு ஒப்பானது. ஹைட்ரஜன் குண்டின் மூலாதாரம் கழுதையின் கடைவாய்ப் பல்லில் இருக்கிறது. குகை மனிதன் தன்னுடைய எதிரியை வீழ்த்த அதைத்தான் ஆயுதமாகப் பயன்படுத்தினான். அப்போது குகை மனிதன் செய்ததைத்தான் இப்போது நாகரீகமடைந்த நீங்களும் செய்துகொண்டிருக்கிறீர்கள். ஒரே வித்தியாசம் என்னவென்றால், நீங்கள் மனிதகுலம் உய்வடைவதற்காகச் செய்கிறீர்கள். தங்கள் பக்கமே நியாயமும் தர்மமும் இருக்கிறது; இந்த நியாயமும் தர்மமும் மற்றவர்களின் அதர்மத்தை அழித்து விடும் என்று நம்புபவர்களே இந்த மனித குலத்தின் முதல் விரோதிகள். இந்த உலகம் வெடித்துச் சிதறினால் அந்த வெடிகுண்டில் நட்சத்திரக் கூட்டத்தின் அடையாளம் இருக்கிறதா, அல்லது அரிவாள் சுத்தியலா அல்லது பிறையா அல்லது யூதர்களின் நட்சத்திரச் சின்னமா அல்லது அசோக சக்கரமா என்பது முக்கியமல்ல.”

“மனித குலத்துக்குச் சொல்ல என்னிடம் விசேஷமாக எந்தச் செய்தியும் கிடையாது; ஒன்றே ஒன்றைத் தவிர. அது: ஆன்மீக வழிகாட்டுதல் என்று சொல்லப்படும் அத்தனையும் முட்டாள்தனம்.”

தனக்கு நடந்த ‘calamity’ அனுபவத்தைப் பற்றி யூ.ஜி.: “என்ன நடந்தது

https://telegram.me/aedahamlibrary

என்றே எனக்குத் தெரியவில்லை. அது பற்றி நான் அறிந்திருக்கவும் இல்லை. இறந்து போனவன் எப்படியோ மீண்டும் உயிர் பெற்று வந்தேன். அதற்குப் பிறகு என்னுடைய பழைய கடந்த காலம் என்னிடம் இல்லை. இது என்னுடைய விருப்பத்தினாலோ என்னுடைய மதப் பின்னணியினாலோ நடந்ததல்ல. இது ஒரு அதிசயம். இது யாருக்கும் ஒரு முன்மாதிரியாகவோ மற்றவர்களால் பின்பற்றத் தக்கதாகவோ இருக்க முடியாது.”

“மனித இயல்பை மாற்றினால் இந்தப் பேரழிவை மாற்ற இயலுமா?” (கேள்வி: மகேஷ் பட்)

“Man is merely a biological being. அவனுடைய இயல்பில் எவ்வித ஆன்மீகத் தன்மையும் கிடையாது. உங்களுடைய கலாச்சாரத்தால் உங்கள் மீது திணிக்கப்பட்ட எல்லா மதிப்பீடுகளும், கோட்பாடுகளும், உயரிய நோக்கங்களும், தார்மீக நெறிகளும், அறமும், ஆன்மீகமும் எல்லாம் வெறும் பாசாங்கு. அவை உங்களிடம் எதையுமே தொடவில்லை. உங்களைப் போலவே அடுத்த மனிதரையும் நேசியுங்கள் என்ற வார்த்தையில் அல்ல; அடுத்த மனிதனைக் கொன்றால் நீங்கள் கொல்லப்படுவீர்கள் என்ற பீதியில்தான் இனிமேலான மனிதகுலத்தின் எதிர்காலம் அடங்கியிருக்கிறது. எத்தனை காலத்துக்கு என்று தெரியவில்லை.”

இனி நாம் ஜே.கிருஷ்ணமூர்த்திக்கு வருவோம். ஜே.கே. இனி வரும் 500 ஆண்டுகளுக்கு மனிதகுலத்தை உய்விக்கத் தனது சிந்தனை உதவும் என்று நம்பினார். இதெல்லாம் நடிகர் கார்த்திக் தேர்தலில் நிற்பதைப் போலவே எனக்குத் தோன்றுகிறது. உதாரணமாக, ஜே.கே.வின் இந்த வாசகத்தைப் பாருங்கள்: “நான் அழிந்தாலும் என் உடல் அழியாது.” இதிலிருந்து அந்த ஆள் தன்னைக் கடவுளின் அவதாரமாகவே கருதியிருக்கிறார் என்று தெரிகிறது.

இது தவிர நம்மூர் நாலாந்தர அரசியல்வாதிகளை விடவும் கேவலமான ஆள் ஜே.கே. ஊரெல்லாம் பத்தினி வேஷம் போட்டுவிட்டு-பத்தினித்தனம் பற்றி அனுதினமும் லெக்சர் கொடுத்துவிட்டு-வீட்டுக்குள் வேசைத்தனம் செய்யும் ஒருத்தியைப் பற்றி நீங்கள் என்ன சொல்வீர்கள்? அதைத்தான் செய்தார் ஜே.கே.

இது பற்றி யூ.ஜி. சொல்வதைக் கேளுங்கள்:

பல பெண்களுடன் உறவு வைத்துக்கொண்டார் பெர்ட்ரண்ட் ரஸ்ஸல். தன்னுடைய நெருங்கிய நண்பரின் மனைவியுடனேயே செக்ஸ் உறவு வைத்துக்கொண்டார். அப்படிப்பட்டவருக்கு எதிராக நான் எதுவுமே

https://telegram.me/aedahamlibrary

சொல்ல மாட்டேன். ஏனென்றால் அவர் பாசாங்கு செய்யவில்லை. வெளிப்படையாக இருந்தார். ஆனால் ஜே.கே. செய்தது படு மோசமான காரியம். ஏன் அவர் செக்ஸுக்கு எதிராக ஒரு தார்மீகக் கோட்பாட்டை முன்வைத்து நடித்துக் கொண்டிருந்தார்? அமெரிக்காவில் அவரைப் போய் சந்திக்கும் இளம் வயதினரிடம் "ஏன் நீங்கள் செக்ஸில் மட்டுமே ஈடுபட விரும்புகிறீர்கள்? ஏன் ஒரு பெண்ணின் கையை சிநேகத்தோடு பற்றிக்கொள்ளக் கூடாது?" என்று ஏன் கேட்டுக்கொண்டிருந்தார்? Probably that phoney used to have premature ejaculations."

ஒரு புத்தகத்தில் ஜே.கே. 'நான்' ('I') என்பது பற்றி பெரிய பெரிய வியாக்கியானங்கள் கொடுத்திருப்பதைப் பார்த்துவிட்டு யூ.ஜி. சொன்னது இது: "Whatever this guy said didnot operate in his life. A guy without this thing called the 'I' cannot fuck his best friend's wife, like this crook did."

யூ.ஜி. இப்படி ஜே.கே.யைப் போட்டு விளாசுவதற்கு ஒரு முக்கியமான காரணம் இருந்தது. அதாவது, ஜே.கே.வுக்கும் அவருடைய மேனேஜராக இருந்த ராஜகோபாலின் மனைவி ரோஸலினுக்கும் பல ஆண்டுகளாக செக்ஸ் உறவு இருந்திருக்கிறது. யாருக்கு யாருடன் செக்ஸ் உறவு இருந்தால் நமக்கு என்ன? ஆனால், ஜே.கே. இதை வெளி உலகத்திடமிருந்து மறைத்து, தான் ஒரு அசாதாரண மனிதனாகவும், செக்ஸுக்கு அப்பாற்பட்டவராகவும் காண்பித்துக்கொண்டார். ரோஸலினின் மகளான ராதாவின் புத்தகம் மூலமாக மட்டுமே இந்த விஷயம் வெளி உலகத்துக்குத் தெரிய வந்தது. இல்லாவிட்டால் இந்த விஷயம் வெளியிலேயே தெரிந்திருக்காது. அப்புத்தகத்தின் பெயர்¢ ஜே.கிருஷ்ணமூர்த்தியின் நிழல் வாழ்க்கை. தன் மனைவிக்கும் ஜே.கே.வுக்கும் இருந்த உறவை ராஜகோபால் கண்டுகொள்ளாமல் இருந்ததற்குக் காரணம், உலகம் பூராவும் ஜே.கே.வுக்கு இருந்த கோடிக்கணக்கான சொத்துக்கள். ஆக, சாதாரண பேச்சு வழக்கில் இந்த வேலைக்கு என்ன சொல்வார்கள்?

இந்த விஷயத்தில் யூ.ஜி.யை ஒரு அற்புதமான மனிதன் என்றே சொல்லலாம். தன்னுடைய வழ்க்கையை மிக வெளிப்படையாக வைத்துக்கொண்ட ஒரு மனிதர் அவர். அவருடைய மொத்த சொத்தே ஐந்து கிலோ எடையுள்ள ஒரு கைப்பைதான். அதைக் கூட இரண்டு கிலோவாகக் குறைக்க வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தவர். அந்தக் கைப்பையோடுதான் அவர் உலகம் பூராவும் சுற்றிக்கொண்டிருந்தார்.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் இதையும் மீறி யூ.ஜி.யைப் பிடித்திருக்கிறது என்று கூறியதன் காரணம், அரசியல் பிரச்சினைகளில் அவருடைய அவதானங்கள் மிகக் கூர்மையாக இருக்கின்றன. "அகிம்சையையும், காந்தியையும் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்ளும் இந்தியாவில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று பாருங்கள். ஒன்றுபட்ட இந்தியா என்று சொல்லிக்கொண்டு காஷ்மீரில் தினம் தினம் நூற்றுக்கணக்கான மக்களைக் கொன்று குவித்துக் கொண்டிருக்கிறது இந்திய அரசு..."

25 ஜூலை 1995. யூ.ஜி.யும் அவரது நண்பர்களும் அமர்ந்து பேசிக்கொண்டிருக்கிறார்கள். அப்போது பாரிஸ் சப்வே ஒன்றில் குண்டு வெடித்தது பற்றி வானொலிச் செய்தி சொல்கிறது. அதைக் கேட்டவுடன் யூ.ஜி.யின் நண்பர்கள் மிகவும் வருத்தமடைகிறார்கள். அப்போது யூ.ஜி. கூறுகிறார்:

"ஏன் நீங்கள் மனித உயிர் பற்றி ரொம்பவும் கவலைப்படுவது போல் நடிக்கிறீர்கள்? நீங்கள் கொலை செய்யும்போது மட்டும் என்ன நடக்கிறது? ஈராக்கில் என்ன செய்தீர்கள்? வளைகுடாப் போரின்போது நான் ஜூலியிடம் சொன்னேன்; உன்னுடைய இரண்டு மகன்களும் மகளும் போர்க்களத்திலிருந்து பொட்டலமாகச் சுற்றப்பட்டு வந்தால் உனக்கு எப்படி இருக்கும்? அப்போதுதான் ஒரு போராட்டத்துக்காகச் சாவது என்றால் என்ன என்று உனக்குப் புரியும்."

இந்தப் பிரபஞ்சத்தில் மனித இனம்தான் மிக மோசமான, மிக அருவருப்பான இனம். அந்த இனம் தன்னையே அழித்துக் கொண்டு விடும். எந்த சக்தியாலும் அதைத் தடுக்க முடி£து."

இப்படியெல்லாம் பேசினாலும் எனக்கு யூ.ஜி. தேவையில்லை என்று சொல்வதன் காரணம் இதுதான்:

ஒருமுறை மகேஷ் பட் யூ.ஜி.யிடம் "உங்களுக்கு இசை பிடிக்குமா?" என்று கேட்டதற்கு யூ.ஜி. இவ்வாறு கூறுகிறார்: "இசையைக் கேட்பதை விட எனக்கு ஒரு நாய் குரைப்பதும், பன்றியின் உறுமலும், குதிரையின் கனைப்பும் பிடித்திருக்கிறது. ஏனென்றால், இந்த ஒலிகளில் ஒரு உயிர் இருக்கிறது. ஒரு ஜீவசக்தி இருக்கிறது. ஆனால் இசை கேட்பதென்பது ஒரு புலன் உணர்வு சம்பந்தப்பட்ட விஷயம்."

இன்னொரு சம்பவம்: மகேஷ் பட் யூ.ஜி.யின் க்ஸ்தாத் வசிப்பிடத்தில் தங்கியிருக்கிறார். இருவரும் சேர்ந்து தினமும் இரவில் ஒரு உலக சினிமாவைப் பார்ப்பது வழக்கம். ஆனால் யூ.ஜி.க்கு கற்பழிப்பு, கொலை, கொள்ளை போன்ற விஷயங்களெல்லாம் உள்ள வியாபார மசாலா படங்களே பிடிக்கும். ஒருநாள் உலக சினிமா கேஸட் எதுவும்

https://telegram.me/aedahamlibrary

கைவசம் இல்லை. எல்லா நல்ல படங்களையும் பார்த்தாயிற்று. உடனே மசாலா படத்தைப் பார்க்கலாம் என்கிறார் யூ.ஜி. அதைப் பார்க்க மகேஷ் பட் கொஞ்சம் தயங்கியதும் "ஒரு கெட்ட படமும் ஒரு நல்ல படம் மாதிரிதானே? இரண்டுக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது?" என்று கேட்டிருக்கிறார்.

இதுதான் இந்தத் துறவிகளிடம் பிரச்சினை. அவர்களுக்குக் கலை பற்றி எதுவுமே தெரியாது. ஆனாலும் அதைப் பற்றி அதிகாரபூர்வமாக கருத்துத் தெரிவிப்பார்கள். அவர்களுக்கு இசை பற்றியும் தெரியாது. அதனால் ஒரு இசை அனுபவம் எப்படி ஆன்மீக அனுபவமாக மாற முடியும் என்பதும் தெரியாது.

நல்ல படத்துக்கும் கெட்ட படத்துக்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று சொன்னார் அல்லவா யூ.ஜி.? அந்த வாக்கியத்தில் உள்ள நல்ல படம் என்பதுதான் என்னுடைய உலகம். அதனால் நானும் யூ.ஜி.யும் சந்தித்துக்கொள்ளும் வாய்ப்பே கிடையாது.

மேலும் ஒரு விஷயம்:

ஒரு மனிதனின் வாழ்வில் குரு என்பவரின் பங்கு பற்றி மிக மூர்க்கமாக மறுக்கிறார் யூ.ஜி. நான் அப்படி நினைக்கவில்லை. வேளுக்குடி கிருஷ்ணன் கூறிய ஒரு உதாரணம்: தண்ணீரில் இருக்கும் தாமரை சூரியனைக் கண்டால் மலர்கிறது. ஆனால் அதே தாமரை தண்ணீரை விட்டு வெளியே வந்தால் அதே சூரியன் அதை எரித்துவிடுகிறது. அந்தத் தண்ணீரைப் போன்றவர்தான் ஆசார்யர். இதை வைஷ்ணவ சம்பிரதாயத்தில் ஆசார்ய சம்பந்தம் என்பார்கள். இப்படிப்பட்ட சில ஆசாரியர்களை நான் சந்தித்திருக்கிறேன்.

சமீபத்தில் ஆந்திரப் பிரதேசத்தின் கடப்பாவுக்குப் பக்கத்தில் உள்ள கமலாபுரம் சென்று ஹஜரத் ஸஹீருத்தீன் ஷா காத்ரியை தர்சித்து விட்டு சென்னைக்குத் திரும்பிக்கொண்டிருந்தேன். அப்போது திண்டிவனத்தில் நெடுஞ்சாலையில் உள்ள ரெட்டியார் மெஸ்ஸுக்குப் பக்கத்தில் ரோட்டோரத்தில் ஒரு சின்ன குடிசை. அதில் ஒரு சாமி இருக்கும்; அதை தரிசித்துவிட்டுச் செல்லுங்கள் என்றார் திருவண்ணாமலையில் இருக்கும் என் நண்பர் சேதுராமன். சாமி என்றால் அவர் அகராதியில் ஞானி, துறவி என்று பொருள்.

காலை ஒன்பது மணி இருக்கும். வெயில் சுள்ளென்று போட்டுக்கொண்டிருந்தது. அதைக் குடிசை என்று சொல்ல முடியாது. யூ என்ற ஆங்கில எழுத்தைத் தலைகீழாகக் கவிழ்த்துப் போட்டது போல் இருந்தது ஒரு கொட்டகை. இரண்டு பக்கமும் வழி. அதன் நடுவே ஒருவர்

https://telegram.me/aedahamlibrary

நிர்வாணமாக அமர்ந்திருந்தார். சிக்குப் பிடித்த தலைமுடி தரையில் விழுந்து கிடந்தது. ஒரு கால் மேல் இன்னொரு காலைப் போட்டு அமர்ந்திருக்கிறார். வலது காலின் பாதம் அழுகிச் சீழ் பிடித்து புழுக்கள் நெளிந்துகொண்டிருந்தன. சில புழுக்கள் கீழேயும் கொட்டிக் கிடந்தன. அருகே சென்று அமர்ந்தேன். கண்களைத் திறந்து பார்த்தார். அவ்வளவுதான். அதற்கு மேல் எனக்குள் என்ன நடந்தது என்று எனக்குத் தெரியவில்லை. எனக்கு எதுவும் ஞாபகம் இல்லை. பிரக்ஞை வந்தபோது அரை மணிநேரம் கழிந்திருந்தது.

எப்போதும் காலத்துடனேயே வாழும் நாம் காலத்துக்கு அப்பால் என்றேனும் வாழ முடியுமா? காலத்திலிருந்து விலகினால் 'காலமாகி விட்டார்' என்கிறோம். ஆனால் அந்த அரை மணிநேரம் நான் காலத்திலிருந்து விலகி இருந்தேன்.

பிரக்ஞை நெளிந்ததும் எழுந்து நமஸ்கரித்துவிட்டு அங்கிருந்து கிளம்பினேன்.

அந்த அனுபவம் எப்படி இருந்தது? ம்ஹூம். யூ.ஜி. சொல்வது போல் ஒருவரின் அனுபவத்தை மற்றவரால் புரிந்துகொள்ள முடியாது!

அன்புடன்,

சாரு

8.6.2009

https://telegram.me/aedahamlibrary

கமலாபுரம் ஹஜ்ரத்

அன்புள்ள ஆனந்த்,

உங்களுடைய மே 18, 2009 கடிதத்துக்கு இன்றுதான் (ஜூன் 9) பதில் எழுதுகிறேன். இதுவரை எழுதிய 'இண்டலெக்சுவல் ப்ராஸ்டிட்டியூட்ஸ்', உங்கள் கடிதத்தில் பார்த்த ஜே.கே. போன்ற பெயர்களால் கூடிய பதற்றத்தினால் எழுதியது. அதுபோன்ற ஆட்களைப் பற்றி என் வாழ்நாளில் விவாதிப்பதில்லை என்று முடிவு கட்டியிருந்தேன். பரவாயில்லை. அதை முன்வைத்து இப்போது மீண்டும் ஆதி சங்கரரை கொஞ்சம் படிக்க முடிந்தது அதிர்ஷ்டம்தான். அவருடைய அதியற்புதமான குறுங்காவியங்களை நம் நவீன கவிஞர்கள் ஏன் வாசிப்பதில்லை என்று ஆச்சரியமாக இருந்தது. அவருடைய சாதியோடு சேர்த்துப் பார்த்து ஒதுக்கிவிட்டார்களாயிருக்கும்.

சமஸ்கிருதம் என்ற மொழி ஒரு சில பிராமணப் பண்டிதர்களால் மட்டும் படிக்கப்பட்டு, மற்றவர்களால் ஒதுக்கப்பட்டுவிட்டதும் ஒரு காரணமாக இருக்கலாம். யார் இப்போது காளிதாசனையும், பாஸனையும் சம்ஸ்கிருதத்தில் படிக்கிறார்கள்? மொழி என்பது எவ்வளவு ஒரு அற்புதமான விஷயம்! ஒரு சமூகம் மற்ற சமூகத்தினரை அடக்கி ஒடுக்கியதற்கும், ஆதிக்கம் செலுத்தியதற்கும் அந்த மொழி என்ன செய்யும்?

ஒரு மொழிக்கென்று ஒரு தேசம் இல்லாவிட்டால் அந்த மொழி அழிந்து போய்விடும் என்று மனுஷ்யபுத்திரன் எழுதியிருந்தார். மிகப் பெரிய மனிதப் படுகொலைகளிலும், பேரழிவுகளிலும் கொண்டு போய் சேர்க்கக்கூடிய ஒரு கருத்து அது. அவர் சொல்வது சரியாகவே இருக்கலாம். அப்படிச் சில மொழிகள் அழிந்தும் போயிருக்கலாம். ஆனால், இப்படியே ஒவ்வொரு மொழிக்காரனும் என் மொழியைக் காப்பாற்றப் போகிறேன் என்று ஆயுதத்தைத் தூக்கினால் இந்த உலகம் என்ன ஆகும் என்று யோசித்து அச்சமடைகிறேன். ஒரு மொழி உயிரோடு இருப்பதற்காக பல்லாயிரக்கணக்கான மனித உயிர்கள் பலி கொடுக்கப்பட வேண்டுமா என்று தோன்றுகிறது. இப்படித்தான் அராபிய மொழி ஆதிக்கத்திலிருந்து தங்கள் மொழியான

https://telegram.me/aedahamlibrary

ஜிணீனீணீசஷ்ஷவீரீலீt-ஐக் காப்பாற்றிக்கொள்வதற்காக அல்ஜீரியாவின் வடகிழக்கு மாகாணமான கபீலியாவில் போராடினார்கள். ரத்த ஆறு ஓடியது. உலகில் எழுத்து வடிவம் தோன்றிய முதல் மொழி தமாஸீட் என்கிறார்கள் மொழியியல் அறிஞர்கள்.

இவ்வாறாகவே சமஸ்கிருதத்தில் உள்ள அரிய பொக்கிஷங்களையும், அந்த மொழி பேசப்பட்ட நிலப்பரப்பில் வாழும் நாமே ஆங்கிலத்தில் படிக்க வேண்டிய துர்பாக்கிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

போகட்டும்; நாம் பேசிக்கொண்டிருந்த விஷயத்துக்கு வருவோம். பப்புவுக்கும் ஸோரோவுக்கும் இடையில் கூட போட்டி உண்டு. நான் வெளியிலிருந்து வந்தால் யார் என்னை முதலில் கொஞ்சுவது என்று பெரிய போர்க்களமே நடக்கும். போரில் எப்போதும் வெல்வது பப்புதான். ஸோரோ பெரிய உருவம் என்றாலும் பெரிய பயந்தாங்கொள்ளி. இதுதவிர, எல்லா விஷயங்களிலுமே பப்புவுக்கு ஆதிக்கக் குணம் அதிகம். இதனாலேயே ஸோரோ மனதளவில் ரொம்பவும் பலகீனமாகிவிட்டது. இப்போது பயிற்சியாளர் வருகிறார். அவரைப் பார்த்தவுடனேயே பயத்தில் மூத்திரம் போய்விடுகிறது ஸோரோ. ஆனால் பப்புவோ அவரைப் பார்த்தால் பாய்ந்துகொண்டு ஓடுகிறது. அவரைக் கொஞ்சுவதற்கு கொஞ்சம் கொஞ்சமாக பயத்தைத் தெளிய வைத்துவிடலாம் என்கிறார் பயிற்சியாளர். இதனால் ஸோரோ மீது எனக்குக் கொஞ்சம் அதிகப் பிரியம் உண்டு. ஸோரோவைப் பார்த்து மற்றவர்கள் பயப்பட்டால் அது மற்றவர்களைப் பார்த்து பயப்படுகிறது. இதை யாரிடம் போய்ச் சொல்லுவது?

மற்றபடி பப்பு, ஸோரோ பற்றி எழுத நூற்றுக்கணக்கான பக்கங்கள் உள்ளன. எல்லாவற்றையும் நாவலில் எழுத என்று சேர்த்து வைத்திருக்கிறேன்.

உடல் வலிமையிலெல்லாம் ஒன்றுமே இல்லை என்று எனக்குப் புரிந்துவிட்டது.

நான் குறிப்பிட்டேனே கமலாபுரம் ஹஜ்ரத், இவரைப் பற்றி என்ன எழுத? வயது தொண்ணூறு இருக்கும். ஆனால் கடவுளின் விசேஷ அருள் பெற்ற சூஃபியாக, தன்னை நாடி வரும் ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவர்களுக்கு வேண்டியதை வாரி வாரி வழங்கிக்கொண்டிருக்கிறார். சராசரி மனிதர்களாகிய நம்மால் புரிந்துகொள்ள முடியாத இறை சக்தி கொண்டவர். இவரைப் பற்றி ஏராளமான கதைகளைச் சொல்கிறார்கள் இந்த ஊர் மக்கள். ஒருநாள் இவர் ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தாராம். ஒரு ரெட்டியார்

https://telegram.me/aedahamlibrary

வீட்டுச் சிறுமி ரயிலைப் பிடிக்க ஓடி வருகிறாள். ஆனால் ரயில் போய் விடுகிறது. ஹஜ்ரத் சிறுமியிடம் விசாரிக்கிறார். தன்னுடைய அப்பா அந்த ரயிலில் அவசரமாகப் போக வேண்டும் என்று சொல்ல, ஹஜ்ரத் கையை உயர்த்துகிறார். சென்று கொண்டிருந்த ரயில் நின்றுவிடுகிறது.

இப்படிப் பல்வேறு நிகழ்ச்சிகளைக் கண்கூடாகப் பார்த்துவிட்டே அந்த ஊர் மக்கள், ஹஜ்ரத்திடம் தங்கள் குறைகளைச் சுமந்துகொண்டு பிரார்த்தனைப் பயணம் மேற்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். அவரும் மற்றவர்களின் குறைகளை வாங்கி வாங்கி உடல் தளர்ந்து போய்விட்டார். சிறு வயதில் பயில்வானாக இருந்திருக்கிறார். அந்தப் புகைப்படங்களெல்லாம் அவர் வீட்டில் மாட்டப்பட்டிருக்கின்றன.

என்னுடைய சக எழுத்தாள பகுத்தறிவுத் திலகங்களுக்கு இதெல்லாம் நகைச்சுவையாக இருக்கும். அவர்கள் அறிந்த ஒரு சமீபத்திய உதாரணத்தைச் சொல்ல வேண்டுமானால், ஏ.ஆர்.ரஹ்மான். ரஹ்மானை விட அவரது தந்தை சேகர் பெரிய ஜீனியஸ் என்று அறிகிறோம். ஆனால் அவர் வாழ்க்கை என்ன ஆயிற்று? எந்தவித அங்கீகாரமும் இல்லாமல், மிகவும் ஏழ்மையான வாழ்க்கையை வாழ்ந்து, மிகவும் இளவயதிலேயே இறந்தார். ஆனால் ரஹ்மானின் வாழ்வில் நடந்த அதிசயங்கள் வரலாறு. அதற்குக் காரணம் ஹஜ்ரத் ஸஹீருத்தீன் ஷா காத்ரியைப் போன்ற இன்னொரு ஹஜ்ரத். அந்த தர்காவும் கமலாபுரத்துக்குப் பக்கத்திலேயே உள்ளது. பெட்டா தர்கா என்று அழைக்கப்படும் இந்த தர்கா இரண்டாவது அஜ்மீர் என்றும் சொல்லப்படுகிறது. 17ஆம் நூற்றாண்டில் ஹஜ்ரத் க்வாஜா செய்யத் ஷா பீருல்லா மொஹம்மத்--உல்-ஹுஸேனி இங்கே அடக்கமாகி இருக்கிறார்.

கிம் கி டுக்கின் Spring, Summer, Faill, Winter and Spring படத்தில் வரும் ஜென் துறவியைப் பற்றி எழுதியிருந்தீர்கள். தண்ணீரில் மிதக்கும் கோக் டின்னை காவலர்கள் துப்பாக்கியால் சுட முயன்று தோற்றுக் கொண்டிருக்க, அந்த இடத்தின் அமைதியைக் காக்க வேண்டி அந்த ஜென் துறவி தன் கையிலிருக்கும் சிறு கல்லைத் தூக்கியெறிந்து அந்த டின்னை அடித்துவிட்டு சாவதானமாகத் தன் வேலையைப் பார்க்கிறார். அந்தப்

போலீஸ்காரர்கள் அவரை நம்ப முடியாமல் பார்க்கிறார்கள்.

அன்புடன்,

சாரு

9.6.2009

https://telegram.me/aedahamlibrary

உடல்மொழியும் சரித்திரத்தின் பித்தேறிய தருணங்களும்...

டியர் சாரு,

பெரிய அதிர்ஷ்டம் என்றுதான் சொல்ல வேண்டும். சற்று சுணங்கிக் கிடந்த ஃப்ரெஞ்ச் கலாச்சார மையம் விழித்துக்கொண்டு விட்டது போல் தெரிகிறது. இந்தோ-மஸாய் நடனத்தைத் தொடர்ந்து சென்ற ஞாயிற்றுக்கிழமை மா--ராவண் என்ற நாட்டிய நாடகத்தினை ஏற்பாடு செய்திருந்தனர். ஓம்பால் சிங்குடன் சென்று பார்த்துவிட்டு வந்தேன். இந்த முறை எனக்குக் கீழே பணிபுரியும் மலாவிய நண்பன் ஒருவனையும் அழைத்துச் சென்றேன். நிகழ்ச்சியின்போது நான் எடுத்த புகைப்படத்தையும் பின்பு குழுவினரிடமிருந்து பெற்ற சில புகைப்படங்களையும் உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

ராவண் என்பது வாத்தியத்தின் பெயர். நம்மூர் தப்பு வகையைச் சார்ந்தது. 'மா' என்பது தாயைக் குறிக்கும் சொல். இரண்டையும் இணைத்து மா-ராவண் என்று பெயரிட்டிருந்தனர். குழு சர்வதேசத் தரம் கொண்டது. இந்தியப் பெருங்கடலில் அமைந்திருக்கும் தீவுகளாகிய மடகாஸ்கர், மொரீஷியஸ், ரீ யூனியன் தீவு போன்றவற்றின் கலைஞர்களை உள்ளடக்கியது. தலைப்பின் கீழ் 'எ கிரியேஷன் ஃப்ரம் இந்தியன் ஓஷன்' என்று உப தலைப்பிடுகிறார்கள்.

இந்தக் குழு தியேட்டர் டாலிபட் என்ற அமைப்பைச் சேர்ந்தது. அமைப்பை உருவாக்கியவரின் பெயர் பிலிப் பெலென் பால்டினி. மா-ராவணின் இயக்குனரும் இவரே. தவிர மா-ராவணின் இசை மற்றும் நடன அமைப்பும் இவருடையதே. இன்று தன் 49வது வயதில் இருக்கும் பிலிப் தன் 11ஆவது வயதிலிருந்து பல குழுக்களில் இணைந்து பல்வேறு கலைகளில் பயிற்சியும் தேர்ச்சியும் பெற்றவர். ஃப்ரஞ்ச்சை தாய்மொழியாகக் கொண்ட பிலிப் தற்போது ரி யூனியன் தீவில் வசித்து வருகிறார்.

ரீ யூனியன் தீவைப் பொறுத்தவரை ஃப்ரஞ்ச் நிர்வாகத்தின் கீழ் இயங்குகிறது. சின்னஞ்சிறு புள்ளி போல் இந்தியப் பெருங்கடலில் காணப்படும் இந்தத் தீவு, இடங்களின் தொலைவால்

https://telegram.me/aedahamlibrary

பிரிக்கப்பட்டிருந்தாலும் ஃப்ரான்ஸ் என்ற தேசத்தின் பகுதியாகவே அனைத்து விதங்களிலும் செயல்பட்டு வருகிறது. தியேட்டர் டாலிபட்டினை ப்ரஞ்ச், மடகாஸ்கர், மொரீஷியஸ், ரீ யூனியன் தீவு ஆகியவற்றின் நிர்வாகங்கள் ஊக்குவித்து பலம் சேர்க்கின்றன.

ஏற்கனவே 60 தேசங்களுக்கு மேலாக சுற்றி வந்துவிட்ட தியேட்டர் டாலிபட், மிகப் பெரிய கவுரவமாக மதிக்கப்படும் பாரிஸின் ஃப்ரெஞ்ச் ஓபெரா, ஸ்விட்சர்லாந்தின் ஸூரிச் சர்வதேச விழா, ஆஸ்திரேலியாவின் தாஸ்மானியா சர்வதேச விழா போன்றவை உட்பட பல முக்கிய உலக மேடைகளைத் தன் நிகழ்ச்சிக்கான அட்டவணையில் கொண்டுள்ளது.

இவர்களது கலையின் மையம் பற்றிச் சொல்ல வேண்டுமானால், சரித்திரத்தை, கலவையான கலாச்சாரங்களின் சாராம்சத்தை, மூதாதையரின் நினைவுகளை, துர்க்கனவுகளை, இசையின் வழி உடலில் வாங்கி வெளிப்படுத்துதல் எனலாம். பெரும் அடிமை வரலாற்றைத் தம் நிலப்பரப்பின் சரித்திரமாகக் கொண்ட இவர்கள், தப்பிச் செல்ல முயன்று பிடிபட்ட, தண்டிக்கப்பட்ட, கொல்லப்பட்ட, பல்வேறு விதங்களில் கடும் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட தம் மூதாதையர்களை கலையின் வழி தீண்டித் திரும்புகிறார்கள்.

இவர்கள் சரித்திரத்தில் இடம் பெறும் அடிமைகள், தேசத்தின் பிரஜைகள், பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவர்கள். எனவே இவர்களது கலை மற்றும் கலாச்சாரம் பல்வேறு தேசங்களின், மதங்களின், மொழிகளின், நம்பிக்கைகளின் கலவையாக இருக்கிறது. இந்தக் கலவையினை வெவ்வேறு நிலப்பரப்பின் பாரம்பரியம் கொண்ட கலைஞர்களினாலும், பிரத்யேக வாத்தியங்களின் பயன்பாட்டிலிருந்தும், மீட்டப்படும் இசையின் தன்மையிலிருந்தும் பிரதிபலித்து, பார்வையாளர்களை ஒரு நூதனமான பயணத்திற்கு உட்படுத்துகிறார்கள்.

மா-ராவண், ஒரு நாட்டிய நாடகம் என்பதை விட இது தம் மூதாதையருடன் தொடர்புகொள்ளும் சடங்கு என்கிறார்கள். மா-ராவணில் கதை அம்சம் கிடையாது. கதைக்குப் பதிலாக இந்தக் கலைஞர்கள் நமக்குப் பரிமாறுவது உடலின் வழி இசையும் சரித்திரமும் ததும்பி வழியும் ஒருவகை உணர்வினை. ஏதேதோ புரிந்தும் புரியாமலும் சொல்லில் அடங்கா உணர்வுகளை நாம் ஸ்பரிசித்துக் கட்டுண்டு கிடக்கிறோம். இதில் ராவண் நீங்கலாக சங்கு, ஒரு வகை நந்தி வாத்தியம், கனக்கருவி (idiophone) ஆகியவையும் இசைக்கப்படுகின்றன. குரல் வழியிலும் அமானுஷ்யத் தன்மையுடைய ஒலிகளைக் கொண்டு சேர்க்கிறார்கள். நடனத்தைப் பொறுத்தவரை

https://telegram.me/aedahamlibrary

உடல் மொழி சில இடங்களில் ஒரு யோகியின் தன்மையுடனும், சில இடங்களில் ஒரு நாடோடி பாட்டுக்காரனைப் போலவும், சில இடங்களில் ஆட்படுத்தப்பட்ட அடிமைகளின் ஆவி தொற்றி ஏறி சன்னதம் கொண்டவனின் வகையிலும் வெளிப்படுகிறது.

மா-ராவணை மேடையில் நிகழ்த்திய கலைஞர்கள் நான்கு பேர்:

1. தியரி மௌகஸம்போ. வயது 40. மா-ராவணின் பிலிப்புடன் பகிர்ந்துகொண்டிருப்பவர். குழுவின் மூத்த உறுப்பினர். ரீ யூனியன் தீவின் வட பகுதியை சேர்ந்தவர். கிரியோல் தாய்மொழி.

2. ஜோஸே ஞ்ஜிவா அண்டிரியனன் டெனாஜனா. வயது 30. மடகாஸ்கரை சேர்ந்தவர். தாய்மொழி மலகாஸி.

3. மைக்கேல் மார்மிட்டி. வயது 30. மொரீஷியஸின் மையப் பகுதியை சேர்ந்தவர். தாய்மொழி கிரியோல்.

4. பாஸ்கல் மாரி. வயது 25. மொரீஷியஸின் வடக்குப் பகுதியை சேர்ந்தவர். தாய்மொழி கிரியோல்.

இந்தக் கலைஞர்கள் நீங்கலாக தன் பிற நிகழ்ச்சிகளில் தியேட்டர் டாலிபட் ஸிம்பாப்வே, தென் ஆஃப்ரிக்கா போன்ற நாடுகளைச் சார்ந்த கலைஞர்களையும் பயன்படுத்திக்கொண்டிருக்கிறது.

மா-ராவணைப் பொறுத்தவரை, கிட்டத்தட்ட 80 நிமிடங்கள் நீடிக்கும் இந்த நிகழ்வில் இந்தக் கலைஞர்கள் ஒரு வினோத நிலையை அடைந்து வேறு எதுவோ ஒன்றாக உருமாற்றம் கொள்கிறார்கள். அதனைக் காண்கையில் மிகுந்த மனோ பலமும் சரீர தயாரிப்பும் பயிற்சி கொண்டால் ஒழிய இத்தகைய நிலைகளை அடைந்து மீள்வது சாத்தியமில்லை என்று தோன்றியது.

மிகவும் அழுத்தமான பாதிப்புகளை பார்வையாளர்களின் மனதில் விட்டுச் செல்லும் தீவிரமான இந்த நிகழ்ச்சியில் விதூஷகனின் கலை (Art of Clown) பார்வையாளர்களைத் தொடர்ந்து தன் வசம் தக்க வைத்திருப்பதற்காகப் பயன்படுத்தப் படுகிறது. தனித்து நின்றுவிடாமல் கலையின் பகுதியாய், உற்சவத்தில் இணைந்து அது பாதிப்பு ஏற்படுத்தும் முறை மிகவும் வியப்புக்குரியது.

துவக்கத்தில் தியரி மௌகஸம்போ அனைவரையும் வரவேற்று வணக்கம் சொல்லும் விதத்தில் விதூஷகனின் குரல், முகத்தில் எழும் சேஷ்டைகள் போன்றவற்றுடன் அறிமுகமாகிறார். இது ஒருவகையில் பார்வையாளர்களிடையே சுவாரஸ்யத்தைத் தூண்டி கலைஞர்கள் உத்தேசிக்கும் அலைவரிசைக்கு பார்வையாளர்களை அழைத்துச்

https://telegram.me/aedahamlibrary

செல்கிறது.

பிறகு மெல்ல முன்னோர்களுக்கான சடங்கு வகை துவக்கம் கொள்கிறது. அதன் இசையிலும் நிகழ்த்தப் பெறும் காட்சிகளிலும் நடன அசைவிலும் பார்வையாளர்கள் தங்களை மறந்து ஸ்தம்பித்திருக்க, நிகழ்ச்சி அதி தீவிரத்தன்மையை அடைகிறது. அதன் உச்சத்தில் ஜோஸே ஞ்ஜிவா கைகளை தரையில் ஊன்றித் தலைகீழாக நடக்கத் துவங்குகிறார். கலை அனுபவத்தில் படிப்படியாக சஞ்சரித்து பார்வையாளர்களும் இந்த இடத்தில் உச்சத்தை அடைகிறார்கள். அப்போது சட்டென்று தவறி விழுவது போல் பாவனை காட்டும் ஜோஸே சிரமம் கொண்டு எழுந்துகொள்வதைப் போல் நடித்து, பார்வையாளர்களை நோட்டமிடுகிறார். முதுகைப் பிடித்துக்கொண்டு 'இஸ் தேர் எனி டாக்டர் ஹியர்' என ஜோஸே கேட்க சட்டென்று இறுக்கம் விடுபட்டு அரங்கில் சிரிப்பலை எழுகிறது. 'நோ' என்று பார்வையாளர்களிலிருந்து ஒரு குரல் ஒலிக்க, பின் நான் இப்போது என்ன செய்வது என்று பதட்டம் காட்டி ஜோஸே பார்வையாளர்களை நோட்டமிடுகிறார். அவ்வளவு நேரம் இசைத்துக்கொண்டிருந்த இசை நின்றுபோய் அரங்கில் அமைதி நிலவ அரங்கிலிருந்த குழந்தை ஒன்று சட்டென்று எதிர்ப்பட்டுவிட்ட மௌனத்தால் சீண்டப் பெற்றதாய் அழுகிறது. அந்தக் குழந்தையை உற்று நோக்கும் ஜோஸே அதன் முக பாவனையை அப்படியே பிரதிபலிப்பவராய் அந்த அழுகையை மிமிக்ரி செய்கிறார். அரங்கில் சிரிப்பலைகள்.

மீண்டும் மெல்ல இசை தாளகதி பெறுகிறது. ஜோஸே பெண்கள் அமர்ந்திருக்கும் பகுதியாய்ப் பார்த்து 'டோன்ட் ஒரி «பி; இட்ஸ் கோயிங்க் டு பி ஆல்ரைட்' என்று கூறி முத்தம் ஒன்றினைப் பறக்க விடுகிறார். அரங்கம் தொடர்ந்து சிரித்துக்கொண்டிருக்க, ஜோஸே தன் தசைகளை முறுக்கிக் காண்பித்து தன் உடல் உறுதியானது என்ற ரீதியில் விதூஷக சேஷ்டைகளைச் செய்கிறார். நடனமும் இசையும் கொண்டாட்டமுமாய் மாறுகிறது. அந்தக் கொண்டாட்டத்தில் திளைத்தவராய் ஜோஸே மேடையிலிருந்து கீழே இறங்கி பார்வையாளர்கள் மத்தியில் புகுந்து ஊடாடுகிறார். பார்வையாளர் ஒருவரின் தோளில் சாய்ந்து இளைப்பாறுகிறார். மற்றொருவரை அணைத்து முத்தமிடுகிறார். தொடர்ந்து கொண்டாட்டமாய் நடனமாடியபடி மேடையில் மீண்டும் தாவி ஏறுகிறார். மற்ற மூவரும் அவருடன் இணைந்து நடனமாடுகின்றனர். அரங்கம் சிரித்தபடி அவர்களை ஆர்வமாய் வேடிக்கை பார்க்கிறது.

பார்வையாளர்களின் முகத்தில் அரும்பும் சிரிப்பு மெல்லத் தேய்ந்து

https://telegram.me/aedahamlibrary

புன்னகையாய் மாறி முகம் தீவிரமாகிப் போகும் வகையில் மெல்ல மெல்ல நிகழ்ச்சி உருமாறி மீண்டும் உச்சத்தை அடைகிறது. இந்த இரண்டாவது பகுதியில் ராவணின் தோலினைக் கிழித்து வெளிப்படும் கையும், முகம் மூடிய மனிதனின் உடல் அடையும் சன்னதமும், தப்பிச்செல்ல முயன்று துண்டிக்கப்பட்டவர்களின் கைகளும் காட்சிப்படுத்தப்படுகின்றன. இன்றளவில் வெறும் பெயர்ப் பட்டியலாகவே மிச்சம் வைக்கப்பட்ட தங்கள் முன்னோர்களின் பெயரையும் வயதையும் பட்டியலின் தொனியிலேயே உச்சரிக்கிறார்கள்.

இப்படியாகத் தன் அலைவரிசைக்கு பார்வையாளர்களின் மனதை எந்த நேரத்திலும் தக்கவைத்தபடி மா-ராவண் தொடர்ந்து சென்று முடிகிறது.

துவக்கத்திலிருந்து இறுதிவரை அனைத்து வகையிலும் மைய இழையாகச் செயல்பட்டு உத்வேகம் சேர்க்கும் ராவண், தோலின் அதிர்வுகளைப் பயன்படுத்தும் வாத்தியம். காற்றின் அதிர்வுகளைப் பயன்படுத்துவது சங்கு. தந்தி வாத்தியங்கள் நரம்பின் அதிர்வுகளை மீட்டுவது. கன கருவி வகைகள் உலோகத்தின் அதிர்வுகளை. இவை தவிர மாயத்தன்மையுடன் ஒலிக்கும் குரல்கள். இத்தனையும் கலந்து அந்த மங்கிய ஒளியில் உடலின் வழி சரித்திரம் சார்ந்த நினைவுகள், மூதாதையர்கள் பற்றிய கனவுகள் எல்லாமாகச் சேர்ந்து வெளிப்படுவது நம்மை இடம் பொருள் காலம் அனைத்தையும் கடந்த ஒரு நிலைக்கு அழைத்துச் செல்கிறது. சரித்திரத்தின், மனித மனங்களின், உடல்களின், பித்தேறிய தருணங்களை நமக்கு அறிமுகப்படுத்தி அனுபவம்கொள்ளத் தருகிறது.

நிகழ்ச்சி முடிந்தபொழுது தொடர்ந்து - குறைந்தது பத்து நிமிடங்கள் இருக்கும் - அரங்கம் கரகோஷங்களால் நிரம்பி இருந்தது.

மேடை காலியாகி, விளக்குகள் போடப்பட்டு, அனைவரும் சென்று விட்டபோதும் நான் பிரமை பிடித்தவனாய் மனதளவில் விடுபட்டுக் கொள்ள வழியின்றி அமர்ந்திருந்தேன். இப்போது இதனை எழுதும் போதுகூட அந்த பிரமை என்னை ஆட்கொள்ளவே செய்கிறது.

குழுவினர் தங்கள் பொருட்களை சேகரித்துக் கொண்டு கிளம்பத் துவங்கினர். நான் பிலிப்பை சந்தித்து அறிமுகம் கொண்டு பேசத் துவங்கினேன். என் கருத்துக்களை ஒரு காகிதத்தில் எழுதிக் கொடுக்கும்படி அவர் கேட்டுக்கொண்டார். நானோ எழுதும் மனநிலையிலெல்லாம் இல்லை. ஸ்டன்னிங்க் - அதைத் தவிர வேறு வார்த்தைகள் வரவில்லை என்று மட்டும் என் மோசமான கையெழுத்தில் ஆங்கிலத்தில் எழுதி கொடுத்தேன். பிறகு பேச்சின் போக்கில்

https://telegram.me/aedahamlibrary

கலைஞர்கள் ஒவ்வொருவராய் சேர்ந்துகொள்ள அரை மணிநேரத்திற்கு மேலாக பேசிக்கொண்டிருந்தோம். நான் கேட்ட பல கேள்விகளுக்கு ஜோஸே, பாஸ்கல், மைக்கேல் என ஒருவர் மாற்றி ஒருவர் ஆர்வமுடன் பதில் கூறி விளக்கினார்கள். இங்கு உருவாக்கப்பட்ட இசையானது தமிழ்ச் சூழலில் வளர்ந்தவனாகிய எனக்கு மிக அருகிலிருந்தது என்று கூறினேன். தப்பு, சங்கு போன்றவை தமிழ் வாழ்வில் பயன்கொள்ளும் விதம் பற்றி ஆர்வமாக பல கேள்விகளைக் கேட்டார்கள். தெரிந்தவரை விளக்கினேன்.

மொழியைப் பொறுத்தவரை அவர்கள் பிரஞ்ச் மொழியில் சரளமிக்கவர்கள். ஆங்கிலம் என்றால் சற்று தடைபட்டே பேச முடிந்தது. எனக்கோ பிரஞ்ச் பூஜ்ஜியம். என்றபோதும் மொழியின் தடைகளைத் தாண்டி ஆர்வத்தின் பிரவாகத்தில் பேசிக்கொண்டிருந்தோம்.

அடுத்த நாள் மதிய உணவு நேரத்தில் மா-ராவண் குழுவினரை மீண்டும் சென்று சந்தித்தேன். இரண்டு மணி நேரத்திற்கு மேலாக பல கோணங்களில் பேச்சு தொடர்ந்தது.

தியரி மௌகஸம்போ ரி யூனியன் தீவுகளின் சரித்திரத்தை விவரித்துக் கூறினார். அது மா-ராவண் என்னுள் ஏற்படுத்தியிருந்த அனுபவத்துடன் இணைந்து கொள்ள, அனுபவம் மேலும் ஆழப்பட்டுப் போனது. கேள்விகள் போக, மா-ராவண் குறித்த என் மனப்பதிவுகளை, கவனிப்புகளை நான் சொல்ல ஆசையுடன் கேட்டுக்கொண்டேனர்.

“உங்கள் நிலப்பரப்பு கலவையான கலாச்சார வகை கொண்டது. இதில் ஒவ்வொரு கலாச்சாரத்தின் வேரினையும் தேடித் திரும்புவதற்கு பதில் அவற்றில் தென்படும் மனித சரித்திரத்தின் சாராம்சத்தைச் சேர்த்தெடுத்து அதற்கு ஒரு பிரத்யேகத் தன்மை அளித்து, அதனை இசை வழி, உடல் வழி வெளிப்படுத்திப் பிரதிபலிப்பதன் மூலம் உன்னதத்தை எட்ட முயல்கிறீர்கள் இல்லையா?” என்று கேட்டேன். ஏதோ சொல்ல தியரி வாயெடுத்தார். அதற்குள் அவரைத் தடுத்துத் தொடர்ந்தவனாய், “நாளை முழு உலகமும் இப்படித்தான் கலவையாக இருக்கும்; மிஞ்சப் போவது சாராம்சம்தான்; அதுவே மா-ராவணை சமகாலத்துக் கலையைப் பொறுத்தவரை முக்கியமானதாக்குகிறது” என்றேன்.

“மிக நன்றாகச் சொன்னீர்கள்” என்று சந்தோஷமாய் சிரித்தார் தியரி. முகம் முழுவதுமாய் சந்தோஷம் வெளிப்பட்ட அவரது தோற்றம் மனதில் நன்கு பதிந்துபோய் நிலைக்கிறது. சந்தர்ப்பத்தை நினைவு கொள்ளும் வகையில் அனைவரும் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொண்டோம்.

பிலிப் அடுத்த நாள் தாங்கள் மலாவியை விட்டுக் கிளம்புவதாகக் கூறி,

https://telegram.me/aedahamlibrary

அவசியம் இரவு உணவுக்கு அவர்களுடன் சேர்ந்துகொள்ள வேண்டும் என்றார். இந்த பாழாய்ப்போன தொழிற்சாலையில் திடீரென மின்வெட்டாகி பெரும் சிக்கல் வந்து சேர என்னால் செல்ல முடியாமல் போனது. பின்னர் அனைவரும் இருக்கும் புகைப்படத்தை எடுத்த அக்ஷேல் அதனை இ-மெயிலில் அனுப்பி வைத்தார். அதனைப் பார்க்கும்போது ஒரு நல்ல இரவினை அந்தக் கலைஞர்களுடன் செலவழிக்க முடியாது போன வருத்தம் மனதில் எழுந்தது.

நிகழ்ச்சியைக் காண உடன் அழைத்துச் சென்ற மலாவிய நண்பன், நிகழ்ச்சி முடிந்த தினத்தின் இரவில் நான் அவர்களுடன் பேசிவிட்டுத் திரும்புகையில் இப்படிக் கூறினார்:

“நீங்கள் பேசத் துவங்கிய பின்னரே இவர்களும் நம்மைப் போன்ற சாதாரண மனிதர்கள்தான் என்று உணர்ந்தேன். அதுவரை இவர்களுக்குள் ஏதோ பிசாசு புகுந்திருக்கிறது என்றே நினைத்திருந்தேன்.”

இதற்குக் காரணம் அதுவரை அவர் பார்த்தும், கேட்டும் பழகியிருந்த மலாவியின் குலே நடனம். கிட்டத்தட்ட மதத்திற்கு இணையான இடத்தில் நின்று செயல்பட்டு வந்த குலேயைப் பற்றி எழுத வேண்டும். ஒவ்வொரு முறையும் நினைக்கிறேன். எப்படியோ தள்ளிப் போகிறது. எப்படியும் அடுத்த கடிதத்தில் எழுதிவிடுகிறேன்.

ஆனந்த்

மே 18, 2009

https://telegram.me/aedahamlibrary

மாரா / ஸாத்

டியர் ஆனந்த்,

உங்களுடைய மே, 18 கடிதம் இரண்டு பகுதிகளாக இருந்தது. இதுவரை அதன் இரண்டாம் பகுதியைத்தான் விவாதித்துக்கொண்டிருந்தேன். இப்போது முதல் பகுதி. இனி இவ்வளவு கால தாமதமாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொள்கிறேன்.

இப்போது கடிதத்துக்கு வருவோம். முதலில் அதிலுள்ள பெயர்களையெல்லாம் ஆங்கிலத்தில் எழுதிக் கொள்வோம்; வாசகர்களின் வசதிக்காக.

Taliipot Theatre

Philippe Pelen Baldini

Thierry Moucazambo

Mckael Marmitte

Jose Niva Andrianantenaina

Pascal Marie

இவர்களுள் ஃபிலிப்பையும் தியரியையும் பார்க்க இப்போதே கிளம்பி ரீ யூனியன் சென்றுவிடலாம் போல் இருக்கிறது. இதுபோல் தில்லியில் எனக்கு மாதம் ஐந்து நாடகங்கள் பார்க்கக் கிடைத்துவிடும். இப்படி 1978இலிருந்து 1990 வரை பார்த்துக்கொண்டிருந்தேன். இந்தியாவில் எனக்குத் தெரிந்து தில்லி, கல்கத்தா, மும்பை ஆகிய ஊர்களில்தான் நாடகக் கலை அதன் உச்சபட்சமான நிலையில் உயிர்ப்புடன் இருப்பதாகத் தோன்றுகிறது.

தில்லியில் மண்டி ஹவுஸ் பகுதியிலேயே ஏழெட்டு நாடக அரங்குகள் உள்ளன. நாடக அரங்கம் என்பது மற்ற அரங்குகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டது என்பதுகூட சென்னை மக்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இசைக் கச்சேரிகள் மட்டுமே நடத்தக்கூடிய ம்யூஸிக் அகாதமியில் நாடகத்தைப் போடுகிறார்கள்.

தில்லியில் எனக்குக் கிடைத்த நாடக அனுபவங்களைப் போல் யாருக்குக் கிடைத்திருந்தாலும் அவர்கள் நாடகத்தின்பால் தீவிரமாக

https://telegram.me/aedahamlibrary

ஈர்க்கப்பட்டிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. உலகிலுள்ள மிக முக்கியமான நாடகக் குழுக்கள் அனைத்தும் தில்லியைத் தொட்டு விட்டுத்தான் செல்லும்.

இதனால் நான் அப்போது நாடகத்தில் அதீத ஆர்வம் கொண்டவனாக இருந்தேன். The Drama Review என்று அமெரிக்காவிலிருந்து ஒரு பத்திரிகை வரும். TDR என்று சொல்வார்கள். மூன்று மாதத்திற்கு ஒரு முறை புத்தக சைஸில் 250 பக்கம் இருக்கும். அதற்கு சந்தா கட்டி வாங்கிப் படித்துக்கொண்டிருந்தேன்.

அந்தக் காலகட்டத்தில்தான் மதுரையில் நான் ரெண்டாம் ஆட்டம் என்ற நாடகத்தை எழுதி இயக்கி நடித்தேன். பார்வையாளர்கள் அனைவருமே நாடக அறிஞர்கள் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள். இருந்தபோதிலும் நான் மட்டுமல்லாமல், அதில் நடித்த அனைவரும் பார்வையாளர்களில் ஒரு பகுதியினரால் தாக்கப்பட்டோம். நாடகத்தின் ப்ராப்பர்ட்டீஸ் எல்லாம் உடைத்து நொறுக்கப்பட்டன. நான் அடி வாங்குவதைத் தடுக்க வந்த டாக்டர் கே.ஏ. குணசேகரனுக்கும் அடி விழுந்தது. அவர் புதுவை பல்கலைக்கழக நாடகத்துறை பேராசிரியர். அடித்தவன் அவருடைய மாணவன்! ஆனால் எனக்குப் பாதுகாப்புக் கொடுத்த வே.மு.பொதியவெற்பனை யாரும் நெருங்க முடியவில்லை. காரணம், அவர் உருவம்.

பெரிய கலவரமே நடந்துவிட்டது என்று சொல்லலாம். அப்போது நான் அடைந்த உயிர்ப்பயத்தை வாழ்க்கையில் எந்தத் தருணத்திலும் அடைந்ததில்லை. கிட்டத்தட்ட ஒரு மதக்கலவரத்தில் மாட்டிக்கொண்டதுபோல் இருந்தது.

நாடகம் நடந்தது ஒரு பள்ளி வளாகம். கோடை விடுமுறை என்பதால் மாணவர்கள் யாரும் இல்லை. அந்த நாடக விழாவின் அமைப்பாளர் பள்ளிக்குள் கலவரம் செய்யாதீர்கள் என்றபடியால் 'போராட்டக்குழுவினர்' பள்ளிக்கு வெளியே நின்றுகொண்டிருந்தார்கள். எப்படியும் நான் வெளியேதானே வர வேண்டும்? அப்போது என் கால் கையை உடைக்கலாம் என்பது அவர்களின் அன்றைய போராட்டத்தின் குறிக்கோள். இதெல்லாம் நடந்து 25 அண்டுகள் இருக்கலாம்.

அந்த நாடகத்தின் பிரதி இன்னும் புத்தகமாக வரவில்லை. விரைவில் கொண்டுவரவேண்டும்.

இப்படி அந்த நாடக அறிஞர்கள் அடிதடியில் இறங்கியதற்கு முக்கியமான காரணம்: நாடகத்தில் நடித்த ஒரு பெண்ணுக்கு அப்போது 16 வயதுதான் இருக்கும். என் எழுத்தின் மீது கொண்ட ஈடுபாட்டால்

https://telegram.me/aedahamlibrary

அதில் நடிக்க முன்வந்தாள். (ஆமாம்; அப்போதே இந்தக் கூத்துதான்).” ஏன், தமிழ் சினிமாவில் மட்டும் 14 வயதுப் பெண் முதலிரவுக் காட்சியில் நடிக்கலாம்; என் நாடகத்தில் நடிக்கக் கூடாதா?” என்றெல்லாம் கேள்வி கேட்கக் கூடாது.

அப்போதெல்லாம் போலீஸ் ஸ்டேஷன்களில் திருடன்களைப் பிடிப்பதோடு உபதொழிலாளக அவ்வப்போது பெண்களையும் வன்கலவி செய்துகொண்டிருந்தார்கள். சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீஸ் ஸ்டேஷனில் வன்கலவி செய்யப்பட்ட பத்மினி ஒரு உதாரணம். ஏன், மைலாப்பூர் கச்சேரி போலீஸ் ஸ்டேஷனில் கூட ஒரு பெண் வன்கலவி செய்யப்பட்டார் என்பது அப்போதைய பத்திரிகைச் செய்தி.

என் நாடகத்திலும் அப்படி ஒரு காட்சி உண்டு. ஒரு பெண் போலீஸ் ஸ்டேஷனில் வன்கலவி செய்யப்படுகிறாள். ஆனால் எல்லாம் வசனம் இல்லாத மௌன அசைவுக் காட்சிதான். Highly Stylized-ஆன உடல் அசைவுக் காட்சிகள். எந்தவித ஆபாசமும் காட்சியில் இருக்காது. இதில்தான் அந்தப் பதினாறு வயதுப் பெண் நடித்தாள். பின்னணியில் என்ன இசை தெரியுமா? சுப்ரபாதம். உடனே நம்முடைய நாடகக் காவலர்களுக்குப் பொத்துக்கொண்டு வந்துவிட்டது.

அவர்கள் என்னை அடித்ததுகூட முக்கியமில்லை. அவர்கள் அப்படி ஆவேசமாக அடிக்க வந்தபோது என்னை சொல்லிக்கொண்டு வந்தார்கள் தெரியுமா? “You are insulting the theatre.”

சமீபத்தில் மங்களூரில் ஒரு பப்புக்குள் புகுந்து அங்கே குடித்துக்கொண்டிருந்த பெண்களை அடித்த பஜ்ரங் தள் கும்பலுக்கும் என்னை அடித்த கும்பலுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. எல்லாம் ‘ஒழுக்கம்’ சம்பந்தப்பட்ட பிரச்சினைதான்.

எல்லோருக்கும் ஒரு சிறு பெண்ணை நானே வன்கலவி செய்ய முனைந்துவிட்டதாகத் தோன்றிவிட்டது. அவ்வளவுதான்.

அப்போதே முடிவுக்கு வந்துவிட்டேன்; நாடகத்துக்கும் நமக்கும் சரிப்பட்டு வராது என்று. மீறி ஈடுபட்டால் அடித்தே கொன்று விடுவார்கள் என்பது நிச்சயமாகத் தெரிந்தது. அப்படி அற்பாயுசில் போக விருப்பம் இல்லாததால் நாடகத்தில் நேரடியாக ஈடுபடுவதை நிறுத்திவிட்டேன். குறைந்தபட்சம் தமிழ்நாட்டில் அது சாத்தியமில்லை. ரெண்டாம் ஆட்டம் நாடக நிகழ்வில் நடந்த தாக்குதல் பற்றி அப்போது எழுதாத பத்திரிகைகளே இல்லை.

நீங்கள் இப்போது எழுதியிருப்பதுபோல் இவ்வளவு விரிவாக நான்

https://telegram.me/aedahamlibrary

தில்லியில் பார்த்த நாடகங்களைப் பற்றி எழுதியிருந்தால் ஏழெட்டு தொகுதிகள் வந்திருக்கும். ஆனால் அப்போது கணினி வசதி இல்லை. மண்டி ஹவுஸில் நாடகம் பார்த்துவிட்டு இரண்டு மூன்று பஸ் மாறி வடக்கு தில்லி வருவதற்குள் தாவு தீர்ந்துவிடும். மறுநாள் அலுவலகம் செல்ல வேண்டும். அலுவலகமோ ரேஷன் என்ற பொது விநியோகம் சம்பந்தப்பட்டது. ஏழை எளிய மக்களோடு கலந்து பழக வேண்டிய வேலை. பிறகு மறுநாள் மாலை ஒரு நாடகம், அல்லது சினிமா, அல்லது ஒரு இசைக் கச்சேரி... ஆனால் இவ்வளவு பரபரப்புக்கு இடையிலும் அலுவலகத்தில் எங்காவது சென்று மறைந்துகொண்டு முந்தின தினம் பார்த்த சினிமா அல்லது நாடகம் பற்றிய குறிப்புகளை எழுதி வைத்துக்கொள்வேன்.

அந்தக் குறிப்புகளும், நிகழ்ச்சியில் கொடுக்கும் ப்ரோச்சர்களும்- அவற்றிலுள்ள புகைப்படங்களுக்காக அவற்றைப் பாதுகாத்து வைத்துக்கொள்வேன் - ஐந்தாறு சாக்குமூட்டைகளில் இத்தனை ஆண்டுகளாக பரண்களில் கிடந்தன. இப்போது பெரிய வீட்டுக்கு வந்துவிட்டபடியால் எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்திவிட்டேன். ஆனாலும் இரண்டு மூன்று நாடகங்களைப் பற்றிய குறிப்புகளை மட்டும் எப்போதும் கண்பார்வையிலேயே படுமாறு வைத்துக்கொண்டிருந்தேன். அவற்றில் ஒன்று, இந்த ஸாத்-/மாரா நாடகம்.

அங்கே ரத்தன் தியம் என்ற உலகப் புகழ்பெற்ற மணிப்புரியைச் சேர்ந்த நாடக இயக்குனர் இருந்தார். அப்போது அவர் தில்லி நாடகப் பள்ளியின் இயக்குனராகவும் இருந்தார். அவருடைய நாடகங்கள் அனைத்தும் இப்போதும் என் மனக்கண்ணில் காட்சி காட்சியாக ஓடிக்கொண்டே இருக்கிறது. அதேபோல் மும்பையைச் சேர்ந்த அலிக் பதம்ஸீ. காந்தி படத்தில் முகம்மது அலி ஜின்னாவாக நடித்தவர். இந்தியாவின் விளம்பரத் துறையில் மிகவும் புகழ்பெற்றவர். இவர் இயக்கிய பாகல்கானா என்ற நாடகத்தை என்னால் மறக்கவே முடியாது. இது Peter Weiss இயக்கிய The Persecution and Assassination of Jean-Paul Marat as Performed by the Inmates of the Asylum of Charenton Under the Direction of the Marquis de sade என்ற நீண்ட தலைப்பை உடைய நாடகத்தின் தழுவல். இந்த நாடகம் சுருக்கமாக Marat/Sade என்று அழைக்கப்படுகிறது. பதம்ஸீ இதை இந்திரா காந்தியை வைத்து எழுதியிருந்தார்.

சிறிது காலத்துக்குப் பிறகு நான் அந்த நாடகத்தின் ஆங்கில மேடையேற்றத்தின் வீடியோ பதிவைப் பார்க்க நேர்ந்தது. (மூலநாடகம் ஜெர்மனி மொழியில் எழுதப்பட்டது.) இது நாடகத்துக்குள் நாடகமான

https://telegram.me/aedahamlibrary

உள்சுருளைக் கொண்டதாக இருந்தது. நாடகம் நிகழ்த்தப்பட்ட போதெல்லாம் நாடகத்தின் இடையிலேயே பார்வையாளர்கள் பலர் எழுந்து சென்றுவிட்டார்கள் என்று அறிந்தேன். பலர் அந்த நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோதே மயங்கி விழுந்துவிட்டார்கள். Ruth Arrack என்ற ஜெர்மன் நடிகை நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது அதிர்ச்சியில் அங்கேயே இறந்துவிட்டார்.

(இதையெல்லாம் பார்க்கும்போது நானும் என் நடிகர்களும் தாக்கப்பட்டது ஒன்றும் ஆச்சரியமில்லை அல்லவா?)

மார்க்கி தெ ஸாத் தன் வாழ்நாளின் பெரும்பகுதியை சிறையிலேயே கழித்தவர். பல முறை சிறைத் தண்டனையை அனுபவித்த அவர் கடைசியாக 1801இலிருந்து 1814--ஆம் ஆண்டு இறக்கும் வரை சிறையில் கழித்தார். சிறையிலேயே அவர் நாடகங்களையும் இயக்கியிருக்கிறார். இந்தப் பின்னணியில் 1973ஆம் ஆண்டு நடந்த ஜான் பால் மாராவின் படுகொலையை மையமாக வைத்து, மார்க்கி தெ ஸாத் 1808இல் சிறைக்குள் கைதிகளை வைத்து இயக்குவதாக நாடகம். இந்த இரண்டு ஆண்டுகளுக்கும் உள்ள தொடர்பு என்னவென்றால், இதற்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு இதே ஜூலை 13, 1793 அன்றுதான் (ஃப்ரெஞ்சுப் புரட்சியில் பஸ்தில் தினம் என்று அழைக்கப்படும் நாள் அதற்கு அடுத்த நாளான ஜூலை 14, 1793) மாரா படுகொலை செய்யப்பட்டார்; அவரது இறுதி சில மணிநேரங்களைத்தான் 13, 1808 அன்று ஸாத் நாடகமாக இயக்குகிறார்; (அதாவது, பீட்டர் வேய்ஸ் எழுதிய நாடகத்தில்).

ஜான் பால் மாரா ஒரு பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார். ஃப்ரெஞ்ச் புரட்சியை வெகுவாக ஆதரித்த பத்திரிகை அது. ஆனால் புரட்சிக்குப் பிறகு மக்கள் வாழ்வில் எந்த மாற்றமும் இல்லாது போகவே அரசியல்வாதிகளைத் தாக்கி எழுத ஆரம்பிக்கிறார் மாரா. மாராவின் பேச்சு வெறும் அனார்க்கியிலும், குழப்பத்திலும்தான் போய் முடியும் என்பதால் அவரைக் கொன்றுவிட முடிவு செய்து விடுகிறாள் சார்லத் கோர்தே என்ற பெண்.

நாடகம் ஒரு பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் நடக்கிறது. நாடகத்தை இயக்கும் மார்க்கி தெ ஸாத் அந்த ஆஸ்பத்திரியின் தலைமை டாக்டரையும் (இந்திராகாந்தி) அவர் குடும்பத்தினரையும் நாடகத்துக்கு அழைத்திருக்கிறார். தலைமை டாக்டர் தன் மனைவியோடும், மகளோடும் நாடகத்தைப் பார்க்க வருகிறார். அப்போது ஸாத் அவரையும் நாடகத்தில் பங்கேற்குமாறு அழைக்கிறார். தலைமை டாக்டர் நெப்போலியனின் ஆதரவாளர். தேசபக்தி மிக்கவர். அதனால்

https://telegram.me/aedahamlibrary

அவர் புரட்சிக்குப் பிறகான ஒளிமயமான ஃப்ரான்ஸ் பற்றியும், பைத்தியத்தைத் தெளிவிக்க எடுத்துக்கொள்ளப்படும் நவீன வகை சிகிச்சை முறைகள் பற்றியும், சிறைகளிலும் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளிலும் அளிக்கப்பட்டு வரும் கல்வி, கலைப் பயிற்சி பற்றியும் உணர்ச்சி பொங்கப் பேசுகிறார்.

ஆனால் பைத்தியங்களோ நெப்போலியனுக்கு எதிராக யோசிக்கிறார்கள். புரட்சியினால் (1947 சுதந்திரம்) அவர்களுக்கு எந்த நற்பயனும் விளைந்துவிடவில்லை என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்த அவர்கள், தலைமை டாக்டருடன் முரண் படுகிறார்கள். மார்க்கி தெ ஸாதும் மாராவும் இதில் வரும் கதாபாத்திரங்கள். சில பைத்தியங்கள் வரம்பு மீறும்போது அவர்கள் குரூரமாக சித்ரவதை செய்யப்படுகிறார்கள். (மேடையில் இக்காட்சிகள் நிஜமாகவே நிகழ்த்தப்படுகின்றன.) இதெல்லாம் ஏதோ சர்வசாதாரணமான நிகழ்வுகளைப் போல் ஸாத் வெகு இயல்பாகத் தன் வேலையைச் செய்து கொண்டிருக்கிறார். ஒருவனிடம் சவுக்கைக் கொடுத்துத் தன்னை அடிக்கச் சொல்கிறார். அவன் அடிப்பதையும் வெகு இயல்பாக வாங்கிக்கொள்கிறார்.

வரலாற்றில் ராஜ பக்சே மாதிரியான கொலைகாரன்களும் நரேந்திர மோடி போன்ற கிரிமினல்களும் இருக்கும் வரை மார்க்கி தெ ஸாத போன்ற படைப்பாளிகளின் முக்கியத்துவம் குறையவே குறையாது என்பதற்கு இது ஒரு உதாரணம்.

இந்த நாடகத்தை ஆங்கிலத்தில் இயக்கியவர் பீட்டர் ப்ரூக். பல பரிசுகளை வென்று உலகப் புகழ்பெற்ற இந்நாடகம் குறுந்தகடுகளாகவும் கிடைக்கிறது. யாராவது எனக்குக் கிடைக்கச் செய்தால் ஒருமுறை பார்த்துவிட்டுக் கொடுத்துவிடுவேன்.

நாடகத்தின் இரண்டாவது அங்கத்தில் ஃப்ரான்ஸின் தேசிய அசெம்ப்ளியில் மாரா உரையாற்றுவது போல் கற்பனையாகச் சித்தரிக்கப்படுகிறது. புரட்சிக்குப் பிறகும்கூட சமூக நிலை முன்பு இருந்தது போலவே இருக்கிறது; எந்த மாற்றமும் இல்லை என்று பேசுகிறார். உடனே பார்வையாளராக இருக்கும் தலைமை டாக்டர் எரிச்சலடைகிறார். ஏதோ பொழுதுபோக்கு நாடகம் என்று நினைத்து குடும்பத்தோடு வந்தால் இது இப்படி ஒரு பயங்கரமான அரசியல் நாடகமாக இருக்கும் என்று அவர் சற்றும் எதிர்பார்க்கவில்லை. (நாடகத்தின் ஒரு காட்சியில் ஃப்ரெஞ்ச் புரட்சியின்போது பலர் கொல்லப்படுகிறார்கள். அவர்களின் ரத்தம் வாளிகளில் சேகரிக்கப்பட்டு அந்த இடம் துப்புரவு செய்யப்படுகிறது. அரசனின் ரத்தம் மட்டும் நீல

https://telegram.me/aedahamlibrary

நிறத்தில் இருக்கிறது!) தலைமை டாக்டர் ஸாதிடம் வந்து நாடகத்தில் புரட்சியைப் பற்றி விமர்சிக்கும் பகுதிகளை நீக்கச் சொல்கிறார். மற்றொரு காட்சியில் ஒரு கைதி தலைமை டாக்டரை கழுத்தை நெறித்துக் கொல்லப்பார்க்கிறான்.

நாடகத்தின் மற்றொரு பாத்திரமான சார்லத் கோர்தேதான் மாராவைக் கொல்லப் போகிறவள். இவள் ஒரு கனவு உலகப் பிரஜை போலவே பேசுகிறாள்; இவள் பேசுவதுகூட பாதி உரைநடையாகவும் பாதி பாடலாகவும் இருக்கிறது. இவள் ஒரு காட்சியில் பைத்தியரக்கார ஆஸ்பத்திரியின் மிக உயரமான கேட்டிலிருந்து கீழே குதிக்கிறாள். அவளை கீழே உள்ள சிலர் பிடித்துக்கொள்கிறார்கள். (நாடகத்திலும் இந்தக் காட்சி தத்ரூபமாக இப்படியே வருகிறது. கீழே உள்ளவர்கள் மயிரிழை அளவு பிசகினாலும் கோர்தேயாக நடிக்கும் பெண்ணின் உடம்பில் ஒரு எலும்பு மிஞ்சாது. (நாடகத்தைப் பார்ப்பவர்கள் மயக்கடைந்து விழுவதும், அதிர்ச்சியில் இறந்து போனதும் இது போன்ற காட்சிகளைப் பார்த்துத்தான்).

கோர்தேயை ஒருவன் நாடகம் பூராவும் வன்கலவி செய்ய முயற்சி செய்துகொண்டே இருக்கிறான். மற்றொரு பைத்தியம் தலைமை டாக்டரின் மகளுடைய முலைகளைப் பிடித்துக் கசக்குகிறான்.

நவீன நாடகங்களில் ஒரு க்ளாஸிக் என்று மதிக்கப்படும் மாரா/ஸாத் பற்றி உலகெங்கிலும் உள்ள பல்வேறு பத்திரிகைகளில் பல நூறு பக்கங்கள் எழுதப்பட்டுவிட்டன. இந்த நாடகத்தின் மற்றொரு முக்கியமான அம்சம், இதன் இசை. இந்த நாடகத்தின் விசேஷமான சூழலுக்கு (பைத்தியக்கார ஆஸ்பத்திரி) ஏற்ற இசை.

நாடகத்தைப் பொறுத்த வரை என்னுடைய ஆசான் அந்தோனின் ஆர்த்தோ. இதே ஆர்த்தோவின் Theatre of Cruelty-யை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட இந்த மாரா/ஸாத் என்ற நாடகமே என்னுடைய 12 ஆண்டுக் கால நாடக அனுபவத்தில் உச்சபட்சமான ஒன்றாக என் நினைவில் தங்கி நிற்பதை இப்போது நினைத்துப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது.

11-.06.2009

https://telegram.me/aedahamlibrary

உருகி ஓடும் என் கவசமும் வாளும்

அன்புள்ள சாரு,

உங்கள் பதிலின் நான்கு பகுதிகளையும், கமலாபுரம் ஹஜ்ரத்தையும் ஒன்றுக்கு இரண்டு தடவையாக படித்துவிட்ட பின்னரே இதை எழுதத் துவங்குகிறேன். விவாதம் மிஸ்டிக் தளத்திற்கு சென்று விட்டதாகத் தெரிகிறது. இல்லை, மிஸ்டிக் தளத்தில்தான் துவங்கினோமோ என்னவோ தெரியவில்லை. இந்த அர்த்தத்தில் 'உடல் வலிமையெல்லாம் ஒன்றுமேயில்லை என்று எனக்குப் புரிந்துவிட்டது' என்ற உங்கள் வார்த்தைகளை அப்படியே ஏற்பதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை. இதைத் தொடர்ந்து சிந்தித்தால், 'இன்டெலெக்சுவல்' என்ற வார்த்தையே மனித அகங்காரமாகத் தோன்றுகிறது. எனவே அதற்கு அடுத்த வார்த்தையாக 'ப்ராஸ்டிட்யூட்ஸ்' வருவதும் மிக இயல்பான விஷயமாகவே படுகிறது. இதனை இப்படியே விட்டுவிட்டு 'இன்டெலிஜென்ஸ் என்ற வார்த்தைக்குச் செல்வோமானால் அது உபயோகம் சேர்க்கக்கூடும் என்று நினைக்கிறேன்.

பரிணாம வளர்ச்சியின் பாதையில் மனிதன் பெற்றது ஆயிரம் இருக்க, மிக அவசியமான இயற்கையுடனான தொடர்பை இழந்து தனிமைப்பட்டுப் போய்விட்டான் என்பதை நாம் அனைவருமே ஒத்துக்கொள்வோம் என்று நம்புகிறேன். கடலில் ஏற்பட்ட பிரளயமான சுனாமியில் ஒரே ஒரு மீன்கூட இறந்துபோனதாகத் தெரியவில்லை. யாவும் முன்கூட்டியே தம் இயற்கை சார்ந்த உணர்வால் 'அறிந்து' இடம்பெயர்ந்துகொண்டன. மனிதர்களாகிய நாம், 'விஞ்ஞான முறைகள் ஏன் நமக்கு சுனாமி வருவதை முன்கூட்டியே தெரிவித்து உயிர் இழப்பைத் தடுக்கவில்லை?' என்று அதற்கான அரசியல் காரணங்களைத் தேடிக்கொண்டிருக்கிறோம். இதை 'லேக் ஆஃப் இன்டெலிஜென்ஸ்' என்பதைத் தவிர வேறு எப்படி சொல்வது!

இந்த அர்த்தத்தில் 'இன்டெலிஜென்ஸ்' என்ற வார்த்தையை 'மிஸ்டிக்' என்ற வார்த்தையுடன் பொருத்திப் பார்க்கிறேன். சராசரிகளுக்கும் 'மிஸ்டிக்' அனுபவங்களைக் கொண்டவர்களுக்கும் வித்தியாசம்,

https://telegram.me/aedahamlibrary

பிரக்ஞையிலுள்ள வித்தியாசத்தில் இருப்பதாகப் படுகிறது. இதையே முக்தி போதம் அடைந்தவர்களுக்கும், சராசரிகளுக்குமான வித்தியாசம் என்று கொள்கிறேன். ஆக, மனித ஜந்துவின் ஆகச் சிறந்த வகையினராக, 'இன்டெலிஜென்ட்' என்ற வார்த்தைக்குப் பொருத்தமான பிரக்ஞை கொண்டவர்களாக, சராசரிகள் வகுத்துக்கொள்ளும் வாழ்க்கைத் தத்துவங்களில் அடங்காதவர்களாக இந்த 'மிஸ்டிக்குகளை' நான் காண்கிறேன்.

மனித பரிணாம வளர்ச்சியின் அடுத்த கட்டமாக இவர்களையே விஞ்ஞானமும் முன் வைக்கிறது என்று நினைக்கிறேன். 'Homo Noeticus' என்ற சொல்லை உருவாக்கி புழக்கத்தில் விட்டிருக்கிறார்கள். இப்படி 'அறிவுக்கு அப்பாற்பட்ட விஷயங்களை' அறிவியல் பூர்வமான வகைப்படுத்தலை வைத்து நான் பெயரிடுவதை, பகுத்தாய்வு செய்வதை நீங்கள் மறுக்கலாம், கண்டிக்கலாம், புறக்கணிக்கலாம். உங்களுக்கு அதற்கான முழு உரிமையும், சுதந்திரமும் உண்டு. ஆனால் நான் நினைப்பதை வார்த்தைப்படுத்த முயல்கையில் எனக்கு வேறு வழி இல்லை. எல்லாவற்றையும் வார்த்தைகளுக்குள், பெயர்களுக்குள் போட்டே பிறருடன் பகிர்ந்துகொள்ள வேண்டியிருப்பது மனிதப் பிறவியின் மற்றொரு பரிதாப நிலை!

சரீர அளவில் கமலாபுரம் ஹஜ்ரத் போன்றவர்கள் சராசரி மனிதர்களைப் போல் தோற்றமளித்தாலும் அவர்களது தனித்தன்மை பிரக்ஞை அளவில், உள்ளுணர்வில் ஏற்படும் வித்தியாசத்தின் அடிப்படையில் நிகழ்கிறது. இவற்றை எளிய சொல்லாடலின் பொருட்டு மனதளவில் 'மிஸ்டிக்குகள்' சராசரியிலிருந்து வேறுபடுகிறார்கள் என்று கொள்வோம். இவர்களுக்கு மனதும் சரீரமும் ஒன்றாகவே இயங்கக்கூடும்; இவர்களது மனோபலம் சராசரிகளின் சரீர பலத்தை விட பல மடங்கு முந்தி இருக்கக்கூடும். இதைப் பற்றியெல்லாம் நமக்கு விளக்கிச் சொல்ல யார் இருக்கிறார்கள். மீண்டும், 'கண்டவர் சொன்னதில்லை; சொன்னவர் கண்டதில்லை' என்ற வரியையே இங்கு பயன்படுத்த நேரிடுகிறது. ஆனால் இந்த இடத்தில் முற்றுப்புள்ளி வைத்துவிடாமல், அப்படி சராசரி மனிதனை விட மேலான நிலையை அடைந்தவர்கள் சிலர் இது பற்றி சராசரி மனிதனின் மொழியில் பேசத் துவங்கினால் - அது மனித வாழ்வு கொண்டிருக்கும் அனைத்துத் துறைகளுக்கும் பயன் சேர்த்து, மானுட வாழ்வை, பிரக்ஞையை அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல உதவக்கூடும் இல்லையா. இதையே நம் விவாத புள்ளியாகிவிட்ட மூவரும் செய்ய முயன்றதாக நினைக்கிறேன். சுருக்கமாக, கமலாபுரம் ஹஜ்ரத் சிறுமிக்காக ஓடும் ரயிலை நிறுத்தியது

https://telegram.me/aedahamlibrary

போல் இவர்கள் சக மனிதர்களுக்காக தங்கள் நிலையை வார்த்தைப்படுத்தி மனித உலகை மேம்படுத்த முயன்றனர் எனலாம்.

இதில் ஓஷோவின் மிஸ்டிக் தன்மைகள் பற்றி எனக்கு அதிகம் தெரியவில்லை. என்னளவில் நான் ஓஷோவை ஒரு 'சுவாரசியமான பேராசிரியராகவே' காண்கிறேன். எனக்குப் பேராசிரியர்கள் மீது தனிப்பட்ட ஆர்வம் எதுவும் கிடையாது. விலகலே அதிகம். உங்களைப் போலவே என்னையும் எல்லா வகையிலும் உரைகளை விட மூலமே ஈர்க்கிறது என்றபோதும் ஓஷோவின் நகைச்சுவை உணர்வு என்னைக் கவர்வதையும் நான் ஒப்புக்கொண்டாக வேண்டும். மதம், மனித சிந்தனை, சமகால வாழ்வின் பிரச்சினைகள் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகையில் புனிதங்களை உடைத்தபடி வெளிப்படும் நகைச்சுவையும், கிண்டலும் அபாரமானது. இதனை உங்களின் வார்த்தையிலேயே கொண்டாலும், பின்நவீனத்துவ சிந்தனையுடன் சேர்த்து தாராள மாகக் கொண்டாடலாம் என்பது என் கருத்து. இது தவிர ஓஷோ பற்றி அதிகமாகச் சொல்ல எனக்கு ஒன்றும் இல்லை.

மற்றபடி, யூ.ஜி.யைப் பற்றி, அவரைச் சுற்றி நிகழ்ந்த அற்புதங்களைப் பற்றி, நீங்கள் ஏற்கனவே கூறிவிட்டீர்கள். ஜே.கே.வைப் பொறுத்தவரையும் அவர் இப்படிப் பல அற்புதங்களை நிகழ்த்தியிருக்கிறார் என்று தெரிகிறது. ஒரு உதாரணம்: ஜே.கே. தனக்கே உரிய சில உடற்பயிற்சிகளை செய்துகொண்டிருக்கிறார். அப்போது அந்த இடத்தில் குரங்கு ஒன்று நுழைந்துவிடுகிறது. ஜே.கே. குரங்கைப் பார்க்கிறார்; குரங்கும் ஜே.கே.வைப் பார்க்கிறது. ஜே.கே.குரங்கை நோக்கித் தன் கையை நீட்டுகிறார். குரங்கும் எந்தவிதப் பதட்டமும் இன்றி ஜே.கே.வுக்காகத் தன் கையை நீட்டுகிறது. இருவரும் கை குலுக்குகின்றனர். ஜே.கே. குரங்கிடம் "நான் இங்கு பயிற்சி செய்து கொண்டிருக்கிறேன்; நீ வெளியே சென்றுவிடுவது நல்லது" என்கிறார். குரங்கும் உடனே தாமதம் செய்யாமல் வெளியே சென்று விடுகிறது. ஜே.கே. தன் பயிற்சியைத் தொடர்கிறார்.

இதுபோல் நிறைய விஷயங்கள் ஜே.கே.வைப் பற்றிச் சொல்லப்படுகின்றன. ஜே.கே. இறந்தபோது ஓஷோ கூறியவை 'டெத் ஆஃப் தி மிஸ்டிக்' என்ற தலைப்பின் கீழ் இந்த இணைப்பில் வாசிக்கக் கிடைக்கிறது: http://www.oshoworld.com/biography/innercontent.asp?FileName=biography9/09-09-krishnamurti.txt%20

ஆனால் ஜே.கே. சாதாரணமாக இவை எதையும் முன் வைப்பதில்லை. செக்ஸ் என்று மட்டுமல்ல, அற்புதங்கள் நிறைந்த தன் தனிப்பட்ட வாழ்வை அவர் எந்த நிலையிலும் மற்றவர்களுக்கு வெளிப்படுத்த

https://telegram.me/aedahamlibrary

ஆர்வம் காட்டியதில்லை. அதற்கு அவர் தன் செயல்பாட்டினைக் கொண்டிருந்த விதமும் காரணமாக இருந்திருக்கலாம். எது எப்படியிருந்தாலும் அவரது தனிப்பட்ட வாழ்வு பற்றி அவ்வளவு அக்கறை கொள்ளாதவனாகவே இருக்கிறேன். இதில் மிஸ்டிக் தன்மையை முன்வைத்துப் பேசினால், வேதனையில் உழலும் மனங்களுக்கு அது ஒரு கவர்ச்சியான தின்பண்டத்தைக் காட்டி ஈர்ப்பது போல் ஆகிவிடும். அதை ஒரு அமானுஷ்யக் கலையாகக் கற்பதில் மட்டுமே ஆர்வம் கூடும்; உண்மையை, நேசத்தை நோக்கி ஒரு எட்டுக்கூட வைக்க மாட்டார்கள் என்று ஜே.கே. நினைத்ததாகத் தெரிகிறது. (இந்த இடத்தில் ரஸ்புதீன் உருவாக்கிய அழிவுகள் நினைவுக்கு வருகின்றன.)

இதையே யூ.ஜி. 'ஏன் அந்த அற்புதங்களை நீ அற்புதங்களாகக் கொண்டாடுகிறாய்... முக்தி போதம் என்பதெல்லாம் உனது மனதின் சாவிலிருந்து எழுவது... மனம் செத்தால் நீயே செத்தது போல்தானே... பின்பு நீ வெறும் உடம்பாக மட்டுமே ஜீவித்திருக்க முடியும்... உண்மையாக அதை நீ விரும்பவில்லை; நீ முக்தி போதம் என்று வார்த்தையளவில் புரிந்துகொண்டு வேறெதையோ எதிர்பார்க்கிறாய்... அது இங்கே கிடைக்காது... உண்மையில் எங்குமே கிடைக்காது; எழுந்து போ' என்கிறார்.

யூ.ஜி. பற்றி சொல்லத் துவங்கினால் நான் முதலில் அவர் சிந்தனையாளரே அல்ல என்பேன். அவர் சிந்தனையை மறுப்பவர். மனம் என்பதே ஒரு கற்பனைப் பொருள் என்பவர். இதனாலேயே எதைப் பற்றி அவரிடம் கேட்டாலும் அதை மறுத்தே பதில் கூறுவார். அதற்கு அவர் பயன்படுத்திய மொழி மிகவும் காட்டமானது. இவர்கள் மூவரையும் மறுத்து நீங்கள் எழுதியிருக்கும் இந்த பதில்களின் முதல் பகுதிகூட ஒருவகையில் யூ.ஜி.யின் மொழி மற்றும் வெளிப்பாட்டு முறை சார்ந்ததாகவே ஆகிவிடுகிறது என நினைக்கிறேன்.

யூ.ஜி. மனதை மறுப்பதால் அதன் அழகியல் முதல் (இசை, சினிமா, கவிதை, ஓவியம், இத்யாதி...) பயிற்சிப்படுத்தும் முறை வரை (தியானம், உடற்பயிற்சி, குருமார்கள்) என அனைத்தையும் மறுக்கிறார். இதை ஒருவகையில் அவர் ஜே.கே.விடம் பெற்றுக்கொண்டது எனலாம். ஜே.கே. மனதின் தியான நிலையைத் தவிர மற்ற அனைத்தையும் மறுத்தவர் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. யூ.ஜி. மனதின் தியான நிலை என்று ஜே.கே. குறிப்பிடுவதை மறுத்து மனம் இறந்தே போய்விடுகிறது என்கிறார். அவ்வளவே. இரண்டு பேருமே மனம் அற்ற நிலை பற்றித்தான் பேசியிருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஆனால்

https://telegram.me/aedahamlibrary

ஜே.கே. அந்த நிலையை பிறருக்குக் கற்பித்துவிட வேண்டும் என்று முயன்றார். யூ.ஜி. அப்படி ஜே.கே. முயன்றதை எள்ளி நகையாடினார். கோமாளித்தனம் என்றார். அதெப்படி மனதின் வழியான புரிதல் கொண்டிருப்பவர்களுக்கு மனமற்ற நிலையை மனதின் வழியாகவே கற்பிப்பது என்றார். மேலும் ஜே.கே. கூறும் மனதின் தியான நிலைக்கு ஜே.கே. மனதின் நகர்வின் பாதை எல்லாவற்றையும் விவரித்து, மனதை நிலைகொள்ளச் செய்ய முயல வேண்டியிருந்தது. இவையெல்லாவற்றையுமே யூ.ஜி. உதவாத செயல் என்று எதிர்த்தார்.

யூ.ஜி. சொல்லியது சரியே. ஆனால் இன்று இரண்டு பேருமே மறைந்துவிட்ட நிலையில் ஜே.கே. சராசரி வாழ்வில் பல துறைகளுக்குப் பயன்படுபவராக ஆகி இருக்கிறார். அதற்குக் காரணம் ஜே.கே. ஆர்வலர்களில், சராசரி வாழ்வின் சிறப்பான முதல் வரிசையைச் சேர்ந்த மூன்றாவது வகையினர்.

நான் கவனித்தவரை ஜே.கே. ஆர்வலர்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம் என்று தோன்றுகிறது.

முதல் வகை: ஜே.கே.வை ஒரு மகானாக வழிபட்டு - அவர் வார்த்தைகளை கிளிப்பிள்ளை போல் திரும்பத் திரும்ப சொல்லி, அந்த வார்த்தைகளிடையேயான பொருளைத் தவற விட்டவர்கள். இவர்கள் வேண்டுவது தப்பித்தலை. எதிலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற அடிப்படைக் கேள்வியை இவர்கள் கேட்டுக்கொள்வதேயில்லை. இது போன்றவர்கள் எல்லாத் துறைகளிலும், எல்லா மதங்களிலும் இருந்து எல்லா வகை குழப்பங்களையும் அதிகரிக்கச் செய்கின்றனர். (குறிப்பு: தனிப்பட்ட முறையில் நான் மகேஷ் பட்டை இப்படிப்பட்டவராகவே காண்கிறேன். அவர் எடுத்த படங்களே இதற்கு சாட்சி. இதில் உங்களுக்கும் எனக்கும் இரு வேறு கருத்து இருக்க வாய்ப்பே இல்லை என்று நம்புகிறேன்).

இரண்டாவது வகை: ஜே.கே. சொல்வதன் நடைமுறை சாத்தியத்தை உணர்ந்து, அதை உடனே அப்படியே தம் வாழ்வின் ஒவ்வொரு அசைவிலும் பின்பற்ற முயல்பவர்கள். டோட்டல் கான்ஷியஸ்னஸ், டோட்டல் அடென்ஷன் போன்றவற்றை ஒருவரைப் பின்பற்றி வலிந்து செயல்படுத்த முயல்வது சாத்தியமே இல்லை. அது மிக ஆழமான புரிதலின் பெயரிலோ, அல்லது யூ.ஜி. கூறுவது போல் அதிர்ஷ்டவசமாக ஒருவரிடத்தில் தானாக, இயல்பாக வெளிப்படத் துவங்கினாலோ ஒழிய அதை அடைவதற்கு வேறு வழியில்லை. இது புரிந்தும் புரியாமலும் ஜே.கே. சொல்வதை செயல்படுத்த முயன்று கொடுமையாகத் தோற்பவர்கள் இந்த இரண்டாம் வகையினர். இவர்கள் தங்களைப்

https://telegram.me/aedahamlibrary

புறக்கணித்து ஜே.கே.வை அப்படியே மூளையில் வாங்கிச் சுமக்க முயல்பவர்கள்.

இந்த இரண்டு வகையுமே யூ.ஜி. சொல்வதை நிரூபிக்கிறது. ஜே.கே. மூலம் பலவித மனநோய்களிலிருந்து விடுபடும் இந்த இரண்டு வகையினரும், பின்னால் ஜே.கே. என்ற மனநோயால் பீடிக்கப்பட்டவர்களாகிறார்கள். ஒரு சிக்கலிலிருந்து தப்பி இன்னொரு சிக்கலில் மாட்டிக்கொள்வது மருந்தே விஷமாக மாறிவிடுவது போல் நடக்கிறது. இப்படி இவர்களை ஆகச் செய்துவிடுவது ஜே.கே.வின் குற்றம் என்று யூ.ஜி. ஜே.கே.வைத் திட்டுகிறார். ஆனால் இதைத் தாண்டி ஜே.கே.வின் பயன்பாடு, மூன்றாவது வகையினரின் மூலம் வெளிப்படுகிறது.

மூன்றாவது வகை: இந்த வகையினர் ஜே.கே.வை தன் சக பயணியாகக் கருதுபவர்கள். ஜே.கே. கூறுவதை அப்படியே திரும்பச் செய்யாமல் ஜே.கே.யுடன் தன் உரையாடல்களை நிகழ்த்துபவர்கள். அது அவர்கள் சார்ந்த துறைகளுக்குப் பெரும் பலம் சேர்ப்பதாக ஆகிவிடுகிறது. இந்த மூன்றாவது வகையினரில் இலக்கியவாதிகளிலிருந்து விஞ்ஞானிகள் வரை பல துறைகளைச் சார்ந்தவர்கள் அடக்கம்.

சாரு, உங்களுக்கு டேவிட் போஹம், ரூபர்ட் ஷெல்ட்ரேக், ஜான் ஹிட்லி ஆகிய மூவரும் ஒரு சேர ஜே.கே.வுடன் நிகழ்த்திய உரையாடல்கள் பார்க்கக் கிடைத்ததா? நீங்கள் ஏற்கனவே பார்த்திருந்தாலும் கூட, 'மிஸ்டிக்', 'பரிணாம வளர்ச்சியின் அடுத்த நிலை' என்றெல்லாம் நாம் பேசிக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் இந்த உரையாடல்களை இன்னொரு முறை பார்த்துவிடுமாறு மிக அழுத்தமாகப் பரிந்துரைக்கிறேன்.

டேவிட் போஹம்: விஞ்ஞானி தன் வாரிசாக ஆல்பர்ட் ஐன்ஸ்டைனால் கொண்டாடப்பட்டவர். போஹம் டிஃபுஷன் தியரி இவருடைய பெயருடனே வழங்கப்படுகிறது. க்வாண்டம் மெக்கானிக்ஸ் ஆராய்ச்சி கிருஷ்ணமூர்த்தியிடம் இவரை அழைத்துச் சென்றிருக்கிறது.

ரூபர்ட் ஷெல்ட்ரேக்: பயாலஜிஸ்ட். பிராணிகள், தாவரங்கள் ஆகியவற்றின் இயங்கியல் ஒத்திசைவை ஆராய்ந்து வெளிப்படுத்தியவர். பிரபஞ்ச மனம் பற்றி கவனம் கொண்டவர். சிந்தனைத் தளத்தில் மிக முக்கியமாகக் கருதப்படும் 10 நூல்களின் ஆசிரியர்.

ஜான் ஹிட்லி: மனோதத்துவ நிபுணர்.

இவர்கள் மூவருமே தங்கள் துறைகளில் நேர்மையுடனும், அதி

https://telegram.me/aedahamlibrary

தீவிரத்தன்மையுடனும் செயல்பட்டு, தங்கள் ஆராய்ச்சியில் முக்கிய உயரங்களை அடைந்தவர்கள். எதிலும் எதற்காகவும் யாருக்காகவும் சமரசம் செய்துகொள்ளாதவர்கள். இவர்கள் மூவரையுமே முழுமையாகப் படித்துவிடும் ஆர்வம் எனக்கு உண்டு. இதுவரை இணையத்தில் கிடைத்ததை மட்டுமே இங்கு கொஞ்சம் அங்கு கொஞ்சமாக வாசித்திருக்கிறேன். குறிப்பாக ரூபர்ட் ஷெல்ட்ரேக்கின் புத்தகத் தலைப்புகள் என்னை மிகவும் கவர்கின்றன. புத்தகங்களைத் தேடிக்கொண்டிருக்கிறேன்.

வெவ்வேறு துறையை சேர்ந்த இவர்கள் மூவரும் கிருஷ்ணமூர்த்தியுடன் கலந்துரையாடும் இந்த நிகழ்வு மிகவும் நேர்த்தியான முறையில் வடிவமைக்கப்பட்டு, இரண்டு குறுந்தகடுகளாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. 'நேச்சர் ஆப் த மைன்ட்' என்ற தலைப்பின் கீழ் தொகுக்கப்பட்டிருக்கும் இந்த உரையாடல்கள் கிருஷ்ணமூர்த்தி பவுன்டேஷனில் 500 ரூபாய் விலையில் இரு குறுந்தகடுகளாக கிடைக்கிறது. இணையதளத்தில் ஓரளவிற்கு இவை பார்க்கக் கிடைக்கும் என்றாலும், இவை இணையதளத்தில் பார்ப்பதற்கு பொருத்தமானவை அல்ல.

(இந்த மூவருக்கு அடுத்தபடியாக ஜே.கே.உரையாடல்களில் என்னைக் கவர்ந்தது அவர் ஜே.டபிள்.யூ. ஆண்டர்ஸனுடன் நிகழ்த்திய 18 'ஒரு மணி நேர' உரையாடல்களின் தொடர். குறுந்தகடுகளாக இவையும் கிடைக்கும் என்று நினைக்கிறேன். இவற்றுக்காக ஒரு நாளைக்கு மூன்று என்ற கணக்கில் ஆறு நாட்களை கிருஷ்ணமூர்த்தி பவுன்டேஷனில் செலவழித்தேன். அந்த அனுபவமும் சிறப்பாகவே இருந்தது).

ஜே.கே.வுடனான இந்த உரையாடல்கள் பற்றிச் சொல்லத் துவங்கினால் சட்டென்று தோன்றுவது ஒரே ஒரு வரிதான் - 'இட் இஸ் எ டிலைட் டு வாட்ச்.'

காரணம், மனிதர் எந்த ஒரு விஷயத்தையும் நேரடியாகச் சொல்கிறார். எந்த ஒரு வேதாந்தத்தின் சாயலும் அதில் இருப்பதில்லை; எந்தச் சிந்தனை மரபினையும் சாதகமாக்கிக்கொண்டு தன் பேச்சினில் நுழைப்பதில்லை; இந்த நொடியின் தருணத்தில் நம்முடன் கைகோர்த்துக்கொண்டு உண்மையை நோக்கிப் பார்வையாளனை பயணத்திற்கு உட்படுத்துகிறார். வாதப் பிரதிவாதங்களுக்கு பதிலாக மிக மிக நேரடியாக அவர் உண்மை என்று அறிந்ததை முன் வைத்து ஒரு சில கேள்விகள், கச்சிதமான சொல்லாடல் முறை ஆகியவற்றின் மூலம் நம்மை அவருடன் சேர்ந்து நகரச் செய்கிறார். அவரது பேச்சுகளில் நினைவுகளை விட இந்த நொடியின் அற்புதம் முழுக்க இந்த நொடியின்

https://telegram.me/aedahamlibrary

விஷயமாக இந்த நொடியிலேயே சொல்லப்படுகிறது. இத்தகைய தன்மைகள் ஜே.கே.வுக்கு மட்டுமே உரியது. அவருடனான உரையாடல்களில் அவரிடம் பேசிக்கொண்டிருப்பவர்களுக்கும் அவருக்குமான வித்தியாசம் இந்த வகையிலேயே வெளிப்படுகிறது. அவர்கள் தங்கள் அறிவு கொண்டு, வாசிப்பின், சிந்தனையின், நம்பிக்கைகளின் பலம் கொண்டு அவர் கூறுவதை பகுத்தறிய முயல்கிறார்கள். ஆனால் ஜே.கே. இதற்கு நேர் எதிராக அவற்றிலிருந்து விலகி அவற்றை அந்த நொடியின் தன்மையுடனே கச்சிதமாக சந்திக்கிறார். இதனால் அவரது வார்த்தைப்படுத்தல் முறையும், மொழியும் மிகுந்த அழகும் அர்த்தமும் உள்ளதாகிறது.

ஆக, இது போன்றவர்களை நான் கிருஷ்ணமூர்த்தி ஆர்வலர்களில் மூன்றாவது - முக்கிய - வகையினர் என்கிறேன்.

தமிழில் இலக்கியத்திலும் இந்த மூன்றாவது வகைக்கு உதாரணங்கள் உண்டு. அதுபற்றி என்னை விட நீங்கள் அதிகமாக அறிந்திருக்கக் கூடும். குறிப்பாக கவிஞர்களைச் சொல்லலாம். பிரமிளில் துவங்கும் இந்தப் பட்டியல் சுகுமாரன் வரை தொடர்கிறது. ஆனால் யாரும் இது பற்றி அதிகம் எழுதியதாகத் தெரியவில்லை. சில ஆண்டுகளுக்கு முன் வந்த உயிர்மை இதழ் ஒன்றில் கமெண்டரிஸ் ஆன் லிவிங்கை தான் படித்ததில் துவங்கி கிருஷ்ணமூர்த்தி சார்ந்த தன் அனுபவத்தை சுகுமாரன் கட்டுரையாக எழுதியிருந்ததாக ஞாபகம். என்னளவில் ஜே.கே.வின் கமெண்டரீஸ் ஆன் லிவிங்ஐ ஒரு இலக்கியப் பிரதியாகவே பார்க்கிறேன். அதன் சொல்முறையும், வர்ணனைகளும், கச்சிதத்தன்மையும் எனக்கு அபாரமானதாகத் தோன்றுகிறது. மொழியின் பயன்பாடு சிந்தனைத் தளத்தில் கொண்டு சேர்க்கும் மாற்றங்கள் நாம் அறிந்ததே. அந்த வகையில் ஜே.கே. மொழியைப் பயன்கொள்ளும் விதம் எனக்கு மிக முக்கியமானதாகப்படுகிறது.

குறிப்பாக கவிஞர்களுக்கு ஜே.கே. பிடித்தமானவராக, விவாதப் புள்ளிகளை -- ஆச்சரியக் குறிகளைத் தொடர்ந்து எழுப்பியபடி படைப்பூக்க நிலையை அளிப்பவராக இருப்பார் என்பது என் அனுமானம். இதற்குக் காரணமாக நான் கருதுவது, கவிஞர்கள் நுண்ணுணர்வு சார்ந்தவர்களாக இருப்பதும், அந்த நுண்ணுணர்வு ஜே.கே. பயன்படுத்தும் மொழியின் கவித்துவத்தில் ஆழமாக வெளிப்படுகிறது என்பதுமே.

(குறிப்பு: அதே சமயம் இதற்கும் ஜே.கே.வின் கவிதைகள் பற்றிய என் கருத்துக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை. ஜே.கே.வின் கவிதைகள் சிலவற்றை பிரமிளின் கவிதைப் புத்தகத்திலும், ஆங்கிலத்தில்

https://telegram.me/aedahamlibrary

கிடைக்கும் தனிப் புத்தகமாகவும் வாசித்திருக்கிறேன். அவை அவரது இளமைப் பருவத்தில் எழுதப்பட்டவை. அவற்றை முன்வைத்து கவிஞனாக ஜே.கே. என்னைக் கவரவில்லை என்றே சொல்லுவேன். அச்சில் வந்தவற்றில் ஆங்கிலத்தில் நேரடியாக உள்ள அவரது உரைநடைப் பகுதிகளே சிறப்பானவையாக எனக்குப் படுகிறது.)

இப்படியாக மனதின் தியான நிலையை வாழ்வின் ஒவ்வொரு நொடிக்கும் முக்கியமானது என்று கூறும் ஜே.கே. பல்வேறு துறைகளுக்கும் பயனுள்ளவராக, வாழ்வின் அழகியலை அறிந்தவராக, வாழ்வைக் கொண்டாடுபவராகவே எனக்குத் தெரிகிறார்.

யூ.ஜி. இவை அனைத்தையும் மனம் என்பது ஒரு கற்பனைப் பொருள் என்ற ஒரு வார்த்தையில் தவிடு பொடியாக்கிவிடுகிறார். அவர் கூறுவதை முற்றிலுமாக மறுப்பதற்கும் இல்லை. மனிதன் ஒருவனே, நோய்க்கான மருந்துகளையும், அதன் மூலம் புதுப்புது நோய்களையும், உடற்பயிற்சிகளையும் உருவாக்கிக் கொண்டிருக்கிறான்.

மனிதன் நீங்கலாக உலகின் கோடானுகோடி ஜீவராசிகள் எவையும் இதுபோன்ற சாகசங்களில் ஈடுபடுவதில்லை! ஆக, மனம் என்பது மனிதனுக்குக் கிடைத்த வரமா சாபமா தெரியவில்லை. இது ஒருபுறம் இருக்க, மனம் தன் இயக்கத்தைக் கொள்ளத் துவங்கி பல நூறாண்டுகள் ஆகிவிட்ட இந்நிலையில் ஒரு மனிதன் தன் மனதைப் புறக்கணிப்பது மனித வாழ்வையே புறக்கணிப்பதாக ஆகிவிடுகிறது. அப்படிப் பார்த்தால் யூ.ஜி. மனித வாழ்வையே புறக்கணிக்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும். ஜே.கே. மனதை தியான நிலையில் வைத்துக்கொண்டால் வாழ்வே கொண்டாட்டமாக மாறும் என்கிறார். அந்த தியான நிலை என்பது எது என்பதை மேலும் தெளிவுபடுத்திக்கொள்ள, யூ.ஜி. குறிப்பிடும் மனதை மறுக்கும் விஷயங்கள் எனக்குத் தனிப்பட்ட முறையில் உதவி செய்தன. எது எப்படி இருந்தாலும் கிடைத்திருக்கும் இந்தக் குறுகிய கால வாழ்வில், பிடித்ததை செய்வது, அதற்குத் தகுந்த மாதிரி உடலையும் மனதையும் தயாரித்துக்கொள்வது என்று மட்டும் என்னளவில் முடிவு கொள்கிறேன். எனக்கு எதையும் வாதப் பிரதிவாதங்களின் போட்டிக்கு விட்டு வேடிக்கை பார்ப்பதைவிட அனுபவத்தின் போக்கில் கவனம்கொள்ளப் பிடித்திருக்கிறது.

இந்த இடத்தில் உங்களின் உன்னத சங்கீதம் என்ற சிறுகதையைப் பற்றிச் சொல்ல வேண்டும். அந்தக் கதை பற்றிச் சொல்ல இதைவிட பொருத்தமான தருணம் வேறொன்று வாய்க்காது என்றே நினைக்கிறேன். உங்களைப் போலவே நானும் உங்களின்

https://telegram.me/aedahamlibrary

படைப்புகளிலேயே முக்கியமானதாக 'உன்னத சங்கீதத்தை' கருதுகிறேன். உங்களுடையது என்று நின்றுவிடாமல், நான் வாசித்த வரையிலான தமிழ்ச் சிறுகதைப் பரப்பில் வைத்துப் பார்த்தாலுமே இந்தக் கதை எனக்கு முக்கியமானதாகப்படுகிறது.

இசை, பாலியல், உளவியல், ஆன்மீகம், எதிர்க் கலாச்சார சிந்தனை என இன்னும் எது எதுவோ கலந்து உருவாகி நிற்கும் இந்தக் கதை, சிதறுண்டு கிடக்கும் மனம் தன் சிதறல்கள் வழியே வழிந்து பெருகி தியான நிலையை எட்டும் நிலையாக எனக்குத் தோற்றமளிக்கிறது. கதை நிகழ்கிறது; நிகழ்த்தப்படவில்லை. இந்தக் கதையை அதன் பாலியல் விவரணைகளை மட்டும் முன்வைத்து 'கான்ட்ரவர்ஷியல்' என்று விவாதிப்பவர்களை, காலம் என்ற முதலை அதிவிரைவில் சாப்பிட்டு ஏப்பம் விட்டுவிடும். இந்தக் கதையில் 'ஒரு தசைத் துணுக்குதானா என் எழுத்தை நிர்ணயிக்கிறது' என்ற பொருள்பட ஒரு வரி வருவதாக ஞாபகம். அதை அவசரமாக மறுத்து, இல்லை; ஜால வித்தை காட்டும் மனது தன்னழிவுக்காக ஏங்கும்போதே இத்தகைய கலை உருவாகுகிறது என்பேன் நான். மனதின் இத்தகைய தன்னழிவே ஆன்மீகம். அதுவே எந்தக் கலைப்படைப்பின் உச்சத்திலும் நிகழ்கிறது. அதையே உன்னதம் என்கிறோம். கலைஞன் அடைந்து மீளும் இந்த நிலைகளிலேயே மிஸ்டிக்குகள் மீளாமல் நிலைத்து நின்றுவிடுகிறார்கள் என்று தோன்றுகிறது.

இப்படிச் சொல்கையில் தேவதச்சனின் கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

எப்பவாவது

எப்பவாவது ஒரு கொக்கு பறக்கும் நகரின் மேலே

என் கவசமும் வாளும் உருகி ஓடும்

ஊருக்கு வெளியே

(வரிகளை நினைவிலிருந்து எழுதுகிறேன், கைவசம் புத்தகம் இல்லை, பிழை இருந்தால் தேவதச்சன் மன்னிப்பாராக...)

எப்பவாவது நிகழ்வதாக தேவதச்சன் குறிக்கும் கவசமும் வாளுமுற்ற நிலையையே உன்னத சங்கீதத்தில் காண்கிறேன். இவை கலை மனங்கள். இவை மனதின் ஜால நிகழ்வுகளின் வழியே தம் கலையை நிகழ்த்தி தியான நிலையை அடைகின்றன.

எப்பவாவது நிகழும் இந்தக் கவசமும் வாளுமற்ற நிலையை வாழ்வின் எல்லா நொடிகளிலும் அடைவது ஞானிகளுக்கும், பல்வேறு

https://telegram.me/aedahamlibrary

சித்தர்களுக்கும் சாத்தியப்பட்டிருக்கிறது போலும். இருந்துவிட்டுப் போகட்டும்; அதையே லட்சிய நிலையாக நான் கொள்ளவேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இதைத் தொடர்ந்து இந்த நொடி எனக்குள் இப்படிச் சொல்லிக்கொள்கிறேன்: 'மனதை முற்றிலுமாக யூ.ஜி. புறக்கணித்து முக்தி அடைந்து சாகஸம் செய்யட்டும்; நான் மனம் நிகழ்த்தும் ஜால வித்தையைக் கலையின் வழி வேடிக்கை பார்ப்பேன்; அதுவே எனக்கு சாத்தியமான சுவாரஸ்யம்.'

இதில், இந்த ஜால மனம் அடையும் தியான நிலையைப் பற்றி எனக்கு எட்டியவரான ஜே.கே.வும், உங்களுக்குப் பிடித்தவரான ஆதி சங்கரரும் சொல்லிக்கொண்டே இருப்பார்கள் - தொடர்ந்து...

இந்த இடத்தில் எழுதுவதை நிறுத்தி இதுவரை எழுதியவற்றை படித்துப் பார்க்கிறேன். இவை யாவற்றையும் என் பார்வையை முன்வைக்கும் எளிய சூட்டல்கள் என்பதைத் தவிர இக்கடிதத்தை உங்களுக்கு அனுப்ப எனக்கு வேறு நியாயமில்லை. யூ.ஜி.யையும், ஜே.கே.வையும் பிற ஞானிகளையும் சித்தர்களையும், ஏன் ரஸ்புதீனையும் கூட நான் ஒன்றாகவே பார்க்கிறேன். இது தவிர, ஜே.கே.வையோ யூ.ஜி.யையோ ஓஷோவையோ உங்களிடம் நிறுவியாக வேண்டும் என்றோ, என் தரப்பை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றோ, சிறுபிள்ளைத்தனமான எண்ணங்கள் எதுவும் அதிருஷ்டவசமாக எனக்கு ஏற்படவில்லை. மனித வாழ்வின் அற்புதங்களை, அடுத்தக் கட்ட நகர்வை, மனதின் தியான நிலையை, அசலான ஆன்மீகத்தை, கலையின் சாத்தியங்களை, கிடைத்த வாழ்வைக் கொண்டாடும் ஆர்வத்தின் பேரில் உருவாகும் சொற்களைத் தூண்டுதலாகக் கொண்டு எழுதப்பட்ட கடிதம் என்றே இதை நீங்கள் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சொல்லப்போனால் இந்த நோக்கில் உங்களுடன் பேசிக்கொண்டிருப்பதற்கு இணையாகவே மலாவி என்ற நான் அமர்ந்திருக்கும் இந்த தேசத்தை முன் வைத்து மனித வாழ்வைப் பரிசீலிக்கும் சொல்லாடலும் எனக்குத் தோன்றுகிறது. எனவே இதை இப்படியே விட்டுவிட்டு மலாவி பற்றிய உங்களுடனான சம்பாஷணையைத் தொடர்கிறேன். அனுமதிக்கவும்.

கடிதத்தை முடிக்கும் முன் ஒரு விஷயம் சொல்லியாக வேண்டும்.

உங்களின் இந்த நான்கு பகுதிகளையும் படித்துவிட்டு நண்பன் ஒருவன் என்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டான். என்னவோ தன் போக்கில் பேசினான்.

https://telegram.me/aedahamlibrary

நான் அவனிடம், சாரு எழுத ஆரம்பிப்பதற்கு பல வருடங்களுக்கு முன்னே தன் வாசிப்பைத் துவங்கியிருப்பார். இத்தனை நாள் எழுத்திலும், வாசிப்பிலும், வாழ்வனுபவங்களிலும் அவருக்கென்ற ஒரு பிரத்யேகமான வாழ்க்கைப் பார்வை ஒன்று உருவாகி இருக்கும். அதனை முன்வைத்து அவர் விஷயங்களைப் பரிசீலிக்கிறார். நான் என் கவனத்திற்குட்பட்டதை அவருடன் பகிர்ந்துகொள்கிறேன். இதை வாசித்துவிட்டு நீ என்னவோ சொல்கிறாய். எல்லாம் சரி. இப்போது விவாதப் புள்ளிகளாக இருக்கும் இந்த மூன்று பேரை நீ தனிப்பட்ட முறையில் எவ்வளவு வாசித்திருக்கிறாய் என்றேன். நண்பன், ரொம்ப முன்னாடி, ஓஷோவின் புல் தானாக வளர்கிறது என்று ஒரு புத்தகம் மட்டும் என்றான். நான் - போகட்டும், சாருவையாவது முழுமையாகப் படித்திருக்கிறாயா என்றேன். நண்பன் - அப்படிச் சொல்ல முடியாது; ஆனால்... என்று இழுத்தான். இதைத் தொடர்ந்து நான் “அப்படியானால் உனக்கும் இந்த நான்கு பகுதிகளுக்கும் எந்தச் சம்மந்தமுமில்லை; தயவுசெய்து தொலைபேசியை வைத்துவிடு” என்றேன்.

நண்பன் ‘நீ சொல்வது எனக்குப் புரியவில்லை’ என்றான்.

அதற்கென்ன செய்வது; அவன் சொல்வது கூடத்தான் எனக்குப் புரியவில்லை.

அன்புடன்,

ஆனந்த்

ஜூன் 10, 2009

https://telegram.me/aedahamlibrary

சதுரங்க ஆட்டத்தில் தோல்வி

அன்புள்ள ஆனந்த்,

உங்கள் கடிதத்தில் உள்ள ஒவ்வொரு விஷயமாகத் தொடலாம் என்று பார்க்கிறேன். உங்கள் கடிதம் என்னை ரொம்பவே யோசிக்க வைத்துவிட்டது. நான் இன்னும் நிறைய எழுத வேண்டும் என்று திருவுள்ளம் பண்ணியே இப்படி ஒரு கடிதப் போக்குவரத்து நடக்கிறதோ என்றும் தோன்றுகிறது.

சுனாமி போன்ற இயற்கைப் பேரழிவுகளும் மனித இனமும் பற்றி யோசிக்கும்போது என் மனக்கண் முன் ஒரு காட்சி தோன்றுகிறது. மிகுந்த அழகும் கம்பீரமுமான தோற்றமளிக்கும் ஒருவனை அடிக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. துரதிர்ஷ்டம்தான். அடிக்கிறேன். ஆச்சரியகரமாக அவன் என்னைத் திரும்பித் தாக்கவில்லை. அதனால் துணிவு பெற்று மீண்டும் அவனை அடிக்கிறேன். அவன் முகத்தில் ரத்தம் வழிகிறது. ஆச்சரியகரமாக அவன் என்னைத் திருப்பித் தாக்கவில்லை. இப்படியே அவனை நான் மேலும் மேலும் அடிக்கிறேன். நான் அடிப்பதையும் அவன் திருப்பித் தாக்காமல் என் அடிகளை வாங்கிக்கொண்டிருப்பதையும் பார்த்த மற்றவர்களும் அவனைத் தாக்குகிறார்கள். காரணம் எதுவும் இல்லை. நான் தாக்குவதைப் பார்த்து அவர்களும் தாக்குகிறார்கள். அவ்வளவுதான்.

கடைசியாக அவன் எங்களை ஏறிட்டுப் பார்க்கிறான். நாங்கள் அத்தனை பேரும் அவனுடைய பார்வையின் உஷ்ணத்தில் பொசுங்கிச் சாம்பலாகிறோம்.

இதுதான் இந்தியாவில் நடந்துகொண்டிருக்கிறது; குறிப்பாக தமிழ்நாட்டில் மெரினா பீச் என்ற அழகான இடம் ஒரு பிரம்மாண்டமான குப்பைத்தொட்டியாகிவிட்டது. ஒரு லட்சம் பேர் தாங்கள் சாப்பிட்ட பாலிதீன் பைகளையும், மற்ற கச்சடா குப்பைகளையும் அங்கே விட்டெறிகிறார்கள். ஒரு பெருநகரத்தின் குப்பைக் கிடங்கு எப்படி இருக்குமோ அப்படி இருக்கிறது அந்த பீச். காலையில் கடற்கரையின் அழகைப் பார்க்கலாம் என்று சென்றால் ஆயிரம் பேர் வழித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார்கள், கழிவை வெளியேற்ற.

இது இப்படியென்றால், தமிழ்நாட்டில் எந்த ஊருக்குப் போனாலும்

https://telegram.me/aedahamlibrary

அங்கே மரங்களே இல்லை. இது எனக்கு பெரும் அதிர்ச்சியாக இருந்தது. மனித மாமிசத்தைப் புசிக்கும் காட்டுமிராண்டிகளைக் கண்டால் ஒருவருக்கு எத்தகைய அதிர்ச்சி ஏற்படுமோ அத்தகைய அதிர்ச்சி ஏற்பட்டது. முன்பெல்லாம் தமிழ்நாட்டை நான் அதிகம் சுற்றி வந்ததில்லை. ஆனால் இப்போது நிறைய பயணம் செல்கிறேன். ஒவ்வொரு ஊரைப் பார்க்கும்போதும் ரத்தக்கண்ணீர் வருகிறது. திருப்பூர், திருவண்ணாமலை, வேலூர், திருநெல்வேலி என்று எந்தப் பக்கம் போனாலும் மருந்துக்குக்கூட ஒரு மரத்தைப் பார்க்க முடியவில்லை. தமிழ்நாடு பூராவுமே மொட்டைத் திடலாகக் காட்சியளிக்கிறது. இப்படியே போனால் லெமூரியா கண்டம் அழிந்தது போல் தமிழ்நாட்டையும் கடல் கொண்டுவிடும் என்று தோன்றுகிறது. ஒரு காட்டுவாசிக்கு, நாகரீகத்தின் சுவடே படாத ஆதிவாசிக்கு இருக்கும் அறிவுகூட இந்த ஜனக்கும்பலுக்கு இல்லையே என்று ஆச்சரியமாக இருக்கிறது.

சரி, விஷயத்துக்கு வருகிறேன். இப்போது என் வாழ்க்கையில் முதல் முதலாக என்னைப் பற்றிய ஒரு உண்மையைச் சொல்லப்போகிறேன். உங்கள் கடிதம்தான் அதைச் சொல்ல வைத்தது. நான் இன்னாரைப் படிக்கப் போவதில்லை; படித்ததில்லை என்றெல்லாம் சொல்வது உண்மையில்லை. அப்படியானால், பொய்யா? அதுவும் இல்லை. இரண்டுக்கும் நடுவில்.

சமீபத்தில் இளையராஜாவின் திருவாசகம் பாடல்களில் ஒன்றை ரொம்பவும் நெக்குருகிக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவந்திகா “உங்களுக்குத்தான் இளையராஜாவைப் பிடிக்காதே?” என்று ஆச்சரியமாகக் கேட்டாள்.

“ஆமாம், பிடிக்காது.”

“அப்புறம் இது என்ன?”

“ம், என்ன?”

“இதை இப்படி உருகி உருகிக் கேட்கிறீர்கள்?”

“ஆமாம், கேட்பேன்.”

“அடச்சே, லூஸு... உன்கிட்ட கேட்க வந்தேன் பார்” என்று தலையில் அடித்துக்கொண்டே போய்விட்டாள்.

அதேபோல் இன்னொரு சம்பவம். என்னுடைய தமிழ் சினிமாப் பாடல்கள் தொகுப்பில் ஏ.ஆர்.ரஹ்மானின் பாடல்களே இல்லாததைப் பார்த்து ஒரு நண்பர் ஆச்சரியப்பட்டார். “ஆமாம், அவருடைய தமிழ்

https://telegram.me/aedahamlibrary

சினிமாப் பாடல்கள் எனக்குப் பிடிக்காது” என்றேன்.

இப்படியாக சாமி இல்லை சாமி இல்லை என்று திட்டிக்கொண்டே ஒவ்வொரு கோவிலாகச் சென்றுகொண்டிருந்தேன்.

அதைப் போலவேதான் இண்டலெக்சுவல் ப்ராஸ்டிட்டியூட்ஸ் என்று திட்டிக்கொண்டே அவர்கள் மூவரையும் படித்துக் கொண்டுதான் இருப்பேன். இதற்கும் அரசியல்வாதிகள் செய்யும் காரியங்களுக்கும் சம்பந்தமில்லை. தமிழ் தமிழ் என்று கத்திக்கொண்டு பிள்ளைகளை தமிழே இல்லாத ஆங்கிலப் பள்ளிகளில் சேர்ப்பார்கள். பகுத்தறிவு பகுத்தறிவு என்று மூச்சுக்கு முன்னூறு தடவை சொல்லிக்கொண்டு மஞ்சள் துண்டு போடுவார்கள். அப்படி அல்ல நான் செய்வது. இது வேறு என்று மட்டும் தெரிகிறது. எப்படி வேறு என்று தெரியவில்லை.

இந்த நிலையில் என் கட்டுரைகளைப் படித்துவிட்டு பல நண்பர்கள் ஜே.கே.வைப் படிப்பதை நிறுத்திவிட்டோம் என்று எனக்குக் கடிதம் எழுதியபோது பயந்துவிட்டேன். ‘வேண்டாம்; அப்படிச் செய்யாதீர்கள்’ என்றே பதில் எழுதினேன். நான் பெரியார், அம்பேத்கர், புத்தர் போன்றவர்களையும் பின்னர் கீர்க்கேகார்ட், விட்ஜென்ஸ்டைன்லிருந்து துவங்கி நீட்ஷே, ஃபூக்கோ, தெரிதா, தெல்யூஸ், லியோதார் என்று படித்துவிட்டு ‘ஜே.கே. வேண்டாம்’ என்று எழுதினால் மற்றவர்களும் அதையே பின்பற்றலாமா?

ஓ.கே. சதுரங்க ஆட்டத்தில் நீங்கள் வென்றுவிட்டீர்கள். உங்கள் கடிதத்தைப் படித்த பின், அந்த மூவரையுமே ஒதுக்க வேண்டாம் என்று தோன்றுகிறது. ஜே.கே.யுடன் உரையாடிய அந்த மூன்று அறிஞர்களில் Rupert Sheldrake பற்றி மட்டும் அறிவேன். மற்றவர்களைப் படித்ததில்லை. எனக்கு உயிரியலில் நிரம்ப ஆர்வம் உண்டு. அதன் காரணமாகவே ரூபர்ட் ஷெல்ட்ரேக்கின் புத்தகங்களைத் தேட ஆரம்பித்தேன். உயிரியலை அவர் தத்துவம், மிஸ்டிஸிஸம் என்றெல்லாம் கொண்டுபோய் விடுகிறார். இதன் காரணமாகவே அவர் பேசுவது போகஸ் சயின்ஸ் என்ற குற்றச்சாட்டுகளும் உண்டு. சென்ற ஆண்டு சாந்த்தா ஃபே-இல் ஒரு விரிவுரை ஆற்றி முடித்த பின்னர் ஒரு ஜப்பான்காரரால் கத்தியால் குத்தப்பட்டது உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். அவருடைய காயத்தில் அறுவை சிகிச்சை செய்த டாக்டர் “கத்திக் குத்தின் விதத்தைப் பார்த்தால் ஜப்பானிய ஹராகிரி மாதிரி அல்லவா இருக்கிறது?” என்று சொன்னாராம். ஆச்சரியம் என்னவென்றால், அந்த டாக்டருக்கு ஷெல்ட்ரேக்கைக் குத்தியவர் ஜப்பானியர் என்று தெரியாது.

https://telegram.me/aedahamlibrary

ஜே.கே.யின் குரங்கு பற்றி எழுதியிருக்கிறீர்கள். எனக்கு யூ.ஜி. பார்த்த புலி ஞாபகம் வருகிறது. (கொஞ்ச நாளைக்கு யூ.ஜி., யூ.ஜி. என்றுதான் சொல்லிக்கொண்டிருப்பேன்; பொறுத்துக் கொள்ளுங்கள். கொஞ்சம் அதிகப்படியாகப் படித்துவிட்டேன்!)

ஏதோ ஒரு ஐரோப்பிய நாட்டில் தன் படத்தில் பயன்படுத்துவதற்காக ஒரு புலியைத் தேடிக்கொண்டு போகிறார் மகேஷ் பட். அப்போது யூ.ஜி.யும் உடன் இருக்கிறார். ஒருவரிடம் இன்னும் பயிற்சி பெறாத ஒன்பது அடி நீள புலி ஒன்று இருக்கிறது. புதிய இருவர் உள்ளே நுழைந்ததும் மூர்க்கமாக உறுமுகிறது. அதனிடம் யூ.ஜி. ஏதோ சொல்கிறார். மந்திரம் போட்டதுபோல் அடங்கிவிட்டதாம். புலியின் சொந்தக்காரர் மகேஷ் பட்டிடம் "உங்கள் நண்பர் மிகத் தேர்ந்த விலங்குப் பயிற்சியாளர் போலிருக்கிறதே?" என்று மிகவும் ஆச்சரியப்பட்டாராம். இதேபோல் யூ.ஜி. கருநாகத்தோடு எல்லாம் நட்பு வைத்துக்கொண்டிருந்திருக்கிறார்.

இன்னொரு விஷயம்: எனக்கு மகேஷ் பட் ஒரு இந்திப் பட இயக்குனர் என்ற அளவுக்கு மட்டுமே தெரியும். அவர் படங்கள் எதையும் நான் பார்த்ததில்லை. பார்க்க ஆர்வமும் இல்லை. சினிமாவைப் பொறுத்தவரை நான் ஒரு படத்தைப் பார்க்க வேண்டுமானால் அதற்கும் ஒரு தகுதி இருக்க வேண்டும் என்று எதிர்பார்ப்பேன்.

ரஸ்புதீன் பற்றி ஐந்து ஆண்டுகளுக்கு முன் நீண்ட ஒரு கட்டுரை எழுதியிருக்கிறேன். என்னுடைய புத்தகம் ஒன்றில் அது தொகுக்கப்பட்டிருக்கலாம். பலராலும் சிலாகிக்கப்பட்ட கட்டுரை அது. ரஸ்புதீனைப் பற்றி வெளிவந்த பல புத்தகங்களைப் படித்து ஆய்வு செய்து எழுதிய கட்டுரை. ரஸ்புதீன் எந்த அழிவுகளையும் செய்யவில்லை. நடந்தது என்ன என்று அந்தக் கட்டுரையில் ஆதாரபூர்வமாக எழுதியிருக்கிறேன். அந்த ஆதாரங்கள் கம்யூனிஸ்ட் ரஷ்யாவில் ரகசியமாக மறைக்கப்பட்டிருந்தன. ரஸ்புதீன் எனக்கு மிகப் பிடித்த ஒரு மிஸ்டிக்.

தமிழ் எழுத்தாளர்களும் ஜே.கே.வும் பற்றி நாளை எழுதுகிறேன்...

12.6.2009

https://telegram.me/aedahamlibrary

அப்பா, சீனாவைப் பிரித்துக் கொடுங்கள்

டியர் ஆனந்த்,

பல தமிழ் எழுத்தாளர்களுக்கு ஜே.கே. மிகவும் பிடித்த ஒரு சிந்தனையாளர் என்பதை கவனித்திருக்கிறேன். ஆனால் இது பற்றி எனக்குள் ஒரு முகச்சுளிப்பே இருந்து வந்துள்ளது. காரணத்தை விளக்கியாக வேண்டும். கோடிக்கணக்கான பணத்தைக் கொள்ளையடித்து சுவிஸ் வங்கியில் போட்டு வைத்திருக்கும் இந்திய அரசியல்வாதிகள் தேசப்பற்று பற்றிப் பேசும்போது உங்களுக்கு என்ன மாதிரி தோன்றும்? அதேபோல் இன்னொரு சம்பவம். சமீபத்தில் என் நண்பரின் மேஜையில் துக்ளக் கிடந்தது. முன்பெல்லாம் துக்ளக்கை விரும்பிப் படிப்பேன். பிறகு சோ பி.ஜே.பி. ஆதரவாளராகவும், மனித உரிமை அமைப்புகளுக்கு எதிரானவராகவும் ஆகிவிட்ட பிறகு துக்ளக்கை படிப்பதில்லை. ஆனாலும் அவருடைய கிண்டல் எனக்குப் பிடிக்கும். அவருடைய முகமது பின் துக்ளக் சினிமாவில் துக்ளக் மன்னரானதும் எல்லோரும் அவரைப் பாராட்டி ஒரு பாட்டு பாடுவார்கள். அப்போது அவர் கால்களை மடக்கி மடக்கி நடந்து வருவார். தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் நாக்கைப் பிடுங்கிக்கொண்டு சாக வேண்டும். ஆனால் இந்த அரசியல்வாதிகளுக்கு சூடு சொரணையே கிடையாது. ஆயிரம் சோ வந்தாலும் இவர்கள் திருந்த மாட்டார்கள்.

அந்த துக்ளக்கில் வந்திருந்த அட்டைப்பட கார்ட்டூனில் ஒரு அரசியல்வாதியும் அவரது குடும்பத்தினரும் கண்டிருந்தது. அரசியல்வாதியின் கண்களில் கருப்புக் கண்ணாடி. குடும்ப உறுப்பினர் சோகமாக அமர்ந்திருக்கின்றனர். அரசியல்வாதி சொல்கிறார்: இவ்வளவு மந்திரிசபைகளை சிரமப்பட்டு வாங்கிக் கொடுத்தும் யாரும் சந்தோஷமாக இருப்பதாகத் தெரியவில்லை. போகட்டும். தனி ஈழம் கிடைத்தால் பங்கு போட்டுக் கொடுத்துவிடுகிறேன்.

இவ்வளவுதான் கார்ட்டூன். இதைப் படித்து நான் சிரித்துக் கொண்டிருந்தபோது நண்பர் இதைவிட பயங்கரமாக ஒரு கருத்தைச் சொன்னார்.

‘பாவங்க... ஈழம்லாம் ரொம்பச் சின்ன நாடு. அது இவுங்களுக்குப் பத்தாது. சீனா மாதிரி ஒரு நாலஞ்சு நாடு கிடைச்சாதான் பங்கு

https://telegram.me/aedahamlibrary

போட்டுக் குடுக்க சரியா இருக்கும்.’

இம்மாதிரி அரசியல்வாதிகளுக்கும் தமிழ் எழுத்தாளர்களுக்கும் வித்தியாசமில்லை என்பது அடியேனின் தாழ்மையான அபிப்பிராயம். நான் இங்கே எழுத்தாளர்கள் என்று குறிப்பிடுவது, பிரமிள், சுகுமாரன் போன்ற மூத்த தலைமுறை எழுத்தாளர்களை அல்ல. அவர்கள் என் மரியாதைக்குரியவர்கள். அவர்களெல்லாம் சுதந்திரப் போராட்ட வீரர்கள் மாதிரி. தமக்கென்று உயரிய மதிப்பீடுகளைக் கொண்டவர்கள். கோடி ரூபாயைக் கொடுத்தாலும் சுகுமாரனை நீங்கள் விலைக்கு வாங்க முடியாது. ஆனால் அவருக்குப் பின் வந்த இளைய தலைமுறை எழுத்தாளர்கள் புகழுக்காகவும் பணத்துக்காகவும் எதை வேண்டுமானாலும் செய்வார்கள் போலிருக்கிறது. இங்கேயும் நான் எல்லா எழுத்தாளர்களையும் சொல்லவில்லை. பெரும்பான்மையானவர்கள் அப்படி இருக்கிறார்கள்.

ஒரு எழுத்தாளர் ஜே.கே.வைக் கரைத்துக் குடித்தவர். அவரிடம் ஒரு மணிநேரம் பேசினால் ஒரு மணிநேரமும் ஜே.கே.வின் கருத்துக்களைத்தான் சொல்லிக்கொண்டிருப்பார். ஜே.கே.வின் பரம விசிறி. நீங்கள் குறிப்பிடும் மூன்று வகை ஜே.கே. ஆர்வலர்களில் இவரை எதில் சேர்ப்பது என்று தெரியவில்லை. ஆனால் பாருங்கள்; இவருக்கு நான் ஒரு பத்திரிகையில் மாதா மாதம் கவர் ஸ்டோரி எழுதுவது பிடிக்கவில்லை. பிடிக்கவில்லை என்று சொல்வது சாதாரண வார்த்தை. ஆசாமிக்கு சோறு தண்ணியே உள்ளே போகவில்லை; அந்த அளவுக்கு எரிச்சல், கோபம். வருவோர் போவோரிடமெல்லாம் பொருமித் தள்ளிக் கொண்டிருப்பதாக பல நண்பர்கள் சொல்லிக் கேள்விப்பட்டேன். ஒருநாள் ஒரு நண்பரை இரவு பனிரண்டு மணிக்கு போனில் அழைத்து ஒன்றரை மணி வரை என்னைத் திட்டித் தீர்த்திருக்கிறார். இவ்வளவுக்கும் என் கருத்துகளை அல்ல. அப்படித் திட்டினாலோ, விமர்சித்தாலோ எனக்கு சந்தோஷம்தான்; ஆனால் அவர் திட்டியது அந்தப் பத்திரிகையையும் என்னையும் தனிப்பட்ட முறையில். (“அந்த சாரு என்னாங்க, முட்டாத்தனமா எதையதையோ உளறிக்கிட்டிருக்காரு; அதை இந்தப் பத்திரிகைக்காரரும் போட்டுக்கிட்டிருக்காரு. எல்லாம் வியாபாரமாப் போச்சு. முஸ்லீம்களுக்கு இயல்பாவே வியாபாரத்துல நல்ல தெறம இருக்கு...” இந்த ரீதியில் ஒன்றரை மணிநேரம் போட்டாராம் ஆக்ஸா ப்ளேடை.)

பாருங்கள், பொறாமை என்ற மிக மிகச் சாதாரணமான, மிக எளிதில் விரட்டி அடிக்கக்கூடிய ஒரு விஷயத்தைக்கூடத் தாண்ட முடியாதவர்கள் ஜே.கே.வைப் படித்தால் என்ன; புண்ணாக்கைப் படித்தால் என்ன?

https://telegram.me/aedahamlibrary

சரி ஆனந்த். இந்த மாதிரி எழுத்தாளர்கள் ஜே.கே. பற்றிப் பேசுவதை நான் எப்படி எடுத்துக்கொள்வது? இந்திய சுதந்திரப் போராட்டம்தான் நல்ல உதாரணம். பிரமிள், சுகுமாரன் போன்றவர்களெல்லாம் சுதந்திரப் போராட்டத்திற்கு முந்தைய காங்கிரஸ் மாதிரி. பிரிட்டிஷ்காரனை எதிர்த்து அடிபட்டு சிறைக்குச் சென்றவர்கள். இப்போதைய எழுத்தாளர்கள் சுவிஸ் வங்கியில் 10,000 கோடியை ஒளித்து வைத்துவிட்டு காந்தி மகாத்மா என்று பேசும் காங்கிரஸ்காரர்களைப் போன்றவர்கள். இதை நான் நன்கு உணர்ந்தே எழுதுகிறேன். பிரமிள் எப்படி வாழ்ந்தார் என்று அவர் அருகில் நின்று பார்த்திருக்கிறேன் நான்.

இப்போது சொல்லுங்கள், இந்த எழுத்தாளப் பயல்கள் சொல்லும் ஜே.கே. போன்ற பெயர்களையெல்லாம் பற்றி நான் கவலைப்பட முடியுமா? இப்போதய கம்யூனிஸ்ட் கட்சிக்கும் கார்ல் மார்க்ஸுக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியுமோ, ஆதி சங்கரருக்கும் இப்போதைய சங்கர மடத்துக்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியுமோ அதே சம்பந்தம்தான் இந்த எழுத்தாளர்கள் உதிர்க்கும் பெயர்களுக்கும் இவர்களுக்கும் இருக்க முடியும். மேலும், இவர்கள் ரமணர் போன்ற மகான்களின் பெயரையெல்லாம் அடிக்கடி சொல்லித் திரிகிறார்கள். அந்த வேதனைதான் தாங்க முடியவில்லை. நம் இணையதளத்தை சங்கர மடத்திலெல்லாம் படிக்கிறார்கள் போலிருக்கிறது; நான் ஆதிசங்கரர் பற்றி எழுதியதும் மறுதினமே சங்கர மடத்திலிருந்து ஒரு ஸ்படிக மாலையைக் கொண்டுவந்து கொடுத்தார் ஒருவர். "இது கண்ணாடியா, ஸ்படிகமா, எப்படித் தெரிந்துகொள்வது?" என்று கேட்டேன். அவர் வந்த நேரம் இரவு என்றபடியால் ஸ்படிகத்தை உரசிக் காண்பித்தார். தீப்பொறி பறந்தது. இதைக் கழுத்தில் அணிந்துகொள்வதால் என்ன பயன் என்று யோசித்துக்கொண்டிருக்கிறேன்.

சரி, மீண்டும் ஜே.கே.வுக்கு வருவோம். ஜே.கே.வை நான் என்னுடைய மார்க்ஸிஸ்ட் ஹேங்க் ஓவரிலிருந்தும், யூ.ஜி.யின் பார்வையில் இருந்துமே நிராகரித்திருப்பது உங்கள் கடிதத்தைப் படித்ததும் விளங்கியது. உண்மையில் நான் ஜே.கே.வை நிராகரித்திருக்கிறேனே ஒழிய விமர்சிக்கவில்லை. மிகப் பெரிய தவறு இது. ஒரு இரண்டு மாதம் கொடுங்கள். நீங்கள் குறிப்பிட்ட விஷயங்கள் அனைத்தையும் படித்து விடுகிறேன். இதைத்தான் சொன்னேன்; சதுரங்க ஆட்டத்தில் நீங்கள் வென்றுவிட்டதாக. இன்னொன்று; ஆட்டத்தில் எனக்கு நான் வெல்வதால் ஏற்படும் சந்தோஷத்தைவிட என் எதிராளி வெல்வதால் ஏற்படும் சந்தோஷமே அதிகமாக இருக்கும். அந்த வகையில் என்னுடைய இந்தத் தோல்வி இரட்டிப்பு சந்தோஷத்தை

https://telegram.me/aedahamlibrary

ஏற்படுத்துகிறது.

உங்கள் நண்பர் ஒருவரைப் பற்றி எழுதியிருந்தீர்கள். அது பற்றி அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

சாரு

13.6.2009

¦

¦

டியர் சாரு,

மலாவி ஆனந்த் நன்கு உணர்ந்தே எழுதுகிறார். மொழியும் நல்ல சரளமாகவே வருகிறது. ஆனால் ஒருசில சமயம் குஸ்தி மாஸ்டர் கம்பு சுத்தும்போது சும்மா அனல் பறக்க சுத்தி பந்தா விடுவதுபோல் வார்த்தை ஜாலம் பொழிகிறார் என்று தோன்றுகிறது. உங்களைப் படிப்பதற்கு எழுத்தின் எளிமை ஒரு முக்கிய காரணம். இது ஆனந்தின் எழுத்தைப் பற்றி அல்ல. பொதுவாகச் சொல்கிறேன். ஒரு வரியைப் படித்த பின் பிறகு திரும்பிப் படிக்க வேண்டுமென்றால், ஒன்று - அது கிறங்க வைக்கும் இளங்குமரியின் பூரிப்பை மிஞ்சியதாக இருக்க வேண்டும்; இரண்டு - ஸ்தம்பிக்க வைக்கக்கூடிய உண்மையை உணர்த்துவதாக இருக்க வேண்டும்; மூன்று - அது சொல்லும் கதை நெஞ்சைப் பிளக்கக்கூடிய வெடிகுண்டாக இருக்க வேண்டும்.

ஒரு எழுத்தை புரிந்துகொள்ள முடியாமல் திரும்பத் திரும்பப் படிப்பது போன்ற கொடுமை உலகத்தில் எதுவுமில்லை. அதுவும் காசு கொடுத்து வாங்கிய புத்தகமானால் அந்த மாதிரி ஒரு இடம் வந்தால் டண்டணக்கா ஆ! ஆ! டண்டணக்கா என்று ஒரு டிராக் ஓடும். ஒன்றுமில்லை. என் பற்கள்தான் நறநறக்கிறது. புத்தகம் வெளியே பறக்கும். மட்டன் எலும்பை கடித்துக்கொண்டே பேசுவது போல் கேட்கும். எழுத்தாளரை ஏன் குறை சொல்ல. என் அறிவுக்கு அவ்வளவுதான் புரியும்.

உங்கள் எழுத்தில் இதுவரை அந்த பிரச்சினை இல்லை. அப்படியே ஆனந்தை உங்கள் சிறகுகளின் கீழ் எடுத்து பதிகம் படிந்து வேளுரை பதித்து முகரிட்டு முகலோன் பின்னி பிணக்கு அதற்றி அடிதம்புலந்து வேஞ்சல் வெகுள வேண்டும். அய்யா! பேக் பஞ்சராயிடும் போலிருக்கே.

அப்புறம், யூஜி பற்றி ரொம்பத் தெரியாது. ஜே.கே., ரஜ்னீஷ் சிறிது அத்துப்படி. ஆனால் இதுவரை முழுமையாகப் படித்ததில்லை. நீங்கள் முன்பு சொன்ன கொட்டாவிதான் காரணம். பற்கள் நறநறவை விட கொடுமை இது. சில சமயம் இவர்களைப் படிக்காமல் விட்டு

https://telegram.me/aedahamlibrary

விட்டோமே என்று தோன்றியதை ஆசுவாசப்படுத்திவிட்டீர்கள். இவர்களெல்லாம் தேவையில்லை என்று முதலிலேயே தோன்றியது. சொல்வார்கள். ஆழ்மனதில் ஒன்றைப் பற்றி முதலில் தோன்றுவதுதான் உண்மையென்று. பிறகு மனதில் பட்டதுக்கு பல இடங்களில் விளக்கம் தேடி அர்த்தம் கண்டுபிடித்தால் அதன் சாரம் மாறி தோன்றுவது வேறு ஒன்றாக இருக்கும். இது பல விஷயங்களிலும் உண்மை என்று படுகிறது.

சிவா,

ஹ்யூஸ்டன்.

¦
¦

அன்புள்ள சிவா,

எனக்கு இந்த ராஜ், சிவா என்ற இரண்டு பெயர்களுக்கும் குழப்பமாக இருக்கிறது. ராஜ்தான் சிவாவா? இல்லை, சிவா ராஜ்--ஆ? சிவா ராஜ்... ராஜ் சிவா... இன்னும் ஒரு பத்து வயது கூடினால் எனக்கு எல்லாப் பெயரும் ஒன்றுபோலவே தெரியும் என்று நினைக்கிறேன். எல்லாம் ஆட்களைப் பார்க்கும் வரைதான். இப்போது எனக்கு மனுஷ்ய புத்திரனுக்கும் எஸ்.ராமகிருஷ்ணனுக்கும் வித்தியாசம் தெரிகிறதே? எப்போது மனுஷ்ய புத்திரனைப் பார்த்து "என்ன ராமகிருஷ்ணன், சௌக்கியமா?" என்று கேட்க ஆரம்பிக்கிறேனோ அப்போதுதான் கவலைப்பட வேண்டும். ஆதலால், இப்போது உங்களுக்கு பதில்.

எழுத்தின் எளிமை பற்றிக் கூறியிருக்கிறீர்கள். அநேகமாக சுஜாதாவுக்கும், அசோகமித்திரனுக்கும் அடுத்தபடியாக எளிமையாக எழுதுபவன் அடியேன்தான் என்று நினைக்கிறேன். ஆனால் இதை ஒரு தகுதி என்றோ, பாராட்டுதலுக்குரிய விஷயம் என்றோ கருத மாட்டேன். தயவுசெய்து நீங்கள் மிலோராத் பாவிச் எழுதிய கஸார்களின் அகராதி என்ற நாவலின் ஒரு பத்தியையாவது படித்துப் பாருங்கள். அல்லது, வில்லியம் பர்ரோஸின் நேகட் லஞ்ச், ஜார்ஜ் பெரக் (Georges Perec) என்ற ஃப்ரெஞ்ச் எழுத்தாளரின் Life: A User's Manual (நாவல்) போன்ற படைப்புகளைப் படிக்க வேண்டும். முதல் வாசிப்பில் அவ்வளவாகப் புரியாது. மீண்டும் மீண்டும் படித்தால்தான் பத்து சதவிகிதமாவது புரியும். இவ்வளவுக்கும் இவை பரவலாக அங்கீகரிக்கப்பட்ட வெற்றியடைந்த நாவல்கள். இப்போதெல்லாம் ஒரு நாளில் பத்துப் பதினைந்து மணிநேரம் எழுதுகிறேன். அதிகம் படிப்பதில்லை. ஆனால் முன்பெல்லாம் ஒரு நாளில் 20 மணிநேரமும் படிப்புதான். அப்படிப்பட்ட

https://telegram.me/aedahamlibrary

எனக்கே பெரக்கைப் படிக்கும்போது விழி பிதுங்கிவிடும்.

கார்ஸியா மார்க்கேஸ், மரியா பர்கஸ் யோசா போன்றவர்களை எளிமையாக எழுதக்கூடியவர்கள் என்று சொல்லலாம். ஆனால் பெரக், வால்டர் அபிஷ், ஹூலியோ கொர்த்தஸார் போன்றவர்களை எழுத்தாளர்களின் எழுத்தாளர்கள் என்றுதான் சொல்ல வேண்டும். ஆனால் நீங்கள் இருக்கும் அமெரிக்காவில் ஒரு எழுத்தாளர் இருக்கிறார். William Gass என்று நாமகரணம். அடடா, மனிதர் எழுதுவார் பாருங்கள் ஒரு எழுத்து... என்ன சொன்னீர்கள்... கிறங்க வைக்கும் இளங்குமரியா? உச்சிவெயில் கற்பாறையில் உங்கள் முதுகை வைத்துத் தேய்ப்பதுபோல் இருக்கும். அவருடைய சிறுகதைகளையும் கட்டுரைகளையும் படித்தபோது அப்படித்தான் இருந்தது. ஆனால் அவர் 30 ஆண்டுகளாக எழுதிய Tunnel என்ற நாவலை நான் இன்னும் படிக்கவில்லை.

ஆனால் எனக்குத் தெரிந்து தாமஸ் பிஞ்சோன்தான் மிக மிகக் கடினமான எழுத்தாளர் என்று சொல்லுவேன். பலமுறை நோபல் பரிசுக்கு சிபாரிசு செய்யப்பட்ட இவரது எழுத்தில் உயர் கணிதமமெல்லாம் சகஜமாக இடம் பெறும். இவருடைய Gravity's Rainbow என்ற நாவலில் எனக்குச் சில இடங்கள் சுத்தமாகவே புரியவில்லை. பிறகுதான் தெரிந்தது, அதெல்லாம் தெர்மோடைனமிக்ஸ் என்று. அதேபோல் ரசாயனம், பௌதிகம், கணிதம், உளவியல், இசை, பொறியியல் என்று பல துறை அறிவையும் தன்னுள்ளே கொண்டிருக்கிறது க்ராவிட்டீஸ் ரெய்ன்போ. ஒரு முறை புலிட்ஸர் பரிசுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் ஓரிரு அமைப்பாளர்கள் "இந்த நாவல் படிப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது" என்று சொல்லி 'வீட்டோ' செய்துவிட்டதால் பரிசு கிடைக்காமல் போனது. வெகுகாலத்திற்கு இவர் தன்னுடைய எந்த அடையாளத்தையும் வெளிப்படுத்திக் கொண்டதில்லை. இவர் எங்கே வசிக்கிறார் என்பது கூட யாருக்கும் தெரியாமல் இருந்தது. இப்போதுதான் கொஞ்சம் கொஞ்சமாக இவரது ஓரிரு புகைப்படங்கள் வெளிவரத் தொடங்கியிருக்கின்றன.

ஆனால் ஒரு ஆச்சரியமான விஷயம் பாருங்கள்; தாமஸ் பிஞ்சோனுக்கு இப்போது 72 வயது ஆகிறது. வில்லியம் காஸுக்கு இப்போது 84 வயது ஆகிறது. எல்லோரும் 25 வயது வாலிபர்களைப் போல் இருக்கிறார்கள். ஆனால் தமிழ் எழுத்தாளன் மட்டும் ஏன் 40 வயதிலேயே மாண்டு போகிறான்?

என்ன காரணம்? வாழ்க்கை வசதிதான் என்று தோன்றுகிறது. காஸ் 30 ஆண்டுகள் தத்துவப் பேராசிரியராக இருந்தவர். பிஞ்சோனுக்கும் பல

https://telegram.me/aedahamlibrary

இடங்களிலிருந்து பொருள் உதவி கிடைத்துக்கொண்டிருந்தது. உதாரணமாக, 1990-94 என்ற ஐந்து ஆண்டுகளில் அவருக்கு Catherine T. Mac Arthur Foundation-இன் உதவித் தொகையாக 3,10,000 டாலர் கிடைத்தது.

மீண்டும் எழுத்தின் எளிமைக்கு வருவோம். ரமணி சந்திரனைப் படிக்கும் ஆத்துமாக்களுக்கு சாரு நிவேதிதாவின் எழுத்து புரியுமா? ஆக, எல்லாமே ஒரு பழக்கம்தான் என்றும் தோன்றுகிறது. ஆனால் தமிழில் என்ன நடக்கிறது என்றால், இங்கே பலரும் வலிந்து கட்டிக்கொண்டு கடினமான மொழியில் எழுதுகிறார்கள்.

அப்புறம் ஜே.கே., யூ.ஜி., ஓஷோ விஷயத்துக்கு வருவோம். நண்பர் பாலா சில இணைப்புகளை அனுப்பியுள்ளார். யூ.ஜி. விஷயத்தில் நான் என்ன விமர்சனம் வைத்திருக்கிறேனோ அதையேதான் ஓஷோவும் சொல்லியிருக்கிறார். குறிப்பாக ரமணரிடம் ஒன்றுமில்லை என்று யூ.ஜி. ஓடி வந்தது. மேலும், ஓஷோ சொல்லும் ஒரு விஷயம் முக்கியமானது. சுவாமி சிவானந்தா ஒரு யோகா மாஸ்டர். அவ்வளவுதான். அதைத் தெரிந்துகொள்ள ஒருவருக்கு ஒருநாள் போதும். ஆனால் அவருடன் ஏழு ஆண்டுகள் தங்கிவிட்டு அவரிடம் ஒன்றுமில்லை என்று வருகிறார் யூ.ஜி. அதேபோல் ஜே.கே.யுடன் 12 ஆண்டுகள் இருந்திருக்கிறார். ஜே.கே. இல்லாமல் யூ.ஜி. இல்லை.

“உங்கள் எழுத்தில் இதுவரை அந்தப் பிரச்சினை இல்லை.”

இது உங்கள் கடிதத்தில் கண்டிருந்த ஒரு வாக்கியம். என்னுடைய எழுத்து படிக்க சிரமமாக இல்லை என்று நீங்கள் சொல்ல வரும்போது எழுதியிருக்கும் வாக்கியம். இதில் ‘இதுவரை’ என்ற சொல் புரியவில்லை. ஒருவேளை இலக்கணப் பிழையோ என்று நினைக்கிறேன். காரணம், நான் கடந்த 36 ஆண்டுகளாக எழுதி வருகிறேன்.

அன்புடன்,

சாரு

15.6.2009

https://telegram.me/aedahamlibrary

அகோரியும் ஆதிசங்கரரும்

அன்புள்ள ஆனந்த்,

உங்களுடைய ஜூன் 10, 2009 தேதியிட்ட கடிதத்திற்கு நான் எழுதிக்கொண்டிருக்கும் பதில் இன்னும் முடியவில்லை. என் பதிலில் தமிழ்நாடு மொட்டைத் திடலாக இருப்பது பற்றி என்னுடைய அதிர்ச்சியைப் பதிவு செய்திருந்தேன். அதில் குறிப்பிட்டிருக்க வேண்டிய மற்றொரு விஷயம், இங்குள்ள நதிகளும் நீரற்றுப் போய்விட்ட கொடுமை. தென் பெண்ணை, பாலாறு போன்ற நதிகளெல்லாம் வெறும் மணலாகக் காட்சியளிக்கின்றன. திருநெல்வேலியில் வற்றாத ஜீவநதி என்று போற்றப்படுகின்ற தாமிரபரணி - வட இந்தியப் பெண்கள் இரு முலைகளின் நடுவே முந்தானையைப் பூணூல் மாதிரி போட்டுக்கொள்வார்களே - அதுபோல் ஒரு சிறு ஓடையாக ஓடிக்கொண்டிருக்கிறது. மரங்களை ஒன்று விடாமல் அழித்துவிட்டால் நதி எப்படி உயிரோடு இருக்கும்?

ஆனால் பணக்காரர்கள் எப்படி வாழ்கிறார்கள் தெரியுமா? இங்கே நான் தற்காலிகமாக வசித்துக்கொண்டிருக்கும் (பூமிப் பந்தில் மனித வாழ்வே ஒரு தற்காலிகம்தானே?) சாந்தோமில் சுமார் ஆயிரம் வகை மரங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். ஆயிரம் மரங்கள் அல்ல; ஆயிரம் வகை மரங்கள். ஒரு தாவரவியல் வல்லுநருக்குத்தான் இத்தனை மரங்களின் பெயர்களும் தெரியக்கூடும். நான் குடியிருக்கும் வீட்டிலேயே பதினைந்து வகை பழ மரங்கள் இருக்கின்றன. பசித்தால் ஏதாவது ஒரு பழத்தைப் பறித்துச் சாப்பிட்டுக்கொள்ளலாம். சென்ற வாரம் ஒரு வாழை குலை தள்ளியிருந்தது. பார்த்தால் பேயன் பழம்... பலா மரம் ஒன்றுதான் இல்லை. இந்த விட்டில் மரம் வைத்தவர்கள் அதை மட்டும்தான் மறந்துவிட்டார்கள் போல. ஆனால் இந்தத் தெரு முழுக்கவும் பலா மரங்கள் இருக்கின்றன.

ஒவ்வொரு வீட்டிலும் வாசல் பக்கத்தில் இரண்டு கிறிஸ்துமஸ் மரங்கள் வேறு. தமிழ்நாட்டு வீடுகளில் எங்காவது கிறிஸ்துமஸ் மரங்களைப் பார்த்திருக்கிறீர்களா?

இந்தக் கோடை முழுவதும் மாம்பழங்களே வாங்கவில்லை. நம் வீட்டில்

https://telegram.me/aedahamlibrary

காய்த்தது போக, அண்டை வீடுகளிலிருந்தும் மாம்பழங்கள் வந்தன. மல்கோவாவிலிருந்து கிளிமூக்கு மாம்பழம் வரை விதவிதமான பழங்கள். இந்தப் பழங்கள் எல்லாம் மார்ச் மாதம் ஆவக்காய் ஊறுகாய் போடுவதற்கு எடுத்தது போக மரத்தில் மிச்சமிருந்தவை. கிளை பூராவும் காய்கள்தான் கொத்துக் கொத்தாகக் காய்த்துத் தொங்குகின்றன.

பலாப்பழம் இல்லாத குறைக்கு எதிர்வீட்டிலிருந்து அதுவும் வந்தது. அஜ்மல் என்பது அந்தச் சிறுவனின் பெயர். அவ்வப்போது கிரிக்கெட் பந்து வந்து எங்கள் தோட்டத்தில் விழுந்துவிட்டது என்று மணி அடிப்பான். சென்ற வெள்ளிக்கிழமை அன்று மதியம் இரண்டு மணி அளவில் அடித்தான். நானோ மிக அவசரமாக டைப் செய்துகொண்டிருந்தேன். அந்த அவசரத்தில் பந்தை எடுத்தக் கொடுக்க அவகாசமில்லை.

அதுவும் தவிர, இம்மாதிரி தனி வீடுகளில் வாசலில் மணி அடிப்பவர்களின் தொந்தரவு மிகவும் விசேஷமானது. குளித்துக்கொண்டிருப்பேன். கேட்டில் மணி அடிக்கும். துண்டைக் கட்டிக்கொண்டு ஓடினால் வேர்க்க விறுவிறுக்க நின்று கொண்டிருப்பான் குரியர் பையன். ஈரத்துடனே கையெழுத்துப் போட்டு வாங்கினால் “போன் நம்பரும் போடுங்க சார்” என்பான். வாங்கி “100” என்று போட்டுக்கொடுப்பேன்.

“என்ன சார் இது?”

“போன் நம்பர்.”

“சார்...?”

“ஏம்பா, பாக்குறீல்ல? பாத்ரூம்லேர்ந்து ஓடி வந்தவனெப் போட்டு ஏம்பா டார்ச்சர் குடுக்குறே?”

அவன் என்னை ஒரு மாதிரி பார்த்துக்கொண்டே சைக்கிளை எடுப்பான். தபாலைப் பார்த்தால் எங்காவது ஒரு குக்கிராமத்திலிருந்து யாரோ ஒரு கவிஞன் ரொம்பக் கஷ்டப்பட்டுப் பணம் திரட்டி வெளியிட்ட கவிதைத் தொகுதியாக இருக்கும்.

இல்லாவிட்டால், ஏதாவது ஒரு சாமி பெயரில் பிச்சை. இல்லாவிட்டால், ‘மாதங்கி இருக்காங்களா?’ என்று ஒரு விசாரிப்பு. இது தவிர வேறொரு பங்காளியும் இருக்கிறார். அயன்காரர். காலையில் சாப்பாட்டில் கை வைத்தால் பெல் அடிக்கும். கெனைன் ரெஃப்ளெக்ஸ் என்பார்களே, அதுபோல. பார்த்தால் அயன்காரரேதான். மிகச் சரியாக மதியம் சாப்பாட்டில் கை வைக்கும்போது உருப்படிகளை இஸ்திரி போட்டு

https://telegram.me/aedahamlibrary

எடுத்துக்கொண்டு வருவார். இந்த சீரியல் ஒரே மாதிரி போய்க்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு இஸ்திரிக்காரர் வந்தால் கேட் திறப்பதை நிறுத்திவிட்«ன். நானே என் துணிகளுக்கு இஸ்திரி போட்டுக்கொள்கிறேன் என்று அவந்திகாவிடமும் அறிவித்துவிட்டேன். அது எனக்கு சுலபமும் கூட. போடுவது ஒரே ஜீன்ஸ்தான். அந்தக் கிழிந்த ஜீன்ஸை ஆறு மாதங்களாகத் துவைக்கவில்லை. (துவைத்தால் இளைஞர்கள் 'அங்கிள்' என்று அழைக்க ஆரம்பித்துவிடுவார்கள்.)

ஏதோ நான் பீலா விடுகிறேன் என்று உங்களுக்குத் தோன்றும். ஒரு உதாரணம் தருகிறேன். குட்டி ரங்கநாயகி பற்றி முன்பு எழுதியிருக்கிறேன். வயது இரண்டு இருக்கும். எஸ்.ராமகிருஷ்ணனை அங்கிள் என்று அழைப்பாள். கவிஞர் சுகுமாரனை அங்கிள் என்று அழைப்பாள். ஆனால் அடியேனை மட்டும் 'அண்ணா' என்றுதான் அழைக்கிறாள். காரணம், நான் அணிந்திருக்கும் ஆறு மாதமாய்த் துவைக்காத கிழிந்து போன ஜீன்ஸ்தான். அவள் முதல் முதலாக என்னை 'அண்ணா' என்று அழைத்தபோது எனக்கு நோபல் பரிசே கிடைத்துவிட்டதுபோல் மகிழ்ந்தேன். உடலைப் பேணுவதை ஒரு மதத்தைப் போல் பின்பற்றி வரும் எனக்கு இதைவிட சந்தோஷம் வேறென்ன வேண்டும்? ஆனால் இதனால் மிகப் பெரிய உளவியல் நெருக்கடிக்கு ஆளான ஜீவன் ஒன்று உண்டு. அது, குட்டி ரங்கநாயகியின் உண்மையான அண்ணாவான அலெக்ஸ். ஆள் கதி கலங்கிப் போய் இப்போது தன் சொந்தத் தங்கையான குட்டி ரங்கநாயகியை ஜென்ம விரோதியாக பாவிக்க ஆரம்பித்துவிட்டான். இதன் காரணமாக, அவளுக்கு யாரைப் பார்த்தாலும் 'அடி, உதை' என்று சொல்லிக் கொடுத்து வருகிறான். போன வாரம் போனபோது குட்டி ரங்கநாயகியைத் தன் மேஜை மீது வைத்துக்கொண்டு "யாராவது கண்ணாடி போட்டிருந்தால் அதைக் கழற்றி கீழே வீசி எறி" என்று சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தான். இப்படியே போனால் அந்தக் குட்டி ரங்கநாயகியை குட்டி... யாக மாற்றி விட்டுவிடுவான் போல் இருக்கிறது. இவ்வளவுக்கும் அந்தக் குட்டி செய்த ஒரே பாவம், என்னை அண்ணா என்று அழைத்ததுதான்.

ஆக, எனக்கு இளைய தலைமுறையிடம் இவ்வளவு 'பாப்புலாரிட்டி' இருப்பதால் இஸ்திரியே வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். சட்டைக்கும் இஸ்திரி தேவையில்லை. மெஷினிலேயே கசக்கப்பட்ட சட்டைகள்தான் இப்போதைய மோஸ்தர். அந்தச் சட்டைகளை இஸ்திரி போடக்கூடாது என்று சொல்லித்தான் விற்கிறார்கள்.

என்னுடைய இந்த அறிவிப்பிலிருந்து இஸ்திரிக்காரர் பெல் அடிக்கும்

https://telegram.me/aedahamlibrary

போது சாப்பாட்டிலிருந்து எழுந்து அவந்திகாதான் கை கழுவி விட்டுசசென்று துணி கொடுப்பது, துணி வாங்குவது என்ற வேலையைச் செய்து வருகிறாள். (என்னோடு குடும்பம் நடத்துவது எவ்வளவு பெரிய சித்ரவதை பாருங்கள்!)

விஷயம் அதோடு முடியவில்லை. பழக்காரர் வந்து பெல் அடிப்பார். கீரைக்கார அம்மா வந்து பெல் அடிப்பார். ஏதோ அணையைத் திறந்துவிட்டது போல் மாற்றி மாற்றி வந்துகொண்டே இருப்பார்கள். விற்பனைப் பிரதிநிதிகளைப் பற்றியோ சொல்லவே வேண்டியதில்லை. இதையெல்லாம் மற்ற வீடுகளில் எப்படிச் சமாளிக்கிறார்கள் என்றால், வீட்டுக்கு வீடு ஒரு வாட்ச்மேன்.

இவ்வளவு பெரிய சமூகப் பொருளாதார காம்ப்ளெக்ஸிட்டீஸ் காரணமாகவே அந்த அஜ்மல் பையன் வந்து பெல் அடித்தபோது நான் கதவைத் திறக்காமல் இருந்துவிட்டேன். அவந்திகா போய் திறக்க முடியாது. காரணம், அது வெள்ளிக்கிழமை. வெள்ளிக்கிழமை அன்று அவள் மௌன விரதம். ஆனாலும் பரவாயில்லை என்று நான் எழுந்து போகாமல் டைப் செய்து கொண்டிருந்தேன்.

அவந்திகாவே போனாள். பார்த்தால் பலாப்பழம். அதைக் கொடுப்பதற்காகத்தான் அத்தனை முறை பெல் அடித்துவிட்டு வேகாத வெயிலில் நின்று கொண்டிருந்திருக்கிறான் அஜ்மல். எனக்கு ரொம்பப் பாவமாகப் போய்விட்டது. 'அப்படி என்னடா எழுத்து?' என்று கூட சலித்துக்கொண்டேன்.

இப்படி ஒரு சோலைவனத்தைப் போல் உருவாக்கி வைத்திருக்கிறார்கள் இந்த சாந்தோம் என்ற ஊரை. இங்கிருந்து கொஞ்சம் மேற்குத் திசையில் நகர்ந்தால் போட் க்ளப் என்ற பகுதி. ஒரு வனம் மாதிரியே இருக்கும். பணக்காரர்களும், அதிகார வர்க்கத்தினரும் வசிக்கும் பகுதிகள் மட்டும் இப்படி இருக்கிறது. மற்றபடி பூராத் தமிழ்நாடும் வறண்டு கிடக்கிறது.

¦
¦

இப்போது உங்கள் கடிதத்தின் கடைசிப் பகுதியில் குறிப்பிட்டுள்ள உங்கள் நண்பரைப் பற்றிய விஷயத்துக்கு வருவோம். நானே யூகித்துக் கொண்டேன். போகிற போக்கில் என்னைத் திட்டியிருப்பார்.

பொதுவாகவே இந்த இணையதளம், வலைமனைகளில் எழுதுபவர்கள் மீது எனக்கு மரியாதையோ நம்பிக்கையோ கிடையாது. (ஒரு சில விதிவிலக்குகள் உள்ளன; எல்லா விஷயத்திலுமே உள்ள விதிவிலக்குகளைப் போன்றவர்கள் அவர்கள்). வலைமனையில்

https://telegram.me/aedahamlibrary

எழுதுவது அவர்களுக்கு நல்ல பொழுதுபோக்கு. அவ்வளவுதான்.

ஒரே ஒரு உதாரணம் மட்டும் சொல்கிறேன். சென்ற ஆண்டு நான் தோழிகளோடு திரிந்துகொண்டிருந்த காலகட்டத்தில் நடந்தது. ஒரு தோழி. வாசகியாக அறிமுகமானவர். இல்லை; வாசகனாக அறிமுகமானவர். ஷ்யாம் என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டார். அவருக்கென்று வலைமனையும் உள்ளது. பிரபலமான வலைமனை வேறு. என்னுடைய தற்கொலைப்படை என்று அடிக்கடி சொல்வார். போனில் பேசியதில்லை. அவருடைய மெயில்களைக் கூட இந்த இணையதளத்தில் 'ஷ்யாம்' என்ற பெயரிலேயே பதிவேற்றம் செய்திருக்கிறேன். ஆனால் போனில் பேசியதில்லை. ஒருமுறை அவருடைய ஊருக்குச் சென்றிருந்தபோது அவரால் என்னைச் சந்திக்காமல் இருக்க முடியவில்லை. அந்த 'ஷ்யாம்' அடையாளத்தையே தக்க வைத்துக்கொண்டு இருக்க முடியாமல் சந்தித்துவிட்டார்.

கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக்கொண்டிருந்த ஒரு தேவதை. அடப்பாவி, நேற்றுதான் சாராயம் குடித்தேன், ரெண்டு குட்டிகளோடு ஒரே ஆட்டம் போட்டேன் என்றெல்லாம் வலைமனையில் எழுதி ஆட்டையைப் போட்டுக்கொண்டிருந்த ஷ்யாம் இதுதானா?

நம்முடைய 25 வயது தம்பிகளெல்லாம் 'ஷ்யாம்' என்று நினைத்துக் கதைத்துக்கொண்டிருக்கும் ஒரு தேவதையோடு ஒரு கஃபேவில் அமர்ந்திருந்தபோது கொஞ்சம் எனக்கு கர்வமாகத்தான் இருந்தது. ஆனால் அந்த தேவதை தனக்கு விரைவில் திருமணம் நடக்க இருக்கிறது என்றும், திருமணத்துக்குப் பின் வலைமனையையெல்லாம் நிறுத்திவிடப் போவதாகவும் சொன்னார். ஏன் என்று கேட்டதற்கு, "கணவருக்குத் தெரியாமல் செய்வது தப்பு; தெரிந்து செய்தால் அவர் சம்மதிக்க மாட்டார்" என்று பதில் வந்தது. எழுத்து என்றால் ஏதோ 'அடல்ட்ரி' என்பதுபோல் பேசிக்கொண்டிருந்தார் அந்தப் பெண்.

இவ்வளவுதான் விஷயம். அந்தப் பெண்ணுக்குத் திருமணம் மாதிரி வாழ்க்கையில் ஏதாவது ஒரு 'ப்ரேக்' நிகழ்ந்தால் இதெல்லாம் இருந்த இடம் தெரியாமல் போய்விடும்.

இன்னொரு உதாரணமும் தரலாம். சமீபத்தில் ஆதி சங்கரர் பற்றி ஆய்வு செய்துகொண்டிருந்தபோது ஒரு அதிர்ச்சி தரக்கூடிய கட்டுரையை ஆன்லைனில் படித்தேன். சங்கரர் துறவியாவதை அவருடைய அம்மா விரும்பவில்லை. பிறகு அந்த முதலை சம்பவத்துக்குப் பிறகு அவர் துறவியாவதை அந்த அம்மாவால் தடுத்து நிறுத்த முடியவில்லை. ஆனால் அவர் சங்கரரிடம் ஒரு வேண்டுதல் தெரிவிக்கிறார். தான்

https://telegram.me/aedahamlibrary

சாகும்போது சங்கரர் எங்கே இருந்தாலும் வந்து அவரது ஈமச்சடங்குகளைச் செய்ய வேண்டும் என்பது அந்த வேண்டுதல்.

சங்கரரும் வருகிறார். ஆனால் ஒரு துறவி ஈமச் சடங்குகள் செய்வதை அங்கிருந்த நம்பூதிரிகள் எதிர்த்தார்கள். அதனால் அவர்கள் யாரும் சங்கரருக்கு உதவிக்கு வராததால் அவரே தன்னந்தனியராக அதைச் செய்ய வேண்டி வந்தது. அவரால் சடலத்தை ஒற்றை ஆளாகத் தூக்க முடியவில்லை. அதனால் சடலத்தை வெட்டி வெட்டி எடுத்து வீட்டுத் தோட்டத்தில் வாழை மட்டையில் வைத்து எரித்தார். அவரது தவ வலிமையால் வாழை மட்டையே விறகாகப் பற்றி எரிந்தது.

நானோ கணிதம், பௌதிகம் போலவே ஹிஸ்ட்ரியிலும் வீக். ஒன்றுமே புரியவில்லை. என்ன இது, சங்கரரே அகோரியாக மாறி பிணத்தை வெட்டினாரா என்று மடத்தில் விசாரித்தேன். ஆதி சங்கரர் பற்றிப் படிப்பதற்கு டி.எம்.பி. மகாதேவன் மற்றும் குப்புசாமி சாஸ்திரிகள் இருவரும்தான் நம்பத்தகுந்தவர்கள் என்று தகவல் கிடைத்தது. ஆக, ஆன்லைனில் எழுதப்பட்டிருப்பது ஒரு புருடா. இணையத்தில் இதுதான் பிரச்சினை. கோடிக் கணக்கான குப்பைகள் இணையத்தில் போடப்பட்டுள்ளன. இங்கே யார் வேண்டுமானாலும் வந்து எப்படி வேண்டுமானாலும் புருடா விடலாம்.

ஏன், நீங்கள் குறிப்பிட்ட உயிரியல் அறிஞர் ரூபர்ட் ஷெல்ட்ரேக்கின் இணையதளத்தையே எடுத்துக்கொள்வோம். அதில் அவர் தான் ஒரு ஜப்பானியனால் கத்தியால் குத்தப்பட்ட சம்பவத்தைப் பற்றி எழுதியிருக்கிறார். அதற்குப் பின்னூட்டம் போட்டிருக்கும் சில மடையர்கள் “ஏன், நீர்தான் டெலிபதியில் வல்லவர் ஆயிற்றே? ஏன் டாக்டரிடம் போய் சர்ஜரி செய்து கொண்டீர்? உம்முடைய டெலிபதியினாலேயே சொஸ்தப்படுத்திக் கொண்டிருக்க வேண்டியதுதானே?” என்று கேட்டு இன்னும் பலவாறு ஆபாசமாக எழுதியிருக்கிறார்கள். அதனால் தமிழில் மட்டுமல்ல; எல்லா மொழிகளிலும் இதுபோன்ற பைத்தியக்காரர்கள் இருக்கிறார்கள் என்று நினைத்துக்கொண்டேன்.

அதனால் இணையத்தில் படித்துவிட்டு கண்டபடி உளறுபவர்களைப் பற்றி - அவர்கள் நம்முடைய நண்பர்களாகவே இருந்தாலும் - நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

சரி ஆனந்த், இந்தக் கடிதம் ஒருவழியாக முடிவுக்கு வருகிறது. ஆனால் கடிதத்தில் ஒரு சின்ன ‘இக்கு’ இருக்கிறது; கவனித்தீர்களா? வெள்ளிக்கிழமை அன்று மௌன விரதத்தின் இடையே சென்று -

https://telegram.me/aedahamlibrary

கேட்டுக்கு வெளியே நீண்ட நேரமாக நின்று பெல் அடித்துக்கொண்டிருந்த அஜ்மலிடம் பலாப் பழத்தை வாங்கிக்கொண்ட அவந்திகா தன் மௌன விரதத்தை உடைத்து அவனிடம் 'தேங்க்ஸ்' சொல்லியிருப்பாள் என்றே யூகித்தேன். மறுநாள் கேட்டேன். "பின்னே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள். அந்த உடைப்பில்தான் ஒளிந்திருக்கிறது நம்முடைய ஆன்மீகத் தேட்டத்தின் பிடிமானம்.

சாரு

18.6.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

பக்தனும் தோழனும்

அன்புள்ள சாரு,

தங்களை வெகுவாக யோசிக்க வைத்த ஒரு கடிதத்தினை எழுத முடிந்ததற்கு மகிழ்ச்சி. சதுரங்க ஆட்டத்தில் தோல்வி என்று குறிப்பிட்டு நீங்கள் எழுதியிருப்பது ஒரு எழுத்தாளரின் திறந்து கிடக்கும் விசாலமான இதயத்திற்கு சாட்சி. மற்றபடி சாரு, இன்னொன்றும் சொல்ல வேண்டும் - ஜெயிக்க முயலாதவனிடம் ஒருவர் தோல்வி காண்பது சாத்தியமில்லை!

ரஸ்புதீனைப் பற்றிய தங்களின் அந்தக் கட்டுரையை படித்திருக்கிறேன். சார்ல்ஸ் ப்யூகோவ்ஸ்கி மீதான கட்டுரைக்கு அடுத்தபடியாக என்னைக் கவர்ந்த தங்களின் கட்டுரை அது. மிஸ்டிக்குகளை பற்றிச் சொல்லும் போது ஆன்மீகம் சார்ந்த மிஸ்டிக்குகள், தாந்த்ரீகம் சார்ந்த மிஸ்டிக்குகள் என்று வகுத்துக்கொண்ட மனம், அதில் ரஸ்புதீனை இரண்டாவது பிரிவில் வகைப்படுத்தி, ரஸ்புதீன் அழிவுகளை ஏற்படுத்தியிருப்பதாகக் கொண்டுவிட்டது போலும். எது எப்படி இருந்தாலும் ரஸ்புதீன் பற்றிய எனது பொறுப்பற்ற வார்த்தைகளுக்காக மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன். அதே இரண்டு மாதங்களைக் கொடுங்கள் சரியாகப் படித்துத் தெரிந்துகொண்டு விடுகிறேன்.

மற்றபடி, நீங்கள் இளையராஜாவின் திருவாசகத்தை முன் வைத்து எழுதியிருந்த விஷயங்களைப் படித்தவுடன் - போச்சு! இனி சாரு இளையராஜாவை மறைமுகமாக ரசிக்கிறார் என்று ராஜா ரசிகர் மன்றத்தில் போர்டு போட்டுவிடப் போகிறார்கள் என்ற எண்ணம் ஓடியது. தங்கள் எழுத்தின் எளிமையை வார்த்தைகளாக மட்டுமே புரிந்துகொள்பவர்கள் அதனுள் அமர்ந்திருக்கும், நீங்கள் குறிப்பிட்டிருந்த அந்த 'ஏதோ ஒன்று' செய்யும், 'காம்ப்ளக்ஸிட்டியை' அறிவார்களா, தெரியவில்லை. அதிலும் இளையராஜா பக்தர்கள்? போகட்டும். அதுபற்றி நாம் பேசிக்கொண்டிருக்க வேண்டிய அவசியம் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. பிறிதொரு சந்தர்ப்பத்தில் இளையராஜாவையும், ஏ.ஆர்.ரஹ்மானையும் முன்வைத்து தமிழ் சினிமா இசையை தங்களுடன் விரிவாகப் பேச வேண்டும். அத்தகைய சர்ந்தர்ப்பத்தை எண்ணி இப்போதைக்கு அதனை விடுத்து நகர்கிறேன்.

இந்த ஜே.கே, ஓஷோ, யூ.ஜி.-ஆட்டத்தைக் கலைத்துவிட்டு பழைய

https://telegram.me/aedahamlibrary

மலாவி ஆட்டத்தைத் தொடரும் முன், இவர்கள் சம்பந்தமாக இன்னும் சில விஷயங்களைத் தங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

கணிதத்தில் intersection set, unionஎன்று வெவ்வேறு வட்டங்களுக் கிடையே உள்ள தொடர்பை குறிக்கிறார்கள். இதில் ஜே.கே, யூ.ஜி, ஓஷோ ஆகிய மூவரையும் தனித்தனி வட்டங்களெனக் கொள்வோம் என்றால், அவற்றின் intersection set-ஐ மட்டுமே நாம் பொருட்படுத்த வேண்டியதாகத் தோன்றுகிறது.

அப்படி ஒரு பொதுவான அம்சம் இவர்களுக்கிடையே உள்ளதென்பதையே இவர்களின் தனிப்பட்ட விசிறிகளும், பக்தர்களும் அறியாதவர்களாக இருப்பதை கவனித்திருக்கிறேன். இதையே தலைகீழாகத் திருப்பி இந்தப் பொதுவான அம்சத்தை புரிந்துகொள்ளாதவர்களே பக்தர்களாகவும், விசிறிகளாகவும் ஆகின்றனர் என்றும் கொள்ளலாம்.

விசிறிகளையும், பக்தர்களையும் பற்றிப் பேசுகையில், ஓஷோவின் வார்த்தைகளாக நீங்கள் தொகுத்திருப்பவற்றிலுள்ள இந்த வரி முக்கியமானதாகப்படுகிறது:

Now, J. Krishnamurti is totally different in his expression, very logical, very rational. The beginning of his work is always with the mind; then slowly slowly he leads you beyond the mind...

இந்த 'beyond mind'கிருஷ்ணமூர்த்தி நகரும் இடத்தில் கிருஷ்ணமூர்த்தி ஆர்வலர்களில் முதல் இரண்டு வகையினரும் களைத்து நின்றுவிடுவதாகத் தோன்றுகிறது.

இது சம்பந்தமாக பேசினால், ஜே.கே.வை எனக்கு அறிமுகப் படுத்திய நண்பரை பற்றிச் சொல்ல வேண்டும்.

ஜே.கே.வை முதன்முதலில் நான் படிக்கவில்லை; கேட்கவே செய்தேன். அது நடந்தது நண்பர் ஒருவருடன் கிருஷ்ணமூர்த்தி பவுன்டேஷனுக்குச் சென்றபோது. அந்த நாள் வரை ஒருசில அரிய இலக்கிய நண்பர்கள் ஜே.கே.வைப் படித்துவிடுமாறு சொல்லிக்கொண்டே இருந்தனர். நான் எதையும் படித்தே ஆக வேண்டும் என்றெல்லாம் கங்கணம் கட்டிக்கொள்பவன் இல்லை. அந்த நொடியின் ஆர்வத்தின் தூண்டுதலில் வாசிப்பவன். ஆக ஜே.கே.வை நெருங்கவேயில்லை. அந்த நிலையிலேயே கல்லூரி முடித்து வேலை நிமித்தமாக சென்னை வந்தபோது, இந்த நண்பருடன் கிருஷ்ணமூர்த்தி ஃபவுன்டேஷனுக்குச் செல்ல நேர்ந்தது. நண்பரை, கிருஷ்ணமூர்த்தி பக்தர் எனலாம். ஏதேதோ

https://telegram.me/aedahamlibrary

தலைப்புகளைச் சொல்லி அங்கிருந்த நூலகப் பொறுப்பாளரைத் துளைத்து எடுத்துக்கொண்டிருந்தார். அது எந்த வகை என்றாலும் பக்தியில் அன்றைக்கும் இன்றைக்கும் நான் ஆர்வமற்றவனாக இருப்பதால் அங்கிருந்த நூல்சேகரிப்புகளுக்கு கவனத்தைக் கொடுத்துவிட்டு நின்றிருந்தேன். (ஜே.கே. பிற குருமார்களையும், உரைநூல்களையும் புறக்கணித்தே பேசி வந்திருக்கிறார் என்ற போதும் அங்கே எத்தனை பேருடைய புத்தகங்கள்!-- இதற்கு அவர்கள் என்ன விளக்கம் வைத்திருக்கிறார்களோ ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!)

சென்னையின் பரபரப்பான சூழ்நிலையிலிருந்து திடீரென தப்பித்து ஒரு அமைதியான தீவுக்குள் வந்து விழுந்துவிட்ட சுகந்தம் என் மனதை ஆக்ரமித்திருந்தது. நேரம் சென்று கொண்டிருந்ததே தவிர நண்பர் கிளம்பியபாடில்லை. ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துக்கொண்டு உட்கார்ந்துவிட்டார். எனக்கும் அந்த அமைதியில் கொஞ்சம் படிக்கலாம் என்று தோன்றியது, ஆனால் ஒரு புத்தகத்தைப் படித்து முடிக்கும் அளவிற்கு அப்போது நேர சாத்தியம் இல்லை. எனவே ஒரு மணிநேர அளவு ஓடக்கூடிய ஜே.கே.வின் சொற்பொழிவு ஒன்றின் வீடியோவை இயங்க செய்து, ஹெட்போனுக்கு காதுகளைக் கொடுத்து அமர்ந்தேன்.

அன்று அந்த ஒரு மணி நேரப் பேச்சினைக் கேட்டுவிட்டு வெளியே வந்ததும், எனக்கு உலகிலேயே மிக நெருக்கமானவராக ஜே.கே.வை உணர்ந்தேன். அருகிலிருந்த நண்பரிடம் இது பற்றி ஏதோ சொல்லப்போக, அவர் ஜே.கே.வுக்கு வார்த்தைகளால் தீபாராதனை காட்டி, மணி அடித்து, திருநீறு குங்குமம் பூசிக்கொண்டார். எனக்கும் பூசிவிட முயன்றார். தன் வாழ்க்கையில் ஜே.கே. சொல்வதை ஒரு பகுதியாவது புரிந்துகொள்ள முடியுமா தெரியவில்லை என்று அசலான ஏக்கத்துடன் கூறினார். நான், “ஜே.கே. சொல்வது மிக எளிமையான விஷயமாகத்தானே இருக்கிறது? இதில் உங்களுக்கு என்ன சிக்கல்? தவிர, என்னையும் சேர்த்து எந்த குருவின் பின்னாலும் செல்லாதீர்கள் என்றுதானே ஜே.கே. கூறுகிறார்; பிறகு அவரையே குருவாக வரித்துக் கொண்டு, வாழ்நாளை ஏன் நீங்கள் வீணடிக்கிறீர்கள்?” என்று கேட்டேன். அவ்வளவுதான் துவங்கியது வாதம்.

நான் ஏதோ ஜே.கே.வின் ஒரு மணி நேரப் பேச்சை மட்டும் கேட்டுவிட்டு, எதையோ புரிந்துகொண்டு விட்டதாக நினைத்துப் பேசுகிறேன்; உண்மையில் ஜே.கே.வைப் புரிந்துகொள்வது நான் நினைப்பது போல் எளிதல்ல; அவர் 15 வருடங்களாக முயன்றும் ஏதோ இங்கொன்றும் அங்கொன்றுமாகவே விளங்குகிறது; காரணம் ஜே.கே. அமர்ந்திருக்கும், பேசும் உயரமே வேறு - இப்படியெல்லாம் பலவிதமாக எடுத்துக்கூறி,

https://telegram.me/aedahamlibrary

நண்பர் ஜே.கே.வை இமயமலை அளவில் வைத்து என்னை அதள பாதாளத்தில் நிற்பவனாக நிறுவ முயன்றார். என்னை மட்டும் அல்ல; அவரையுமே அவர் பாதாளத்தில் உதவி கோரி நிற்பவராகவே கணித்திருந்தார் என்று தெரிந்தது. அவர் நோக்கில் வித்தியாசம் என்னவென்றால் அவருக்கு தான் பாதாளத்தில் நிற்பது புரிகிறது; எனக்கு அது புரியவில்லை அவ்வளவே.

நண்பர் ஜே.கே.வைப் பொறுத்தவரை தான் கொண்ட முயற்சி பற்றிச் சொன்னதெல்லாம் உண்மை என்பதை அவருடனான தனிப்பட்ட பரிச்சயத்தின் பேரில் நான் நன்றாகவே அறிவேன். குறிப்பாக, அவர் பல வருடங்களுக்கு முன் கடுமையான மனச்சோர்வுக்கு உள்ளாகி பாதிக்கப்பட்ட மனநலனின் காரணமாக வாழ்வே சுமையாகிப்போன நிலையில், ஜே.கே.வை வாசிக்கத் துவங்கி மீண்ட விதத்தை அவர் பலமுறை என்னிடம் சொல்லியிருக்கிறார். எனவே அந்த நண்பரைப் பொறுத்தவரை அவர் வாழ்வை அவர் மீட்டெடுக்கக் காரணமாக இருந்தவர் ஜே.கே. என்பதை நான் மறுப்பதற்கில்லை. அதன் காரணமாக எனக்கு நெருக்கமான அந்த நண்பர் ஜே.கே. பற்றி என்னுடன் எப்போதும் அதீத உணர்ச்சியுடனேயே பேசி வந்திருக்கிறார். ஒருவகையில் அந்த நண்பர் அவ்வளவு அதிகமாகப் பேசியதன் காரணமாகவே எனக்கு ஜே.கே. மீதான ஒருவித மன விலகலை ஏற்படுத்தி, அதுவரை அவரை வாசிக்காமலிருந்திருக்கிறேன் என்றுகூடத் தோன்றியது. ஆனால் அன்று ஜே.கே.யின் பேச்சைக் கேட்கத் துவங்கிய பொழுதினில் எனக்குப் புலப்பட்ட ஜே.கே. வேறுவிதமாக இருந்தார்.

இந்த நண்பர் தன் வாழ்க்கையை வேறு ஏதோ ஒன்றிலிருந்து மீட்டெடுத்து ஜே.கே.யிடம் அடகு வைத்துவிட்டார் என்று மட்டும் எனக்குப் புரிந்தது. பின்னாளில் ஜே.கே.வை சிலாகித்த பலரும் இத்தகைய மனநோய்க்கு (இதை மனநோய் என்றே கருதுகிறேன்) உள்ளாகிவிடும் நிலையும் காணக் கிடைத்தது.

ஆனால் எனக்குப் பார்க்கக் கிடைத்த ஜே.கே. வேறொருவராகத் தோற்றம் அளித்தார். அவர், ‘நான் கூறுவதை நீங்கள் அப்படியே ஏற்றுக்கொள்ளாதீர்கள்; நாம் சேர்ந்து உண்மை எதுவென சோதித்து அறிவோம்’ என்றே தன் பேச்சுக்களைத் தொடங்குகிறார். பெரும்பாலானோர் அதை ஏதோ அவரது தன்னடக்கக் கூற்றாக எண்ணி, அவரை நடைமுறை வாழ்வுக்குச் சம்பந்தமற்ற ஒரு நிலையில் வைத்து அவரது வார்த்தைகளை (வார்த்தைகளை மட்டுமே!) கவனிக்கின்றனர். அவர் உட்படுத்தும் நூதனமான உளவியல்

https://telegram.me/aedahamlibrary

பயணத்திற்குத் தங்களைத் தயார் செய்துகொள்வதில்லை. இதில் ஜே.கே.வின் தவறு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. எதையாவது பற்றிக் கொண்டு வசதி கொள்ளும் பொருட்டுப் பிடி தேடும் மனங்களின் பிரச்சினையாகவே நான் இதைக் கருதுகிறேன். இதைத் தவிர்க்கவே ஜே.கே. தன் ஒவ்வொரு சொல்லிலும் முயல்கிறார். ஆனால் அதைக் கேட்கும் எளிய மனங்கள் இதற்குத் தயாராக இல்லாமல் தோல்வியுற்று ஜே.கே.வைத் தோல்வியுறச் செய்கிறார்கள்.

இதை நான் என் நண்பருக்கு அன்று சொல்ல முயன்றேன், ஜே.கே.வை அரியாசனத்தில் ஏற்றி வைத்து அவர் முன் நீங்கள் மண்டியிடும் நொடி நீங்கள் அவரைப் புரிந்துகொள்வதில் தோல்வி அடைந்து அவரையும் தோல்வியுறச் செய்கிறீர்கள்' என்றேன். 'ஜே.கே. மட்டுமல்ல, எந்த ஒரு ஞானியையும், சிந்தனையாளரையும் அவர் நின்றிருக்கும் உயரத்துக்குச் சென்று சரி சமானமாக சந்தித்தாலொழிய, வெறும் பக்தியினாலும், அடக்கம் என்ற பெயரில் தன்னைத்தானே சிறுமைபடுத்திக்கொள்வதாலும் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை' என்றேன். 'அது எந்தத் துறை என்றாலுமே குரு எனப்படுபவர் தன்னிடம் கற்க வருபவனை தனக்குச் சமானமான நிலையில் வைத்தாலொழிய, கற்றல் என்ற ஒன்று நிகழ வாய்ப்பே இல்லை - இதை மிகச் சரியாக வெளிப்படுத்தியவர் ஜே.கே.' என்றேன். 'கருத்துக்கள் கிடக்கட்டும், இரு வேறு உயரங்களில் இருப்பவர்களிடையே எந்த வகை பரிமாற்றமாவது சரியான விகிதத்தில் சாத்தியமா?' என்று கேட்டேன். நண்பர் நினைப்பதற்கு மாறாக ஜே.கே.வை நான் சந்திக்க நேரிடும் என்றால், அவருடன் கைகோர்த்து நடந்து சென்று தேனீர் பருகுவதையே நான் விரும்புகிறேன் என்றேன்.

ம்ஹூம்! ஒன்றும் வேலைக்கு ஆகவில்லை. அடையாறிலிருந்து துவங்கி வழி நெடுக்க சிலர் நின்று பார்க்கும் அளவிற்குத் தீவிரமாக குரல் உயர்த்தி வாக்குவாதம் செய்தபடியே நடந்து தி.நகர் வந்து சேர்ந்தோம்.

அதன் பிறகு நான் என் போக்கில், தோன்றிய போது ஜே.கே.வைப் படிக்கவும் கேட்கவும் செய்தேன். காலப்போக்கில் அவரவரே உணர்ந்தாலொழிய இதுபோன்ற விவாதங்கள் பயன் அளிக்காது என்பது புரிந்தது.

பின் நெடுநாள் இடைவெளிக்குப் பின் அந்த நண்பரை மீண்டும் சந்திக்க நேர்ந்தபோது அவர் பெரும் பொருளாதாரச் சிக்கலில் இருப்பதாகத் தெரிந்தது.

திடீரென அவராகவே ஜே.கே. பற்றி பேசத் துவங்கி ஆவேசமாக,

https://telegram.me/aedahamlibrary

‘ஒருவன் தான் செய்து வந்த வேலை கைவிட்டுப் போக நேர்ந்தால் எப்படி வாழ்வைச் சமாளிப்பது என்று ஜே.கே. சொல்லவேயில்லை’ என்று சாடினார். பின், அன்று பேசிய அதே நண்பர்தானா என்று வியக்கும் அளவிற்கு அடுத்த பத்து நிமிடங்களில் ஜே.கே.வைக் கடுமையாகப் பரிகசித்தார். சீஷீu நீணீஸீ கீவீஸீ, நெஞ்சமே அஞ்சாதே நீ போன்ற புத்தகங்கள் சந்தையில் கிடைக்கின்றனவே; நீங்கள் ஏன் ஜே.கே.வையும் ரமணரையும் படித்து ஏமாற வேண்டும்-என்று கேட்கத் தோன்றியது. கேட்கவில்லை. மாறாக ஒரு ஞானியின் தோரணையில் புன்னகை பூத்தேன். காரணம், அந்த நொடி என் நண்பரை முன்வைத்து நான் சொல்லிக்கொண்டிருக்கும் இந்தக் கதையின் மையப் பொருள் எனக்கு இப்படியானதாக விளங்கியது:

‘கோயில் கட்டுபவர்களே கோயிலை இடிக்கிறார்கள்; சிலை செய்பவர்களே சிலைகளை உடைக்கிறார்கள். தெய்வத்தை நோக்கி இவர்கள் இம்மி அளவு கூட நகர வழியில்லை!’

குறிப்பு: இங்கு நான் தெய்வம் என்று குறிப்பிடுவது, ஜே.கே.வை அல்ல. சாக்ரடீஸ் முதல், ஜே.கே. வரை அனைத்து வகை சிறந்த மனிதர்களும் தங்கள் சக மனிதனுக்கு காட்ட முயன்று தோற்ற உண்மையை!

அன்புடன்,

ஆனந்த்

18.6.2009

டியர் ஆனந்த்,

நீங்கள் வெல்ல முயன்றீர்களா என்பது பிரச்சினை அல்ல. வாஸ்தவத்தில் இது உங்களைப் பற்றிய விஷயமே அல்ல. தோல்வியடந்தேன் என்பது என்னைப் பொறுத்த ஒரு விஷயம். உங்களை வெல்ல முயன்றுகூட நான் தோல்வி அடைந்திருக்கலாம். அப்படி நடக்கவில்லை என்றாலும் அப்படி ஒரு சாத்தியமும் இருக்கிறது என்பதற்காகச் சொன்னேன்.

இளையராஜா - ரஹ்மான் பற்றி மீண்டும்: போதும் போதும் என்ற அளவுக்கு இளையராஜா பற்றி எழுதிவிட்டேன். இப்போது இன்னொரு விஷயம்: சமீபத்தில் ட்ரம்ஸ் சிவமணியின் பேட்டி ஒன்றைப் படித்தேன். அவர் இளையராஜாவுக்கும் வாசித்திருக்கிறார். ஆனால் முதல் முதலாக ரஹ்மான்தான் ஆல்பத்தில் ட்ரம்ஸ் சிவமணியின் பெயரைப் போட்டிருக்கிறார். இது ஒன்றுதான் இளையராஜா எனக்குப் பிடிக்காமல் போனதற்குக் காரணம். இதையும் மீறி ஒருவரின் கலைப்படைப்பு

https://telegram.me/aedahamlibrary

எனக்குப் பிடிக்க வேண்டுமானால் அது என்னுடைய வெறுப்பையும் தோல்வியுறச் செய்யும் அளவுக்கு மிக உயர்ந்த கலையாக இருக்க வேண்டும். உதாரணமாக, நான் கடவுளுக்கு ஜெயமோகன் எழுதியிருந்த அற்புதமான வசனம் மாதிரி. துரதிர்ஷ்டவசமாக இளையராஜா அப்படி ஒரு படத்திற்குக்கூட செய்யவில்லை என்பது என் கருத்து.

இளையராஜா பற்றி நினைக்கும்போது எனக்குத் தமிழ்நாட்டு அரசியல்வாதி ஒருவர் ஞாபகம் வருகிறார். இப்போது தில்லிப் பக்கம் போய்விட்டார். அவர் ஒரு கிரிக்கெட் பிரியர். அவரும் அவருடைய தொண்டர்களும் கிரிக்கெட் ஆடுவார்கள். தலைவருக்குக் கிரிக்கெட் பிடிக்குமே ஒழிய அவ்வளவாக ஆட வராது. அதற்காகத் தலைவரைத் தோற்கச் செய்துவிட முடியுமா? தொண்டர் ஒரு பந்தை வீசுவார். எப்படி வீசுவார் தெரியுமா? அவருக்கு சுமாராக வீசத் தெரியும் என்றாலும் வைடுக்குத்தான் வீசுவார். ஸ்டம்ப் பக்கம் பந்து எக்காலத்திலும் வரவே வராது. உத்தரவாதம். பந்து வீச்சாளருக்கு ஏற்றாற்போல் இருப்பார் விக்கெட் கீப்பர். மிக வாகாக கைகளுக்குள் பந்து சென்று கேட்ச் ஆகிவிடும். ஆனாலும் விரலில் கடுமையாக 'அடிபட்டு' கேட்சை விட்டுவிடுவார் விக்கெட் கீப்பர். "சே, ஜஸ்ட்டு மிஸ் தலைவரே; அவ்ளோ ஸ்பீடு" என்று 'வருத்தத்துடன்' சொல்லுவார். மிஸ் பண்ணவில்லையானால் அவருடைய உயிர் மிஸ் ஆகிவிடுமே? அதெல்லாம் தொண்டருக்குத் தெரியாதா? ஆனால் துரதிர்ஷ்டம் என்னவென்றால், உண்மையிலேயே தன்னுடைய 'அடி'யில் அவ்வளவு வலு இருக்கிறது என்று தலைவர் இன்னும் நம்பிக் கொண்டிருப்பதுதான். அந்தத் தலைவரைப் போன்றவர்தான் இளையராஜா. ஞானி ஞானி என்று சொல்லி அவரே தன்னை ஞானி என்று நம்பும் அளவுக்கு ஆளாக்கிவிட்டார்கள் தொண்டர்கள். பாவம்.

எனக்குப் பிடித்தது திருவாசகத்தில் ஒன்றிரண்டு பாடல்கள், அதுபோல் அவரது சில சினிமா பாடல்கள். அவ்வளவுதான். கே.வி. மகாதேவன், விஸ்வநாதன் - ராமமூர்த்தி, பாகவதர், சின்னப்பா அளவுக்கெல்லாம் இளையராஜாவை எனக்குப் பிடிக்காது. ஏனென்றால், என்னுடைய இசை ரசனை இஸ்லாமியக் கலாச்சாரத்தைப் பின்புலனாகக் கொண்டது. தில்லி சாந்த்னி சௌக்கில் வாழும் ஒரு இஸ்லாமியருக்கு இளையராஜாவை ரசிக்க முடியுமா? அதேபோல்தான் நானும். என்னிடம் தமிழ்க் கலாச்சாரக் கூறுகள் ரொம்ப ரொம்பக் கம்மி. நாகூரில் முழுக்க முழுக்க கவ்வாலி கலாச்சாரம். பின்னர் காரைக்காலில் மேற்கத்திய சாஸ்த்ரீய சங்கீதம். உடனே நேரடியாக தில்லிக்கு அனுப்பப்பட்டேன். அங்கேயும் போய் வசித்தது வடக்கு தில்லி. இப்படிப்பட்ட என்னால்

https://telegram.me/aedahamlibrary

எப்படி இளையராஜாவை ரசிக்க முடியும்? அதற்கான கலாச்சார மன அமைப்பே என்னிடம் இல்லை. ஏ.ஆர். ரஹ்மானின் தமிழ்ப் பாடல்களை விட இந்திப் பாடல்களே எனக்குப் பிடிக்கும் என்பதற்குக் காரணமும் இதுதான். பொதுவாக தமிழ் இலக்கியச்சூழலில் இஸ்லாமியர்களின் பங்கேற்பே இல்லை என்பதால் இது விஷயத்தில் நான் சொல்வது சம்பந்தமே இல்லாத ஏதோ ஒரு அந்நியமான குரலாக ஒலிக்கிறது.

மேலும் இளையராஜா, ரஹ்மான் விஷயத்தில் என்னைப் பொறுத்தவரை இனி விவாதத்துக்கு எதுவுமில்லை என்றுதான் நினைக்கிறேன். மேலும் இளையராஜா பற்றிப் பேசுவது எனக்கு சந்துஷ்டி அளிக்கும் விஷயம் அல்ல என்பதால் அதை நம்முடைய விவாதத் தளத்தில் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று விரும்புகிறேன்.

இப்போது கொஞ்சம் தெளிவாகச் சொல்லிவிட்டேன் என்று நினைக்கிறேன்.

கணிதம் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அட்டகாசம். எனக்குக் கணிதத்தில் ஒன் ப்ளஸ் ஒன் ஈஸ் ஈக்வல் டு டூ என்ற அளவுக்குத்தான் தெரியும். பொதுவாக எனக்கு இந்த உயர் கணிதம், உயர் பௌதிகம் போன்ற விஷயங்கள் எல்லாமே ரொம்ப அலர்ஜியாக இருக்கின்றன. ஏன் என்று தெரியவில்லை. இலக்கியத்தைத் தவிர வேறு எதுவுமே மண்டையில் ஏற மாட்டேன் என்கிறது.

ஜே.கே.வை உங்களுக்கு அறிமுகப்படுத்திய நபரைப் போன்றவர்களோடெல்லாம் நான் பழகவே மாட்டேன். முதல் சந்திப்பிலேயே தெரிந்துவிடும். விலகி ஓடி விடுவேன். அதில் சமரசத்துக்கே இடமில்லை. இம்மாதிரி விஷயங்களிலெல்லாம் நான் யூ.ஜி. மாதிரி.

சாரு

18.6.2009

https://telegram.me/aedahamlibrary

சாத்தானின் பாடல்கள்

டியர் சாரு,

150 ஆண்டுகளுக்கு முன் சென்று பார்த்தால் மலாவி ஒரு கடவுளற்ற தேசமாக இருந்திருக்கிறது! கிறிஸ்துவும் கிடையாது. அல்லாவும் கிடையாது! 1859ஆம் ஆண்டில் ஸ்காட்லான்ட் தேசத்தைச் சேர்ந்தவரான டேவிட் லிவிங்ஸ்டன் மலாவிக்கு வந்திருக்கிறார். கிறிஸ்தவம் இவர் மூலமாகவே மலாவிக்கு அறிமுகமாகியிருக்கிறது. இஸ்லாம் இதற்கும் வெகு பின்னால் இங்கு வந்திறங்கிய இந்தியாவைச் சேர்ந்த இஸ்லாமியர்களால் அறிமுகம் கொண்டிருக்க வேண்டும். லிவிங்ஸ்டன் மூன்று 'சி'க்களை மலாவிக்கு அளித்ததாகச் சொல்கிறார்கள். Commerce, Culture, Christianity. இதில் முதல் இரண்டு 'சி'க்களும் லிவிங்ஸ்டன் அளித்தது அல்ல; அதற்கு முன்பே மலாவி ஒரு பண்பட்ட சமூகமாகத்தான் இருந்தது என்பவர்களும் உண்டு. மலாவியில் இருந்து வந்த அடிமை வர்த்தகத்தை அழித்ததிலும் லிவிங்ஸ்டனுக்குப் பங்கிருப்பதாகச் சொல்கிறார்கள். தற்போதைய தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றுவிட்ட பிங்கு அரசாங்கம் லிவிங்ஸ்டனுக்கு 4 லட்சம் பவுண்ட் செலவில் சிலை வைக்க ஏற்பாடு செய்து வருகிறது. இதை 'ஈராக்கில் புஷ்ஷுக்கு சிலை வைப்பதற்கு இணையான செயல்' என்று விமர்சிப்பவர்களும் உண்டு.

லிவிங்ஸ்டன் பெறும் முக்கியத்துவம் இருக்கட்டும்; 150 ஆண்டுகளுக்கு முன் மலாவி எப்படி இருந்திருக்கும் என்று எண்ணிப் பார்க்கிறேன்! எந்தவித கோயிலும், உருவ வழிபாடுகளும் இங்கு இருந்ததில்லை. மூதாதையர்களின் ஆவிகள் பற்றிய நம்பிக்கையே கடவுளின் இடத்தில் இருந்திருக்கிறது. அத்தகைய நிலையில் சமூக அமைப்பைக் கட்டுக்குள் வைத்திருந்தது குலே நடனமாகவே இருக்க வேண்டும் என்று அனுமானிக்கிறேன்.

முக்கிய சடங்காக அறியப்படும் குலே நடனத்தினை ஆடுவது மனிதர்கள் அல்ல; ஆவிகளே என்ற நம்பிக்கை ஆழமாக மலாவியரிடையே உண்டு. இந்த நடனம் இரவு தொடங்கி பகல் விடியும் வரை ஆடப்படுவதாக இருந்திருக்கிறது. நடனமாடுபவர்கள் பெரும்பாலும் காய்கனிகளை உடையாக உடுத்தி, முகமூடி அணிந்து நடனமிடுவார்கள். காய்கனி

https://telegram.me/aedahamlibrary

வகைகள் நிலா வெளிச்சத்தில் பிரதிபலித்து அசைவுகளை துல்லியமாக்கிக் காட்டும் என்பது அவற்றைப் பயன்கொள்ளும் காரணங்களுள் ஒன்று. பின்னாளில் இத்தகைய நடனத்திற்கென்று மேற்கத்திய முறையில் பிரத்யேக உடைகள் தயாரிக்கப்படுவது துவக்கம் கொண்டிருக்கிறது.

இந்த நடனத்தில் மிருகங்களைப் போல் முகமூடி அணிந்து பாவனை காட்டி ஆடும் முறைகளும் இடம் பெறும். இந்த மிருக உருவங்கள் அதிகாரத்தை, உடல் வலிமையை, சமூகத்தின் மீதான ஆளுமையை வெளிப்படுத்துவதற்காக பயன்படுத்தப்படும். அது தவிர மனித உருவம் போன்று அலங்கரித்துக்கொண்டு ஆடுவது மூதாதையரின் ஆவிகளைக் குறிப்பது. இவை தவிர இந்த நடனத்திற்காகப் பயன்படுத்தப்படும் முகமூடிகளுக்கோ, ஆடைகளுக்கோ வேறெதுவும் மதிப்பிருப்பதாகத் தெரியவில்லை. நடனம் முடிந்த கையுடன் பெரும்பாலும் பயன்கொண்ட பொருட்கள் அனைத்தும் எரித்து சாம்பலாக்கப்படும்.

நடனத்தை கிராம மக்கள் தொலைதூரத்திலிருந்து அச்சத்துடனும் பக்தியுடனும் பார்ப்பார்கள் என்று தெரிகிறது. நடனத்தின் போக்கில் சோம்பேறிக் கணவன், சுயநலம் பிடித்த கிராமத் தலைவர், எந்த நேரமும் ஏதாவது புகாரிட்டபடியே தொல்லை கொடுக்கும் மனைவி போன்றவையான பாத்திரங்கள் சமூகத்துக்கு விளைவிக்கும் கேடுகள், அவர்கள் அதன் விளைவாகப் பெறும் தண்டனைகள் போன்றவை அரங்கேற்றப்படும். கிராமத் தலைவர்கள் இறந்து போகும் தருணத்தில் இத்தகைய குலே நடனங்கள் சவ அடக்கத்துடன் சேர்த்து நிகழ்த்தப்படுவதும் உண்டு.

இவை அனைத்தும் நான் வாய்மொழியாகக் கேட்டு அறிந்த செய்திகள். இன்றளவில் மதம் ஊடற்றுப் புகுந்து விட்ட நிலையில் குலே சற்று பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டதாகத் தெரிகிறது என்றபோதும் முற்றிலுமாக அழிந்துவிடவில்லை. நான் பலமுறை இந்த நடனம் எந்த கிராமத்திலாவது நிகழ்வது தெரிந்தால் பார்க்க அழைத்துச் செல்லுமாறு பல மலாவியர்களிடம் கேட்டிருக்கிறேன். ஒவ்வொரு முறையும் குலே என்ற பெயரை உச்சரிக்கும்போது எதிராளியான மலாவியரின் கண்ணில் ஒருவித மிரட்சியே பார்க்கக் கிடைக்கிறது. பத்து பேரிடம் இதுபற்றி கேட்டால் பத்து பேருமே குலே நடனமிடுபவர்கள் மிகவும் ஆபத்தானர்கள்; அருகில் சென்று பார்ப்பதெல்லாம் சரிவராது என்றே கூறுகிறார்கள். மற்றபடி அரசு சார்ந்த கலாச்சார நிகழ்ச்சிகளில் தேசத்தின் கலாச்சார நடனமாக பேருக்கு இந்த நடனம் நிகழ்த்திக் காட்டப்படும். அதற்கும் அசல் குலேவுக்கும் அதிக சம்பந்தமில்லை.

https://telegram.me/aedahamlibrary

குலே, பழங்குடியினரின் சடங்கு வகை நடனம். இதில் நான்கு வகைகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஒவ்வொரு வகையும் ஒவ்வொரு பழங்குடியைச் சார்ந்தது.

1. ந்யாவு (இதை குலே வங்குலு என்கிறார்கள் - ஆகப் பெரிய குலே நடனம் என்று பொருள்) - ச்சேவா பழங்குடி

2. மங்காஞ்சே - யாவோ பழங்குடி

3. ட்சோப்பா - லோம்வே பழங்குடி

4. விம்புஸா - தும்புக்கா பழங்குடி

இதில் இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், குலே நடனமிடுபவர்கள் Black magic (பில்லிசூனியம்) தெரிந்தவர்களாகவும் இருப்பதாக மலாவியர்கள் நம்புகிறார்கள். இதில் குறிப்பாக ச்சேவா பழங்குடியினர் தங்கள் கருப்பு மந்திர பழக்க வகையில் மிக ஆபத்தானவர்களாக அறியப்படுகிறார்கள்.

இன்றைய தினத்தின் மலாவிய வாழ்வில், 99 சதவிகித மக்களில் சூனியம் பற்றிய பயம் தன் அதிகாரத்தைச் செலுத்துகிறது. கடவுளுக்கு இங்கு 150 வயதே ஆகியிருக்கிறது. எனவே அதற்கு முன் வரை மூதாதையரின் ஆவிகளை வழிப்பட்டு வந்த மக்கள், இந்தியா போன்ற நாடுகளில் எழும் சூனியம் உண்மையா பொய்யா போன்ற கேள்விகளின் தடையின்றி அதை ஒருவித வாழ்க்கை முறையாகவே நம்புவது இயற்கையான செயலாகவே படுகிறது. கடவுள் சூனியத்திலிருந்து தங்களைக் காக்கக்கூடும் என்ற அளவில் இவர்களுக்குள் நம்பிக்கை விதைக்கலாமே ஒழிய சூனியம் பொய் என்பது போன்ற மூடநம்பிக்கை வாதங்கள் இங்கு செல்லுபடியாகாது. அசலில் அவர்களுடைய பாரம்பரியத்தின் நடைமுறை அப்படியானதாகவே இருக்கிறது.

இந்த இடத்தில் ராபர்ட் எம் ப்ரிஸிக் தவிர்க்க முடியாமல் நினைவுக்கு வருகிறார். அவரது நாவலில் வரும் ஒரு உரையாடலின் சுருக்கம்:

‘டு யு பிலிவ் இன் கோஸ்ட்?’

‘வெல்... வாட் டு யு திங்க் அபவுட் ஃபோர்ஸ் ஆஃப் கிராவிட்டி பிஃபோர் ஐசக் நியூட்டன்?’

மலாவியில் ஒவ்வொரு கிராமத்துக்கும் பிரத்யேகத் தலைவர் உண்டு. அவருக்கு அதீத மதிப்பும், அதிகாரமும் கைகூடி நிற்கும். எந்த வகை வழக்கு என்றாலும், இன்றும் கிராமத் தலைவரின் தீர்ப்பே இறுதியானதாக இருக்கிறது. இந்த அதிகாரத்தைத் தக்க வைக்கவும், மக்களைத் தொடர்ந்து தங்கள் கட்டுக்குள் வைத்திருக்கவும் கிராமத்

https://telegram.me/aedahamlibrary

தலைவர்கள் சூனியம் ஏவல் முதலியவற்றைக் கற்கிறார்கள். அப்படி கற்காவிடிலும் சூனியக்காரர் ஒருவரையாவது கையில் வைத்திருப்பார்கள் என்று தெரிகிறது. நம்மூர் அரசியல் தலைவர்கள் ரவுடிகளையும், குண்டர்களையும் தங்கள் கைக்கூலியாக வைத்திருப்பதைப் போன்ற விஷயம் இது! கிராமத் தலைவரின் வார்த்தையை மக்கள் மீறிச் செல்லாமலிருப்பதற்கு சூனியம் குறித்தான பயமும் ஒரு காரணம்.

குலே ரகசிய சமூகவகையாக (Secret Society)புழக்கத்தில் இருப்பதாகத் தெரிகிறது. இந்த ரகசிய சமூகத்தின் இன்னொரு வகையைப் பற்றிச் சொல்லுதலும் மிக முக்கியமானது. கிறிஸ்தவம் புகுந்த இடத்திலெல்லாம் சாத்தானிஸத்தைப் பின்பற்றும் ரகசிய சமூகமும் இயங்கவே செய்கிறது என்று அறிகிறேன். பைபிளுக்கு இணையானதாக ரகசியமாகப் பின்பற்றப்படும் சாத்தானின் பைபிள் பற்றி நீங்கள் அறிவீர்கள் என்று நினைக்கிறேன். அத்தகைய பைபிளும் மலாவியில் பரவலான புழக்கத்தில் உண்டு. இவர்களது ரகசிய சந்திப்புகளில் மனித ரத்தமெல்லாம் பரிமாறப்பட்டு பருகப்படுவதாக கேள்வி. எதையும் மிகையாக நினைத்து ஒதுக்குவதற்கு இல்லை. இங்கே மர்மமான முறையில் நடந்தேறிய சில கொலைகளைப் பற்றி அலுவலகத்தில் உள்ளவர்கள் அவ்வப்போது சொல்வதைக் கேட்டிருக்கிறேன். ரத்தம் சிதறுண்டு கிடந்த பிரேதங்களைப் பற்றி மிகுந்த தயக்கத்துடன் இவனிடம் சொல்லாமா வேண்டாமா என்று யோசித்தபடியே சொல்வார்கள். நானும் மேம்போக்காக விசாரிப்பது போன்ற கேள்விகளின் வழி கூர்ந்து கவனிப்பேன். சாத்தானின் வழி, அதைச் சுற்றி இயங்கும் ரகசிய சமூகம் ஆகியவை பற்றி ஒவ்வொரு மலாவியரும் அறிந்தவராகவே இருக்கிறார். இங்கு இருக்கும் இந்தியர்களும் பிற நாட்டவர்களும் இது பற்றியெல்லாம் அதிகம் அறிந்தவர்கள் இல்லை. மேலோட்டமான பார்வையில் மலாவியர்கள் சூனியத்திற்கு அஞ்சுகிறார்கள் என்று மட்டும் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அதன் உள்ளூடாக ஒரு சமூக அமைப்பே கட்டமைக்கப்படுகிறது என்ற அளவுக்கு வெளிப்படையாக அறிய வாய்ப்புகள் இல்லை.

குறிப்பாக சாத்தானின் பைபிளைச் சார்ந்த ரகசிய சமூகவழியைத் தேர்ந்தெடுத்தால் வெகு விரைவில் முன்னேறலாம்; பொருளாதார சிக்கல்கள் தீர்ந்து பணம் மற்றும் சகல வசதிகளும் குறைந்த காலத்தில் பெருகும்; அதே சமயம் அது ஆபத்தானது; உள்ளே நுழைந்தால் வெளியேற வழி இல்லை - போன்றவை மலாவியர்களின் நம்பிக்கை.

https://telegram.me/aedahamlibrary

இந்த ரகசிய சமூக அமைப்புக் கூட்டத்தை சார்ந்தவர்களில் பெரும் புள்ளிகளும் அரசியல்வாதிகளும் அடக்கம். எனவே இப்படிப்பட்ட அமைப்புகளின் மூலம் ஏற்படும் தொடர்புகளின் பலத்தில் இதனைச் சார்ந்தவர்களின் வாழ்க்கை முன்னேற்றம் அடைவதும் இயல்பாகவே நடந்தேறுகிறது.

இத்தகைய சமூகம் உலகின் பல்வேறு தேசங்களிலும் செயல்படுவதாகத் தெரிகிறது. இதை மிக நேர்த்தியாக திரைப்படத்தில் பதிவு செய்தவர் என்று ஸ்டான்லி குப்ரிக்கை சொல்லலாம். இவரது Eyes Wide Shut (படத்தின் பெயர் பொருத்தத்தை கவனிக்கவும்!) படத்தில் டாம்க்ரூஸ்-நிக்கோல் கிட்மேன் தம்பதியினரின் நடிப்பில் ரகசிய சமூகத்தினரின் செயல்பாடுகள் பதிவாகி இருக்கிறது. படத்தின் முழுக்கதை கணவன் மனைவிக்கிடையிலான பாலியல் சார்ந்த உளவியல் போராட்டங்கள் வழி பிரதானப்படுத்தப்படுகிறது. தான் பிற ஆடவருடன் இருப்பதாக கனவு கண்டதாக மரிஜுவானா அளித்த போதையின் தூண்டுதல் பெற்ற மனைவி கூறுகிறாள். இதைக் கேட்க சகிக்காமல் கணவனான டாம் க்ரூஸ் இரவு நேரத்தில் வெளியேறி தெருக்களில் மனபாரத்துடன் அலைந்து திரிகிறார். அப்போது அவரது நண்பனான ஒரு பியானோ இசைக் கலைஞனை சந்திக்க நேரிடுகிறது. நண்பன் ரகசிய சமூகத்துக்காக பியானோ வாசிப்பவன். டாம் க்ரூஸுடன் இருக்கும் நேரம் பார்த்து அவனுக்கு ரகசிய சமூக சந்திப்புக்கான அழைப்பு வருகிறது. குறுகுறுப்பு தொற்றி ஏற டாம் க்ரூஸ் நண்பனை கட்டாயப்படுத்தி சந்திப்பு நடக்கப் போகும் இடத்தையும், சந்திப்பிற்கான கடவுச் சொல்லினையும் தெரிந்து கொண்டுவிடுகிறார். அனைவரும் முகமூடி அணிந்து உலாவரும் அந்தச் சந்திப்பில் நடக்கும் சடங்குகள், பாலியல் களியாட்டங்கள் போன்றவை காட்சிப்படுத்தப்படுகின்றன.

இவை அனைத்தையும் டாம் க்ரூஸ் பார்த்துவிட்ட நிலையில் நேரும் விளைவுகள் படத்தில் காண்பிக்கப்படுகிறது. தொடர்ந்து சென்று படம் கணவன் மனைவி உறவினை பரிசீலித்து முடிகிறது. இந்தப் படத்தில் டாம் க்ரூஸுக்கு ஒரு வகையில் நன்றிக் கடன் பட்டுவிட்ட அவரது பணக்கார நண்பர் ஒருவர் ரகசிய சமூகத்தின் உறுப்பினர். அவர் டாம் க்ரூஸை அழைத்து அறிவுறுத்துகையில் 'அங்கே முகமூடிகளுக்குப் பின் இருந்த முகங்களை நான் சொல்லத் துவங்கினால் நீ அதிர்ச்சியில் மூர்ச்சை அடைந்துவிடுவாய்; அவ்வளவு முக்கியமான புள்ளிகள் அவர்கள்' என்கிறார். மனித சமூக அமைப்பின் உள்சிக்கல் மிக்க பரிமாணத்தைக் கண்டு வியக்கிறேன்!

https://telegram.me/aedahamlibrary

அமெரிக்க சமூகத்தில் மட்டுமே இத்தகைய திரைப்படங்கள் சாத்தியமாகும் வாய்ப்பு இருப்பதாகத் தோன்றுகிறது. இத்தகைய பதிவுகளைக் கொண்ட வேறு மொழிப் படங்கள் எதையும் நான் பார்த்ததில்லை.

சில மாதங்களுக்கு முன் மிஸஸ் யாசன் என்பவரை சந்தித்தேன். மியஸ் யாசன் கிட்டத்தட்ட மத போதகரைப் போன்றவர். எனக்கு என்னவோ இவர் மிகச் சாதாரண சராசரி பெண்மணியாகத்தான் தென்பட்டார். ஆனால் கிறிஸ்தவத்தை வழி கொள்ளும் இவரது கிராமத்தினர் இவருக்கு சில விஷே சக்திகள் உள்ளதாக நம்புகிறார்கள். இவரிடம் தங்கள் துயரங்களைச் சொல்கிறார்கள். இவரும் அவற்றுக்கு மாற்று வழிகளைச் சொல்லுகிறார். தன்னைத் தேடி வருபவர்களுக்காக பிராத்தனையில் ஈடுபடுகிறார். மிஸஸ் யாசன் என்னை உற்சாகமாக வரவேற்று ஆர்வமாக பல தகவல்களைப் பகிர்ந்துகொண்டார். அவரின் சொல்படி நிறைய மலாவியர்கள் சாத்தானின் வழியைப் பின்பற்றும் ரகசிய சமூகத்தில் இணைந்து வருகிறார்கள். அத்தகையவர்கள் இவரைச் சந்தித்தால் உடனே அவர்களை இவர் புரிந்துகொண்டு அவர்களுக்கு நல் வழி போதித்து, அவர்களுக்காகப் பிரார்த்தித்து அவர்களை அசலான கிறிஸ்தவத்துக்குத் திரும்பச் செய்கிறார்.

என்னுடைய பள்ளி நாட்களில் எண்டமூரி விரேந்திர நாத் என்ற ஜனரஞ்சக எழுத்தாளரின் கதைப் புத்தகம் ஒன்றில் இத்தகைய ரகசிய சமூகம் ஒன்றினைப் பற்றிப் படித்தது ஞாபகம் வந்தது. அப்போதெல்லாம் அது கதை மட்டுமே என்று நினைத்திருந்தேன். இப்போது என்றால், அது மனிதர்கள் மத்தியில் அதி தீவிரமாக செயல்பட்டு சமூகத்தில் நேடியாக ஆட்சி செய்வது தெளிவாகவே புரிகிறது. மிஸல் யாசனின் சொல்படி பிங்கு வா முத்தாரிக்காவின் அரசியல் போட்டியாளரான பக்கிலி முலூசி கூட சாத்தானைப் பின்பற்றும் ரகசிய சமூகத்தைச் சேர்ந்தவராகவே இருக்கிறார். இதனை மிஸஸ் யாசன் பல மணிநேரப் பேச்சுக்குப் பின்னர் என்னிடம் வெளியே சொல்ல வேண்டாம் என்று சொல்லி அதி ரகசியக் குரலில் கூறினார். இதில் எவ்வளவு சதவிகிதம் உண்மை என்பது ஒருபுறம் இருக்க, முலூசியின் அரசியல் செயல்பாடுகள் எல்லாவித சந்தேகங்களையும் அனுமதிப்பதாகவே இருக்கிறது.

உங்களுக்கு பெரிய கோட்டினை சின்ன கோடாக்கும் அநத்ப் பிரபல குட்டிக் கதை ஞாபகமிருக்கும் என்று நினைக்கிறேன். கதை எழுப்பும் கேள்வி: கோடு ஒன்று இருக்கிறது; அதைத் தொட்டு அழிக்கக் கூடாது. ஆனால் சின்னக் கோடாக்கிக் காட்ட வேண்டும். எப்படி? கதை

https://telegram.me/aedahamlibrary

சொல்லும் விடை: அந்தக் கோட்டின் அருகில் அதைவிட பெரிய கோடு ஒன்றை வரைந்தால் முதல் கோடு சின்னக் கோடாகி விடும்! இப்படியானதே பக்கிலி முலூசிக்கும் பிங்கு வா முத்தாரிக்காவுக்குமான ஒப்புமை. பக்கிலி முலூசியை முன்வைத்துப் பேசினால் அனைத்து வகையிலும் பிங்கு வா முத்£ரிக்கா சிறந்த அரசியல்வாதியாக ஆகிவிடுகிறார். அந்த அளவிற்கு அமைந்திருந்தது பக்கிலியின் ஆட்சி. கமூசு பண்டாவுக்குப் பின் 10 ஆண்டுக்கால முலூசி ஆட்சியில் (1994-2004) மலாவி குவாச்சாவின் மதிப்பில் ஏற்பட்ட சரிவை ஏற்கனவே சொல்லியிருக்கிறேன். சூப்பர் மார்க்கெட்டுக்குள் புகுந்து ஓட்டு சேகரிக்கும் முறையும் பக்கிலி முலூசியுடையதே. எனவே மிஸஸ் யாசன் சொல்லும் விஷயம் உண்மையாக இருக்கும் பட்சத்திலும் அதில் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை என்றே நினைக்கிறேன்.

இத்தகைய ரகசிய சமூகத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுக்குள்ளாகவே பலவித உடன்படிக்கைகளைச் செய்துகொள்பவர்களாக இருக் கிறார்கள். அவர்களது செயல்பாடுகள் யாவும் இருளுக்குள் நடப்பவை. தங்கள் செயல்பாடுகளுக்காக இவர்கள் தேர்ந்தெடுக்கும் இடங்கள் கூட மிக ரகசியமானவை. இவர்கள் பொதுவாக கல்லறைகளுக்கு அருகில் நடுநிசி நேரத்தில் தங்கள் சந்திப்பை அமைத்துக் கொள்வதாகக் கேள்வி. முகமூடியும் அணிந்திருப்பார்கள். உயிருக்கு பயந்த பிற மலாவியர்கள் இத்தகைய சந்திப்புகளின் பக்கம் சென்று பார்க்க மன பலம் பெற்றிருப்பதில்லை. அதிலும் முகமூடியின் காரணமாக முகம் வெளியே தெரிய வாய்ப்பு இல்லை. இதுபோன்ற சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அவர்களாகவும் தங்களுடைய சந்திப்புகள் பற்றி வெளியே தவறிப் போய்கூட ஒரு சொல் சொல்வதில்லை. மிஸஸ் யாசன் போன்றவர்களிடம் மட்டும் தங்கள் வாழ்வை மாற்றி அமைத்துக்கொள்ள முயலும்போது வாயைத் திறக்கிறார்கள். இப்போது நாம் பேசிக்கொண்டிருக்கும் விஷயம் அனைத்தும், பக்கிலி முலூசி உட்பட, இத்தகைய மன மாற்றம் அடைந்தவர்கள் மூலமாக வெளிப்பட்டவையே.

குலேவின் ரகசியம் ஒரு வட்டம். சாத்தானைத் தங்களின் கடவுளாக வரிந்துகொள்பவர்கள் மற்றொரு வட்டம். இந்த இருவகை வட்டங்களிடையேயும் மலாவியைப் பொறுத்த மட்டில் ஒருவித இந்டெர்செஷன் செட் நிகழ்வதாகத் தெரிகிறது. இருவருமே இறை நம்பிக்கையாளர்கள் இல்லை. இதில் சில குலே நடனக்காரர்கள் சாத்தானையும் கூட நம்புபவர்கள் இல்லை. இவர்கள் புரதான குலே வாழ்வு முறையைக் கொண்டிருப்பவர்கள். பிறர் சாத்தானை நம்பிக்கொண்டு குலே நடனமும் புரியும் வகையினர். இவையெல்லாம்

https://telegram.me/aedahamlibrary

வெறும் தகவல்கள் அல்ல; மலாவியைப் பொறுத்தவரை அரசியல் - வணிக - சமூக அமைப்புகளில் பெரும் பங்கு கொண்டிருப்பவை. சென்ற வாரம் கூட திடீரென டிரான்டே என்ற இடத்தில் முகமூடி மற்றும் வித்தியாசமான ஆடைகள் அணிந்த மனிதன் ஒருவன் வீடுகளில் ரகளை செய்து பல பொருட்களை அபகரித்துச் சென்றிருக்கிறான் என்று தெரிகிறது. போலீஸ் எல்லாம் இத்தகைய விஷயங்கள் எதிலும் தலையிட்டுக் கொள்ளவே கொள்ளாது. செய்தித்தாள்களிலும் செய்தி எதுவும் வெளிவராது.

சாரு, மனித நம்பிக்கைகளின் நடைமுறைச் செயல்பாட்டினைக் கண்டால் உள்ளூர திகிலும் ஆச்சரியமும் ஒருசேரப் பரவுகிறது. இவை எல்லாவற்றையும் மலாவியர்களுக்கு எட்டவே வாய்ப்பில்லாத தொலை தேசத்து மொழியாகிய தமிழில் எழுதுகிறேன் என்ற நம்பிக்கையிலேயே தைரியம் கொள்கிறேன். மலாவியில் தெரிந்தால் நாளை என் பிரேதம்கூட சோதனைக்குக் கிடைக்குமா என்பது சந்தேகம். ரகசிய சமூகங்கள் தங்கள் ரகசியத்தைப் பாதுகாப்பதில் அவ்வளவு வீரியமிக்கவர்கள்!

இன்னொன்றை சொல்ல மறந்துவிட்டேன். தற்செயலாகவே இருப்பினும் இதை இந்த இடத்தில் சொல்லலாம் என்று தோன்றுகிறது. ணிஹ்மீs கீவீபீமீ ஷிலீut படத்தை முடித்த பின் ஸ்டான்லி குப்ரிக் படம் வெளியாவதற்கு முன்பே இறந்துவிட்டார். இதுவே அவரது கடைசிப் படம். இதை சற்றே திரித்து ஸ்டான்லி குப்ரிக் ஒன்றும் முதல் ஆள் இல்லை; ரகசிய சமூகத்தைச் சித்தரிக்க முயன்று காணாமல் போன பிரபலங்கள் நிறைய பேர் இருக்கிறார்கள் என்று சில இணையதளங்கள் பட்டியலிட்டுப் பேசுகின்றன.

நான் தொடர்ந்து தோண்டித் துருவி விசாரிப்பது கண்டு மிஸஸ் யாசன், 'பார்த்து ஜாக்கிரதையாக இருங்கள்; இப்படி ஆர்வம் கொள்பவர்களை சாத்தானின் சமூகம் தன்னுள் இழுத்துக் கொள்வதை கண்கூடாகக் காண்கிறேன்' என்றார். நான் எதுவும் சொல்லாமல் சிரித்தபடி விடைபெற்றுக்கொண்டு கிளம்பினேன்.

இதுபோன்ற விஷயங்களை நாம் நம்புகிறோமா இல்லையா என்பது சிறிதும் முக்கியமில்லை. அவை நம் வாழ்வில் நேரடியாக இல்லாவிட்டாலும் மறைமுகமாக நாம் வாழ நேரும் சமூகத்தின் கட்டுமானத்தில் பங்கு வகிப்பது மட்டும் தவிர்க்க முடியாத உண்மையெனப் புரிகிறது.

அன்புடன்,

https://telegram.me/aedahamlibrary

ஆனந்த்.

குறிப்பு: உங்களின் யூகம் தவறு. தொலைபேசியில் அழைத்தவர் திட்டியது வரை சரி. ஆனால் அவர் திட்டியது உங்களை அல்ல; ஓஷோ மற்றும் ஜே.கிருஷ்ணமூர்த்தியை!

22.6.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சொற்களின் வாயால் சொற்களை விழுங்கும் முயற்சி

டியர் சாரு,

சிறு வயதில் என் பெற்றோர் என்னிடம் அடிக்கடி சொல்வார்கள், 'பெரியவர்களிடம் பதிலுக்கு பதில் பேசக் கூடாது'. அதிலும் வீட்டுக்கு சில அசலான பெரிய மனிதர்கள் வரவிருக்கும் நேரத்தில் இந்த அறிவுறுத்தல் சற்று அழுத்தமாகவே செய்யப்படும். நான் ஒன்று கிடக்க ஒன்று பேசி வைப்பேன்; அது பெரியவர்களை அவமதிப்பதாக ஆகிவிடக்கூடும் என்று என் பெற்றோர் நினைத்திருக்கக்கூடும். ஆனால் எனக்கோ இருப்பு கொள்ளாது; அத்தகைய அசலான பெரியவர்களிடமே சென்று 'உங்களிடம் பதிலுக்கு பதில் பேசக் கூடாது என்கிறார்களே; அது ஏன்?' என்று வேறு கேட்டுவிடுவேன். ஜென்மம் அப்படி!

உங்களின் வார்த்தைச் சித்து படித்தேன். பிரமிள் - வண்ணதாசன், ஹஜ்ரத் - உஸ்மான் சித்தர் என்று படித்து முடித்த நொடி தலைப்பே கவிதையாக மாறிப் போனது. வாசகர்களாக மட்டுமல்லாமல், உங்களின் அன்றாட வாழ்வுடன் நேரடித் தொடர்புடைய மனோஜ், சீனிவாசன், அலெக்ஸ் ஆகிய நெருங்கிய நண்பர்கள் உங்கள்மீது வைத்திருக்கும் அன்பும், மரியாதையும் புரிந்தது. அது பிரியத்தின் அடையாளம். தங்கள் மீது அத்தகைய பிரியம் கொண்டவனாகவே நானும் இருப்பதால் அவர்கள் கூறுவதைக் கொண்டாடியே ஆக வேண்டும்; வாதமாக எடுத்துக்கொண்டு பதில் எழுதக் கூடாது என்ற அளவில் புரிதல் கொண்டேன். (ஒரு சிறுவனுக்கு இவ்வளவு புரிவதே பெரிய விஷயம் சாரு!) எனவே, அதை விடுத்து 'வார்த்தைச் சித்து' பற்றிய என் ஆச்சரியங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன்.

விசேஷம் என்னவென்றால் நான் இப்படி அசட்டுத்தனமாக 'ஏன் உங்களிடம் பதிலுக்கு பதில் பேசக் கூடாது என்று சொல்கிறார்கள்?' என்று கேட்டதற்கு பெரியவர்கள் சிலர், 'அதெல்லாம் ச்சும்மா...' உலு உலா... நீ என்ன வேண்டுமோ பேசு' என்று சொல்லியிருக்கிறார்கள். இதில் பெரியவர்களின் பெருந்தன்மை போக சிறுவன் தன் புரிதல்களை

https://telegram.me/aedahamlibrary

மேம்படுத்திக்கொள்ளும் சாத்தியமும் திறந்து கொள்கிறது. பெற்றோர் சொன்னதிலும் தவறு இல்லை, என் ஆர்வத்திலும் குறை இல்லை. பெரியவர்கள் கூறிய பதிலும் சரியானதே என்று அறியும் வயதை அடைந்தபோது வார்த்தைகள் உருவாக்கும் நிலைப்பாட்டின் விசித்திரம் விளங்கத் துவங்கியது. பின்னாளில் அப்படி பதில் சொல்லக்கூடிய பெரியவர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டு, 'பேசுவது பிழையாகி விடுமோ' என்பது போன்ற தயக்கங்களின்றி, தோன்றியவற்றைத் தோன்றியபடியே அவர்களிடம் பகிர்ந்துகொண்டிருக்கிறேன். (தங்களிடமும் நான் எடுத்துக்கொள்ளும் சுதந்திரம் அந்த வகையானது என்றே கருதுகிறேன். அத்தகைய சுதந்திரத்தை அளித்ததற்கு நன்றியுள்ளவனாகிறேன். நான் எழுதியதைப் படித்த நொடியில் தவறாக எதுவும் உங்களுக்குத் தோன்றவில்லை என்பது என் எண்ணத்தை மேலும் உறுதிபடுத்தவே செய்கிறது).

ஒரு வார்த்தையில் எவ்வளவு விஷயங்கள் அடங்கியிருக்கின்றன என்ற வியப்பு இன்னும் தீரவில்லை - என்று எழுதியிருந்தீர்கள். எனக்கும் பிரமிப்பாகத்தான் இருக்கிறது. அதிலும் ஜென் குருமார்களின் வார்த்தைப் பிரயோகத்தில் எனக்கு அலாதியான மோகம் உண்டு. வார்த்தைகளை மிக அழகாக உதிர்த்துவிட்டு பொருளினை நோக்கி நம்மை நகர்த்தி விடுகிறார்கள். ஜென் குருமார் என்றில்லை, ஆன்மீகத் தளமே அப்படியானதாகத்தான் தோன்றுகிறது. உயர்ந்த கவிதையின் சொற்பிரயோகமுமே அப்படியானதான ஆன்மீகத் தளத்திலேயே நிகழ்கிறது.

சொற்கள் என்னவோ காலிப் பாத்திரமாகவே திறந்துதான் கிடக்கின்றன. அவரவர் பயன்கொள்ளும் விதமே அதற்கு தர்க்க சாத்தியங்களை வழங்கி அர்த்தத்தை நோக்கி நகர்த்துகிறது. இது மனித மனதின் தவிர்க்கமுடியாத செயல்பாடாகத் தோன்றுகிறது. சர்வதேச மொழியான ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் மட்டுமே இருக்கின்றன. அவற்றின் கூட்டுமானத்தில் உருவாகும் சொற்றொடர்கள் வழி ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு வகை புரிதல் மற்றும் வாழ்க்கைப் பார்வை கொள்கிறான். ஆக, சொற்கள் வெறும் காலி பாத்திரம்தான். எத்தனை கோடி மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை கோடி மனித மனங்கள் இருக்கும். எத்தனை கோடி மனித மனங்கள் இருக்கின்றனவோ அத்தனை கோடி அர்த்தங்கள் ஒரு சொல்லுக்குப் பிறக்கும்! அத்தனை கோடி அர்த்தங்களும் சொற்றொடர்களாக மாறும் கோர்வை வழி பெருகி கோடான கோடி கருத்துக்கள் பிறக்கும். ஒவ்வொரு கருத்தும் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதற்குத் தனக்குத்

https://telegram.me/aedahamlibrary

தன்மையெனப் படும் பிற கருத்தினை நோக்கிப் பயணம் புறப்படும்! ஆக கோட்பாடுகள், தத்துவங்கள், தர்க்கம், அ-தர்க்கம் என அனைத்தையும் நிகழ்த்திக்கொண்டிருப்பவை காலிப் பாத்திரமான சொற்கள்! இந்த நிலையினைக்கூட ஒரு சொற்பிரயோகமாக சொல்ல முடிகிறதே தவிர, இப்படியாக இயக்கம் கொள்ளும் மனித உலகத்தை முழுமையாக மனதில் உருவகம் கொண்டு சேகரிக்க முடியவில்லை. ஸ்தம்பிக்கிறேன்!

நான் படித்தது பொறியியல். அதில் வரும் சொற்பிரயோகங்கள் பெரும்பாலும் தட்டையானதாக அலுப்பூட்டுவதாகவே இருந்ததால் எனக்குப் பொறியியல் படிப்பில் அவ்வளவு ஆர்வம் கூடவில்லை. இலக்கியமும் இன்னபிற கலைகளுமே வாழ்க்கையுடனான நேரடித் தொடர்புடையதாகத் தோன்றும். எப்படியோ சமாளித்துத் தேர்ச்சி பெற்றேன். ஆனால் கல்லூரிப் படிப்பை முடித்த கையோடு எனக்குப் படிக்கக் கிடைத்த ராபர்ட் எம் பிர்ஸிக், மோட்டார் சைக்கிளின் யூஸர்ஸ் மானுவலும் கூட பல்வேறு சாத்தியங்கள் கூடிய வாசிப்பை வழங்கக் கூடும் என்பதுபோன்ற ஒரு விஷயத்தை அறிமுகப்படுத்தினார். நான் பொறியியல் சார்ந்து தட்டையாகக் கருதிய சொற்பிரயோகங்கள் யாவும் ஒரு அண்டர்லையிங்க் ஃபார்மை குறிக்கின்றன; அண்டர் லையிங்க் ஃபார்மை ஒவ்வொரு மனிதனும் தனக்கே உரிய ஐடியாவாக வளர்த்தெடுக்க முடியும் என்ற ரீதியில் இருந்தது அவரிடம் நான் புரிந்துகொண்டது. அடக் கடவுளே, இந்தப் புஸ்தகத்தை கல்லூரியின் முதலாம் ஆண்டிலேயே படித்திருந்தால் உருப்படியான கவனத்துடன் பொறியியல் படித்திருப்பேனே என்று நினைத்துக்கொண்டேன்.

எனக்கு அந்த நாட்களில் இந்த அண்டர்லயிங் ஃபார்ம் என்ற சொற்பிரயோகமே கவர்ச்சிகரமானதாக இருந்தது. தவிர, சொற்களைப் பற்றிய பிரமிப்பும், எதையும் நினைத்ததை நினைத்தது போலவே மற்றவர்களிடம் சொல்லிவிட முடியாத நிலை பற்றிய வியப்பும், எப்போதும் உள்ளூர ஊறிக்கொண்டே இருக்கும்.

அந்த நாட்களில் கவிதை முயற்சி என்ற பெயரில், கையில் ஒரு காகிதத்தை வைத்துக்கொண்டு சொற்களைக்கொண்டு சொற்களைப் பற்றிய வரிகளாகக் கிறுக்கிக்கொண்டு இருப்பேன். சொற்களின் வாயால் சொற்களை விழுங்க முயலும் முயற்சி போன்றது அது என்ற எண்ணமும் உள்ளோடும். கிட்டத்தட்ட பத்து டஜன் கவிதைகள் இருக்கும் என்று நினைக்கிறேன். எல்லாம் மயிலாடுதுறை வீட்டின் பரணில் கிடக்கின்றன. காலி பாத்திரம் 1, 2 என்றெல்லாம் தலைப்பிட்டு, இருபது வரை எழுதியது நினைவிருக்கிறது. இந்த நொடி சட்டென்று

https://telegram.me/aedahamlibrary

அந்தக் குவியலிலிருந்து நினைவில் எழும் சில வரிகளை சிறுவனின் ஆர்வத்துடன் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

அந்தக் குழந்தையிடம் கேட்கிறேன்

ஆச்சரியம் என்றால் என்ன?

அது ஆச்சரியமாய் சொல்கிறது-

‘தெரிய்யல’

அது கேட்கிறது-

உனக்கு தெரியுமா?

நானும் ஆச்சரியமாய் சொல்கிறேன்

‘சற்று குழப்பமாக இருக்கிறது.’

பிரியமுடன்,

ஆனந்த்

28.6.2009.

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சாத்தானின் தேவதைகள்

அன்புள்ள ஆனந்த்,

நீங்கள் ராஸ லீலா நாவலைப் படித்திருக்கிறீர்களா என்று தெரிந்துகொள்ள ஆர்வமாக இருக்கிறது.

சரி, நேரடியாக விஷயத்துக்கு வருகிறேன். எனக்கு இந்த அன்பு, பாசம், பிரியம் போன்ற எதன் மீதும் நம்பிக்கை கிடையாது. நான் இருதய அறுவை சிகிச்சை செய்துகொண்டு ஆஸ்பத்திரியில் படுத்துக்கிடந்தபோது என் நண்பர்கள் யாருமே வந்து பார்க்கவில்லை. ஒரு சின்ன ஒத்தாசைக்குக்கூட உதவி இல்லாமல் அவந்திகா ஒரு அனாதையைப் போல் என் பக்கத்தில் அமர்ந்திருந்தாள். அவளுக்கு சாப்பாடு வாங்கி வந்து கொடுக்கக்கூட ஆள் இருக்காது. முகம் தெரியாத சில வாசக நண்பர்களும், தோழிகளும் வந்து பார்த்தார்கள். ஆனால் அவர்கள் இப்போது என் வாழ்வில் இல்லை. எப்போதுமே என் உடன் இருந்த, இருந்துகொண்டிருக்கும் நண்பர்கள் அப்போது-அந்த இக்கட்டான நேரத்தில் - என்னைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை. ஆனால் நான் யாரையும் குற்றம் சொல்ல மாட்டேன். அவரவர் பிரச்சினை அவரவருக்கு. ஆனால் அந்தச் சம்பவம் என் மனதில் தீராத காயத்தை ஏற்படுத்திவிட்டது.

அந்த நேரத்தில் என்னைக் காப்பாற்றியவர் பாபா.

இன்னொரு கட்டம். என் மகனுக்கு கல்லூரிக் கட்டணம் செலுத்த வேண்டும். என் தகுதிக்கு மீறி லட்சம் லட்சமாக பெரிய படிப்பில் சேர்த்துவிட்டேன். வங்கிக் கடன் கிடைக்கும் என்ற நம்பிக்கையில். ஒவ்வொரு வங்கியாக நாய் மாதிரி ஏறி இறங்கினேன். யார் யாரிடமோ சிபாரிசு செய்யச் சொன்னேன். எந்த ஜாமீனும் இல்லாமல் கொடுக்கப்படுவதே உயர் கல்விக்கான வங்கிக் கடன். ஆனால் எனக்கு அந்தக் கடன் கிடைக்கவில்லை. கிட்டத்தட்ட கார்த்திக்கின் படிப்பையே நிறுத்திவிட வேண்டிய நிலை. எனக்கு எவ்வளவு பிரபலங்களைத் தெரியும் என்று உங்களுக்குத் தெரியும். யாருமே உதவி செய்ய முன்வரவில்லை. வங்கி மேலாளருக்கு ஒரு போன் செய்தால் போதும். மறுத்துவிட்டார்கள்.

https://telegram.me/aedahamlibrary

அவந்திகா முதல் முதலாக அழுது அப்போதுதான் பார்த்தேன். பாபாவின் படத்தின் முன்னே நின்று அழுதாள்.

அழுத மறுநாள் எனக்கு முகமே தெரியாத ஒரு 18 வயதுப் பையன் வடிவத்தில் வந்து உதவினார் பாபா.

மூன்றாவது கட்டம். மிகச் சமீபத்தில் சோற்றுக்கே வழியில்லாமல் போன போது - ஆறு மாதத்திற்கு முன்பு - ஒவ்வொரு நண்பரிடமும் நேரிலும் போனிலுமாகப் பிச்சை கேட்டேன். "பணமாக வேண்டாம்; ஏனென்றால் எனக்கு மாதாமாதம் பணம் தேவைப்படுகிறது; அதனால் ஒரு விளம்பரம் வாங்கிக் கொடுங்கள்" என்று கேட்டேன். ம்ஹூம். ஒரு உதவிகூடக் கிடைக்கவில்லை. இவ்வளவுக்குப் பிறகும் எப்படி இவ்வளவு திருப்தியாக வாழ்கிறேன் என்றால் சில வாசக நண்பர்கள் தான் காரணம். இவர்கள் என் நண்பர்கள் அல்ல; வாசகர்களாக இருந்து நண்பர்களானவர்கள். இவர்களோடு நான் அன்பினால் அல்ல, என்னுடைய இடைவிடாத - தொடர்ச்சியான - எழுத்தினால் மட்டுமே சிநேகம் கொண்டிருக்கிறேன்.

இந்த வாழ்க்கை அனுபவங்களினால்தான் எனக்கு அன்பு, பாசம், பிரியம் போன்றவற்றின் மீது நம்பிக்கை இல்லை என்றேன்.

இந்தச் சிறிய முன்னுரைக்குப் பிறகு இப்போது உங்கள் கடிதம். அலெக்ஸ் பற்றிக் குறிப்பிட்டுள்ளீர்கள். அலெக்ஸுக்கும் அன்புக்கும் ரொம்ப தூரம் என்று நினைக்கிறேன். அவன் சாத்தானா கடவுளா என்று பல நேரங்களில் எனக்குச் சந்தேகமாகிவிடும். அவன் ஒரு நல்ல பாடகன். அவனே பாடல் புனைந்து பாடுவான். அவனுடைய குரலையும் அந்தப் பாடல் வரிகளினூடே இழையோடும் பிரியத்தையும் கண்டு இவன் கடவுள்தான் என்று பலமுறை ஏமாந்து போயிருக்கிறேன். ஆனால் அவனுடைய தேவதைகளை அவன் நடத்தும் முறையைப் பார்க்கும்போதுதான் அவன் சாத்தான் என்று புரியும். அதனால்தான் உங்களுடைய முந்திய கடிதத்துக்குக் கூட சாத்தானின் பாடல்கள் என்று தலைப்பிட்டேன். சல்மான் ருஷ்டியிடமிருந்து உத்வேகம் பெற்று அல்ல. தினம் தினம் நான் சந்திக்கும் சாத்தானின் பாடல்களைப் பார்த்துத்தான் அப்படி ஒரு தலைப்பை வைத்தேன். ஆனால் உங்களுக்கு அலெக்ஸைப்பிடிக்கும். நீங்கள்தான் சாத்தான் பற்றிய ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறீர்களே? நிச்சயம் பிடிக்கும்.

ஆனால் இந்த தேவதைகளுக்கும் நன்றாக வேண்டும்தான். நான் நினைக்கிறேன். தேவதைகள் எல்லாமே மஸாக்கிஸ்டுகளாகத்தான் இருக்க வேண்டும் என்று. இல்லாவிட்டால் இப்படி இவனிடம் வந்து

https://telegram.me/aedahamlibrary

‘ரோத்தாங்’ அடி வாங்குவார்களா? நம்மூரில் மாரியம்மன் கோவிலில் வரிசையாகக் குப்புறப் படுத்துக் கிடக்கும் பெண்களின் புட்டத்தின் மீது ஆணிகள் வைத்த செருப்பை அணிந்துகொண்டு நடக்கும் பூசாரிகளைப் பார்த்திருக்கிறீர்களா? அந்தப் பூசாரிதான் அலெக்ஸ் என்று எனக்குத் தோன்றும்.

பல சமயங்களில் சாத்தானுக்கும் கடவுளுக்கும் எனக்கு வித்தியாசம் தெரியவில்லை. இந்த உலக நடப்பைப் பார்க்கும்போது இது சாத்தானால்தான் படைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வருகிறதோ என்று எனக்குத் தோன்றுகிறது.

உதாரணமாகப் பாருங்கள்; சில தினங்களுக்கு முன்பு சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பெங்களூரிலிருந்து வந்த ரயிலின் கூட்ஸ் பகுதியில் ஒரு டால்மேஷன் நாய் மூன்று தினங்களாக யாராலும் கவனிக்கப்படாமல் இருளில் கிடந்திருக்கிறது. மூன்று தினங்கள் கழித்துத்தான் அதை ரயில்வே நிர்வாகம் கவனித்திருக்கிறது. பயத்தில் நடுங்கியபடி குடிக்கத் தண்ணீர்கூட இல்லாமல் அந்த இருட்டு அறையில் பரிதவித்துக் கிடந்திருக்கிறது அந்த நாய். மிதமிஞ்சிய பயத்தில் இருந்ததால் யாராவது அருகில் நெருங்கினாலும் குரைக்கிறது. கடைசியில் ப்ளூ க்ராஸ் அமைப்பினர் வந்துதான் காப்பாற்றியிருக்கிறார்கள். இரண்டரை அடி உயரமுள்ள அந்த நாயை பெங்களூரில் யாரோ வளர்த்துவிட்டு, தாங்கள் வேற்று ஊருக்கு மாற்றலாகிச் செல்லும்போது சென்னையில் ஒரு பொய் முகவரியைக் கொடுத்து ரயிலில் புக் செய்து அனுப்பிவிட்டார்கள். எப்படிப்பட்ட கொலைகார மனிதர்கள் பாருங்கள்!

இன்னும் ஒரே ஒரு நாள் அந்த இருட்டில் கிடந்திருந்தாலும் அந்த நாய் இறந்து போயிருக்கும். இப்படித்தான் நாய் வளர்க்கும் பலர் தாங்கள் வேற்றூருக்குப் போகும்போது தாங்கள் வளர்த்த நாயை அப்படியே தெருவில் விட்டுவிட்டுப்போய் விடுகிறார்கள். இதைவிடக் கொலை பாதகமான செயல் வேறு எதுவும் இருக்க முடியாது. இதைவிட அவர்கள் அந்த நாயைக் கொன்று போட்டு விட்டே போய்விடலாம். ஏனென்றால், வீட்டில் வளர்ந்த நாய்களுக்குத் தெருவில் தேங்கிக் கிடக்கும் தண்ணீரைக்கூட குடிக்கத் தெரியாது. இரை தேடத் தெரியாது. எல்லாவற்றையும்விட பயங்கரம், வாகனங்கள் வந்தால் ஒதுங்கத் தெரியாமல் அடிபட்டுச் செத்துவிடும்.

நாய்களின் நிலை இப்படியென்றால், மனிதர்களின் நிலை அதைவிடக் கொடுமை. என் வீட்டுக்கு தினமும் பால் போடுகிறார் ஒரு முதியவர். வயது 70 இருக்கும். இந்தத் தள்ளாத வயதில் பால் பாக்கெட்டுகள்

https://telegram.me/aedahamlibrary

நிரம்பிய அலுமினியக்கூடை ஒன்றைத் தலையிலும், இன்னொரு அலுமினியக் கூடையை இடுப்பிலும் வைத்துத் தூக்க முடியாமல் தூக்கிக்கொண்டு புசு புசு என்று மூச்சு விட்டபடி நடப்பதை தினமும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இந்தியாவில் விளிம்பு நிலை மனிதர்களின் வாழ்வே இப்படித்தான் மிருக வாழ்வை விடக் கேவலமாக இருக்கிறது.

தனிநபர் வாழ்வு இப்படியென்றால், ராணுவத்தாலும் போலீசாலும் கொல்லப்படும் ஆயிரக்கணக்கான மனிதக்கூட்டத்தின் கதை தனி. இலங்கையில் ராஜபக்சேவினால் கொல்லப்பட்ட தமிழர்கள், இந்திய ராணுவத்தால் கொல்லப்படும் காஷ்மீரிகள் என்று ஒரு தனிப்பட்டியலே இருக்கிறது.

இந்த உலகம் சாத்தானால் படைக்கப்பட்டு, சாத்தானின் தூதர்களாலேயே ஆளப்பட்டு வருகிறது என்று நினைக்கிறேன்.

ஆனால் எனக்குத் தனிப்பட்ட முறையில் சாத்தான் என்றால் பயம்; அதனால்தான் உங்களுடைய முந்தைய கடிதத்திற்கு பதில் எழுதவில்லை. தமிழில் மாந்த்ரீகம், பில்லி, சூனியம் பற்றியெல்லாம் என்.டி.ராஜ்குமார் ஓரளவு எழுதியிருக்கிறார். அபாரமாக இருக்கும். முடிந்தால் படித்துப் பாருங்கள்.

சாரு

1.7.2009

https://telegram.me/aedahamlibrary

மூன்று படிமங்கள்

டியர் சாரு,

ராஸ லீலா படித்திருக்கிறேன்.

இந்த வரியை எழுதிவிட்டு சட்டென்று உங்கள் புத்தகங்களின் பட்டியலை ஒரு முறை சரி பார்க்கிறேன். அவற்றில் இரண்டு கட்டுரைத் தொகுப்புகளைத் தவிர பிற அனைத்தையும் புத்தமாக வாங்கி வாசித்திருக்கிறேன். சாதக - பாதக கருத்துக்களும் மூட்டை மூட்¬டாக உண்டு. அவை கிடக்கட்டும். உங்கள் கடிதத்தைப் படித்த நொடி இதை எழுதிவிட வேண்டும் என்று தோன்றியது: உங்கள் எழுத்துகளில் நான் மிக மிகத் தேங்கித் தயங்கி ஆர்வமும் பயமுமாக வாசித்தது பைபாஸ் சர்ஜரி குறித்த இடங்கள். அதற்கு பிரத்யேகக் காரணமும் உண்டு.

ப.சிங்காரம் தன் புயலிலே ஒரு தோணியில் விவரிக்கும் புயலை சமாளிக்க முடியாமல் கவிழ்ந்த தோணிகளுள் எங்கள் பரம்பரையும் ஒன்று. எனது மூதாதையர்கள் எனப்படுபவர்கள், பர்மாவில் வட்டிக் கடை நடத்தி பொருள் இழந்தவர்கள். பெரும் பணம் கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்த காலத்தின் சாட்சிகளாய் இன்று தமிழ்நாட்டில் செட்டிநாடு எனும் பிரதேசத்தில் 100 வயதினைக் கடந்துவிட்ட தெருநீள வீடுகள் மட்டும் நிற்கின்றன. இதில் விஷயம் என்னவென்றால், இவர்கள் ஆடம்பரமாக வாழ்ந்தார்களே அன்றி அதிகம் உழைத்ததாகத் தெரியவில்லை. பர்மாவில் வியாபாரத்தை கவனிக்க ஆள் வைத்து விட்டு இங்கே உல்லாசமாக இருந்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்ற வள்ளல் பரம்பரை எனப் புகழப்பட்ட, தலைமுறை தலைமுறையாக வணிகத்தில் செல்வம் செழித்து வந்த குடும்பத்தில் பிறந்த எனது தந்தை வழிப் பாட்டனார் பொருளாதார நெருக்கடியின் காரணமாக இந்தியன் வங்கியில் குமாஸ்தா வேலைக்குச் சேர்ந்தார்; 47 வயதில் மாரடைப்பின் காரணமாகத் தன் வாழ்வின் முடிவுக்கு வந்து சேர்ந்தார். ஆறு பிள்ளைகள் அடங்கிய நொடித்துப் போன குடும்பத்தின் மூத்த மகன் என்ற முறையில் தன் தந்தையிடமிருந்து சுவீகரித்துக்கொண்ட இந்தியன் வங்கி வேலையை என் தந்தை இன்றும் தொடர்கிறார்.

மேற்சொன்ன பரம்பரை சார்ந்த வார்த்தைகளுக்கும் எனக்கும் அசலில்

https://telegram.me/aedahamlibrary

எந்தத் தொடர்பும் இல்லை. நான் பிறந்த நாள் முதலாய் வளர்ந்தது மயிலாடுதுறையில். நடுத்தர வர்க்கத்துக்கே உரிய பிரத்யேக வளர்ப்பு முறை. உறவினர்களை விட நண்பர்களே அதிகம் ஒட்டுறவாடிய வாழ்க்கை. புத்தகங்களும் சேர்ந்துகொண்டன. நான் என் தந்தையின் தந்தையையும் அவர் தந்தையையும் பார்க்கக் கிடைத்தது புகைப்படமாக மட்டுமே. சிறு வயது முதலாய், விசேஷ வைபவங்களில் மூதாதையர்களின் சிறப்புகள், வள்ளல் தன்மைகள் போன்றவற்றை முன்னிறுத்தி பரம்பரை சார்ந்த சிலாக்கியங்கள் சொல்லப்படும்போது எனக்கு 'போர்' அடிக்கும். மோட்டுவளையில் கூடு கட்டிய பறவை வீடு திரும்பியதா என்று வேடிக்கைப் பார்ப்பேன். செட்டிநாட்டுப் பழக்கவழக்கங்கள், பேச்சு மொழி, குடும்பத் தகவல்கள், பரம்பரை சார்ந்த பராக்கிரமக் கதைகள் போன்றவற்றில் துளியான துளிகூட என்னுள் சேர்ந்ததில்லை. தவிர்க்க முடியாத விசேஷங்களுக்கு வலிந்து அழைத்துச் செல்லப்பட்டபோது அறிந்த ஒருசில தகவல்களே இங்கே நான் பகிர முயல்வது.

ஆக, நான் காணவே கிடைத்திடாத பாட்டனார்களுக்கும் எனக்கும் எந்தவித சம்மந்தமுமில்லை என்றே வெகுநாள் நினைத்திருந்தேன். சற்று விவரம் தெரிந்த பின்புதான் அது தவறு என்று புரிந்தது. அவர்கள் என்னுடன் 'ஜெனடிக்' தொடர்பு கொண்டு நான் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் சில அரிய பொக்கிஷங்களை எனக்காக விட்டுச் சென்றிருக்கிறார்கள் என்று அறிந்தேன். அவற்றில் முதன்மையானவை உயர் ரத்த அழுத்தமும், சர்க்கரை நோயும். அடுத்த 10 வருடங்களில் அவை என் வசம் கட்டாயம் வந்து சேரும் என்கிறார்கள். நான் உடற்பயிற்சிகளை நம்புகிறேன்.

இந்தியா போன்ற தேசத்தின் நெருக்கடி மிகுந்த வாழ்க்கை முறையில் இத்தகைய நோய்கள் சகஜம்தான் என்று புரிகிறது என்றபோதும், செட்டிநாட்டு வாழ்வு வழி உடல் கொண்டவர்கள் இவற்றுக்கு ஆட்படுவது சதவிகிதத்தில் அதிகம் என்று நினைக்கிறேன். காரணம், உணவுப்பழக்கம் மற்றும் பல தலைமுறைகளாக உடல் உழைப்பின்மை. இன்றாவது பைபாஸ் சர்ஜரி போன்ற மருத்துவ வசதிகள் இருக்கின்றன. இவை எதுவும் இல்லாத அந்த நாட்களில் வாழ்ந்த என் முன்னோர்களின் பெயர்களைப் பட்டியலிட்டால் ஆண்களில் 45 வயதைத் தாண்டியவர்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகவே தென்படுகிறார்கள். பெரும்பாலானோர் மாரடைப்பினால் மனைவியை விதவையாக்கி விட்டுப் பாதி வழியில் விடைபெற்றுக்கொண்டிருக்கின்றனர். இதை நான் அறியத் துவங்கியபோது, இளம் விதவைகளாக வாழ்ந்திருந்த சில

https://telegram.me/aedahamlibrary

அப்பத்தாக்கள் சொல்லும் கதைகள் சுவாரஸ்யம் பெறத் துவங்கின.

செட்டிநாட்டுப் பலாகார வகைகளின் ருசி பற்றி நீங்கள் அறிவீர்கள். கந்தரப்பம், வெள்ளைப் பணியாரம், சீடை, முறுக்கில் மட்டும் பல வகைகள் என ருசி கொண்டாடப்படும் பிரதேசம் அது. அதிலும் எண்ணெய் சார்ந்த பட்சணங்களே ஆசையைத் தூண்டுவதாக இருந்திருக்கிறது. இன்றும்கூட இந்த வழி வந்தவர்களில் அதிகம் பேர் நாக்குக்கு அடிமையானவர்கள் எனக் காண்கிறேன். நடுநிசி நேரத்தில் விழிப்பு கொண்ட ஆண்கள் பலரும், அடுக்களையில் சென்று நொறுக்குத் தீனி தேடி பாத்திரம் உருட்டும் சத்தத்தை நான் பலமுறை கேட்டிருக்கிறேன்.

செட்டிநாட்டு வழக்கில் இடைப் பலகாரம் என்றொரு சொல்லும் புழக்கத்தில் உண்டு. காலை உணவுக்கும் மதிய உணவுக்கும் இடையில் ஒரு முறை இந்த இடைப் பலாகார வேளை. பின் மதியத்துக்கும், இரவுக்கும் நடுவே ஒரு முறை சாயங்கால டிபன் தனி. இன்றைய நாட்கள் கொஞ்சம் பரவாயில்லை. அப்போது என்றால் சமையலாள் வைத்துக்கொண்டு சமைப்பதே அப்பத்தாக்களின் முழு நேரத்தையும் எடுத்துக்கொண்டிருக்கிறது. மூதாதையர்களிடையே வெள்ளைப் பணியாரங்களை யார் முதலில் சாப்பிட்டு முடிப்பது போன்ற போட்டியெல்லாம் இருந்திருக்கிறது என்று தெரிகிறது. இருப்புச் சட்டியிலிருந்து எண்ணெய் சொட்ட சொட்ட வெளிவரும் பணியாரத்தின் சூட்டினைத் தணிக்க அவற்றை சுவற்றில் விட்டெரிந்து 'காட்ச்' பிடித்து, ஊதி ஊதி வேகமாகச் சாப்பிடும் கதையை ஒரு அப்பத்தா சொல்லக் கேட்டு அதை மனதில் உருவகித்துப் பார்த்து நினைத்து நினைத்துச் சிரித்திருக்கிறேன். அப்பத்தாக்களும் சும்மா இல்லை. சளைக்காமல் சமைப்பார்கள். பிள்ளை ஒருவேளை இடைப் பலகாரம் வேண்டாமெனக் கூறிவிட்டால் இவர்கள் மனம் ஒடிந்து விழுந்து சுக்குநூறாகிவிடும்.

அரிசியும் எண்ணெயுமாக உட்செலுத்திவிட்டு, உடல் உழைப்பற்று சென்றுகொண்டிருந்த வாழ்க்கை முறை ஜீன்களை பாடாய்ப் படுத்தியிருக்கின்றன. உடல் உழைப்பு என்றால் வேறு ஏதோ என்று நினைத்துவிடாதீர்கள். காப்பி டம்ளரை கூட 'குனிந்து' கீழே வைக்காத சிறப்பு நான் சொல்லும் உடல் உழைப்பு. நீங்கள் எங்கோ ஒரு இடத்தில் 'சிகரெட், குடி போன்றவை மட்டுமே உடலுக்குத் தீமை சேர்ப்பதாக அறியப்படுகின்றன; முந்திரியையும், எண்ணெயையும் என்னவென்று சொல்வது?' என்று பொருள்பட எழுதியிருந்தீர்கள். நான் அதை அப்படியே வரிக்கு வரி வழிமொழிகிறேன்.

இதையெல்லாம் கவனிப்பது முதலில் எனக்கு ஒரு நகைச்சுவை

https://telegram.me/aedahamlibrary

மாதிரிதான் இருந்தது. முதன்முதலாக இதன் தீவிரம் புரிந்தது, தாய் வழி மாமா இறந்த போதுதான். குடும்பத்தின் பொது விதிகளிலிருந்து விலகி ஊர் ஊராகச் சுற்றி அலைந்தவர் மாமா. தன் வாழ்வின் சில நேரங்களில் பணத்தில் சிறந்தும், பல நேரங்களில் சிறுத்தும் வாழ்ந்திருக்கிறார். 49வது வயதில் என்று நினைக்கிறேன்; நிலைமை வெகுவாக முற்றிய பின் பைபாஸ் செய்துகொண்டிருந்தார். நான் அவரை என் வாழ்க்கையில் ஒரு ஐந்து முறை சந்தித்திருப்பேன் என்று நினைக்கிறேன். பேச்சில் வசீகரமானவராகவே என்னுள் பதிந்திருந்தார். கல்லூரி முடித்திருந்த நான் சென்னையில் உயர் கல்விக்கான ஏதோ ஒரு நுழைவுத்தேர்வினை எழுதி முடித்துவிட்டு ஆறாவது முறையாக அவரைச் சந்திக்க மருத்துவமனைக்குச் சென்றேன்.

மாமா, வீட்டின் ஒரே ஆண் பிள்ளை. கூடப் பிறந்தவர்கள் ஐந்து சகோதரிகள். என் அம்மா அதில் நான்காவது. பைபாஸ் செய்து முடித்த அடுத்த நாள் தன் ஐந்து சகோதரிகளையும் ஒன்றாகப் பார்த்த சந்தோஷத்தில் இருந்திருக்கிறார். சிரித்து பேசிக் கொண்டிருந்திருக்கிறார்கள். ஏதோ சாப்பிட்டபோது புரை ஏறுவது போல் தெரிந்திருக்கிறது. நான் சென்றபோது ஐ.சி.யூ.வுக்குள் நுழைந்து கொண்டிருந்தார். அங்கிருந்தவர்களுக்கு சர்ஜன் வந்தாச்சு, ஒன்னும் சிக்கல் இல்லையென்று தகவல் சொல்லப்பட்டது. அவர்களுக்கு உள்ளபடி பதட்டம் எதுவும் உள் செல்லவில்லை. ஏதோ மற்றொரு சிகிச்சை என்று நினைத்திருந்தார்கள்.

சில நிமிடங்கள் கழித்து நானும் இன்னொரு உறவினரும் சர்ஜனை ஐ.சி.யூ.வுக்கு வெளியில் ஒரு தனியான அறையில் சந்தித்தோம். சர்ஜன், 'ரெஸ்பான்ஸ் இல்லை, பம்ப் பண்ணி பார்த்திட்டோம்' எனத் துவங்கி ஏதேதோ மருத்துவம் சார்ந்த தொழில்நுட்பப் பெயர்களாக உதிர்த்தார். நான் அவரிடம் ஆங்கிலத்தில் 'ட்டு கட் இட் ஷார்ட் வாட் டு யூ ஸஜெஸ்ட்?' என்று கேட்டேன். 'ஒரு இயந்திரத்த வைத்து ரத்தத்தை தொடர் ஓட்டமாக்கி இதயத்தை ஒரு மணிநேரம் வரை செயற்கையாக இயங்க வைக்கலாம்; அந்தத் துடிப்பில் செயல்பெற்று அது மீண்டும் இயங்கத் துவகினால் சரி; முயற்சிதான், உறுதியாகச் சொல்ல முடியாது; 80,000 ரூபாய் செலவாகும். யாராவது தொகைக்குப் பொறுப்பேற்று கையெழுத்துப் போட வேண்டும்' என்று கூறினார். ஆண்களிடம் மட்டும் செய்தி சொல்லப்பட்டு செலவைப் பகிர்ந்துகொள்வது என்று முடிவெடுக்கப்பட்டது. உறவினர் ஒருவர் கையெழுத்திட்டார்.

எனக்குக் குழப்பமாக இருந்தது. செயற்கைக் கருவி வழி இதயம் தற்காலிகமாக இயங்கிக் கிடக்க, இந்த நிலைக்கு இறப்பு என்று பெயரா,

https://telegram.me/aedahamlibrary

அல்லது உயிர் இன்னும் இருக்கிறது என்று கொள்ள வேண்டுமா என்று புரியவில்லை. பின் ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் அதே தனி அறையில் வைத்து இறப்பின் விஷயத்தை மிக வருத்தத்துடன் விளக்கிச் சொல்லி கைவிரித்தார் மருத்துவர். வரிகளுக்கு நடுவில் கவனித்ததில், அவர்கள் தரப்பில் ஏதோ ஒரு பிழை நடந்திருக்கிறது; அதனால் முதல் நாள் செய்த சர்ஜரி தோல்வி அடைந்துவிட்டது என்று எனக்கு உள்ளுணர்வாகப் பட்டது.

ஆனால் எதுவும் யாரிடமும் சொல்லிக்கொள்ளவில்லை. மருத்துவர்களும் மனிதர்கள்தானே; முயலத்தானே முடியும் என்று தோன்றிவிட்டது.

மாமா இறந்ததற்குக் காரணம், அவரது உடலின் அதீத சர்க்கரை அளவு போன்றவை என மருத்துவத் தரப்பில் காரணமாகச் சொல்லப்பட்டது. நெடுநாள் கழித்து சர்ஜரிக்கு முதல் நாள் மாமா டாக்டர்கள் தடை விதித்திருந்த இனிப்பினை கொஞ்சமான அளவில் சாப்பிட்டிருக்கிறார் என்றும் தெரிந்தது. அதுவும்கூட சேர்ந்து எமனாக ஆகியதோ என்னவோ என்று நினைத்துக்கொண்டேன். உயிர் என்பது இவ்வளவுதான் என்று மனம் ஏற்க மறுத்தது.

சகோதரிகளில் மூத்தவரான பெரியம்மாவை ஏதோ சாக்கு சொல்லி வெளியே அழைத்துச்சென்று விவரத்தைக் கூறினேன். மெயின்ரோட்டின் நடைமேடையில் என் கையை அழுந்தப் பற்றியபடி அப்படியே உட்கார்ந்துவிட்டார். அவரது உதடுகள் தனக்குள்ளாக ‘செத்துட்டான், செத்துட்டான்’ என்று சொல்லிக்கொண்டிருந் தன. அரை மணிநேரம் சென்று ஆஸ்பத்திரி திரும்பியபோது பெண்களுக்குப் பிறர் வழி விஷயம் தெரிந்துவிட்டிருந்தது. அழுதுகொண்டிருந்தனர். இரண்டு மணி நேரத்திற்கு முன் தங்களைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்த ஒருவர் இறந்து விட்டதை எப்படி இவர்களால் உள் வாங்கிக்கொள்ளவும், உணர்ந்து அழவும் முடிகிறது என்று நினைத்தேன். எனக்கு என்றால் மாமாவின் இறப்பு திகைப்பாக குழப்பத்துடன் உள்ளே செல்லாத பண்டமாகவே நின்றுவிட்டது.

இதற்கு அடுத்த சில வருடங்களில் நான் மலாவி வந்துவிட்டேன். மலாவி வந்து ஒரு ஆறு மாதம் இருக்கும் என்று நினைக்கிறேன், கைபேசிக்கு ஒரு அழைப்பு வந்தது.

அங்கே இந்தியாவில் அம்மாவுக்கு நெஞ்சு வலி. சென்னையில் ஆஞ்சியோகிராம் எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அனேகமாக ஆஞ்சியோப்ளாஸ்ட் செய்ய வேண்டி இருக்கும் என்றார்கள். நான் என்

https://telegram.me/aedahamlibrary

பெற்றோருக்கு ஒரே பிள்ளை. சகோதர சகோதரிகள் கிடையாது. அம்மா, தகவலை எனக்குத் தெரிவிக்க வேண்டாம்; பதட்டமடைந்து விடுவேன் என்று கூறி இருக்கிறாள். தொலைபேசியில் பேசிய உறவினர், எனக்குத் தெரிந்தாக வேண்டும் என்று தோன்றியதால் என் மனோதிடத்தின் மீது நம்பிக்கை வைத்து தகவலை கூறுவதாகக் கூறினார். இதெல்லாம் இன்று மிகச் சிறிய விஷயம், வாழ்க்கையின் பகுதி; பதட்டமடையத் தேவையில்லை என்று கூறினார். எல்லாம் சரியாக நடந்து முடித்தவுடன் தானே தகவல் தெரிவிப்பதாகவும், அப்போது நான் அம்மாவுடன் பேசினால் போதுமானது, இப்போது பேசி குழப்பத்தை அதிகரிக்க வேண்டாம் என்றும் கூறினார். எனக்கு அவர் கூறுவது சரியாகவே பட்டது. என் குரல் கேட்டால் இன்னும் சற்று உணர்ச்சிவசப்பட்டுவிடக் கூடும்; அது நல்லதல்ல என்று பட்டது. தந்தையிடம் பேசலாமா என்று நினைத்தேன். பிறகு மனது மாறியவனாய் சென்னையிலிருந்த நண்பன் ஒருவனுக்கு ஃபோன் செய்து ஹாஸ்பிட்டல் பெயர் சொல்லி, அனைத்து விவரங்களையும் சேகரித்துச் சொல்லுமாறு கேட்டுக்கொண்டேன். பால்ய சினேகிதன். தன் எல்லா வேலைகளையும் அப்படியே போட்டுவிட்டு ஓடினான். ஒருமணி நேரத்தில் முழு விவரமும் தெரிய வந்தது. ஒன்றும் பெரிய சிக்கல் இல்லை; அதே சமயம் இது ஒரு சிறிய விஷயமும் இல்லை என்ற ரீதியில் இருந்தது அவன் சொன்னது.

பண ஏற்பாடுகள் எல்லாம் இருக்குமே; அப்பா என்ன செய்கிறாரோ என்று கவலை வந்தது. தந்தைக்கு முயன்றேன்; இணைப்பு கிடைக்கவில்லை. கிடைத்தபோது எல்லாவற்றையும் தான் ஏற்பாடு செய்துவிட்டதாகக் கூறினார். பெற்றோர்கள் எப்போதும் பெற்றோர்களாகவே இருக்கிறார்கள். ஏனோ துன்பங்களைப் பகிர்ந்துகொள்வதை விட எந்த நிலையிலும் பிள்ளைகளுக்குத் திடம் சொல்வதையே தங்கள் வாழ்வாகக் கொள்கிறார்கள். நீ ஒரு விஷயத்திற்கும் கவலைப்படாதே; எல்லாவற்றையும் நான் பார்த்துக்கொள்கிறேன் என்று வலுவான குரலுடனே தந்தை கூறினார். கிடைத்த இணைப்பு சரியாக பேசுவதற்குள் துண்டுபட்டுப்போனது.

மலாவியின் தொலைபேசி இணைப்பு எப்படி என்றால், எப்போது நாம் எவருடன் எவ்வளவு பேசவேண்டும் என்பதை அதுதான் தீர்மானிக்கும். நம் கையில் ஒன்றுமில்லை. இங்கு - செல்டெல், டெல் காம் ஆகிய இரு தனியார் நிறுவனங்கள் கைப் பேசி இணைப்புகளை ஆள்கின்றன. கிரவுன்ட் லைன் என்றால் எம்டியெல் என்று ஆரம்பத்தில் அரசு சார்ந்திருந்தது; தனியார் மயமாக்கப்பட்ட நிறுவனம். சேவையைப் பொறுத்தவரை எல்லாம் ஒன்றுதான். இங்கே ஒரு கைபேசியிலிருந்து

https://telegram.me/aedahamlibrary

மற்றொரு கைபேசிக்கு லோக்கல் கால் முறையில் அழைப்பதற்கே ஒரு நிமிடத்திற்கு இந்தியக் கணக்கில் இருபது ரூபாய் ஆகும். சர்வதேசத் தொடர்பு என்றால் பத்து மடங்கு அதிகம். இதில் அந்தக் காலத்து ஐ.எஸ்.டி. போல ஒருவர் பேசியது மற்றொருவருக்குக் கேட்க சில நொடிகள் பிடிக்கும். (இப்போது ஒரு வருடமாக சற்று பரவாயில்லை). அதற்குள் மற்றவர் வேறொன்று பேசி குழப்பமாகும். தொடர்பு எந்த நேரம் துண்டிக்கப்படும் என்பது கடவுள் மட்டும் அறிந்தது.

தொலைபேசி சார்ந்த அத்தனை குழப்பங்களையும் நேரடியாக அனுபவம் கொண்டேன். தொலைபேசி இணைப்பு அறுபட்டபோதெல்லாம், இந்தியா கிளம்பிச் சென்றுவிடலாம் என்றுதான் தோன்றும். நிறுவனத்தில் அனுமதியளிக்க வழியே இல்லை. இதில் முதலாளி முடிவு செய்ய ஒன்றுமேயில்லை. நமக்கே நாம் சென்றால் இங்கு கந்தவர்கோளம் என்று புரியும். (இங்கிருக்கும் இந்தியர்கள் பார்க்கும் வேலைக்கு சப்ஸிடிட்யூட்ஸ் கிடையாது.) பிற நிறுவனங்களுக்கு என் நிறுவனம் பரவாயில்லை. வருடம் ஒரு முறை ஜனவரி மாதத்தில் விடுமுறை மற்றும் பயணச்சீட்டு. இதுவே மற்ற நிறுவனங்கள் என்றால் இரண்டாண்டுக்கு ஒருமுறைதான் விடுமுறை சார்ந்த பேச்சையே எடுக்க முடியும். அதிலும் இரட்டிப்பாக இரண்டுமாத சம்பளம் தருகிறேன்; போகாமல் இருந்துவிடேன் என்று நிறுவனம் பேரம் பேசும். நிர்வாகச் சூழல் அப்படி.

எனக்கு எல்லாம் கேனத்தனமாகப்பட்டது. பேசாமல் ஒரேயடியாக ராஜினாமா செய்துவிட்டுப் போய்விடலாம் என்று தோன்றியது. போய்தான் என்ன செய்வதாம் என்ற கேள்வியும் கூடவே எழுந்தது. ஏதாவது புரியாத வார்த்தை பேசி பையன் ஒரேயடியாக வாழ்வை குப்பைத்தொட்டிக்குள் போட்டு விடுவானோ என்று என் அம்மா கவலைப்படக்கூடிய அத்தனை அறிகுறிகளையும் நான் கல்லூரி முடித்த நாள்முதலாய் அவளுக்கு அளித்திருந்தேன். ஏதோ ஒரு வேலையில் செட்டிலாகி விட்டான் என்ற நினைப்பிலேயே மலாவி வந்ததிலிருந்து அவள் ஆசுவாசம் கொண்டிருந்தாள். அது சரி, கொண்டிருந்தாளா என்ன? ஒரே பையன் மலாவி சென்று விட்ட ஏக்கத்தில்தான் அவளுக்கு இந்த இதயம் சார்ந்த பிரச்சினையே வந்திருக்கக்கூடும். பெற்றோர்களின் சிந்தனை எந்த நேரத்தில் எப்படிச் செல்லும் என்று அவர்களே அறிவதில்லை!

அம்மா எந்தவகையிலும் அரை சதவிகிதம்கூட இதய நோய்க்குப் பொருத்தமான ஆள் கிடையாது. ஒல்லியான தேகம். எடை என்றால் ஒரு 50 கிலோவோ அதற்குக் குறைவாகவோ இருப்பாள். முட்டை

https://telegram.me/aedahamlibrary

கலந்திருக்கும் என்று கேக் கூட சாப்பிடாத சுத்த சைவம். மூக்கைப் பொத்திக்கொண்டுதான் எனக்கும் என் தந்தைக்கும் சமைப்பாள். ருசியைத் தக்கவைக்கும் பக்குவம் மட்டும் பயிற்சியின் பேரில் அபாரமாகவே சேர்ந்துவிட்டிருந்தது. சமையலுக்கு வாங்கி வந்த மீனின் கண்கள் ஏதோ செய்கின்றன என்பாள். எனவே மீன் வாங்கினால் கண்களை நீக்கிவிட்டுத்தான் அவள் கண்களில் காண்பிப்போம். அதிலும் ரத்தத்தை கண்டால் நெஞ்சு பொறுக்காது. உறவுச் சிக்கல்களிலும் கண்ணியம் காக்கும் ரகம். சண்டை பிடித்து குரோதம் கொண்டு யோசனை மீட்டுவதில்லை. சுறுசுறுப்பும் அளவுக்கு அதிகம். எந்த நேரமும் வேலை செய்தபடியே பொழுதுகள் நகரும். தொலைக்காட்சி முன் அமரக்கூட நேரம் இருந்ததில்லை. ஒரே ஒருமுறை நோய் கொண்டு படுத்து காணக் கிடைத்ததில்லை. மூன்று பேர் கொண்ட எங்கள் குடும்பத்தை அவள் தனியாகவே நிர்வகித்தாள். நானும் என் தந்தையும் ஒத்தாசை என்ற பெயரின் அர்த்தம் தெரியாதவர்கள். காபி டம்ளரை குனிந்து வைக்காத உதாரணத்திற்கு கனக்கச்சிதமாக பொருந்துபவர்கள். பரம்பரை ஜீன் வழி பார்த்தாலும் ஆண்களுக்கு மட்டுமே அது பொது. பெண்களில் அனேகமாக இதய நோய் கொண்டவள் அவள் மட்டுமே என்று நினைக்கிறேன். 75 வயதைத் தாண்டிய திடகாத்திரமான அப்பத்தாக்கள் அதற்கு சாட்சி. பின் என்னதான் காரணம்? மருத்துவர்கள் ஏதோ பிறவியிலேயே அவளது நரம்பு ஒன்று வழக்கத்தை விட சிறுத்து இருந்தாகக் காரணம் கண்டுபிடித்தார்கள். அதுவாக இருக்கலாம் என்பது அவர்கள் அனுமானம், தீர்மானமாகச் சொல்லவில்லை.

‘ஸ்டென்ட் வைப்பது’ அது இது என புதிது புதிதான பிரச்சனை தொலைபேசி வழி கேட்டது. அறுவை சிகிச்சை செய்வதற்காகத் தொடையிலிருந்த நரம்பு ஒன்றைத் திறந்தார்களாம். எல்லாம் இனிதாக முடிந்த பின் திறந்ததை மூட நினைக்கையில் ரத்தம் நிற்காமல் தொடர்ந்து வெளியேற பெரும் பிரச்சனை வந்து சேர்ந்ததாம். தொலைபேசிச் சிக்கலில் ஒன்றும் தெளிவாகப் புரியவில்லை. பேசியது துண்டு துண்டாகக் கேட்டது. ரிப்ளக்ஸிவ் ஆக குரலை உயர்த்திப் பேச முயன்றேன். அதற்குள் அந்த முனையிலிருந்தவர்கள், ‘அழுகிறான் போலருக்கு, அழாத... எல்லாம் இப்ப சரியாகிவிட்டது. நாங்கள் இருக்கிறோம்’ என்று ஆறுதல் சொன்னார்கள். ‘நான் அழவில்லை; தொலைபேசி சரியில்லை; விஷயத்தை ஒழுங்காகச் சொல்லுங்கள்’ என்று மேலும் அதிக குரல் எடுத்து நான் கத்தியபோது தொலைபேசி இணைப்பு மீண்டும் ஒருமுறை அறுபட்டது.

https://telegram.me/aedahamlibrary

ஆனால் எந்த ஒரு நிமிடமும் அம்மாவின் நிலை குறித்து அதீத பயம், மூழ்கடிக்கும் கவலை என எதுவும் ஏற்படவில்லை. உள்ளூர மிக உறுதியாக அவளுக்கு எதுவும் ஆகாது என்று அறிந்திருந்தேன். காரணமாக ஒன்றே ஒன்றுதான் திரும்பத் திரும்ப தோன்றிக் கொண்டிருந்தது; அவள் எந்தவகையிலும் இருதய நோய்க்குப் பொறுத்தமானவள் அல்ல!

வலி இருக்குமோ, பக்கத்தில் இருந்திருந்தால் தெம்பாக இருந்திருப்பாளோ என்பது போன்ற எண்ணம் மட்டுமே எனக்கு ஏற்பட்டிருந்தது. சரியாகச் சொல்வதாக இருந்தால் எனக்கு துக்கத்தை விட எல்லாவற்றையும் பார்த்து எரிச்சல்தான் மிகுந்தது. ஒரு துரும்பைக்கூட இந்த உலகில் அசைத்துவிட முடியாது; எல்லாம் அது பாட்டுக்கு நடக்கும்; நாம் வேடிக்கை மட்டும் பார்க்கலாம்; அது நமக்காக என்றாலும் சரி, பிறருக்கு என்றாலும் சரி என்ற இயலாமை கலந்த எண்ணம் ஏற்படுத்திய எரிச்சல் அது.

நிலைமை சீரான பின், இரண்டு நாள் கழித்துப் பேசினேன். பயப்பட வேண்டாம் என்று எனக்கு ஆறுதல் சொல்வதிலேயே வார்த்தைகளைப் பயன்படுத்தினாள். எனக்கு பயம் எல்லாம் ஒன்றுமில்லை; மருத்துவரின் ஆலோசனைபடி சரியாக எல்லாவற்றையும் செய்துகொள்ளவும்; இம்மியளவும் இந்த நாட்களில் இதுபோன்ற விஷயங்கள் அபாயகரமானவை அல்ல என்று ஏதோ தோன்றிய நோக்கில் பேசினேன். என் பேச்சு, தொலைபேசி இணைப்புகளின் சாகசத்தில் எதிரொலித்து எனக்கே அபத்தமாகத் திரும்பக் கேட்டது.

நான்கு மாதங்கள் சென்று அந்த ஜனவரியில் பார்க்கக் கிடைத்த அம்மா முன்னை விட இளைத்துக் காணப்பட்டாள். யோகா செய்வதாகக் கூறினாள். எடையற்று இருப்பது ஆரோக்கியமானதாகவே இருக்கிறது என்றான். ஓரளவு உடல் சார்ந்த பிரச்சினைகள் சீர்பட்டுவிட்டதாகக் கூறினாள். கிரைண்டர் கல்லைத் தூக்கி வைப்பதற்கு மட்டும் ஒத்தாசை தேவைப்படுகிறது என்றாள். வெகுவாக அளந்து பார்த்துவிட்டு பட்ட அவஸ்தைகளில் சிலவற்றை மட்டும் கூறினாள். மருத்துவர்கள் அவளுக்குச் செய்த ஆஞ்சியோப்ளாஸ்ட்டை ஒரு குறுந்தகடாக்கிக் கொடுத்திருந்தனர். அதைப் பார்த்துவிட வேண்டும் என்று மலாவியிலிருக்கும் வரை நினைத்துக்கொண்டிருந்த எனக்கு இந்தியா சென்று அம்மாவை நேரில் சந்தித்த பின், அந்தக் குறுந்தகடைப் பார்க்கத் தோன்றவில்லை. புத்தகங்கள் வாங்குதல், உலகத் திரைப்படங்களை சேகரித்தல், நண்பர்களை சந்தித்தல், இலக்கியம் பேசுதல் என ஒரு வருடம் சேர்த்து வைத்திருந்த அனைத்தையும் ஒரு மாதத்தில் செய்ய

https://telegram.me/aedahamlibrary

முயன்றேன். (ஒரு மாதம் என்றும் அதை முழுமையாகச் சொல்லிவிட முடியாது; பயண நாட்களைக் கழித்துவிட்டுப் பார்த்தால் 25 நாட்கள் எனலாம்.) வீட்டில் முழுசாகத் தங்கியது என்று பார்த்தால் ஒரு ஐந்து நாட்கள் இருக்கும் என்று நினைக்கிறேன். மீண்டும் மலாவி நோக்கிப் பறக்கவிருந்த விமானத்தில் அமர்ந்து சீட் பெல்டினை இறுக்கியபோது, அம்மாவுடன் இன்னும் கொஞ்சம் நேரம் செலவழித்திருக்கலாம் என்றும், அந்த சி.டி.யைப் பார்த்திருக்கலாம் என்றும் தோன்றியது.

இவை எல்லாம் நடந்து கிட்டத்தட்ட ஒரு வருடம் சென்றிருக்கும் என்று நினைக்கிறேன். உங்களுடைய பைபாஸ் சர்ஜரி பக்கங்களை வாசிக்க நேர்ந்தது. அதைப் பற்றி சொல்லத் துவங்கினால் மீண்டும் அதே வரி; உங்கள் எழுத்துக்களில் நான் மிக மிகத் தேங்கித் தயங்கி ஆர்வமும் பயமுமாக வாசித்தது பைபாஸ் சர்ஜரி குறித்த இடங்கள்.

உங்களின் அந்தப் பக்கங்களைப் படித்தபோது எனக்கு இன்னொரு விஷயம் புரிந்தது. அதுவரை நான் இதுபோன்ற விஷயங்களில் வெளியில் நின்று பார்த்தவனாக மட்டுமே இருந்திருக்கிறேன். எழுத்துக்களோ வார்த்தைகள் வழி வாசிப்பவனின் உள்ளே ஊடுருவிச் சென்று அந்த நிலையை முழுமையாக அனுபவம் கொள்ளச் செய்து விடுகிறது! எழுத்தாளர் அடைந்த ஒவ்வொரு மனச் சலனமும் வாசிப்பவனின் சலனமாகி அனுபவம் கூடு விட்டுக் கூடு பாய்ந்து விடுகிறது.

அந்த பத்திகளை நான் படித்த முறை சற்றே வித்யாசமானது. நான்கு வரிகளை வாசிப்பேன்; பின் மூடி விடுவேன். மனம் எங்கெங்கோ சென்று அலையும். பின் மீண்டும் சில நிமிடங்கள் சென்று அடுத்த சில வரிகள். அரை மணிநேரத்துக்கு சில வரிகள் மட்டும். அதற்கு நேர்மாறாக அடுத்த 10 நிமிடங்களில் வாசிப்பு அதி வேகம் கொள்ளும். பின், மனம் நின்று நிதானமடையும். மீண்டும் ஒருமுறை பழைய இடத்திலிருந்து துவங்கி மனம் அசை போடும். இப்படியாகவே உங்களின் அந்தப் பக்கங்களை என்னால் வாசிக்க முடிந்தது. உங்கள் படைப்புகளில் உங்களுக்கு மிக அருகில் என்னை நான் உணர்ந்த இடங்களும் அவையே. எனக்கு ஒரு சர்ஜரி செய்யப்பட்டு விட்டதாகவே உணர்ந்தேன்.

இதுபோன்ற அனுபவம் எனக்கு ஃபிலடெல்ஃபியா என்ற படத்தைப் பார்த்தபோது நிகழ்ந்ததும் ஞாபகம் இருக்கிறது. அந்தப் படத்தை நீங்கள் நிச்சயம் பார்த்திருப்பீர்கள். டாம் ஹாங்க்ஸ், டென்ஸெல் வாஷிங்க்டன் ஆகிய இருவரின் நடிப்புத் திறனை மிகச் சிறப்பாகப் பயன்படுத்திக் கொண்ட படம். கல்லூரி முடித்த நாட்களில் தொலைக்காட்சியில்

https://telegram.me/aedahamlibrary

பார்த்தது. படத்தின் ஆரம்பத்தில் டாம் ஹாங்க்ஸ் எய்ட்ஸ் நோயாளியாக அறியப்படுவார். கார்ப்பரேட் வக்கீலாகப் பணிபுரிந்து நற்பெயரும் உயர்வும் கொண்ட நிலையில் எய்ட்ஸ் என்று அறிந்து நிர்வாகம் அவரை வெத்துக் காரணம் சொல்லி வேலை நீக்கம் செய்துவிடும். அவர் நிறுவனத்துக்கு எதிராக வழக்கு தொடர்கிறார். டென்ஸல் வாஷிங்டன் பலவித தயக்கத்துக்குப் பின் தெளிவு பெற்று டாம் ஹாங்க்ஸின் வக்கீலாக ஆஜராகிறார். படத்தின் நகர்வுடன் எய்ட்ஸ் சார்ந்த டாம் ஹாங்ஸின் உடல் மாற்றங்களும் நுணுக்கமாகப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தைப் பார்த்தபோது, பத்து விரல்களாலும் முகத்தை மூடிக்கொண்டு விரல்களின் பிளவு வழி மட்டுமே பல காட்சிகளைப் பார்த்த விதம் நினைவுக்கு வருகிறது.

அனுபவத்தைப் பொறுத்தவரை அது காட்சி வடிவில், இது எழுத்து வடிவில். அவ்வளவே வித்யாசம். வழக்கமாக பிரதியின் மீது வாதப் பிரதிவாதங்களை செலுத்தியபடியே இருக்கும் மனம், இதுபோன்ற இடங்களில் ஸ்தம்பித்துவிடுகிறது. இதுபோன்ற விஷயங்கள் என்னுள் புதைந்து கிடக்கும் மானுடத் தனிமை குறித்த அச்சங்களையும் இன்னபிற வார்த்தைப்படுத்த முடியாத உணர்வுகளையும் தூண்டிவிட்டு இழுக்கின்றன.

உங்களின் சாத்தானின் தேவதைகள் படித்தவுடன் மேற்சொன்ன அனைத்து விஷயங்களும் ஒரு நொடியின் பொழுதில் உள்ளுக்குள் விரிந்தன. கூடவே மூன்று படிமங்கள் காட்சிக் கோர்வையாக மனதில் தோன்றின. அவற்றைப் பகுத்தறிந்து வார்த்தைப்படுத்த முயலாமல் அப்படியே எழுதுகிறேன்.

ஒன்று: லாஸ்ட் டாங்கோ இன் பாரிஸ் படத்தின் துவக்கக் காட்சி. ரயில் ஒன்று சத்தமிட்டபடி பாலமொன்றில் சென்றுகொண்டிருக்கிறது. பாலத்தின் கீழ் நின்றிருக்கும் மர்லான் பிரான்டோ அந்த சத்தத்தைத் தாங்க முடியாதவராக காதுகளை அடைத்துக்கொண்டு, தொண்டை கிழியக் கத்துகிறார்.

இரண்டு: ஃபிலடெல்ஃபியா நீதிமன்றம். ‘வெல், லெட் அஸ் ஸீ வாட் வி ஆர் டாக்கிங்க் அபுவுட்’- டென்ஸல் வாஷிங்க்டன் கூற, டாம் ஹாங்கஸ் தன் உடலில் எய்ட்ஸ் ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தை சபையினருக்குக் காட்டும் பொருட்டு சட்டைப் பித்தான்களை அவிழ்க்கிறார்.

மூன்று: மெரினா பீச். சாரு நிவேதிதாவாகிய நீங்கள் கைபேசியில் மறுமுனை பேசுவதை கேட்டு, கைபேசியை சிதறு தேங்காய் போல் கான்கிரீட் நடைமேடையில் வீசி உடைக்கிறீர்கள்.

https://telegram.me/aedahamlibrary

அன்புடன்,

ஆனந்த்

4.7.2009

¦

¦

அன்பார்ந்த வாசர்களுக்கு,

ஆனந்தின் கடிதங்களை எதிர்கொள்வதில் இரண்டு வகையினரைப் பார்க்கிறேன். நேற்று திருவண்ணாமலையிலிருந்து கருணாநிதியும் பேசினார். தமிழ் இலக்கியச் சூழலில் இவ்வளவு செறிவான ஒரு உரையாடல் நடந்ததே இல்லை என்றார். இன்னொன்றும் சொன்னார். எழுதவே கூச்சமாக இருக்கிறது. 'ஆனந்த் என்ற ஒருவரே இல்லை; எல்லாம் சாருவின் கற்பனையோ என்று சந்தேகமாக இருக்கிறது' என்றார்! இதை மட்டும் ஆனந்த் கேட்டிருக்க வேண்டும்.

மூன்று படிமங்களை நான் எழுதியிருக்கவே முடியாது என்பதற்கு ஒரு ஆதாரம் இருக்கிறது. எனக்கு இப்படியெல்லாம் அம்மா, அப்பா, அண்ணன், தங்கை உறவெல்லாம் கிடையாது. அப்படிப்பட்ட செண்டிமெண்டலான பாச உறவு எனக்கு அவந்திகாவைத் தவிர இந்த உலகில் வேறு யார் மீதும் கிடையாது. இதற்குக் காரணம் இக்கடிதத்தில் வருகிறது.

இன்னொரு வகை வாசகர்கள் ஸ்ரீவாணி, சீனிவாசன் மாதிரி. 'நீங்கள் சிபாரிசு செய்யும் எழுத்து எதையுமே வாசிக்க முடியவில்லை; யாருடைய எழுத்திலும் உங்கள் எழுத்தில் உள்ளது போன்ற குதூகலமும் கொண்டாட்டமும் இல்லை' என்று சொல்பவர்கள்.

சுந்தர், உங்களுடைய ஊர் பற்றி நாம் ஏற்கனவே பேசியிருக்கிறோம். வத்ராயிருப்பு என்றுதானே சொல்வது? அங்கே உள்ள புதுப்பட்டி என்ற ஊரிலிருந்துதான் என் நண்பர் நடராஜன் இலக்கிய வெளிவட்டம் என்ற பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார். அதில்தான் அப்போது நான் சார்த்தர் பற்றிய தொடர்கட்டுரையை எழுதிக் கொண்டிருந்தேன். அதை இப்போதும் நினைவில் வைத்திருக்கும் ஒரே மனிதர் எஸ்.ராமகிருஷ்ணன்தான் என்று நினைக்கிறேன். சமீபத்தில் கூட அதைப் பற்றி என்னிடம் பேசிக்கொண்டிருந்தார். அதன் பிரதிகள் யாரிடமாவது இருந்தால் பிரதி எடுத்துவிட்டுக் கொடுத்துவிடுகிறேன். என் நண்பர்கள் யாரேனும் தீவிரமாக முயற்சி எடுக்கவும். அதே போல் வத்ராயிருப்பிலிருந்து ஜெயபாலன் என்பவர் யாத்ரா என்ற பத்திரிகையை நடத்திக்கொண்டிருந்தார். வெங்கட்

https://telegram.me/aedahamlibrary

சாமிநாதனுக்கென்றே பிரத்யேகமாக நடத்தப்பட்டு வந்த பத்திரிகை என்றாலும், அதில் பல நல்ல கட்டுரைகள் இருந்தன. (யாத்ரா தொகுப்பை என்னிடமிருந்து வாங்கிக்கொண்டுபோன ஆம்பூர் அன்பர் ஒருவர் அதைத் திருப்பியே கொடுக்காமல் அமுக்கிவிட்டார். இப்போது அவர் ஒரு கவிஞராக வேறு அறியப்படுகிறார். இப்படிப்பட்ட தனிநபர் அராஜாகங்களை என்னவென்று சொல்வது?)

பாச உறவு மட்டும் அல்ல; வாழ்வில் எந்த மாதிரி தனிப்பட்ட உறவுகளும் இல்லாமல் போய்விட்டது. கிட்டத்தட்ட ஒரு 15 பேருக்கு உலக இலக்கியத்தைப் பரிச்சயமாக்கினேன். அதற்கு முன்னால் அவர்கள் குமுதத்தைக்கூடப் புரட்டிப் பார்த்தவர்கள் இல்லை என்பது முக்கியம். ஒரு பத்து வருட காலம் நடக்கும் அந்த குருகுல வாசம். என்னோடேயே சாப்பிடுவார்கள்; என் படுக்கையிலேயே உறங்குவார்கள்; 24 மணி நேரமும் என் நிழலாகவே என்னைத் தொடருவார்கள். பத்து ஆண்டுகள் சென்றதும் எனக்கு விஷம் வைத்துவிட்டுச் சென்றுவிடுவார்கள். அந்த விஷத்தை முழுங்கி, பிறகு நான் பிழைத்து எழ வேண்டும். ஒருவர் இருவர் அல்ல; நான் எழுதிய நாவல்கள், சிறுகதைகள் எல்லாவற்றையும் நாங்கள்தான் எழுதிக் கொடுத்தோம் என்று பத்திரிகைகளில் எழுதுவார்கள்.

ஆங்கிலத்தில் எழுத்துக் கூட்டிக்கூட வாசிக்கத் தெரியாத ஒரு 15 வயது பொடியனுக்கு லத்தீன் அமெரிக்க இலக்கியமும், ஃபூக்கோவும் சொல்லிக்கொடுத்தால் அவன் பைத்தியக்காரனாக மாறி என்னைப் பற்றி என்ன எழுதுகிறான் என்று நீங்களே படித்துத் தெரிந்து கொள்ளுங்கள்.

இப்படியெல்லாம் இவர்கள் ஸைக்கோவாக மாறுவதற்கு நான் எவ்விதத்தில் தூண்டுதலாக இருந்தேன் என்று எனக்கே தெரியவில்லை. என்னுடன் நெருங்கிப் பழகுபவர்களுக்குத் தெரியும், நான் எவ்வளவு வெள்ளந்தியான ஆள் என்று. நான் கூட விளையாட்டாகச் சொல்வதுண்டு; வள்ளலாரே என்னோடு பழகினாலும் சரி, என்னைக் கொல்வதற்கு வாளை உருவிவிடுவார் என்று. காரணம்தான் தெரியவில்லை.

நட்பில் இப்படி என்றால், உறவில் இதை விட பயங்கரம்.

இப்படியாக என் வாழ்க்கை முழுவதுமே - நண்பர்களோடு மட்டும் அல்ல; அம்மா, அப்பா, உயிருக்குயிராய் வளர்த்த என் மகள் என்று எல்லார் கூடவும் - இப்படியேதான் நடந்துகொண்டிருக்கிறது என்பதால் இப்போது நான் ஒரு துறவியைப் போன்ற மனநிலைக்கு

https://telegram.me/aedahamlibrary

வந்துவிட்டேன். அதனால் ஆனந்த் எழுதியிருக்கும் மூன்று படிமங்கள் எனக்கு ஏதோ ஒரு வேற்றுக்கிரகத்து ஜீவிக்கு எப்படி விளங்குமோ அப்படித்தான் விளங்கியது.

சாரு

10.7.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கருவாட்டுக் குழம்பு கிடைக்கும் இடம்?

அன்புள்ள ஆனந்த்,

உங்களுடைய 4.7.2009 தேதியிட்ட கடிதத்துக்கு நான் பதில் எழுதாததன் காரணம், எனக்கு என்ன பதில் எழுதுவதென்று தெரியவில்லை என்பதனால்தான். குடும்ப உறவுகளுக்கு நான் ரொம்பவும் அந்நியமான ஆள். அதனால் மற்ற நண்பர்கள் சொல்வதை கேட்டுக் கொண்டிருப்பேன். அத்தோடு சரி.

ஆனால் ஒன்று; உங்களுடைய மூதாதையரைப் பற்றிச் சொல்வதைக் கேட்கும்போது எனக்கு என் அம்மாச்சி சொன்ன கதைகளைக் கேட்பதுபோலவே இருக்கிறது. அவர்கள் என்ன ஜாதி என்று எனக்குக் கடைசி வரை தெரியாது. ரவிக்கை இருக்காது. காதில் பெரிய பாம்படம் தொங்கும். பூர்வீகம் செட்டிநாடு. தலைமுறைகளுக்கு முன்னால் பர்மா சென்று, இரண்டாம் உலகப் போரின் போது வங்காளம் வழியாக நடந்தே இந்தியாவுக்குள் வந்தவர்கள்.

ஆண்கள் சாப்பாட்டுப் பிரியர்கள்; நாற்பது வயதில் ஹார்ட் அட்டாக், மத்திம வயதில் விதவையான பெண்கள் என்று பல விஷயங்கள் என் அம்மா வழிக் குடும்பத்தோடு ஒத்துப்போகின்றன. அம்மா வழியில் எல்லா ஆண்களும் இளம்வயதில் மேலே போய்விடுவார்கள். இருதயப் பிரச்சினை, ரத்த அழுத்தம் இன்ன பிற. என் நைனா வழியில்தான் எல்லோருமே நீண்ட ஆயுளும், பொறாமை கொள்ள வைக்கும் தேக ஆரோக்கியமும் கொண்டவர்களாக இருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

கந்தரப்பம், வெள்ளைப் பணியாரம் பற்றியெல்லாம் எழுதியிருக் கிறீர்கள். வயிறுதான் பற்றி எரிகிறது. இங்கே பண்டிகை தினங்களில் கூட அதையெல்லாம் கண்ணால் பார்க்க முடியவில்லை. நானும் ஒரு பயங்கர சாப்பாட்டுப் பிரியன் என்பது உங்களுக்கு இதற்குள் தெரிந்திருக்கும். தேங்காய்ப்பால் ஆப்பத்தை இங்கே சரவணபவனில் மாதம் ஒருமுறை சாப்பிடுவதோடு சரி. திடீரென்று ஒரு நண்பர் எனக்குக் கருவாடு பிடிக்கும் என்பதால் கொண்டுவந்து கொடுத்தார். அப்போதுதான் தெரிந்தது, அவந்திகா சமையல் விவகாரத்தில் எவ்வளவு பெரிய வித்தகி என்று. அவள் கருவாடு போட்டால் உப்பு அடக்கமாக

https://telegram.me/aedahamlibrary

இருக்கும். வறுத்தாலும் அவ்வளவாக எண்ணெய் இருக்காது. ஆனால் நண்பர் கருவாட்டை வறுத்தே கொண்டு வந்து கொடுத்தார். எண்ணெயில் கருவாடு மிதந்தது என்றே சொல்ல வேண்டும். உப்போ சகிக்க முடியவில்லை. எல்லாவற்றையும் சிண்டூவுக்குக் கொடுத்துவிட்டாள் அவந்திகா. ச்சிண்ட்டூ என்று உச்சரிக்க வேண்டும். சிண்டூ வெள்ளைப் பூனை. கறுப்புப் பூனைக்கு இன்னும் பெயர் வைக்கவில்லை என்று நினைக்கிறேன்.

சிதம்பரம் பக்கத்தில் புத்தூர் ஜெயராமன் கடை என்று சொன்னார்கள். யார் யாரோ சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். யார் யாரோ என்றால் பிரமாதமான சாப்பாட்டுப் பிரியர்கள் என்று பொருள். ஆனால் அந்தப் புத்தூர் ஜெயராமன் ஓட்டலின் அசைவ சாப்பாடே அவந்திகாவிடம் பிச்சை வாங்க வேண்டும். இவளுடைய அசைவத் தயாரிப்பின் அருகில்கூட வர முடியாது. இடையில் அவளே ஒருநாள் மார்க்கெட்டுக்குப் போய் கருவாடு வாங்கி வந்து சமைத்துக் கொடுத்தாள். ஜனநாயகக் குடும்பம் என்றாலும் இந்த அருமை பெருமைகளும் அவ்வப்போது உண்டு.

பைபாஸ் சர்ஜரி செய்து இறந்துபோன மாமா பற்றி நீங்கள் எழுதியிருந்ததைப் படித்தபோது, என்னோடு ஆஸ்பத்திரியில் கிடந்த சக நோயாளிகளைப் பற்றிய ஞாபகம் வருகிறது. ஒருத்தருக்குக் கூட நாவடக்கம் என்பது கிடையாது என்பதை அப்போதுதான் கண்கூடாகக் கண்டேன். என்னோடு பைபாஸ் சர்ஜரி செய்து கொள்ள இருந்தவர் சர்ஜரி செய்வதற்கு முதல் நாள் வெளியிலிருந்து சிக்கன் பிரியாணி வாங்கிச் சாப்பிட்டார். வாங்கி வந்து கொடுத்தது அவருடைய மகள். பெரிய படிப்பு படித்த பெண்.

ஃபிலடெல்ஃபியா பார்க்கவில்லை. நான் ஹாலிவுட் படங்கள் பார்ப்பது மிக மிகக் குறைவு. ஆனால் டாம் ஹாங்க்ஸ் எனக்குப் பிடித்த நடிகர்.

சாரு

18.7.2009

பின்குறிப்பு

1. தூத்துக்குடி பக்கம் இருக்கும் நண்பர்கள் யாரேனும் ஒரு கால் கிலோ அளவுக்கு நல்ல கருவாடாக எனக்கு அனுப்பித் தர முடியுமா?

2. கேரளாவில் ஓட்டல்களில் கருவாட்டுக் குழம்பு கிடைக்கிறது. தமிழ்நாட்டில் ஒரு ஓட்டலில்கூட கிடைக்காது என்று நினைக்கிறேன். இதற்குக் காரணம் என்ன?

https://telegram.me/aedahamlibrary

மலாவி என்றொரு தேசம்

டியர் சாரு,

நான் மலாவிக்கு வந்து சேர்ந்தது இங்கிருக்கும் எனது உறவினர்களின் உபயத்தில். கல்லூரி முடித்துவிட்டு இலக்கியம் உலக சினிமா என்று சுற்றி அலைந்த நாட்களில், மலாவியிலிருந்து விடுமுறைக்காக வரும் உறவினர்கள் தென் ஆஃப்ரிக்காவில் வாழ்வதாகவே வெகுநாள் வரை நினைத்துக்கொண்டிருந்தேன். அப்படித்தான் அவர்களும் கூறுவார்கள். காரணம், மலாவி என்ற நாட்டின் பூகோள எல்லைகள் ஆஃப்ரிக்க கண்டத்தின் எந்தப் பகுதியில் அமைந்திருக்கிறது என்று விளக்கிக்கொண்டிருக்க அவர்கள் பொறுமையோ, தேவையோ கொண்டிருக்கவில்லை. சுருக்கமாக தென் ஆஃப்ரிக்கா என்று கூறிவிட்டால் சந்திப்பவர்கள் கேட்கும் கேள்விகளில் மூன்றில் இரண்டு பகுதி குறைந்துவிடும்! இதுபற்றி நான் முதன்முதலில் அறிய நேர்ந்தபோது மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். இது ஒரு தேசத்தையே புறக்கணிப்பதாக எனக்குத் தோன்றி வருத்தமடையச் செய்தது. பின்னாளில் இன்னொரு விஷயமும் கவனித்தேன். என்னளவில் இந்தியாவில் சந்திப்பவர்களிடம் நான் மலாவியில் இருப்பதாக எவ்வளவு அழுத்தமாகக் கூறியபோதும் அவர்களுக்கு அது சாதாரணமாக உள்ளே செல்வதில்லை.

எங்கு இருக்கிறீர்கள்?

ஆஃப்ரிக்க நாடான மலாவியில்.

ஓ! சவுத் ஆஃப்ரிக்காவா?

இல்லை, மலாவி என்பது தேசத்தின் பெயர்.

மேற்படி கேள்விகளுக்கு பதில் சொல்வதற்குள் உயிர் போய் உயிர் வரும்.

இதெல்லாம் நடந்தேறும்போதுதான் ஒன்று புரிந்தது. பெரும்பாலான இந்தியர்களுக்கு, ஆஃப்ரிக்கா என்ற கண்டத்தின் பெயர் உச்சரிக்கப்பட்டதுமே அவர்களது மனம் தென் ஆஃப்ரிக்காவில் சென்று உட்கார்ந்துகொண்டுவிடுகிறது! இதற்கு இரண்டு காரணங்கள்

https://telegram.me/aedahamlibrary

இருப்பதாக அனுமானிக்கிறேன்.

ஒன்று: தென்ஆஃப்ரிக்கா தன் பெயரிலேயே ஆஃப்ரிக்காவை வைத்துக்கொண்டிருக்கிறது.

இரண்டு: கிரிக்கெட் மற்றும் அதன் பார்வையாளர்கள் என்ற பெயரில் காட்டப்படும் வெள்ளைத்தோல் பெண்கள்.

உலகில் உள்ள எல்லா தேசங்களையும் அறிந்து வைத்துக்கொள்ள முடியாதுதான். சில தேசங்கள் நமக்குப் பரிச்சயமாகியிருக்கும்; சில தேசங்களைத் தெரிந்தே இருக்காது. இதில் போட்ஸ்வானா, உகாண்டா, மொஸாம்பிக், டான்ஸானியா போன்ற நாடுகள் பரவாயில்லை. குறைந்தது தபால் தலை சேகரிக்கும் பழக்கம் கொண்டவர்களுக்காவது தெரிந்திருக்கும். எகிப்து என்றால் இருக்கவே இருக்கிறது சினிமா பாடல்கள். ஸிம்பாப்வே, கென்யா போன்ற நாடுகள்- மீண்டும் கிரிக்கெட் உபயம். (ஆனால் ஆஃப்ரிக்கா என்றால் கென்யாவா என்றோ, ஸிம்பாப்வேவா என்றோ யாரும் கேட்பதில்லை! தென் ஆஃப்ரிக்காதான் முதலில் எழும் கேள்வி!) ஒலிம்பிக், கால்பந்து போன்ற போட்டிகளை ஊன்றி கவனிப்பவர்களுக்கு வேறு சில நாடுகளின் பெயர்களும் தெரிய வாய்ப்பு இருக்கிறது. சோமாலியா என்றால் வறுமை வறுமை வறுமை என்று ஊடகங்கள் சொல்லும் செய்தியை மட்டும் அரற்றியதன் வழியாவது தெரிந்து வைத்திருக்க முடியும். ஆனால் மலாவி? தெரிந்துகொள்ள வாய்ப்பு இல்லைதான். இதுவரை எனக்குப் புரிகிறது. ஆனால் மலாவி என்ற தேசத்தை பேச்சின் இடையே சாதாரணமாகக் குறிப்பிட்டால்கூட அதைத் தென் ஆஃப்ரிக்கா என்ற சொல்லிலிருந்து விடுவிக்க எவ்வளவு போராட வேண்டியிருக்கிறது பாருங்கள்!

அதிலும் இந்த வருடம் ஐபிஎல் நடந்த வேகத்தில், ஆட்டத்தை நேரில் பார்க்கச் சென்றாயா என்று கேட்டு மெயில்கள் வரும். 'அன்பர்களே! பல முறை சொல்லியிருக்கிறேன், நான் இருப்பது மலாவி என்ற நாட்டில், தென் ஆஃப்ரிக்காவில் அல்ல!' என்று பதில் சொன்னால் இன்னும் கொடுமை- 'எல்லாம் ஒன்றுதானே! நீ மேட்ச் போய் பார்க்கவில்லையா?' என்று கேட்டு அடுத்த மெயில் வரும்.

இந்தியா சென்றால் ஒருவர் இன்னொருவருக்கு அறிமுகப்படுத்தும்போது - இவர் ஆனந்த் - சவுத் ஆஃப்ரிக்காவில் இருக்கிறார் - என்றுதான் அறிமுகம் செய்வார். (சவுத் ஆஃப்ரிக்காவில் இருப்பதில் ஏதோ தனிப்பெருமை என்ற எண்ணம் வேறு செயலாற்றும் போல!) நான் மறுத்து 'மலாவியில் இருக்கிறேன்' என்று சொல்ல

https://telegram.me/aedahamlibrary

வேண்டும். தொடர்ந்து வரும் கேள்விகளுக்கு விளக்கமளிக்கத் துவங்கினால் அறிமுகப்படுத்தியவர், 'ஏன் இந்த சம்மந்தமற்ற பேச்சு?' என்று நெளிவார். சரி எதுவும் பேச வேண்டாம்; சுருக்கமாக மலாவி என்று சொல்லி நிறுத்திக்கொள்ள முடியுமா? நிச்சயம் முடியாது. அடுத்த கேள்வி எப்படியும் 'மலாவி சவுத் ஆஃப்ரிக்காவில் உள்ள ஊரா?' என்ற திசையில் புறப்படும். 'ஆமாம்' என்று சொல்லி முடித்துக்கொள்ள எனக்கு மனம் ஒப்பாது.

ஒருமுறை ஒருவரிடம் மலாவி என்ற தேசத்தில் இருப்பதாகக் கூறலாம். அப்படிக் கூறிய பிறகு அவரே திரும்ப சந்திக்க நேரிடும் போதெல்லாம் சவுத் ஆஃப்ரிக்கா எப்படி இருக்கு என்று கேட்டால் என்ன செய்வது? எனக்குத் தெரியாதே என்று கூறி ஜோக் அடிக்கலாம், பேசாமலிருக்கலாம், சலித்துக் கொள்ளலாம், அவரிடமிருந்து விலகி ஓடலாம். எத்தனை பேரிடம் இதையே செய்வது! இந்தியாவிலிருக்கும் தினங்களில் தினசரி வாழ்வின் போக்கில் அனேகமாக ஒரு ஐம்பது பேரையாவது சந்திக்க நேரிடும். அதில், 40 பேர் 'சவுத் ஆஃப்ரிக்கால' என்றுதான் முதல் வார்த்தை துவங்குகிறார்கள்! அப்படிக் கேட்பவர்களுக்கு, அவர்களைப் போலவே நானும் சவுத் ஆஃப்ரிக்காவை தொலைக்காட்சியில் மட்டும்தான் பார்த்திருக்கிறேன், அது வேறொரு நாடு, அதற்குள் செல்ல தனியாக வீஸா வேண்டும் - என்றெல்லாம் சொல்லிப் புரிய வைக்க முடிந்ததே இல்லை.

இதில் விசேஷம் என்னவென்றால், நான் கூறுவது படித்து அறிய வாய்ப்பில்லாத பாமர மக்களைப் பற்றி அல்ல; கல்லூரியில் தங்கப்பதக்க சாகஸங்கள் செய்துவிட்டு மென்பொருள் துறையிலும், இன்ன பிற உயர் பதவிகளிலும் அமர்ந்திருக்கும், 'அண்ணா மாதிரி நீயும் படிச்சு பெரியாளா வரணும்' என்று குடும்பத்திலுள்ள சிறு பிள்ளைகளுக்கு உதாரணம் காட்டப்படும், நடுத்தர வர்க்கத்தின் முன்னேற்றமாய் அடையாளம் காணப்படும், கனவான்களைப் பற்றி.

விதிவிலக்கு-இலக்கியம் பேசும் நண்பர்கள் மட்டும்! இது பற்றி கடுமையான அடைப்புக்குள்ளான மனங்கள் என்று குறிப்பிட்டு நான் எழுத, இலக்கியவாதியுடன் நட்பு என்று குறிப்பிட்டு நீங்கள் எழுத, நிறைய பேசிவிட்டோம். இலக்கியப் பரிச்சயம் இல்லாத நண்பர்களை விடுத்துப் பார்த்தால் இன்னொரு விதிவிலக்கும் உண்டு. வியாபாரிகள்!

வியாபாரிகளும் கலை உள்ளம் கொண்டவர்களுக்கு இணையாக உலகையே உரிமை கொண்டாடுவதைக் காண்கிறேன். போக்குவரத்தும் தொழில்நுட்பமும் அதிமுன்னேற்றம் அடைந்து வரும் நாட்களில் உலகின் விஸ்தாரம் சுருங்கி வருவதாய் அவர்களுக்குக்

https://telegram.me/aedahamlibrary

காட்சியளிக்கிறது போலும். மேஜையின் மீதிருக்கும் உலகப் பந்தினை சுழற்றி தனக்கான பணம் எந்த நாட்டில் எந்த மரத்தில் காய்க்குமென்றாலும் அதைப் பறித்து ஜேபியில் போட்டுக்கொண்டுவிடத் தயாராக இருக்கிறார்கள். மலாவி போன்ற நாடு பற்றிய விசாரணைகள் அத்தகைய மரம் மற்றும் தன் ஜேபியின் அளவு போன்றவற்றைக் குறிப்பதன் பேரில் அவர்களுக்கு உற்சாகம் கொள்கிறது.

இப்போது இவ்வளவையும் ஏன் சொல்கிறேன் என்றால், இந்த நிலையில் மலாவியை முன் வைத்து மனித குணங்களின் பொது அம்சத்தைப் பேசும் நமது இந்த உரையாடல் எனக்கு எத்தகைய சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் அளிக்கிறது என்று சொல்லி விட வேண்டும் என்று தோன்றியதால்தான்.

சாரு ஆன்லைன் வாசகர்களிடையே இந்நாட்களில் ஏற்பட்டிருக்கும் மலாவி பற்றிய பரிச்சயம், கலாகௌமுதியின் அரசியல் கட்டுரையில் நீங்கள் மலாவியை சுட்டிக்காட்டி துவங்கிய முதல் வரி போன்றவை, மலாவி என்ற இந்த தேசத்தின் இருப்பு குறித்து நான் பிறக்க நேரிட்ட தேசத்தில் அறிமுகமாகிவிட்ட சந்தோஷத்தை அளிக்கிறது.

தேசம், மொழி, கலாச்சாரம், மதம், இலக்கியம், சினிமா, நாடகம், நடனம், தத்துவம், தேக பலம், மனோபலம், சமூகத்தின் வெவ்வேறு தளத்தைச் சேர்ந்த மனிதர்களின் உளவியல், வாழ்க்கை முறைகள் - என அனைத்தும் கலந்து கட்டி உருவாகும் சொற்கள் வழி இத்தகைய சம்பாஷணை நிகழ்வதும் என்னளவில் மிகவும் உவப்பானதாக இருக்கிறது. தவிர, மலாவியைப் பற்றிய - அதனுடனான இந்திய வாழ்வின் ஒப்புமையை - பேசும் சாக்கில், உலகமயமாக்கலின் காலத்திலான மானுட வாழ்வு குறித்த பரிசீலனையை மேற்கொள்ள முடிவது எனக்கு மிகுந்த சுவாரஸ்யமும் ஊக்கமும் அளிக்கிறது.

‘ஆனந்த் அண்ணாமலை, மலாவி’ என்று நான் குறிப்பிட்ட ஓரிரு வரிகளைத் தொடர்ந்து நீங்கள் எழுப்பிய கேள்விகள்:

ந்யாஸா ஏரியைப் பார்த்திருக்கிறீர்களா?

அதில் படகுச் சவாரி செய்திருக்கிறீர்களா?

ஒரு கடலளவுக்குப் பரந்து விரிந்து கிடக்கும் இவ்வளவு பெரிய ஏரி இருந்தும் மலாவி ஏன் இவ்வளவு கொடூரமான வறுமையில் இருக்கிறது?

மீண்டும் ஒரு முறை வியக்கிறேன்! அந்தக் கடைசி கேள்வியே இந்த உரையாடலின் வழி நீட்சியாகி நிலைப்பது போல் தோன்றுகிறது.

https://telegram.me/aedahamlibrary

இன்னும் பதில் சொல்லி முடிந்தபாடில்லை!

பரிச்சயமுள்ள ஒரு சிலர்-என் அம்மா உட்பட - நீ இவ்வளவெல்லாம் மலாவி பற்றி எங்களிடம் சொன்னதில்லையே என்று ஆச்சரியத்துடன் கேட்கிறார்கள். நீங்கள் கேட்கவில்லையே என்று பரிதாபமாகச் சொல்வதைத் தவிர எனக்கு வேறு வழி இல்லை. எனக்குத் தனியாகப் பேசுவது என்றால் கொஞ்சம் பயம். உங்களுடனான இந்த உரையாடல் நிறையவே தைரியமும் தன்னம்பிக்கையும் அளிக்கிறது.

இது முன்திட்டம் எதுவுமின்றி சட்டென்று துவங்கிவிட்ட பயணம் என்பதால், அதன் மையம் சிதறுண்டு போகாதிருக்கும் பொருட்டு என்னளவில் ஒரு எளிய வரைபடத்தினை வகுத்துக்கொண்டேன்.

கட்டுப்பாடு என எதுவும் வைத்துக்கொள்ளவில்லை என்றாலும், மலாவி பற்றி இன்னனின்ன விஷயங்களைச் சொல்லிவிட வேண்டும் என்றொரு எண்ணமிருந்தது. அதன்படி, நம் உரையாடலிடையே இயல்பாகக் கிளைத்த யூ.ஜி, ஜே.கே. சொற்களின் மீதான சொற்கள், மூன்று படிமங்கள் ஆகியவை போக, 'மிகூயு சிறையின் கொடுஞ்சுவர்களுக்குள்ளிருந்து கேட்ட குரல்கள்...' என்ற தலைப்பில் துவங்கி, முறையே, ந்யாஸா ஏரி- மலாவியின் வறுமை - மலாவியர்களின் குணாம்சங்கள் - இங்கிருக்கும் பிற நாட்டினரின் போக்கு - மொழி - மலாவியின் அரசியல் சூழல் - இலக்கியச்சூழல் - வாழ்க்கை முறை - திருட்டு - லோக்கல் சரக்கு - உணவு- மதம் - இமிக்ரேஷன்- சிறை- வெளிநாட்டுத் தொழிலதிபர் - மலாவியர்களின் உளவியல் - குழந்தை வளர்ப்பு - இங்கிருக்கும் முதலாளிகள் - காணக் கிடைத்த மஸாய் நடனம் - தொலைக்காட்சி - விளையாட்டுகள்- போக்குவரத்து - மலாவியர்களின் சரீர பலம் - காணக் கிடைத்த மா-ராவண்- குலே நடனம் - சூனியம் பற்றிய மலாவியர்களின் நம்பிக்கைகள் - ரகசிய சமூகங்கள்... என நினைத்ததை ஓரளவு சொல்லியாயிற்று.

இன்னும் என்.ஜி.ஓ.க்கள் என்ற பேரில் சேவையைத் தம் தொழிலாக வரிந்து கொள்ளும் அமைப்புகள், CBC (Commonwealth Business Council) போன்றவை மலாவியின் வளர்ச்சியில் பங்கெடுக்கும் முறை ஆகியவை பற்றிச் சொல்ல எனக்குக் கொஞ்சம் உண்டு. அவை ஒருபுறமிருக்க வேறெதுவோ ஒன்று குறைவதாக பட்டது.

அன்புடன்,

ஆனந்த்

18.7.2009

https://telegram.me/aedahamlibrary

மூடர்களை எதிர்கொள்வது எப்படி?

அன்புள்ள ஆனந்த்,

இந்த மலாவி/தென் ஆஃப்ரிக்கா பூகோளக் குழப்பம் பற்றிப் படித்த போது வட இந்தியர்களுக்குத் தென்னிந்தியர்களைப் பற்றி உள்ள முட்டாள்தனமான அபிப்பிராயங்கள் ஞாபகம் வருகிறது. இந்த விஷயத்தில் அமெரிக்கர்களுக்குத்தான் முதல் இடம் என்று கேள்விப்பட்டிருக்கிறேன்.

தமிழ்நாட்டின் இளைய தலைமுறையினர் இவ்விஷயத்தில் நம்பவே முடியாத அளவுக்கு ஞான சூனியங்களாக இருக்கிறார்கள். அமெரிக்காவின் ஒவ்வொரு மாநிலத்தின் பெயரும், முக்கியமான நகரத்தின் பெயர்களும் இவர்களுக்குத் தண்ணீர்ப்பட்ட பாடாக இருக்கிறது. உதாரணமாக, ஃபிலடெல்ஃபியா என்பது எந்த மாநிலத்தில் உள்ளது என்று கேட்டால் கேள்வியை முடிப்பதற்குள்ளேயே பதில் வந்துவிடும். ஆனால் தஞ்சாவூர் என்றால் அது பற்றிக் கேள்வியே பட்டிருக்க மாட்டார்கள். தஞ்சாவூரே தெரியாது என்றால் அப்புறம் தாராசுரம் கோவில் பற்றிக் கேட்கலாமா? சரி, திருவிடைமருதூர்? விட்டால் போதும் என்று ஓடியே விடுவார்கள்.

சினிமா, டி.வி., வெகுஜன நுகர்வுக் கலாச்சாரம், அதன் விளைவாக ஏற்படும் பணத்தின் மீதான பேராசை, பின்னர் அதுவே வாழ்வு மதிப்பீடாக மாறிவிடும் அவலம் - இதெல்லாம்தான் இதற்குக் காரணம் என்று தோன்றுகிறது. நான் காலையில் ஐந்தரை மணி அளவில் ஸோரோவுடன் அல்லது பப்புவுடன் வாக்கிங் செல்லும்போது அந்த அதிகாலையிலேயே மாணவிகள் புத்தக மூட்டையை முதுகில் சுமந்துகொண்டு செல்வதைக் கண்டு அதிசயித்துக்கொண்டிருக்கிறேன். இது நான் சின்மயா நகரில் கண்டிராத ஒரு காட்சி. நான் வாழும் பகுதி மயிலாப்பூர் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். எப்படியாவது படித்து முன்னேறி அமெரிக்கா சென்றுவிடும் பந்தயக் குதிரை வாழ்க்கைக்கான முன்னேற்பாடு இது. அவ்வப்போது மாணவர்களையும் பார்க்கிறேன். காலையில் எழுந்ததும் படிப்பது நல்ல விஷயம்தான். ஆனால் இந்தக் குழந்தைகளின் வாழ்வில் விளையாட்டு என்ற ஒன்று இருக்குமா என்பதே சந்தேகமாக இருக்கிறது. யோகா, தியானம்

https://telegram.me/aedahamlibrary

போன்றவைகளைப் பற்றிக் கேட்கவே வேண்டாம். நல்ல தேக ஆரோக்கியம், மன ஆரோக்கியம், கலாச்சார பிரக்ஞை போன்ற எதுவுமே இல்லாத, புத்தகப் படிப்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்ட இளைஞர் கூட்டம் இது. இவர்களுக்குப் பணம் சம்பாதிப்பதைத் தவிர வேறு எதுவுமே தெரிந்திருக்கவில்லை.

ஆனால் இலக்கியப் பரிச்சயம் உள்ள குடும்பத்தில் வளரும் பிள்ளைகள் இந்த விபத்தில் சிக்குவதில்லை. சமீபத்தில் ப்ரீதம் சக்ரவர்த்தியின் இல்லத்துக்குச் சென்றிருந்தேன். ஸீரோ டிகிரியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர். என்னுடைய நீண்டகாலத் தோழி. அங்கே வந்திருந்த ஒரு ஃப்ரெஞ்சுப் பெண்ணுடன் பேசிக்கொண்டிருந்தோம். அவர் சுற்றுச்சூழலியல் மாணவி. அப்போது கேரளத்தின் பாலக்காடு மாவட்டத்தில் கொக்கோ கோலா நிறுவனத்துக்கு எதிராக நடந்த போராட்டம் பற்றி அந்தப் பெண் கேட்டார். ஊரின் பெயர் அந்தப் பெண்ணுக்கு மறந்துவிட்டது. எனக்கும் சட்டென்று ஞாபகம் வரவில்லை. பக்கத்தில் அமர்ந்திருந்த சம்யுக்தா உடனே 'பிளாச்சிமடா' என்றாள். ப்ரீதத்தின் மகள். இவளைப் பற்றியும், இவள் எழுதிக் கொண்டிருக்கும் நாவலைப் பற்றியும் ஏற்கனவே எழுதியிருக்கிறேன்.

ஆச்சரியத்துடன் "உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டேன். அந்தக் கேள்வியே அவளுக்குப் புரியவில்லை. பொது விஷயங்களில் அக்கறை உள்ள எல்லோருக்குமே தெரிந்திருக்கக்கூடிய விஷயம்தானே என்ற ரீதியில் பதில் சொன்னாள். நீங்கள் தயார் என்றால் மணிப்புரியின் நவீன நாடகங்கள் பற்றியும், ரத்தன் தியம் பற்றியும் பேசுவாள். படிப்பது பி.ஏ. வரலாறு. இந்தக் காலத்தில் பி.ஏ. வரலாறு படிக்கும் பெண்ணைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இப்போதே ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளிவந்திருக்கும் தன் கட்டுரைகளைக் காண்பித்தாள்.

இப்படி லட்சத்தில் ஓரிருவர் உள்ளனர். மற்றபடி வாழ்க்கையைப் பற்றிய எதுவுமே தெரியாத மூட ஜென்மங்களைத்தான் இந்திய சமூகம் உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது.

இவர்களோடு நான் ஹலோ கூட சொல்லுவதில்லை ஆனந்த். அப்படியே சொல்வதாக வைத்துக்கொள்வோம். அந்த உரையாடல் இப்படித்தான் போகும்.

"நீங்க எங்கே இருக்கீங்க?"

"மலாவியில்..."

"ஓ... சௌத் ஆஃப்ரிக்காவா?"

https://telegram.me/aedahamlibrary

“மலாவி சௌத் ஆஃப்ரிக்காவுல இருக்குன்னு உங்களுக்கு எந்த மடையன் சொன்னது?”

அதற்கு மேல் அந்த ஆள் என்னிடம் பேசுவாரா சொல்லுங்கள்? சாரு மண்டைக்கனம் பிடித்தவன், திமிர் பிடித்தவன் என்றெல்லாம் என்னைப் பற்றி வதந்திகள் உலவுவதற்கு இதுதான் காரணம். ஆனால் “மலாவி எங்கே இருக்கிறது?” என்று கேட்பவரிடம் ஒரு குழந்தையைப் போல் பழகும் இனிமையான மனம் எனக்கு உண்டு. பாலு மகேந்திரா மற்றும் ஜெயகாந்தன் பற்றி அவர்களோடு நெருங்கிப் பழகிய நண்பர்கள் சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவர்கள் பழகுவதில் குழந்தை மாதிரி என்று. நானும் அவர்களைப் போன்றவனே. ஆனால் எதிராளி தன்னுடைய முட்டாள்தனத்தைத் தனது யூகங்களாக என் மூஞ்சியில் தூக்கி எறிந்துகொண்டிருக்கக் கூடாது.

ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு என்னுடைய நெருங்கிய நண்பன் ஒருவன் என்னிடம் “சாரு, சீலே என்று ஒரு நாடு இருக்கிறது. அங்கே...” என்று ஆரம்பித்தான். “என் மூஞ்சியில் இனிமேல் எக்காலத்திலும் முழிக்காதே” என்று சபித்து அனுப்பிவிட்டேன். இன்னமும் அவனை நான் பார்க்கவில்லை. நேற்றுகூட போன் செய்து “சந்திக்கலாமா?” என்று கேட்டான். பார்க்கலாம் என்று மட்டுமே சொன்னேன்.

என் சொந்தத் தங்கை ஒருமுறை “ஏண்ணே, நீங்க டீவி சீரியலுக்கெல்லாம் கதை எழுத மாட்டிங்களா?” என்று கேட்டாள். அவளோடு பேச்சை நிறுத்தி ஐந்து வருடம் இருக்கும். என் நைனா மரணத்துக்குப் போனபோதுகூட அவளிடம் ஒரு வார்த்தை பேசவில்லை. இது என்னுடைய திமிர், அகங்காரம், ஆணவம் என்று வர்ணிக்கிறாள் அவந்திகா. இல்லவே இல்லை. நான் என் தங்கையாக இருந்தால் அந்தக் கேள்வியை இப்படி ஆரம்பிப்பேன்.

“அண்ணே, நீங்க என்ன எழுதுறீங்க? அது எதில் பப்ளிஷ் ஆகுது? அது ஏன் எங்களுக்கெல்லாம் படிக்கக் கிடைப்பதில்லை?” - இப்படி ஆரம்பித்து கடைசியில் என் சந்தேகத்தைக் கேட்பேன். ஆனால் விஷயம் அது அல்ல. என் தங்கைக்கு நான் ஏன் இவ்வளவு எழுதியும் இவ்வளவு ஏழையாக இருக்கிறேன் என்பதுதான் கேள்வி. அதுதான் அவளுடைய சந்தேகம். கொத்துவேலை செய்யும் என் தம்பி ஒரு குடிசை கட்டி, பிறகு அதற்குப் பக்கத்தில் ஒரு குடிசை கட்டி வாடகைக்கு விட்டு, பிறகு அதைக் கட்டிடமாகக் கட்டி மூன்று குடும்பத்துக்கு வாடகைக்கு விட்டு, இப்படியே வீடுகள் பல்கிப் பெருகி இன்று ஒரு கோடீஸ்வரனாக வாழும்போது நீங்கள் மட்டும் ஏன் டீவி சீரியல் போன்றவற்றில் எழுதிப் பணக்காரன் ஆகவில்லை என்பதுதான் என் தங்கை கேட்ட கேள்வியின்

https://telegram.me/aedahamlibrary

உள்ளர்த்தம். பணத்தை மட்டுமே வாழ்வாதாரமாகக் கொண்ட மிடில் க்ளாஸ் முட்டாள்களின் கூட்டம். இப்படிப்பட்ட கூட்டத்தைக் கண்டால் ஒரே மிதிதான். அப்புறம் ஜென்மத்துக்கும் என் பக்கத்தில் வரமாட்டார்கள்.

அதனால் உங்களிடம் மலாவியையும் தென் ஆஃப்ரிக்காவையும் பின்னிப் பின்னி கேட்கும் ஞான விளக்குகள் என்னிடம் வந்தால் தடியால் அடித்து விரட்டிவிடுவேன்.

சமீப காலமாக ஒரு ஆட்டோக்காரர் நான் ஆட்டோவில் ஏறி அமர்ந்ததுமே அவர் பாட்டுக்கு ஆரம்பித்துவிடுவார் பேச்சுக் கச்சேரியை. யோசித்துப் பார்த்தேன். இவர் ஏன் இப்படி நம்மிடம் சௌஜன்யமாகப் பேசித் துன்புறுத்துகிறார் என்றால் என் சகதர்மிணிதான் காரணம். அவளுக்குத்தான் இப்படிப்பட்ட தொழிலாளர், பாட்டாளி வர்க்கம் என்றால் அன்பு பொங்கிக்கொண்டு பீறிடும். அவர்களுடைய வளவளா பேச்சுக்கு அவளும் பதில் சொல்லி அவர்களை உற்சாகப்படுத்திக் கொண்டு போவாள். அதே ரீதியில்தான் அந்த ஆட்டோக்காரர் என்னையும் அணுகுகிறார் என்பதைப் புரிந்துகொண்டேன். நானும் ஒரு முன்னாள் கம்யூனிஸ்ட் என்ற வகையில் சிறிது நாட்கள் பொறுத்துப் பார்த்தேன். முடியவில்லை. அந்த ஆட்டோக்காரர் தற்கால அரசியலையும், சமூகவியலையும் அள்ளி அலசிக்கொண்டிருந்தார். ஒரு கட்டத்தில் எனக்குப் பொறுமை போய்விட்டது. “ஏங்க, பார்க்க இவ்வளவு நல்லவரா இருக்கீங்க? இப்படி வளவளன்னு பேசி டார்ச்சர் கொடுக்குறீங்களே? உங்க மனைவி ரொம்ப ரொம்பப் பொறுமைசாலியா இருக்கணும்” என்றேன் ஒருநாள்.

இன்றுவரை அவர் என்னிடம் வாயே திறப்பதில்லை.

நெருங்கிய நண்பர் என்றால்கூட மன்னிப்பு கிடையாது இது விஷயத்தில். ஒரு நாள் டென்.டியில் வைத்து இந்தச் சம்பவம் நடந்தது. நிக்கி, நான், அலெக்ஸ் மற்றும் குமார். இதில் குமார் நிக்கியின் சம்ச்சா. (சம்ச்சா என்ற இந்தி வார்த்தைக்கு உங்களுக்கு அர்த்தம் தெரியும் என்று நினைக்கிறேன். சம்ச்சா-ஸ்பூன். தமிழிலும் இதற்கு நேரான வார்த்தை ஒன்று உண்டு). இப்படிப்பட்ட சம்ச்சாக்களை நிக்கி விரும்புவதில்லை என்றாலும் அவனையும் மீறி அவனைச் சுற்றி இம்மாதிரி ஒன்றிரண்டு சம்ச்சாக்கள் பெருகிவிடுவதை அவனாலும் தவிர்க்க முடிவதில்லை என்று நினைக்கிறேன்.

அலெக்ஸ் ஸ்மர்னாஃப் வோட்கா சொன்னான். உடனே குமார் அலெக்ஸிடம் “அது ஒரு பெக் 600 ரூபாய் அண்ணே; எம்ஜியெம்

https://telegram.me/aedahamlibrary

சாப்பிடுங்க” என்றான். அப்போது நிக்கி பாத்ரூம் சென்றிருந்தான். எல்லோருக்கும் பணம் கொடுக்கப் போவது நிக்கி. இதற்கிடையில் இவனுக்கு என்ன பிரச்சினை? என்ன பிரச்சினை என்றால், இப்படியெல்லாம் அல்லக்கை வேலை செய்தால் நிக்கியிடம் இன்னும் கொஞ்சம் நெருங்கலாம். ஏன் நெருங்க வேண்டும்? ஆதாயம். அவ்வளவுதான் நோக்கம். இந்த நோக்கத்திற்காக இவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். யாரை வேண்டுமானாலும் போட்டுக்கொடுப்பார்கள்.

உடனே நான் குமாரிடம் சொன்னேன். “டேய் குமார். அலெக்ஸ் யார் என்று உனக்குத் தெரியுமா? அவர் தன் வீட்டிலேயே ஸ்மர்னாஃப்தான் குடிப்பார். நீ யார் அவரை எம்ஜியெம் குடிக்கச் சொல்ல? நீயா பணம் கொடுக்க போகிறாய்?”

அதன்பிறகு எத்தனையோ முறை டென்.டியில் சந்தித்து விட்டோம். குமாரிடம் ஒரு வார்த்தை நான் பேசியதில்லை. அவனே ஹலோ சொன்னால்கூட பதில் சொல்வதில்லை. இதைப் பார்த்துவிட்டு அலெக்ஸே என்னைப் பாராட்டினான்: ‘இவ்வளவு வெளிப்படையாக வாழ்கிறாயே; என்னால் அப்படி நினைத்துக்கூட பார்க்க முடியவில்லையே’ என்று. சென்ற வாரம் ஒருநாள் டென்.டி. சென்றேன். நிக்கி வெளியே நின்று புகைத்துக் கொண்டிருந்தான். நான் உள்ளே செல்லும்போது “டேய், உன் எதிரி இருக்கிறான் உள்ளே” என்று எச்சரித்தான். எனக்கு யார் என்று புரியவில்லை. உள்ளே பார்த்தால் குமார். அடப்பாவி. புழு பூச்சியெல்லாம் சிங்கத்துக்கு எதிரியா என்று நினைத்துக்கொண்டேன்.

குமார் அருகில் ஒரு அழகிய இளம்பெண். பெண்ணைக் கண்டால் பேயும் இரங்கும். நானோ பேயை விட மோசம். குமார் “வணக்கம் அண்ணே” என்றான் இளித்துக்கொண்டே. நான் வழக்கம் போல் “உன்னோடு நான் பேச விரும்பவில்லை” என்றுதான் சொல்லியிருக்க வேண்டும். ஆனாலும் ஒரு புதிய நபர் எதிரில் அப்படிப் பேசுவது அநாகரீகம். ஆனால் அதையே தோதாக வைத்துக்கொண்டு இந்த அல்லக்கை நம்மிடம் பேச்சைத் தொடர்வதையும் தவிர்க்க வேண்டும். எனவே “இப்போது என்னிடம் எதுவும் பேசாதே; நான் ரொம்பவும் மூட் அவுட்” என்றேன்.

“ஏண்ணே மூட் அவுட்?”

“அடடா: பேசாதேன்னு சொன்னேன்ல? பேசுனீன்னா இன்னும் மூட் அவுட் அதிகமாகப் போய்டும்.”

https://telegram.me/aedahamlibrary

இவ்வாறாகவே என்னிடம் முறையாக நடந்துகொள்ளாத மூடர்களையும், சராசரிகளையும் எதிர்கொண்டு வருகிறேன்.

சாரு

19.7.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

கழுகின் ரத்தம் (1)

டியர் சாரு,

கணவர் அமெரிக்கா, மனைவி இத்தாலி. அவர்கள் இருவரும் என் நண்பரின் வீட்டுக்கு வந்தது தோசையைத் தேடி. நானும் நண்பரால் அழைக்கப்பட்டு சென்றிருந்தேன். இந்தச் சந்திப்பு நடந்து இப்போது ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டதால் தம்பதியினரின் பெயர் மறந்துவிட்டது. சரி. பெயர்களில் என்ன இருக்கிறது. பேசும் வசதி கருதி - ஜாக் அண்ட் ஜில் என்று வைத்துக்கொள்வோம்.

ஜாக்கும் ஜில்லும் ஒரே என்.ஜி.ஓ.வில் பல வருடங்களாக (30 வருடங்களாவது இருக்கும்) வேலை பார்த்தபடி உலகைச் சுற்றி வருபவர்கள். அலுவலக காரணங்களினாலேயே இவர்கள் ஒருவரை ஒருவர் முதலில் சந்திக்க நேர்ந்தது. அதன்பின் இவர்கள் வாழ்க்கை காதல், திருமணம், ஒரு சேர பயணம் என்றாகிவிட்டது. இவர்கள் பணி நிமித்தம் சுற்றி வந்த நாடுகளில் இந்தியாவும் ஒன்று. தமிழ்நாட்டிற்கும் வந்திருக்கிறார்கள். அங்கு அவர்கள் கண்ட புதையல்களில் ஒன்றுதான் தோசை. ஜாக்-ஜில் என்று இல்லை, வட இந்தியர்கள் முதற்கொண்டு, பல்வேறு வெளிநாட்டவர்கள் வரை பலரிடன் தோசை தன் ஆதிக்கத்தை செலுத்துவதை காண முடிகிறது.

மலாவியிலேயே சிறந்த தோசை எங்கு கிடைக்கும் என்று எந்தத் தமிழரை கேட்டாலும், உடனே அவர்கள் பரிந்துரைக்கும் இடம் என் நண்பரின் வீடுதான். விருந்தோம்பலை சிறப்பாகவே நடத்தும் வீடு அது. எங்கோ ஒரு சூப்பர் மார்க்கெட்டில் நண்பரை சந்தித்துப் பேசிக்கொண்டிருந்த ஜாக், தென்னிந்தியர் என்றதும் தோசை பற்றி ஆர்வமுடன் விசாரித்திருக்கிறார். இன்றிரவே வாருங்களேன், ருசித்துப் பார்த்துவிடலாம் என்று நண்பர் அழைப்பு விடுக்க, ஜாக்கும் சந்தோஷமாய் வீட்டு விலாசத்தை பெற்றுக்கொள்ள, தொடர்ந்து நண்பர் என்னை தொலைபேசியில் அழைத்தார். சுவாரசியமான விருந்தினர்கள் வருகிறார்கள் - நீயும் வந்தால் நன்றாக இருக்கும். அது என்ன சுவாரசியம், பார்த்துவிடலாமே என்ற ஆவலுடன் நானும் போய்ச் சேர்ந்தேன்.

நான் நண்பரின் வீட்டுக்குள் நுழைந்தபோது ஜாக்கும் ஜில்லும் சிவப்பு

https://telegram.me/aedahamlibrary

வைன் பருகியபடி, நண்பரின் மனைவியிடன் பேசிக்கொண்டிருந்தனர். எதிர்பாராத விதமாக குறுக்கிட்டுவிட்ட வேலையின் காரணமாக, நண்பர் அங்கு இல்லை. அவர் எங்களுடன் வந்து சேர்ந்துகொள்ள இன்னும் ஒரு மணி நேரமாவது ஆகும் என்று தெரிந்தது. திசை தெரியாமல் கிட்டத்தட்ட 30 நிமிடங்களாய் பேசிக்கொண்டிருந்த நண்பரின் மனைவிக்கு என் வருகை கொஞ்சம் ஆசுவாசம் அளித்திருக்க வேண்டும். சற்று பலமாகவே என்னை அறிமுகப்படுத்தி, ஜாக்கையும் ஜில்லையும் என் வசம் ஒப்படைத்தார்.

ஜில் இத்தாலி என்று சொன்னதும் உடனே என் நினைவினில் உதித்த பெயர் ரொபர்ட்டோ பெனிகினி. அவரது லைப் இஸ் ப்யூட்டிஃபுல் என்னை மிகவும் கவர்ந்த படம். அவர்கள் இருவருக்குமே கூட அது பிடித்த படம்தானாம். அப்போது நாங்கள் இந்தியாவில் இருந்ததாகவும் ஒரு திரைப்பட விழாவில் வைத்து அந்தப் படத்தைப் பார்த்ததாகவும் நினைவு கூர்ந்தார்கள். அடுத்த 15 நிமிடங்கள் அந்தப் படத்தை சிலாகித்துப் பேசுவதில் செலவிட்டோம். பிறகு, பேச்சு ஜாக் பிறந்த தேசத்தை பற்றி திரும்பியது. ஜாக் அமெரிக்காவில் ஸியாட்டில் நகரில் பிறந்தவராம். இப்போது ஸ்லீப்லெஸ் இன் ஸியாட்டில் என்ற சினிமா! பேச்சு டாம் ஹாங்க்ஸ் மற்றும் மெக்ரையனை சுற்றியது. இருவருமே எனக்கு மிகவும் பிடித்த நடிப்புக்காரர்கள். என்றபோதும் இந்தப் படத்தை சரியாகப் பார்க்க முடியவில்லை. ஓர் இரவு நேரத்தில் அந்தப் படத்தைப் பார்க்க முனைந்து தூங்கி விழுந்த கதையை விவரித்துக் கூறினேன். ஜாக் அட்டகாசமாய் சிரித்தார். பிறகு சில நிமிடங்கள் டாம் ஹாங்க்ஸ் டாம் ஹாங்க்ஸ் டாம் ஹாங்க்ஸ் என்று அவரது நடிப்பில் வெளிவந்த ஒவ்வொரு படமாக அலசிக்கொண்டிருந்தோம்.

இந்தியாவிலிருந்த நாட்களைப் பற்றியும் இருவரும் புகாரின்றி சந்தோஷமாகப் பேசினார்கள். ஆனால், சினிமா என்று வந்த போது, ஜாக் சொல்லியது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஐ லைக்ட் தட் மேன், தட் ஒல்ட் ஆக்டர், ஐ பர்காட் ஹிஸ் நேம் என்று சொல்லிவிட்டுத் தீவிரமாக யோசித்தார். எனக்கு எந்தப் புற்றிலிருந்து எந்தப் பாம்பு வரப்போகிறதோ என்று அவஸ்தையாக இருந்தது. பின் அனைவரும் ஜாக்குடன் சேர்ந்து தோள் கொடுத்து முயற்சித்தபோது வெளிப்பட்ட பெயர் - எம்.ஜி.ஆர்! எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. ஜாக்கும் ஜில்லும் இந்தியாவில் இருந்தது 90களில். எம்.ஜி.ஆர். அதற்கு முன்னே இறந்துவிட்டார். பிறகு எப்படி இது நடக்க முடியும்? இந்த ஆச்சரியம் ஒரு நிமிடம்தான். பிறகு வேறொரு யூகம் குறுக்குவெட்டாகப் புகுந்தது. ஜாக்கும் ஜில்லும் தங்கள் பணியின் காரணமாக கிராமங்களில்

https://telegram.me/aedahamlibrary

அலைந்து திரிந்திருப்பார்கள். இன்றும் எம்.ஜி.யாரின் உருவப்படங்கள் பூஜை செய்யப்படும் குடிசைகள், எம்.ஜி.ஆரின் பெயர் பச்சை குத்தப்பட்ட உழைப்பாளிகளின் கைகள் போன்றவற்றைப் பார்த்திருப்பார்கள். அதுவே அவர்கள் மனதில் எம்.ஜி.ஆர். குறித்த படிமங்களாகப் பதிந்திருக்கக்கூடும். இதைத் தொடர்ந்து இந்தியாவின் சமூக அமைப்பு, சினிமா செயல்படும் விதம் என்று ஏதேதோ விஷயங்கள் மனதில் அலையடிக்கத் துவங்கிவிட்டன.

என் முக மாறுதலை ஜில் கவனித்திருக்கக்கூடும். "ஏன், எம்.ஜி.ஆரை உங்களுக்குப் பிடிக்காதா?" என்று கேட்டார். நான் "இல்லை, இந்தியாவில் மிக முக்கியமான சினிமா கலைஞர்கள் பலர் இருந்திருக்கிறார்கள்; இப்போதும் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் பெயரை நீங்கள் குறிப்பிட்டிருந்தால் சந்தோஷப்பட்டிருப்பேன். பேசுவதற்கும் வசதியாக இருந்திருக்கும்" என்றேன். "ஓ! ஸாரி, இந்திய சினிமா பற்றி எங்களுக்கு அவ்வளவாக தெரியாது; மன்னித்துவிடுங்கள்" என்றனர். "அதனால் என்ன, இந்தியாவில் முக்கியமான கலைஞர்களின் படைப்புகளுக்கு விளம்பரம் குறைவு. அதனால் தெரிந்து கொள்வது சற்று கடினம்தான்" என்றேன்.

பேச்சு கொஞ்சம் தடைபட்டது.

"போகட்டும், நாம் சினிமா தவிர்த்து வேறு ஏதாவது பேசுவோமே?" என்றேன்.

ஜாக் தாங்கள் சமீப காலமாகவே மலாவியில் வசிப்பதாகவும், சமூக முன்னேற்றத்திற்காக பல செயல் திட்டங்கள் வைத்திருப்பதாகவும் கூறி, அவற்றை விளக்கத் துவங்கினார்.

எனக்கு அவர் கூறியவற்றில் எந்தவித சுவாரசியமும் ஏற்படவில்லை. கடமையே என்று தலையை அசைத்தபடி வேறு எதையோ யோசித்துக் கொண்டிருந்ததாக நினைவு.

சேவை என்ற வார்த்தையின் மேல் எனக்குக் கடந்த சில வருடங்களாக விலகல் ஏற்பட்டிருக்கிறது. அந்த வார்த்தை ஈகோவிலிருந்து பிறப்பது என்ற எண்ணமும் அதற்குக் காரணமாக இருக்கலாம். 'நான் உனக்கு சேவை செய்ய முயல்கிறேன்' என்ற நினைப்பிலேயே 'நான் உன்னை விட உயர்ந்த நிலையில் இருக்கிறேன்' என்ற அர்த்தம் தொனிப்பதாகப் படுகிறது. பெரும்பாலும் சேவை செய்ய முயல்பவர்கள் சொல்லும் விஷயமானது - 'நான் பிறருக்கு சேவை செய்வதன் மூலம் என் வாழ்க்கைக்கு அர்த்தம் வரிந்துகொள்ள முயல்கிறேன்.' 'ஆக, தன் வாழ்க்கைக்கு அர்த்தம் வரிந்துகொள்ள வறியவர்களை ஒருவர் பகடைக்

https://telegram.me/aedahamlibrary

காயாய்ப் பயன்படுத்த முயல்கிறார் இல்லையா?

இவையெல்லாம் தனி நபர் சேவை என்று பேசும்போது எனக்குத் தோன்றும் விஷயங்கள். இதுவே சேவை என்பது நிறுவனமயமாதல் என்றால், அதற்குப் பொருள் என்ன, அதன் பயன்பாடு என்ன என்று எனக்கு சுத்தமாகப் புரிவதில்லை. பசியால் வாடும் ஒருவனை சந்திக்கிறேன்; என் வசம் கொஞ்சம் பணம் இருக்கிறது; கொடுக்கலாம் என்று தோன்றுகிறது; கொடுக்கிறேன் - என் கைவசம் பணம் இல்லையென்றால் நான் அவனுக்குக் கொடுக்க ஒன்றுமில்லை. இதில் சேவை போன்ற வார்த்தைகளின் தேவை என்ன? இதனை மனித அகங்காரத்தின் விளைவான வார்த்தையென்றே நினைக்கிறேன். முதலில் சமூக சேவை நிறுவனங்கள் என்று சமூகத்தை முன்னேற்ற ஒரு தனிப்பிரிவு வேண்டுமென்றால் அது அந்த சமூகத்தை நிர்வகிக்கும் அரசாங்கத்தின் தோல்வியைத்தானே குறிக்கிறது?

என் சிந்தனை இப்படியிருக்க ஜாக் தொடர்ந்து பேசிக்கொண்டு போனார். ஏதேதோ விஷயங்கள். ஒன்றிலும் என் கவனம் தங்கியதாகத் தெரியவில்லை.

இறுதியாக ஜாக், "இப்போது நீண்ட நாளாக முயன்று வந்த நிதியுதவி கிடைத்துவிட்டது; அதைப் பயன்படுத்தி கணிப்பொறிகள் வாங்க இருக்கிறோம்" என்று கூறினார். படிக்கும் வாய்ப்பு இல்லாத குழந்தைகளுக்குக் கணிப்பொறி அறிவு வழங்குவது அவர்களது என்.ஜி.ஓ.வின் முக்கியத் திட்டங்களுள் ஒன்றாம். நான் சுவாரசியம் காட்டாமல் தலையசைத்தேன். என்னை எப்படியும் இது சம்பந்தமாகப் பேச வைத்துவிடுவது என்று அவர் முடிவு செய்திருக்க வேண்டும். "இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இதை எப்படிச் செயல்படுத்துவது என்று யோசித்து கொண்டிருக்கிறேன்? உங்கள் வசம் ஏதாவது யோசனை இருக்கிறதா?" என்று கேட்டார்.

தர்மசங்கடமான கேள்வி. உரையாடலைத் தொடர்வதற்காகவாவது நான் ஏதேனும் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

"மன்னிக்கவும், நேர்மையாகச் சொல்ல வேண்டும் என்றால் எனக்கு இதுபோன்ற விஷயங்களில் நம்பிக்கை இல்லை" என்றேன்.

அவர்கள் என்னை வினோதமாகப் பார்த்ததை, என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. "நீங்கள் இன்னும் கொஞ்சம் தெளிவாகச் சொல்ல முடியுமா?" என்றார் ஜில்.

நண்பர் வீடு திரும்ப எப்படியும் அரை மணிநேரமாவது இருந்தது. நான், "அதற்கென்ன? தாராளமாகச் சொல்லலாம்" என்று கூறி விட்டு, "அதற்கு

https://telegram.me/aedahamlibrary

முன் நாம் இந்த தேசத்தை சரியாகப் புரிந்துகொண்டு விடுவது அவசியம்" என்று ஆரம்பித்தேன்.

மலாவியைப் பொறுத்தவரை, பிரச்சினை ஏழ்மை அல்ல; மாறாக, பணமே அத்தனை சிக்கலுக்கும் காரணமாக இருக்கிறது. இந்த தேசத்தில் நிறையவே பணமும், அதை உண்டு பண்ணுவதற்கான வளமும், வழிகளும் இருக்கின்றன. இருப்பினும் இங்கு ஏழ்மை விரவிக் கிடப்பதற்குக் காரணம், அந்தப் பணமானது பயன்படுத்தப்படும் விதம். மலாவி என்ற தேசம் இந்தியாவைப் போல் பரந்துபட்ட நிலப் பரப்போ, மாநில அரசு - மத்திய அரசு ஆகியவற்றிற்கிடையிலான அரசியல் உள் சிக்கல்களோ, மதம் - மொழி - சாதி எனப் பிரிவுபட்டுக் கிடக்கும் மக்கள் தொகையோ கொண்டதல்ல. எனவே இந்த நாட்டின் முன்னேற்றம் என்பது ஒன்றும் பெரும் சிக்கலுக்குரிய விஷயம் அல்ல. இருந்தும் இந்த தேசம் பின்தங்கியிருப்பதற்கான காரணமாக எனக்குத் தோன்றுவது, மனிதர்களிடையே உள்ள சிந்தனையின் அடிப்படையிலான வித்தியாசங்கள்.

முதலில் முன்னேற்றம் என்று நாம் எதைக் கணிக்கிறோம் என்ற கேள்வி மிக முக்கியமானது. நாட்டின் கடைசி பிரஜை வரை அனைவருக்கும் உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க வீடு, முடிந்தவரை சமச்சீரான பொருளாதாரம் என்பதை சமூக முன்னேற்றம் என்று கொள்வோம் என்றால் (இதுதான் சமூக முன்னேற்றமா என்ற கேள்வியும் இதை எழுதும்போது தோன்றாமல் இல்லை) அதனை சாத்தியப்படுத்தும் காரணிகள் யாவை என்று சிந்திப்பது அவசியமாகிறது. தொழில்நுட்பத்தைப் பொறுத்தவரையில் முன்னேறுவது என்பது இத்தகைய காரணிகளுள் ஒன்றாக எனக்குத் தோன்றவில்லை. தொழில்நுட்பத்தை ஒரு தேசத்தில் எத்தனை பேர் கற்றார்கள் என்பதைவிட, அதனைக் கற்றவர்கள் எந்த வகையில் அதைப் பயன் கொண்டார்கள் என்பதே முக்கியமாகப் படுகிறது. நாளைய தொழில்நுட்பத்தை இன்றே ஒரு தேசத்தில் பயன்படுத்துகிறார்கள்; ஆனால் அது ஒட்டுமொத்த சமூக முன்னேற்றத்தில் ஒன்றும் பெரிதாக பாதிப்பு செலுத்திவிடவில்லை; ஒரு பகுதியினர் கொஞ்சம் பொருளாதார ரீதியாக முன்னேறியிருக்கிறார்கள்; மற்றபடி தேசத்தின் வீழ்ச்சி ஒன்றும் மட்டுப்படவில்லை - அப்படியென்றால் அந்தத் தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் தூக்கித் தலையில் வைத்துக்கொண்டு ஆட வேண்டிய அவசியம் என்ன?

கணிப்பொறிக் கல்வி என்று இப்போது நாம் பேசுவதை எடுத்துக்கொள்வோம். எனது தொழிற்சாலையில் கூட

https://telegram.me/aedahamlibrary

சூப்ரவைஸர்களுக்குக் கணிப்பொறியில் தகவலைப் பதிவேற்றம் செய்யும் முறைகளை பயில்விக்கிறோம். என் அனுபவத்தில் ஒரு தொழிலாளர் நாற்பதே நாட்களில் மைக்கேரா சாஃப்ட் எக்ஸலைப் பயன்படுத்தி உற்பத்தித் தகவல்களை சேமிக்கும் வரை தயாராகிவிடுகிறார். இதற்கு அந்த சூப்ரவைஸருக்கு தனியான கணிப்பொறிக் கல்வியெல்லாம் தேவையில்லை. பழக்கத்தின் பேரில் தொலைகாட்சி ரிமோட்டையோ, கைபேசியையோ உபயோகிக்க ஒருவர் பழகிக் கொள்ளவில்லையா, அது போன்ற விஷயம்தான் இது. இதற்கு மேலாக நீங்கள் மென்பொருள் எழுதும் அளவிற்கு ஒரு மலாவிய சிறுவனையோ சிறுமியையோ தயாரிக்க முயல்வதாகத் தோன்றவில்லை. கல்லூரி வரை தொடர்ந்து சென்று நிதி உதவி செய்தால்தான் அதற்கான சாத்தியங்கள் பிறக்கும். இதற்கு நீங்கள் அந்த சிறுவனையோ சிறுமியையோ முழுமையாக தத்தெடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும்.

சரி, இவை போகட்டும். அடிப்படைக் கல்விக்காக நீங்கள் உதவுகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். அதன் மூலம் நீங்கள் அந்தச் சிறுவனிடமிருந்து சமூக முன்னேற்றத்திற்காக என்ன எதிர்பார்க்கிறீர்கள்? இன்று வரி இலாக்காவிலும், வங்கிகளிலும் கணிப்பொறியின் முன் அமர்ந்து பணி செய்து கொண்டிருப்பவர்கள் என்ன செய்கிறார்கள்? 5000 குவாச்சா கையூட்டு பெற்று 5 மில்லியன் குவாச்சா அளவு தேசத்தின் பணம் களவு போக வழி வகுக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அவர்களுக்கு நாம் போதிப்பது அசலான கல்வியே அல்ல. கல்வி என்பது மனிதனின் சிந்தனையை வளப்படுத்துவதாக இருக்க வேண்டும். மாறாக, உன்னிடம் பணம் இல்லை, பணம் சம்பாதிப்பதே உன் வாழ்வின் முன்னேற்றம், எனவே நாங்கள் அதற்கேற்ற ஒற்றைப்படைக் கல்வியை -- இது கல்வியே அல்ல, சமூக இயந்திரத்தில் சேர்ந்து இயங்க உண்டான பழக்கம் என்று வேண்டுமானால் சொல்லலாம் - அளிக்கிறோம் என்று முனைகிறீர்கள்.

இதன் மூலமாக சிறு வயது முதலாய் அவன் சிந்தனை முடக்கப்பட்டு, பணம் பற்றிய ஆ¬சேயே அவனுள் தூண்டுதல் பெறுகிறது-. பின்னால் இவன் சமூகத்திற்குத் தன் சுயநலம் கருதித் தீங்கிழைக்க ஏதுவான பொறுப்பற்ற மனிதனாகத் தயாரிக்கப்படுகிறான். சாப்பாட்டுக்கு வழியின்றி இருந்த ஒருவனுக்கு 5000 குவாச்சா வருமானத்தை ஏற்படுத்திக் கொடுத்தேன் என்று சொல்லி நீங்கள் தப்பிக்க முடியாது. இவன் மூலம் 5 மில்லியன் குவாச்சா களவு போய் அதன் பலனாக இனும் மூன்று குடும்பங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு வறுமையின்

https://telegram.me/aedahamlibrary

காரணத்தால் சாக நேரிடும். ஒன்று மைனஸ் மூன்று = மைனஸ் இரண்டு. ஆக, முடிவு நெகட்டிவ்தான். அதிலும் இரண்டு மடங்கு! இதுதான் இன்று மலாவியில் நடந்துகொண்டிருக்கிறது.

முதலில் அசலான கல்வி என்பது சிந்தனையைத் தூண்டுவதாக இருக்க வேண்டும்; பழக்கத்தை விதைப்பதாக அல்ல. மனிதன் தன் வாழ்வின் ஒவ்வொரு தருணத்திலும் சுதந்திரமாக முடிவெடுக்க வேண்டியவனாகவே இருக்கிறான். மென்பொருள் துறையில் பழக்கத்தின் பேரில் மென்பொருள் லாஜிக் பயின்று நல்ல நிலையில் இருக்கும் சிலர், தனிப்பட்ட வாழ்வில் சிறிய முடிவுகளைக் கூட எடுக்க முடியாமல் திணறுவதை இன்று காண முடிகிறது. ஆகச் சிறந்த விஞ்ஞானிகளாக அறியப்படும் எவரும் இது போன்ற ஒரு தொழில்நுட்பப் பயிற்சியை முன்வைக்கவில்லை. மாறாக, மனித சிந்தனையை கூர்மைப்படுத்தவே முயன்றனர். ஆக, சுயமாக சிந்திக்க முடியாத ஒருவர் தாரளமாக சம்பாதிக்கிறார் என்பதால் அவரை முன்னேறிய மனிதன் என்று எடுத்துக்கொள்ள முடியாது. அவர் சமூகத்தைப் பொறுத்தவரை மிகவும் ஆபத்தானவர். அப்படிப்பட்டவர்களாகவே மலாவியிலுள்ள பணக்காரர்களைக் காண்கிறேன். இவர்கள் சிறு வயது முதலாய் தொழில் செய்யப் பழக்கப்பட்டவர்கள். இவர்கள் வசம் இருக்கும் பில்லியன் கணக்கான பணத்தின் காரணமாக இவர்களுக்கு சமூகத்தில் அங்கீகாரமும் மதிப்பும் வசதியும் கிடைத்து விடுகிறது. ஆனால் உள்ளுக்குள் இவர்கள் நிம்மதியற்றவர்களாக, வறட்சியான வாழ்க்கை வாழ்பவர்களாகவே தென்படுகிறார்கள். இனி இவர்களால் இந்த வளையத்தை விட்டு வெளியே வர முடியாது. வெளியே வந்தால் சிறு வயது மூலமாக வாழக் கிடைத்த ஆடம்பரமும் வசதியும் அடிபட்டுப் போகும். உள்ளேயே இருந்தால் வாழ்வே அடிபட்டு போகும். எனவே இவர்களுக்கு வாழ்வின் முனைப்பு சக்தியாக (டிரைவிங் ஃபோர்ஸ்) இருக்கும் ஒரே விஷயம், பணம். அதைப் பெருக்குவதே இவர்களுக்கு சாத்தியம். அதுவே தொழில். அதுவே பொழுதுபோக்கு. இந்த இடத்தில் வேறு சில கேள்விகள் பிறக்கின்றன. இவர்கள் சிந்திக்க ஏதாவது வழி இருக்கிறதா? தங்கள் வசம் சேரும் பணத்தைத் தவிர வேறு ஏதாவது சில அழகியல் அனுபவங்களைத் தங்கள் வாழ்வில் இவர்கள் கண்டிருக்கிறார்களா-? காண வைக்கத்தான் முடியுமா? பணம் பணம் பணம் என்று அதன் இல்லாமையையே பேசிக்கொண்டிருக்கும் நான், அதன் இருப்பு ஸ்திரப்படுத்தப்பட்டிருக்கும் இடத்தையும் கொஞ்சமாவது கவனிக்க வேண்டும்.

https://telegram.me/aedahamlibrary

நான் இப்படிக் கேட்கிறேன் என்று கொள்வோம். வறண்டுபோன வாழ்க்கை வாழ்ந்துகொண்டு, அதுவே பூமியின் கீழ் ஆகச் சிறந்த வாழ்க்கை என்று எண்ணிக்கொண்டிருக்கும் இவ்வகை வணிகர்கள் சிந்தனையைத் தூண்டும் அசலான கல்வி பெற்றவர்களா? அப்படி இவர்களுடைய சிந்தனை தூண்டுதல் பெறுமானால் அப்போது நமது கணக்கு பாஸிட்டிவாக முடிந்துவிடாதா? ஆக, அசலான கல்வி அளிக்கப்பட வேண்டிய இடத்தில் இருப்பவர்கள் பணக்காரர்களா, ஏழைகளா? ஏழைகளின் முன்னே பணக்காரர்களைக் காட்டித் தூண்டிவிட்டு, பணத்தை நோக்கி ஓட வைக்க முயல்வதற்கு பதில் என்.ஜி.ஓ.க்கள் பணக்காரர்களை அழைத்து தேசத்தின் அவல நிலையை அவர்களுக்குப் புரியச் செய்து, அதற்குக் காரணமான பணத்தை, பணத்தைச் சரியாகப் பயன்கொள்ளும் விதத்தை, அதன் மூலம் தனிமனித வாழ்வு சிறக்கும் விதத்தை அறிமுகப்படுத்த முடியுமா? அப்படிச் செய்தால் அது பணத்தை நோக்கி ஆசையைத் தூண்டுவதற்கு பதில், வாழ்வினை நோக்கி அந்த ஆசை திரும்பவோ அல்லது ஆசையைவிட வேறொரு முக்கியமான பயனை வாழ்வின் பலனாக மனிதன் அடையவோ ஒரு சாத்தியத்தை உண்டாக்க முடியும் இல்லையா? இது நடைமுறை சாத்தியம் இல்லை என்று நீங்கள் கூறுவீர்கள் என்றால் நான் மறுக்க மாட்டேன்.

ஆனால் இது சாத்தியமில்லாதபோது, கொஞ்சமும் பயன்படாத விஷயங்களைப் பிடித்துக்கொண்டு சேவை என்ற பெயரில் சமூகத்தைத் தொடர்ந்து சுரண்டுவதால் என்ன பயன்?

சட்டென்று தனியாகப் பேசிக்கொண்டிருக்கிறேனோ என்ற பயம் தோன்ற, பேசுவதை நிறுத்திவிட்டு அவர்களை கவனித்தேன். ஜாக்-ஜில் இருவரின் முகங்களும் அதி தீவிரமாகத் தென்பட்டன. அவர்களின் கண்களைப் பற்றியும் சொல்ல வேண்டும். சற்று வயோதிகம் ஏறிவிட்ட, சதைப்பற்று அற்ற முகத்தில் ஆழம் பறித்து உள் சென்றுவிட்ட கண்கள். ரத்தநிறக் கோடுகளாக நரம்புகள் ஊடாடும் வெள்ளைப் பரப்பிடையே பளிங்கு போன்று தென்படும் விழிப்பந்துகள். அதிலும் ஜாக்கின் விழிப் பந்துகள் நீலநிறமானவை. கண்ணாடி போன்ற தோற்றம் காட்டுபவை. அந்த நேரத்திலான அவர்கள் விழிகளின் அசைவுகள் நன்றாகவே என் ஞாபகத்தில் தங்கியிருப்பதை கவனிக்கிறேன்.

சட்டென்று ஏற்பட்டுவிட்ட மௌனத்தை உடைத்தவராய் ஜாக்- என் சந்தேகத்தை அறிந்தவர் போல், “உங்களை நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன்; தொடருங்கள்” என்றார்.

https://telegram.me/aedahamlibrary

கழுகின் ரத்தம் (2)

தொடர்ந்தேன்.

இதுபோன்ற கேள்விகளை பொதுவாக சந்திக்காமல் மனிதர்கள் தப்பிச்செல்லும் வழக்கமான பாதை ஒன்று இருக்கிறது. 'எனக்கு இறைவன் கொடுத்திருக்கிறான்; உனக்குக் கொடுக்கவில்லை. இதில் என் பிழை என்று ஒன்றுமில்லை!' இப்படியாக மதம் இந்த இடத்தில் தப்பிச்செல்லும் பாதையை வழங்குகிறது. மனித சிந்தனையை செறிவாக்கப் பிறந்த மதம் என்ற அற்புதமான வஸ்துவானது இப்படியானதாக சுருக்கப்பட்டு, அபத்தமாகச் செயல்படும் நிலையை அடைந்துவிட்டது மனிதர்களுக்கு நேர்ந்த மிகப் பெரிய துரதிர்ஷ்டம்.

தங்கள் துயரங்களுக்கான தீர்வுகள் ஒரு காகிதத்தில் எழுதி சுருட்டப்பட்டு அது இறைவனின் மூடிய கைகளுக்குள் இருக்கிறது; எந்நேரமும் கடவுளின் கைகள் திறக்கப்பட்டு மோட்சம் கிடைக்கலாம் என்ற நம்பிக்கையில் ஏழைகள் காலம் தள்ளுகின்றனர். பணக்காரர்கள் இதற்கு நேர் எதிராக, தன் நற்செயல்களின் காரணமாக இறைவன் தனக்கு வழங்கிய பதக்கமே இந்த வாழ்க்கை; அதில் எதுவும் சிக்கல் என்றால் அவரிடம் முறையிட்டுத் தீர்த்துக்கொள்ளலாம் என்ற மனநிலையில் இருக்கின்றனர். இரண்டு வகையிலுமே சக மனிதனுக்கான பொறுப்பு தன்னுடையதல்ல, இறைவனுடையது என்ற எண்ணம் அறிந்தோ அறியாமலோ விதைக்கப்பட்டு விடுகிறது. இங்கும் நான் கவனம்கொள்ள முயல்வது, பணக்காரர்களிடமே. காரணம், அவர்களது வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. ஒரு அளவுக்கு மேல் யாருக்கும் அதில் பயனில்லை. ஏழைகளின் பூமியோ வறண்டு கிடக்கிறது. இதில் நாம் எங்கிருந்து துவங்க வேண்டும் என்று நீங்களே முடிவு செய்துகொள்ளுங்கள்.

இத்தகைய சூழலால் ஏற்பட்ட விளைவு என்ன? மதமும் நிறுவனமயமாக்கப்பட்டதுதான். அந்த நிறுவனத்தைத் தங்கள் நன்கொடைகளின் மூலம் பணக்காரர்கள் வழி நடத்துகிறார்கள். எனவே அத்தகைய நிறுவனமும் ஏழைகளையே குறி வைக்கிறது.

மலாவியைப் பொறுத்தவரை 150 வருடங்களுக்கு முன் கடவுள் இங்கு இருந்ததில்லை. மலாவியர்களின் ஆன்மீக நம்பிக்கைகள்

https://telegram.me/aedahamlibrary

வேறுவிதமானவை. ஆனால் அதனைச் சரியாக கவனித்து சீர்படுத்துவதற்கு பதில் கிறிஸ்தவம், இஸ்லாம் என்று முற்றிலும் வேறு வகையான மதங்கள் நிறுவனம் சார்ந்து உள்ளே புகுந்து நிலையை மேலும் குழப்பமாக்கிவிட்டன. ஏழ்மையின் தீர்வாக 'கடவுள் இருக்கிறார், இன்று நீங்கள் கஷ்டப்பட்டாலும் நாளை உங்கள் ஆத்மா சாந்தியடையும்' என்பது போன்ற நம்பிக்கைகள் வறுமையில் உழல்பவர்களுக்குத் தரப்படுகின்றன. ஆனால் ஏழ்மைக்குக் காரணமோ நன்கொடை அளித்தபடி பணக்காரர்களின் வடிவில் ஸ்தாபனத்தின் மேற்கூரையின் மேல் உட்கார்ந்திருக்கிறது!

தர்க்கபூர்வமாகப் பார்த்தால் இதுவும் தொழில்நுட்பம் பற்றி நாம் பேசியதைப் போன்றதொரு விஷயமே. அதே சமயம், இது மனித சிந்தனைக்கு 'தப்பிச் செல்லும் மனநிலை'யை அளிக்கும் வகையில் மேலும் கேடு சேர்ப்பதாகிறது.

ஏழை ஆகட்டும், பணக்காரர் ஆகட்டும், புத்திஜீவி ஆகட்டும், அடி முட்டாளாகட்டும், திருடனாகட்டும், நியாவானாகட்டும்... ஒவ்வொருவரும் தங்களுக்கான நியாயத்தைத் தங்கள் அளவிலாவது தேடி வைத்துக்கொள்கிறார்கள். இதில் விதிவிலக்கு இருக்க வாய்ப்பே இல்லை என்று நினைக்கிறேன். இதில் இன்றைய மதம் வழங்கிக் கொண்டிருப்பது - கடவுள் என்ற பதத்தின் மூலம் அந்த நியாயத்தை ஒரு முடிவே இல்லாத நிலைக்குத் தள்ளிவிட்டு விடுவது மட்டுமே...

ஒரு உதாரணம்: இன்றைய உலகில் பரந்து பட்டு வளர்ந்துவிட்ட மார்க்கங்களுள் ஒன்று, இஸ்லாம். இந்த மார்க்கம் தன் அற விழுமியங்களுள் ஒன்றாக - தன் சம்பாத்தியத்தில் ஒரு பகுதியை தானமாகக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறது. இந்து மதத்திலும் பல சிக்கல்களுக்கான பரிகார நிவர்த்திகளில் தானம் முன் வைக்கப்படுகிறது. இதன் காரணத்தை நாம் மனோதத்துவ ரீதியில் யோசித்துப் பார்க்கலாம். தானம் என்பதை ஒருமுறை ஒருவர் செய்து பார்த்தால் பிறருக்குக் கொடுக்கும் அவருக்கு இன்பம் விளங்கக்கூடும். அது தனக்காக எல்லாவற்றையும் கைப்பற்றிச் சேகரிக்கும் மனநிலையை உடைத்து ஒருவித விடுப்பாக ஏற்படக்கூடும். இதனால் ஏற்படும் ஆசுவாசத்தை ஒருமுறை ஒருவர் அனுபவித்துவிட்டால் பின் அவரது நல் எண்ணங்கள் பலவகையில் தூண்டுதல் பெறும் வாய்ப்பு இருக்கிறது. இத்தகைய நல் எண்ணங்களே மனிதனின் அகங்காரத்தைக் குறைத்து நிம்மதி அளிக்கும். நிம்மதி பெற்ற மனிதனே சமூகக் கட்டுமானத்திற்கு நல்ல வகையில் பயன் அளிப்பவனாக இருப்பான். ஆனால் இந்த விஷயம் எப்படி தப்பித்தல் மனப்பான்மை அளிப்பதாக உருமாற்றம்

https://telegram.me/aedahamlibrary

கொள்கிறது என்று பார்ப்போம்.

என் நண்பர் ஒருவர் பெரும் பணக்காரர். இஸ்லாமை கடைபிடிப்பவர். அவரது தொழிலின் மூலம் அரை மில்லியன் டாலர் இந்த வருடம் அவருக்கு லாபம் கிட்டியது. அவர் அரை மில்லியன் குவாச்சாவை தானமாக அளிக்க முன் வருவார். ஆனால் அதே சமயம் அரை மில்லியன் டாலராக அவரது சொத்தின் அளவு அந்த வருடத்தில் - மலாவியில் அல்ல; இங்கிலாந்தில் - வளர்ந்து நிற்கும்! இதில் கொடுக்கும் இன்பம், தன்னழிவு, சமூக முன்னேற்றம் என்பதெல்லாம் எங்கு ஏற்படுவது. மதத்தினை சரியாகக் கடைபிடிக்கிறோம், அல்லாவுக்குக் கட்டுப்பட்டு நடக்கிறோம் என்ற நம்பிக்கை அவருக்குப் போதுமானதாக இருக்கும். நண்பர் ஒன்றும் மோசமான மனிதர் இல்லை. ஆனால் மலாவியில் விரவிக் கிடக்கும் ஏழ்மையின் கொடுமைக்கான காரணங்களுள் ஒன்று, தான் இங்கிலாந்தில் முதலீடு செய்திருக்கும் பெரும் பணம் என்ற வகையில் அவர் சிந்தனை செல்லாது. அது அல்லா தனக்கு அளித்தது என்று எளிமையாக முடிவு செய்துவிடுவார். அதனால், மதம் கூறும் நல்வழிப்படியே தான் நடப்பதாக உள்ளூர நம்பிக்கொண்டு இருப்பார்.

இதுபோன்ற ஏராளமான உதாரணங்களை எந்த மதத்தைப் பின்பற்றுபவர்களிடமும் காணலாம். இதையே 'மனிதன் தன் பொறுப்பிலிருந்து தப்பிக்கொள்ள மதம் வசதி செய்து கொடுக்கிறது' என்கிறேன். இது மதத்தின் குற்றம் அல்ல. மதம் குறித்த அசலான கல்வி அளிக்கப்படாததன் குற்றமே. இத்தகைய 'தப்பிக்கும்' மனநிலைகள் பலவகைப்பட்டவை. அத்தனையையும் ஒன்று திரட்டி மதம் என்ற பெயரில் மலாவியர்களுக்குக் கடந்த 150 வருடங்களாக போதிப்பதை பல ஸ்தாபனங்கள் தொழில் நேர்த்தியுடன் செய்து வருகின்றன. இவை யாவும் மனித சிந்தனையின் அடிப்படைச் சிந்தனையை மாற்ற இயலாமல் சமூக அமைப்பில் மேலும் குழப்பம் செய்து கொண்டிருக்கின்றன.

"சரி, நீங்கள் கூறுவது அனைத்தும் பிரச்சனைகள். இவற்றிற்கான தீர்வாக நீங்கள் எதைப் பரிந்துரைக்கிறீர்கள்?" என்று ஒரு கேள்வியை முன்வைத்தார் ஜாக். அவர் குரலில் சற்று கோபமும் ஆற்றாமையும் கலந்திருந்ததாக ஞாபகம்.

"அடிப்படை பிரச்சினைகளை புரிந்துகொள்வதே தீர்வுக்கான முதல் படியாகிவிடாதா?" என்று கேட்டேன் நான். அது அவர்களுக்குப் புரிந்ததாகத் தெரியவில்லை.

"அடிப்படைப் பிரச்சினையை புரிந்துகொள்ளுதல் என்பது நம் அன்றாட

https://telegram.me/aedahamlibrary

செயல்களின் ஒவ்வொரு முடிவையும் பாதிக்கும். தவறான வழி எதுவென்று புரிந்துகொண்டுவிட்டால் சரியான பாதை அதுவாகவே திறந்துகொள்ளும். இதை ஒரு தொழிற்சாலையை நிர்வகிக்கும் என் பணியின் போக்கில் நன்றாகவே உணர முடிகிறது. என்னைப் பொறுத்தவரை சரியான தொழிலாளர்களை சரியான வழியில் ஊக்குவித்து வழி நடத்துவதுகூட ஒருவித தீர்வாகவே கருதுகிறேன்; சரியானவை என்று நான் கூற முயல்வதன் பொருளும் ஒற்றைப் படையிலான அர்த்தம் கொண்டது அல்ல என்பது முக்கியமானது" என்றேன்.

"நீங்கள் கூறுவதன் நடைமுறை சாத்தியம் இன்னும் எனக்கு சரியாக விளங்கவில்லை" என்றார் ஜில்.

"இல்லை; நாம் வேரை விட்டுவிட்டுக் கிளைகளை சீர்படுத்த முயல்வதாக கூறுகிறார்" என்றார் ஜாக்.

ஜாக் சொல்வதை அமோதித்தவனாய் "ஆமாம், வேர் சமூகத்திலிருக்கும் தனிமனிதனில் இல்லை; மாறாக தனி மனிதனில் இருக்கும் சமூகத்தில் இருக்கிறது" என்றேன்.

நிதானமிழந்தவர் போல் தென்பட்ட ஜாக் "அந்த வேரை நடைமுறையில் அணுகும் பாதை என்ன?" என்று கேட்க, நான் பதில் சொல்ல முனைவதற்குள்... நண்பர் வந்துவிட்டார். உற்சாகமான குரலுடன் அனைவரையும் வரவேற்று, "தாமதத்திற்கு மன்னிக்கவும், நேரமாகிவிட்டது. சாப்பிடப் போகலாமே" என்றார். ஜாக் "இன்னும் என் கேள்விக்கு பதில் வரவில்லையே?" என்று என்னைப் பார்க்க, நான் "அப்படியே அந்தக் கேள்வியைப் பிடித்து வைத்துக் கொள்ளுங்கள், தோசை சாப்பிட்டு முடித்த கையில் பதில் கூற முயல்கிறேன்" என்றேன்.

நான், நண்பர், ஜாக் மற்றும் ஜில் உணவு மேஜையின் முன் அமர்ந்தோம். நண்பரின் மனைவியையும் ஜில் சாப்பிட அழைத்தபோது "இல்லை, நான் பரிமாறுகிறேன்" என்ற நண்பரின் மனைவி தொடர்ந்து "நான் இன்று விரதம்; சாப்பிட மாட்டேன்" என்றார். ஜில் "ஓ! விரதமிருப்பது உடம்புக்கு நல்லது என்று பல மருத்துவர்கள் பரிந்துரைக்கிறார்கள். நான் மாதம் ஒருமுறை முயன்று தோற்கிறேன்" என்று கூறி சிரித்தார். நண்பரின் மனைவி "இது அப்படி இல்லை, இது கடவுளுக்கான விரதம்" என்று சொல்லி அவர் விரதம் இருப்பதன் காரணத்தை விளக்கினார். நான் "மேற்கு இப்போது கிழக்கைச் சந்திக்கிறது" என்று சொல்லி சிரித்தேன்.

சுடச்சுட தோசையும் தொட்டுக்கொள்ள சாம்பாரும் தேங்காய்

https://telegram.me/aedahamlibrary

சட்டினியும் பரிமாறப்பட்டது. நண்பர் "ஃபோர்க் கொண்டுவர சொல்லவா?" என்று கேட்க, நான் "அதெல்லாம் வேலைக்கு ஆகாது ஜாக்; முதலில் சட்டையின் கையை இப்படி மடக்கிவிடுங்கள்" என்று சொல்லி, என் சட்டையை மடக்கி முழங்கை வரை ஏற்றி விட்டுக் காண்பித்தேன். "எனக்குத் தெரியும், நான் பலமுறை தோசை சாப்பிட்டிருக்கிறேன், கைகளாலேயே சாப்பிடுகிறோம்" என்றார் ஜாக். அவரது தட்டுக்கு அருகில் இரு கிண்ணங்களில் தனித்தனியாக சட்னியும் சாம்பாரும் வைக்கப்பட்டிருந்தது. ஜாக், அய்யர் வீட்டுப் பெண் மீன் பிடிக்கும் கதைக்கு உதாரண புருஷர் போல், கவனமாக தோசையைப் பிய்த்து சாம்பாரில் நனைத்து வாயிலிட்டுக்கொண்டு "அற்புதமாக இருக்கிறது" என்றார். எனக்கு நெஞ்சு பொறுக்கவில்லை. சற்று உரிமை எடுத்துக்கொண்டவனாய், "அனுமதியுங்கள்" என்று அவரிடம் கூறிவிட்டு, கிண்ணத்திலிருந்த சாம்பாரின் பெரும் பகுதியை அவரது தோசையின் மேல் கவிழ்த்தேன். பிறகு தொடர்ந்து சாம்பாருடன் கலக்கும்படி தேங்காய் சட்டினியையும் எடுத்துக் கவிழ்த்துவிட்டு, "இப்போது முயன்று பாருங்கள்" என்றேன்.

"ம்ம்... பிரமாதம்" என்று கூறி ரசித்தபடி சிரித்தார் ஜாக்.

"மேற்கு கிழக்கைச் சந்திப்பதற்கு இணையான அற்புதம் தோசையின் மேல் சாம்பாரும் தங்காய் சட்டினியும் கலப்பது- இதை மறக்க மாட்டேன் என்று எனக்குச் சத்தியம் செய்து தர வேண்டும்" என்று ஸீரியசான முக பாவனையுடன் கூறினேன். ஜில் தொடர்ந்து "இவ்வளவு அளவு சாம்பாரும், இவ்வளவு அளவு சட்டினியும் சரியான கலவையா?" எனக்கேட்டு கவனமாக முயன்றது பெரும் சிரிப்பாக இருந்தது.

கை கழுவும்போது ஜாக், "மிகவும் அற்புதமான உணவு" என்று சந்தோஷமாக கூறிக்கொண்டே கை கழுவினார். நான் "இந்த அற்புதமான உணவை சமைத்தவரை நீங்கள் பார்க்க வேண்டாமா?" என்றேன். "நிச்சயமாக" என்று ஜாக் கூறி முடிப்பதற்குள் அவரை அழைத்துக்கொண்டு சமையலறையில் நுழைந்தேன். மலாவிய பெண் ஒருத்தி அடுப்பின் முன் அமர்ந்து லாவகமாக தோசையைத் திருப்பிப் போட்டுக்கொண்டிருந்தாள். இவர்தான் மலாவியில் கிடைக்கும் அதிக சுவையான தோசைகளின் படைப்பாளி என்று அறிமுகப்படுத்தினேன். ஜாக் ஆச்சரியம் அடைந்தவராய் சில வார்த்தைகள் பாராட்டிக் கூறினார். அந்தப் பெண்ணுக்கு வெட்கமாக இருந்தது. பாதி புரிந்தும் பாதி புரியாமலும் நாணிக்கோணி நின்றுகொண்டிருந்தாள். "பாராட்டுதலுடன் நீங்கள் பரிசும்கூட அளிக்கலாம்; நாங்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வோம்" என்றேன். ஜாக், "ஓ எஸ்" என்று

https://telegram.me/aedahamlibrary

கூறி, ஒரு 500 குவாச்சா நோட்டினை அந்த பெண்ணுக்கு, “எனது சிறு பரிசு” என்று கூறி வழங்கினார். “ஸிக்கோமோ கொம்பேரி” (மிக்க நன்றி) என்று கூறியபடி அந்தப் பெண் சந்தோஷமாகப் பெற்றுக்கொண்ட விதம் நன்றாக நினைவிலிருக்கிறது.

வரவேற்பறைக்குத் திரும்பியபோது, ஜாக்கிடம் கூறினேன், “நீங்கள் ஏதோ நடைமுறை சாத்தியம் என்று பெரிய வார்த்தைக் கேள்வி கேட்டீர்களே; அதற்கான பதில் வேறதுவும் இல்லை. இப்போது நீங்கள் செய்ததுதான்” என்றேன். அந்தப் பெண் இங்கே நண்பரின் வீட்டில் பத்தாண்டுகளாக வேலை செய்கிறாள். சுவை மட்டும் அல்லாமல் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் நால்வரின் தட்டும் சாய்ந்துவிடாமல் வேகமாக, சிறு கருகல்கூட இல்லாமல் தோசையைச் சுட்டு அனுப்பும் லாவகம் அவளுக்குக் கை வந்திருக்கிறது. ஆனால் ஒரே ஒருவர்கூட இதைத் தனியாக கவனித்துப் பாராட்டியிருக்க மாட்டார்கள். உங்களை அவள் இனி தன் வாழ்நாள் முழுவதும் மறக்க மாட்டாள். நீங்கள் அவளுக்கு அளித்தது வெறும் 500 குவாச்சா நோட்டு அல்ல. வெள்ளைக்காரர்களை தூரத்தில் நின்றே பார்த்திருந்த அவளுடைய எளிய மனதில் இது தன் வேலைக்குக் கிடைத்த அங்கீகாரமாகவே சென்று பதியும். அதன் காரணமாக இனி அவள் சுடப் போகும் தோசைகளில் ருசி கூடிய வண்ணமே இருக்கும்.

ஆக, நாம் புரிந்துகொள்கிறபடி விஷயம் இவ்வளவு எளிமையானது தான். குட் கெனாட் பி கல்டிவேடட், பட் ஸ்டில் இட் கேன் பி ஸ்ப்ரிட்! ஸோ பி குட், ரெக்கனைஸ் குட், அப்ரிஷியேட் குட் நாட் ஒன்லி இன் ஜாப் பட் இன் ஈச் அண்ட் எவ்ரி ஆஸ்பக்ட் ஆஃப் யுவர் லைப். பைதவே குட்னஸ் வில் ஆல்வேஸ் க்ரோ அன்ட் தென் யு கேன் ஸே ஹாப்பிலி தட் - இட் க்ரோஸ்!”

“மிக நன்றாகச் சொன்னீர்கள்” என்று என் கைகளைப் பற்றிக் குலுக்கினார் ஜாக். “நீங்கள் இப்படிச் சிரித்துக்கொண்டிருக்கும் போதே விடை பெற்றுக்கொண்டுவிடுகிறேன்” என்று சொல்லி நண்பர் அளித்த ஐஸ்கிரீமை மறுத்தவனாய் வேகமாகக் கிளம்பினேன்.

இரவு மணி 10.45. வாகன ஓட்டுனர் எடுத்த எடுப்பிலேயே காரை வேகமாக செலுத்தத் துவங்கினார். எனக்கு வாகனம் ஓட்டத் தெரியாது. கடந்த ஒன்றரை வருடங்களாக ஓட்டுனர்கள் செய்யும் பல பித்தலாட்டங்களைக் கண்டுபிடித்து அதன் காரணமாக இதுவரை மூன்று பேரை மாற்றிவிட்டேன். இவர் நான்காவது. கடந்த எட்டு மாதங்களாக நல்ல முறையில் பணிபுரிந்து வருகிறார். நான் வடிகட்டித் தேர்ந்தெடுத்து ஊக்குவிக்கும் நபர்களுள் ஒருவர். அவருக்கு நன்றாகத்

https://telegram.me/aedahamlibrary

தெரியும், 11 மணிக்கு எனக்கு இரவு நேரத் தொழிலாளிகளுடன் ஒரு சந்திப்பு இருக்கிறதென்று. நான் எதுவும் சொல்லத் தேவையில்லை. எப்படியும் கொண்டு சேர்த்துவிடுவார். நேரத்தை அவர் வசம் ஒப்படைத்துவிட்டு சந்திப்பில் என்ன பேச வேண்டும் என்று சரிந்து அமர்ந்து யோசிக்கத் துவங்கினேன்.

அன்புடன்,

ஆனந்த்

¦

பின் குறிப்பு:

மனதில் இருந்தும் ஜாக்கிடமும் ஜில்லிடமும் நான் சொல்லாமல் விட்ட விஷயங்கள்:

1) எனக்கு எம்ஜியாரைப் பிடிக்காது. அவர் தன்னை ஏழைகளின் கனவு நாயகனாக பிரதானப்படுத்திக்கொண்டவர். அவர்களிடையே அவர் ஒரு மீட்பர் என்ற நம்பிக்கையை விதைத்து புகழின், அதிகாரத்தின் உச்சத்தை அடைந்தவர். அவர் ஆட்சிப் பொறுப்பேற்று ஏழைகளுக்கென செயல்படுத்திய திட்டங்கள் அனைத்தையும் பரிசீலித்துப் பார்த்தாலுமே கூட அவரது சினிமா உருவாக்கிய தவறான புரிதல்களினால் தமிழ் சமூகத்திற்கு ஏற்பட்ட சேதாரங்களின் சின்னஞ்சிறு பகுதிகூட சமன்பாட்டுக்கு வராது என்றே நினைக்கிறேன். அவரது தனிப்பட்ட குணாதிசயங்களின் மேல் எனக்கு அக்கறையில்லை. இன்றளவில் எம்ஜியார் என்ற பெயரில் கட்டமைக்கப்பட்டிருக்கும் பிம்பத்தினை நான் ஆழமாக வெறுக்கிறேன்.

2) ரொபர்த்தோ பெனிகினி இருக்கட்டும். உலக சினிமாவின் அதி முக்கிய ஆளுமையான ஃபெலினியும் இத்தாலிய இயக்குனர்தான். அவரது நட்ஸ் ஆஃப் கரீபியா என்ற படத்தினைப் பார்த்து குலுங்கிக் குலுங்கி அழுதிருக்கிறேன். கரீபியாவின் துக்கத்திற்கு என்.ஜி.ஓ.க்கள் தங்கள் கணிப்பொறிக் கல்வித் திட்டங்களின் வழி என்ன தீர்வு சொல்கின்றன? மலாவி பின்தங்கிய நாடு; கரீபியா போன்ற கதாபாத்திரங்கள் தங்கள் வாழ்வினைக் கொண்டிருக்கும் இத்தாலி முன்னேறிவிட்ட நாடு என்று யார் முடிவு செய்தது?

3) தொழில்நுட்பம் ஒருபுறமும் மதம் மறுபுறமும் மனித சிந்தனையை மழுங்கடித்துக் கொண்டிருக்கையில், இந்த இரண்டையும் இணைத்து மனித சிந்தனைக்கு அவசியமான கேள்விகளை, அசலான ஆச்சரியங்களை, வாழ்வின் உள் முரண்களை, அபத்த நிலைகளை

https://telegram.me/aedahamlibrary

அறிமுகப்படுத்தும் வகையில் ஒரு சாரார் தங்கள் செயல்பாட்டினைக் கொண்டிருக்கின்றனர். அவர்களையே நாம் அசலான கலைஞர்கள் என்கிறோம். தனி மனிதனில் தோன்றும். சமூகத்தைக் கட்டமைக்கும், மேம்படுத்தும் சாத்தியங்கள் ஒரு சமூகம் தன் கலைஞர்களை வைத்திருக்கும் இடத்தினைப் பொறுத்து அமைகிறது.

4) மலாவியைப் பொறுத்தவரை என்.ஜி.ஓ.க்களின் செயல்பாடு களைச் சாடுவதற்கு நான் அவர்களுடன் பேசிய வகையிலான தர்க்க சிந்தனையெல்லாம் தேவையில்லை. 'அசலான செயல்பாடுகள்' என்று தாம் நினைப்பவற்றை என்.ஜி.ஓ.க்கள் செய்யுமானால் அதன் மூலம் ஏற்படும் அபத்த நிலையையே நான் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்பினேன். இன்றளவில் அறியக் கிடைக்கும் நிதர்சனத்தைச் சொல்வதென்றால் என்.ஜி.ஓ.க்களும், பிற சேவை நிறுவனங்களும் இங்கு நடத்திக்கொண்டிருப்பது பகல் கொள்ளை. இங்கிருக்கும் ஏழ்மையைக் காட்டி, ஏழைகளின் எண்ணிக்கையைக் காட்டி, அவை வெளிநாடுகளிலிருந்து பணம் தருவிக்கின்றன. அப்படி ஒதுக்கப்படும் நிதியின் பெரும் பகுதி பொறுப்பில் இருப்பவர்களால் பிரித்துக் கொள்ளப்படுகிறது. கணக்குகள் ஏதாவது ஒருவகையில் சமன் செய்து காண்பிக்கப்படும். அதனைச் செய்து கொடுக்க இருக்கவே இருக்கிறார்கள் கல்வி அறிவு பெற்ற கனவான்கள். இதனை நான் குழந்தைகளை ஊனமாக்கி பிச்சை எடுக்கச் செய்து அதில் வசதியாக வாழ்பவர்களின் செயலுக்கு இணையானதாகவே காண்கிறேன்.

5) முற்றிலுமாக நீர்த்துப்போன செயல்பாடுகளைக் கொண்ட இந்த என்.ஜி.ஓ.க்களை விட, சிக்கல்கள் பல இருந்தாலும், தனிநபரின் சிறந்த குணங்களை அடையாளம் காண முடிகிற, பணியில் சிறந்தவர்களை ஊக்குவிக்க முடிகிற, குறைந்தபட்சம் அவர்களுக்கான ஊதியத்தையாவது நியாயமான முறையில் வழங்க முடிகிற ஒரு தொழிற்சாலையில் வேலை பார்ப்பதை நான் கௌரவமாக எண்ணுகிறேன்.

28.7.2009

https://telegram.me/aedahamlibrary

கழுகின் ரத்தம் (3)

டியர் ஆனந்த்,

டிசம்பரில் வர இருக்கும் புத்தக விழாவுக்காக என் இந்த வருடத்திய எழுத்துக்களைத் தொகுக்க ஆரம்பித்துவிட்டேன். அதில் நம்முடைய உரையாடல்தான் மிகுதியான கவனத்தைப் பெறும் என்று தோன்றுகிறது. அதாவது, விற்கக்கூடிய 75 பிரதிகளில்.

ஜாக் அண்ட் ஜில் கதை பற்றிய என்னுடைய கருத்துக்களையும் இங்கே பதிவு செய்கிறேன். ஏனோ தெரியவில்லை; மிகப் பெரும்பாலான விஷயங்களில் நம்முடைய கருத்துக்கள் ஒத்ததாகவே இருக்கின்றன. இப்போது இந்தத் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் சம்பந்தமாகவும் அப்படியே.

இங்கே ஒரு சிறிய ஊரில் ஒரு தொண்டு நிறுவனம் நடத்திக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணின் வீடு மூன்று கோடி ரூபாய் பெறுமானமுள்ள அரண்மனை மாதிரி இருக்கிறது. முதலில் தனக்குத் தொண்டுவிட்டுத்தான் சமக மனிதர்களுக்குத் தொண்டு என்ற கொள்கையுடையவர் அந்த இளம்பெண். இப்போது கவிதையும் எழுதி தமிழ்த்தொண்டும் செய்கிறார்.

இந்தப் பிரச்சினை பற்றி இதுநாள் வரை நான் மனதுக்குள் குமைந்து கொண்டிருந்தாலும் ஒரு வரிகூட எழுதியதில்லை. காரணம், இது கயிற்றின் மேல் நடப்பதுபோன்ற ஒரு காரியம். நமக்கோ தரையில் நடப்பதே சிரமம். விளக்கமாகச் சொன்னால், இது பற்றி எழுதினால் என்னையும் இந்துத்துவ கோஷ்டியோடு சேர்த்து விடும் அபாயம் இருக்கிறது. ஏற்கனவே குஜராத்தில் நடந்த படுகொலைகளுக்குப் பிறகு எந்தக் காரணத்துக்காவும் இந்துத்துவவாதிகளின் குரலோடு என் குரல் சேர்ந்துவிடக் கூடாது என்ற எச்சரிக்கை உணர்வே அதற்குக் காரணம். அதனால்தான் இது பற்றி இவ்வளவு நாளும் எழுதாமல் இருந்தேன். ஆனால் இப்போது உங்கள் கடிதத்தைப் படித்த பிறகு இது பற்றி எழுதாமல் இருக்க முடியவில்லை.

என் நண்பர் ஒருவர் சொன்னார் ரோம் நகரில் ஒரே தமிழர்களின் கூட்டமாக இருக்கிறது என்று. எல்லாம் பண விவகாரம். இங்கே இந்து மதம் தீண்டாமை என்ற கேவலத்தை நடைமுறையில் வைத்திருந்தது.

https://telegram.me/aedahamlibrary

இன்னமும் கிராமப்புறங்களில் வைத்திருக்கிறது. இதனால் அந்தப் பகுதியினர் கிறிஸ்தவர்களாக மதம் மாறினர். அதில் ஆட்சேபணைக்குரியதாக எதுவும் இல்லை. ஆனால் காடுகளுக்குள் சென்று எழுதப் படிக்கத் தெரியாத அப்பாவியான ஆதிவாசிகளை மதமாற்றம் செய்வதை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்? எது நாகரீகம்? எது நாகரீகமற்ற வாழ்க்கை? நாகரீகம் என்பதை யார் தீர்மானிப்பது?

சமீபத்தில் இருளர் இன மக்களைக் காட்டுக்குள்ளிருந்து 'காப்பாற்றி' வெளியே நகரத்துக் கொண்டுவந்து அங்கே அவர்களுக்குக் காலனி வீடுகளைக் கட்டி கொடுத்து 'வாழுங்கள்' என்று சொன்னது அரசாங்கம். ஆதிவாசிகளை முன்னேற்றுகிறார்களாம்! ஆனால் அந்த இருளர் இன மக்களுக்கோ இந்த நகர்ப்புறது ரேஷன் அரிசியைச் சாப்பிட்டு வயிற்றுப்போக்கும் இன்ன பிற வியாதிகளும் வந்ததுதான் மிச்சம். அவர்களால் இந்த மக்களோடு ஒன்ற முடியவில்லை. இந்த நகர்ப்புறத்து மனிதர்களின் பொய்யான வாழ்க்கை அவர்களுக்கு மிரட்சியை ஏற்படுத்தியிருக்கிறது. டீசலும், பெட்ரோலும் கலந்த இந்த விஷக்காற்று அவர்களைப் பயமுறுத்தியிருக்கிறது. எங்களைக் காட்டிலேயே கொண்டு போய் விட்டுவிடுங்கள். நாங்கள் பழங்களையும், தேனையும் சாப்பிட்டு வாழ்ந்துகொள்கிறோம் என்று கெஞ்ச ஆரம்பித்துவிட்டார்கள். விலங்குகளோடு வாழ முடிந்த அவர்களால் நகர்ப்புறத்து மனிதர்களோடு வாழ முடியவில்லை.

இப்போது அவர்களுடைய கடவுளைப் பிடுங்கிக்கொண்டு அவர்களின் கைகளில் சிலுவையைக் கொடுத்து வணங்கு என்று சொன்னால் அது எவ்வளவு பெரிய அத்துமீறல்?

பொலிவியாவைச் சேர்ந்த ஹோர்ஹே சான்ஹீனஸ் என்ற திரைப்பட இயக்குனரைப் பற்றி விரிவாக என்னுடைய நூல் ஒன்றில் எழுதியிருந்ததை நீங்கள் வாசித்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அவருடைய Blood of the Condor என்ற திரைப்படம்தான் உங்கள் கடிதத்தைப் படித்தபோது எனக்கு ஞாபகம் வந்தது. ஒரு அமெரிக்கத் தன்னார்வத் தொண்டு நிறுவனம் பொலிவிய அரசின் அனுமதியுடன் பொலிவியப் பழங்குடி மக்களுக்குக் கருத்தடை செய்தது. மக்கள் பெருக்கம்தான் பொலிவிய வறுமைக்குக் காரணம் என்று நினைத்தது வெள்ளைக்காரர்களின் அந்தத் தொண்டு நிறுவனம். இதன் விளைவாகத் தங்கள் இனப் பெண்கள் மலடாகிவிட்டதை அறிந்த அந்தப் பகுதி மக்கள் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களைப் பிடித்து அவர்களின் ஆண்குறியை அறுத்து எறிந்தார்கள். இதுதான் கழுகின் ரத்தம் என்ற படத்தின் கதை.

https://telegram.me/aedahamlibrary

வன்முறை என்று நமக்குத் தெரியும் நிகழ்வின் பின்னே வேறொரு வன்முறை இருக்கிறது. பெர்லின் நகரில் சுற்றித் திரிந்தபோது 'கிழக்கு பெர்லின் பக்கம் போய் விடாதீர்கள்; தாக்குதலுக்கு உள்ளாவீர்கள்' என்றார்கள் என் நண்பர்கள். நியோ நாஜிகளின் இனவெறிதான் காரணம் என்றபோதிலும் அது ஏன் கிழக்கு பெர்லினில் மட்டும் நடக்கிறது? அங்கே உள்ள வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒரு காரணம். நாகரீகத்தின் உச்சியில் இருக்கும் ஒரு மேற்கு ஐரோப்பிய நகரிலேயே இந்த நிலை என்றால் இந்தியாவில் பழங்குடியின மக்கள் வாழும் ஒரு மலைப்பிரதேசத்துக்குள் நுழைந்து அந்த மக்களை மதமாற்றம் செய்ய முயலும் மேற்கத்திய வெள்ளைத் தோல் மனிதர்களை எப்படி நியாயப்படுத்துவது? அவர்கள் தாக்கப்பட்டால் அதற்கு எதிராகக் குரல் கொடுக்கும் புத்திஜீவிகள் அந்த வன்முறைக்குத் தூண்டுதலாக இருக்கும் காரணத்தைப் பற்றி ஏன் பேசுவதில்லை? ஒரு இனக்குழுவின் ஒட்டு மொத்த கலாச்சாரத்தையே அழித்தொழிக்கும் செயல் வன்முறையாகாதா? ஒரு இனத்தின் அடையாளத்தையே அழிப்பது எவ்வளவு கொடூரமான மனித விரோதச் செயல்?

மதமாற்றம் என்பது ஒரு தனி மனிதனின் சுதந்திரம் என்பதை நான் மறுக்கவில்லை. ஆனால் மூன்றாம் உலக நாடுகளைக் கொள்ளையடித்துச் சேர்த்த மேலை நாடுகளின் பணத்தை வாங்கி அதன் மூலம் அப்பாவி ஏழை எளியவர்களையும், பழங்குடியினரையும் மூளைச்சலவைசெய்து மதமாற்றம் செய்வதை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியாது. சில மொகலாய மன்னர்களின் ஆட்சியில் கட்டாய மதமாற்றம் நடந்ததற்கு ஒப்பான செயல்தான் இது. இந்துத்துவவாதிகளை விமர்சிக்கும் இந்திய புத்திஜீவிகள் ஒருவர்கூட இதுபற்றி வாயைத் திறக்காதது பெரும் துரதிர்ஷ்டம்தான். இப்போது இதை வெளிப்படையாகச் சொல்வதால் மதச்சார்பின்மையைத் தங்கள் ஃபேஷனாகக் கொண்டுள்ள சில அரைவேக்காட்டு இலக்கியவாதிகள் என்னையும் இந்துத்துவவாதிகளோடு சேர்த்துவிடும் அபாயம் எனக்கு உண்டு. ஆனால் அது பற்றி நான் கவலைப்படவில்லை. இந்துத்துவ அடிப்படைவாதம் என்பது எவ்வளவு அபாயகரமானதோ அவ்வளவு அபாயகரமானதுதான் போலி இடதுசாரித்தனமும்.

சில நூற்றாண்டுகளுக்கு முன்பு ஐரோப்பிய வெள்ளை இனம் தென்னமெரிக்கா என்ற பெரிய கண்டத்தின் அடையாளத்தையே அழித்ததை நாம் மறந்துவிடக் கூடாது. பரந்து கிடக்கும் தென்னமெரிக்கா என்ற நிலப்பகுதியில் வாழ்ந்த ஆதிகுடிகளின் கடவுள், மொழி, கலாச்சாரம் எல்லாவற்றையும் அழித்துவிட்டுத் தங்களின்

https://telegram.me/aedahamlibrary

கடவுளையும், மொழியையும், கலாச்சாரத்தையும் கொடுத்தது ஐரோப்பிய வெள்ளை இனம். இதை கார்லோஸ் ஃபுவெந்தெஸ் தனது தெர்ரா நோஸ்த்ரா (எமது நிலம்) என்ற நாவலில் மிக விரிவாகப் பதிவு செய்திருக்கிறார். தமிழில் எஸ்.ராமகிருஷ்ணனின் பதினெட்டாம் நூற்றாண்டின் மழை என்ற கதையும் இதே கருவைக் கொண்டதுதான்.

அடுத்து, ஏழைகளுக்கு உதவுவதற்காக அலையும் கும்பல் ஒன்று இருக்கிறது. குவைத்திலிருந்து ஒரு ஆசாமி "உங்களுக்குத் தெரிந்த ஏழைக் குழந்தைகள் யாராவது இருந்தால் சொல்லுங்கள்; அவர்களின் படிப்புக்கு உதவுகிறோம்" என்று எழுதியிருந்தார். இது எவ்வளவு பெரிய தடித்தனம், திமிர்த்தனம், அயோக்கியத்தனம்? அந்த ஆசாமி நினைத்திருப்பார், ஏழைகளுக்கு உதவுவதில் என்ன தப்பு இருக்கிறது என்று. நான் சொல்ல வருவது அந்த ஆசாமிக்கு இந்த ஜென்மத்தில் புரிய வாய்ப்பில்லை. உதவி செய்; அதை நாடகமாக்காதே என்பதுதான் நான் அந்த ஆசாமியிடம் சொல்ல நினைப்பது. இதை அவர் தன்னுடைய நெருங்கிய நண்பர்களிடம் மட்டுமே சொல்லியிருக்க வேண்டும். தமிழ்நாட்டில் ஏழைக் குழந்தைகளுக்கா பஞ்சம்?

ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி உதவி செய்யப் போகிறேன் என்று அறிவிப்பதே அராஜகம் அல்லவா? சினிமா நடிகைகள் தங்கள் பிறந்த நாள் அன்று அனாதைக் குழந்தைகளின் ஆசிரமத்துக்குச் சென்று அவர்களுக்கு மிட்டாய் கொடுத்து அவர்களோடு இளித்துக்கொண்டு ஃப்போட்டோ எடுத்துக்கொள்வதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? தமிழ்நாட்டில் உள்ள அனாதைச் சிறுவர்களுக்கான விடுதிகள் எந்த கதியில் இருக்கின்றன என்பது அந்த ஆசாமிக்குத் தெரியுமா? ஒரே ஒரு விடுதியைத் தன் கவனத்தில் வைத்துக்கொண்டு மாதம் ஒருமுறையாவது அங்கே சென்று அவர்களோடு அளவளாவி அவர்களுக்கு வேண்டியதைச் செய்து கொடுப்பதே எவ்வளவு பெரிய புண்ணியம் தெரியுமா? அதே போல் முதியோர் இல்லம். வயதாகி செத்துப்போன கிழவியை அடக்கம் செய்ய காசு இல்லை என்று குப்பைத்தொட்டியில் அந்தக் கிழவியின் பிணத்தைத் தூக்கிப் போட்ட முதியோர் இல்லத்தைப் பற்றி எழுதியிருக்கிறேன். அதை விடக் கொடூரமான முதியோர் இல்லங்களும், அனாதைச் சிறுவர் விடுதிகளும் தமிழ்நாட்டில் ஏராளமாக உள்ளன.

பின்குறிப்பு: 1. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைப் பொறுத்தவரை மலாவியும் இந்தியாவும் ஒரே நிலையில்தான் உள்ளன. இது குறித்து நீங்கள் கூறியுள்ள எல்லா விஷயங்களும் இந்தியாவுக்கும் பொருந்தும்.

2. இந்தியச் சமூகத்துக்கு கிறித்தவம் அளித்த மிகப் பெரிய கொடை,

https://telegram.me/aedahamlibrary

ஏழை எளிய மக்களுக்கான கல்வி மற்றும் மருத்துவம். அரசாங்கம் செய்யத் தவறியதை திருச்சபைகள் செய்தன. அதற்கும் இப்போது நாம் பேசும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்கும் பெரும் வித்தியாசம் உள்ளது.

3. மதர் தெரஸா போன்ற தன்னலம் இல்லாத ஞானிகளின் தொண்டுதான் இந்திய சமூகத்துக்குத் தேவையே தவிர வியாபாரத்தையும், கலாச்சார ஆதிக்கத்தையும் நோக்கமாகக் கொண்ட தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அல்ல.

4. பல ஆண்டுகளுக்கு முன்பு ஃபெலினியின் நைட்ஸ் ஆஃப் கரீபியாவைப் பார்த்திருக்கிறேன்.

சாரு

1.8.2009

https://telegram.me/aedahamlibrary

https://telegram.me/aedahamlibrary

சாரு நிவேதிதா

18.12.1953-இல் திருவாரூர் மாவட்டத்தில் திருத்துறைப்பூண்டிக்கு அருகில் உள்ள இடும்பாவனம் என்ற ஊரில் பிறந்தார். வளர்ந்ததும் பள்ளிப் படிப்பும் நாகூரில். கல்லூரிப் படிப்பு காரைக்கால், தஞ்சாவூர், திருச்சி. கல்லூரிப் படிப்பை முடிக்கவில்லை. சென்னையில் ஒரு ஆண்டு சிறைத்துறையில் எழுத்தர் பணி. 1978-இலிருந்து 1990 வரை தில்லி நிர்வாகம் - சிவில் சப்ளைஸ் துறையில் ஸ்டெனோ. பின்னர் பனிரண்டு ஆண்டுகள் தமிழ்நாடு அஞ்சல் துறையில் பணி. 2002-இலிருந்து முழுநேர எழுத்து.

இகனாமிக் டைம்ஸ் நாளிதழின் அகில இந்தியப் பதிப்பில், 2001 - 2010 என்ற பத்தாண்டுகளின் சாதனையாளர் பட்டியலில் தமிழகத்திலிருந்து இடம் பெற்ற இரண்டு பேர்களில் ஒருவர் சாரு நிவேதிதா.

இவரது நாவல் 'ஸீரோ டிகிரி' Jan Michalski சர்வதேசப் பரிசுக்குப் பரிந்துரைக்கப்பட்டது. ஹார்ப்பர் காலின்ஸ் தொகுத்த, இந்தியாவின் ஐம்பது முக்கிய புத்தகங்களில் ஒன்றாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

ஆங்கிலப் பத்திரிகைகளில் இவர் எழுதும் கட்டுரைகள் சர்வதேச அளவில் கவனம் பெற்றவை. லண்டனிலிருந்து வெளியாகும் PS Publication-இன் Exotic Gothic தொகுதியில் இவரது Diabolically Yours என்ற பேய்க்கதை ஆங்கிலத்தில் வெளியாகி உள்ளது. தற்சமயம் லண்டனிலிருந்து வெளிவரும் ArtReview Asia என்ற பத்திரிகையில் தொடர் கட்டுரை எழுதி வருகிறார்.

இவரது எழுத்தை ஆங்கில விமர்சகர்கள் விளதிமீர் நபக்கோவ், வில்லியம் பர்ரோஸ், கேத்தி ஆக்கர் போன்ற எழுத்தாளர்களோடு ஒப்பிடுகிறார்கள். உலகின் முக்கியமான transgressive வகை எழுத்தாளர்களில் ஒருவராகக் கருதப்-படுகிறார் சாரு நிவேதிதா. தற்போது சென்னையில் வசிக்கிறார்.